நம்பிக்கையின் பிரதிபலிப்பு

இலங்கை வங்கி | ஆண்டறிக்கை 2018

இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

தேசத்தின் வங்கியாளர்

எங்களது தூர நோக்கு

நாட்டு மக்களால் விரும்பப்படும் வங்கியாக பலமான உலகளாவிய பிரசன்னத்துடன் வாடிக்கையாளரை மையப்படுத்திய புத்தாக்கமான நிதித் தீர்வுகளை வழங்குதல்.

எங்களது பணி நோக்கு

உலகளாவிய அணுகுதல்களுடன் அதி வினைத்திறனான, வாடிக்கையாளரை மையப்படுத்திய, அதிநவீன தொழில்நுட்பத்துடனான, நெகிழக்கூடிய, புத்தாக்கமான நிதியியல் சேவைகளை நாட்டு மக்களுக்கு வழங்குவதற்கு ஊழியர்களை வலுப்படுத்தி அதிகாரமளிப்பதும் நிறுவன நலனில் அக்கறையுடையோர்களுக்கான பெறுமதியை அதிகரித்தலும்.

நிறுவனப் பெறுமதிகள்

நாட்டு மக்களால் விரும்பப்படும் வங்கியாக பலமான உலகளாவிய பிரசன்னத்துடன் வாடிக்கையாளரை மையப்படுத்திய புத்தாக்கமான நிதித் தீர்வுகளை வழங்குகின்ற எமது தூர நோக்கை அடைந்து கொள்வதுடன், பின்வரும் ஐந்து பெறுமதிகளுக்கும் பொறுப்புக்கூற கடமைப்பட்டிருக்கின்றோம்:

- வாடிக்கையாளர்களை மையப்படுத்தியவர்களாக இருத்தல்
- எல்லா வகையான பல்வகைமைகளுக்கும் மதிப்பளித்தல்
- உச்ச அளவிலான ஒழுக்க நெறிகள், செயலாட்சி மற்றும் தொழில்வாண்மை நோக்கி செயற்படல்
- விரைவானதும் புதிது புனைதல் நோக்கிய கவனக் குவிப்பு
- எமது எல்லாச் செயற்பாடுகளுக்குமான பொறுப்புக் கூறுபவர்களாக இருத்தல்

நம்பிக்கையின் பிரதிபலிப்பு

79 வருட செழிப்பான வரலாற்றுடன் இலங்கை வங்கியானது அளவிடமுடியாத நம்பிக்கையையும், நம்பகத்தன்மையையும் தன்னகத்தே கொண்டுள்ளது. நாட்டின் வங்கித்துறையில் சாதகமான, யாராலும் நெருங்கமுடியாத முதலாவது இடத்தில் இலங்கை வங்கியானது இருக்கின்றது.

நாட்டின் நிதியியல் சார்ந்த அபிலாஷைகளை நிறைவேற்றும் பொருட்டு, நாம் பல்வகைப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு: சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயன்மையாளர்கள், பெருநிறுவனங்கள் முதல்கொண்டு தனிநபர்கள் வரை சேவையை வழங்குகின்றோம். எமது தேசத்திற்கு நிதிசார் சக்தியை வழங்குவதன் மூலம் நாம் என்றும் ''தேசத்தின் வங்கியாளராக'' இருக்கின்றோம்.

எதிர்காலத்திற்கு உகந்ததாகவும், இலத்திரனியல் தளங்களுக்கூடாகவும், நாட்டு மக்களினதும், வாடிக்கையாளர்களதும் அதீத நம்பிக்கையை எங்களுடைய வலுவான செயல்திறனூடாக நாம் பெற்று எங்களுடைய கூட்டாண்மைப் பொறுப்பை சமூகத்திற்கு வழங்கியுள்ளோம்.

இவை அனைத்தும் **இலங்கை வங்கியை உண்மையான நம்பிக்கையின் பிரதிபலிப்பாக** அடையாளப்படுத்தியுள்ளது.

இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

உள்ளடக்கம்

"தொழில் துறையில் அதிவிஸ்தாரமான வலையமைப்பைச் செயற்படுத்தும் இலங்கையின் மாபெரும் நிதி நிறுவனம் என்ற வகையில் இலங்கை வங்கி இலங்கையில் அதிகூடுதலான பொருளாதார மற்றும் சமூகத் தாக்கத்தை ஏற்படுத்தும் அமைப்புகளில் ஒன்றாகவுள்ளது."

தலைவரின் செய்தி • 10

"வாடிக்கையாளர்களை மகிழ்விக்கும் எமது ஆற்றலே இத்தொழிலில் எமது வங்கி அதிகமானோர் முனைப்பாகத் தேடிவரும் ஒன்று என்னும் எமது நிலைமையைத் தக்கவைத்துக்கொள்ள உதவும் காரணி என்பதில் ஐயமில்லை."

பொது முகாமையாளரின் செய்தி • 14

இலங்கை வங்கி ஆண்டறிக்கை 2018 • **4**
செயல்திறன் மேற்பார்வை • **6**
2018ம் ஆண்டின் சிறப்பம்சங்கள் • **9**
தலைவரின் செய்தி • **10**
பொது முகாமையாளரின் செய்தி • **14**
இலங்கை வங்கியின் மேற்பார்வை • **20**
எங்கள் சுவடுகள் • **22**
குழு அமைப்பு • **23**
பணிப்பாளர் சபை • **24**
கூட்டாண்மை முகாமைத்துவம் • **28**
நிறைவேற்று முகாமைத்துவம் • **40**
பெறுமதி உருவாக்கத்தின் அணுகு முறை • **48**
பங்குதாரர் சம்பந்தம் • **50**
மூலோபாய அறிக்கை • **52**
நிலைபேண்தகமை அறிக்கை • **58**
பொருளாதாரத்திற்கான பங்களிப்பு • **63**

மதிப்பைப் பேணுதல்

கூட்டாண்மை செயலாட்சி • **70**
பணிப்பாளர் சபை உப குழுவின் அறிக்கை • **89**
கணக்காய்வுக் குவிவின் அறிக்கை • **89**
ஒழுங்கிணைந்த இடர்முகாமைத்தவ குழுவின் அறிக்கை • **93**
மனிதவளங்கள் மற்றும் ஊதியக்குழு அறிக்கை • **96**
நியமனம் மற்றும் கூட்டாண்மை செயலாட்சிக் குழு அறிக்கை • **98**
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் குழுவின் அறிக்கை • **100**
இடர் முகாமைத்துவம் • **102**

வியாபாரத் தளங்களினூடாக மூலோபாயத்தைச் செலுத்துதல்

பொருளாதார மற்றும் துறைசார் மேற்பார்வை • **120**
சில்லறை வங்கியியல் • **126**
கூட்டாண்மை மற்றும் கரைகடைந்த வங்கியியல் • **131**
சர்வதேச, திறைசேரி, முதலீட்டு மற்றும் வெளிநாட்டு நடவடிக்கைகள் • **134**

எமது மூலதனங்களினூடாக பெறுமதியை உருவாக்குதல்

நிதியியல் மூலதனம் • **137**
உற்பத்தி மூலதனம் • **142**
மனிதவள மூலதனம்• **147**
புலமை மூலதனம் • **156**
சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் • **160**
இயற்கை மூலதனம் • **171**

நிதியியல் அறிக்கைகள்

இலங்கை வங்கியின் நிதியியல் நடவடிக்கைகள் மீதான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை • **179**
ஓப்பந்தங்களில் பணிப்பாளர்களின் பங்கு • **185**
நிதியியல் அறிக்கையிடலின் உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று • **188**
சுயாதீன உத்தரவாத அறிக்கை • **190**
நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு • **191**
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை • **192**
இலாப நட்டக் கூற்று • **196**
முற்றடக்க வருமானக் கூற்று • **197**
நிதியியல் நிலைமைக் கூற்று • **198**
உரிமையாண்மையில் ஏற்படும் மாற்றங்களைக் காட்டும் கூற்று • **200**
காசுப்பாய்ச்சல்கள் கூற்று • **204**
நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் • **206**

இணக்கப்பாட்டு பின்னிணைப்புக்கள்

இலங்கை பட்டையக்கணக்காளர் நிறுவனத்தில் 2017ம் ஆண்டு வெளியிடப்பட்ட சிறந்த நடைமுறைகளுக்கமைவான இணக்கப்பாட்டு பிணைப்பு • **394**
2007ம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள் • **401**
கொழும்பு பங்குப் பரிவர்த்தன நிலையத்தால் அமுல்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள் • **428**
இலங்கை மத்திய வங்கியினால் அமுல்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள் • **430**
மூலதனப் போதுமை • **434**
மாற்றல் விலையிடல் தொடர்பான பணிப்பாளர் சான்றிதழ் • **448**

துணைத் தகவல்கள்

மைல்க்கற்கள் • **450**
GRI சுட்டெண் • **452**
சுயாதீன உத்தரவாத அறிக்கை • **457**
அமெரிக்க டொலரில் இலாபநட்டக் கூற்று • **459**
அமெரிக்க டொலரில் முற்றடக்க வருமானக் கூற்று • **460**
அமெரிக்க டொலரில் நிதியியல் நிலைமைக் கூற்று • **461**
காலாண்டுச் செயல்நிறைவேற்றம் • **462**
பங்குகள் மற்றும் தொகுதிக்கடன் தகவல்கள் • **465**
பத்து வருட புள்ளிவிபரச் சுருக்கம் - வங்கி • **467**
துணை நிறுவனங்களும் கூட்டு நிறுவனங்களும் • **469**
துணைநிலைத் தகவல்கள் தேசவாரியாக தொடர்பாளர் வங்கிகள் • **472**
தேசவாரியாக பரிவர்தனைக் கம்பனிகள் • **478**
நிதியியல்/வங்கியியல் கலைச் சொற்களின் அகராதி • **480**
தொகுதி அலுவலகங்கள் மற்றும் கடல்கடந்த கிளைகள் • **485**
நிறுவனத் தகவல்கள் • **487**

இலங்கை வங்கி
2018ம் அண்டு ஆண்டறிக்கை

எமது ஒன்றிணைந்த அறிக்கை

எமது பங்குதாரர்களுக்கான முதன்மை வெளியீடான இந்த ஒன்றிணைந்த அறிக்கை நாங்கள் எவ்வாறாக குறுகிய, நடுந்தர, தொலைநோக்கு இலக்குகளில் பெறுமதி உருவாக்குகின்றோம் என்பதையும், எமது பங்குதாரர்களின் அபிலாஷைகளை எட்டுகின்றோம் என்பதையும் முழுமையாகவும், சமமாகவும் விளக்குகின்றது.

நோக்கமும் எல்லைகளும்

இந்த அறிக்கையானது, இலங்கை வங்கியையும் (இதற்குப் பின் வங்கி எனக் குறிப்பிடப்படும்) உள்நாட்டு, வெளிநாட்டு மற்றும் கடல்கடந்த தொழிற்பாடுகளையும் இலங்கை வங்கியின் துணைநிறுவனங்களையும் (இதற்குப் பின் குழுமம் எனக் குறிப்பிடப்படும்) முழுமையாக 1 ஜனவரி 2018 முதல் 31 டிசம்பர் 2018 வரையான காலப்பகுதிக்கான உள்ளடக்குகின்றது.

196ம் பக்கம் முதல் 392ம் பக்கம் வரை தரப்பட்ட நிதியியல் தகவல்கள் தொகுக்கப்பட்டவையாகும். ஆனாலும் நிதிசாரா தகவல்கள் தாய் நிறுவனத்திற்குரியது மட்டுமே, காரணம் குழுமத்தினுள் தாய் நிறுவனமே ஆதிக்கம் செலுத்துகின்றது. எமது வருடாந்த ஆண்டறிக்கை சுழற்சி மற்றும் இந்த ஆண்டறிக்கை வங்கியின் வங்கி முந்திய 31 டிசம்பர் 2017ம் ஆண்டு முடிவடைந்த அறிக்கையின் அடிப்படையிலானது இந்த அறிக்கைக்கான காலத்தில், எந்தவொரு மிகப்பெரிய சம்பவமும் எமது நிதியல்லாத தகவல்களில் செல்வாக்குச் செலுத்தும் வண்ணம் நிகழவில்லை. இந்த அறிக்கையானது ஒன்றிணைந்த அறிக்கையிடல் கட்டமைப்பிற்கமைய (IR) ஆறு மூலதனங்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டது.

நியமங்களும் கொள்கைகளும்

நிதியியல் கூற்றுகள் யாவும் இலங்கை பட்டையக்கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக தயாரிக்கப்பட்டது. நிதியியல் அல்லாத விடையங்கள் சர்வதேச ஒழுங்கமைந்த அறிக்கையிடல் சட்டத்திற்கு அமைவாக அறிக்கையிடப்பட்டன. நிலைபேண் நீடுறுதி தொடர்பான அறிக்கையில் நாங்கள், "பூகோள அறிக்கையிடல் முன்னேற்பாட்டினால்" தரப்பட்ட சட்டத்தின் உள்ளகக் அடிப்படைகளை கருத்திற் கொண்டு, கொழும்பு பங்குப் பரிவத்தனை நிலையத்தால் பரிந்துரைக்கப்பட்ட "சூழல் மற்றும் சமூக ஆட்சி" சட்டத்தையும் உள்ளடக்கியுள்ளோம். கூட்டாண்மை ஆட்சி வெளிப்படுத்துகையானது 1938ம் ஆண்டு இலங்கை வங்கி சட்டம் இல 53 மற்றும் அதன் திருத்தங்களுக்கு ஏற்பவும், 1988ம் ஆண்டு வங்கிச்சட்டம் இல30க்கு அமைவாகவும் அவற்றின் திருத்தங்களுக்கு அமைவாகவும் மற்றும் (திருத்தப்பட்ட) இலங்கை பட்டையக் கணக்காளர்களினால் வெளியிடப்பட்ட 4 கூட்டாண்மை ஆட்சிக்கான சிறந்த நடைமுறைகள் 2017க்கு அமைவாகவும் வெளியிடப்பட்டவை.

அறிக்கையிடல் மேம்பாடுகள்

- இலங்கை பட்டையக் கணக்காளர்களால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட கூட்டாண்மை ஆட்சிக்கான சிறந்த நடைமுறைகள் 2017இனை ஏற்றுக்கொள்ளல்.
- பொருள் சார்ந்த அம்மசங்களை விரிவுபடுத்தலுடன் GRI சட்டெண்னுக்கு அப்பாலும் சென்று துறைசார்ந்த நிறுவனம் சார்ந்த குறிப்பிட்டவற்றை உள்ளடக்குதல்.
- இலங்கை மத்திய வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட புதிய வடிவங்களி-னடிப்படையில் நிதியியல் கூற்றுக்களை வெளியிடல்.
- வங்கியின் தேசிய பொருளாதாரத்-திற்கான விசேட அத்தியாயம் உள்ளடக்கப்பட்டது.
- வாசிக்க இலகுவாக மேம்படுத்தப்பட்ட புதிய வடிவத்திலான அறிக்கை வெளியீடு
- SLFRS 9க்கு இணக்கப்பாடான அறிக்கை

வெளியக உத்தரவாதம்





இணைப்பும் ஒப்பீடும்

வழிகாட்டிச் சின்னங்கள் அறிக்கை முழுதும் தொடர்புபடுத்தப்பட்டிருப்பதைக் காட்டுகின்றன.

நம்பகத்தன்மை

பொருள் சார்ந்த தலைப்புகள், சாதகமான மற்றும் பாதகமான பொருள் சார்ந்ததாக தாக்கங்களைக் காட்டுகின்றன. இவை வங்கியின் பெறுமதி உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

சம்பந்தம் பொருள்சார்ந்த அம்சங்கள்

அறிக்கையானது பொருள் சார்ந்த அம்சங்களினடிப் படையில் அமைந்தது, இது எமது பங்குதாரர்களுக்கு பெறுமதிமிக்க தகவல்களை வழங்குகின்றது.

மூலோபாய கவனம்

இந்த அறிக்கையானது, வங்கியின் மூலோபாயம் நீடு அதிக் கொள்கையினடிப்படையில் நடப்பாண்டிற்கும் 2019ம் ஆண்டிற்கும் உருவாக்கப்பட்டதென்பதை குறிப்பிடுகின்றது.

அறிக்கையிடல் எல்லைகள்



Navigation Icons

பின்னூட்டல்கள்

நாங்கள் தொடர்ந்தும் இந்த அறிக்கையின் நிலைத்தன்மையையும் சம்பந்தப்படுத்தலையும் மேம்படுத்த அர்ப்பணிப்புடனும் உள்ளோம். ஆகவே உங்கள் ஆலோசனைகளையும் பின்னூட்டங்களையும் எங்களுக்கு அனுப்புங்கள்.

dgmfp@boc.lk

செயல் நிறைவேற்ற சிறப்பம்சங்கள் 2018

நிதி செயல்திறன் சிறப்பம்சங்கள்

நிதி மூலதனம்

	வங்கி			குழுமம்		
	2018	2017	மாற்று %	2018	2017	மாற்று %
செயற்பாட்டின் விளைவுகள் (ரூபா மில்லியன்)						
மொத்த வருமானம்	221,131	189,211	16.9	229,462	197,013	16.5
தேறிய வட்டி வருமானம்	65,558	58,356	12.3	68,689	61,490	11.7
நிதிச் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி	41,480	37,592	10.3	42,246	38,195	10.6
வரிக்கு முன்னரான இலாபம்	31,892	30,343	5.1	32,437	30,816	5.3
வரிக்குப் பின்னரான இலாபம்	19,479	21,312	(8.6)	19,515	21,487	(9.2)
அரசாங்கத்திற்கான பெறுமதி உருவாக்கம்	24,158	28,524	(15.3)	24,583	28,923	(15.0)
நிதியியல் நிலைமை (ரூபா மில்லியன்)						
மொத்தச் சொத்துக்கள்	2,268,154	1,951,804	16.2	2,312,923	1,999,410	15.7
மொத்தக் கடன்களும் முற்பணங்களும்	1,510,534	1,219,914	23.8	1,544,357	1,252,363	23.3
பெறுமதி குறைப்பு ஏற்பாடுகள் நீங்கலான கடன்களும் முற்பணங்களும்	1,429,107	1,163,161	22.9	1,460,619	1,194,294	22.3
வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய வைப்புக்கள்	1,765,026	1,546,832	14.1	1,783,975	1,566,376	13.9
மொத்தப் பொறுப்புக்கள்	2,146,712	1,840,649	16.6	2,180,782	1,877,084	16.2
மொத்த உரிமை மூலதனம்	121,442	111,155	9.3	132,141	122,326	8.0
பங்கொன்றுக்கான தரவு (ரூபா)						
பங்கொன்றுக்கான அடிப்படை உழைப்புக்கள்	1,045	1,857	(43.7)	1,048	1,870	(44.0)
பங்கொன்றுக்கான தேசிய சொத்துப் பெறுமதி	6,072	7,410	(18.1)	6,574	8,093	(18.8)
தொழிற்பாட்டு விகிதங்கள் (%)						
சராசரிச் சொத்துக்கள் மீதான திரும்பல்	1.5	1.7	(0.2)	1.5	1.7	(0.2)
சராசரி உரிமை மீதான திரும்பல்	16.8	20.9	(4.1)	15.3	19.0	(3.7)
வட்டி எல்லை	3.1	3.2	(0.1)	3.2	3.3	(0.1)
வருமானச் செலவு வீதம்	38.1	38.4	(0.3)	40.4	40.5	(0.1)
வைப்புகளுக்கான கடன் விதிதம்	85.6	78.9	6.7	86.6	80.0	6.6
கடன் உரிமை விகிதம்	41.0	41.5	(0.5)	-	-	-
மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் விகிதமாக கடனிழப்பு ஏற்பாடு	5.4	4.7	0.7	5.4	4.6	0.8
சட்டரீதியான விகிதங்கள் (%)						
திரவச் சொத்து விகிதம் உள்நாடு) குறைந்த தேவைப்பாடு 20%)	24.5	27.2	(2.7)	-	-	-
திரவத்தன்மைக் காப்பு விகிதம் (ரூபா) (குறைந்த தேவைப்பாடு 2018-90%, 2017 - 80%)	143.5	141.5	2.0	-	-	-
திரவத்தன்மைக் காப்பு விகிதம் (எல்லா நாணயங்களும்) (குறைந்த தேவைப்பாடு 2018-90%, 2017 - 80%)	115.0	105.0	10.0	-	-	-
மூலதனப் போதுமை விகிதம் (%)						
பொதுப் பங்கு அடுக்கு 1 மூலதனம் (குறைந்த தேவைப்பாடு- 2018- 7.375%, 2017- 6.250%)	10.3	10.8	(0.5)	10.4	10.9	(0.5)
அடுக்கு 1 மூலதனம் (குறைந்த தேவைப்பாடு - 2018- 8.875%, 2017- 7.750%)	10.3	10.8	(0.5)	10.4	10.9	(0.5)
மொத்த மூலதனம் (குறைந்த தேவைப்பாடு - 2018- 12.875%, 2017- 11.750%)	14.6	14.6	-	14.6	14.5	0.1

நிதியற்ற செயல்நிறைவேற்றங்களின் சிறப்பம்சங்கள்

பொருளாதார செயல்நிறைவேற்றங்களின் சிறப்பம்சங்கள்

		2018	2017	மாற்றம் %
அரசாங்கத்தின் மதிப்பு உருவாக்கம்	LKR மில்லியன்	24,158	28,524	(15.3)
புதிய, நேரடி வேலைவாய்ப்பு உருவாக்கம்	எண்ணிக்கை	1,622	534	203.7
உள்நுழைவு விகிதாசாரம்	%	62.5	59.8	2.7
மேல் மாகாணத்துக்கு வெளியிலுள்ள கிளைகள்	எண்ணிக்கை	442	443	(0.2)
வருடத்தின்போது நிதியளிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி	LKR மில்லியன்	31,696	1,464	(2,065.0)
நிதியளிக்கப்பட்ட புதுப்பிக்கத்தகு மின்வலுக் கருத்திட்டங்கள்	LKR மில்லியன்	3,600	640	462.5
நாட்டினுள் அனுப்புதொகைகள் குறித்த வசதிகள்	LKR மில்லியன்	580,133	449,170	29.2

சமூக முன்னேற்றங்களின் சிறப்பம்சங்கள்

மனிதவளம்

		2018	2017	மாற்றம் %
மொத்த ஊழியர்கள்	எண்ணிக்கை	8,724	7,587	15.0
புதிய ஆட்சேர்ப்புகள்	எண்ணிக்கை	1,622	534	203.7
பெண்கள் பிரதிநிதித்துவ வீதம்	%	60	57	3.0
ஊழியர் விலகல் வீதம்	%	0.9	0.3	0.6
ஊழியர்களுக்கான மொத்தக் கொடுப்பனவுகள்	LKR மில்லியன்	18,875	16,996	11.1
பதவி உயர்வுகளின் எண்ணிக்கை	எண்ணிக்கை	174	1,831	(90.4)
பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் முதலீடு	LKR மில்லியன்	338	322	5.0
மொத்தப் பயிற்சி நேரம்	நிகழ்ச்சித்திட்ட மணித்தியாலங்கள்	11,768	11,884	(1.0)
ஓர் ஊழியர் குறித்த வருமானம்	LKR மில்லியன்	25.3	24.9	1.6
ஓர் ஊழியர் குறித்த தேறிய இலாபம்	LKR மில்லியன்	2.2	2.8	(21.4)
தொழில்சார் அழைப்புகளில் அங்கத்துவம் பெற்ற ஊழியர்கள்	எண்ணிக்கை	371	292	27.1

சமூக மற்றும் உறவுகள்

		2018	2017	மாற்றம் %
மொத்த வாடிக்கையாளர்கள்	LKR மில்லியன்	13.4	12.8	4.7
வாடிக்கையாளர்களுக்குச் செலுத்தப்பட்ட வட்டி	LKR மில்லியன்	112,056	92,229	21.5
வாடிக்கையாளர்களின் தொடர்பு நிலையங்கள்	எண்ணிக்கை	1,721	1,589	8.3
வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகள்	LKR மில்லியன்	6,670	5,179	28.8
உள்ளூர் வழங்குநர்கள் குறித்த செலவினங்கள்	%	95.1	91.6	3.5
CSR இல் முதலீடுகள்	LKR மில்லியன்	108	127	(15.0)
பல்கலைக்கழக பயிலுநர் மற்றும் பாடசாலையிலிருந்து விலகிப் பயிற்சிபெற்றோரின் எண்ணிக்கை	எண்ணிக்கை	2,752	1,870	47.2
பேணப்படும் கடிதத்தொடர்பு உறவுகளின் எண்ணிக்கை	எண்ணிக்கை	859	859	-

செயல் நிறைவேற்றம் குறித்த பொதுப்பார்வை 2018

அறிவாற்றல்சார் மூலதனம்

		2018	2017	மாற்றம் %
வர்த்தக நாமப் பெறுமதி	ரூபா மில்லியன்	42,874	40,600	5.6
ஊழியர் அனுபவம் (உள்ளார்ந்த அறிவு)	வருடங்கள்	81,627	81,841	(0.3)
கூட்டாண்மை முகாமைத்துவ அனுபவம்	வருடங்கள்	519	566	(8.3)

உற்பத்திசார் மூலதனம்

		2018	2017	மாற்றம் %
நவீன உட்கட்டமைப்பின் மீதான முதலீடு	ரூபா மில்லியன்	1,964	1,693	16.0
கிளை நிலைமாற்றம் மற்றும் தரமுயர்த்தல் மூலதனச் செலவினம்	ரூபா மில்லியன்	1,518	1,455	4.3

சூழல் செயல்நிறைவேற்றச் சிறப்பம்சங்கள்

இயற்கை மூலதனம்

		2018	2017	மாற்றம் %
GHG வெளியிடல் / மாசு நோக்கெல்லை 1 (CO2eqv.)	தொன்	2,902	கிடைக்கவில்லை	-
GHG வெளியிடல் / மாசு நோக்கெல்லை 2 (CO2eqv.)	தொன்	10,354	கிடைக்கவில்லை	-
சூரியசக்தி பிறப்பாக்கம்	kWh	885,238	492,230	79.8
எரிபொருள் பயன்பாடு	லீட்டர்	732,101	440,180	66.3
மின்சார நுகர்வு	MWh	21,135	22,325	(5.3)
நீர் நுகர்வு	m^3	501,229	489,560	2.4
சூரியசக்தியில் முதலீடு	ரூபா மில்லியன்	146	71	105.6
ESMS இன்கீழ் பரிசீலனைக்குட்படுத்தப்பட்ட கடன்களின் எண்ணிக்கை	எண்ணிக்கை	508	கிடைக்கவில்லை	-

2018 ஆம் ஆண்டின் சிறப்பம்சங்கள்

இலங்கை வங்கி கண்டி நகர மத்தியில் BOC DIGI ஐ ஆரம்பித்துள்ளது. இது வாடிக்கையாளர்களுக்கு தொடக்க மற்றும் முடிவுப் புள்ளிகளுக்கிடையிலான துடிம அனுபவத்தை வழங்குவதற்காகும்.

ATM/ CDM/ CRM இல் 1000 திருப்புமுனையை அடைதல்

NFC (அருகாமை பணிக்களத் தொடர்பாடல்) வலுவளிப்பு அட்டைகளின் அறிமுகம்

இலங்கை வங்கி அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் சங்கத்தின் (GMOA) அங்கத்தவர்களுக்காக 'உங்கள் பயணத்தின் தலைவராக இருங்கள்" என்னும் கருப்பொருளிலான " World master card" உடன் இணைவாக "GMOA Affinity - World master card" என்பதையும் ஆரம்பித்தது.

உள்மைய வங்கித்தொழில் வழங்கல்களை "iSeries Power 8" இடைநிறுத்தல் இல்லாத வழங்கல் வழிமுறைகளுடன் தரமுயர்த்தியமை

தகவல் இடரின்மைக்காக பாதுகாப்பு செயற்பாட்டு நிலையத்தை (SOC) நிறுவிய இலங்கையின் முதலாவது வங்கி

தேசிய மின்சாரக் கட்டமைப்புக்கு 1Mw பங்களிப்புச் செய்த முதலாவது அரச வங்கி

உள்நோக்கிய தீர்த்தல்களுக்கான Optical Character Reader (OCR) அடிப்படையிலான முன்னேற்றகரமான தொழில்நுட்பத்தின் அறிமுகம் "Image Master"

தலைவரின் செய்தி

“ தொழில் துறையில் அதிவிஸ்தாரமான வலையமைப்பைச் செயற்படுத்தும் இலங்கையின் மாபெரும் நிதி நிறுவனம் என்ற வகையில் இலங்கை வங்கி இலங்கையில் அதிகூடுதலான பொருளாதார மற்றும் சமூகத் தாக்கத்தை ஏற்படுத்தும் அமைப்புகளில் ஒன்றாகவுள்ளது.”

அன்புள்ள நலனுரித்தாளர்களே,

இலங்கை வங்கி தனது சந்தை தலைமைத்துவ ஸ்தானத்தை வலுப்படுத்தி, நாடு முழுவதும் பொருளாதார நடவடிக்கைகளை முன்னேற்றி மேலுமொரு வருடத்துக்கான வலுவான செயல்நிறைவேற்றத்தைக் காண்பித்துள்ளது. இடர்நிறைந்த செயற்பாட்டு நிலைமைகளிலும், வங்கி தனது பங்குவைத்திருப்போருக்கான அர்ப்பணப்பொறுப்புக்களையும், நிதிக்குறிக்கோள்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றி, வரிக்கு முந்திய இலாபமாக 31.9 பில்லியன் இலங்கை ரூபாவை பதிவிட்டுள்ளது. இது 2018 இல் 5% வீத வளர்ச்சியாகும்.

செயற்பாட்டுப் பரப்பின் எண்ணிறந்த சவால்களை வைத்து நோக்குகையில், வங்கியின் மூன்று மடங்கு அதிகரித்த செயல்நிறைவேற்றம் பாராட்டுக்குரியதாகும். இப்புகழ்வாய்ந்த அமைப்பின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி நிறைவடையும் நிதியாண்டுக்கான ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப்பதில் நான் உண்மையில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தேசத்தின் வங்கியாளர்

கைத்தொழிலின் அதிவிஸ்தாரமான வலைமையமைப்பைச் செயற்படுத்தும் இலங்கையின் அதிமாபெரும் நிதி நிறுவனம் என்றவகையில் இலங்கை வங்கி இலங்கையில் அதிகூடுதலான பொருளாதார மற்றும் சமூகத் தாக்கத்தை ஏற்படுத்தும் அமைப்புகளில் ஒன்றாகவுள்ளது. பூரணமாக அரசுடைமையான ஒரு தனியதார்த்த அமைப்பு என்றவகையில், வங்கியின் குறிக்கோள்கள் வெறும் நிதிசார் செயல்நிறைவேற்றங்களுக்கும் அப்பால் பொருளாதார, சமூகக் குறிக்கோள்களையும் உள்ளடக்கும்வகையில் வியாபித்து, சுமார் எட்டுத் தசாப்தங்களாக, தனிநபர்கள், தொழில்முயற்சியாளர்கள், வியாபாரத் தொழில்கள் மற்றும் அரசாங்கம் என்போருடன் பங்குடைமைகொண்டு, நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு நேரடியான பங்களிப்பை வழங்கியுள்ளோம். வங்கியின் வளர்ச்சித் தந்திரோபாயம் அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலுடன் நெருக்கமாக ஒன்றிணைந்து செல்வதாகும். 2018 இல் நாம் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சித் துறைகளுக்கு ஆதரவு வழங்கி, பாரிய அளவிலான தேசிய அகநிலையமைவுக் கருத்திட்டங்களுக்குக் கடன் வழங்கி, நாடு முழுவதும் அனைவரும் நிதிசார் வசதிகளைப் பெற்றுக்கொள்வதை முன்னேற்றி, தொழில்முயற்சியாளர்களுக்கு அதிகார வலுவளிப்பதைப் தந்திரோபாய ரீதியில் வலியுறுத்தினோம். அத்தோடு மாலைதீவு, சீஷெல்ஸ் மற்றும் சென்னையிலும் மூன்று வெளிநாட்டுக் கிளைகளையும் ஐக்கிய இராச்சியத்தில் (UK) ஓர் உபநிலைக் கம்பனியையும் செயற்படுத்துவதன்மூலமும் 800 க்கு மேற்பட்ட தொடர்பாளர் வங்கி உறவுகளைப் பேணுவதன் மூலமும் எமது வங்கி எமது எல்லைகளுக்கும் அப்பால் வியாபிக்கும் வகையிலான எமது தேசத்தின் சகல நிதிசார் தேவைகளையும் பூர்த்தி செய்யும் மிகப்பாரிய தொடர்பாடல் வலையமைப்பைச் சொந்தமாகக் கொண்டிருப்பதில் பெருமையடைகின்றது. மாலைதீவில் வங்கியின் இரண்டாவது கிளையைத் திறந்ததன்மூலம் ஆசியப் பிராந்தியத்தில் எமது பிரசன்னத்தை அகலமாக்குவதை நோக்கிய எமது பயணத்தில் மேலுமொரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளோம்.

எமது செயற்பாட்டுப் பரப்பு

இந்த வருடத்தின்போதான புவிசார் இயக்கவியல் மற்றும் உள்நாட்டு நிலைமைகள் காரணமாக செயற்பாட்டுச் சூழல் எண்ணிறந்த சவால்களை ஏற்படுத்தியது. உலகளாவிய பொருளாதார வளர்ச்சி அதற்கு முந்திய வருடத்தோடு ஒப்பிடுகையில் மாற்றமின்றி 3.5% ஆகவிருந்தது. இது பிராந்தியம் மற்றும் தேசம் குறித்துரைப்பான காரணிகளால் இயக்கப்படும் வளர்ச்சி உத்வேகத்திலான வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. அமெரிக்காவுக்கும் அதன் பிரதான வர்த்தகப் பங்காளர்களுக்குமிடையிலான பரவிச்செல்லும் வர்த்தகப் பதற்றநிலைமைகள் மற்றும் பல முன்னேறிய நாடுகளில் நிலவும் இறுக்கமான நிதிநிலைமைகளை வைத்து நோக்குகையில் பல சாதகமற்ற இடர்வரவுகள் இன்னமும் உள்ளன. இவற்றின் காரணமாக, 2019 மற்றும் 2020 க்கான உலகளாவிய வளர்ச்சி முன்னறிவிப்புகள் முறையே 3.5% ஆகவும் 3.6% ஆகவும் இருந்தன.

இறுக்கமடையும் நிதி திரவநிலைமைகள் காரணமாகவும், முதலீட்டாளர்கள் மற்றும் நுகர்வோரின் நம்பிக்கை உணர்வுகள் குறைவடைந்ததன் காரணமாகவும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்பட்டது. 2018 இல் சேவைகள் துறை 4.7% விரிவாக்கமடைந்தமை காரணமாக மொத்த தேசிய உற்பத்தி 3.2% ஆக அமைந்திருந்தது. அதேவேளையில் இந்த வருடத்தின்போது கைத்தொழில் வளர்ச்சி 0.9% ஆகக் குறைவடைந்தது. வருடத்தின் முதல் அரைப்பகுதிக் காலத்தில் ஒழுங்குபடுத்துநர் அதிகரித்த விரிவாக்க நாணயக்கொள்கையைக் கடைப்பிடித்தபோதிலும் 2018 பின்பகுதியில் உலகளாவிய நிதி நிலைமைகளில் படிப்படியான இறுக்கநிலை மேலும் விசையூக்கமற்ற நிலைப்பாட்டுக்கு இட்டுச்சென்றமையால், இது சந்தை வட்டிவீதங்களில் படிப்படியான அதிகரிப்பை ஏற்படுத்தியது. இதேவேளையில், 2018 இல் இலங்கை ரூபா அமெரிக்க டொலருடன் ஒப்பீடாக 19% தீவிர மதிப்பிறக்கத்தைக் காண்பித்தது.

இச்செயல்நெறிகள் நாட்டின் வங்கித்துறையில் ஓர் அலைத்தொகுதித் தாக்கத்தை ஏற்படுத்தின. இதனால் வங்கித்துறை வளர்ச்சியில் ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தது. மட்டுப்படுத்தும் பொருளாதார நிலைமைகளும், ஊக்கமற்ற நிர்மாணத்துறையும் பாதிப்புக்களைத் தீவிரமாக அதிகரித்தவேளையிலும், வங்கித்துறையின் மொத்தக் கடன்களும், முற்பணங்களும் இந்த வருடத்தின்போது 20% வளர்ச்சியைக் கண்டன. மொத்தக் கடன்கள் 64% அறவிடமுடியாக்கடன் அதிகரிப்பைக் கண்டவேளையில், இத்துறையின் வீதாசாரம் அதற்கு முந்திய வருடத்திலான 2.5% த்திலிருந்து 3.4% ஆக அதிகரித்தது. அனைத்துமடங்கும் வகையில், மீள்பார்வைக்குரிய வருடத்தின்போது இத்துறையின் வரிக்குப்பிந்திய இலாபம் 125.9 பில்லியன் இலங்கை ரூபாவாக 9%த்தினால் குறைவடைந்தது.

இத்துறையின் பிரயத்தனங்கள் முறைமைகளைச் சீரமைத்தல் மற்றும் ஊழியர் - வாடிக்கையாளர் சிந்தனை முறைகளில் மாற்றம் என்பவற்றை வேண்டிநிற்கும் இலங்கை நிதி அறிக்கையிடல் தரநியமங்களுடன் (SLFRS) இணங்கியொழுகும் வகையிலும் இடம்பெற்றன. தரநியம நடைமுறையாக்கம் தொழில்துறையில் கடன் இழப்புக்களுக்கான பெறுமதி குறைப்பு

தலைவரின் செய்தி

“வாடிக்கையாளர்களை மகிழ்விக்கும் எமது ஆற்றலே இத்தொழிலில் எமது வங்கி அதிகமானோர் முனைப்பாகத் தேடிவரும் ஒன்று என்னும் எமது நிலைமையைத் தக்கவைத்துக்கொள்ள உதவும் காரணி என்பதில் ஐயமில்லை.”

அறவீடு அதிகரித்துக் காணப்பட்டது. பாசல் III இன் பூரண நடைமுறையாக்கத்துடன் இணைவான வகையில் பல வங்கிகள் பங்கு மூலதன மற்றும் கடன் வங்கிகளை அணுகி மூலதனத்தை வலுப்படுத்தி அதிகரிக்க முனைந்தன. துறையின் குறைவடைந்த செயல்நிறைவேற்றத்தை வைத்து நோக்குகையில், உள்நிலை நிதிகள் பிறப்பாக்கத்தை அதிகரிக்கும் வகையில் வரிகள் மற்றும் கடன் மீளறவீட்டுத் தீர்வைகளின் நடைமுறையாக்கம் என்பவை இத்துறைக்குச் சவாலாக அமைந்தன. பங்குமூலதனச் சந்தைகளை அணுகமுடியாத இலங்கை வங்கி போன்ற அரச வங்கிகளுக்கு மூலதனத்தை அதிகரிப்பது மேலும் இடர்மிக்கதாயிற்று.

தந்திரோபாயமும், செயல்நிவேற்றமும்

பொருளாதார மற்றும் கைத்தொழில் பரப்பை வைத்து நோக்குகையில் வங்கியின் செயல்நிறைவேற்றம் பாராட்டத்தக்கதாக அமைந்தது. இம்மில்லேனிய யுகத்தவர்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் நாம் வங்கியின் சலுகை மற்றும் வர்த்தக நாம அம்சங்களை மீண்டும் புதுதுனைதலாக வகுத்தமைக்க முனைந்தவேளையில் ஆண்டுக்கான எமது தந்திரோபாயச் செயற்பாடுகளுக்கு வழிகாட்டியாக அமைந்தது எமது வங்கியின் கூட்டாண்மைத் திட்டமே (2018-2020) ஆகும். இந்த வருடத்தின்போது வாடிக்கையாளர் நலன்களை மையப்படுத்தும் பிரயத்தனங்களை முன்செலுத்துவதே கவனத்துக்குரிய ஒரு முக்கிய விடயப்பரப்பாக அமைந்தது. எமது சகல தொடுகைப் புள்ளிகளிலும் நிலைமாற்றமில்லாத வாடிக்கையாளர் அனுபவத்தை முன்செலுத்தும் வகையில் ஊழியர்களுக்கு அதிகார வலுவளிக்கும் விதத்தில் எமது முதலீடுகளை நெறிப்படுத்தினோம். அத்தோடு, ஊழியர்களுக்கான எமது சகல ஆற்றல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிலும் எவ்விதமான ஐயமுமின்றி வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் எமது ஆற்றலே இக்கைத்தொழிலில் எமது வங்கி அதிகமானோர் முனைப்பாகத் தேடிவரும் நிலைமையைத் தக்கவைத்துக்கொள்ளும் ஒரு முக்கிய காரணி என்பதைத் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றோம். இந்த வருடத்தின்போது கடன் தரம் மற்றும் ஊழியர் ஆற்றல்களைக் கட்டியெழுப்புவதைப் பேணும் வகையிலான டிஜிட்டல் செயற்பாடுகளில் கவனம் செலுத்தியபோதிலும், போட்டித்தகவான அனுகூலத்தைப் பெற்றுக்கொள்வதில் முக்கிய விடயமாகவிருப்பது அதிசிறப்பான வாடிக்கையாளர் சேவையாகும். ஆகவே, வாடிக்கையாளர் நலன்களை மையப்படுத்துவதென்பது இந்த வருடத்தின்போதும் இனிவரும் வருடங்களின்போதும் எமது கூட்டாண்மைச் செயற்பாடுகளில் உயர் முக்கிய இடத்தை வகிக்கும் விடயமாகும்.

கடன் வழங்கல் கண்ணோட்டத்தில், நாம் தொழில்முயற்சியாளர்களுக்கு அதிகார வலுவளித்தல் மற்றும் குறிப்பாக இலங்கை தொழில்முயற்சியாளர் அபிவிருத்திக் கடன் திட்டத்தினூடாக நாட்டின் சிறிய மற்றும் நடுத்தரத்தொழில் துறைக்கு ஆதரவளித்தல் என்பவற்றில் தந்திரோபாய வலியுறுத்தலை மேற்கொண்டோம். இது இலங்கையில் மாற்றத்துக்கான ஓர் ஊக்கியாகத் தொழிற்பட்டு, தொழில்முயற்சிகளையும், சுய-சார்பையும் முன்னேற்றும் வகையிலான ஒரு முன்முயற்சியாகும். நீண்டகாலமாகவே இலங்கைத் தொழில்முயற்சியாளர்களில் 75% ஆனவர்களை உள்ளடக்கும் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சியாளர் துறை, பொருளாதார வளர்ச்சியின் ஊக்கவிசையாக இனங்காணப்பட்டு, நாம் இத்துறைக்கு நிதிகளை வழங்குவதனூடாகவும், அதிகரித்த வியாபாரத்தொழில் வாய்ப்புகளினூடாகவும் இலங்கைக் கிராமியப் பொருளாதாரத்தை உலகளாவிய மதிப்புச் சங்கிலி நிலைக்கு உயர்த்துவதன்மூலம் அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சியில் பங்குதாரராகும் அர்ப்பணவுணர்வைத் தொடருகின்றோம். இது அறிமுகஞ்செய்யப்பட்ட காலம் தொடக்கம், இலங்கை வங்கியானது இலங்கைத் தொழில்முயற்சியாளர் கடன் திட்டத்தினூடாக முன்முயற்சியாகத் தொழில்முயற்சி நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க முயற்சித்து வந்துள்ளது. இன்றுவரை எமது வங்கியே இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கான மிகப்பெரும் கடன்வழங்கும் நிறுவனமாகவுள்ளது என்பதைக் கூறுவதில் நான் பெருமையடைகின்றேன். இது இலங்கைத் தொழில்முயற்சி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் பிரித்தளிக்கப்பட்ட 40%த்துக்கும் கூடுதலான கடன்களின் சந்தைப் பங்காகும்.

2018 டிசம்பர் இறுதியில் வங்கி

13.6 பில்லியன் இலங்கை ரூபா மொத்தப் பெறுமதிகொண்ட 10,500 கடன்களை இத்திட்டத்தின்கீழ் வழங்கியுள்ளது. இலங்கை வங்கி இந்த முன்முயற்சியின்கீழ் விருப்பறிவிப்புச் செய்யப்பட்ட 16 கடன் திட்டங்களில் 11 ஐச் செயற்படுத்தியதன்மூலம் இலங்கைத் தொழில்முயற்சியாளர் கடன் திட்டத்தில் துடிப்பாகப் பங்களிப்புச் செய்துள்ளது. இலங்கை வங்கி பங்காளராகச் செயற்பட்ட இத்திட்டங்களுள் சில பசுமைத் தொழில்நுட்பத்தையும், சூழல் நட்புணர்வுகொண்ட வியாபாரத் தொழிலையும் முன்னேற்றும் விசேட கடன் திட்டமாகிய ”பசுமைக் கடன்”, புதுப்பிக்கத்தகு சக்தி பிறப்பாக்கம் சம்பந்தமான அர்ப்பணவுணர்வுகொண்ட கடன் திட்டமாகிய “ரிவி பல சவி” என்பவற்றை உள்ளடக்குவனவாகும். இலங்கை வங்கி இலங்கையின் இளைஞர், யுவதிகளின் தொழில்முயற்சிகளுக்கு ஊக்கமளித்து, அதன்மூலம் சமத்துவமின்மைகளைக் குறைத்து, அனைவருக்கும் கண்ணியமான தொழிலை உறுதிசெய்யும் தனிச்சிறப்பான “ஆரம்பும” கடன்திட்டத்திலும் கடன்வழங்கும் பங்காளராகவுமுள்ளது.

இந்த வருடத்தின்போது இலங்கை வங்கி நிதிப்பட்டியலையும், வரிக்கு முந்திய இலாப வளர்ச்சியையும் முறையே 24% ஆகவும், 5% ஆகவும் பதிவு செய்தது. கடன் நிதிப்பட்டியல் தர விடயத்தில் வங்கி ஒரு பலவீன நிலையைக் கண்டபோதிலும், அதன் கடுமையான திரட்டல் மற்றும் கண்காணிப்புச் சட்டகங்கள் காரணமாக பாதிப்புகளிலான அதிகரிப்பு வீதம் வங்கிக் கைத்தொழிலிலுள்ள எதிர்நேர் வங்கிகளோடு ஒப்பிடுகையில் மெதுவானதாகவே இடம்பெற்றது. 2018 டிசம்பர் இறுதிப்பகுதியில் வங்கிக் கைத்தொழிலின் கடன்கள் மற்றும் வைப்புகளில் 22% மற்றும் 24% எனத் தனது சந்தைத் தலைமைத்துவ ஸ்தானத்தைப் பேணிக்கொண்டது. அத்தோடு நாம் சொத்துக்கள் விடயத்தில் 2.0 ட்ரில்லியன் இலங்கை ரூபா எனும் மைல்கல்லைத் தாண்டிய இலங்கையின் முதலாவது வங்கியாகப் பரிணமித்தோம். இது இலங்கையின் முதல்தரமான வங்கி என்னும் எமது ஸ்தானத்தை மேலும் ஸ்திரப்படுத்தியது. எமது ஊக்க ஆர்வம் மற்றும் அர்ப்பணவுணர்வுகொண்ட இலங்கை வங்கி அணி எமது மதிப்பு உருவாக்க முயற்சிகளையும், வாடிக்கையாளர் அனுபவங்களையும் வசதிப்படுத்தியதோடு, இந்த ஆண்டில் நாம் மேலும் ஊழியர் பெறுமதியை உயர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டோம். சாதகமான மற்றும்

சவால்மிக்க பணிச்சூழலில் பயிற்சிக்கும், வாழ்க்கைப்பணி அபிவிருத்திக்குமான வாய்ப்புகளை நாம் வழங்க முனையும் அதேவேளையில் போட்டித்தகவுள்ள ஊதியத்தையும் உறுதிசெய்கின்றோம். இந்த வருடத்தின்போது பேச்சுவார்த்தைகள்மூலம் ஊழியர்களுக்கு மேலும் அனுகூலங்களைக்கொண்ட அடுத்த மூன்று வருடங்களுக்கான கூட்டு உடன்படிக்கையை நாம் வெற்றிகரமாக இறுதிநிலைப்படுத்தினோம்.

கூட்டாண்மை செயலாட்சி

வங்கியின் கூட்டாண்மை செயலாட்சிச் சட்டகம் சட்டம் மற்றும் இணங்கியொழுகுதல் குறித்த நிபந்தனைத் தேவைகளையும், கைத்தொழிலின் சிறப்பான நடைமுறைகளைத் தழுவும் வகையில் பரிணமித்துள்ளது. அது கூட்டாண்மை நடத்தை மற்றும் ஒழுக்கநெறி குறித்த உயர்வான தரநியமங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். மீளாய்வுக்குரிய ஆண்டின்போது, 23 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் இடம்பெற்றதோடு, 2019 பெப்ரவரியில் ஒரு புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டது.

பணிப்பாளர் சபை கவனம் செலுத்திய விடயங்களுள் தகவல் தொழில்நுட்பம், சைபர் பாதிப்பு இடர்வரவு முகாமைத்துவம் மற்றும் கடன் நிதிப்பட்டியல் தரத்தைப் பேணுதல் போன்ற 2019 – 2021 இற்கான விடயப்பரப்புகளுக்கான கொள்கை வகுத்தமைத்தல் என்பனவும் அடங்கியிருந்தன. வங்கி முழுவதும் தொழில்நுட்பத்தைப் பரவிப் பயன்படுத்துவதில் பணிப்பாளர் சபை தனது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு உதவும் வகையில் இந்த வருடத்தின்போது அர்ப்பணவுணர்வுகொண்ட ஓர் ICT உப குழுவும் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆண்டின்போது, கொள்கைச் சட்டகமும் மீளாய்வு செய்யப்பட்டு, இதன் விளைவாக தகவல் பாதுகாப்புக் கொள்கை மற்றும் இலஞ்சத்துக்கும், ஊழலுக்கும் எதிரான கொள்கை என்பவை வகுத்தமைக்கப்பட்டன.

நிலைபேற்றுத்தன்மைக்கான அர்ப்பணவுணர்வு

நிதிசார் மற்றும் சமூகக் குறிக்கோள்களினால் இயக்கப்படும் ஒரு தனி யதார்த்த அமைப்பென்ற வகையில், நிலைபேற்றுத்தன்மைகுறித்த சிந்தனைகள் எமது செயற்பாடுகளின் சகல அம்சங்களிலும் பொதிந்துள்ளன. இந்த வருடத்தின்போது நாம் வங்கியின் நிலைபேற்றுத்தன்மைகுறித்த கொள்கையுடன், நிலைபேற்றுத்தன்மைக் குறியிலக்குகளை மேலும் இணக்கப்படுத்த முயற்சி மேற்கொண்டதோடு, தற்போது இலங்கை நிலைபேற்றுத்தன்மைக் குறியிலக்குகளை ஈட்டிக்கொள்ளும் வகையில் வங்கி முழுவதும் அணிகளின் பிரயத்தனங்களை ஊக்குவிக்கும் வகையில் நேரடியாகப் பங்களிப்புச் செய்யும் கருத்திட்டங்கள் குறித்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். இந்த விடயங்களை எடுத்துரைத்தபின்னர், மிகவும் புகழ்வாய்ந்த அங்கீகாரத்தைப் பெற்றுள்ள ஒரேயொரு அரச நிறுவனம் என்ற வகையில் இலங்கை வர்த்தகப் பேரவை இலங்கை வங்கியை நாட்டின் 10 உச்சநிலைக் கூட்டாண்மைப் பிரஜைகளில் ஒருவராக ஏற்றுக்கொண்டுள்ளமையை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். எமது முக்கிளை அடித்தள மதிப்புருவாக்க மூவகை அணுகுமுறை நாம் எமது ஒருங்கிணைவான அறிக்கையிடல் சட்டகத்தையும் GRI நிலைபேற்றுத்தன்மை அறிக்கையிடல் வழிகாட்டல்களையும் பின்பற்றுவதைத் தொடருகையில். எமது கூட்டாண்மை அறிக்கையிடலில் பிரதிபலிக்கின்றது. கூட்டாண்மை அறிக்கையிடலில் எமது மேன்மை தெற்காசியக் கணக்காளர் சம்மேளனத்தின் (SAFA) மிகச் சிறப்பான முறையில் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டறிக்கை விருதுகள் 2018 இல் அங்கீகரிக்கப்பட்டது. எமது 2017 க்கான ஆண்டறிக்கை இந்நிகழ்வில் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டது. இந்த அறிக்கை இரண்டாவது முறையாகவும் இடம்பெற்ற அரச நிறுவனங்கள் துறை CA இலங்கை ஆண்டறிக்கை விருதுகள் நிகழ்வில் தங்க விருதையும் பெற்றுக்கொண்டது.

முன்செல்லவேண்டிய பாதை

இலங்கையின் நீண்டகால அடிப்படையிலான வளர்ச்சி அனுகூல நிலைமைகள் மிகவும் உற்சாகமளிப்பவையாகும். தொழில்முயற்சி நடவடிக்கைகளை வலுப்படுத்தி, பாரிய உட்கட்டமைப்புக் கருத்திட்டங்களை மீண்டும் ஆரம்பித்து, உல்லாசப் பயணக் கைத்தொழிலைச் செழுமைப்படுத்தி, மற்றும் பேரினப் பொருளாதார அடிப்படைகளை ஸ்திநிலைப்படுத்துவது குறித்த கொள்கை உத்தேவகம் தேசத்தின் நிதித்துறைக்கு எண்ணிறந்த வாய்ப்புகளை வழங்கும் வகையில் கருமப்படுமென்னும் எதிர்பார்ப்பு உள்ளது. இலங்கை வங்கி வாடிக்கையாளர்களை முதன்மைப்படுத்துவதை வலியுறுத்தி, நாட்டின் SME துறைக்கு ஆதரவு வழங்கி, டிஜிட்டல் நிலைமாற்றத்தைத் தழுவிச் செயலாற்றும் வகையில் கூட்டாண்மைத் திட்டத்தில் உருவரைக் குறிப்பாகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்ட குறிக்கோள்களில் கவனத்தைப் பேணிவரும்.

ஏற்புரை

எதிர்பார்ப்புள்ள 2019 ஆம் வருடத்தை நோக்குகையில் வங்கிக்குப் தந்திரோபாய வழிகாட்டலை வழங்குவதில் தொடர்ந்தும் ஆர்வங் காண்பிப்பது தொடர்பில் நான் பணிப்பாளர் சபையிலுள்ள எனது சகபணியாளர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். எமது தந்திரோபாய அபிலாஷைகளை ஈட்டிக்கொள்வதில் சளைக்காத முயற்சிகளையும், அர்ப்பணிப்புணர்வையும் காண்பிக்கும் பொது முகாமையாளர் திரு.செனரத் பண்டார அவர்களுக்கும், முகாமைத்துவ அங்கத்தவர்களுக்கும், இலங்கை வங்கி அணிக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். எமது ஒரேயொரு பங்காளராக விளங்கும் இலங்கை அரசாங்கம் எப்பொழுதும் வலிமை வழங்கும் தூணாக இருந்துள்ளது. கௌரவ நிதியமைச்சருக்கும், மாண்புமிகு பொது தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சருக்கும், முறையே அவர்களின் அமைச்சுகளின் அதிகாரிகளுக்கும் அவர்களின் தொடரும் ஆதரவுக்காக எனது நன்றியையும் பதிவிட விரும்புகின்றேன். எதுவுமே நிச்சயமற்ற இக்காலங்களில் வங்கி தனது பணிகளை ஆற்றுவதற்கு உதவிய இலங்கை மத்திய வங்கி ஆளுநர் மற்றும் அதிகாரிகளுக்கும், கணக்காய்வாளர் நாயகத்துக்கும், அவரது ஊழியர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். எமது வாடிக்கையாளர்களே நாம் ஈடுபடும் சகல செயற்பாடுகளுக்கும் இதயப்பகுதியாக விளங்குகின்றனர். வங்கியின் சிறப்பான பயணத்தில் அவர்களின் தாராளமான விசுவாசம் மற்றும் பங்குடைமை என்பவற்றுக்காக அவர்களுக்கு எனது ஆழ்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். எமது வழங்குநர்கள், வியாபாரத்தொழில் பங்காளர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் ஜனசமூகங்கள் உள்ளிட்ட வகையில் ஏனைய அனைத்து நலனுரித்தாளர்களுக்கும் எமது பெறுமதி உருவாக்க முயற்சிகளுக்கு வழங்கும் ஆதரவுக்காகவும் சமூக, பொருளாதார பங்காளராக அபிவிருத்திக்கு நாம் பங்களிப்புச் செய்வதற்கு உதவுவதற்காகவும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

ரொனால்ட் சி பெரேரா, ஜனாதிபதி சட்டத்தரணி
தலைவர்

19 மார்ச் 2019
கொழும்பு

பொது முகாமையாளரின் மீள்பார்வை

“வங்கி கேள்விக்கிடமற்ற வகையில் இலங்கையின் நிதிச் சேவைகள் தொழிலில் தலைமை ஸ்தானத்தைத் தக்கவைத்துள்ளதென்பதையும், 2.0 ட்ரில்லியன் இலங்கை ரூபா பெறுமதியுள்ள சொத்துக்களைக் கொண்டுள்ளதென்பதையும் இது இலங்கையின் 1 ஆம் தர வர்த்தக நாமமாக இடம்பிடித்துள்ளதென்பதையும் அறிக்கையிடுவதில் நான் பெருமை கொள்ளுகின்றேன்”

அன்புள்ள நலனுரித்தாளரே,

இலங்கை வங்கி தனது நலனுரித்தாளர்களுக்கான அர்ப்பணக் கடப்பாட்டை நிறைவேற்றி, பல்வகைமையான நலனுரித்தாளர்கள் அனைவரிடையிலும் பகிரப்படும் பெறுமதியை உருவாக்கி, பல்வேறு வெளியகச் சவால்களுக்கு முகங்கொடுத்த ஒரு வருடத்தின்போது வலுவான மீண்டெழும் தன்மையைக் காண்பித்துள்ளது. ஆகவே, எமது தந்திரோபாயத்தை வடிவமைத்த காரணிகள் மற்றும் 2018 இலான எமது செயல்நிறைவேற்றம் குறித்த ஒரு பொதுப்பார்வையையும், எதிர்காலச் சாத்தியவளங்களையும் உங்கள்முன் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். மகத்தான சாதனைகளை ஈட்டிக்கொண்ட ஒரு வருடத்தில் வங்கி கேள்விக்கிடமற்ற வகையில் இலங்கையின் நிதிச் சேவைகள் தொழிலில் தலைமை ஸ்தானத்தைத் தக்கவைத்துள்ள தென்பதையும், 2.0 ட்ரில்லியன் இலங்கை ரூபா பெறுமதியுள்ள சொத்துக்களைக் கொண்டுள்ளதென்பதையும் அது தொடர்ச்சியாகப் பத்தாவது வருடத்திலும் இலங்கையின் 1 ஆம் தர வர்த்தக நாமமாக இடம்பிடித்துள்ளது என்பதையும், பன்முகச் செயற்பாட்டு அம்சங்களுக்காக 22 உள்ளூர் மற்றும் சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ளதென்பதையும் அறிக்கையிடுவதில் நான் பெருமையடைகின்றேன். இச்சாதனைகள் சந்தையின் திடீர் மாற்றங்கள் மற்றும் நிச்சயமின்மைகளுக்கு ஊடாகப் பயணிப்பதில் வங்கியின் ஆற்றல், இயைபுள்ள மற்றும் காத்திரமான தந்திரோபாயத்தைப் பயனுறுதியுள்ள வகையில் நிறைவேற்றுவதனூடாக இதை ஈட்டிக்கொள்ளும் இயலுமை என்பவற்றுக்கான சான்றுரையாக அமைந்துள்ளன.

பரிபூரணமான ஒரு தந்திரோபாயம்

2018 க்கான எமது தந்திரோபாய நிகழ்ச்சிநிரல் “எதிர்காலத்துக்காக வங்கியைப் புதுப்பித்தலும், வரைவிலக்கணப்படுத்துதலும்” எனும் தொனிப்பொருள் மீதமைந்த 2018-2020 க்கான வங்கியின் கூட்டாண்மைத் திட்டத்தினால் வழிகாட்டப்பட்டதாகும். இத்திட்டம் தொழில்நுட்பத்தில் இதற்குமுன்னர் இடம்பெற்றிராத புதிய மாற்றங்கள், பிரமாணப்படுத்தலில் அபிவிருத்திகள், வாடிக்கையாளர் விருப்புத்தெரிவுகள் மற்றும் நவீன அதிசிக்கல் வினைத்திறன் என்பவற்றின் முன்னிலையில் ஒரு போட்டித்தகவுள்ள, எதிர்காலத்துக்கு உகந்த வங்கியைக் கட்டியெழுப்புவதைக் குறிவைக்கும் வகையிலான, வாடிக்கையாளரை மையப்படுத்துதல், புவியியல் விரிவாக்கம், தொழில்நுட்பம் மற்றும் சைபர் இடர்வரவுப் பாதிப்பின்மை என்பவற்றை உள்ளடக்கும் வகையிலான ஒன்பது தந்திரோபாயத் தூண்கள்மீது தங்கிநிற்பதாகும். 2018 இன்போதான முக்கிய தந்திரோபாயக் கவனச்செறிவு விடயப்பரப்புகள் பின்வருமாறு-

- SME மற்றும் அபிவிருத்திக் கடன்வழங்கல்: தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளித்து, நாட்டின் சிறிய மற்றும் நடுத்தரத்தொழில் துறையை வலுப்படுத்தும் வகையில் வங்கி அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலுடன் இணங்கிச் செல்லும்வகையில் வங்கி குறிப்பாக இலங்கை தொழில்முயற்சிக் கடன்திட்டத்தினுடாக இந்தக் துறையில் மேலும் ஆழமாக ஊடுருவிச் செல்லும் வழிமுறையைப் பின்பற்றியது. இது எமது கடன் நிதிப்பட்டியலைப் பல்வகைமைப்படுத்தி, நாட்டின் சமூக-பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதைச் சாத்தியமாக்கும் அதேவேளையில், ஒரு புதிய வாடிக்கையாளர் தளத்தை அணுகும் சந்தர்ப்பத்தையும் வழங்கியுள்ளது. 2018 இல் வங்கி இலங்கைத் தொழில் முயற்சிக் கடன் திட்டத்தின்கீழ், 10,507 கடன்களினூடாக 13.6 பில்லியன் இலங்கை ரூபாவை வழங்கியுள்ளது.
- டிஜிட்டல்மயப்படுத்தல்: வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுடன் மேற்கொள்ளும் ஊடாட்டங்களை நிலைமாற்றம் செய்யும் வகையில் நிதிச் சேவைகளிலான டிஜிட்டல்மயப்படுத்தல் புரட்சி முன்னெப்போதுமில்லாத வேகத்தில் ஏற்பட்டுள்ளது. இலங்கை வங்கியைப் பொறுத்தவரையில் வாடிக்கையாளர் பரம்பல் காரணமாக எமது இலக்குச் சந்தையில் டிஜிட்டல் ஏற்புச் செயற்பாட்டை முன்னேற்றுவது மேலுமொரு சவாலாக இருந்துள்ளது. எவ்வாறாயினும். நாம் எமது டிஜிட்டல் மேடைகளையும், சுய-வங்கித்தொழில் பணிவரிசைகளையும் மேம்படுத்தும் நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளோம். இதன்நோக்கம் வாடிக்கையாளர் அணுகுதலையும், வசதியையும் மேம்படுத்துவதாகும்.
- வங்கி தனது கணினி வங்கித்தொழில் செயற்பாடுகளை மீண்டும் 2018 இல் B - app உடன் முன்னேற்றகரமான அம்சங்களுடன் ஸ்மார்ட் ஒன்லைன் வங்கித்தொழிலை ஆரம்பித்து, DIGI நிலையங்களை அறிமுகஞ்செய்து அதன் CRM மற்றும் ATM வலையமைப்பை விரிவாக்கம் செய்தது.
- கடன் நிதிப்பட்டியல் தரத்தைப் பாதுகாத்துப் பேணுதல்: பேரினப் பொருளாதார அடிப்படைகளை மிதப்படுத்துதல் சகல வங்கிகளிலும் மீளச் செலுத்துதல் அழுத்தங்களை அதிகரித்து, கடன்நிதிப்பட்டியல் தரத்தில் ஒரு பலவீனத்தைத் தோற்றுவித்தது. கடன் மதிப்பீட்டு அளவுகோல்களை வலுப்படுத்துவதிலும், மீளப்பெறல் மற்றும் கண்காணிப்புச் சம்பந்தமாகவும் அதிகரித்த மூலவளங்களைப் பயன்படுத்துதல் சம்பந்தமாக வங்கியின் முயற்சிகள் ஓரளவுக்கு இந்த அழுத்தங்களைச் சமாளிப்பதற்கு வங்கிக்கு உதவின. இதனால் மொத்த NPA வீதாசாரம் 3.6%.ஆக விளங்கியது.
- வாடிக்கையாளரை மையப்படுத்துதல்: மகிழ்ச்சியுற்ற ஒரு வாடிக்கையாளர் நிறுவனத்துக்கு ஒரு பெரிய சொத்து ஆவார் என்னும் நிகழ்வுண்மையை நாம் உறுதியாக நம்புகின்றோம். நாம் வாடிக்கையாளரை மையப்படுத்தும் அணுகுமுறையை மேலும் அபிவிருத்தி செய்யும் எண்ணிறந்த நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டோம். அதிகரிக்கும் வாடிக்கையாளர் அதிநவீன சிக்கல் வினைத்திறன் மற்றும் விழிப்புணர்வு என்பவற்றை வைத்து நோக்குகையில் வாடிக்கையாளரை மையப்படுத்தும் ஓர் அணுகுமுறை போட்டித்தகவு அனுகூலத்துக்கு இன்றியமையாத ஒரு மூலமாகும். மேம்பாடுற்ற வாடிக்கையாளர் வசதியும், பணத்துக்கான பெறுமதியும் முன்னோக்கிச் செலுத்தப்படுவதே எமது தந்திரோபாயத்தின் உள்ளமைய அம்சமும், வாடிக்கையாளர்களுக்கான வங்கியின் பெறுமதி குறித்த முன்மொழிவின் தீர்மானகரமான பகுதியுமாகும்.
- ஊழியர்களின் ஆற்றலைக் கட்டியெழுப்புதல்: 2018 இல் நாம் எமது அணியில் சுமார் 1600 இளவயது ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்துகொண்டோம். இது எமது ஊழியரின் சராசரி வயதை 32 ஆகக் குறைத்தது. அணியின்

பொது முகாமையாளரின் மீள்பார்வை

“நம்பிக்கை மற்றும் ஸ்திரநிலைபோன்ற எமது வர்த்தக நாம அம்சங்கள் போட்டிகரமான முன்னிலைக்கான ஒரு முக்கிய மூலவளமாகும்”

இயக்கவலுவுக்கும், துடிப்பாற்றலுக்கும் பங்களிப்புச் செய்த அதேவேளையில் இது எமது புதிய ஊழியர்கள் எமது வங்கியின் தந்திரோபாய முறைமைகளுடனும், செயல்முறைகளுடனும், நிறுவனக் கலாசாரத்துடனும் இணங்கிச் செயற்படுவதை உறுதிசெய்யும் வகையிலான எமது திறமை அபிவிருத்தி முன்மொழிவுகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளது. இந்த வருடத்தின்போது நாம் பயிற்சியில் 338.0 மில்லியன் இலங்கை ரூபாவை முதலீடு செய்தோம்.

- நிலைபேற்றுத்தன்மை: இலங்கையின் மிகப் பாரிய நிதி நிறுவனம் மற்றும் நாட்டில் அதிகூடிய தாக்கத்தைச் செலுத்தும் அமைப்புகளுள் ஒன்று என்ற வகையில் நாம் எமது நாட்டின் அதிகூடிய தீர்மானகரமான பொருளாதார, சமூக மற்றும் சூழல் விவகாரங்களுக்குத் தீர்வு காண்பதில் எமக்கு முக்கிய பங்கு உள்ளதென்று நம்புகின்றோம். இது நாட்டின் நிலைபேறான அபிவிருத்திக் குறியிலக்குகளை (SDGs), ஈட்டிக்கொள்வதற்குப் பங்களிப்பு நல்கும். இந்த வருடத்தின்போது நாம் வங்கியின் நிலைபேற்றுச் சட்டகத்தை மேலும் SDGs சட்டகத்துடன் இணங்கிச் செல்லும் வகையிலும், வங்கி முழுவதும் எமது நிலைபேற்றுத்தன்மை நிகழ்ச்சிநிரலை ஈட்டிக்கொள்வதை முன்செலுத்தும் வகையிலும் முறைப்படுத்தினோம்.

மூவகை அடித்தளச் செல்நெறி...

62% த்துக்கு மேற்பட்ட வகையிலான நிகரற்ற வாடிக்கையாளர் உள்நுழைவுநிலை, நாட்டின் அதிவிஸ்தாரமான புவியியல் முனைப்பெல்லை மற்றும் கைத்தொழிலில்

காணப்படும் மிகப்பாரிய முற்பணங்கள் மற்றும் வைப்பு நிதிப்பட்டியல் என்பவை காரணமாகவும் நாட்டின்மீதான வங்கியின் சமூக-பொருளாதாரத் தாக்கத்தை ஒருவர் மறுத்துரைக்க இயலாது. ஓர் அரச உடைமையான தனியதார்த்த அமைப்பு மற்றும் முறைமைசார் முக்கியத்துவம் வாய்ந்த வங்கியென்ற வகையில் எமது குறிக்கோள் வெறுமனே நிதிசார் வருமானங்களுக்கப்பால், எமது நலனுரித்தாளர்கள் அனைவருக்கும் நிலைபேறான பெறுமதியைப் பிறப்பாக்கம் செய்வதை உறுதிப்படுத்தும் வகையிலான மேலும் பரந்த சமூக, பொருளாதார குறிக்கோள்களுக்கும் வியாபிப்பவை ஆகும். எனவே மூவகை அடித்தளச் செல்நெறி என்னும் கருத்துணர்வு எமது ஒழுக்கநெறியுடன் ஆழமாகப் பொதிந்துள்ள ஒன்றாகும். இது இறுதியில் ஒழுக்க நெறிசார் மற்றும் பொறுப்புவாய்ந்த பகிரப்படும் பெறுமதி உருவாக்கத்துக்கு இட்டுச்செல்வதாகும்.

மக்கள்

எமது மதிப்பு உருவாக்கம் எமது வாடிக்கையாளர் அனுபவங்களுக்கு வசதி ஏற்படுத்தி, எமது தந்திரோபாயப் பேரோவல்களை முன்செலுத்தும் 8,724 அர்ப்பணிப்பு மற்றும் தேர்ச்சிவாய்ந்த தொழில்வல்லுநர்கள் அணியினால் முன்செலுத்தப்படுகின்றது. பயிற்சிக்கான வாய்ப்புகள், திறன் அபிவிருத்தி, சாதகமான பணிச்சூழல் மற்றும் உயர்மட்டத்திலான ஈடுபாடு என்பவற்றை மையப்படுத்தும் ஒரு தனிச்சிறப்பான ஊழியர் மதிப்புக் கண்ணோட்டம் வங்கியை நாட்டின் அதியுயர் மட்டத்திலான தொழில்கொள்வோருள் ஒன்றாக்குவதற்கு உதவியுள்ளது. 2018 இல் எமது ஊழியர்களுக்காக உருவாக்கப்பட்ட மொத்த மதிப்பு 11% த்தால் அதிகரித்து, 18.9 பில்லியன் இலங்கை ரூபாவாகக் காணப்பட்ட அதேவேளையில், இந்த வருடத்தின்போது 93% த்துக்கும் அதிகமான ஊழியர்களும் பயிற்றுவிக்கப்பட்டனர்.

நாம் முற்பணங்கள், வைப்புகள் மற்றும் கொடுக்கல்வாங்கல் வங்கி ஆக்கச் சேவைகளை வழங்குவதன்மூலம், நாடளாவிய அடிப்படையில் 13 மில்லியன் பல்வகைமைகொண்ட வாடிக்கையாளர்களுக்குச் சேவையாற்றுகின்றோம். நம்பிக்கை மற்றும் ஸ்திரநிலை போன்ற எமது வர்த்தக நாம அம்சங்கள் போட்டிகரமான முன்னிலைக்கான ஒரு முக்கிய மூலவளமாகும். இது எமக்கு வாடிக்கையாளர்களுடன் அர்த்தமுள்ள, நீண்டகால உறவுகளைப் பேண உதவுகின்றது. சமீப வருடங்களில் எமது டிஜிட்டல் சுயசேவை வழிமுறைகளை மேம்படுத்துவதனூடாக நாட்டின் இளைஞர், யுவதிகள் மத்தியிலான எமது சந்தை ஸ்தானத்தை வலுப்படுத்தும் வகையிலான தந்திரோபாயக் கவனம் வழங்கப்பட்டுள்ளது. பரவலாக வாழும் இளைஞர், யுவதிகளை ஈர்க்கும் வகையில் எமது வர்த்தக நாம தந்திரோபாயத்தை மேலும் செழுமைப்படுத்துகின்றோம்.

விஸ்தாரமான கிராமிய வலையமைப்பும், பொருளாதார அதிகார வலுவூட்டலை முன்செலுத்துவதிலான ஆழமான அர்ப்பணவுணர்வும் கட்டுபடியான நிதியளிப்பை அணுகுவதற்கான வழிவகையை வழங்குவதனூடாக அனைவரையும் தழுவும் அரசாங்கத்தின் நிதிசார் நிகழ்ச்சிநிரலுக்கு வங்கி துடிப்பாக ஆதரவு வழங்குவதைச் சாத்தியமாக்கியுள்ளன. “BoC மித்துர” என அழைக்கப்படும் வங்கியின் சிறு நிதியளிப்பு முன்முயற்சி நிதி ஒழுக்கசீலத்தை ஊட்டிவளர்க்கும் வகையிலும், நாட்டின் மிகவும் சலுகையற்ற அடுக்குகளில் வாழும் மக்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டதாகும். இந்த வருடத்தின்போது நாம் எமது SME மற்றும் சிறு நிதி வழங்கல் வாடிக்கையாளர்கள் மத்தியில் 64.4 பில்லியன் இலங்கை ரூபா தொகையைப் பிரித்து வழங்கியுள்ளோம். இந்த வருடத்தின்போது 496,000 க்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு நாம் சிறு நிதியளிப்புக் கடன்களை வழங்கியுள்ளோம். வங்கி குறித்துரைப்பான அபிவிருத்தி நோக்கங்களுக்காக நிதியளிப்பு வழங்கும் 50 இற்கு மேற்பட்ட நாணயக்கடன் திட்டங்களையும் கொண்டுள்ளது.

இலாபம்

2018 இல் வங்கி வரிக்கு முந்திய இலாபத்தில் 5% வளர்ச்சியைக் காண்பிக்கும் 31.9 பில்லியன் இலங்கை ரூபாவை ஈட்டியதன்மூலம் ஒரு வலுவான நிதிச் செயல்நிறைவேற்றத்தைக் காண்பித்தது. இது ஒரு தொகுதியான பொருளாதார மற்றும் கைத்தொழில் சவால்களுக்கு மத்தியில் இடம்பெற்றதாகும். இது உலகளாவிய புவிசார் அரசியல் பதற்றநிலைகள், இலங்கையின் நிர்மாணத்துறை வேகங்குறைந்தமை மற்றும் இந்த வருடத்தின் முற்பகுதியில் விவசாயத்தை மிகவும் பாதித்த பிரதிகூலமான காலநிலை என்பவற்றுடன்கூடிய செயற்பாட்டுப் பரப்பில் ஈட்டிக் கொள்ளப்பட்டதாகும். இச்சவால்களுக்கு மத்தியிலும் வங்கி கூட்டாண்மை மற்றும் சில்லறை வங்கித்தொழில் ஏடுகளின் வளர்ச்சியின் ஆதரவுடன் 24% கடன்வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இந்த வருடத்தின்போது வட்டிவீதங்கள் அதிகரித்தபோதிலும், வாடிக்கையாளர்களுக்கு நிவாரணங்களை வழங்கவேண்டிய காரணத்தினால் வங்கி கடன் வட்டிவீதங்களைப் பேணியது. இதன்பிரகாரம், வங்கியின் தேறிய வட்டி ஓரை இதற்கு முந்திய வருடத்தில் காணப்பட்ட 3.2% த்திலிருந்து 3.1% ஆகக் குறைவடைந்தது.

இந்த வருடத்தின்போது முழுக் கைத்தொழிலிலும் கடன் நிதிப் பட்டியலில் ஒரு வீழ்ச்சி காணப்பட்டது. இது பொருளாதார அழுத்தங்கள், சிறு நிதியளிப்புத் துறையில் அதிகரித்த கடனிறுக்கவேண்டிய நிலைமை மற்றும் ஒரு பலவீனமான விவசாயத்துறை என்பவற்றின் பிரசன்னத்தைப் பிரதிபலித்தன. முன்முயற்சியான திரட்டல்கள் மற்றும் கடுமையான கண்காணிப்பு என்பவை வங்கி தனது நாணயக்கடன்

தரத்தைப் பேணுவதற்கு வங்கிக்கு ஓரளவுக்கு உதவியபோதிலும், இலங்கை வங்கி இந்த அழுத்தங்களினால் பாதிப்புற்றது. மொத்த NPL விகிதாசாரம் 2017 இல் 2.8% ஆகவிருந்து 3.6% ஆக அதிகரித்தது. கடன் நிதிப் பட்டியலின் தரத்தையும் SLFRS – 9 இன் நடைமுறைப்படுத்தல் ஏற்பாடுகளின் நிபந்தனைத் தேவைகளையும் வைத்து நோக்குகையில் கைத்தொழிலில் 104% அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் கடன் மற்றும் முற்பணங்கள் குறித்த சீர்குலைவு விதிப்பனவுகள் இந்த வருடத்தின்போது 48% அதிகரித்தன.

இந்த வருடத்தின்போதான வங்கியியல் செயற்பாட்டுச் செலவினங்கள் 19% த்தால் அதிகரித்த அதேவேளையில், 38% ஆகுசெலவுக்கு வருமானம் குறித்த வீதாசாரம் கைத்தொழிலிலேயே அதிகரிப்பானவற்றுள் ஒன்றாகும். எவ்வாறாயினும், வங்கி நிதிச்சேவையின்மீதான 32% அதிகரிப்புடன்கூடிய 9.6 பில்லியன் இலங்கை ரூபா வரியையும், வருடத்துக்கு வருடம் 38% அதிகரிப்புடன்கூடிய 12.4 பில்லியன் இலங்கை ரூபா வருமான வரியையும் அறிக்கையிட்டுள்ளது. புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின்கீழ் சுமத்தப்பட்ட கடன் மீளச்செலுத்துதல் அறவீடு (DRL) மற்றும் முன்னர் அனுமதிக்கப்பட்ட சில சலுகைகள் நீக்கப்பட்டமை என்பவையும் தமது தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. வரி விதிப்பனவில் அதிகரிப்புக் காரணமாக வரிக்குப் பிந்திய இலாபம் 9% வீழ்ச்சியைக் காண்பித்தது.

வங்கி அரசாங்கத்துக்குப் பங்கிலாபமாக 4.8 பில்லியன் இலங்கை ரூபாவைச் செலுத்தியது. இது வரிகளுடன் கருத்திற்கொள்ளப்படுகையில் அரசாங்கத்தக்கான பங்களிப்பை 24.2 பில்லியன் இலங்கை ரூபாவாக அதிகரித்தது.

வங்கி சகல பிரமாணப்படுத்தல் வீதாசாரங்களையும் அவசியமான நியமங்களுக்கு மேல்நிலையில் பேணியது. அது பாசல் III நியமங்களுடன் வெற்றிகரமாக இணங்கியொழுகியதுடன், நிதிக்கூற்றுக்கள் SLFRS – 9 குறித்துரைப்புகளுடன் இணக்கமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

புவிக் கிரகம்

ஒரு நிதி நிறுவனம் என்ற வகையில் சூழல்மீதான எமது தாக்கம் மட்டுப்படுத்தப்பட்டதெனினும், எமது கடன் வழங்கலூடாக, சிறப்பான சூழல் நடைமுறைகளைப் பரப்புவதனூடாகவும், எமது சொந்த நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளினூடாகவும் வகிக்கக்கூடிய பாத்திரத்தை நாம் அறிந்துள்ளோம். கடன் வழங்குவதற்கான அனைத்துமடங்கும் சூழல் மற்றும் சமூக பரிசீலனைச் சட்டகமொன்று உள்ளதோடு, சூழல் மற்றும் சமூகச் சிந்தனைகள் கடன் மதிப்பீட்டுப் பொறிமுறையினுள் வங்கி சூரியசக்திப் பிறப்பாக்கிகளை வைத்தமைத்தல், விரயப் பொருட்களைச் சக்தியாக மாற்றும் கருத்திட்டங்கள் மற்றும் காற்று சம்பந்தமான கருத்திட்டங்கள் உள்ளடங்கலான "பசுமைக் கருத்திட்டங்களுக்கு" தன்முனைப்புடன் கடன்களை வழங்கி வருகின்றது. நாம் தேசிய மின்வலுக் கட்டமைப்புக்கு 1MW புதுப்பிக்கத்தகு சக்தியைப் பங்களிப்புச் செய்யும் வகையில் எமது 27 கிளைகளில் சூரியசக்தி உபகரணங்களைப் பொருத்தியுள்ளோம் என்பதையும் பெருமையுடன் அறியத்தருகின்றேன்.

இலாபத் தகவை ஸ்திரநிலையுடன் சமநிலைப்படுத்துதல்

பாசல் III வழிகாட்டிகளின் நடைமுறையாக்கம், மற்றும் SLFRS-9 இன் காரணமான உயர்வான ஏற்பாட்டு நிபந்தனைத் தேவைகள் வங்கிகள் மூலதனத்தை மேம்படுத்துவதற்கான தேவையை அதிகரித்துள்ளன. பூரணமான அரச உடைமை நிறுவனம் என்ற வகையில், மூலதன மேம்பாட்டுக்காக நாம் பங்குமூலதனச் சந்தையை அணுக முடியாதென்பதால், இலங்கை வங்கி எதிர்நோக்கும் சவால் மேலும் அதிகரிக்கின்றது. இந்த வருடத்தின்போது அரசாங்கத்தின் 5 பில்லியன் இலங்கை ரூபா பங்கு மூலதனம் உட்செலுத்தப்பட்ட காரணத்தால் வங்கியின் நிதிசார் நிலைமை வலுவடைந்துள்ளது. எவ்வாறாயினும், அடுத்த வருடத்தில் வளர்ச்சிப் பேராவல்களை நுட்பமாக மூலதனத் தேவைகளுடன் சமநிலைப்படுத்த நிர்ப்பந்திக்கப்படுகின்றோம். SLFRS-9 இன் நடைமுறையாக்கம் மீண்டெழும் சக்தியுடன்கூடிய வங்கித்துறை உருவாக்கத்துக்கு இட்டுச்செல்லும் அதேவேளையில் அதற்கு ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களாகிய இருபாலாரதும் சிந்தனை முறைகளில் மாற்றம் அவசியப்படுவதோடு, குறுந்தவணை அடிப்படையில் இது அதிகரித்த சிக்கல் தன்மைக்கும் இட்டுச் சென்றுள்ளது.

முன்செல்ல வேண்டிய பாதை

2019 இல் வங்கி தனது 80 ஆவது ஆண்டுவிழாவை எதிர்நோக்கியிருப்பதால், நாம் எமது பொருளாதார மற்றும் சமூக அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ளும் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையிலான உணர்வெழுச்சி மற்றும் நிகழ்வுகள் நிறைந்த வருடமொன்றை எதிர்பார்த்துள்ளோம். பயனுறுதிமிக்க நாணயக்கொள்கை, சாதகமான காலநிலை, ஸ்திரமான எண்ணெய் விலைகள் மற்றும் கொள்கைப் பரப்பில் அனுகூலங்கள் என்பவற்றை வைத்து நோக்குகையில், நடுத்தவணை நிலையிலிருந்து நீண்டகால நோக்கில் பேரியல்ப் பொருளாதாரச் சூழல் மேம்பாடுகளைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு வளர்ச்சியடையும் பொருளாதாரம் கொணரும் வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக்கொள்வதைநோக்கி எமது தந்திரோபாயம் செலுத்தப்படும் அதேவேளையில், எம்மைத் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலுடன் இணக்கப்படுத்திக்கொள்வோம். இந்த வருடத்தின்போது எமது ஸ்தானத்தை இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமானத் திரட்டி வலுப்படுத்திக் கொள்ளும் அதேவேளையில் வாடிக்கையாளரை மையப்படுத்துதலை மேம்படுத்துதல், மக்களின் அபிவிருத்தி, வர்த்தக நாம மேம்பாடு மற்றும் எமது கடன் நிதிப் பட்டியலின் தரத்தைப் பேணிப் பாதுகாத்தல் என்பவை எமது முக்கியமான முன்னுரிமை விடயப்பரப்புகளாக விளங்கும்.

ஏற்புரை

வருடம் முடிவடைகையில், அவர்களின் தொலைநோக்கு மற்றும் பெறுமதிவாய்ந்த மதியுரைகளுக்காக நான் தலைவருக்கும், பணிப்பாளர் சபைக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இத்தகைய அர்ப்பணிப்புணர்வு வாய்ந்த அணிக்குத் தலைமை தாங்குவதில் நான் மிகவும் பெருமையடைகின்றேன். கூட்டாண்மை மற்றும் நிறைவேற்று முகாமைத்துவத்துக்கும், இந்த ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு அர்ப்பணிப்புணர்வுடன் பிரயத்தனங்களை மேற்கொண்ட சகல ஊழியர்களுக்கும், ஒத்துழைப்புக்காக தொழிற்சங்கங்களுக்கும் மற்றும் எமது வர்த்தக நாமம் சம்பந்தமான அவர்களின் தொடர்ச்சியான விசுவாசத்துக்காக எமது முன்னாள் ஊழியர்களுக்கும், மதிப்புவாய்ந்த வாடிக்கையாளர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். நிதியமைச்சருக்கும், பொது தொழில்முயற்சி மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சருக்கும், அவர்களின் தொடர்ச்சியான ஆதரவுக்காக இந்த அமைச்சுக்களின் அதிகாரிகளுக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக. ஒரு நிலையான, சவால்கள் மத்தியிலும் மீண்டெழும் சக்திகொண்ட நிதித்துறை உருவாக்கத்தை உறுதிசெய்யும் வகையிலான அவர்களின் திடமான ஆதரவுக்காக இலங்கை மத்திய வங்கிக்கும் அவர்களின் பிரயத்தனங்களுக்காக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இந்த அறிக்கையை நேரகாலத்துடன் வெளியிடும் வகையில் நிதிக் கூற்றுகளைக் கணக்காய்வு செய்த கணக்காய்வாளர் நாயகத்துக்கும், அவரது ஊழியர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.



செனரத் பண்டார
பொது முகாமையாளர்

19 மார்ச் 2019
கொழும்பு



தொழில் நுட்பத்தை எமது வளர்ச்சிக்காகப் பயன்படுத்தி எமது வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதே எமது அபிலாசை

எமது நாட்டின் இளைஞர்களுடைய வாழ்க்கை முறைக்கேற்ப வாடிக்கையாளர் மையமான சேவைகளை வழங்கி அவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதில் நாம் பெருமை கொள்கின்றோம்.

DEPOSIT
Cheque Deposit

இலங்கை வங்கி மீதான கண்ணோட்டம்

இலங்கை வங்கியானது இலங்கை வங்கித்துறையில் மறுக்கப்படமுடியாத சந்தை முதன்மையாளராகும். வங்கி சமூகரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் நாட்டின் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய ஒரு தத்துவமாகும். வங்கித்துறையில் 22% னை சொத்துக்களும் 24% வைப்புக்களும் 2018, ஆண்டின் சனத்தொகையின் 62% ஊடுருவலின் மூலம், வங்கித்துறையின் மிக விசாலமான 1,714 வாடிக்கையாளர் தொடு புள்ளிகளைக்கொண்டு வங்கியானது நிதித்துறையில் அதிகாரம்மிக்கதாக இருக்கின்றது. முழுமையாக அரசுடையமயான ஸ்தாபனமாக, இலங்கை வங்கியானது நாட்டின் சமூக பொருளாதார வளர்சசிக்கும், தனிநபர் மற்றும் தொழில் முனைவர்களின் வளர்ச்சிக்கும், தனிநபர் மற்றும் தொழில் முனைவர்களின் வளர்ச்சிக்கும், அரசாங்கத்திற்கும் கடந்த எட்டுத்தசாப்தங்களாக பங்காற்றியிருந்தது.

வங்கியின் சர்வதேச அடைவு மட்டமானது, மூன்று வெளிநாட்டுக் கிளைகளின் மூலமும், ஒரு வெளிநாட்டு துணை நிறுவனம் மூலமும், 758 தொடர்புபட்ட வங்கிகள் மற்றும் 101 நாணையமாற்று நிறுவனங்கள் மூலமும் பறைசாற்றப்படுகின்றது. வங்கி 170 சர்வதேச சந்தைகளில் தொடர்பு வைத்திருப்பதோடு இலங்கை வங்கியின் ஊழியர் அணியானது 8,724 நாடு முழுவதும் பரந்துபட்ட ஊழியர்களுடன் 13.4 மில்லியன் வாடிக்கையாளர்களுக்குச் சேவையாற்றுகினற்றோம்.

இலங்கை வங்கியின் 10 துணை நிறுவனங்களையும், கூட்டு நிறுவனங்களும் அடங்களாக இலங்கை வங்கி குழுமம் உருவாகின்றது. துணை நிறுவனங்ள பல்வகைப்பட்ட வியாபாரங்களில் ஈடுபடுகின்றன. அவை, நிதி நிறுவனங்கள் சொத்து மேலாண்மை சேவைகள், மற்றும் நீர்மின் உற்பத்தி ஆகியவையாகும். வுங்கி குழுமத்தில் இருக்கும் மிகப் பெரிய நிறுவனமாகும். 98% தொகுக்கப்பட்ட சொத்துக்கள் வங்கிக்கு உரியவையாகும்.

நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கியமான அரசுடைமையான நிதி நிறுவனமாக வங்கி திகழ்வதனால், வங்கியின் வகிபாகம் ஒரு சாதாரண நிதி நிறுவனத்திற்கும் மேலாகவிருக்கின்றது. இலங்கை வங்கியானது போதிய வசதியில்லாத இடங்களுக்கு நிதிச்சேவை வழங்குவதிலும், நிதிசார் அறிவை அழிப்பதிலும், தேசிய அபிவிருத்திக்கு அரசுடன் கைகோர்ப்பதிலும் முன்னின்று நாட்டு மக்களின் நிதியியல் துறையின் மீதுள்ள நம்பிக்கையைப்பேணி வருகின்றது.

வங்கியானது உள்நாட்டு வெளிநாட்டு கடன் மதிப்பீட்டு நிறுவனங்களிலிருந்து கடன் மதிப்பீட்டு அடைவுகளைப் பெற்றுக்கொண்டதோடு அதை தக்கவைத்துக்கொண்டுள்ளது.

சந்தை நிலவரம்

இலங்கையின் மிகப்பெரிய நிதி நிறுவனம், சொத்துக்கள், கடன்கள், பற்றுக்கள், வைப்புக்கள் மற்றும் இலாபம்.

ரூபாய்
2.3
ட்லில்லியன்
சொத்துக்கள்

ரூபாய்
1.8
ட்லில்லியன்
சொத்துக்கள்

நிதியியல் ஸ்திரத்தன்மை

AA+(lka)
நிலையான
பிச் தரப்படுத்தல் (SL)
AAA நிலையான
ICRA லங்கா லிமிடெட்

இலக்குகளுக்கு அப்பால்

ரூபாய்
24.2
பில்லியன்
பெறுமதி உருவாக்கம்
அரசாங்கத்திற்காக
(பங்கிலாபம் +
வரிகள்)

நீடுறுதியான வியாபாரம்

ரூபாய்
338.0
மில்லியன்
முதலீடுகள்
பயிற்சி மற்றும் திறமை
வலுவாக்கம்



● வங்கி ● ஏனையவை

1. சொத்துக்கள் **22%**
2. வைப்புக்கள் **24%**
3. தேறிய கடன்கள் மற்றும் முற்பணம் **22%**
4. வரிக்கு முந்திய இலாபம் **17%**

இலங்கையின்

1 வது

வர்த்தக நாமம்

Brand Finance and Inter-brand rankings

13.4 மில்லியன்

வாடிக்கையாளர்களின்

(62% வீத சனத்தொகை)

1,721

வாடிக்கையாளர் தொடு புள்ளிகள் (நேரடி)

B2 நிலையான Moody's முதலீட்டு சேவைகள்

B நிலையான பிச் தர மதிப்பீடு

உறுதிப்படுத்தப்படாத கணக்கறிக்கைகளின் படி

10.3%
CET 1 மூலதனம்

14.6%
மொத்த மூலதனம்

1.5%
ROAA வீதம்

ரூபாய்
64.4
பில்லியன்
சிறு மற்றும் நடுத்தர மற்றும் நுண்கடன் வழங்கல்

ரூபாய்
139.3
பில்லியன்
உள்ளக கட்டமைப்புக்கான

ரூபாய்
551.5
பில்லியன்
அரச பிணைகளின் மீதான முதலீடு

27
சூரிய மின்சக்திக் கிளைகள்

ரூபாய்
3,600.0
மில்லியன்
மின்புத்துணர்ச்சி

7 மில்லியன்
A4 கடதாசிகள் சேமிப்பு (டிஜிட்டல் வங்கிச் சேவைகள் மூலம்)

ரூபாய்
107.9
மில்லியன்
சமூகப்பொறுப்பு செலவீனம்

இலங்கை வங்கியின் மீதான கண்ணோட்டம்

எமது அடிச் சுவடுகள்



கூட்டாண்மை மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் தொடு புள்ளிகள்

கூட்டாண்மை கிளைகள்	05	14	17	03
முதன்மை வங்கி	1	-	1	-
வெளிநாட்டுக் கிளைகள்	3	-	4	-
வெளிநாட்டு நாணயங்களின் வங்கி பிரிவு	1	-	-	-
நடமாடும் கிளைகள்	-	-	1	-

மொத்த வாடிக்கையாளர்கள் தொடு புள்ளிகள்

கிளைகள்	577
மட்டுப்படுத்தப்பட்ட சேவைக் கிளைகள்	52
நடமாடும் கிளைகள்	06
தானியக்க வங்கி இயந்திரங்கள்	776
பணவைப்பு மீள் சுழற்சி இயந்திரம்	281
பிரதேசக் கடன் மையங்கள்	14
சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டு மையங்கள்	15

குழும கட்டமைப்பு



* தற்போது செயற்பாட்டில் இல்லை

பணிப்பாளர் சபை

1. **திரு. ரொனாலட் சி பெரேரா ஜனாதிபதி சட்டத்தரணி** - தலைவர் / சுயாதீனமான, நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்
2. **திரு.கே.ஏ.விமலேந்திரா** - பதவிவழி வந்த பணிப்பாளர் / சுயாதீனமற்ற நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்
3. **திரு. குமார் மாயாதுன்ன** - சுயாதீனமான, நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்
4. **திரு. பீ. ஏ ஷா.ப்டர்** - சுயாதீனமான நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்
5. **அம்மணி ஜானகி சேனாநாயக்க சிறிவர்த்தன** - இலங்கை வங்கிச் செயலாளர்.சபைச் செயலாளர்

திரு. ரொனாலட் சி பெரேரா ஜனாதிபதி சட்டத்தரணி

தலைவர்

சுயாதீனமான, நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்

சபைக்கு நியமித்தது

12 பெப்ரவரி 2019 (கடமை பொறுப்பேற்பு 14 பெப்ரவரி 2019)

திறன்களும் அனுபவமும்

திரு. பெரேரா ஜனாதிபதி சட்டத்தரணியாவார். இவர் நீதிமன்றங்களிலும், மேல் முறையீட்டு நீதிமன்றங்களிலும், உயர்நீதி மன்றத்திலும் பரந்துபட்ட அனுபவம் உடையவர். இவர் சிவில் மற்றும் குற்றவியல் வழக்கு, இணக்கப்பாடு, வர்த்தக, போக்குவரத்து ஒப்பந்தங்கள், வரைதல் துறைகளில் நிபுணத்துவமுடையவர். இவர், வணிகச் சட்டம், வங்கியல் சட்டம், கைத்தொழில் சட்டம், விதிப்பாணைகள், அவதூறு, தேர்தல் மனுக்கள், சிவில் மேன்முறையீடுகள், மீளாய்வு விண்ணப்பங்கள் செயலாணை விண்ணப்பங்கள், மற்றும் அடிப்படை உரிமை வழக்குகளில் கைதேர்ந்தவர்.

திரு. பெரேரா அவர்கள் கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்ட இளமானியாளர் (LLB) ஆவதுடன் ஐக்கிய இராச்சியத்தின் நோர்த்தம்புரியா பல்கலைக்கழகத்திலிருந்து சர்வதேச வர்த்தகச் சட்டத்தில் முதுமானிப் (LLM) பட்டத்தையும் கொண்டுள்ளார்.

ஏனைய நியமனங்கள்

தற்காலிக தலைவர் ஹேட்டல்ஸ் கொழும்பு (1983) லிமிடெட்

முன்னைய முக்கிய நியமனங்கள்

தலைவர் மற்றும் பணிப்பாளர் இலங்கை வங்கி, தலைவர், இலங்கை வங்கி (யூ.கே) லிமிடெட், தலைவர் மேர்ச்சன்ட் பாங்க் ஒப் சிறிலங்கா, அன்ட் பீ.எல்.சி தலைவர் மிரேகா கெப்பிட்டல் லான்ட் (பிரைவேட்) லிமிட்டெட் மற்றும் மிரேகா ஹோம்ஸ் (பிரைவேட்) லிமிடெட்.



பணிப்பாளர் சபை

திரு.கே.ஏ.விமலேந்திரா

பதவிவழி வந்த பணிப்பாளர்

சுயாதீனமற்ற நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்

சபைக்கு நியமித்தது

27 பெப்ரவரி 2019

திறன்களும் அனுபவங்களும்

திரு. விமலேந்திராஜா சட்டத்தரணியாவார். இவரின் அரசசேவை 24 வருடங்களுக்கு மேற்பட்டது. இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறையில் விசேடமானிப் பட்டம் பெற்றவர். மேலும் பேராதெனியப் பல்கழைக்கழகத்தில் பொருளியல் முதுகலைப்பட்டமும் பெற்றுள்ளார். இவர் மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் முதுமானி வியாபார நிர்வாகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை இளமானிப் பட்டம் என்பவற்றுடன், பட்டப்பின் டிப்ளோமா இரண்டு அபிவிருத்திற்கற்கை பொதுக்கொள்கை, சர்வதேச உறவுகள் டிப்ளோமா, மனிதவள முகாமைத்துவம் தகவல் தொழில்நுட்பம் என்பவற்றையும் பெற்றுள்ளார்.

ஏனைய நியமனங்கள்

பணிப்பாளர் நாயகம் - நிதிக்கொள்கை திணைக்களம், நிதிக்கொள்கை திணைக்களம், திறைசேரி, இலங்கை தேசிய வர்த்தக பேச்சுவார்த்தைக் குழு உறுப்பினர், சார்க் அபிவிருத்தி நிதிய இலங்கை நாட்டுப் பணிப்பாளர். இவர் தற்போது இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழக மனித வள முன்னேற்ற நிறுவனம் என்பவற்றின் பணிப்பாளர் சபைகளில் திறைசேரியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்.

முன்னை முக்கிய நியமனங்கள்

முன்னைய பதவிவழி வந்த பணிப்பாளர்களுக்கான மாற்றுப் பணிப்பாளர் இலங்கை வங்கி வர்த்தக முதலீட்டு கொள்கைத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம். நிர்வாகச் சீர்திருத்தங்களுக்குப் பொறுப்பான மூத்த உதவியாளர் காரியதரிசி. பிரதான தகவல் அதிகாரி, பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, பதில் தூதுவர் இலங்கைத் தூதரகம் - பீஜிங், சீனா.

திரு. குமார் மாயாதுன்ன

சுயாதீனமான, நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்

சபைக்கு நியமித்தது

21 பெப்ரவரி 2019

திறன்களும் அனுபவங்களும்

திரு. மாயாதுன்ன 45 வருடங்களுக்கும் மேலாக வங்கித்துறை அனுபவத்துடன்கூடிய ஓய்வுபெற்ற வங்கியாளராவார். இவரின் அனுபவமானது, மூலோபாயம், திறைசேரி செயற்பாடுகள், தனிநபர் வங்கியியல், இணக்கப்பாடு, சர்வதேச செயற்பாடுகள் என பரந்து பட்ட துறைகளைச் சார்ந்தது. நாட்டிற்கு திறந்த பொருளாதாரக் கொள்கை அறுமுகப்படுத்தப்பட்டபோது வெளிநாட்டு நாணய மாற்று சந்தைகளின் ஸ்தாபிக்க பங்காற்றியிருந்தார், இவரது வெளிநாட்டுப் பிரஜைகளின் பொறுப்புச் சேவைகளின் உருவாக்கத்திற்கும், அவர்களின் கொழும்பு பங்குச் சந்தை முதலீடுகளுக்கும் ஆற்றிய சேவைகளுக்காகப் பெரிதும் பாராட்டப்பட்டார். அண்மைக் காலங்களில் "சனச வங்கியின்" பிரதான செயற்பாட்டு அதிகாரியாக பணியாற்றியபோது தனது தலமைத்துவத்தின் கீழ் அவர்களின் மாற்றத்திற்கு சர்வதேச நிதியியல் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் பெரும் பங்காற்றியிருந்தார்.

திரு மாயாதுன்ன அவர்கள், ஐக்கிய இராச்சியத்தின் அஷ்ட்ரிஜ் வணிகக் கல்லூரியின் பழைய மாணவராவார், இவர் வங்கி முகாமைத்துவத்தில் டிப்ளோமா பட்டத்தையும், ஸ்டான்டர்ட் சார்டட் வங்கியின் வெளிநாட்டுச் செயற்பாடுகளில் பரந்த அனுபவத்தையும் கொண்டுள்ளார்.

ஏனைய நியமனங்கள்

வங்கித்துறை ஆலோசகர்

முன்னைய முக்கிய நியமனங்கள்

ஸ்டான்டர்ட் சார்டட் வங்கி, மக்கள் வங்கி, நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி மற்றும் சசை வங்கிகளில் சிரேஷ்ட பதிவிகளை வகித்திருந்தார். ஏர்ன்ஸ் & யங், மற்றும் பட்டைய கணக்காளர் நிறுவனங்களுக்கு வங்கித்துறை ஆலோசகர் சுயாதீனப் பணிப்பாளர் இந்திரா நிதி நிறுவனம்.

திரு. பீ. ஏ ஷா.்ப்டர்
சுயாதீனமான நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்

சபைக்கு நியமித்தது்

26 பெப்ரவரி 2019

திறன்களும் அனுபவங்களும்

திரு. ஷா.்ப்டர் ஜக்கிய இராச்சியத்தின் பட்டையக் காப்புறுதி நிறுவனத்தின் அங்கத்தவராவார். இவர் 25 வருடங்களுக்கும் மேலான காப்புறுதித் துறை அனுபவத்தை இலங்கையிலும், ஜக்கிய இராச்சியத்திலும் கொண்டுள்ளார். இவர் ஜக்கிய இராச்சியத்தின் கேம்பரிஜ் பல்கலைக் கழகத்தில் வியாபார நிர்வாக முதுமானிப்பட்டத்தையும், லண்டன் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞான இளமானிப்பட்டத்தையும் பெற்றுள்ளார்.

ஏனைய நியமனங்கள்

தலைவர் ஜனசக்தி காப்புறுதித் பீஎல்சீ பணிப்பாளர் ஜனசக்தி பீ.எல். சி.ஒரியன்ட் பீஎல்சீ (முன்னைய பார்ட்லீட் பினான்ஸ் பீஎல்சீ), டுனாமீஸ் கெப்பிட்டல் பீஎல்சி, மற்றும் .்பெர்ஸ்ட் கெப்பிட்டல் ஹெல்டிங்ஸ் பீஎல்சி.

ஏனைய முக்கிய நியமனங்கள்

சொ.்ப்ட் லொஜிக்.்பினான்ஸ் பீஎல்சி கன்ரிச் பினான்ஸ் பீஎல்சி மற்றும் அக்லென்ட இன்துரன்ஸ் புரோக்கர்ஸ் நிறுவனங்களில் உயர் பதவி வகித்தவர். ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தில் பணிப்பாளர்/பொது முகாமையாளர், ஜனசக்தி காப்புறுதி பீஎல்சியில் நிர்வாக இயக்குனர். இவர் இலங்கைக் காப்புறுதிச் சபையில் முன்னாள் தலைவருமாவார்.

அம்மணி ஜானகி சேனாநாயக்க சிறிவர்த்தன
இலங்கை வங்கிச் செயலாளர்.்சபைச் செயலாளர்

சுயவிபரக் குறிப்பானது 33ம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

கூட்டாண்மை முகாமைத்துவம்

அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலமாக)

அம்மணி கயா ஜயசிங்ஹ, திரு. செனரத் பண்டார (பொது முகாமையாளர்), திரு. டபிள்யூ. பி. ரசெல் பொன்சேகா, அம்மணி. ஜானகி சேனநாயக்க சிறிவர்த்தன

எழுந்துநிற்போர் (இடமிருந்து வலமாக)

திரு. எம் ஜே பி சல்காது, கலாநிதி. இந்துனில் லியனகே, திரு. டபிள்யூ.என்.பீ. சுரவிமல, திரு. பி எம் லியனகே, திரு. சி அமரசிங்ஹ, திரு. டீ எம் எல் பீ தசநாயக்க, திரு. கே. ஈ. டீ. சுமனசிறி, திரு. எம் எம் லஷ்மன் பெரேரா, திரு. ஆர் எம் டி விபுல ஜயபாகு, திரு. எ.எம். ஜயரத்ன, அம்மணி டபிள்யூ.ஜ.ஹெட்டிஹேவா, திரு. டீ. பி. கே. குணசேகர, திரு. டி என் எல் பெர்னான்டோ

கூட்டாண்மை முகாமைத்துவம்

திரு. செனரத் பண்டார

பொது முகாமையாளர்

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்:
22ம் திகதி 2018ஆம் ஆண்டு பெப்பரவரி மாதம்

கம்பனிகள் குழுமத்திலான பணிப்பாண்மைப் பொறுப்பு:
மோர்ச்சன்ட் பாங்க் ஒ.ப் ஸ்ரீ லங்கா ரூ பினான்ஸ் பீஎல்சி, ஹோட்டல்ஸ் கொழும்பு (1963) லிமிட்டெட், கொலதெனிய ஹெட்ரோபவர் (பிரைவேட்) லிமிடெட், பீஓசி மெனேஜ்மென்ட் ரூ சப்போர்ட் சேர்விசஸ் (பிரைவெட்) லிமிடெட் பீஓசி புரோப்பர்டி டெவெலெப்மென்ட் ரூ மெனேஜ்மென்ட் (பிரைவெட்) லிமிட்டெட், பீஓசி ட்ரவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், பாங்க் ஒ.ப் சிலோன் (யூகே) லிமிட்டெட், சீபாங் அசெட் மனேஜ்மென்ட் லிமிட்டெட்.

திறன்களும் அனுபவமும்:
திரு. பண்டார அவர்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச வங்கித்தொழில் அரங்கு இரண்டிலுமே பல்வகைப்பட்ட துறைகளில் 29 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்துடன் ஒரு தொழில்துறை வங்கியாளராக உள்ளார்.

அவர் பௌதீக விஞ்ஞானத்தில் இரண்டாம் வகுப்புடன்கூடிய (மேற் பிரிவு) தனது முதலாவது பட்டத்தினை இலங்கை களனிப் பல்கலைக்கழகத்திலிருந்தும் அதிவிசேட சித்தியுடன்கூடிய வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டத்தினை இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் கற்கைகள் நிறுவகத்திலிருந்தும்(PIM) பெற்றுள்ளார். அவர் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் சக உறுப்பினரும் ஆவதுடன் 1998 ஆம் ஆண்டில் அதிசிறந்த மாணவருக்கான தங்கப் பதக்கத்தினை வென்று அதே நிறுவகத்திலிருந்து வங்கி முகாமைத்துவத்தில் நிறைவேற்றுப் பட்டப்பின் டிப்ளோமா ஒன்றைப் பெற்றுள்ளார். ஐக்கிய அமெரிக்காவின் (யுஎஸ்ஏ) ஹாவார்ட் வியாபாரக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட உயர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தினை அவர் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார். இவர் ஹார்வர்ட் வணிகப் பாடசாலை (யுஎஸ்ஏ) பழைய மாணவருமாவார்

கூட்டாண்மை முகாமையில் வகித்த பதவிகள்:
பிரதிப் பொது முகாமையாளர் (உற்பத்திப் பொருள் மற்றும் அபிவிருத்தி வங்கியியல்) - 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் வரை

ஆண்டுக் காலத்தில் வகித்த ஏனைய பதவிகள்:
திரு பண்டார தற்போது ஆசிய பசுபிக் கிராமிய மற்றும் கடன் சங்கத்தின் தலைவராகவும் (APRACA) இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் ஆளும் சபையின் உறுப்பினர் ஒருவராக சேவையாற்றுவதுடன் இலங்கையிலுள்ள முன்னணி தொழில்சார் வங்கியாளர் அமைப்பான இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கத்தின் கிட்டிய கடந்தகாலத் தலைவரும் ஆவார். எம்பீஎஸ்எல் காப்புறுதி நிறுவனத்தின் பணிப்பாளராகவும் சேவையாற்றி உள்ளார்.

தொழில் மைல்கற்கள்:
திரு. பண்டார அவர்கள் 1990 ஆம் ஆண்டில் இவ் வங்கியில் ஒரு முகாமைத்துவப் பயிலுனராக இணைந்ததுடன் பிரதானமாக தகவல் முறைமைகள், முதலீடுகள், திறைசேரி முகாமைத்துவம், சர்வதேச வங்கி நடவடிக்கைகள் மற்றும் கூட்டாண்மை வங்கித் தொழில் ஆகிய துறைகளில் உள்நாடு மற்றும் சர்வதேசம் இரண்டிலுமே அனுபவத்தினைப் பெற்றுள்ளார்.அவர் உதவிப் பொது முகாமையாளராக (வெளிநாட்டுக் கிளைகள்) இருந்த போது லண்டனில் இலங்கை வங்கி நடவடிக்கைகளை கிளையிலிருந்து துணை நிறுவனம் ஒன்றாக மாற்றும் செய்முறைக்கு வெற்றிகரமாகத் தலைமை வகித்தார். பின்னர் அவர் 2011ஆம் ஆண்டில் பாங் ஒவ் சிலோன் (யு.கே.) லிமிட்டட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அலுவலராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் உதவிப் பொது முகாமையாளர் (சர்வதேசம்) ஆகவும் உதவிப் பொது முகாமையாளர் (கூட்டாண்மை உறவுகள்) ஆகவும் சேவையாற்றினார்.

அவர் இவ் வங்கியின் தொழில்நுட்பத்தினால் தூண்டப்பெறும் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் அதிகூடிய பாகமாக இருந்துள்ளதுடன் 2013/14 ஆம் ஆண்டில் மைய வங்கியியல் தரமுயர்வுக் கருத்திட்டத்திற்கும் 2014/15 ஆம் ஆண்டில் பொஸ்ரொன் கொன்சல்ற்றிங் குரூப் நிறுவனத்துடன் அமுல்படுத்தப்பட்ட வங்கி பரந்தளவு நிலைமாற்ற கருத்திட்டத்திற்கும் தலைமைத்துவத்தினை நல்கியிருந்தார். கடன் மற்றும் முதலீட்டு முகாமைத்துவத் துறையில் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தில் ஒரு வளவாளராக அவர் இருந்துள்ளார்.

திரு. டபிள்யு. பி. ரசெல் பொன்சேகா

பிரதம நிதி அலுவலர்/பிரதிப் பொது முகாமையாளர் (கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வங்கித் தொழில்)

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்
2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம்

கம்பனிகள் குழுமத்திலான பணிப்பாண்மைப் பொறுப்பு:
லங்கா செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டெட், ட்ரான்ஸ் நெஷெனல் லங்கா ரெக்கோர்ட்ஸ் சொல்யூஷன் (பிரைவேட்) லிமிட்டெட் ட்ரான்ஸ் நெஷனல் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட்.

திறன்களும் அனுபவமும்:
திரு. பொன்சேகா அவர்கள் நிதி முகாமைத்துவம் மற்றும் தந்திரோபாய திட்டமிடலில் விசேடத்துவமிக்க அறிவுடன் வங்கியியல் நடவடிக்கைகளில் 29 வருடங்களுக்கு மேற்பட்ட பட்டறிவினைக் கொண்டுள்ளார்.

அவர் இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிர்வாகத்தில் விஞ்ஞான இளமாணி (விசேட) பட்டத்தினைப் பெற்றுள்ள பட்டதாரி ஆவதுடன்இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் கற்கைகள் நிறுவகத்திலிருந்து பெற்றுக்கொண்ட முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமான ஒன்றினையும் அவுஸ்திரேலியாவின் தெற்கு குயீன்ஸ்லான்ட் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டத்தினையும் கொண்டுள்ளார்.அவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் சக உறுப்பினரும் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் இணைந்த உறுப்பினரும் ஆவார்.

கூட்டாண்மை முகாமையில் வகித்த பதவிகள்:

பிரதிப் பொது முகாமையாளர் (நிதி மற்றும் திட்டமிடல்) - 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து 2013 ஆம் ஆண்டு மே மாதம் வரை / 2015 ஆம் ஆண்டு ஏப்பிரல்

மாதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை

பிரதிப் பொது முகாமையாளர் (சில்லறை வங்கித் தொழில்) - 2013 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து 2015 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் வரை

பதில் பிரதம நிதி அலுவலர் 2014 ஆம் ஆண்டு யூலை மாதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை

பிரதம நிதி அலுவலர் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து தற்போது வரை

பிரதிப் பொது முகாமையாளர் (சர்வதேசம், திறைசேரி மற்றும் முதலீடு) - 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து

ஆண்டுக் காலத்தில் வகித்த ஏனைய பதவிகள்

திரு. பொன்சேகர் 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து லங்காகிளியர் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவன சபையில் மாற்றீடான பணிப்பாளர் ஒருவராகவும் சேவையாற்றுவதுடன் அதன் கணக்காய்வுக் குழுவின் தலைவராகவும் செயற்படுகின்றார். இவர் மேர்ச்சன்ட் பாங்க் ஒ.ப் ஸ்ரீ லங்கா ரூ பினான்ஸ் பீஎல்சி கணக்காய்வுக் குழுவின் தலைவராகவும் செயற்படுகின்றார்.

தொழில் மைல்கற்கள்

அவர் சில்லறை (தனியாள் வாடிக்கையாளர்) வங்கித் தொழிலுடன் தனது தொழிலினை ஆரம்பித்து 1990 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இவ் வங்கியில் இணைந்தார்,அதன் பின்னர் இவ் வங்கியின் நிதி முகாமைத்துவம் மற்றும் தந்திரோபாயத் திட்டமிடலில் நிபுணத்துவத்தைப் பெற்ற அதேவேளை வணிக வங்கித் தொழிலில் சகல அம்சங்களிலும் பரந்துபட்ட அனுபவத்தினை அடைந்துள்ளார்.திறைசேரி மற்றும் சர்வதேச வங்கியியல் செயற்பாடுகளில் முழுமையான அனுபவத்தினை அவர் பெற்றுக்கொண்ட இலங்கை வங்கி லண்டன் கிளையிலும் அவர் சேவையாற்றினார்.

திரு. டீ. பி. கே. குணசேகர
பிரதிப் பொது முகாமையாளர்
(சர்வதேசம், திறைசேரி மற்றும் முதலீடு)

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்: 2013 ஆம் ஆண்டு மே மாதம்

கம்பனிகள் குழுமத்திலான பணிப்பாண்மைப் பொறுப்பு: பீஓசி மனேஜ்மென்ட் & சப்போர்ட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

திறன்களும் அனுபவமும்:
திரு. குணசேகர அவர்கள் இவ் வங்கியில் வெவ்வேறான வியாபார நடவடிக்கைகளில் 39 வருடங்களுக்கு மேற்பட்ட வங்கித் தொழில் அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

அவர் இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான இளமாணி (வியாபார நிர்வாகம்) பட்டதாரி ஆவதுடன் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்திலிருந்து பெற்றுக்கொண்ட வியாபார மற்றும் நிதி நிர்வாகத்தில் பட்டப்பின் டிப்ளோமா ஒன்றினையும் கொண்டுள்ளார். அவர் அவுஸ்திரேலியாவின் தென் குயீன்ஸ்லான்ட் பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்டுள்ளார். அவர் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் இணைந்த உறுப்பினர் ஒருவராகவும் உள்ளதுடன் இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் கற்கைகள் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தைப் பூர்த்தி செய்துள்ளார்.

கூட்டாண்மை முகாமையில் வகித்த பதவிகள்:
பிரதிப் பொது முகாமையாளர் - (சில்லறை வங்கித் தொழில்) - 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து மே மாதம் வரையில்

பிரதிப் பொது முகாமையாளர் (கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வங்கித் தொழில்) - 2013 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து தற்போது வரை

கூட்டாண்மை முகாமைத்துவம்

ஆண்டுக் காலத்தில் வகித்த ஏனைய பதவிகள்
திரு. குணசேகர அவர்கள் லங்கா செக்குரிட்டிஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவன பணிப்பாளர் சபையில் அங்கத்துவராகவும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபன கொள்முதல் சபையின் அங்கத்துவராகவும் பதவி வகித்தார்

தொழில் மைல்கற்கள்
திரு. குணசேகர அவர்கள் 1980 ஆம் ஆண்டில் இவ் வங்கியில் இணைந்து கிளை வலையமைப்பில் பரந்துபட்ட அனுபவத்தினைப் பெற்று சில்லறை (தனியாள் வாடிக்கையாளர்) வங்கித் தொழிலுடன் தனது தொழிலினை ஆரம்பித்ததுடன் அதன் பின்னர் மத்திய காசு மற்றும் கணக்குகள் திணைக்களங்களில் சேவையாற்றினார்.தலைமை அலுவலகத்தின் திறைசேரிப் பிரிவில் ஒரு திறைசேரி வணிகராக இணைந்து உள்நாட்டு ரீதியிலும் அதேபோல இலங்கை வங்கி சென்னைக் கிளையில் வெளிநாட்டு ரீதியிலும் திறைசேரி மற்றும் பணச் சந்தை நடவடிக்கைகளில் பரந்துபட்ட அறிவினைப் பெற்றுள்ளார். இலங்கை வங்கி கையாள்கை பரப்பிலுள்ள அநேகமாக சகல பதவிகளையும் அவர் உள்ளடக்கியுள்ளார். 2008 - 2010 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் சென்னைக் கிளையில் பிரதி முகாமையாளராகவும்இலங்கை வங்கி திறைசேரி அலகிலும் முகாமையாளராக சிரேஸ்ட திறைசேரி வணிகராகவும் அவர் சேவையாற்றியுள்ளார்.

சீபாங் செக்குறிற்றீஸ் லிமிட்டெட் நிறுவனத்தில் முதலாவது பிரதம வணிகராக அவர் இருந்ததுடன், இலங்கை வங்கி திறைசேரிப் பிரிவில் நடுத்தர அலுவலகத்தை அமைப்பதிலான முன்னோடி உறுப்பினர்களுள் ஒருவராகவும் இருந்தார். திரு. குணசேகர அவர்கள் கூட்டாண்மை முகாமைக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர் உதவிப் பொது முகாமையாளர் (வெளிநாட்டுக் கிளைகள்) மற்றும் உதவிப் பொது முகாமையாளர் (கூட்டாண்மை உறவுகள்) பதவிகளையும் வகித்தார்.

திரு. கே. ஈ. டீ. சுமனசிறி
பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளம்)

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்: 2013 ஆம் ஆண்டு மே மாதம்

கம்பனிகள் குழுமத்திலான பணிப்பாண்மைப் பொறுப்பு: சீபேங்க் ஹெலிடெ ஹோம்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் கொலதெனிய ஹெட்ரோபவர் (பிரைவேட்) லிமிடெட்

திறன்களும் அனுபவமும்:
திரு. சுமனசிறி அவர்கள் சில்லறை வங்கித் தொழில், நுண் நிதி,கூட்டாண்மை நிதி மற்றும் மனித வள அபிவிருத்தி ஆகியவற்றில் 29 வருட மேம்பட்டதும் பல்வகைப்பட்டதுமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

அவர் இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிர்வாகத்தில் விஞ்ஞான இளமாணி (கௌரவ.) பட்டத்தினைப் பெற்றதுடன் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் இணைந்த உறுப்புரிமையையும் கொண்டுள்ளார். அவர் இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் கற்கைகள் நிறுவகத்தினால் (PIM) நடாத்தப்பட்ட 'தொழில் தலைவர்களுக்கான உயர் முகாமைத்துவம் மற்றும் பொதுக் கொள்கைக்கான விசேட முகாமைத்துவக் கற்கைநெறியினையும் - அத்துடன் 'முக்கியமான முகாமைத்துவ ஆளணிக்கான முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தையும்' வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளார்.

கூட்டாண்மை முகாமையில் வகித்த பதவிகள்
பிரதிப் பொது முகாமையாளர் (அறவீடு) - 2013 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து 2014 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் வரை / 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை

பிரதிப் பொது முகாமையாளர்
(மனித வளங்கள்) - 2014 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்திலிருந்து 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை / 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திலிருந்து தற்போது வரை

ஆண்டுக் காலத்தில் வகித்த ஏனைய பதவிகள்
திரு. சுமனசிறி அவர்கள் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் ஆளும் சபையின் மாற்றீடான பணிப்பாளர் ஒருவராக சேவையாற்றுகின்றார்.

தொழில் மைல்கற்கள்
1990 ஆம் ஆண்டில் தனது வங்கியியல் தொழிலினை ஆரம்பித்து திரு. சுமனசிறி அவர்கள் சில முக்கியமான பதவிகளை வகித்த அதேவேளை கிளை வலையமைப்பிலும் சேவையாற்றினார். முகாமையாளர் (பயிற்சி) பதவியினை வகித்து இவ் வங்கியின் பயிற்சி நிறுவகத்தில் கல்வியாளராகவும் இருந்திருந்தார். அலுவலர் குழாத்தின் அறிவினை மேம்படுத்துவதில் அதிக சிரத்தை கொண்டிருந்ததுடன் அவர்களின் தொழில் அபிவிருத்தியில் மிகவும் முனைப்போடிருந்தார்.கூட்டாண்மை முகாமைக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர்,மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதில் முன்னணி வகிபாகத்தினை ஆற்றியும் வடக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செழிப்புக்கு அளவற்ற பங்களிப்புச் செய்தும் உதவிப் பொது முகாமையாளர் (வடக்கு மாகாணம்) பதவியினை வகித்தார்.

அம்மணி. ஜானகி சேனநாயக்க சிறிவர்த்தன
இலங்கை வங்கிச் செயலாளர்/சபைச் செயலாளர்

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்: 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம்

திறன்களும் அனுபவமும்: அம்மணி. சிறிவர்த்தன அவர்கள் கம்பனி செயலகப் பணியிலும் கூட்டாண்மை ஆட்சி நடைமுறைகளிலும் நிபுணத்துவம் பெற்று, இவ் வங்கியில் 22 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

அவர்தொழில் ரீதியில் ஒரு சட்டத்தரணி ஆவதுடன் சட்ட இளமாணிப் பட்டத்தினையும் கொண்டுள்ளார். அவர் இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்டவியாபார நிர்வாகத்தில் அதிவிசேட சித்தியுடன்கூடியமுதுமாணிப் பட்டத்தினையும் கொண்டுள்ளார்.

ஆண்டுக் காலத்தில் வகித்த ஏனைய பதவிகள்: சீபாங் ஹொலிடே ஹோம்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனத்தினதும் பீ.ஓ.சி. மனேஜ்மென்ற் ரூ சப்போர்ட் சேவிர்ஸஸ் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனத்தினதும் கம்பனிச் செயலாளராக சேவையாற்றுகின்றார்.

தொழில் மைல்கற்கள்: அம்மணி. சிறிவர்த்தன அவர்கள் 1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இவ் வங்கியின் சபையின் உதவிச் செயலாளராக இவ் வங்கியில் இணைந்ததுடன் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சபைச் செயலாளராக /இலங்கை வங்கிச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

சபையின் சகல உபகுழுக்களினதும் செயலாளராகவும் அவர் சேவையாற்றுவதுடன் கூட்டாண்மை ஆட்சி விதிகள் மற்றும் நடைமுறைகளுடன் வங்கியின் ஒத்திசைவிற்கும் உதவுகின்றார்.

இலங்கை வங்கியில் இணைவதற்கு முன்னர், தனியார் சட்டத்தரணிகள் சங்கத்தில் சட்டத்தரணி ஒருவராக அவர் பணியாற்றியதுடன், அதன்பின்னர் சட்ட மற்றும் மனிதவள பணியினை ஒன்றுசேர்த்து IPOs, ஒன்றிணைப்புகள் போன்றவை உள்ளடங்கலான கம்பனி செயலகப் பணியினைக் கையாண்டு,கம்பனிகள் குழுமமொன்றில் அவர் பணியாற்றினார்.

அவர் இலங்கை களனிப் பல்கலைக்கழகத்தின் கைத்தொழில் முகாமைத்துவத் திணைக்களத்தில் வர்த்தக மற்றும் கைத்தொழில் சட்டத்தில் வருகைதரு விரிவுரையாளராகவிருந்தார்.

திரு. டி என் எல் பெர்னான்டோ
பிரதம இடர் அலுவலர்

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்: 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம்

கம்பனிகள் குழுமத்திலான பணிப்பாண்மைப் பொறுப்பு: மேர்ச்சன்ட் பாங்க் ஒ.ப் ஸ்ரீ லங்கா ரூ பினான்ஸ் பீஎல்சி மேலதிக இயக்குனர் புரொப்பர்டி டெவெலெப்மென்ட் பீஎல்சி

திறன்களும் அனுபவமும்:
திரு. பெர்னான்டோ அவர்கள் அநேகமாக இவ் வங்கியின் சகல பிரிவுகளையும் தழுவி இவ் வங்கியில் கிட்டத்தட்ட 33 வருடகால அனுபவத்துடன்கூடிய தொழில்துறை வங்கியாளர் ஆவார்.

அவர் இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து கணிதப் பிரிவில் விஞ்ஞான இளமாணிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டதுடன் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் இணைந்த உறுப்புரிமையையும் கொண்டுள்ளார்.

தொழில் மைல்கற்கள்:

அவரின் ஆரம்பத் தொழிலில், மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் பல்வேறுபட்ட பதவிகளில் கிளைகளில் சேவையாற்றி வந்தார். பின்னர், அக் காலப்பகுதியில் சில புத்தாக்க உற்பத்திப் பொருட்களும் சேவைகளும் அறிமுகப்படுத்தப்பட்ட தலைமை அலுவலகத்தில் அறவீட்டு அலகு மற்றும் உற்பத்தி மற்றும் அபிவிருத்தி வங்கித்தொழில் அலகு ஆகியவற்றில் அவர் சேவையாற்றினார். 1995 ஆம் ஆண்டில் லண்டன் கிளையில் ஒரு வருடப் பயிற்சியினையும் அதன்பின்னர் வெளிநாட்டு அனுபவத்தினை அவர் பெற்றுக்கொண்ட பாகிஸ்தானில் இலங்கை வங்கி கராச்சி கிளையில் மூன்று வருடங்கள் பணியாற்றினார்.

அவர் நான்கு வருடங்கள் இவ் வங்கியின் மிகப்பெரிய மாகாணமான மேல் மாகாணத்தின் தெற்குப் பிரிவுக்குப் பொறுப்பான உதவிப் பொது முகாமையாளர் பதவியையும் இவ் வங்கியின் பிரதம இடர் அலுவலராக பணி ஒப்படைப்பினைப் பொறுப்பேற்பதற்கு முன்னர், மூன்று வருடங்கள் பாங் ஒப் சிலோன் (யு.கே.) லிமிட்டெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அலுவலர் பதவியையும் வகித்தார்.

பிரதம இடர் அலுவலராக, இவ் வங்கியின் இடர் நடத்தைப் பாங்கினை மாற்றுவதிலும்,இடர் முகாமைத்துவ நோக்கெல்லையினை விரிவாக்குவதிலும் மற்றும் பல்வேறுபட்ட மட்டங்களில் வங்கியின் இடர் ஏற்பு மதிப்பீடு பற்றிய அறிக்கையிடலை சீரமைப்பதிலும் அவர் முனைப்போடிருந்துள்ளார்.

கூட்டாண்மை முகாமைத்துவம்

திரு. எம் எம் லஷ்மன் பெரேரா
தகவல் தொழில்நுட்பத் தலைவர்

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்: 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம்

திறன்களும் அனுபவமும்: திரு பெரேரா அவர்கள் இவ் வங்கியில் 33 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்டுள்ளதுடன்,வெவ்வேறுபட்ட பதவிகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் (ICT) பரந்துபட்ட அனுபவத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

அவர் இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரி ஒருவராவதுடன்,இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமாணிப் பட்டத்தினையும் வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டத்தினையும் கொண்டுள்ளார்.அவர் இலங்கை கணனிச் சங்க சக உறுப்பினராக உள்ளதுடன் அதேபோன்று பிரித்தானிய (பிரிட்டிஷ்) கணனிச் சங்க உறுப்பினராகவும் உள்ளார்.

ஆண்டுக் காலத்தில் வகித்த ஏனைய பதவிகள்:
திரு பெரேரா அவர்கள் வங்கியின் சீஐஓ (CIO) மன்றத்தின் தலைவராகவும் FINCSIRT வழிப்படுத்தல் குழுவின் ஓர் உறுப்பினராகவும் சேவையாற்றுகின்றார்.

தொழில் மைல்கற்கள்:

திரு பெரேரா அவர்கள் முறைமை நிரல் பகுப்பாய்வாளராக 1986 ஆம் ஆண்டில் இவ் வங்கியில் இணைந்ததுடன்,தனது சேவைகளை மைய வங்கித்தொழில் பிரயோக முறைமைகளுடன் ஆரம்பித்தார். பன்முக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருத்திட்டங்களில் அவரின் முனைப்பான ஈடுபாட்டிற்கூடாக அவரின் அனுபவம் மேம்படுத்தப்பட்டது.அவர் கூட்டாண்மை முகாமைக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர், தகவல் தொழில்நுட்ப (பிரயோக முறைமைகள்) உதவிப் பணிப்பாளர் பதவியினை வகித்தார்.

1996 ஆம் ஆண்டு தொடக்கம் 1997 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தென்னாபிரிக்க ஸ்ரான்டட் வங்கியிலும் அவர் சேவையாற்றினார்.

அம்மணி கயா ஜயசிங்ஹ
பிரதம சட்ட அலுவலர்

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்: 2016 ஆம் ஆண்டு யூன் மாதம்

கம்பனிகள் குழுமத்திலான பணிப்பாண்மைப் பொறுப்பு: பீஓசி மெனேஜ்மென்ட் ரூ சப்போர்ட் சேர்விசஸ் (பிரைவெட்) லிமிடெட், பீஓசி ட்ரவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

திறன்களும் அனுபவமும்:
அம்மணி ஜயசிங்ஹ அவர்கள் அவர் சட்டத்துறையில் 35 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்டுள்ளதுடன் இலங்கை வங்கியில் 32 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்டுள்ளார். அவர் சர்வதேச வர்த்தகச் சட்டத்தில் பட்டப்பின் சட்டத்தரணி டிப்ளோமா ஒன்றுடன்கூடிய ஒரு சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஆவார். அவர் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திலும் இலங்கை கூட்டிணைந்த வழக்கறிஞர் சங்கத்திலும் ஓர் உறுப்பினராகவும் உள்ளார்.

அவர் கடன் ஆவணப்படுத்தல் மற்றும் வங்கியியல் சட்டம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அனுபவத்தைக் கொண்டுள்ளார். சர்வதேச வர்த்தகத்தில் உயர் கடன் ஆவணப்படுத்தல் துறை மற்றும் உத்தரவாதப் பத்திரங்கள் மற்றும் தயார்நிலை நாணயக் கடிதங்கள் ஆகியவற்றின் சட்டம் மற்றும் நடைமுறைத் துறைகளில் யூரோ பணப் பயிற்சி ஆசிய பசுபிக் நிறுவனம் மூலம் நடாத்தப்பட்ட சர்வதேசப் பயிற்சியினையும் சிங்கப்பூர் மற்றும் ஹொங்கொங் ஆகிய நாடுகளில் அவர் பெற்றுக்கொண்டுள்ளார்.

தொழில் மைல்கற்கள்:
அவர் 1986 ஆம் ஆண்டு யூலை மாதம் உதவிச் சட்ட அலுவலராக இவ் வங்கியில் இணைந்து சட்டத் திணைக்களத்தில் தனது தொழிலை ஆரம்பித்தார். சில மாகாணச் சட்ட அலகுகளில் சேவையாற்றுவதற்கான வாய்ப்பினை அவர் பெற்றுக்கொண்டதுடன் கடன் மற்றும் அறவீட்டுத் துறைகளிலும், வங்கியியல் சட்டத்தினதும் மற்றும் வணிகக் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புபட்ட ஏனைய சட்டங்களினதும் சகல அம்சங்களிலும் பரந்துபட்ட அனுபவத்தினைப் பெற்றுக்கொண்டார்.

இவ் வங்கியின் குழுக்கடன் வசதிகள், கப்பல் ஈடுவைத்தல் மற்றும் வர்த்தக நிதிச் செயற்பாடுகள் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட சட்டப் பணியில் பரந்துபட்ட அறிவை அவர் பெற்றுக்கொண்ட கூட்டாண்மைப் பிரிவுக்கு 2005 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை சிரேஷ்ட சட்ட அலுவலராக அளப்பரிய பங்களிப்பினை அவர் செய்தார். பிரதம சட்ட அலுவலராக நியமிக்கப்படுவதற்கு முன்பதாக 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை பிரதிப் பிரதம சட்ட அலுவலராக (கடன்) அவர் சேவையாற்றினார்.

அம்மணி ஜயசிங்ஹ அவர்கள் மத்திய வங்கியின் பயிற்சி நிறுவகத்தில் வர்த்தக மற்றும் வங்கியியல் சட்டம் தொடர்பில் வருகைதரு விரிவுரையாளர் ஒருவராகவும் சேவையாற்றுகின்றார்.

திரு. சி அமரசிங்ஹ
பிரதிப் பொது முகாமையாளர்
(விற்பனைகள் மற்றும் ஊடகவழி முகாமைத்துவம்)

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்: 2016 ஆம் ஆண்டு யூலை மாதம்

கம்பனிகள் குழுமத்திலான பணிப்பாண்மைப் பொறுப்பு: பீஓசி புரோப்பர் டி டெவெலெப்மென்ட் ரூ மெனேஜ்மென்ட் (பிரைவெட்) லிமிட்டெட் மேர்ச்சன்ட் பாங்க் ஒ.ப் ஸ்ரீ லங்கா ரூ பினான்ஸ் பீஎல்சி பீஓசி ட்ரவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் மாற்றீடான பணிப்பாளர்

திறன்களும் அனுபவமும்
திரு. அமரசிங்ஹ அவர்கள் கிளை வங்கித் தொழிலிலும் கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வங்கித் தொழிலிலும் பரந்துபட்ட அறிவினைக் கொண்டு இவ் வங்கியில் 29 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

அவர் இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து பொது நிர்வாகத்தில் விஞ்ஞான இளமாணி (விசேட) பட்டத்தினைப் பெற்றுள்ளதுடன்,அதே பல்கலைக்கழகத்திலிருந்து முகாமைத்துவத்தில் விஞ்ஞான முதுமாணிப் பட்டம் ஒன்றையும் பெற்றுக்கொண்டுள்ளார். அவர் இலங்கை

வங்கியாளர் நிறுவகத்தின் இணைந்த உறுப்பினர் ஒருவராகவும் உள்ளார்.

ஆண்டுக் காலத்தில் வகித்த பதவிகள்:
அவர் சிஆர்ஐபீ (CRIB) இன் மாற்றீடான பணிப்பாளர் ஒருவராக சேவையாற்றுகின்றார்.

அவர் இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கத்தின் உப தலைவராகவும் சேவையாற்றிவருகின்றார்.

தொழில் மைல்கற்கள்:
திரு. அமரசிங்ஹ அவர்கள் முகாமைத்துவப் பயிலுனராக 1990 ஆம் ஆண்டில் இவ் வங்கியில் இணைந்ததுடன், சில்லறை (தனியாள் வாடிக்கையாளர்) வங்கித் தொழிலில் தனது தொழிலை ஆரம்பித்தார். பின்னர், அவர் கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வங்கித் தொழில் பிரிவில் இணைந்து, கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வங்கித் தொழில் நடவடிக்கைகளின் ஒவ்வோர் அம்சங்களிலும் பரந்துபட்ட அறிவையும் அனுபவத்தையும் பெற்றுக்கொண்ட அதேவேளை இப் பிரிவின் தொழிலை குறிப்பிடத்தக்க காலப்பகுதிக்கு மேம்படுத்துவதற்கு அளப்பரிய பங்களிப்புச் செய்தார்.

கூட்டாண்மை முகாமைக்கு அவர் நியமிக்கப்படுவதற்கு முன்னர்,உதவிப் பொது முகாமையாளர் (கரைகடந்த வங்கித்தொழில்) மற்றும் உதவிப் பொது முகாமையாளர் (கூட்டாண்மை உறவுகள்) பதவிகளை வகித்தார்.

திரு. எம் ஜே பி சல்காது
பிரதிப் பொது முகாமையாளர்
(உற்பத்திப் பொருள் மற்றும் வங்கித்தொழில் அபிவிருத்தி)

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்: 2016 ஆம் ஆண்டு யூலை மாதம்

திறன்களும் அனுபவமும்
திரு. சல்காது அவர்கள் தனியாள் வாடிக்கையாளர் வங்கித்தொழில், மாகாண விற்பனை முகாமைத்துவம் மற்றும் உற்பத்திப் பொருள் மற்றும் வங்கித்தொழில் அபிவிருத்தி ஆகியவற்றில் நிபுணத்துவத்தைப் பெற்று இவ் வங்கியில் 28 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

அவர் இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தக இளமாணி (விசேட) பட்டத்தினைப் பெற்றுக்கொண்டதுடன், இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் இணைந்த உறுப்புரிமையினையும் கொண்டுள்ளார். அவர் இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் சங்கத்தின் உறுப்பினர் ஒருவராக உள்ளதுடன், அதேபோன்று இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்திலிருந்தான பட்டயதாரர் சான்றிதழையும் கொண்டுள்ளார்.

ஆண்டுக் காலத்தில் வகித்த பதவிகள்
திரு. சல்காது அவர்கள் பிராந்திய அபிவிருத்தி வங்கியின் சபையில் பணிப்பாளர் ஒருவராகச் சேவையாற்றுகின்றார்.

தொழில் மைல்கற்கள்
திரு. சல்காது அவர்கள் முகாமைத்துவப் பயிலுனராக 1990 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இவ் வங்கியில் இணைந்து, தனியாள் வாடிக்கையாளர் வங்கித்தொழிலில் தனது தொழிலை ஆரம்பித்தார். பல்வேறுபட்ட பதவிநிலைகளில் முக்கியமான பல பதவிகளில் சேவையாற்றி,இவ் வங்கியின் உள்நாட்டு வங்கித்தொழில் மற்றும் கடனட்டை நடவடிக்கைகளில் பரந்துபட்ட அறிவினை திரு. சல்காது அவர்கள் பெற்றுள்ளார்.

திரு. சல்காது அவர்கள் கூட்டாண்மை முகாமைக்கு நியமிக்கப்படுவதற்கு முன்பதாக, உதவிப் பொது முகாமையாளர் (மாகாண விற்பனை முகாமைத்துவம்) பதவியினை வகித்ததுடன் தனது மேற்பார்வையின் கீழ் வந்த ISSP அமுலாக்க அலகு, விசேட கருத்திட்டம், இலங்கை வங்கி தொடர்பு மத்திய நிலையம், இலங்கை வங்கி முன்னணிக் கிளை (பீஓசி பிறீமியர்) மற்றும் இலங்கை வங்கி காப்புறுதித் திணைக்களம் ஆகியவற்றின் தொழிற்பாடுகளில் அளப்பரிய பங்களிப்புச் செய்தார். அவர் இவ் வங்கியின் 'வெனச' நிலைமாற்றுக் கருத்திட்டத்தின் செயலாக்கமிக்க உறுப்பினர் ஒருவராகவும் இருந்தார்.

கூட்டாண்மை முகாமைத்துவம்

திரு. ஆர் எம் டி விபுல ஜயபாகு
பிரதிப் பொது முகாமையாளர்
(நிதி மற்றும் திட்டமிடல்)

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்:
2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம்

கம்பனிகள் குழுமத்தில் வகித்த தலைமைப் பொறுப்பு: ட்ரான்ஸ் நெஷெனல் லங்கா ரெக்கோர்ட்ஸ் சொல்யூஷன் (பிரைவேட்)

கம்பனிகள் குழுமத்திலான பணிப்பாண்மைப் பொறுப்பு: மேர்ச்சன்ட் பாங்க் ஒ.ப் ஸ்ரீ லங்கா ரூ பினான்ஸ் பீஎல்சி கொலதெனிய ஹெட்ரோபவர் (பிரைவேட்) லிமிடெட்

திறன்களும் அனுபவமும்
திரு. ஜயபாகு அவர்கள் இந்த வங்கியில் வேறுபட்ட வியாபார நடவடிக்கைகளில் 29 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

அவர் இலங்கை களனிப் பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தக இளமாணிப் பட்டத்தை (விசேட பட்டம்) பெற்றுக்கொண்டதுடன் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்திலிருந்து வியாபார மற்றும் நிதி நிர்வாகத்தில் பட்டப்பின் டிப்ளோமா ஒன்றினையும் பெற்றுக்கொண்டுள்ளார். அவர் அவுஸ்திரேலியாவின் தெற்கு (சௌதேன்) குயீன்ஸ்லான்ட் பல்கலைக்கழகத்திலிருந்து நிதியில் வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டதுடன் இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் கற்கைகள் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தையும் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார்.

தொழில் மைல்கற்கள்
திரு. ஜயபாகு அவர்கள் முகாமைத்துவப் பயிலுனராக 1990 ஆம் ஆண்டு இலங்கை வங்கியில் இணைந்து கிராமிய வங்கித் தொழிலிலும் அதன் பின்னர் தனியாள் வாடிக்கையாளர் வங்கியியலிலும் வங்கித் தொழிலை ஆரம்பித்து, தந்திரோபாயத் திட்டமிடலில் நிபுணத்துவம் பெற்றுள்ளதுடன் இவ் வங்கியின் சில கூட்டாண்மைத் திட்டங்களை விருத்தி செய்வதில் பங்களிப்புச் செய்துள்ளார்.

அவர் இவ் வங்கியின் வலைப்பின்னல் இணைப்பிலுள்ள (ஒன்லைன்) அதே நேர மைய வங்கித்தொழில் தீர்வுக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலான குழுத் தலைவர்களில் ஒருவராக இருந்ததுடன் குழு உறுப்பினர்களை வழிப்படுத்தியும் தனது அறிவு மற்றும் அனுபவத்தைப் பரிமாற்றம் செய்தும், இவ் வங்கியின் ஐஎப்ஆர்எஸ் (IFRS) அமுலாக்க கருத்திட்டம், மைய வங்கித்தொழில் முறைமை மேம்படுத்தல் கருத்திட்டம் மற்றும் ஏனைய சில முறைமை அமுலாக்க கருத்திட்டங்கள் ஆகியவற்றில் முனைப்போடு ஈடுபட்டார்.

திரு. ஜயபாகு அவர்கள் கூட்டாண்மை முகாமைக்கு நியமிக்கப்படுவதற்கு முன்பதாக, 2012 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை உதவிப் பொது முகாமையாளர் (பாதீடு, தந்திரோபாயத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமை (MIS) பதவியினை வகித்தார்.

திரு. டீ எம் எல் பீ தசநாயக்க
பிரதிப் பொது முகாமையாளர்
தனியாள் வாடிக்கையாளர் வங்கித்தொழில் - வீச்சு 1 - 2

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்: 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம்

கம்பனிகள் குழுமத்திலான பணிப்பாண்மைப் பொறுப்பு:
எம்பீஎஸ்எல்இல் மாற்றீடான பணிப்பாளர்

திறன்களும் அனுபவமும்
திரு. தசநாயக்க அவர்கள் விசேடமாக தனியாள் வாடிக்கையாளர் வங்கித்தொழில்,கூட்டாண்மை நிதியீட்டம் மற்றும் சர்வதேச நடவடிக்கைகள் ஆகிய துறைகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பட்டறிவினைப் பெற்று, இவ் வங்கியில் 35 வருடங்களுக்கு மேற்பட்ட பரந்துபட்ட அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

அவர் இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து கலைமாணி (பொருளியல் விசேட) பட்டத்தினைப் பெற்ற ஒரு பட்டதாரி ஆவார். அவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்திலிருந்து வியாபாரம் மற்றும் நிதி நிர்வாகத்தில் பட்டப்பின் டிப்ளோமா ஒன்றினையும் இந்தியாவின் மகாத்மா காந்தி பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டம் ஒன்றையும் பெற்றுக்கொண்டுள்ளார். அவர் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் இணைந்த உறுப்பினர் ஒருவராகவும் உள்ளார்.

கூட்டாண்மை முகாமையில் வகித்த பதவிகள்:
நாட்டுக்குரிய முகாமையாளர் (மாலைதீவு கிளை)

2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திலிருந்து 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை

பிரதிப் பொது முகாமையாளர் (தனியாள் வாடிக்கையாளர் வங்கித்தொழில் - வீச்சு I)

2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து தற்போது வரை

தொழில் மைல்கற்கள்:

திரு. தசநாயக்க அவர்கள் 1982 ஆம் ஆண்டு தனது வங்கித்தொழிலை ஆரம்பித்து, ஒன்பது வருடங்கள் வெளிநாட்டுக் கிளைகளில் முதன்மையான பதவிகளை வகித்து,கூட்டாண்மை வங்கித்தொழில் மற்றும் சர்வதேச நடவடிக்கைகள் ஆகியவற்றில் நிபுணத்துவத்தைப் பெற்று, வங்கித்தொழிலில் ஒட்டுமொத்தமான அனுபவத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார். அவர் தொடர்புகொள் அலுவலராகவும், தொடர்புகொள் முகாமையாளராகவும், அதன்பின்னர் கூட்டாண்மை வங்கிப் பிரிவில் உதவிப் பொது முகாமையாளராகவும் (கூட்டாண்மைக் கடன்) சேவையாற்றியுள்ளார். 2000 ஆம் ஆண்டிலிருந்து 2003 ஆம் ஆண்டு வரை, அவர் லண்டனில் இலங்கை வங்கியின் துணை நிறுவனம் ஒன்றானபாங் ஒப் சிலோன் (யு.கே.) லிமிட்டெட் நிறுவனத்தில் வியாபார நிதி நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாளராக சேவையாற்றினார்.

2016 ஆம் ஆண்டில் கூட்டாண்மை முகாமைக்கு நியமிக்கப்படுவதற்கு முன்பதாக அவர் மாலைதீவு கிளையின் நாட்டுக்குரிய முகாமையாளராகவும் தனது கடமைகளை ஆற்றினார்.

அம்மணி டபிள்யூ.ஜ.ஹெட்டிஹேவா
பதில் பொது முகாமையாளர்
(துணைச் சேவைகள்)

கூட்டிண்மை முகாமைத்துவத்திற்கு:
நியமனம்:- ஆகஸ்ட் 2018

குழுநிறுவனங்களின் பணிப்பாளர் நியமனங்கள்: மேலதிகப் பணிப்பாளர் ஹேட்டல்ஸ் கொழும்பு (1963) லிமிட்டெட்

திறன்களும் அனுபவங்களும்:
அம்மணி ஹெட்டிஹேவா வங்கியின் பல்வேறு வியாபார மற்றும் முகாமைத்துவப் பிரிவுகளில் 35 வருட அனுபவத்தைக் கொண்டவர். இதில் 28 வருட பரந்துபட்ட அனுபவம் கிளை வலையமைப்பில் சில்லறை, மற்றும் கூட்டாண்மை வங்கியியல் துறையிலும் அடங்கும்.

இவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் விசேட விஞ்ஞான இளமானிப் பட்டத்தை இரசாயனவியல்த் துறையில் பெற்றுக்கொண்டதோடு, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை இளமானிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார். இவர் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ள சட்டத்தரணியாவார். இவர் இலங்கை வங்கியில் நிறுவனத்தின் இளைஞர்.

சேவை மைல்க் கற்கள்:
இவர் 1983ம் ஆண்டு டிசம்பர் மாதம் முகாமைத்துவ பயிலுனராக வங்கியில் தன்னுடைய சேவையை கிளை வலையமைப்பில் தொடங்கினார். சில்லறை வங்கியியலில் நிறைந்த அனுபவத்தைச் சேர்த்துக்கொண்டு படிப்படியாக முன்னேறி பல பதவிகளைப் பெற்றார். இவர் கூட்டாண்மை வங்கியியல் தலைநகரக் கிளையின் தலமைத்துவத்தை வகித்தபோது பெரும் பங்களிப்பினை வளங்கியிருந்தார்.

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர் இவர் உதவிப்பொது முகாமையாளர் (தலைநகரக்கிளை), உதவிப்பொது முகாமையாளர் (துணைச் சேவைகள்), மற்றும் உதவிப் பொது முகாமையாளர் (தென் மாகாணம்) ஆகிய பதவிகளை வகித்தவர்.

திரு. எ.எம். ஜயரத்ன
பதில் பொது முகாமையாளர்
(அறவிடல் மாகாணங்கள்)

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கு:
நியமனம்:- ஆகஸ்ட் 2018

திறன்களும் அனுபவங்களும்:
திரு. ஜயரத்ன, 36 வருட மிகச்சிறந்த வங்கி அனுபவத்துடன், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கிளைகளின் வங்கியின் பல துறைகளிலும் பரந்துபட்ட அனுபவத்தைக் கொண்டவர்.

திரு. ஜயரத்ன, ஸ்ரீ ஜயவர்தன புர பல்கலைக்கழகத்தில் வியாபார முகாமைத்துவத்தில் முதுமானிப்பட்டத்தையும், பட்டப்பின் டிப்ளோமா வங்கியியல் முகாமைத்துவத்தை இலங்கை வங்கியியல் நிறுவனத்திலும் பெற்றுக்கொண்டதோடு இலங்கை வங்கியியல் நிறுவன துணைவருமாவார்.

சேவை மைல்கற்கள்:
திரு. ஜயரத்ன, 1982ம் ஆண்டு வங்கிச்சேவையில் இணைந்து, கிளை வலையமைப்பில் அதி சிறந்த அனுபவத்தைப் பெற்றதோடு, உள்நாட்டு வெளிநாட்டுக் கிளைகளில் பல பதவிகளை வகித்து பல்வேறுபட்ட வங்கிச் செயற்பாட்டு அனுபவங்களைக் கொண்டுள்ளார். இவர் பீஷசி மாலே கிளைகளில் சிரேஷ்ட கடன் முகாமையாளராக தொடர்ந்து மூன்று வருடங்கள் சிறப்பாகத் தொழிற்பாட்டு ஆளணியினருக்கும் தன்னுடைய விசேட கடன் தொடர்பான அறிவினால் வழிகாட்டியிருந்தார்.

அவர் உதவிப்பொது முகாமையாளராக வடமேல் மாகாணம், மற்றும் மாகாண விற்பனையியல் முகாமைத்துவம் என்பவற்றில் 2014ம் ஆண்டு முதல் 2018ம் ஆண்டு வரை கடமையாற்றியிருந்தார்.

கூட்டாண்மை முகாமைத்துவம்

திரு. டபிள்யூ.என்.பீ. சுரவிமல
பதில் பொது முகாமையாளர் (அறவிடல் கூட்டாண்மை)

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கு:
நியமனம்: ஆகஸ்ட் 2018

திறன்களும் அனுபவங்களும்:
திரு சுரவிமலவின் ஒப்பற்ற, 27 வருட வங்கிச் சேவைக் காலத்தில். இவர் பல வருடகால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கி அனுபவங்களைப் பெற்றுள்ளார். இவரது சர்வதேச அரங்கில் பெற்ற வங்கி அனுபவங்கள், பல்வகைப்பட்ட வர்த்தன வங்கி அனுபவங்கள் என்பன வங்கியின் சவால்களை வெற்றிகொள்ள பெரும் பங்காற்றியிருக்கின்றன.

திரு. சுரவிமல, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் விஷேட பொது நிர்வாக இளமானிப் பட்டத்தையும், வங்கியியல் மற்றும் நிதித்துறையில் விஷேடத்துவமான முகாமைத்துவ முதுமானிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டுள்ளதுடன் இலங்கை வங்கியியல் நிறுவனத்தின் சகஉறுப்பினருமாவர். மேலும் இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக பட்டத்தின் பின் முகாமைத்துவ நிறுவனத்தினால் முக்கிய முகாமைத்துவ அங்கத்தவர்களுக்காக நடத்தப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்தி கற்கை நெறியையும் பூர்த்தி செய்துள்ளார்.

சேவை மைல்கற்கள்
திரு. சுரவிமல தன்னுடைய வங்கிச் சேவையை 1991ம் ஆண்டு முகாமைத்துவ பயிலுனராக ஆரம்பித்தார். இவர் சில்லறை வங்கியியல், கூட்டாண்மை வங்கியியல், கரைகடந்த வங்கியியல் மற்றும் அறவிடல் வங்கியியல் எனப் பல பிரிவுகளில் அனுபவம் பெற்றவர்.

இவர் வங்கியின் சென்னைக் கிளையின் தேச முகாமையாளராக 2014 முதல் 2017 வரை கடமையாற்றிய பொழுது, சென்னைக் கிளையை சிறந்த கிளையாக மாற்றியமைத்திருந்தார். இதன்போது இவருடைய வங்கித்துறை சார்ந்த, மற்றும் மக்கள் தொடர்பாடல் திறன்கள் பெரிதும் உதவியிருந்தன.

பிரதிப் பொது முகாமையாளர் (கூட்டாண்மை அறவிடல்) பதவிக்கு நியமிக்க முன்னர், இவர் உதவிப்பொது முகாமையாளர் (கரைகடந்த வங்கியியல்) பிரிவில் கடமையாற்றி வங்கியின் ஐந்தொகையை சிறப்பாக பேணி வந்தார். இவர் கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கு நியமிக்கப்பட்டதும், வங்கியின் தொழிற்படாக் கடன்களை குறைப்பதற்கும், வங்கியின் எதிர்காலத்திற்கும் ஏற்ப நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளார்.

கலாநிதி. இந்துனில் லியனகே
பிரதம சந்தைப்படுத்தல் அலுவலர்

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்: 2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம்

திறன்களும் அனுபவமும்:
1989 ஆம் ஆண்டிலிருந்து சந்தைப்படுத்தல் துறையில் பல நிறுவனங்களுக்காக சேவையாற்றிய கலாநிதி. லியனகே அவர்கள் இலங்கையில் நிதிச் சேவைகள் தொழில், விரைவு நகர்வு நுகர்வுப் பொருட்கள் (FMCG), இலத்திரனியல் மற்றும் விவசாயத் துறைகள் ஆகியவற்றில் 28 வருடங்களுக்கு மேலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

கலாநிதி. லியனகே அவர்கள் சந்தைப்படுத்தல், முகாமைத்துவம் மற்றும் நிதி எனப் பெயரிடப்படும் மூன்று வேறுபட்ட துறைகளில் தொழில் ரீதியிலும் கல்வி ரீதியிலும் தகைமை பெற்றுள்ளார். அவர் இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்படிப்புக் கற்கைகள் பீடத்திலிருந்து (FGS) பெற்றுக்கொண்ட கலாநிதிப் பட்டம் (PhD) ஒன்றினையும், இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட முகாமைத்துவத்தில் விஞ்ஞான முதுமாணிப் பட்டம் (MSc) ஒன்றினையும் அத்துடன் ஐக்கிய இராச்சியத்தின் (யுகே) பட்டய சந்தைப்படுத்தல் நிறுவகத்திலிருந்து பெற்றுக்கொண்ட சந்தைப்படுத்தலில் பட்டப்பின் டிப்ளோமா ஒன்றினையும் கொண்டுள்ளதுடன் அவுஸ்திரேலியாவின் சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தின் (ICMA-அவுஸ்திரேலியா) சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் (CMA) ஒருவராகவும் உள்ளார்.

கலாநிதி. லியனகே அவர்கள் இலங்கையில் முதலாவது பட்டய சந்தைப்படுத்தலாளர் பிரிவுடன் இணைக்கப்பட்டு 1997 ஆம் ஆண்டிலிருந்து பட்டய சந்தைப்படுத்தலாளர் ஒருவராக உள்ளதுடன் பட்டய சந்தைப்படுத்தல் நிறுவகத்தின் சக உறுப்பினர் (FCIM) ஒருவராகவும் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தின் சக உறுப்பினர் (FSLIM) ஒருவராகவும் உள்ளார். அவர் 1995 ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய இராச்சியத்தின் (யுகே) பட்டய சந்தைப்படுத்தல்

நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக உள்ளார். 2009 ஆம் ஆண்டு சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் (NUS) நடாத்தப்பட்ட தந்திரோபாய முகாமைத்துவ நிறைவேற்று நிகழ்ச்சித் திட்டம் உள்ளடங்கலாக பல சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் அவர் பங்குபற்றியுள்ளார்.

தொழில் மைல்கற்கள்:
கலாநிதி. லியனகே அவர்கள் இலங்கை வங்கியில் இணைவதற்கு முன்னர் இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி இல் சந்தைப்படுத்தல் தலைவராகவுள்ள உதவித் துணைத் தலைவராக சேவையாற்றியுள்ளார். அவர் உற்பத்திப்பொருள் / வர்த்தகப் பொருள் முகாமையாளர் மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர் பதவியில் பல்தேசிய மற்றும் உள்நாட்டு நிறுவனங்களில் சிரேஸ்ட பதவிகளையும் முன்னர் வகித்துள்ளார்.அவரின் சந்தைப்படுத்தல் தொழில் முழுவதிலும் இந் நாட்டில் சில அடிப்படையான சர்வதேச மற்றும் உள்ளூர் வர்த்தகப் பொருள் சின்னங்கள் / உற்பத்திப் பொருட்களை அவர் உருவாக்கியுள்ளார்.

இலங்கை தொழில் சமூக அமைப்பின் (OPA) மூலம் வழங்கப்படும் சந்தைப்படுத்தலுக்கான மதிப்பு வாய்ந்த தேசிய அபெக்ஸ் (APEX) விருது 2016 (பினாக்கிள் (Pinnacle) விருது 2016) கலாநிதி. லியனகே அவர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்இந்தியாவின் மும்பை நகரத்தில் உலக சந்தைப்படுத்தல் ஒன்றுகூடல் 2015 இல் “கூடுதல் செல்வாக்குமிக்க சந்தைப்படுத்தல் தலைவர்கள் பட்டியல்”இல் கௌரவிக்கப்பட்டார் அத்துடன் மலேசியாவில் இடம்பெற்ற உலக சந்தைப்படுத்தல் மாநாடு கோல்டன் குளோப் ரைகர் எவோர்ட்ஸ் 2013 இல் “50 மோஸ்ட் ரலென்ரட் சிஎம்ஓஸ் (CMOs) எவோர்ட்”வழங்கியும் கௌரவிக்கப்பட்டார் அத்துடன் ஐக்கிய அமெரிக்காவின் (யுஎஸ்ஏ) ஹாவாய் இலுள்ள யப்பான் அமெரிக்க முகாமைத்துவ விஞ்ஞான நிறுவகத்தில் (JAIMS) “உலக முகாமையாளர்களுக்கான கலாசாரங்களுக்கிடையிலான கல்வி” நிகழ்ச்சித் திட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட முதலாவது இலங்கையரும் ஆவார். 1996 ஆம் ஆண்டில் அவரின் கல்வி மேன்மை மற்றும் சர்வதேச புரிந்துணர்வு மற்றும் நன்மதிப்புக்கான சாத்தியமான பங்களிப்பு ஆகியவற்றின் அடையாளமாக இந் நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவுசெய்வதற்கு யப்பான் புஜிசு (Fujitsu) தாபனத்தினால் முழுமையான புலமைப்பரிசில் ஒன்று அவருக்கு வழங்கப்பட்டது.

திரு. பி எம் லியனகே
பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்

கூட்டாண்மை முகாமைக்கான நியமனம்
2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம்

திறன்களும் அனுபவமும்:
திரு லியனகே அவர்கள் 19 வருட பின் தகைமை அனுபவத்துடன் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் சக உறுப்பினர் ஒருவராக உள்ளதுடன், இலங்கை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவ (விசேட) விஞ்ஞான இளமாணிப் பட்டத்தினைக் கொண்டுள்ளார். அவர்ஐக்கிய அமெரிக்காவின் (USA)ISACA இன் சான்றுப்படுத்தப்பட்ட தகவல் முறைமை கணக்காய்வாளர் (CISA) நிறுவகத்தின் உறுப்பினரும் ஆவார்.

தொழில் மைல்கற்கள்
இலங்கை வங்கியில் பிரதம உள்ளகக் கணக்காய்வாளராக இணைவதற்கு முன்னர், கொமர்ஷியல் கிரெடிட் மற்றும் நிதி பிஎல்சி நிறுவனத்திலும் பான் ஏஷியா வங்கியிலும் அதே பதவியில் அவர் சேவையாற்றியுள்ளார். திரு லியனகே அவர்கள் 2006 – 2008 வரையான காலப்பகுதியில் உதவிப் பொது முகாமையாளர் தரத்தில் உள்ளகக் கணக்காய்வாளராகவும் இலங்கை வங்கியில் சேவையாற்றியுள்ளார்.

திரு லியனகே அவர்களின் அனுபவமானது நிதி மற்றும் நிர்வாக முகாமையாளர் பதவியில் வரையறுக்கப்பட்ட லங்காகிளியர் (பிறைவெட்) நிறுவனத்தினையும் (தேசிய காசோலைத் தீர்ப்பனவு இல்லம்) தகைமைபெற்ற உதவியாளராக ஏன்ஸ்ற் மற்றும் யங் நிறுவனத்தினையும் உள்ளடக்குகின்றது.

நிறைவேற்று முகாமைத்துவம்

01

02

03

05

08

07

01. **ஜீ.ஏ. ஜயசாந்த** - **உதவிப்பொது முகாமையாளர்** - கரைகடந்த வங்கியியல்
02. **ஏ.டீ.எஸ். பின்னதுவகே** - **உதவிப்பொது முகாமையாளர்** - இணக்கப்பாடு
03. **கே.ரீ.ஏ.ஈ.டி. சில்வா** - **உதவிப்பொது முகாமையாளர்** - இலத்திரனியல் வங்கி நிலையம்
04. **டீ.எஸ். முத்துக்குடாராச்சி** - **உதவிப்பொது முகாமையாளர்** - வதிவிட முகாமையாளர் - சென்னை
05. **பீ. நந்தகுமார்** - **உதவிப்பொது முகாமையாளர்** - துணைச்சேவைகள்
06. **வை.ஏ.ஜயதிலக்க** - **உதவிப்பொது முகாமையாளர்** - மத்திய மாகாணம்
07. **ஏ.ஆர்.எவ்.ஜோன் புள்ளே** - **உதவிப்பொது முகாமையாளர்** - இடர் முகாமைத்துவம்
08. **ஜி.ஆர்.டீ சில்வா** - **உதவிப்பொது முகாமையாளர்** - விசாரணைகள்

09. **எச்.எம்.எம்.பீ. ஹேரத் - உதவிப்பொது முகாமையாளர்** - சப்பிரகமுவ மாகாணம்

10. **டபிள்யூ.பீ.பி. ரத்நாயக்க - உதவிப்பொது முகாமையாளர்** - கூட்டாண்மைக் கடன்

11. **ஜே.சி.ஏ. குருதுகும்புர - உதவிப் பணிப்பாளர்** - தகவல் தொழில்நுட்பம் (செயற்பாடுகள்/தொழில்நுட்ப உதவி)

12. **எம்.டி.ஏ. கருணாரத்ன - உதவிப் பணிப்பாளர்** - தகவல் தொழில் நுட்பம் (விநியோக வழிமுறை)

13. **எச்.எம்.சீ.எம் மல்தெனி - உதவிப் பணிப்பாளர்** - தகவல் தொழில் நுட்பம் (பிரயோக முறை)

14. **டி.எம்.கே.எஸ். திசாநாயக்க - உதவிப்பொது முகாமையாளர்** - கிழக்கு மாகாணம்

15. **எம்.எச்.எஸ் மாலா - உதவிப்பொது முகாமையாளர்** - அபிவிருத்தி வங்கியியல்

16. **எம்.ஜே. பிரபாகரன் - உதவிப்பொது முகாமையாளர்** - வட மாகாணம்

நிறைவேற்று முகாமைத்துவம்

17

20

23

18

21

24

19

22

17. **எச்.பீ.கே. சில்வா** - **உதவிப்பொது முகாமையாளர்** - மேல் மாகாணம் வடக்கு
18. **ஏ.எம்.ஆர்.டி. சுபசிங்க** - **உதவிப்பொது முகாமையாளர்** - புறக்கோட்டைக் கிளை
19. **பீ.பீ.எம். விஜயசேகர** - **உதவிப்பொது முகாமையாளர்** - சந்தைப்படுத்தல்
20. **பீ.கே. குருசிங்க** - **வதிவிட முகாமையாளர்** - மாலே
21. **ஏ.டி.எஸ். இந்திராணி** - **உதவிப்பொது முகாமையாளர்** - பயிற்சி, மற்றும் அபிவிருத்தி
22. **எம்.பீ. ருவன் குமார** - **உதவிப்பொது முகாமையாளர்** - பாதீடு, தந்திரோபாயத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை
23. **டப்ள்யூ. ரஞ்சித்** - **உதவிப்பொது முகாமையாளர்** - வடமத்திய மாகாணம்
24. **ஏ.ஜீ. சிறிநிமால்** - **உதவிப்பொது முகாமையாளர்** - ஊவா மாகாணம்

25. எஸ்.டீ.கே. ஹேவகே - **பிரதிப் பிரதம சட்ட அதிகாரி** - மீள் பெறுகை
26. எம்.டி.சி. நிலந்த - **பிரதம நிறைவேற்று அதிகாரி** - இலங்கை வங்கி (யூ.கே) லிமிட்டெட்
27. எல்.ஜே. திசாநாயக்க - **வதிவிட முகாமையாளர்** - சீசெல்ஸ்
28. கே.ஜீ.சி. தீபால் - **உதவிப்பொது முகாமையாளர்** - தகவல் முறைமைய கணக்காய்வு
29. ஜெ. ஞானசம்பந்தன் - **உதவிப்பொது முகாமையாளர்** - முதலீட்டு வங்கியியல்
30. பீ.என். கோமஸ் - **உதவிப்பொது முகாமையாளர்** - ஓய்வூதிய நலத்திட்டங்கள்
31. பீ. பெரேரா - **உதவிப்பொது முகாமையாளர்** - கிளைக் கடன் - வலயம்
32. எல்.ஏ.ஆர் சேனவிரத்ன - **உதவிப்பொது முகாமையாளர்** - கடன் மாகாணம் மற்றும் கிளைக் கணக்காய்வு

நிறைவேற்று முகாமைத்துவம்

33. **ஆர்.எம்.எம். வீரசேகர** - **உதவிப்பொது முகாமையாளர்** - தலைநகரக் கிளை
34. **ஆர்.எம்.கே.எஸ்.எம் ரத்நாயக** - **பிரதிப் பிரதம சட்ட அதிகாரி** - கடன்
35. எம்.எம்.ஆர்.பீ பொன்னான்டோ - **உதவிப்பொது முகாமையாளர்** - வியாபாரச் சேவைகள்
36. **எம்.ரி கருணாரட்ண** - **உதவிப்பொது முகாமையாளர்** - அறவிடல் கூட்டாண்மை
37. **கே.பீ.மல்லிகா** - **உதவிப்பொது முகாமையாளர்** - திறைசேரி பின்நிலை அலுவலகம்
38. **ஐ.எஸ்.என் பெரேரா** - **உதவிப்பொது முகாமையாளர்** - மேல் மாகாணம் தெற்கு
39. **எம்.ஆர்.என் ரோகண குமார** - **உதவிப்பொது முகாமையாளர்** - அறிவிடல் மாகாணங்கள்
40. **கே.ஏ.பீ.கே சமரகோன்** - **உதவிப்பொது முகாமையாளர்** - வெளிநாட்டுக் கிளைகள்

41. எஸ்.பீ.சி.கே பெர்னான்டோ - **உதவிப்பொது முகாமையாளர்** - நிறுவனத் தொடர்புகள்
42. ஆர்.எம்.என் ஜீவந்த - **உதவிப்பொது முகாமையாளர்** - திறைசேரி
43. பீ.டி.எஸ் லியனகே - **உதவிப்பொது முகாமையாளர்** - வடமேல் மாகாணம்
44. வீனா றுவெய்ஸ் - **உதவிப்பொது முகாமையாளர்** - உற்பத்தி அபிவிருத்தி, மற்றும் வியாபாரச் செயன்முறைகள் மீளமைத்தல் செயற்திட்டம்
45. எஸ். சிவாஞ்சன் - **உதவிப்பொது முகாமையாளர்** - சர்வதேசம்
46. கே.ஏ.டி. விஜயவர்த்தன - **உதவிப்பொது முகாமையாளர்** - மனித வளச் செயற்பாடுகள்
47. ஜி.கே.ஜி.எம் பண்டார - **உதவிப்பொது முகாமையாளர்** - நிர்வாகச் சேவைகள்
48. டீ.ஆர்.சி.எஸ் உதயகுமாரி - **உதவிப்பொது முகாமையாளர்** - தென் மாகாணம்

சிறுவர்கள் தான் எதிர்காலத்தை உருவாக்குபவர்கள்

நாம் எமது வருங்கால சந்ததியினரை சரியாக வழிகாட்டுவதற்கும் வளர்த்தெடுப்பதற்கும் உற்சாகப்படுத்துவதற்கும் எமது அர்ப்பனிப்பை வழங்குகிறோம்

நாம் எமது இந்த நடடிக்கைகளின் மூலம் எமது தேசத்தை கட்டியெழுப்புவதற்கும் மாற்றத்தை உருவாக்கவும் முடியுமென்று திடமாக நம்புகிறோம்

பெறுமதி உருவாக்கத்திற்கான அணுகுமுறை

பெறுமதி உருவாக்கத்தின் மாதிரி

மூலதன உள்ளீடுகள்

நிதி மூலதனம்

பங்காளர்கள் நிதியங்கள்: ரூ. 121.4 பில்லியன்
வாடிக்கையாளர் வைப்புக்கள்: ரூ. 1.8 ட்ரில்லியன்
படுகடன்கள்: ரூ. 350 பில்லியன்

பக்கம் 137

உற்பத்தி மூலதனம்

வாடிக்கையாளர் தொடர்பு நிலையங்கள்: 1721
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்
ரூ. 24.2 பில்லியன்
நவீன உட்கட்டமைப்பு
ரூ. 2.0 பில்லியன்

பக்கம் 142

மனிதவள மூலதனம்

ஊழியர்கள்: 8,724
பெண் பிரதிநிதித்துவ விகிதம்: 60%
10 வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ள ஊழியர்கள் எண்ணிக்கை: 2,860

பக்கம் 147

புலமை மூலதனம்

BoC தர அடையாளம்
ரூ. 42.9 பில்லியன்
வெளிப்படுத்தப்படாத அறிவு அமைப்புகளும் செயற்பாடுகளும்

பக்கம் 156

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

13.4 மில்லியன் வாடிக்கையாளர்கள்
ஆழ்ந்த சமூகத் தொடர்புகள்
850 க்கும் மேற்பட்ட எழுத்தாண்மைத் தொடர்புள்ள வியாபாரப் பங்காளர்கள்

பக்கம் 160

இயற்கை மூலதனம்

மின் நுகர்வு: 21,134.6 MWh
நீர்ப் பாவனை: 501,229.3 m^3s
எரிபொருள் நுகர்வு: 732,101.1 லீற்றர்

பக்கம் 171

பெறுமதி உருவாக்க செயற்பாடுகள்

வியாபார

சில்லறை வங்கித் தொழில் துறை (பக்கம் 126)

கூட்டாண்மை மற்றும் கடல்கடந்த வங்கித் துறை (பக்கம் 131)

தொழிற்பாட்டுச் சூழலில் காணப்படும் போக்குகள் (பக்கம் 52)



இடர் முகாமைத்துவம் (பக்கம் 102)

பெறுமதி உருவாக்க செயற்பாடுகள்

மாறிகள்

சர்வதேச திறைசேரி மற்றும் கடல்கடந்த முதலீடு (பக்கம் 134)

குழுமச் செயற்பாடுகள் (பக்கம் 141)

பங்கீடுபாட்டாளர்மீதான அக்கறை (பக்கம் 50)



கூட்டாண்மை ஆட்சி (பக்கம் 71)

வெளியீடுகள்

வருமானத்தின் ஒரு % ஆக

தேறிய வட்டி வருமானம் (NII)
29.6%

தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்
3.8%

பிற வருமானம்
6.8%

சேதாரக் கட்டணங்கள்
6.8%

தொழிற்பாட்டு செலவுகள்
14.7%

வரிகள்
10%

ஆண்டிற்கான தேறிய இலாபம்
8.8%

விளைவுகள்

பங்குரிமையாளர்கள்/ நிதி மூலதன வழங்குநர்கள்

பங்கிலாபங்கள்: ரூ. 4.8 பில்லியன்
வரிப் பங்களிப்பு: ரூ. 19.3 பில்லியன்
கொடு கடன்களுக்குச் செலுத்தப் பட்ட வட்டி: ரூ. 7.1 பில்லியன்

பக்கம் 137

வாடிக்கையாளர்கள்

மொத்த கடன் வழங்கல்கள்: ரூ. 1.5 ட்ரிலியன்
வைப்பாளர்களுக்கு வட்டி: ரூ. 112.1 பில்லியன்
வெளியிட்ட புது உற்பத்திகள்: 03
132 புதிய வாடிக்கையாளர் தொடு புள்ளிகளால் மேம்படுத்தப்பட்ட சேவை விநியோகம்
வாடிக்கையாளர் அறிவூட்டலுக்கான முதலீடு ரூ. 21.9 மில்லியன்

பக்கம் 137 மற்றும் 160

ஊழியர்கள்

ஊழியர்க்கான மொத்தக் கொடுப்பனவு: ரூ. 18.9 பில்லியன்
பயிற்சிக்காக முதலீடு செய்த தொகை: ரூ. 338.0 மில்லியன்
பதவி உயர்வுகள்: 174
வைத்திருத்தல் விகிதம்: 98%

பக்கம் 147

வியாபார பங்காளர்கள்

வழங்குநர்களுக்கு உருவாக்கப்பட்ட பெறுமதி:
ரூ. 6.7 பில்லியன்

பக்கம் 167

சமூகம்

சமூக அபிவிருத்தியில் முதலீடு: ரூ. 30.4 மில்லியன்

சமூகத்திற்குச் சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி:
ரூ. 16,433 மில்லியன்

பக்கம் 67மற்றும் 160

சுற்றாடல் தாக்கங்கள்

காகிதப் பாவனையில் மீள் உற்பத்தி
7 மில்லியன் A 4 தாள்கள்
கரியமில வாயு வெளியிடுகை:
13,255.6 தொன் (CO2 க்குச் சமன்)

பக்கம் 171

பங்குதாரர் ஈடுபாடு

இலங்கை வங்கியின் அளவு அதன் பரந்த விரிவான சேவைகள் அதன் தொழிற்பாடுகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு நோக்குகையில் அதன் கணிசமான பங்கீட்டுப்பாட்டாளர்களது மாறுப்பட்ட எதிரபார்ப்புகளை காத்திரமாக கண்டறிந்து அவற்றிற்கு பதிலளிப்பது முக்கியமாகும். வங்கியின் தீர்மானங்களின் காரணமாக அதிகமாக பாதிப்படையக்கூடிய பங்கீட்டுப்பாட்டாளர்களை இனம் கண்டு அவர்களுக்கு உகந்த விடயங்களை மேற்கொண்டு வருவதுடன் வங்கியின் பெறுமதி உருவாக்கத்திற்கு மிகவும் முக்கியமான பங்களிப்புகளை வழங்கக்கூடியவர்களாக அவர்கள் மாறுகிறார்கள். பல்வேறு விதமான முறைசார்ந்த மற்றும் முறை சாராத தளங்கள் மூலமாக இத்தகைய ஈடுபாடுகள் இலகுப்படுத்தப்படுவதுடன் இதன் விளைவாக பெறப்பட்ட பின்னூட்டல்களானது எமது பெருநிறுவன திட்டமிடல் செயன்முறையில் முக்கிய உள்ளீடுகளாக அமைகின்றன.



	ஊழியர்கள்	வாடிக்கையாளர்கள்
யார் அவர்கள்	இலங்கை வங்கிக் குழுவானது நாடளாவிய ரீதியில் 8,724 ஊழியர்களை கொண்டுள்ளது. இதன் சராசரி சேவை நீளமானது 9 வருடங்களுக்கு மேற்பட்டதாகும்.	நாடளாவிய ரீதியில் 13.4 மில்லியன் வாடிக்கையாளர்களுக்கும் அதிகமானவர்களுடைய தேவையை வங்கி நிறைவேற்றுகின்றது.
நாம் எவ்வாறு ஈடுபடுகிறோம்	• ஊழியர் ஈடுபாடு ஆய்வுகள் (காலப்பகுதிக்கு ஏற்றவாறு) • தொழிற்சங்க ஈடுபாடுகள் (அடிக்கடி) • திறந்த கலாசாரம் (நடைபெறுகிறது) • பல்மட்ட பணியாளர் கூட்டங்கள் (அடிக்கடி) • துயரங்களை கையாளும் பொறிமுறை (நடைபெறுகிறது) • தொழில் வாழ்க்கை சமநிலை முன்னெடுப்புகள் • செயலாற்றுகை முகாமைத்துவ முறை (ஆண்டுக்கு 2 முறை) • இடித்துரைப்பு கொள்கை	• கிளை முகாமையார்கள் மற்றும் தொடர்புமுறை முகாமையாளர்கள் மூலமாக ஈடுபாடுகள் (தொடர்கிறது) • வாடிக்கையாளர் திருப்தி ஆய்வுகள் (காலப்பகுதிற்கு ஒருமுறை) • வாடிக்கையாளர் தொலைபேசி இலக்கம் -1975 (365*24) • சந்தைப்படுத்தல், விளம்பரம் செய்தல், ஊக்குவிப்புகள் (அடிக்கடி) • நிதி ரீதியான கற்றல் நிகழ்ச்சித் திட்டங்கள் (அடிக்கடி)
இனம் காணப்பட்ட தலைப்புகள்	• தொழில் மற்றும் திறன் விருத்திற்கான வாய்ப்புகள் • ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் • ஊதியம் மற்றும் பதவி உயர்வு ஆகியவற்றில் சமத்துவ வாய்ப்புகள் • செயலாற்றுகை மைய அமைப்பு ரீதியான கலாசாரம் • பாதுகாப்பான தொழில் சுற்றாடல் • ஓய்வூதிய நலன்கள்	• கொடுக்கல் வாங்கல்களை இலகுவாக சௌகரியமாக மாற்றுதல் • அணுகும் தன்மை • வாடிக்கையாளர் சேவை மற்றும் சேவைத்தன்மை • நிதியை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பளித்தல் • வெளிப்படைத்தன்மைமிக்க விலையிடல் • உள்ளடக்கமான தொடர்பாடல்
எமது பதில்	"இலங்கை வங்கியின் கூட்டாண்மைத் திட்டத்தில் (2018-2020) மக்களது அபிவிருத்தியே அதன் பிரதான தூண் ஆகும் மற்றும் வருடத்திற்கான எமது ஊழியர் பெறுமதி சேர்த்தலானது அவர்களது தொழில்நுட்ப தேர்ச்சிகளையும் மற்றும் மென் திறன்களையும் விருத்தி செய்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதை மையமாக கொண்டு திகழ்கின்றது.	அனுகிப்பெறக்கூடிய வழிமுறைகளை ஏற்படுத்துதல், புத்தாக்க உற்பத்திகள், அதி உன்னதமான வாடிக்கையாளர் சேவை ஆகியவற்றின் மூலம் வாடிக்கையாளரது அனுபங்களை மேம்படுத்துவது தொடர்பிலான உபாய ரீதியான வலியுறுத்தல்களை வங்கி ஏற்படுத்தியுள்ளது.
Strategic relevance	மக்கள் விருத்தி மேலதிக தகவல்களுக்கு 53 ஆம் பக்கத்தைப் பார்க்கவும்	வாடிக்கையாளர் மையம் பல்வழிமுறை உபாயம் டிஜிடல் மயப்படுத்தல் மேலதிக தகவல்களுக்கு பக்கம் 160 -166 பார்க்கவும்

அரசாங்கம் மற்றும் ஒழுங்குபடுத்துனர்	முதலீட்டாளர்கள்	வியாபார பங்காளர்கள்	சமுதாயங்கள்
இலங்கை வங்கியின் ஒரே ஒரு பங்குதாரர் இலங்கை அரசாங்கமாகும். அதேவேளை ஆரம்ப ஒழுங்கமைப்பாளராக இலங்கை மத்திய வங்கி திகழ்கிறது.	எமது தொகுதிக்கடனில் முதலீடுகளை மேற்கொள்கின்ற தரப்பினர்களே வங்கியின் அடிப்படை முதலீட்டாளர்களாகும்.	எமது பெறுமதி உருவாக்கல் செயன்முறைக்கு ஒட்டுமொத்த பெறுமதி சங்கிலியில் உள்ள விரிவான வலையமைப்புடன் கூடிய வியாபார பங்காளர்களினால் உதவிகள் வழங்கப்படுகின்றன.	புவியியல் ரீதியாக வங்கியானது பரந்தளவில் காணப்படுவதன் காரணமாக நாடளாவியரீதியில் வாழ்கின்ற சமூகங்கள் மத்தியில் அர்தபூர்வமான தொடர்பு முறைகளை வளர்த்தெடுக்க முடிந்தது.
• செயலாற்றுகை மற்றும் இணக்கப்பாட்டுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றிய கூட்டங்கள் (காலப்பகுதிக்கு ஒருமுறை) • வருடாந்த அறிக்கை (வருடாந்தம்) • ஒழுங்கமைப்பு மற்றும் இணக்கப்பாடு அறிக்கையிடல் (காலப்பகுதிக்கு ஒருமுறை) • தொழிற்துறை சார்ந்த ஒன்றியங்கள் மற்றும் கூட்டங்கள் (அடிக்கடி) • நிதி ரீதிக்கான வெளியீடுகள் (காலாண்டுக்கு ஒருமுறை)	• பாரிய முதலீட்டாளர்களுடன் நேருக்கு நேரான கூட்டங்கள் (காலப்பகுதிக்கு ஒருமுறை) • முதலீட்டாளர் சமர்ப்பணங்கள் மற்றும் வீதிக்காட்சிகள் (காலப்பகுதிக்கு ஒருமுறை) • சந்தை இடைத்தரகர்கள் மூலமான ஈடுபாடு (தொடர்கிறது) • கொழும்பு பங்குச்சந்தை ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப இணக்கப்பாட்டு அறிக்கையிடல் (காலாண்டுக்கு ஒருமுறை)	• எழுத்து மூல தொடர்பாடல் (அடிக்கடி) • முறையான கூட்டங்கள் (அடிக்கடி) • விலைமனுக்கோரல் செயன்முறை (காலப்பகுதி) • நிதிக்கூற்றகள் மற்றும் வருடாந்த அறிக்கைகள் தொடர்பான காலாண்டு வெளியீடுகள்	• கிளைகள் மூலமான ஈடுபாடுகள் (தொடர்கிறது) • கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு செயற்பாடுகள் மற்றும் அனுசரனைகள் (அடிக்கடி) • ஊடக செய்திகள் மற்றும் ஊடக பிரசாரங்கள் (அடிக்கடி)
• நிதித்துறையில் நம்பிக்கையைப் பேணல். • இலங்கை அரசாங்கத்தின் நிதியிடல் தேவைகளை பூரணப்படுத்துதல். • தேசிய அபிவிருத்தி தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்ப வங்கியின் உபாயமுறை திட்டங்களை சீர்செய்தல். • உறுதியான ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவ செயன்முறைகள் • நிதி ரீதியான உள்ளடக்கத்திற்கு உதவுதல்.	• ஊகிக்கப்பட்ட இடர்களுக்கு ஏற்ப இலாபத்தை ஈடுசெய்தல் • நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்ப தெளிவு • வங்கியின் செயலாற்றுகை மற்றும் தோற்றப்பாடு தொடர்பில் வெளிப்படை தன்மை மிக்க மற்றும் உரிய நேர அறிக்கையிடல்	• கொடுக்கல் வாங்கல்களை இலகுவாக்குதல் மற்றும் வெளிப்படை தன்மை மிக்க விலையிடல், நியதிகள், நிபந்தனைகள் • உரிய நேர கொடுப்பனவுகள் • பாதுகாப்பான எதிர்வுக்கூறக்கூடிய கேள்விகள்	• சமுதாய அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கான பங்களிப்புகள் • பொறுப்பு வாய்ந்த வியாபார செயன்முறைகள் • நிதி ரீதியான உள்ளடக்கம் மற்றும் வலுவூட்டல் • வேலை வாய்ப்புகளை உருவாக்கல்
இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் முக்கிய இலகுபடுத்துனராக இலங்கை வங்கி காணப்படுகின்றது. எமது உபாய ரீதியான அபிலாசைகளாக தேசிய அபிவிருத்திக்கு ஏற்ப அவற்றை சீர்செய்வதாகும்.	எமது முதலீட்டாளர்களுடன் செயலாற்றுகை தொடர்பான சமநிலைமிக்க இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளை பேணுவதுடன் எழக்கூடிய இடர் மற்றும் வாய்ப்புகள், தோற்றப்பாடுகள் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட சமநிலை பேணுதல் மற்றும் தற்போதைய தொடர்பாடல் பற்றி வெளிப்படைத்தன்மையை பேணுகின்றோம்.	சகல வியாபார பங்காளர்களும் சமத்துவமாக நடத்தப்படுகின்றார்கள் மற்றும் பரஸ்பர விருந்தளித்தல் தொடர்புமுறை காணப்படுகின்றன என்பதை உறுதி செய்யும் முகமாக தெளிவான வரையறைக்குள்ளான கொள்கை வரைவு சட்டகங்கள் மற்றும் தொழிற்பாட்டு நடைமுறைகள்	நாம் தொழிற்படுகின்ற சமுதாயத்துடன் நீண்ட கால தொடர்புமுறைகளை நாம் விருத்தி செய்துள்ளோம். மேலும் சமூக அபிவிருத்தி தொடர்பில் பங்களிப்பு செய்யும் முகமாக உபாய ரீதியான மற்றும் அர்த்தபுஸ்டியான அனுகுமுறைகளை ஏற்படுத்தியுள்ளோம்
ஆளுகை மற்றும் நிலைபேறான பொருளாதார பங்களிப்புகள் மேலதிக தகவல்களுக்கு பக்கம் 64 - 67 மற்றும் 71 -88 பார்க்கவும்	ஆளுகை மற்றும் நிலைபேறு தன்மை மேலதிக தகவல்களுக்கு பக்கம் 71 - 88 மற்றும் 58 -62 பார்க்கவும்	வியாபார பங்காளர்கள மேலதிக தகவல்களுக்கு பக்கம் 167 பார்க்கவும்	சமூக மற்றும் தொடர்புமுறை மூலதனம் மேலதிக தகவல்களுக்கு பக்கம் 160 – 170 வரை பார்க்கவும்

உபாய ரீதியான அறிக்கை

சந்தை வாய்ப்புகள் மற்றும் இடர்கள்

பொருளாதார போக்குகள்

2018 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சியில் நவீனமயப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்ட பொழுதிலும் கூட கடந்த வருடங்களில் பேரண்ட பொருளாதாரத்தில் குறிப்பிடக்கூடிய முன்னேற்றங்கள் காணப்பட்டன. குறிப்பாக அரசாங்க நிதிகள், பணவீக்கம் குறைக்கப்பட்டமை, வெளிநாட்டு நாணயமாற்று முகாமைத்துவம் போன்றவற்றை குறிப்பிடலாம்.



தொழில் நுட்பம்

நிதிசார்ந்த சேவைகளின் டிஜிடல் மயப்படுத்தல் வகிபாகத்தை பரவலாக்கியதன் காரணமாக வாடிக்கையாளர்களது ஊடாட்டம் அதிகமாக காணப்பட்டதுடன் சௌகரியம் மற்றும் அனுகிப் பெறல் போன்றன தொடர்பான வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளும் உயர்ந்தன. முன் எப்போதும் இல்லாத அளவிற்கு டிஜிடல் முறைகளை ஏற்று பயன்படுத்துவது அதிகமானது. மேலும் மத்திய, நீண்டகால அடிப்படையில் இதன் பாவனை மென்மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.



Source: Payments Bulletin, CBSL

வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகள்

வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகள் துரிதமாக மாறி வருகின்றன. தனிப்பட்ட சேவைகளுக்கான கேள்வி அதிகரித்து காணப்படுகின்றது. அதேபோல் உடனடியாக அனுகிப்பெறல் மற்றும் சௌகரிகத்திற்கான கேள்விகளும் அதிகரித்துள்ளன. டிஜிடல் தளங்களை விரிவாக பயன்படுத்துவதன் காரணமாக வியாபாரக் குறி தொடர்பான ஆதரவுகள் குறைந்துள்ளன. அத்தோடு மாறிவரும் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகள் மற்றும் தெரிவுகள் ஆகியவற்றிற்கு உடனடியாக காத்திரமாக பதில் அளிக்க முடியாத நிதி நிறுவனங்கள் இடர்களை எதிர்கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளன.



Source: PWC,2017

ஒழுங்குவிதிகள்

நிதி முறைகளின் நிலைபேறு தன்மை மற்றும் காத்திரத் தன்மை ஆகியவற்றை வலுப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி எதிர்பார்த்து செயற்படுவதன் காரணமாக ஒழுங்கமைப்பு வரைவுச்சட்ட நடைமுறைகள் கடுமையாக இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுவதை நிதி நிறுவனங்கள் உணர்ந்துள்ளன.

2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கமைப்பு ரீதியான மாற்றங்களாக லீசிங் வசதிகள் தொடர்பில் வழங்கப்படும் கடன்களுக்கு ஏற்படுத்தப்பட்ட மட்டுப்பாடுகள் மற்றும் வாகன இறக்குமதி தொடர்பில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆகக் கூடிய பண வரையறைகள் ஆகியவற்றை குறிப்பிட முடியும்.

நிலைப்பேறு தன்மை தொடர்பான பரிசீலனைகள்

திகரித்து வரும் சமத்துவமற்ற தன்மைகள், பூகோள அரசியல் பதற்றங்கள், மாறிவரும் அரசியல் தன்மைகள் ஆகியவற்றின் காரணமாக உலகளாவிய ரீதியில் குறிப்பிடத்தக்க சமூக பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. சுற்றாடல் சார்ந்த இடர்களும் இந்நிலமையை மேலும் மோசமாக்கியுள்ளது.

உள்நாட்டு ரீதியாகவும் பூகோள ரீதியாகவும் ஏற்பட்டு வரும் காலநிலை மாற்றங்களும் இவற்றின் தாக்கத்தை அதிகரித்துள்ளன. இத்தகைய சூழமைவுகளில் நிதி நிறுவனங்கள் மற்றும் எம்மை போன்ற வங்கிகள் ஆகியன நிதிகளை பெற்றுக்கொள்ளல், நிதி தொடர்பான கல்வியை முன்னெடுத்தல்,காலநிலை மாற்றங்களுக்கு எதிராக செயற்படல் போன்றவற்றை இலகுபடுத்தல் தொடர்பில் முக்கிய வகிபாகம் வகிக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன.

வாய்ப்புகள்	இடர்கள்	2019 இற்கான உபாய ரீதியான தோற்றப்பாடு
• பொருளாதாரத்தில் உற்பத்தி சார் மேம்பாடுகளை ஏற்படுத்தும் முகமாக கொள்கை ரீதியான அழுத்தங்கள் • முதலீட்டு உள்வருகை தொடர்பில் சர்வதேச அமைப்புகளுடன் அதிகளவிலான தொடர்புகளை ஏற்படுத்தல்.	• கொள்கை ரீதியான நிச்சயமற்ற தன்மை • நாட்டின் கடனில் ரூபாயின் பெறுமதி இறக்கம் ஏற்படுத்திய தாக்கம்.	குறுகிய கால அடிப்படையில் பேரண்டப் பொருளாதார அழுத்தங்கள் காணப்பட்ட பொழுதிலும் நாட்டின் சிறிய மற்றும் மத்திய தர தொழில் முயற்சியாளருக்கு கடன் வழங்களை அதிகரித்ததன் மூலமாக இலங்கை வங்கியானது தொடர்ச்சியாக பொருளாதார செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான தனது பங்களிப்புகளை வழங்கியது. குறிப்பாக என்டர்பிரைஸ் சிறிலங்கா கடன் திட்டத்தின் மூலம் இதனை மேற்கொண்டது.
• எதிர்கால வாடிக்கையாளர்கள் டிஜிடல் மைய தொடர்பு துறைசார்ந்து அதிக கவனம் செலுத்தப்படுவர். • செயல்முறைகளின் வினைத்திறன்களை மேம்படுத்தல் மற்றும் உறுதியான இடர் முகாமைத்துவ செயன்முறைகள் • கிராமிய சமூகங்கள் மத்தியில் டிஜிடல் வங்கிமுறையை பிரசாரப்படுத்துதல்.	• இணைய பாதுகாப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப இடர்கள் • டிஜிடல் காலப்பகுதியின் தரவுகளின் இரகசிய தன்மையை பாதுகாத்தல். • தகவல் தொடர்பாடல் உறுதித்தன்மை மற்றும் தொடர்ச்சி • விற்பனையாளர் மற்றும் மூன்றாம் தரப்பு இடர்கள்	மிலேனிய வாடிக்கையாளர்களை கவர்ந்து அவர்களை எம்முடன் தக்க வைத்துக்கொள்ளும் நோக்கங்களுக்காக டிஜிடல் முறைகளை மேலும் மேம்படுத்துவதற்கான உபாயம் தொடர்பில் அக்கறை செலுத்தப்பட்டதுடன் அதேவேளை வினைத்திறன் மிக்க செயன்முறைகள் மற்றும் வாடிக்கையாளர் அனுபவங்களை மேம்படுத்துவதற்கான விடயங்களும் மேற்கொள்ளப்பட்டன.
• தனிப்பட்ட சேவைகள் தொடர்பில் வாடிக்கையாளர்களது கேள்வி அதிகரித்தது. • டிஜிடல் தளங்களை கோருகின்ற வாடிக்ககையாளர் அதிகரித்தமை	• புதிய வரவு மற்றும் தொழில்நுட்ப அமைப்புகளினால் ஏற்படுகின்ற தொழில்நுட்ப ரீதியான இடையூறுகள் • போட்டித்தன்மை அதிகரித்தல் • வாடிக்கையாளர்களது எதிர்பார்ப்புகள் துரிதமாக மாறிவருவதன் காரணமாக வியாபாரக் குறி ஆதரவு குறைவடைதல்.	வங்கியின் டிஜிடல் செயன்முறைகளை மேலும் வலுப்படுத்துகின்ற அதேவேளை சகல தொடுதிரை சேவைகள் முழுவதும் வாடிக்கையாளர் மைய சேவைகள் வழங்கப்பட்டன.
• மூலதன நிலை மற்றும் கடன் தன்மையை வலுப்படுத்துதல். • வாடிக்கையாளர்கள், கைத்தொழில் துறை, ஏனைய பங்கீட்டுப்பாடாளர்கள் ஆகியோரது நேர்மறையான தாக்கங்கள்	• இணக்கம் தொடர்பான செலவு அதிகரிப்பு • ஒழுங்கமைப்பு சிக்கல்கள் அதிகரிப்பு • மூலதன தேவைப்பாடுகளின் காரணமாக வளர்ச்சிக்கான வாய்ப்புகள் தடைப்பட்டமை	பாசல் III ஆகக் குறைந்த முதலீட்டு தேவைப்பாடுகளுடன் சமன் செய்யக்கூடிய விதத்தில் எமது வளர்ச்சி சார்ந்த அபிலாசைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 2019ஆம் ஆண்டில் இவ்விடயம் தொடர்பில் பிரதான முகாமைத்துவம் கவனம் செலுத்தியது. மூலதனத்தை அதிகரித்தல் தொடர்பான வங்கியின் மட்டுப்பாடுகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது
• பசுமை வியாபாரங்கள், சக்தி வினைதிறன்மிக்க தொழில்நுட்பங்கள் தொடர்பில் அதிக அக்கறை • அனைவரும் நிதியை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை விருத்தி செய்து அதற்கு அரசாங்கம் முன்னுரிமையளித்துள்ளது.	• காலநிலை மாற்றமானது விவசாயத் துறை கடன் கொடுத்தலில் ஏற்படுத்திய தாக்கங்கள் • இலாபத்தில் ஏற்பட்ட குறுகியகால தாக்கம்	பெருநிறுவன உபாயமுறைக்கு நிலைபேறான பரிசீலனைகளை ஒருங்கினைப்பதன் மூலம் வள நுகர்வை குறைப்பதற்கு இலகுப்படுத்துதல். நிலைபேரான அபிவிருத்தி இலக்குகளுடன் பொருந்தக்கூடிய விதத்தில் பெருநிறுவக சமூகப்பொறுப்பு வரைவுச்சட்டகம் சீரசெய்யப்பட்டது. சமூக மற்றும் சுற்றாடல் சார் சோதனை நெறிமுறைகளை ஏற்றுக்கொண்டு மற்றும் அதன் அடிப்படையில் கடன்களை வழங்குதல் மற்றும் பசுமைசார் உற்பத்தி பொருட்களுக்கு கடன்களை வழங்குதல். எமது விரிவான வலையமைப்பு மூலம் அளவிடப்பட்டு நிதி ரீதியான உள்ளடக்கம் விரிவுபடுத்தப்பட்டன.

உபாயரீதியான அறிக்கை

பொருள்சார் விடயங்கள்

ஒருங்கிணைக்கப்பட்ட இந்த அறிக்கையானது வங்கியின் பொருள்சார்ந்த தலைப்புகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. எமது அமைப்பு மற்றும் அதன் பங்கீட்டுப்பாட்டாளர்கள் ஆகியோருக்கு மிகவும் நெருக்கமான விடயங்களை இது பிரதிநிதித்துவம் செய்கின்றது. விரிவான பொருள் சார்ந்த மதிப்பீடுகள் மற்றும் தொழிற்பாட்டு பரப்பில் காணப்படுகின்ற போக்குகளை பரிசீலனை செய்தல், பங்கீட்டுப்பாடாளர் அக்கறைகள் மற்றும் உபாய ரீதியான பெறுமான முன்னுரிமைகள் ஆகியன தொடர்பில் விரிவாக ஆராயப்பட்ட பின்னரே கீழுள்ள தலைப்புகள் பட்டியலிடப்பட்டன. எமது பெருநிறுவன திட்டமிடல் செயன்முறையில் அவதானம், முகாமைத்துவம் சார்ந்த முன்னுரிமைகள், பெருநிறுவன அறிக்கையிடல் ஆகியவற்றை இவை நெறிப்படுத்துகின்றன. எமது அறிக்கையின் பொருத்தப்பாட்டினை மேம்படுத்தும் முகமாக (GRI) பூகோள அறிக்கையிடல் முனைவு ஆல் விதந்துரைக்கப்பட்டதற்கு அப்பால் கைத்தொழிற்துறை மற்றும் வங்கியின் விசேட விடயங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும் முகமாக எமது பொருள்சார்ந்த தலைப்புகளின் நோக்கெல்லையை இவ்வருடம் நாம் விரிவுபடுத்தியுள்ளளோம்.

பொருள்சார்ந்த தலைப்புகளின் நோக்கெல்லை ஆனது GRI, இடர்கள் மற்றும் வாய்ப்புகள் ஆகியவற்றிற்கு அப்பால் விரிவுப்படுத்தப்பட்டது.

பொருள்சார் விடையங்களைத் தீர்மானித்தல்



பொருள் சார் வரைபடம்

பங்கேற்பாளர்கள் குழு	சம்பந்தப்பட்ட பொருள் சார் தலைப்பு	GRI குறிகாட்டி	சூழல் சமூக ஆட்சி
ஊழியர்கள்	1. திறன் முகாமைத்துவம் 2. தொழில்சார் சமாதானம் மற்றும் தொழில் முகாமைத்துவ தொடர்புகள் 3. பல்வகைமை மற்றும் சமத்துவ வாய்ப்புகள்	**GRI 401:** வேலை **GRI 402:** தொழில் முகாமைத்துவ தொடர்புகள் **GRI 403:** தொழில்சார்ந்த சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு **GRI 404:** பயிற்சி மற்றும் கல்வி **GRI 405**: பல்வகைமை மற்றும் சமத்துவ வாய்ப்புகள் **GRI 407:** ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் மற்றும் கூட்டுப் பேரம் பேசல்	வேலை வாய்ப்பு பயிற்சி மற்றும் கல்வி தொழில்சார்ந்த சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொழிற்படை பல்வகைமை மற்றும் சமத்துவ நடத்தை
வாடிக்கையாளர்கள்	4. வாடிக்கையாளர் அனுபவம் 5. வாடிக்கையாளர் அந்தரங்கம் மற்றும் தரவு பாதுகாப்பு 6. பொறுப்பு வாய்ந்த வங்கி நடைமுறைகள்	**GRI 417:** சந்தைப்படுத்தல் மற்றும் சிட்டையிடல் **GRI 418:** வாடிக்கையாளர் அந்தரங்கம்	
அரசாங்கம் / ஒழுங்கமைப்பாளர்கள்	7. நிதி ரீதியான செயலாற்றுகை 8. சமூக பொருளாதார பங்களிப்பு 9. நிதி ரீதியான உள்ளடக்கம் 10. ஆட்சி மற்றும் இணக்கம்	**GRI 201:** பொருளாதார செயலாற்றுகை **GRI 202:** சந்தைப்படுத்தல் வாய்ப்பு **GRI 413:** பிரதேச சமுதயங்கள் **GRI 203:** மறைமுக பொருளாதார தாக்கங்கள் **GRI 419:** சமூக பொருளாதார இணக்கம் **GRI 307:** சுற்றாடல் சார் இணக்கம்	இணக்கம்
வியாபார பங்காளர்கள்	11. பொறுப்பு வாய்ந்த கொள்வனவு 12. இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரானவை 13. தொழில் உரிமைகள் (வெளிச்சேவை/ ஒப்பந்தம்)	**GRI 204:** கொள்வனவு நடைமுறைகள் **GRI 205:** ஊழலுக்கு எதிரானவை **GRI 406:** பாரபட்சம் காட்டாமை **GRI 408:** சிறுவர்களை வேலைக்கமர்த்தல் **GRI 409:** பலவந்த அல்லது கட்டாயத் தொழில்	
ஏனைய விடயங்கள்	14. டிஜிடல் மயப்படுத்தல் மற்றும் தொழில்நுட்பம் 15. சுற்றாடல் சார் விடயங்கள் 16. வியாபாரக் குறி நற்பெயர்	**GRI 302:** சக்தி **GRI 305:** கழிவு வெளியேற்றம்	சக்தி தீவிரத்தன்மை நேரடி மற்றும் மறைமுக கழிவு வெளியேற்றம்.

- பொருள் சார்ந்த தலைப்புகள் தொடர்பான சம்பந்தப்பட்ட GRI விடயங்களை அறிந்து கொள்வதற்கு பக்கம் 451 முதல் 456 வரை பார்க்கவும்

உபாயரீதியான அறிக்கை

பொருள்சார் விடயங்கள் (2018-2020)

தொழில்நுட்பம் , வாடிக்கையாளர் நவீனத்தன்மை, போட்டிகளின் தீவிரத்தன்மை, ஒழுங்கமைப்பு ரீதியான தேவைப்பாடுகள் ஆகியவற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக எமது வங்கிகளுக்கு உறுதியான உபாயமுறைகளை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிரப்பந்தம் ஏற்பட்டது. உபாய ரீதியான உருவாக்கம் தொடர்பில் இலங்கை வங்கியானது முறையான முழுமையை நோக்கிய அனுகுமுறையொன்றை ஏற்றுக்கொண்டுள்ளது. எமது அபிலாசைகளை அடையும் முகமாக 3 வருடங்களுக்கான எமது பெருநிறுவன திட்டத்தை தெளிவாக ஆராய்ந்து உபாய ரீதியான முன்னுரிமைகள் மற்றும் செயல்திட்டங்கள் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. தொழிற்பாட்டு சூழமைவுகளில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு ஏற்ப இவை பொருத்தப்பாடுமிக்கதாக சாத்தியப்பாடு உள்ளனவையாக திகழ்கின்றன என்பதை உறுதி செய்து கொள்ளும் முகமாக இந்த திட்டமானது முறையான மீளாய்வு செய்யப்படுகின்றது.

2018 -2020 இற்கான எமது பெருநிறுவன திட்டமானது " எதிர்காலத்திற்காக வங்கியை வரையறை செய்து சீர்செய்தல்" என்ற தொனிப்பொருளை மையமாகக் கொண்டு காணப்படுகின்றது. மேலும் பல்வேறு விடயங்கள் இதில் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன. 2018 இற்கான இந்த உபாய ரீதியான முன்னுரிமை தொடர்பில் வங்கியின் செயலாற்றுகைகள் பற்றிய அதி உயர்வான மேலோட்ட பார்வையை கீழுள்ள பிரிவு வழங்குகின்றது.

வாடிக்கையாளர் சேவை மற்றும் தெளிவாக அறிதல்

சகல வாடிக்கையாளருக்கும் சீரான வங்கி அனுபவத்தை வழங்கும் முகமாக சகல தொடுதிரை நிலையங்கள் மூலமாக இடையறா சேவைகளை வழங்குகின்ற அதேவேளை சேவைத்தராதரங்கள், தன்மை மட்டங்கள் ஆகியவற்றை தரம் உயர்த்துவதை உள்ளடக்கியதாக பிரதான நோக்கங்கள் காணப்படுகின்றன.

2018இல் முன்னேற்றம்

- சேவை மட்டங்களில் காணப்படும் குறைபாடுகளை இனம் காணும் முகமாக ஒப்பீட்டு சேவை மட்டங்கள் தொடர்பான வாடிக்கையாளர் திருப்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
- ஸ்மாட் வலயங்கள் மற்றும் ஏனைய டிஜிடல் உற்பத்திகள் ஆகியவற்றை தாபிப்பதன் மூலம் வாடிக்கையாளரது டிஜிடல் பாவனையை வலுப்படுத்தல்.

பக்கம் 165

கடனின் தன்மை மற்றும் கலாசாரம் ஆகியவற்றை மேம்படுத்துதல்

வாடிக்கையாளர் தொடர்புமுறையை பேணுகின்ற அதேவேளை சகல வியாபார அம்சங்களிலும் மூலதன பட்டியலில் பாதுகாப்பது தொடர்பில் அதிக அக்கறை செலுத்தப்பட்டது. நலிவடைந்த பேரண்ட பொருளாதார நிலைமைகள் மற்றும் SLFRS 9தேவைப்பாடுகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2018 ஆம் ஆண்டு கடனின் தன்மையை பேணுவது மிக முக்கியமாகும்.

- கடன் மதிப்பீடு தொடர்பில் திறன் மற்றும் அறிவு ஆகியவற்றை மேம்படுத்துதல்.
- கடன் கொள்கை வழிக்காட்டிகளை வலுப்படுத்துதல்.
- நாடளாவிய ரீதியில் அளவீடு முன்னெடுப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது.

பக்கம் 109

புவியியல் ரீதியாக அனுகலை விரிவுப்படுத்தல்

வாடிக்கையாளர் அனுகிப் பெற்றுக்கொள்வதை மேம்படுத்தும் முகமாக புத்தாக்க ரீதியான வியாபார மாதிரிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கும் செயன்முறைகளை மேற்கொள்வதற்கும் பல் ஊடக முறையிலான விநியோக உபாய முறைகளை பேணுவதற்கும் வங்கி எதிர்பார்கின்றது.

- BoC DIGI நிலையங்கள் உள்ளடங்களாக பல்வேறு வகையான டிஜிடல் உற்பத்திகள் ஆரம்பிக்கப்பட்டன.

  ஸ்மாட் வலையமைப்பு சேவைகள் விரிவாக்கப்பட்டன.
- இணைய வங்கித்தளங்கள் மீள் ஆரம்பிக்கப்பட்டு தரமுயர்த்தப்பட்டது
- வாகனங்களில் இயங்குகின்ற வங்கிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.
- வெஸ்டன் யூனியன் மற்றும் ஏனைய பணம் அனுப்பும் முகவர்கள் உடனான தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டன

பக்கம்142

தொழில்நுட்பம் மற்றும் இணைய பாதுகாப்பு

நிதிச்சேவைகளில் காணப்படுகின்ற டிஜிடல் புரட்சியானது வாடிக்கையாளர் அனுபவங்களை மாற்றுவதற்கும் உள்ளக செயன்முறைகளை மேம்படுத்துவதற்கும் பல்வேறு விதமான வாய்ப்புகளை வழங்கியுள்ளது. இணையம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த இடர்கள் பொருத்தமான முறையில் முறையாக முகாமைத்தும் செய்யப்படுகின்றன என்பதை உறுதி செய்துக்கொள்கின்ற அதே வேளை இலங்கை வங்கியானது இளம் வாடிக்கையாளர்களது அதிகரித்து வரும் நவீன தேவைப்பாடுகளை கருத்திற்கொண்டு அவர்களுக்கு சேவை ஆற்றுவதற்கு இலங்கை வங்கி எதிர்பார்க்கின்றது.

- சுய சேவை முறைகள் விரிவாக்கப்பட்டன
- இணையம் மூலமாக கடன் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளுதல்
- வலையமைப்பு உட்கட்டமைப்புகள் மேம்படுத்தல்
- இணைய பாதுகாப்பு வரைவுச்சட்டகம் வலுப்படுத்தப்பட்டது.

பக்கம் 164

செயன்முறைகளை சீர்செய்தல் மற்றும் புத்தாக்கம்

செயன்முறைகள் மற்றும் முறைகள் தொடர்பான சிக்கல்களை இனம் கண்டு வினைத்திறன் மற்றும் பயனுறுதித்தன்மை ஆகியவற்றை அதிகரிக்கக்கூடிய பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்வது வங்கியின் 3 வருட உபாயமுறையில் முக்கிய அம்சமாகும்.

2018இல் முன்னேற்றம்

- ஆவண முகாமைத்துவமுறை மூலம் தொழில் சார்ந்த முக்கிய விடயங்கள் தானியங்கி முறைக்கு உள்ளாக்கப்பட்டமை.
- சகல மாகாணங்களிலும் வீடியோ மாநாடு தொழில்நுட்பத்தை பின்பற்றியமை.
- தானியங்கி வாடிக்கையாளர் முறைப்பாடுகளை கையாளும் பொறிமுறை.

பக்கம் 145

மக்கள் சார் அபிவிருத்தி

எதிர்கால வங்கி சவால்களை சரியான மனப்பாங்குகளுடன் சரியான திறன்களுடன் முகம் கொடுக்கக்கூடிய நன்கு தேர்ச்சிபெற்ற பல்வேறு வகையான திறன்களை தம்மகத்தே கொண்ட வங்கியாளர்களை அணிதிரட்டி சேவைகளை வழங்குவதே மக்கள் அபிவிருத்தி தொடர்பில் எமது பிரதான கவனமாகும். எமது மக்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது பிரதானமாக 6 விடயங்களை கருத்திற்கொண்டு செயற்படுகின்றது.

- கல்வி
- பயிற்சி (தற்போதைய தொழில் வகிபாகம், தனிப்பட்ட அபிவிருத்தி, சேவை வழங்குதல் மற்றும் விநியோகம்)
- பல்துறைகளில் அனுபவங்களை வழங்குதல்.
- விசேட மற்றும் தொடர்ச்சியான தொழில் வான்மை விருத்தி
- மனப்பாங்கு, திசைமுகப்படுத்தல், அமைப்பு ரீதியான கலாசாரம்
- உதவி உட்கட்மைப்பு வசதிகள்

- 11,768 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வழங்கப்பட்டன.
- முக்கிய முகாமைத்துவ அங்கத்தவர்கள் இற்காக PIM பங்கான்மையுடன் முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- PMS மூலமாக 97.7% ஊழியர்களுக்காக செயலாற்றுகை பின்னூட்டல்கள் வழங்கப்பட்டது.

பக்கம் 153

நிலைபேறான வியாபாரம்

வருடத்தின் பொழுது எமது நிலைபேறான முன்னெடுப்புகள் மூன்று படிநிலைகளின் சகல அம்சங்களிலும் பரவிக்காணப்பட்டது. எமது சகல விதமான உபாயமுறைகளானது எமது சுற்றாடல், சமூக செயலாற்றுகை ஆகியவற்றை மேம்படுத்துகின்ற அதேவேளை அதி உச்ச இலாபத்தை உருவாக்குவதை நோக்கி நெறிப்படுத்தப்பட்டிருந்தது.

- கொள்கை வரைவுச்சட்டகங்கள் மீளாய்வு செய்யப்பட்டு மீள் பார்வைக்கு உட்படுத்தப்பட்டன.
- வங்கியின் அபிவிருத்திப் பட்டியலுக்கென சுற்றாடல் மற்றும் சோதனை அறிதல் முறைகளை நடைமுறைப்படுத்தியமை.
- 27 கிளைகளுக்கு சூரிய மின்சாரம் வழங்கியமை.
- ISO 14064-1 ஏற்ப பச்சை வீட்டு வாயு வெளியீடு மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தமை..

பக்கம் 60

ஆட்சி மற்றும் ஒழுக்க நெறிமுறை

வளர்ந்து வரும் பூகோள சிறப்பான நடைமுறைகளுக்கு ஏற்ற வகையில் தனது ஆட்சி சார் நடைமுறைகளை இலங்கை வங்கி தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது.

- புதிய கொள்கை வரைவுச்சட்டகங்கள் மீளாய்வு செய்யப்பட்டு மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்டன.
- புதிய சபை உப குழுக்கள் - ICT குழு.
- ஒழுங்கமைப்பாளர்களினால் விதிக்கப்பட்ட புதிய ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப நடத்தல்.

பக்கம் 71

வியாபாரக்குறி அபிவிருத்தி

இலங்கையின் முதல்தர வங்கியென தொடர்ச்சியாக தரப்படுத்தப்பட்ட எமது வங்கியின் பெயர் நாமமே போட்டிக்கான பிரதான மூல பலமாகும். தனித்துவமான பங்கீட்டுப்பாட்டாளர்கள் திட்டங்கள், இலக்குடைய சந்தைப்படுத்தல் மற்றும் புத்தாக்க ரீதியான வழங்குதல்கள் ஆகியவற்றின் மூலம் தொடர்ச்சியாக மேம்பட்ட பெயர்நாம அங்கீகரித்தலை நாம் பேணுவோம்.

- நம்பகத்தகுந்த இடர் முகாமைத்துவத்திற்காக செயல் திட்டமொன்றை முறைசார்முறையில் கொண்டு வரல்.
- பல்வேறு விதமாக வாடிக்கையாளர் ஈடுபாட்டு முன்னெடுப்புகள்

பக்கம் 157

இலங்கை வங்கியில் பேண்தகுநிலை

அணுகுமுறையும் ஆட்சியும்

அண்மைக் காலங்களில் இலங்கை வங்கியானது, கொள்கையொன்றை முறைப்படுத்தி, தனது பேண்தகுநிலை மூலோபாயத்தைத் தனது கூட்டாண்மைத் திட்டத்துடன் ஒருங்கிணைப்பதன்மூலம், பேண்தகுநிலைக்கான தனது அணுகுமுறையை மேம்படுத்த முனைந்துள்ளது. வங்கியின் பேண்தகுநிலைக் கொள்கையானது, ஐக்கிய நாடுகளின் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளுடன் (SDG) ஒரு நிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன், கூட்டாண்மை சமூகப் பொறுப்புக்கள் (CSR) கருத்திட்டத் தெரிவு மற்றும் அதன் செயற்படுத்தல் தொடர்பான வழிகாட்டலையும் வழங்குகிறது. தெளிவான செயற்றிட்டங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட பொறுப்புகள் என்பன அனைத்துப் 17 இலக்குகளும் மைய வியாபாரத்தினாலோ அல்லது மனிதநேயங்கொண்ட கூட்டாண்மைக் கருத்திட்டங்களாலோ உள்ளடக்கப்படுவதை உறுதி செய்கின்றன.

பேண்தகு வாணிபத்திற்கான முகாமைத்துவ அணுகுமுறை



இலங்கை வங்கியின் பேண்தகுநிலைகொண்ட வியாபார நடவடிக்கைக்கான முகாமைத்துவ அணுகுமுறையானது கூட்டாண்மைப் பெறுமதிகள், பங்கீடுபாட்டாளர் ஈடுபாடு, தாக்கங்களின் இனங்காணல், இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள், கொள்கையின் உள்ளடக்கம், முகாமைத்துவம் மற்றும் ஆட்சி மற்றும் முகாமைத்துவம் மற்றும் வெளிப்படுத்துகை என்பவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

கூட்டாண்மைப் பெறுமதிகள் என்பன பொது மக்களுக்கும் சமூகத்திற்கும் சேவையாற்றும் வங்கியின் தொழிற்பாட்டுத் தத்துவத்தைக் குறிக்கிறது. பங்கீடுபாட்டாளரின் ஈடுபாடானது, தொழிற்பாட்டுச் சுற்றாடலில் எவ்வாறு வங்கி தன் பங்கீடுபாட்டாளருடன் ஈடுபடுகிறது என்பதைத் தீர்மானிக்கிறது. தாக்கங்கள், இடர்கள் மற்றும் வாய்ப்புக்களை இனங்காண்பதானது, வங்கியால் எதிர்கொள்ளப்படும் இடர்கள் மற்றும் வாய்ப்புக்களின் பகுப்பாய்வுக்கும் அவ்விடர்களைத் தணிப்பதற்கும் மிகவும் தீர்வுகட்டமானதாகும். நாட்டின் ஒரு கூட்டாண்மைக் குடிமகன் என்ற வகையில், வகைப்பொறுப்பினைச் செயற்படுத்துவதற்கான வங்கியின் அர்ப்பணப்பபை நிலைநாட்டும் செயன்முறையினை கொள்கை வழங்குகிறது.

பேண்தகுநிலைக் செயற்குழு

பொது முகாமையாளரின் தலைமையின் கீழானதும், பல பிரதிப் பொது முகாமை யாளர்களால் பிரதிநிதித்துவம் செய்யப் படுவதும், அர்ப்பணிப்புடையதுமான ஒரு பேண்தகுநிலைக் குழுவானது வங்கியின் பேண்தகுநிலைக்கான மூலோபாயத்தை முன்னெடுத்துச்செல்லப் பொறுப்பாய் இருக்கிறது. குறித்த ஆண்டின்போது பிரதம இடர் அலுவலர் மற்றும் கூட்டாண்மை மற்றும் கரைக்கப்பாலான வங்கித் தொழிலுக்கான பிரதிப் பொது முகாமையாளர் என்போரை உட்சேர்த்து, வங்கியானது குழுவின் பிரதிநிதித் துவத்தை விரிவாக்கியது. குழுவானது காலாண்டிற்கொரு தடவை என்ற அடிப்படையில் கூடி, அதன் முன்னேற்றம் குறித்து சபைக்கு அறிக்கையிடுகிறது. அத்துடன், பேண்தகுநிலைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்குப் பொறுப்பாய் இருக்கின்ற, அர்ப்பணிப்பு சிந்தைகொண்ட பேண்தகுநிலை அலகு ஒன்றையும் வங்கி கொண்டுள்ளது. குறித்த ஆண்டில் குழுவிற்கு மேலும் ஆட்திரட்டல் செய்ததன்மூலம் பேண்தகுநிலை அலகை நாம் வலுப்படுத்தினோம்.

முன்னெச்சரிக்கைக் கோட்பாடு

சுற்றுப்புற மற்றும் சமூகப் பிரமாணங்களுக்கான உரிய அவதானத்துடன், வங்கியானது தனது மூலோபாய வணிகத் தீர்மானங்கள்மட்டில் ஒரு முன்னெச்சரிக்கை அணுகுமுறையைக் கடைப்பிடிக்கிறது.

புதிய முயற்சிகளில்/முதலீடுகளில் ஈடுபடு முன்னர், உறுதியான இடர் முகாமைத்துவச் செயன்முறைகள்மூலம் இயல்திறன்கொண்ட சுற்றுப்புற மற்றும் சமூக இடர்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

2018 இல் வளர்ச்சி

குறித்த ஆண்டில் தொடங்கப்பட்ட பேண்தகு நிலைக்குரிய முக்கிய முன்னெடுப்புக்கள் கீழே பட்டியலிடப்படுகின்றன. இவ்வறிக்கையின் தொடர்ந்துவரும் பிரிவுகளில் உரிய அத்தியாயங்களில் விரிவான தகவலைக் காணலாம்

- சூழல் ரீதியாகவும், சமூகரீதியாகவும், பொருளாதாரரீதியாகவும் பேண்தகுநிலையில் இருப்பதை நோக்கிய தமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்த ஊழியர்களை ஊக்குவிக்கும் ஊழியர் பேண்தகுநிலை ஒப்பந்தம் ஒன்று தொடங்கப்பட்டது.
- வங்கிப் பங்குத் திரட்டின் அபிவிருத்திக்கான சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ முறைமை (ESMS) தெரிவுப் பிரமாணம் செயற்படுத்தப்பட்டது.
- கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (CSR) மதிப்பீட்டு மாதிரி மீளாய்வு செய்யப்பட்டது
- எட்டு புதிய கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (CSR) கருத்திட்டங்கள் மாகாணங்களால் தொடங்கப்பட்டன.
- பச்சசை வீட்டு வாயு மதிப்பீட்டுச் செயன்முறைபற்றி கிளை நிருவாகப் பணியாட்டொகுதியினர்க்குப் பயிற்சி வழங்கப்பட்டது.



இதற்குக் கௌரவமளிப்பதில் உங்கள் சக நாட்டவர்களுக்கு குறிப்பாகச் சிறுவர்களுக்கு முன்மாதிரியாய் இருங்கள்

இலங்கை வங்கியில் பேண்தகு நிலை

SUSTAINABLE DEVELOPMENT GOALS

பேண்தகு இலக்குகள் மட்டில் எமது அர்ப்பணிப்பு

வறுமையை வேரோடழித்து, பூமியைப் பாதுகாத்து, சுபீட்சத்தை அடைவதற்கான உலகளாவிய முயற்சிகளை அணிதிரட்டியவாறு, அபிவிருத்தி முன்னுரிமைகள்பற்றிய உலகளாவிய உடன்பாட்டை பேண்தகு இலக்குகள் வழங்குகின்றன. 17 குறிக்கோள்கள், 169 இலக்குகள் மற்றும் 244 காட்டிகள் என்பன இன்றைய உலகினால் எதிர்கொள்ளப்படுகின்ற இடரார்ந்த பொருளாதார, சமூக மற்றும் சுற்றுப்புறப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நிலைநாட்டப்பட்ட வழிமுறைகளையும் நோக்கங்களையும் வழங்குகின்றன. இலங்கையின் மிகப்பெரிய மற்றும் அதிகம் தாக்கம் செலுத்துகின்ற வங்கி என்ற வகையில் நாட்டின் "பேண்தகு இலக்குகளின்" எய்துகைவழியாக குறிப்பிடத்தக்க பங்களிப்பை எம்மால் வழங்கமுடியுமென நம்புகிறோம்.

	இலங்கைச் சூழமைவு	எமது பங்களிப்பு
1 NO POVERTY	வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சனத்தொகை **3.8%** சமூக பாதுகாப்பு முறைமைகளுக்குள் வரும் சனத்தொகை **34%**	இலங்கை வங்கியின் மித்துரு நுண் நிதியிடற் திட்டமானது பண வசதியற்ற அடிமட்டத்தில் உள்ளவர்களுக்கு வலுவூட்டுவதை நோக்காகக் கொண்டுள்ளது. • மித்துரு திட்டத்தின்கீழான பண வழங்கல்: ரூ.189.0 மில்லியன் • புதிதாக அமைக்கப்பட்ட குழுக்கள்: **209**
2 ZERO HUNGER	பாதுகாப்பற்ற உணவுமுறை கொண்ட சனத்தொகை **9.2%** 5 வயதிற்குக் கீழ்ப்பட்ட வளர்ச்சி குன்றிய சிறுவர்: **17.3%**	"ரன் அஸ்வனு" மற்றும் "கொவி நவோத" போன்ற விவசாயப் பிரிவை இலக்காகக் கொண்ட கடன் திட்டங்கள் மூலம் இலங்கை வங்கியானது நாட்டின் உணவுப் பாதுகாப்பிற்குப் பங்களிப்புச் செய்கிறது • விவசாய மற்றும் மீன்படித்துறைக்கு விசேட பிரிவு: ரூ. **97.7** பில்லியன் • 2018 இல் வங்கியால் வழங்கப்பட்ட ரன் அஸ்வனு, கொவி நவோத கடன்களின் எண்ணிக்கை: **1,840** • நெற் சந்தைப்படுத்தல் சபைக்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன
3 GOOD HEALTH AND WELL-BEING	தாய் இறப்பு வீதம்: 100,000 பிறப்புகளுக்கு **26.8** வீதிப் போக்குவரத்துக் காயங்கள் காரணமான இறப்புகள **13.4** 100,000 சனத் தொகைக்கு	• சுகாதாரம்பற்றிய CSR செலவினம் ரூ. **3.0** மில்லியன • ஊழியர்க்கான மருத்துவ உதவித் திட்டம்
4 QUALITY EDUCATION	ஒழுங்குமுறைக் கற்றலில் பங்கேற்பு வீதம்: **97.7%** ICT திறமை கொண்ட இளைஞர் மற்றும் வளர்ந்தோர்: **27.6%**	பயிற்சிக்கான வாய்ப்புக்களை வழங்குவது எமது ஊழியர் பெறுமதி முன்மொழிவின் ஒரு பிரதான பாகமாகும். கல்வி முனைப்புடனான அநேக CSR முன்னெடுப்புக்களையும் நாம் நடைமுறை அடிப்படையில் நடாத்திவருகறோம். • ஊழியர் பயிற்சியில் முதலீடு: ரூ. **338.0** மில்லியன். • 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பயனாளிகள்: **2,000** • A/L உயர் சாதனையாளர்க்கான 18+ புலமைப்பரிசில்களின பயனாளிகள் : **562** • கல்விக்கான CSR செலவுகள்: ரூ.**89.2** மில்லியன்
5 GENDER EQUALITY	முகாமைத்துவ பதவிகளில் பெண்களின் விகிதாசாரம் **28%** 18 வயதிற்குமுன் திருமணமாகும் பெண்கள் **9.8%**	சம வாய்ப்புத் தரும் ஒரு தொழில்தருநராக நாம் இருப்பதால், தெரிவு செய்தலிலோ, வேதனத்தையோ அல்லது பதவி உயர்வுகளையோ தீர்மானிப்பதில் பால் நிலை அடிப்படையிலான சுரண்டலை நாம் அனுமதிப்பதில்லை • முகாமைத்துவத் தரத்தில் பெண் பிரதிநிதித்துவம்: **58%** மொத்தத்தில்: **60%** • தாய்மார் விடுப்பின் பின் பணிக்குத் திரும்பியோர்: **358**

	இலங்கைச் சூழமைவு	எமது பங்களிப்பு
6 CLEAN WATER AND SANITATION	பாதுகாப்பாக முகாமை செய்யப்பட்ட நீரைப் பயன் படுத்தும் சனத் தொகை **81%**	தூய நீரைப் பெற்றுக் கொடுப்பதில் கருவிகளாக விளங்குகின்ற தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் மகாவலி அதிகார சபை ஆகியவற்றின் கருத் திட்டங்களுக்கு நாம் பிரதான கடன் வழங்குநராக விளங்குகின்றோம். • குறித்த ஆண்டில் நீர்க் கருத்திட்டங்களுக்கு வழங்கிய நிதி : ரூ. **4.7** பில்லியன் • நீர்க் கருத்திட்டங்கள்மீதான CSR செலவினம்: ரூ. **4.0** மில்லியன்
7 AFFORDABLE AND CLEAN ENERGY	மின் வசதிகொண்ட சனத்தொகை: **87%**	எண்ணற்ற புதுப்பிக்கத்தக்க மின் வலுக் கருத்திட்டங்களுக்கு, குறிப்பாக, குறு நீரியல், சூரிய மற்றும் வளி மின்வலுக் கருத்திட்டங்களுக்கான நிதியை நாம் வழங்குகிறோம். புகை படிம எரிபொருளில் தங்கியிருக்கும் நிலையைக் குறைக்கும் அதேவேளை, தற்போதைய உள்ளக சூரிய கருத்திட்டத்தின் விளைவாகப் பிறப்பிக்கப்பட்ட 1 MW புதுப்பிக்கத்தக்க மின் வலுவைத் தேசிய மின் சட்டத்திற்கு வழங்கக்கூடியதாயுள்ளது. • புதுப்பிக்கத்தக்க மின் கருத்திட்டங்களுக்கு நிதி: ரூ. **3.6** பில்லியன் • சூரிய சக்திக்கு மாற்றப்பட்ட கிளைகள்: 27 • தேசிய மின் சட்டத்திற்குப் பங்களிப்பு: **1 MW**
8 DECENT WORK AND ECONOMIC GROWTH	வேலையற்று இருப்போர் விகிதம்: **4.6%**	நாம் எமது ஊழியருக்கு கவர்ச்சிகரமான ஊதியத்தையும், மற்றும் நியாயமான மற்றும் உகந்த பணிச்சூழலிலும் திறனபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புக்களையும் வழங்குகிறோம். • ஊழியருக்கான மொத்தக் கொடுப்னவுகள்: ரூ. **18.9** பில்லியன் • பதவி உயர்வுகள்: 174 • குறித்த ஆண்டின்போது புதிதாய் ஆட்சேர்க்கப்பட்டோர் : **1,622**
9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE	2 கி.மீ. வீதியோடேயே எக்காலத்திலும வாழும் கிராமப்புற சனத்தொகை **95.6%** மொத்தப் பெறுமதி சேர்க்கப்பட்ட சிறு கைத்தொழில்கள்: **27%**	சிறந்த போக்குவரத்து வசதியையும் சிறந்த உட்கட்டமைப்பு வசதியையும் வழங்கும் இலங்கை அரசாங்கத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு எமது வங்கியே பிரதான கடன் வழங்குநராக விளங்குகிறது. • அவ்வாறான அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான கடன்: ரூ.**139.3** பில்லியன்
10 REDUCED INEQUALITIES	வீட்டு செலவின வளர்ச்சி விகிதத்தின் கீழ் 40% இல் இருப்போர் **7.8%** இடை வருமானத் தின் 50% க்குக் கீழ் வாழ்வோரின் விகிதாசாரம்: **13.5%**	நிதிசார் உள்ளடக்கத்தையும் வலுவூட்டலையும் கொண்ட விசேட கடனுற்பத்திகளை வடுப்படு நிலையில் உள்ள கீழ்மட்ட சமூகத்தினருக்கு வங்கி வழங்கியது. • இளைஞர் கடன் திட்டத்தின்கீழான வழங்கீடுகள்: ரூ. **193.0** மில்லியன் • மூத்த குடிமக்கள் வங்கிவைப்புத் திரட்டு: ரூ. **207.7** பில்லியன் • கீழ்நிலை சமூகங்களுக்கான வாடிக்கையாளர் தொடர்பு நிலையங்கள்: 112
11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES	சேரிகளில் அல்லது போதிய இடவசதியின்றி வாழும் நகர மக்கள்: **0.8%**	நகர்ப் புறங்களில் அரச உட்கட்டமைப்பு அபிவிருத்தி / வீடமைப்புக் கருத்திட்டங்களுக்காக வங்கியானது தனது கூட்டாண்மை அலகினூடாக நிதிகளை வழங்குகிறது. • வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்புக் கருத்திட்டங்களுக்கான கடன் வழங்கல்: ரூ. **338.8** பில்லியன் • பாரிய கழிவிலிருந்து – சக்தி கருத்திட்டங்கள்: ரூ. **2.0** பில்லியன்

இலங்கை வங்கியில் பேண்தகு நிலை

பேண்தகு இலக்குகள் மட்டில் எமது அர்ப்பணிப்பு

	இலங்கைச் சூழமைவு		எமது பங்களிப்பு
12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION	தகவல் ஒரு தேசிய மட்டத் தடத்தில் இல்லை		வங்கியானது பொறுப்பு வாய்ந்த கழிவகற்றல் நடவடிக்கையில் ஈடுபடும் அதேவேளை, காகிதம், நீர் மற்றும் சக்தி ஆகியவற்றின் நுகர்ச்சியைக் குறைப்பதற்காக நிறுவனம் தழுவிய முயற்சியைக் கடைப்பிடிக்கிறது. • இலக்கமுறை முன்னெடுப்புக்களிலிருந்தான காகித சேமிப்பு: **7** மில்லியன் **A4** தாள்கள் • சூரிய மின் தகடுகள் பொருத்தப்பட்டதால் பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தில் ஏற்பட்ட குறைப்பு: 756.8 தொன் (CO^2 eqv) • பொறுப்பான இலத்திரனியல் கழிவகற்றல்
13 CLIMATE ACTION	தேசிய தரவுகள் கிடைக்கவில்லை		புதுப்பிக்கப்படத்தக்க சக்திக் கருத்திட்டங்களுக்கு வங்கியின் கடன் வழங்கலானது நாட்டின் கரியமில வாயு உற்பத்தியின் அளவைக் குறைப்பதற்குப் பங்களிக்கிறது. தற்போதைய முயற்சிகளும் வங்கியின் கரியமில வாயு உற்பத்தியின் அளவைக் குறைக்கவே மேற்கொள்ளப்படுகின்றன. • புதுப்பிக்கப்படத்தக்க சக்திக் கருத்திட்டங்களுக்கான கடன் வழங்கல்கள்: ரூ. **3.6** பில்லியன
14 LIFE BELOW WATER	தேசிய தரவுகள் கிடைக்கவில்லை		கடல் சுற்றுச் சூழல் கருத்திட்ட அதிகார சபையின் பங்காண்மையுடனான பசுமைப் பாசிக்குடா கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (CSR) கருத்திட்டமானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
15 LIFE ON LAND	தேசிய தரவுகள் கிடைக்கவில்லை		• பச்சை வலைக் கருத்திட்டம் தென் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. • களு கங்கை ஆற்றங்கரைகளில் வெள்ளப் பாதிப்பைக் குறைக்க கும்புக் அரணைக் கருத்திட்டம் • ஒவ்வொரு புதிய மரத்திற்கும் ஒன்று என்ற இரட்டை மரக் கருத்திட்டம் வட மேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது • அந்த முன்னெடுப்புக்களின் கீழ் நடப்பட்ட மரங்கள்: **12,634**
16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS	ஒவ்வொரு இலட்சம் பேருள் கொலை செய்யப்படுவோரின் சர்வதேச சூழமைவு இலக்கம் **2.5**	ஒவ்வொரு இலட்சம் பேருள் உடல், உள அல்லது பாலியல் வன்முறைக்குள்ளாகும் சனத்தொகை **62.6**	முறையார்ந்த வகையிலான முக்கியமான ஒரு நிதிசார் நிறுவனம் என்ற வகையில், பொதுமக்கள் நலனைப் பாதுகாத்து, நிதிசார் முறைமையில் நம்பிக்கையைப் பேணுவதற்கு எமக்கொரு கடமையுண்டு. வங்கியின் தொழிற்பாடுகளுக்கு ஒழுங்கு விதிகளின் அமைந்தொழுகலுடன் உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கு ஒத்திருப்பதை உறுதி செய்யும் வலுவான ஆட்சியும் இடர் முகாமைத்துவச் சட்டகமும் பலமளிக்கின்றன. கொள்கைகள்: தவறுகளைச் சுட்டிக்காட்டினால் ஏற்கும் கொள்கை ஊழல் மற்றும் இலஞ்சத்திற்கெதிரான கொள்கை
17 PARTNERSHIPS FOR THE GOALS	தேசிய தரவுகள் கிடைக்கவில்லை		பொது நோக்கங்களையும் பரஸ்பர பெறுமதி உருவாக்கத்தையும் இயக்குவித்தலில், பல அரச நிறுவனங்கள், நிதி வழங்கும் பங்காண்மையாளர்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் என்பவற்றுடன் ஆழமான தொடர்புகளைப் பேணி வளர்த்து வந்துள்ளோம். எனவே, ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, இலங்கை உயிர்ப் பல்வகைமை, இலங்கை வர்த்தகர் சம்மேளனம் மற்றும் இலங்கை அரசாங்கம் என்பவற்றுடன் நெருக்கமாகப் பணியாற்றுகின்றோம்.

பொருளாதாரப் பங்களிப்பு

தேசத்தின் வங்கியாளராக, இலங்கை வங்கியின் வளர்ச்சி வியூகமானது, நாட்டின் வளாச்சியுடன் இசைவாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் நாட்டின் சமூக - பொருளாதார வளர்ச்சியின் பங்குதாரராக வங்கி திகழ்கின்றது.

பொருளாதாரப் பங்களிப்பு

எமது சந்தை நிலை



நாட்டில் அதிகூடிய இலாபமீட்டும் ஒரேயொரு ஸ்தாபனமாக மாபெரும் சொத்துத்தளத்தையும் வைப்புக்கள் மற்றும் முற்பணங்களையும் பல நீண்ட ஆண்டுகளுக்கு மேலாக தன்னகத்தே கொண்டு விளங்கி நாட்டின் நிதியியல் சேவைத்துறையில் விவாதத்திற்குட்படுத்தமுடியாதளவு சந்தைத் தலைமை நிலையை இலங்கை வங்கி பேணிவந்துள்ளது.

அரசாங்க வருமானத்திற்கு விக்ஷேட பங்களிப்பாளர்

வங்கியானது தேசிய வருவாய்க்குப் பங்களிக்கும் மாபொரும் பங்களிப்பாளர்களுள் ஒன்றாக விளங்குவதுடன் அரசாங்கத்திற்கு இதன் மதிப்புருவாக்கமானது வருமானவரி, நிதியியல் பெறுமதி சேர் வரி, தேசிய கட்டிட வரி, கடன் மீள்செலுத்துதல் வரி மற்றும் பங்குலாபக் கொடுப்பனவுகள் போன்ற வடிவங்களில் வழங்கப்படுகின்றது. 2018ம் ஆண்டில் அரசாங்கத்திற்கான மொத்த பெறுமதி உருவாக்கம் ரூபா.24.2 பில்லியனாகக் காணப்படுகின்றது.

அரசாங்கத்திற்கான பெறுமதி உருவாக்கம்



பாரிய தேசிய அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கான கடன்வழங்குநா

அரசாங்கத்திற்கு ஒரு முக்கிய கடன் வழங்குநராக, இலங்கை அரசாங்கத்தினால் நீண்டகால அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற பாரிய உட்கட்டமைப்பு செயற்திட்டங்களுக்கு தொடர்ந்து எம்மால் நிதியளிக்கப்படுகின்றது.

ரூபா 31.7 பில்லியன்
வீதி அபிவிருத்திக்காக

ரூபா 3.6 பில்லியன்
மின்உற்பத்தி செயற்திட்டங்களுக்காக

ரூபா 4.7 பில்லியன
நீர்உற்பத்தி செயற்திட்டங்களுக்காக

தொழில்முனைவோர் அபிவிருத்தி

நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறை அபிவிருத்தியை நோக்காகக் கொண்டுள்ள 20 கடன் திட்டங்களில் பங்கேற்பு நிதியியல் நிறுவனமாக வங்கி திகழ்கின்றது. 2018 இல், நுண் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறைகளுக்கு இலங்கை வங்கி ரூபா. 64.4 மில்லியனை வழங்கியுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான கடன்கள் ரூபா. 5,268.1 மில்லியானகக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஆண்டுக்காலப்பகுதியில் ஆதரவு வழங்கப்பட்ட புதிய சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறைகள் மற்றும் நுண்கடன் திட்டங்கள்

- ➔ எரபும
- ➔ பசுமைக் கடன்
- ➔ சிறு உரிமையாளர் வேளாண்மை வணிகக் கூட்டு

ரூபா. 13.6 பில்லியன் இலங்கை தொழில் நிறுவனத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

ரூபா. 189.0 மில்லியன் நுண் தொழில்துறை அபிவிருத்திக்காக பிஎசி மிதுரு இன் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

நிதியியல்முறைமை உட்புகுத்துதலை மேம்படுத்துதல்

கிராமப்புறங்களினுள் தன் பிரசன்னத்தை நிறுவிய முதல் வங்கியாக இலங்கை வங்கி விளங்குவதானது, நாடுபூராகவும் நிதியியல் முறைமையினை உட்புகுத்துவதில் வங்கி கொண்டுள்ள கடப்பாட்டினை உறுதிப்படுத்துகின்றது. இலங்கையிலேயே மிகவும் விஸ்தீரணமான வாடிக்கையாளர் தொடர்பு மைய வலையமைப்பனை வங்கி செயற்படுத்திவருகின்றது. 2018 டிசெம்பர் இறுதியில் நேரடித் தொடர்பு மையங்களின் எண்ணிக்கை 1,721 இனை எட்டியுள்ளது.

577 கிளைகள் 442 மேல்மாகாணத்திற்கு வெளியேயுள்ள கிளைகள்
15 சிறிய மற்றும் நடுத்தர
1,373 பாடசாலை சேமிப்புப் பிரிவுகள் தொழில்துறை நிலையங்கள்

பொருளாதாரப் பங்களிப்பு

அரசாங்கப் பிணையங்களில் முதலீடு

அரசாங்கப் பிணையங்களில் வங்கி முதலிட்டுள்ளது. இம்முதலீடு அரசாங்கத்தின் நிதியியல் தேவைப்பாட்டினை பூர்த்திசெய்வதாக அமைகின்றது 2018 இல் மொத்த அரசாங்கப் பிணையங்களிலான முதலீடுகள் ரூபா.551.5 பில்லியனாக அல்லது வங்கியின் மொத்த சொத்துக்களின் 24% ஆகக் காணப்படுகின்றது.

அரசாங்கப் பிணையங்களில் முதலீடு



இலங்கையின் உள்நாட்டு சர்வதேச வங்கி

பிராந்திய பொருளாதாரத்தில் எமது அடிச்சுவடுகளை விரிவுபடுத்துவதனூடாகவும் எமது சர்வதேச உறவுகளைப் பலப்படுத்துவதனூடாகவும் இலங்கையின் முதல் உள்நாட்டு சர்வதேச வங்கி என்ற ஸ்தானத்தினை அடைவதற்கும் மற்றும் உலகளாவிய வணிகச் சமூகத்தின் மத்தியில் விருப்பத்தெரிவிற்குரிய நிதியியல் பங்குதாரராக விளங்குவதற்கும் நாம் முனைகின்றோம்.

03 சர்வதேச கிளைகள்

859 முகவர் உறவுகள்

ரூபா. 580.1 பில்லியன் பணஅனுப்புதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யூஎஸ்டொலர் 1,714.8 மில்லியன் சர்வதேச சந்தைகள் மூலம் பெறப்பட்டுள்ளது.

பெறுமதிசேர் கூற்று

முக்கிய பங்குதாரர் குழுமங்களில் வங்கியின் பெறுமதி உருவாக்கம் மற்றும் பெறுமதி ஒதுக்கீடு ஆகியவற்றின் ஒரு பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

	2018	2017	மாற்றம்
	ரூபா.மில்லியன்	ரூபா.மில்லியன்	%
பெறுமதி சேர்க்கப்பட்டது			
வங்கிச் சேவைகள் மூலம் பெற்ற வருமானம்	217,238	185,427	17
சேவைச் செலவுகள்	(125,760)	(102,502)	23
வங்கிச் சேவைகள் மூலம் பெறுமதி சேர்க்கப்பட்டது	**91,478**	**82,925**	**10**
வங்கியல்லாச் சேவைகள் மூலம் பெற்ற வருமானம்	3,894	3,784	3
கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான இழப்புக் கட்டணங்கள்	(15,041)	(9,341)	61
பெறுமதி கூட்டல்	**80,331**	**77,368**	**4**
பெறுமதி ஒதுக்கீடு			
ஊழியர்களுக்கு			
சம்பளங்கள், ஊதியங்கள் மற்றும் ஏனைய நன்மைகள்	18,875	16,996	11
அரசாங்கத்திற்கு			
இலங்கை அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட பங்குலாபங்கள்	4,846	12,346	(61)
வருமானவரி	9,724	8,929	9
நிதியியல் சேவைகள் மீதான வரிகள்	9,588	7,249	32
	24,158	28,524	(15)
சமூகத்திற்கு			
சமூகப் பொறுப்புச் செயற்திட்டங்கள்	108	128	(16)
வெளியக நிதி வழங்குநர்கள்			
ஏனைய பெறப்பட்ட கடன்கள் மீதான வட்டி	12,512	15,714	(20)
வழங்கப்பட்ட கடன் மீதான வட்டி	5,154	5,014	3
	17,667	20,728	(15)
விரிவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும்			
தக்கவைக்கப்பட்ட இலாபம்	14,632	8,966	63
தேய்மானம் மற்றும் கடன்தொகை	2,200	1,925	14
ஒத்திவைக்கப்பட்ட வரிவிதிப்பு	2,690	101	2,556
	19,523	10,992	78
	80,331	**77,368**	**4**

பொருளாதார பெறுமதி சேர்க்கப்பட்டது

பொருளாதார பெறுமதி சேர்க்கப்பட்டது என்பது ஒரு நிறுவனத்தின் உண்மையான பொருளாதார இலாபத்தை குறிக்கின்றது. இது ஒப்பிடத்தக்க இடர்களில் பங்குதாரர்களுக்கு தேவையான குறைந்தபட்ச வருவாயை விட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ வருவாய் ஈட்டக்கூடிய தொகையின் மதிப்பீடாகும்.

	2018	2017	மாற்றம்
	ரூபா.மில்லியன்	ரூபா.மில்லியன்	%
முதலிட்ட மூலதனம்			
சாராசரி பங்குதாரர்களின் நிதிகள்	116,299	102,002	14
கூட்டு: கடன் நட்டங்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான ஒட்டுமொத்த இழப்பு ஏற்பாடு	81,852	57,179	43
	198,150	**159,181**	**24**
முதலிட்ட மூலதனத்திலிருந்தான வருவாய்			
வரிவிதிப்பின் பின்னரான இலாபம்	19,479	21,312	(9)
கூட்டு: கடன் நட்டங்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான இழப்பு ஏற்பாடு	15,041	9,341	61
கழி: பதிவழிக்கப்பட்ட கடன்கள்	(35)	(1,181)	(97)
முதலிட்ட மூலதனத்திலிருந்தான மொத்த வருவாய்	34,485	29,472	17
முதலிட்ட மூலதனத்தின் வாய்ப்புச் செலவு	(18,052)	(16,003)	13
பொருளாதார பெறுமதி சேர்க்கப்பட்டது	**16,433**	**13,469**	**22**

*நிறையளிக்கப்பட்ட சராசரி 12 மாத திறைசேரி உண்டியல் வீதம் 2018 – 9.11% (2017 – 10.05%) இன் படி கணிக்கப்பட்டது

வாடிக்கையாளரை மையப்படுத்திய பிரதானமான எமது வியாபாரம்

எமது தனிப்பட்ட ரீதியான சேவையுடன் கூடிய தனித்துவமான வேறுபடுத்தல்கள்

எமது வாடிக்கையாளர் உறவுகளை தொடர்ச்சியான மீளக்கட்டியமைத்தலூடாகவும் எமது அணியானது புத்திசாதுரியமான மற்றும் பேரார்வம் உடைய சேவையினை வழங்கி பிரத்தியேகமான வங்கி அனுபவத்தினை ஒவ்வொரு செயற்பாட்டிலும் காண்பிக்கின்றனர்.

பாதுகாத்தல்

பெருமதியை

கூட்டாண்மை ஆட்சி

கூட்டாண்மை ஆட்சி

தலைவரின் செய்தி

வலுவான ஆட்சி நடைமுறைகளானவை எமது தந்திரோபாய அபிலாசைகளை வெளிக்கொணர்வதற்கு ஆதாரமளிப்பதுடன் எமது வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், பங்குதாரர்கள் மற்றும் நாட்டின் பொருளாதாரம் சார்பில் நீண்டகால மதிப்பினை உருவாக்குவதில் அடிப்படை வகிபாகமொன்றை ஆற்றுகின்றன. ஆதலால், வங்கியினதும் அதன் தொழிற்பாடுகளினதும் சகல பிரிவுகளிலும் நல்லாட்சித் தத்துவங்களானவை சிந்தனை மற்றும் செயல்முறைகளாக பதிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபை முழுமையாக அர்ப்பணிப்புச் செய்துள்ளது.

திறன்கள், கண்ணோட்டம் மற்றும் தொழிற்றுறை அனுபவம் என்பவற்றினைக் கொண்ட பல்வகைப்பட்ட கலவையொன்றாக ஒன்றுசேர்ந்த பணிப்பாளர்களைக் கொண்டு 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் புதிய சபையொன்று நியமிக்கப்பட்டது. (25 தொடக்கம் 27 வரையான பக்கங்களிலுள்ள சபையின் விபரக் குறிப்புக்களைப் பார்வையிடுக). சபையானது ஒழுங்காக கூடியதுடன் 2018 ஆம் ஆண்டின் போது 23 சபைக் கூட்டங்களை அது நடாத்தியுள்ளது. கவனம் குவித்த பிரதான துறைகளாவன தந்திரோபாயம் வகுத்தல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணையப் பாதுகாப்பு, இடர் முகாமைத்துவம் அத்துடன் முதலீட்டுப் பட்டியல் தரத்தைப் பாதுகாத்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. வங்கிக்குள்ளே தொழில்நுட்பம் மற்றும் எண்ணிம மயமாக்கல் (டிஜிட்டல் மயமாக்கல்) செய்முறையினை ஈடுபடுத்தல் தொடர்பில் சபையின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் அதற்கு உதவும் குறிக்கோளுடன் இவ் ஆண்டின் போது அர்ப்பணிப்புமிக்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உபகுழுவொன்று தாபிக்கப்பட்டது. தோற்றம்பெறும் சிறந்த நடைமுறைகள், தொழிற்படு தோற்றப்பாட்டிலான மாற்றங்கள் மற்றும் ஒழுங்குறுத்தல் அபிவிருத்திகள் மீது உரிய கவனத்தினைச் செலுத்தி சில முதன்மைக் கொள்கைகளையும் இச்சபை மீளாய்வுசெய்து திருத்தியது.

சபையொன்று காணப்படாத போதிலும், அரசியல் அரங்கில் நிகழ்ந்த மாற்றங்களுடன் புதிய நியமனங்கள் செய்யப்படும் வரை, இவ்வங்கியானது, அதன் தொழிற்பாடுகள் மீதான குறைந்தபட்ச எதிர்மறைத் தாக்கத்துடன் தொழிற்படுவதற்கான வழிகாட்டலை முகாமைத்துவத்திற்கு வழங்கிய அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களைக் கொண்டு இவ்வங்கியில் அமுலிலுள்ள சிறந்த ஆட்சி நடைமுறையினைச் சுட்டிக்காட்டி சீராகத் தொழிற்பட்டது.

இந்த அறிக்கையானது நடைமுறையிலுள்ள ஆட்சிக்கான எமது அணுகுமுறையையும் சபை எவ்வாறு பணியாற்றுகின்றது என்பதையும் விதித்துரைக்கின்றது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டலின் கீழான கூட்டாண்மை ஆட்சி வழிகாட்டல்களுக்கு இணக்கமுறும் நிலையினையும் இது காட்டுகின்றது. 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் (CA Sri Lanka) வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆட்சி பற்றிய திருத்தப்பட்ட சிறந்த நடைமுறை விதிக்கோவையினையும் இவ்வங்கி தன்னிச்சையாகப் பின்பற்றியுள்ளது.

பணிப்பாளர்களுக்கான ஒழுக்க விதிக்கோவையொன்றும் ஊழியர்களுக்கு தனிவேறான ஒழுக்க விதிக்கோவையொன்றும் உள்ளதுடன் வருடாந்தப் பிரகடனங்களானவை அவற்றுக்கு இணக்கமுற்று பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இலங்கை வங்கியின் ஒழுக்க விதிக்கோவையில் விதித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளில் எந்தவொன்றிலும் இவ்வங்கியின் பிரதான முகாமைத்துவ ஆளணியின் பொருண்மையான மீறல்கள் எவற்றையும் பற்றி நான் அறியவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

சனாதிபதி சட்டத்தரணி ரோனால்ட் சி பெரேரா
தலைவர்
2019 ஏப்ரல் 3

2018 இன் சிறப்பம்சங்கள்

- சபையில் மாற்றங்கள்
- வங்கியின் டிஜிடல் தந்திரோபாயத்தை கண்காணிப்பதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உபகுழு தாபிக்கப்பட்டது
- இலஞ்சம் மற்றும் ஊழலுக்கெதிரான கொள்கை அறிமுகம்
- 2019-2021 வரையான அடுத்த 3 ஆண்டுகளுக்கான கூட்டாண்மைத் திட்டம் மீள்பார்வை மற்றும் மீளாய்வு செய்யப்பட்டது.

கூட்டாண்மை ஆட்சி

ஆட்சிக் கட்டமைப்பு

இவ் வங்கியின் முழுமையான ஆட்சிக் கட்டமைப்பானது உறுதியான ஆட்சி நடைமுறைகளை அமுல்படுத்துவதற்கான பொறிமுறைகளை குறித்துரைப்பதுடன் நிறுவனம் பூராகவும் தந்திரோபாயமான தீர்மானமெடுத்தலுக்கான தெளிவான வழிகாட்டலை வழங்குகின்றது. வங்கியின் தொழிற்றுறை ஆதிக்கம், முறைமை சார்ந்த முக்கியத்துவம் மற்றும் அரச உரிமையாண்மை என்பவற்றைக் கருத்திற்கொண்டு, வங்கியின் பல்வகைப்பட்ட அக்கறைதாரர் குழுக்களின் எதிர்பார்க்கைகளை முகாமிக்கும் பொருட்டு நீண்டகால மற்றும் குறுங்கால பயன்விளைவுகளைக் கையாள்வதற்கென இக் கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

வெறும் இணக்கப்பாட்டிற்கு அப்பால் விரிவாக்கம்பெற்று இவ்வங்கியானது, சிறந்த வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், உறுதியான இடர் முகாமைத்துவம் மற்றும் பயனுறுதி வாய்ந்த தலைமைத்துவம் என்பவற்றுக்கு இட்டுச்செல்லும் இயலுமைப்படுத்தும் காரணியாக கூட்டாண்மை ஆட்சியினை நோக்குகின்றது. இவ்வங்கியின் ஆட்சிக் கட்டமைப்பு அடித்தளமிட்டுள்ள முதன்மையான வெளியக மற்றும் உள்ளக வழிப்படுத்தல் ஆவணங்கள் அருகில் தரப்பட்டுள்ளன.

ஆட்சிக் கட்டமைப்பு

பல மட்டத்திலான ஆட்சிக் குழுமங்களை உள்ளடக்கிய நன்கு வரையறுக்கப்பட்ட ஆட்சிக் கட்டமைப்பு, திட்டவட்டமான வகிபாகங்கள் மற்றும் தெளிவானஅறிக்கையிடல் வரிசைகள் என்பன பொறுப்புக்கூறலையும் மதிநுட்பமான வலுவூட்டலையும் உறுதிப்படுத்துகின்றது. இவ்வங்கியின் கூட்டாண்மை ஆட்சியின் உச்சநிலை ஆளுகை குழுமமாகவும் பொறுப்புடைதாரராகவும் பணிப்பாளர் சபை செயலாற்றுகின்றது. வங்கியின் நாளாந்த முகாமைத்துவமானது பொது முகாமையாளரால் வழிநடத்தப்படும் முகாமைத்துவக் குழுவுக்கு

கையளிக்கப்பட்டுள்ளது.

சபையானது சபையின் ஐந்து (5) உபகுழுக்களுக்கும் திட்டவட்டமான பொறுப்புக்களைக் கையளித்து, அதன் மூலம் தந்திரோபாயம் உருவாக்கல், கொள்கைக் கட்டமைப்புகளையும் வழிகாட்டல்களையும் வகுத்தல் மற்றும் எதிர்காலத் திட்ட நிகழ்ச்சிநிரல் விடயங்கள் என்பன உள்ளடங்கலாக சபைக்கு ஒதுக்கப்பட்ட விடயங்களுக்கு போதுமான காலத்தையும் வளங்களையும் அது அர்ப்பணிப்புச் செய்வதற்கு அனுமதித்துள்ளது.

(வங்கியின் ஆட்சிக் கட்டமைப்புக்காக 73 ஆம் பக்கத்தை பார்வையிடுக)

கம்பனிச் செயலாளர்

சபைச் செயலாளர் / இலங்கை வங்கிச் செயலாளர் அம்மணி. ஜானகி சேனநாயக்க சிறிவர்த்தன அவர்கள் ஒரு சட்டத்தரணி ஆவதுடன் 2005 ஆம் ஆண்டில் இப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். அவரின் தகுதிகள் / தகைமைகளானவை வங்கியியல் சட்டத் தேவைப்பாடுகள் மற்றும் உரிய திருத்தங்களுடன் இணக்கமுற்று உள்ளன. சகல பணிப்பாளர்களும் செயலாளரின் சேவைகளுக்கான அணுகுவழியைக் கொண்டுள்ளதுடன் சபையானது அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பில் அதற்கு வழிகாட்டலை அவர் வழங்குகின்றார் என்பதுடன் நியதிச்சட்ட தேவைப்பாடுகள் மற்றும் தொழிற்றுறை சார்ந்த சிறந்த நடைமுறைக்கு இணக்கமுற்று உரிய சகல நடைமுறைகளும் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்துகின்றார். தோற்றம்பெறும் சிறந்த நடைமுறைகள், ஒழுங்குறுத்துகை மாற்றங்கள் மற்றும் அக்கறைதாரர் கரிசனைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு இவ்வங்கியின் ஆட்சிக் கட்டமைப்பை செயலாளர் ஒழுங்காக மீளாய்வு செய்கின்றார்.

வழிப்படுத்தல் ஆவணங்கள்

வெளியகம்

- 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (“கட்டளைச் சட்டம்” ஆக குறிப்பிடப்படும்) மற்றும் அதன் பின்னரான திருத்தங்கள்
- 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்கள்
- உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆட்சி தொடர்பான 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டல்
- அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட இவ்வங்கிக்கு ஏற்புடைய சுற்றறிக்கைகள்
- கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் தொடர்ந்து செல்லும் பட்டியற்படுத்தல் தேவைப்பாடுகள்
- 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆட்சி பற்றிய சிறந்த நடைமுறை விதிக்கோவை

உள்ளகம்

- சபை சாசனம்
- உபகுழு சாசனங்கள்
- ஒழுக்க விதிக்கோவைகள்
- முழுமையான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்
- துணை முகாமைத்துவ சாசனம்
- வாடிக்கையாளர் சாசனம்

ஆட்சிக் கட்டமைப்பு



சபை உபகுழுக்கள்

ஒவ்வொரு சபை உபகுழுவும் குழுச் சாசனத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறு வரையறுக்கப்பட்ட பணிப்பாணை ஒன்றுக்குள் தொழிற்படுகின்றது. குழுத் தலைவர்கள் இக் குழுக்களின் பயனுறுதி வாய்ந்த தொழிற்பாட்டிற்குப் பொறுப்புடையவர்கள் ஆவர். உரிய செயற்பாடுகள் தொடர்பில் அவர்கள் சபைக்கு அறிக்கையிடுவதுடன் பரிந்துரைகளைச் செய்கின்றனர். இக் குழுக்களின் உள்ளடக்க கட்டமைப்பை நிர்ணயிக்கும் போது, அதன் உறுப்பினர்களின் திறன்கள், தொழிற்றுறை நிபுணத்துவம் மற்றும் அனுபவம் என்பவற்றை சபை கருத்திற்கொள்கின்றது.

நிறைவேற்றுக் குழுக்கள்

நாளாந்த தொழிற்பாடுகளின் முகாமைத்துவமானது பொது முகாமையாளரால் வழிநடத்தப்படும் கூட்டாண்மை முகாமைத்துவக் குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. சில நிறைவேற்று மட்டக் குழுக்களானவை திட்டவட்டமான பொறுப்புக்கள் மற்றும் தெளிவாக வரையறுக்கப்பட்ட பணிப்பாணைகளுடன் சேர்த்து தாபிக்கப்பட்டுள்ளன.

கூட்டாண்மை ஆட்சி

உபகுழுக்களும் நிறைவேற்றுக் குழுக்களும்	பணிப்பாணை
சபை உபகுழுக்கள்	
கணக்காய்வுக் குழு	உள்ளகக் கட்டுப்பாடுகள், உள்ளக மற்றும் வெளியகக் கணக்காய்வு அடங்கலாக வங்கியின் நிதி அறிக்கையிடல் செய்முறையினை மீளாய்வு செய்கின்றது.
ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு	கடன், சந்தை, செயற்பாட்டு, திரவத்தன்மை, இணையம்சார் /தகவல் தொழில்நுட்ப (IT) மற்றும் தந்திரோபாய இடர்கள் அடங்கலாக இடர் முகாமைத்துவத்தின் சகல துறைகளுக்குமான மேற்பார்வைப் பொறுப்பு அத்துடன் முழு இடர் முகாமைத்துவக் கொள்கைக் கட்டமைப்புடனான இணக்கப்பாட்டையும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாட்டையும் உறுதிப்படுத்தல்.
மனித வளங்களும் ஊதியமும் குழு	ஊதியக் கொள்கையை நிர்ணயித்தல், பொது முகாமையாளரினதும் பிரதான முகாமைத்துவ ஆளணியினதும் (KMP) குறிக்கோள்களை உருவாக்குதல் அத்துடன் செயற்றிறனை மதிப்பிடுதல் மற்றும் இவ்வங்கியின் மனிதவள (HR) கொள்கையை நிர்ணயித்தல் என்பவற்றுக்கான மேற்பார்வைப் பொறுப்பு.
பெயர்குறித்த நியமனமும் கூட்டாண்மை ஆட்சியும் குழு	சிரேட்ட முகாமைத்துவ அதிகாரிகளைத் தெரிவுசெய்வதற்கான / நியமிப்பதற்கான நடைமுறைகளை அமுல்படுத்தல் மற்றும் அவர்களின் பொருத்தப்பாட்டை மதிப்பிடுதல், ஒழுக்க விதிக்கோவைகளை மீளாய்வு செய்தல், கூட்டாண்மை ஆட்சி நடைமுறைகளை மேம்படுத்தல்.
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் குழு	தகவல் தொழில்நுட்ப கணக்குகள் (உற்பத்திகள்), சேவைகள், கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் உட்கட்டமைப்பு என்பவற்றைக் கண்காணிப்பதற்கான மேற்பார்வைப் பொறுப்பு.
நிறைவேற்றுக் குழுக்கள்	
சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு (ALCO)	நிதியீட்டத் தந்திரோபாயம், திரவத்தன்மை முகாமைத்துவம், சொத்துக்களின் பொருத்தமின்மை அதேபோன்று சந்தை இடர் வெளிக்காட்டல்கள் என்பவற்றை மீளாய்வு செய்தல், முதன்மைக் குறிக்கோள்களாக திரவத்தன்மை இடரையும் வட்டிவீத இடர்களையும் முகாமித்தல் மற்றும் இவ்வங்கியின் பல்வேறுபட்ட நிதி இடர்களை முகாமித்தல்.
கிளைகள் பிரிவுக் கடன் குழு	உயர் தேறிய முதலீட்டு மதிப்பினை (high net-worth) கொண்ட வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளைக் கருத்திற்கொள்ளும் செய்முறையினை துரிதப்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு தரமான மற்றும் துரிதமான சேவையினை வழங்குதல் மற்றும் கடன் நிர்வாகத்தை வினைத்திறனாக்குதல் அத்துடன் கடன் இடரைக் குறைத்தல்.
வியாபாரம் தொடர்ந்திருத்தல் ஒருங்கிணைப்புக் குழு (BCCC)	இவ்வங்கியின் வியாபாரம் தொடர்ந்திருத்தல் முகாமைத்துவ (BCM) செய்முறையின் சகல அம்சங்களையும் முகாமை செய்தலும் ஒருங்கிணைப்புச் செய்தலும்.
வியாபாரம் தொடர்ந்திருத்தல் அமுலாக்கக் குழு (BCIC)	இவ்வங்கியின் வியாபாரம் தொடர்ந்திருத்தல் திட்டத்தின் (BCP) பயனுறுதி வாய்ந்த அமுலாக்கம்.
வியாபாரம் தொடர்ந்திருத்தல் முகாமைத்துவ மாற்றீட்டுக் குழு (BCMAC)	ஏனைய வியாபாரம் தொடர்ந்திருத்தல் முகாமைத்துவக் குழுக்கள் தாபிக்கப்படும் வரை, ஏதேனும் அனர்த்தத்தின் பின்னர் உடனடியாக, தற்காலிகமாக செயலாற்றுதல்
மோசடியான காசோலைகளையும் மோசடிகளையும் கையாளும் குழு	மோசடியான காசோலைகள் மற்றும் மோசடிகள் தொடர்பில் அறவிடமுடியாத நிலுவைகளை அறவிடுவதற்கான சாத்தியமான சகல வழிகளையும் கருத்திற்கொண்ட பின்னர் அவற்றைப் பதிவழித்தல் சார்பில் உரிய அதிகாரிகளுக்கு பரிந்துரைகளைச் செய்தல்.
கூட்டாண்மை தகவல் பாதுகாப்புக் குழு (CISC)	தகவல் பாதுகாப்பு முன்னெடுப்புகளுக்கான வழிகாட்டலையும் ஆதரவையும் வழங்குதல். அதற்கிணங்க, இக் குழுவானது, தகவல் பாதுகாப்புக் கொள்கையில் (ISP) குறித்துரைக்கப்பட்ட செய்முறைகளையும் நடைமுறைகளையும் பிரயோகிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும், தகவல் பாதுகாப்புத் திட்டங்களை மீளாய்வுசெய்து தொடர்பாடலை மேற்கொள்வதற்கும், பாதுகாப்பு மீறல்கள் பற்றிய புலனாய்வுகளை மேற்கொள்வதற்கும் அத்துடன் இவ்வங்கியின் தகவல் பாதுகாப்பைச் செயற்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.
கூட்டாண்மை முகாமைத்துவக் குழு	கூட்டாண்மை முகாமைத்துவக் குழுவானது இவ்வங்கியிலுள்ள அதியுயர் முகாமைத்துவ மட்டக் குழுவாகும். ஏனைய முகாமைத்துவக் குழுக்களின் விடய நோக்கெல்லையின் கீழ் வராத, இவ் வங்கியின் மிக முக்கியமான தீர்மானங்களை எடுத்தலே இக் குழுவின் ஒட்டுமொத்த நோக்கமாகும். தந்திரோபாயங்களை வகுத்து, வேறுபாடுகளை முகாமை செய்வதற்கான வழிகாட்டல்களை வழங்கும் நோக்குடன், இவ்வங்கியின் முழுச் செயற்றிறனையும் மீளாய்வு செய்வதற்கும் இக்குழு உத்தேசிக்கின்றது.
கூட்டாண்மை தந்திரோபாய மீளாய்வுக் குழு	இவ்வங்கியின் கூட்டாண்மை தந்திரோபாயங்களை திட்டமிடும், அமுல்படுத்தும் மற்றும் கண்காணிக்கும் செய்முறையினை வினைத்திறனாக்கும் பொருட்டு முகாமைக்கு உதவுவதே இக் குழுவின் நோக்கமாகும்.
கடன் குழு	சகல நியதிச்சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாட்டை உறுதிப்படுத்தும் அதேவேளை, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படும் பொருட்டு, கடன் வசதிகளை வழங்குவதற்கான கொள்கைகளையும் நடைமுறைகளையும் வகுத்தல், மீளாய்வு செய்தல் மற்றும் திருத்துதல். இதன் கையளிக்கப்பட்ட அதிகார எல்லைகளின் கீழ் வரிசை முகாமையினால் சமர்ப்பிக்கப்படும் கடன் பிரேரிப்புகளையும் அங்கீகரிக்கின்றது, மறுக்கின்றது அல்லது ஏற்றுக்கொள்கின்றது அல்லது பணிப்பாளர் சபைக்கு பொருத்தமான பரிந்துரைகளைச் செய்கின்றது. வங்கியானது நன்கு பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் சிறந்த கடன் முதலீட்டுப் பட்டியலொன்றைப் பேணுகின்றதென்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு முதலீட்டுப் பட்டியல் வெளிக்காட்டல் மற்றும் செறிவு இடரை கண்காணித்து, மீளாய்வுசெய்து புதுப்பித்தலும் செய்கின்றது. மேலும், செயலாற்றுகை அற்ற முற்பணங்கள் தொடர்பில் எடுக்கப்படும் தீர்வு நடவடிக்கையை இது கண்காணிக்கின்றது.

உபகுழுக்களும் நிறைவேற்றுக் குழுக்களும்	பணிப்பாணை
நிறைவேற்றுக் குழுக்கள்	
(DARC) சேத மதிப்பீடு மற்றும் புனரமைப்புக் குழு (DARC)	வங்கியின் ஆதனம் மீதான சேதத்தை மதிப்பிடுதல் மற்றும் புனரமைத்தல்.
மனித வள கொள்கைக் குழு (HRPC)	மனிதவள (HR) முகாமைத்துவம் தொடர்புபட்ட கொள்கைகளையும் நடைமுறைகளையும் வகுத்தல், மீளாய்வு செய்தல் மற்றும் திருத்துதல் அத்துடன் அவசியமானவிடத்து பணிப்பாளர் சபைக்குப் பரிந்துரைகளைச் செய்தல். ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, சன்மானம் மற்றும் நட்டஈடு, தொழிற்றுறை உறவுகள், முடிவுறுத்தல் போன்ற மனிதவள தொழிற்பாடுகள் தொடர்பிலான பிரேரிப்புகள் குறித்தும் இது அங்கீகாரமளிக்கின்றது / சபைக்கு பரிந்துரைகளைச் செய்கின்றது.
பயன்படுத்தப்படாத சொத்து பற்றிய குழு	இலங்கை வங்கி கட்டளைச் சட்டம், இலங்கை வங்கிச் சட்டம், கடன் அறவீட்டுச் சட்டம் மற்றும் அலுவலக அறிவுறுத்தல் சுற்றறிக்கைகள் என்பவற்றில் விதித்துரைக்கப்பட்ட விதிகளுக்கு அமைவாக இவ்வங்கிக்குச் சொந்தமான ஆதனங்களை விற்றுத்தீர்க்கும் செய்முறையினை முகாமை செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் உதவுதல்.
உள்ளக மூலதனத்தின் போதுமானதன்மை மதிப்பீட்டுச் செய்முறை வழிப்படுத்தல் குழு	ஒழுங்குறுத்துகை இணக்கப்பாட்டிற்கு மேலதிகமாக இடரை மதிப்பிடுவதற்கும், அளவிடுவதற்கும் மற்றும் கண்காணிப்பதற்கும் இவ்வங்கி பூராகவும் சிறந்த உள்ளக மூலதனத்தின் போதுமானதன்மை மதிப்பீட்டுச் செய்முறையொன்றை விருத்தி செய்வதற்கும் அமுல்படுத்துவதற்குமான பொறுப்பினைக் கொண்ட பிரதான முகாமைத்துவக் குழுவே உள்ளக மூலதனத்தின் போதுமானதன்மை மதிப்பீட்டுச் செய்முறை (ICAAP) வழிப்படுத்தல் குழுவாகும்.
முதலீட்டுக் குழு	துணை நிறுவனங்களினதும் அரசாங்கப் பிணையங்களினதும் உரிமைமுதலிலுள்ள முதலீடுகள் நீங்கலாக இவ்வங்கியின் முதலீட்டுச் செயற்பாடுகள் தொடர்பில் பணிப்பாளர் சபையானது அதன் நியதிச்சட்டக் கடமைகளையும் அதன் மேற்பார்வைப் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதற்கு, பணிப்பாளர் சபைக்கு உதவுவதே இதன் முதன்மையான குறிக்கோளாகும். நியாயமான மட்டமொன்றில் வருவாயைப் பேணும் அதேவேளை ஒட்டுமொத்த முதலீடுகளினதும் மூலதனப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இக்குழு உத்தேசிக்கின்றது
அரசாங்கப் பிணையங்களில் முதலிடுவதற்கான குழு	அரசாங்கப் பிணையங்களிலான முதலீட்டுச் செயற்பாடுகள் தொடர்பில் முகாமையானது அதன் நியதிச்சட்டக் கடமைகளையும் அதன் மேற்பார்வைப் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதில் முகாமைக்கு உதவுவதே இக் குழுவின் முதன்மையான குறிக்கோளாகும்.
தகவல் தொழில்நுட்ப (IT) வழிப்படுத்தல் குழு	வருடாந்த தகவல் தொழில்நுட்ப திட்டம் பற்றி சபைக்குப் பரிந்துரை செய்தல். முன்னெடுப்புகளை அமுலாக்குதல், குழுக்களை உருவாக்குதல் மற்றும் செய்முறைகளையும் அவற்றின் முன்னேற்றத்தையும் கண்காணித்தல் என்பவற்றுக்கு உதவுதல். தகவல் தொழில்நுட்ப (IT) நடவடிக்கைகள் தொடர்பிலான கொள்கைகளையும் இது மீளாய்வு செய்வதுடன் அவற்றின் பின்பற்றுகை பற்றி பணிப்பாளர் சபைக்கு பரிந்துரை செய்கின்றது. மேலும் இது தகவல் தொழில்நுட்ப (IT) கருத்திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்து கட்டுப்படுத்துவதுடன் வியாபாரம் மற்றும் ஏனைய துணைநிலை அலகுகளிலிருந்து அவசியமான உதவியினை வழங்குகின்றது.
சந்தைப்படுத்தல் குழு	பொருத்தமான சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களைத் திட்டமிடுதல், வங்கியை அத்துடன் கணக்குகளை (உற்பத்திகள்) / சேவைகளை நிலைப்படுத்துதல், வங்கியின் விற்பனைப் புறள்வை உச்சப்படுத்தும் பொருட்டு சந்தையிலுள்ள வாய்ப்புக்களை இனங்காணுதல் என்பன தொடர்பில் வங்கிக்கு தந்திரோபாய வழிகாட்டலினை வழங்குதல் மற்றும் வெற்றியாளர் புத்தாக்கம் (champion innovation) / புதுமையான சந்தைப்படுத்தல் கோட்பாடுகளுக்கான மன்றம் (forum) ஒன்றை ஏற்பாடு செய்தல், கூட்டாண்மை சமூகப் பொறுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிட்டு நிறைவேற்றுதல், வங்கியின் கூட்டாண்மை மதிப்பைக் கட்டியெழுப்புவதற்கு பயனுறுதி வாய்ந்த தொடர்பாடல் அடித்தளமொன்றை உருவாக்குதல்.
செயலாற்றுகை அற்ற சொத்து மீளாய்வுக் குழு (NPAC)	செயலாற்றுகை அற்ற கடன் (NPL) நிலமையினை காலக்கிரமத்தில் மீளாய்வு செய்தும் சொத்தின் தரத்தை மேம்படுத்துவதற்கு அல்லது நடைமுறையிலுள்ள செயலாற்றுகை அற்ற சொத்துக்களின் (NPAs) மீட்சியினை துரிதப்படுத்துவதற்கு பொருத்தமான பரிந்துரைகளைச் செய்தும் வங்கியின் செயலாற்றுகை அற்ற கடன்களைக் (NPLs) குறைப்பதற்கு முகாமைக்கு உதவுவதே இதன் குறிக்கோளாகும்.
செயற்பாட்டு இடர் முகாமைத்துவ நிறைவேற்றுக் குழு	வங்கியின் சகல செயற்பாட்டு இடர் முகாமைத்துவ விடயங்களுக்குமான பிரதான குழுவே இதுவாகும். இடர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் ஆட்சியானது சிரேட்ட முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்ற விடயத்தை இக்குழு வலுவூட்டுகின்றது; இடரைக் குறைக்கும் அதேவேளை வங்கிக்கான அதியுயர் செயற்பாட்டு நியமங்களை பேணும் நோக்குடன் பன்முக தொழிற்பாட்டு இடர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான மன்றத்தை இது ஏற்பாடு செய்கின்றது.
வெகுமதி மற்றும் அங்கீகரித்தல் கொள்கைக் குழு (RRPC)	எதிர்பார்த்ததை விட உற்பத்தித்திறன் அதிகரிப்பிற்கும் நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கும் பங்களிப்புச் செய்த ஊழியர்களை அடையாளங் கண்டு அங்கீகரித்தல் மற்றும் அவர்களின் பங்களிப்புக்காக அத்தகைய ஊழியர்களை / குழுக்களை பாராட்டுதல் / அவர்களுக்கு சன்மானமளித்தல்.
புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத் தெரிவுக் குழு (மீளாய்வுக் குழு)	இவ் வங்கிக்கான ஏற்புடைய / பொருத்தமான மற்றும் தேவைப்படும் வெளிநாட்டு நிகழ்ச்சித்திட்டங்களைத் தெரிவுசெய்வதே இக்குழுவின் ஒட்டுமொத்த நோக்கமாகும்.
புலமைப்பரிசில் குழு	ஏற்புடைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் / செயலமர்வு / பயிற்சிப்பட்டறைகள் / விஜயங்களினைத் தெரிவுசெய்வதும் வெளிநாட்டுப் பயிற்சி / செயலமர்வு / பயிற்சிப்பட்டறைகள் / விஜயங்கள் போன்றவற்றுக்கு பொருத்தமான பங்குபற்றுநர்களை பெயர்குறித்து நியமனம் செய்வதும் இக்குழுவின் ஒட்டுமொத்த நோக்கமாகும்.
நிலைபேற்றுக் குழு	சுற்றாடல் ரீதியில் பொறுப்புடையதும், சமூக ரீதியில் சமத்துவமுடையதும் மற்றும் பொருளாதார ரீதியில் சிறப்பானதுமான ஒரு விதத்தில் வியாபாரத்தை செயற்படுத்துவதன் மூலம் பொறுப்பு வாய்ந்த ஒரு கூட்டுப் பிரசையாக மாறும் பொருட்டு பிரதான வியாபாரத் தீர்மானங்கள், செய்முறைகள் மற்றும் முன்னெடுப்புகள் என்பவற்றுக்குள் நிலைபேறானதன்மையினை ஒன்றிணைப்பதில் உதவுதல். அக்கறைதாரர்களுக்கு பெறுமானங்களை அளிக்கும் நிறுவனத்திற்கூடாக நிலைபேறானதன்மை தத்துவங்களையும் நடைமுறைகளையும் மதிப்பிட்டு, விருத்திசெய்து, மேம்படுத்தி, நடைமுறைப்படுத்தி கண்காணித்தலே இக்குழுவின் உத்தேசமாகும்.
தொழில்நுட்ப மற்றும் தொழிற்பாட்டுக் குழு (TOC)	தொழிற்பாடுகளுக்கான இடையூறுகள் காரணமாக எழக்கூடிய நட்டங்களை தணிப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதில் உதவுகின்றது.

கூட்டாண்மை ஆட்சி

பணிப்பாளர் சபை

சபையின் உள்ளடக்கக் கட்டமைப்பு

இவ்வங்கியின் சபையானது ஆறு (6) நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களைக் கொண்டிருக்க முடியும். சபையின் உள்ளடக்கக் கட்டமைப்பானது கட்டளைச்சட்டத்திலும் உரிய திருத்தங்களிலும் தெளிவாக விதித்துரைக்கப்பட்டுள்ளது. கூட்டாண்மை ஆட்சி தொடர்பான 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டலில் விதித்துரைக்கப்பட்ட தகுதிவிதிகளின் அடிப்படையில் பணிப்பாளர்களின் சுயாதீனத்தன்மை மதிப்பிடப்படுகின்றது. அரச வங்கிகள் குறித்தொதுக்கப்பட்டுள்ள உரிய அமைச்சரினால் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவதுடன் நிதி அமைச்சின் பிரதிநிதியொருவர் சபையில் பதவிவழிவந்த பதவியொன்றைக் கொண்டுள்ளார். முகாமைத்துவக் குழுவை ஆக்கத்திறன் வாய்ந்ததாக சவாலுக்கு உட்படுத்துவதற்கு சபையினை இயலுமைப்படுத்தி அதன் கலந்துரையாடல்களுக்கு வெவ்வேறான கருத்துக்களை கொண்டுவந்து, பணிப்பாளர்களானோர் அவர்களின் உரிய துறைகளில் கைதேர்ந்தவர்களிலிருந்து நியமிக்கப்படுகின்றனர். தீர்மானமெடுத்தல் செய்முறையின் பயனுறுதிவாய்ந்த தன்மையினை அதிகரித்து, பொருத்தமான அதிகார சமநிலையொன்றை இது உறுதிப்படுத்துகின்றது.

தற்போது வங்கியானது நியமிக்கப்பட்ட நான்கு பணிப்பாளர்களைக் கொண்டுள்ளதுடன் அவர்களின் விபரங்கள் 25 தொடக்கம் 27 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிப்பாளர்களை நியமிக்கும் செய்முறையானது அரசியல் அரங்கில் நிகழ்ந்த மாற்றத்துடன் இன்னமும் இடம்பெற்று வருகின்றது.

திறன்களும் நிபுணத்துவமும்

சபையானது அனுபவம் மற்றும் திறன்களுக்கு ஏற்ப கணிய ரீதியிலும் பண்பு ரீதியிலும் பன்முகப்பட்டு இருந்தது அத்துடன் பன்முகப்பட்டு இருக்கின்றது. பொறுப்புக்களின் பயனுறுதி வாய்ந்த நிறைவேற்றத்தை இயலுமைப்படுத்தும் நன்கு சமநிலைப்பட்ட பண்புகளின் சேர்க்கையொன்றை அவர்களின் ஒருமித்த பின்னணி ஏற்பாடு செய்கின்றது. சபையில் போதுமானளவு நிதிசார் மதிநுட்பம் இருந்தது அத்துடன் இருக்கின்றது. 2018 ஆம் ஆண்டில் தொழில் நிபுணத்துவ கணக்கியல் அமைப்புகளில் உறுப்புரிமைகளைக் கொண்ட பணிப்பாளர்கள் இருந்தனர். சபையிலுள்ள பணிப்பாளர்கள் அவர்களின் தொழில்சார் அனுபவத்திலிருந்து அவசியமான நிதிசார் மதிநுட்பத்தைக் கொண்டுள்ளனர். அவர்களின் விபரக்குறிப்புகள் 25 தொடக்கம் 27 வரையான பக்கங்களில் உள்ளன. 2018 ஆம் ஆண்டின் பணிப்பாளர்கள் தொடர்பான விபரங்கள் 79 தொடக்கம் 85 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

சபையின் பொறுப்புக்கள்

சபை கொண்டுள்ள பொறுப்புக்களையும் தத்துவங்களையும் சபையின் சாசனம் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றது. தந்திரோபாய வழிகாட்டலை வகுத்தல், உறுதியான ஆட்சி மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகளைத் தாபித்தல், ஒழுங்குறுத்துகை இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துதல், வங்கியின் நன்மதிப்பைப் பாதுகாத்தல் மற்றும் வங்கியின் நிதிச் செயற்றிறன் மற்றும் நிலமை பற்றி சமநிலையானதும் நியாயமானதுமான மதிப்பீடொன்றை முன்வைத்தல் என்பவற்றை பணிப்பாணை உள்ளடக்குகின்றது. தந்திரோபாய அபிலாசைகள் மற்றும் மதிப்பு உருவாக்கத்துக்கான பொருத்தப்பாட்டை உறுதிப்படுத்தும் பொருட்டு சபையின் சாசனம் ஒழுங்காக மீளாய்வு செய்யப்பட்டு திருத்தப்படுகின்றது.

தலைவரின் / பொது முகாமையாளரின் வகிபாகம்

அதிகாரம் மற்றும் தத்துவத்தின் பொருத்தமான சமநிலையொன்றை உறுதிப்படுத்தி, தலைவரின் வகிபாகமானது பிரதம நிறைவேற்று அதிகாரியின் (இலங்கை வங்கியில் பொது முகாமையாளராகக் குறிப்பிடப்படுபவர்) வகிபாகத்திலிருந்து வேறுபட்டுள்ளது. சபையின் சாசனத்தில் தெளிவாக வரையறுக்கப்பட்டவாறு, தலைவரானவர் சுயாதீனமான நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் (INED) ஒருவராக உள்ள அதேவேளை இவ்வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவுள்ள பொது முகாமையாளரானவர் சபையினால் நியமிக்கப்படுவதுடன் சபைப் பதவியொன்றைக் கொண்டிருப்பதில்லை. தலைவரினதும் பொது முகாமையாளரினதும் பிரதான வகிபாகம் / பொறுப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன;



நியமனங்களும் பதவிவிலகல்களும்

அரசுக்குச் சொந்தமான வங்கியொன்றாக, சபைக்கான நியமனங்களானவை அரச வங்கிகளுக்குப் பொறுப்பான அமைச்சரின் ஊடாக இலங்கை அரசாங்கத்தினால் செய்யப்படுகின்றன. பொருத்தப்பாடு மற்றும் தகவு என்பவற்றுக்குத் தேவைப்படும் தகுதிவிதிகள் பூர்த்திசெய்யப்படின் செய்யப்பட்ட நியமனங்களை இலங்கை மத்திய வங்கி அங்கீகரிக்கும். பணிப்பாளர் பதவிவிலகல்கள் மற்றும் பதவி நீக்கங்கள் என்பனவும் அதே அமைச்சருக்கு தொடர்புபடுத்தப்படும் அதேவேளை சபைக்கான அத்தகைய ஏதேனும் மாற்றங்கள் பற்றி இலங்கை மத்திய வங்கிக்கும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்திற்கும் உரியவாறு அறியத்தரப்படுகின்றது

சபை அறிமுகம்

நியமனத்தின் பேரில், இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டம், ஆட்சிக் கட்டமைப்புகள், நியதிச்சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகள், சபையினதும் உபகுழுக்களினதும் சாசனங்கள் அதேபோன்று வேறு ஏதேனும் உரிய சட்டவாக்கம் மற்றும் கொள்கைகள் உள்ளடங்கலாக இவ்வங்கியின் ஆட்சி தொடர்பிலான சகல தகவல்களும் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. வங்கியின் வரலாறு, வியாபார மாதிரி, நிறுவனக் கட்டமைப்பு, குறிப்பிட்ட துறைசார் வியாபாரம் (business verticals) மற்றும் உதவித் தொழிற்பாடுகள் என்பவற்றை விரிவாக எடுத்துரைத்து முழுமையான முன்வைப்பொன்றை பொது முகாமையாளர் மேற்கொள்கின்றார். வங்கித் தொழிற்பாடுகளுடன் பணிப்பாளர்களைப் பரிச்சயப்படுத்தும் பொருட்டு ஒருவருக்கொருவருடனான சந்திப்புகள் மற்றும் திணைக்கள விஜயங்கள் என்பன அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

தகவல்களுக்கான அணுகுவழி

தமது பொறுப்புகளை பயனுறுதி வாய்ந்த விதத்தில் நிறைவேற்றுவதற்கான சகல தகவல்களும் உதவியும் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. சுயாதீனமான தொழில் நிபுணத்துவ ஆலோசனைக்கு பணிப்பாளர்களின் அணுகுவழிக்கான கொள்கையுடன் ஒத்திசைவாக வங்கியின் செலவில் வெளியக உள்ளீட்டிற்காகவும் வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. சபைப் பத்திரங்களுக்கான அணுகுவழியினை வழங்குவதற்கு மின்னணு சபைப் பத்திர முறைமையொன்று பயன்படுத்தப்படுவதுடன் கூட்டங்களுக்கு தயார்படுத்துவதற்கு பணிப்பாளர்களுக்கு போதுமான நேரத்தை அனுமதித்து இம்முறைமையின் ஊடாக உரிய தகவல்கள் சுற்றறிக்கையிடப்படுகின்றன. தீர்மானமெடுத்தலுக்கு உதவிசெய்வதற்குத் தேவைப்படும் ஏதேனும் வளங்களை வழங்கும் பொருட்டு சபைக் கூட்டங்களில் முகாமைத்துவக் குழுவானது தயார்நிலையில் இருக்கும்.

2018 ஆம் ஆண்டில் சபையின் கவனக்குவிப்பு

கொள்கைக் கட்டமைப்புகள்

- அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கொள்கைகள்
  - (1) பங்கிலாபக் கொள்கை
  - (2) இலஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் ஒழிப்புக் கொள்கை
- மீளாய்வு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டவை
  - (1) சட்டப் பிறழ்வுகளை அறிக்கையிடும் (whistle-blowing) கொள்கை
  - (2) சுயாதீனமான தொழில் நிபுணத்துவ ஆலோசனைக்கு பணிப்பாளர்களின் அணுகுவழி பற்றிய கொள்கை
  - (3) சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் கொள்கை
  - (4) சந்தைப்படுத்தல் கொள்கை
  - (5) திரவத்தன்மை இடர் முகாமைத்துவக் கொள்கை
  - (6) குழும இடர் முகாமைத்துவக் கொள்கை

தொழில்நுட்பம்

- தரவு நிலைய நவீனமயமாக்கல் கருத்திட்டத்தின் அமுலாக்கம்
- சபைத் தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் குழுவொன்றின் தாபிப்பு

ஒழுங்கான இற்றைப்படுத்தல்கள்

- செயற்றிறன் மற்றும் நிதி உறுதிப்பாடு தொடர்பிலான நிதி அறிக்கைகள்
- உபகுழுக்களின் பரிந்துரைகளும் சிறப்புக்கூறுகளும்
- துணை நிறுவன செயற்றிறன் இற்றைப்படுத்தல்கள்
- இணக்கப்பாட்டு அறிக்கைகள்

தந்திரோபாயம்

- வங்கியின் கூட்டாண்மைத் திட்டம் 2019 - 2021 தொடர்பிலான உள்ளீடுகளை வழங்குவதற்கான தந்திரோபாய திட்டமிடல் அமர்வு (ஒரு நாட்பொழுது)

நிதி விடயங்கள்

- 2019 வரவுசெலவுத்திட்டம்
- 2018 செயற்றிறன் மீளாய்வு பங்கிலாப அங்கீகாரம்
- நிதியீட்ட மற்றும் திரவத்தன்மைத் திட்டங்கள் மூலதன நிலை

இடர் முகாமைத்துவம்

- இடர் நாட்டத்தை அங்கீகரித்தல்
- இடர் முகாமைத்துவக் கட்டமைப்பின் மீளாய்வும் அங்கீகாரமும்
- இணையம்சார் பாதுகாப்பு
- பேணுதலும் செயலாற்றுகை அற்ற கடன்களை முகாமை செய்தலும்
- பாசல் III நிலைக்கான இணக்கப்பாடு
- பிரதம தகவல் பாதுகாப்பு அலுவலர் ஒருவரின் நியமனம
- தகவல் காட்சிமுறைகளுடன்கூடிய (dashboards) இடர் அறிக்கைகள்

கூட்டாண்மை ஆட்சி

சபையின் செயற்பாடுகள்

சபையானது ஒரு மாதத்திற்கு கிட்டத்தட்ட இரு தடவைகள் கூடுவதுடன் 2018 ஆம் ஆண்டில் 23 தடவைகள் கூட்டங்கள் கூட்டப்பட்டன. கூட்ட நிகழ்ச்சிநிரல்களை உருவாக்குவதிலும், தகவல்களைச் சுற்றிப்பரப்புவதிலும், சபைக் கூட்டங்களை நடாத்துவதிலும் மற்றும் நிகழ்ச்சிக் குறிப்புகளைப் பேணுவதிலும் சகல நடைமுறைகளும் உரியவாறு பின்பற்றப்படுகின்றன என்பதை இலங்கை வங்கிச் செயலாளர் / சபைச் செயலாளர் உறுதிப்படுத்துகின்றார். கூட்டாண்மைத் திட்டமிடல், இடர் முகாமைத்துவம், இணக்கப்பாடு மற்றும் ஆட்சி விடயங்கள் போன்ற வங்கிக்கு முக்கியமான விடயங்களைக் கருத்திற்கொள்வதற்கு போதுமானளவு நேரத்தை சபை குறித்தொதுக்குவதை உறுதிப்படுத்துவதற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன.

வருட ஆரம்பம்

- சபைக் கூட்டங்களுக்கும் உபகுழுக் கூட்டங்களுக்கும் நாட்காட்டி உருவாக்கப்படுவதுடன் வருடாந்த நாட்காட்டி ஒன்றுக்கூடாக பணிப்பாளர்களுக்கு அறிவித்தல் வழங்கப்படுகின்றது

நிகழ்ச்சிநிரல்

- தலைவரினால் கையளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் இலங்கை வங்கிச் செயலாளர் / சபைச் செயலாளர் நிகழ்ச்சிநிரலை ஒழுங்குபடுத்துகின்றார்.
- சபைக் கூட்டங்களில் கலந்துரையாடப்படுவதன் பொருட்டு நிகழ்ச்சிநிரலுக்கான பிரேரிப்புகளைச் சமர்ப்பிப்பதற்கு பணிப்பாளர்களுக்கு சுதந்திரம் உண்டு
- அவசியமானவிடத்து உள்ளக வெளியக அபிவிருத்திகளிலிருந்து எழும் விடயங்கள் நிகழ்ச்சிநிரலுடன் சேர்க்கப்படுகின்றன.

சபைப் பத்திர தொகுப்பும் சுற்றிப்பரப்பலும்

- சபைப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு கூட்டத்திற்கு குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் பாதுகாப்பான இணையவாசல் (portal) ஒன்றுக்கூடாக பணிப்பாளர்களுக்கு இலத்திரனியல் ரீதியில் சுற்றிப்பரப்பப்படுகின்றன. கலந்துரையாடப்படவுள்ள விடயங்களை மீளாய்வு செய்வதற்கும் தேவைப்படின் மேலதிக தெளிவுபடுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் போதுமான நேரத்தை இது உறுதிப்படுத்துகின்றது.

சபைக் கூட்டம்

- செயற்றிறன் இற்றைப்படுத்தல்கள், இணக்கப்பாட்டு அறிக்கைகள் மற்றும் உபகுழுக்களின் பரிந்துரைகள் போன்ற சில நியம விடயங்களை சபைக் கூட்டங்கள் கொண்டுள்ளன.
- தேவைப்படின் மேலதிக தெளிவுபடுத்தல்களை வழங்கும் பொருட்டு முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்கள் சபைக் கூட்டங்களுக்கு அழைக்கப்படுகின்றனர்.

பின்-கூட்டம்

- இலங்கை வங்கிச் செயலாளர் / சபைச் செயலாளர் கூட்ட அறிக்கைகளைத் தயாரித்து கூட்டத்தின் 10 நாட்களுக்குள் பாதுகாப்பான இலத்திரனியல் முறைமை (e-Solution) ஒன்றுக்கூடாக பணிப்பாளர்களுக்கிடையே சுற்றிப் பரப்புகின்றார்.
- வரைவுக் கூட்ட அறிக்கைகளானவை கூட்டத்தினைத் தொடர்ந்துவரும் நாளில் சிரேட்ட முகாமைத்துவக் குழுவிற்கு சுற்றிப் பரப்பப்படுகின்றன.
- அடுத்துவரும் சபைக் கூட்டத்தில் கூட்ட அறிக்கைகள் அங்கீகரிக்கப்படுகின்றன.
- முக்கியமான விடயங்கள் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை

எமது சபை மீதான இணைந்த திறன்களும் பன்முக ஆழ்ந்த நுண்ணறிவும் எமது வங்கியினை தோற்றம்பெறும் இடர்களுக்கும் தொழிற்படு தோற்றப்பாட்டிலுள்ள வாய்ப்புகளுக்கும் பயனுறுதி வாய்ந்த விதத்தில் செயல்முகங்கொடுப்பதற்கு இயலுமைப்படுத்தியுள்ளது.

பணிப்பாளரின் பெயர்	நியமிக்கப்பட்ட திகதியும் பதவிவிலகல் திகதியும்	தகைமை / தகைமைகள்	அனுபவம்	இலங்கை வங்கியில் அவர்களின் சபைப் பதவியின் இறுதித் திகதியிலுள்ளவாறு உரிய பணிப்பாளர் செயலாற்றிய நிறுவன பெயர் / பெயர்கள்	அவர்கள் சேவையாற்றியுள்ள வங்கியின் சபை உபகுழுக்கள்
திரு. ரொனால்ட் சி பெரேரா **சனாதிபதி சட்டத்தரணி** தலைவர், சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்	2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆம் திகதி - 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி (2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மீள்நியமிக்கப்பட்டார்)	• இலங்கை, கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட இளமாணிப் பட்டம் • ஐக்கிய இராச்சியத்தின் நோத்தும்புரியா பல்கலைக்கழகத்திலிருந்து சர்வதேச வர்த்தகச் சட்டத்தில் சட்ட முதுமாணி (எல்எல்.எம்.) பட்டம்	1. இலங்கை வங்கியினதும், மிரேக்கா கெப்பிற்றல் லான்ட் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனத்தினதும், மிரேக்கா ஹோம்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனத்தினதும் சபைகளில் பணிப்பாளர் ஒருவராகவும் இலங்கை வியாபாரிகள் வங்கி மற்றும் நிதி பி.எல்.சி நிறுவனத்தின் தலைவராகவும் சேவையாற்றியமை. 2. முதனிலை நீதிமன்றங்கள் அதேபோன்று மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் ஆகியவற்றில் ஒரு பரந்துபட்ட சட்ட நடைமுறையுடன் கூடிய ஓர் அனுபவமிக்க வழக்கறிஞர். 3. சிவில் மற்றும் குற்றவியல் வழக்கு, இணக்கப்பாடு, வணிக மற்றும் போக்குவரத்து ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளை வரைதல் மற்றும் வணிக நடுவர்தீர்ப்பு என்பவற்றில் பரந்துபட்ட அனுபவம். 4. வணிகச் சட்டம், வங்கியியல் சட்டம், கைத்தொழில் சட்டம், விதிப்பாணைகள், அவதூறு, தேர்தல் மனுக்கள், சிவில் மேன்முறையீடுகள், மீளாய்வு விண்ணப்பங்கள், செயலாணை விண்ணப்பங்கள் மற்றும் அடிப்படை உரிமை வழக்குகள் ஆகியவற்றில் கைதேர்ந்தவர்.	1. தலைவர், வரையறுக்கப்பட்ட பாங் ஒப் சிலோன் (UK) நிறுவனம். 2. பதில் தலைவர், வரையறுக்கப்பட்ட ஹோட்டல்ஸ் கொழும்பு (1963) நிறுவனம்.	1. தலைவர், சபையின் பெயர்குறித்த நியமன மற்றும் கூட்டாண்மை ஆட்சிக் குழு 2. உறுப்பினர், சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு

கூட்டாண்மை ஆட்சி

பணிப்பாளரின் பெயர்	நியமிக்கப்பட்ட திகதியும் பதவிவிலகல் திகதியும்	தகைமை / தகைமைகள்	அனுபவம்	இலங்கை வங்கியில் அவர்களின் சபைப் பதவியின் இறுதித் திகதியிலுள்ளவாறு உரிய பணிப்பாளர் செயலாற்றிய நிறுவன பெயர் / பெயர்கள்	அவர்கள் சேவையாற்றியுள்ள வங்கியின் சபை உபகுழுக்கள்
திரு எஸ் ஆர் ஆட்டிகல சுயாதீனமற்ற நிறைவேற்றுத் தரம் சாராத பதவி வழிவந்த பணிப்பாளர்	2016 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 27 ஆம் திகதி - 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி	• ஐக்கிய இராச்சியத்தின் வோர்விக் பல்கலைக்கழகத்திலிருந்து பொருளாதாரத்தில் விஞ்ஞான முதுமாணி (MSc) பட்டம் • இலங்கை, கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து பௌதீக விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி (BSc) பட்டம்.	1. தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளரும் பதில் தலைவரும். 2. இலங்கை வங்கியினதும், பிராந்திய அபிவிருத்தி வங்கியினதும், இலங்கை முதலீட்டுச் சபையினதும், துறைமுகங்கள் அதிகாரசபையினதும் மற்றும் வரையறுக்கப்பட்ட விமான மற்றும் விமான சேவைகள் (இலங்கை) நிறுவனத்தினதும் பணிப்பாளர். 3. பணிப்பாளர் அதிபதி, அரசிறைக் கொள்கைத் திணைக்களம் மற்றும் அரச தொழில்முயற்சிகள் திணைக்களம், நிதி அமைச்சு 4. வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தை உருவாக்குவதற்கு பங்களிப்புச் செய்தமை மற்றும் சீனாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (FTA) சார்பில் தொழில்நுட்பக் குழுவை வழிநடாத்தியமை. 5. உதவி ஆளுநர் - இலங்கை மத்திய வங்கி (தற்போது ஒரு பிரதி ஆளுநர்). 6. திறைசேரியின் பிரதிச் செயலாளர், நிதி அமைச்சு	1. ஆணைக்குழு உறுப்பினர் -இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு	1. உறுப்பினர், சபையின் கணக்காய்வு குழு 2. உறுப்பினர், சபையின் ஒன்றினைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு 3. உறுப்பினர், சபையின் மனித வளங்களும் ஊதியமும் குழு சுநஅரநெசயவழைெ ஊழஅஅவைவநந

பணிப்பாளரின் பெயர்	நியமிக்கப்பட்ட திகதியும் பதவிவிலகல் திகதியும	தகைமை / தகைமைகள்	அனுபவம்	இலங்கை வங்கியில் அவர்களின் சபைப் பதவியின் இறுதித் திகதியிலுள்ளவாறு உரிய பணிப்பாளர் செயலாற்றிய நிறுவன பெயர் / பெயர்கள்	அவர்கள் சேவையாற்றியுள்ள வங்கியின் சபை உபகுழுக்கள்
திரு. ரானெல் ரீ. விஜேசிங்ஹ சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்	2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதி - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆம் திகதி	• ஐக்கிய அமெரிக்காவின் (யு.எஸ்.ஏ) பிற்ஸ்பேர்க் பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டம • பொது மற்றும் சர்வதேச அலுவல்கள் பட்டப்பின் கல்லூரியில் பல்தேசியக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசியல் இடர்ப் பகுப்பாய்வு பற்றி கற்றுக்கொண்டுள்ளமை. • இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் (CA Sri Lanka) சக உறுப்பினர்.	1. 36 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்துடன்கூடிய சுயாதீனமான சர்வதேச முகாமைத்துவ மதியுரைஞர். 2. கடந்த இரண்டரை தசாப்தங்களுக்கு மேலாக இலங்கை அரசாங்கத்திற்கான ஆலோசனை வகிபாகங்கள். 3. ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பல்தரப்பு அபிவிருத்திப் பங்காளர்கள் சார்பில் வெளிநாட்டு அரசாங்கங்களுக்காக அரச துறையிலான மதியுரைப் பணி. 4. வியாபார அபிவிருத்திப் பணிப்பாளர், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் குரூப் நிறுவனம். 5. பணிப்பாளர், ஜோன்ஸ் கீல்ஸ் ஹோட்டல்ஸ் பிஎல்சி நிறுவனம் / தலைவர், சபைக் கணக்காய்வுக் குழு. 6. பணிப்பாளர், வரையறுக்கப்பட்ட ஹோட்டல்ஸ் கொழும்பு (1963) நிறுவனம். 7. முகாமையாளர், பெஹாமெஸ் இலுள்ள டெலொய்ற்று. 8. பங்காளரும் மதியுரை மற்றும் நிதி ஆலோசனைச் சேவைகளின் தலைவரும், எம்எஸ் பிறைஸ்வோட்டர்ஹவுஸ் கூப்பேர்ஸ் நிறுவனம், பட்டயக் கணக்காளர், இலங்கை. 9. தலைவர், அயோஜனா பன்ட் மனேஜ்மென்ற் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனம். 10. பணிப்பாளர், லங்கா வென்செர்ஸ் லிமிட்டெட் நிறுவனம். 11. ஆணைக்குழு உறுப்பினர், இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு. 12. தலைவர், மின்வலு மற்றும் வலுசக்தி அமைச்சின் கண்காணிப்பு மற்றும் மதியுரைக் குழு. 13. உறுப்பினர், தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் ஆளும் சபை. 14. உறுப்பினர், முகாமைத்துவ பட்டப்பின் கற்கைகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபை. 15. ஆலோசகர், சார்க் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம். 16. உறுப்பினர், பிரதான குழு, சிலோன் வர்த்தக சம்மேளனம். 17. ஆலோசகர், இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளன சமூகம்.. 18. கடந்தகாலத் தலைவர், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம். 19. கடந்தகாலத் தலைவர், ஆசிய மற்றும் பசுபிக் கணக்காளர்களின் 23 நாடுகள் கூட்டுக்குழு. 20. உறுப்பினர், முதலாவது நுகர்வோர் அலுவல்கள் அதிகாரச் சட்டத்தின் கீழான நுகர்வோர் அலுவல்கள் சபை 21. உறுப்பினர், கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை.	1. ஆணைக்குழு உறுப்பினர் - இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு (தற்போது இதன் தலைவர்) 2. பணிப்பாளர், கொலதெனிய ஹைட்ரோபவர் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனம். .	1. தலைவர், சபையின் கணக்காய்வுக் குழு

கூட்டாண்மை ஆட்சி

பணிப்பாளரின் பெயர்	நியமிக்கப்பட்ட திகதியும் பதவிலகல் திகதியும்	தகைமை / தகைமைகள்	அனுபவம்	இலங்கை வங்கியில் அவர்களின் சபைப் பதவியின் இறுதித் திகதியிலுள்ளவாறு உரிய பணிப்பாளர் செயலாற்றிய நிறுவன பெயர் / பெயர்கள்	அவர்கள் சேவையாற்றியுள்ள வங்கியின் சபை உபகுழுக்கள்
திரு. எச். பி. அஜித் குணவர்த்தன சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்	2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06 ஆம் திகதி - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆம் திகதி	• வியாபார நிர்வாகத்தில் டிப்ளோமா. • பட்டய நிதிப் பகுப்பாய்வாளர் - பகுதி II.	1. பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அலுவலர், வரையறுக்கப்பட்ட ஜனசக்தி பிணையங்கள் நிறுவனம். 2. பணிப்பாளர், ஷாற்ரியா ஹோல்டிங்ஸ் பிஎல்சி நிறுவனம். 3. பணிப்பாளர், பெஸ்ற் கெப்பிற்றல் ஹோல்டிங்ஸ் பிஎல்சி நிறுவனம். 4. பணிப்பாளர், கெல்சீ ஹோம்ஸ் பிஎல்சி நிறுவனம். 5. பணிப்பாளர், இலங்கை வியாபாரிகள் வங்கி மற்றும் நிதி பி.எல்.சி நிறுவனம். 6. பணிப்பாளர், கொத்மலே ஹோல்டிங்ஸ் பிஎல்சி நிறுவனம். 7. உதவிப் பொது முகாமையாளர், செலிங்கோ சிறிராம் செக்குரிற்றீஸ் லிமிட்டெட் நிறுவனம். 8. நிறைவேற்றுநர் / உதவிப் பொது முகாமையாளர், செலிங்கோ சிறிராம் கெப்பிற்றல் மனேஜ்மென்ற் சேவிஸ் லிமிட்டெட் நிறுவனம். 9. நிறைவேற்றுநர், பாற்லீற் ஸ்ரொக் புரோக்கெர்ஸ் லிமிட்டெட் நிறுவனம். 10. நிறைவேற்றுநர், செலிங்கோ ரேடிங் கம்பனி லிமிட்டெட் நிறுவனம்.	1. பணிப்பாளர், லங்கா செக்குரிற்றீஸ் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனம்.	1. தலைவர், சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு 2. உறுப்பினர், சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு 3. உறுப்பினர், சபையின் பெயர்குறித்த நியமன மற்றும் கூட்டாண்மை ஆட்சிக் குழு
திரு. சமந்த ராஜபக்ஷ சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்	2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் திகதி - 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி	• வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டம், சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், இலங்கை. • பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தினதும் சக உறுப்பினர், லண்டன், ஐக்கிய இராச்சியம். • இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் (CA Sri Lanka) சக உறுப்பினர்.. • ஐக்கிய இராச்சியத்தின் பட்டய சந்தைப்படுத்தல் நிறுவகத்தின் உறுப்பினர்.	1. சிரேட்ட பதவிநிலை கணக்காளர் / மதியுரைஞர், எம்/எஸ் ஏர்ன்ஸ்ற் & யங் நிறுவனம், பட்டயக் கணக்காளர்கள், கொழும்பு, இலங்கை. 2. பணிப்பாளர் / பொது முகாமையாளர், இன்போமற்றிக்ஸ் இன்டர்நஷனல் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனம், கொழும்பு, இலங்கை. 3. பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அலுவலர், சிஎப் வென்சர் பன்ட் லிமிட்டெட் நிறுவனம். 4. பணிப்பாளர், சென்ரல் பினான்ஸ் கொம்பனி பிஎல்சி நிறுவனம், கொழும்பு, இலங்கை. 5. சிரேட்ட கருத்திட்ட முகாமையாளர், உலகளாவிய - ஏரி & ரி நிறுவனம் – நியூ ஜேர்சீ, யுஎஸ்ஏ. 6. குழும நிதி மற்றும் வியாபார அபிவிருத்திப் பணிப்பாளர், ஷாற்ரியா ஹோல்டிங்ஸ் பிஎல்சி நிறுவனம். 7. பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அலுவலர், சொப்ற்லொஜிக் கொமியுனிகேஷன்ஸ் சேவிஸ்சஸ் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனம்.	1. தலைவர் / பணிப்பாளர் - கிற்ரா ஹோல்டிங்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனம். 2. பணிப்பாளர், ஆசிரி ஹொஸ்பிட்டல் ஹோல்டிங்ஸ் பிஎல்சி நிறுவனம். 4. பணிப்பாளர் - ஆசிரி சேர்ஜிக்கல் ஹொஸ்பிட்டல்ஸ் பிஎல்சி நிறுவனம். 5. பணிப்பாளர் - ராக்குவென் குரூப் ஒப் ஹோட்டல்ஸ்.	1. தலைவர், சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு 2. உறுப்பினர் (2017 ஒகஸ்ட் 11 ஆம் திகதியிலிருந்து 2018 யூலை 26 ஆம் திகதி வரை) மற்றும் அதன் பின்னர் தலைவர், வங்கியின் சபைக் கணக்காய்வுக் குழு (2018 யூலை 26 ஆம் திகதியிலிருந்து 2018 நவம்பர் 25 ஆம் திகதி வரை)

பணிப்பாளரின் பெயர்	நியமிக்கப்பட்ட திகதியும் பதவிவிலகல் திகதியும	தகைமை / தகைமைகள்	அனுபவம்	இலங்கை வங்கியில் அவர்களின் சபைப் பதவியின் இறுதித் திகதியிலுள்ளவாறு உரிய பணிப்பாளர் செயலாற்றிய நிறுவன பெயர் / பெயர்கள்	அவர்கள் சேவையாற்றியுள்ள வங்கியின் சபை உபகுழுக்கள்
திரு. சமந்த ராஜபக்ஷவின் தொடர்ச்சி			8. பணிப்பாளர், சொப்ற்லொஜிக் ஹோல்டிங்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் வியாபார அபிவிருத்தி. 9. தலைவர், சொப்ற்லொஜிக் கிரெடிற் பிஎல்சி நிறுவனம். 10. பணிப்பாளர், சொப்ற்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி நிறுவனம். 11. பணிப்பாளர், சென்ரல் ஹொஸ்பிட்டல் பிஎல்சி நிறுவனம். 12. பணிப்பாளர், சொப்ற்லொஜிக் கெப்பிற்றல் பிஎல்சி நிறுவனம். 13. குழும முகாமைத்துவப் பணிப்பாளர், அசோசியேற்ரட் மோட்டோவேஸ் (பிறைவெட்) லிமிட்டெட் (AMW) நிறுவனம். 14. பணிப்பாளர், ஏஎம்டபிள்யு கப்பிற்றல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி நிறுவனம், அசோசியேற்ரட் புரொபெற்றி டிவெலொப்மென்ட் லிமிட்டெட் நிறுவனம், அசோசியேற்ரட் ஓட்டோவேஸ் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனம், அசோசியேற்ரட் மோட்டோர் (லங்கா) கம்பனி லிமிட்டெட் நிறுவனம், அசோசியேற்ரட் குளோபல் ரேடிங் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனம், அசோசியேற்ரட் றப்பர் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட் நிறுவனம், அசோசியேற்ரட் யுனிவேர்சல் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனம் மற்றும் அல் புற்றைம் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனம்.	6. பணிப்பாளர் - தேசிய பயிலுநர், கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை	
திரு. மொஹான் விஜேசிங்ஹ சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்	2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 02 ஆம் திகதி	• புருஸ்செல்ஸ் நகரின் வ்ரீஜ் (Vrije) பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட சர்வதேச சட்ட ஒத்துழைப்பில் முதுமாணிப் பட்டம். • இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் உயர் நீதிமன்றத்தின் மன்றாடியார். • அவுஸ்திரேலிய தலைநகர ஆட்புல (Australian Capital Territory) உயர் நீதிமன்றின் மன்றாடியார் மற்றும் வழக்குரைஞர். • அவுஸ்திரேலிய மேல் நீதிமன்றின் வழக்குரைஞர். • இலங்கை உயர் நீதிமன்றின் சட்டத்தரணி.	1. பணிப்பாளர், மக்கள் வங்கி. 2. குழும ஆளணி முகாமையாளர், மஹராஜா குரூப் ஒப் கொம்பனீஸ். 3. உதவிப் பணிப்பாளர், அவுஸ்திரேலிய ஒய்வுறுகால ஊதிய ஆணைக்குழு. 4. பணிப்பாளர் நாயகம், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம். 5. நிறைவேற்றுப் பணிப்பாளர், தேசிய லொத்தர் சபை.	1. பொது முகாமையாளர் - சட்டம் - கொழும்பு இன்டர்நஷனல் கொன்ரைனர் ரேர்மினல்ஸ் லிமிட்டெட் நிறுவனம். 2. பணிப்பாளர், மக நெகும கொன்சல்ரன்சி அன்ட் புரொஜெக்ற் மனேஜ்மென்ற் சேவிஸ்சஸ் கொம்பனி (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனம். 3. பணிப்பாளர், இன்டர்ஓசென் சேவிஸ்சஸ் லிமிட்டெட் நிறுவனம். 4. சிரேட்ட வெளிநாட்டு ஆலோசகர் - சீன மேர்சன்ட்ஸ் போற்ஸ் ஹோல்டிங்ஸ் கம்பனி லிமிட்டெட் நிறுவனம்.	

கூட்டாண்மை ஆட்சி

பணிப்பாளரின் பெயர்	நியமிக்கப்பட்ட திகதியும் பதவிவிலகல் திகதியும்	தகைமை / தகைமைகள்	அனுபவம்	இலங்கை வங்கியில் அவர்களின் சபைப் பதவியின் இறுதித் திகதியிலுள்ளவாறு உரிய பணிப்பாளர் செயலாற்றிய நிறுவன பெயர் / பெயர்கள்	அவர்கள் சேவையாற்றியுள்ள வங்கியின் சபை உபகுழுக்கள்
2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சபையின் மீளுருவாக்கத்துடன்					
திரு. நீல் ஏ உமகிலிய தவிசாளர் சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர	2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி - 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி	• ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தின் சக உறுப்பினர். • பிரித்தானிய முகாமைத்துவ நிறுவகத்தின் உறுப்பினர்.	1. பணிப்பாளர், சலு சல லிமிட்டெட் நிறுவனம். 2. பணிப்பாளர், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை. 3. பணிப்பாளர், இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை (ICTA). 4. இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையின் உறுப்பினர். 5. ஆடை பங்குஒதுக்கீட்டு சபையின் உறுப்பினர். 6. இலங்கை புடவைகள் மற்றும் ஆடைகளுக்கான நிறுவகத்தின் ஆளுநர் சபையின் உறுப்பினர்.	1. பணிப்பாளர், டயல் ரெக்ஷ்ரைல் இன்டஸ்றீஸ் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனம். 2. பணிப்பாளர், விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை 3. இலங்கை ஜேர்மன் வியாபார சபையின் உறுப்பினர்.	1. தலைவர், சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு 2. தலைவர், சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு
அம்மணி விசாக்கா அமரசேகர சுயாதீனமற்ற நிறைவேற்றுத் தரம் சாராத பதவி வழிவந்த பணிப்பாளர	2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி - 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி	• ஐக்கிய இராச்சியத்தின் லண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பொருளாதாரம் மற்றும் முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி (கௌரவ) பட்டம். • ஐக்கிய அமெரிக்காவின் வன்டெபில்ற் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட அபிவிருத்திப் பொருளாதாரத்தில் முதுகலைமாணிப் பட்டம். • ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர். • பட்டய அரச நிதிக் கணக்காளர்.	1. பின்வரும் பதவிநிலைகளில் 2002 ஆம் ஆண்டிலிருந்து நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் பொதுத் திறைசேரியில் நிதி, படுகடன் முகாமைத்துவம், மூலதனச் சந்தைகள் மற்றும் அரசுக்குடமையான தொழில்முயற்சிகள் தொடர்பான மேற்பார்வை விடயங்கள்; அ. பணிப்பாளர், வெளிநாட்டு வளத் திணைக்களம். ஆ. பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர், அரச தொழில்முயற்சிகள் திணைக்களம். இ. உதவிப் பணிப்பாளர், அரச தொழில்முயற்சிகள் திணைக்களம். ஈ. உதவிப் பணிப்பாளர், அரச நிதித் திணைக்களம். 2. பணிப்பாளர், இலங்கை மின்சார சபை. 3. பணிப்பாளர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம். 4. பணிப்பாளர், மக்கள் வங்கி.	1. நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வளத் திணைக்களப் பணிப்பாளர்.	1. உறுப்பினர், சபைக் கணக்காய்வுக் குழு 2. உறுப்பினர், சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு 3. உறுப்பினர், சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு 4. தலைவர், சபையின் பெயர்குறித்த நியமன மற்றும் கூட்டாண்மை ஆட்சிக் குழு
திரு. பி லலித் பி வித்தான சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்	2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி - 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 திகதி	• வியாபார நிர்வாக முதுமாணி (MBA) பட்டம், சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம். • கலை இளமாணி (BA) (கௌரவ) பட்டம், மன்செஸ்ரெர் மெற்ரோபொலிற்றன் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம் (யூகே). • ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தின் சக உறுப்பினர் (FCMA). • இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் சக உறுப்பினர் (FCA). • ஐக்கிய அமெரிக்காவிலுள்ள (USA) கருத்திட்ட முகாமைத்துவ நிறுவகத்தின் (PMI) கருத்திட்ட முகாமைத்துவ நிபுணர்.	1. பிரான்டிக்ஸ் குரூப் நிறுவனம், எம்/எஸ் ஏர்ன்ஸ்ற் & யங் நிறுவனம், ஆம்ஸ்ரெர்டம் ரொற்றெர்டம் (Amro) பாங் நிறுவனம், ஐபீஎம் உலக வர்த்தகக் கூட்டுத்தாபனம், கார்சொன் கியும்பேர்ப் பிஎல்சி நிறுவனம், எம்ஜேஎப் குரூப் நிறுவனம், ஐக்கிய அமெரிக்காவிலுள்ள யமஹா கூட்டுத்தாபனம் மற்றும் சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் உள்ளடங்கலாக பல நிறுவனங்களில் சிரேட்ட முகாமைத்துவ பதவிகளில் 25 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம். 2. இலங்கை வங்கி சபையில் பணிப்பாளர். 3. பணிப்பாளர், தங்கொட்டுவ போர்ஸின் பிஎல்சி நிறுவனம். 4. பணிப்பாளர், இலங்கை வியாபாரிகள் வங்கி மற்றும் நிதி பிஎல்சி நிறுவனம். 5. பணிப்பாளர், சீலீஸ் லிமிட்டெட் நிறுவனம். 6. பணிப்பாளர், செலான் வங்கி பிஎல்சி நிறுவனம். 7. ஆணையாளர், தொலைத்தொடர்பு ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு. 8. இணைத் தலைவர், இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் நிதிக் குழு. 9. உப தலைவர், கருத்திட்ட முகாமைத்துவ நிறுவகம், இலங்கைப் பிரிவு.	1. பிரதம நிறைவேற்று அதிகாரி, சிறீலங்கன் கேற்றரிங் லிமிட்டெட் நிறுவனம். 2. ஐக்கிய அமெரிக்காவின் பொமோனாவிலுள்ள கலிபோர்னியா அரச பல்தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் ஆடை வியாபார மற்றும் முகாமைத்துவ கல்லூரிக்கான மதியுரைச் சபையின் உறுப்பினர்.	1. தலைவர், சபைக் கணக்காய்வுக் குழு 2. உறுப்பினர், சபையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப குழு

பணிப்பாளரின் பெயர்	நியமிக்கப்பட்ட திகதியும் பதவிவிலகல் திகதியும்	தகைமை / தகைமைகள்	அனுபவம்	இலங்கை வங்கியில் அவர்களின் சபைப் பதவியின் இறுதித் திகதியிலுள்ளவாறு உரிய பணிப்பாளர் செயலாற்றிய நிறுவன பெயர் / பெயர்கள்	அவர்கள் சேவையாற்றியுள்ள வங்கியின் சபை உபகுழுக்கள்
அம்மணி ஏ வீ கே மாதவி ஹேரத சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்	2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி - 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 திகதி	• பொருளாதாரத்தில் முது தத்துவமாணி (M. Phil) பட்டம், பேராதனைப் பல்கலைக்கழகம். • கலை இளமாணி (கௌரவ) பட்டம், பேராதனைப் பல்கலைக்கழகம்.	1. தலைவர், கந்துரட்ட அபிவிருத்தி வங்கி 2. நிறைவேற்றுப் பணிப்பாளர், பிராந்திய அபிவிருத்தி வங்கி.	1. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியலில் சிரேட்ட விரிவுரையாளர்.	1. உறுப்பினர், சபைக் கணக்காய்வுக் குழு 2. உறுப்பினர், சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு
திரு எச் இசுறு பாலபட்டபெந்தி சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்	2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி - 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 திகதி	• ஐக்கிய அமெரிக்காவின் பென்சில்வேனியாவின் பிற்ஸ்பேர்க்கிலுள்ள பிற்ஸ்பேர்க் சட்டக் கல்லூரி பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட சட்ட முதுமாணி (LL.M) பட்டம். • இலங்கை உச்ச நீதிமன்றத்தின் சட்டத்தரணி.	1. அரச சட்டத்தரணி, இலங்கை சட்டமா அதிபர் திணைக்களம். 2. தூதுவரும் தூதுவராலய அலுவலகத்தின் தலைவரும், நெதர்லாந்தின் ஹேக் நகரத்திலுள்ள இலங்கைத் தூதரகம். 3. பணிப்பாளர், வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம். 4. பணிப்பாளர், செலான் வங்கி பிஎல்சி நிறுவனம். 5. பணிப்பாளர், புளூ டயமன்ட்ஸ் ஜுவலறி வேர்ள்வைட் பிஎல்சி நிறுவனம்.		1. உறுப்பினர், சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு 2. உறுப்பினர், சபையின் பெயர்குறித்த நியமன மற்றும் கூட்டாண்மை ஆட்சிக் குழு 3. உறுப்பினர், சபையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப குழு
திரு ஜி ஹர்ஷ விஜயவர்தன சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்	2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி - 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 திகதி	• உயிர் இரசாயனவியல் மற்றும் இரசாயனவியல் என்பவற்றை பிரதான பாடங்களாகவும் கணிதத்தை துணைப்பாடமாகவும் கொண்ட விஞ்ஞான இளமாணிப் பட்டம், மையாமிப் பல்கலைக்கழகம், ஐக்கிய அமெரிக்கா. • பிரித்தானிய கணனி சங்கத்தின் சக நிபுணர் (FBCS)..	1. அரசாங்கத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருத்திட்டங்களில் உள்வாங்கப்பட்டமையும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் இலங்கை தகவல் திணைக்களம் போன்ற அரசாங்க வலையமைப்புகளை வடிவமைத்து அமுல்படுத்தியுள்ளமையும். 2. கொழும்பு பல்கலைக்கழகத்தின் மென்பொருள் அபிவிருத்தி அலகினை (SDU) தாபிப்பதற்குப் பொறுப்பாகவிருந்தமை. 3. பிறப்பு, திருமண மற்றும் இறப்பு சான்றிதழ் வழங்கல் முறைமை மற்றும் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் உருவாக்கப்பட்ட குடும்பத் தலைவர் பட்டியல் போன்ற பிரதான தேசிய மட்ட மென்பொருள் கருத்திட்டங்கள் சிலவற்றுக்குப் பொறுப்பாகவிருந்தமை. 4. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குறுத்துகை ஆணைக்குழுவின் (TRCSL) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) மதியுரைஞர். 5. பணிப்பாளர், இலங்கை அரசாங்க உட்கட்டமைப்பு பரிமாற்றம், இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை (ICTA) 6. ஐஎஸ்ஓசி எல்கே சப்ரெரின் ஸ்தாபகத் தலைவர். 7. ICANN இனது சிங்கள உருவாக்க குழுவின் இணைத் தலைவர். 8. தீக்ஷண நிறுவனத்தின் (கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கல்லூரியின் இணைக் கம்பனியொன்று) பிரதம தொழிற்பாட்டு அலுவலர் / பிரதம தொழில்நுட்ப அலுவலர். 9. மதியுரைஞர் / மென்பொருள் அபிவிருத்தி அலகின் தலைவர், கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கல்லூரி.	1. பணிப்பாளர், எல்கே டொமெயின் ரெஜிஸ்றி. 2. பணிப்பாளர், ஆம்சொப்ற் ரெக்னோலொஜிஸ் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனம்.	1. தலைவர், சபையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப குழு 2. உறுப்பினர், சபைக் கணக்காய்வுக் குழு 3. உறுப்பினர், சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு 4. உறுப்பினர், சபையின் பெயர்குறித்த நியமன மற்றும் கூட்டாண்மை ஆட்சிக் குழு

(2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில், புதிய சபையொன்று தாபிக்கப்பட்டதுடன் அவற்றின் விபரக்குறிப்புகள் 25 தொடக்கம் 27 வரையான பக்கங்களின் காணப்படுகின்றன)

கூட்டாண்மை ஆட்சி

சபை நாட்காட்டி மற்றும் வருகை

1 ஆம் காலாண்டு	2 ஆம் காலாண்டு	3 ஆம் காலாண்டு	4 ஆம் காலாண்டு
2018 ஜனவரி 05	2018 ஏப்ரல் 02	2018 யூலை 09	2018 ஒக்டோபர் 04
2018 ஜனவரி 05 (விசேட)	2018 ஏப்ரல் 17	2018 யூலை 13	2018 ஒக்டோபர் 17
2018 ஜனவரி 19	2018 மே 02	2018 யூலை 26	2018 நவம்பர் 27
2018 பெப்ரவரி 07	2018 யூன் 06	2018 ஒகஸ்ட் 10	2018 டிசெம்பர் 06
2018 பெப்ரவரி 15	2018 யூன் 29	2018 ஒகஸ்ட் 23	
2018 பெப்ரவரி 20		2018 செப்டெம்பர் 07	
2018 மார்ச் 08		2018 செப்டெம்பர் 19	

பணிப்பாளரின் பெயர்	சபை	கணக்காய்வுக் குழு	மனித வளங்களும் ஊதியமும் குழு	ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு	பெயர்குறித்த நியமனமும் கூட்டாண்மை ஆட்சியும் குழு	*தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் குழு
திரு. ரோனால்ட் சி பெரேரா, சனாதிபதி சட்டத்தரணி - தலைவர் (2018 நவம்பர் 18 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக பதவிவிலகினார்) (2019 பெப்ரவரி மாதத்திலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மீள நியமிக்கப்பட்டார்)	19/21	ஏற்புடையதன்று	1/1	ஏற்புடையதன்று	2/2	ஏற்புடையதன்று
திரு எஸ் ஆர் ஆட்டிகல - பதவி வழிவந்த பணிப்பாளர் (2018 நவம்பர் 25 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக பணிப்பாளர் ஒருவராக இருப்பதை முடிவுறுத்தினார்)	19/21	7/9	0/1	5/6	0/2	ஏற்புடையதன்று
திரு. ரானெல் ரீ. விஜேசிங்ஹ - பணிப்பாளர் (2018 யூலை 31 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக பதவிவிலகினார்)	14/14	6/6	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று
திரு. எச். பி. அஜித் குணவர்த்தன - பணிப்பாளர் (2018 யூலை 20 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக பதவிவிலகினார்)	13/14	ஏற்புடையதன்று	1/1	5/5	2/2	ஏற்புடையதன்று
திரு. சமந்த ராஜபக்ஷ - பணிப்பாளர் (2018 நவம்பர் 25ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக பணிப்பாளர் ஒருவராக இருப்பதை முடிவுறுத்தினார்)	20/21	9/9	ஏற்புடையதன்று	6/6	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று
திரு. மொஹான் விஜேசிங்ஹ - பணிப்பாளர் (2018 யூலை 02 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக பதவிவிலகினார்)	12/12	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று
திரு. கே ஏ விமலேந்திரராஜா - பதவி வழிவந்த பணிப்பாளருக்கான மாற்றீடான பணிப்பாளர் (2018 நவம்பர் 25 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மாற்றீடான பணிப்பாளராக இருப்பதை முடிவுறுத்தினார்) (2019 பெப்ரவரி மாதத்திலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக பதவி வழிவந்த பணிப்பாளராக மீள நியமிக்கப்பட்டார்)	-	1/1	-	1/1	-	ஏற்புடையதன்று
திரு. நீல் ஏ உமகிலிய - தலைவர் (2018 நவம்பர் 19 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக நியமிக்கப்பட்டார் அத்துடன் 2018 டிசெம்பர் 20 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக பதவிவிலகினார்)	2/2	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று
அம்மணி விசாக்கா அமரசேகர பதவி வழிவந்த பணிப்பாளர் (2018 நவம்பர் 26 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக நியமிக்கப்பட்டார் அத்துடன் 2019 பெப்ரவரி 27ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக பணிப்பாளர் ஒருவராக இருப்பதை முடிவுறுத்தினார்)	2/2	1/1	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று
திரு. பி லலித் பி வித்தான - பணிப்பாளர்*	2/2	1/1	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று	1/1
திரு. எச் இசுறு பாலபட்டபென்தி - பணிப்பாளர் *	2/2	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று	1/1
அம்மணி ஏ வீ கே மாதவி ஹேரத் - பணிப்பாளர்*	1/2	1/1	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று
திரு ஜி ஹர்ஷ விஜயவர்தன - பணிப்பாளர் *	2/2	1/1	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று	1/1
கூட்டங்களின் மொத்த எண்ணிக்கை	23	10	1	6	2	1

*அனைவரும் 2018 நவம்பர் 26 முதல் செயல்வலுவுக்கு வரத்தக்கதாக நியமிக்கப்பட்டுள்ளதுடன் 2018 டிசம்பர் 20 முதல் செயல்வலுவுக்கு வரத்தக்கதாக பதவிவிலகியுள்ளனர்.

சபையின் பயனுறுதி வாய்ந்த தன்மையினை மதிப்பிடல்

சபையின் பயனுறுதி வாய்ந்த தன்மையானது சுய மதிப்பீடு ஒன்றிற்கூடாக வருடாந்தம் மதிப்பிடப்படுவதுடன், அதன் தகுதிவிதிகள் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகளுக்கு ஒத்திசைவாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பணிப்பாளரும் செயற்றிறன் மதிப்பீட்டுப் படிவமொன்றைப் பூர்த்திசெய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் அதன் தொடர்ச்சியாக பதிலளிப்புகள் சேகரிக்கப்பட்டு சபையிடம் முன்வைக்கப்படுகின்றன. உபகுழுக்களும் இதனையொத்த மதிப்பீடொன்றை மேற்கொள்கின்றன.

2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சபையில் மாற்றங்கள் செய்யப்பட்ட படியாலும் அவ்வாறு நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களும் நிதி அமைச்சின் பிரதிநிதி தவிர 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாத இறுதிக்கு முன்னரே பதவி விலகிய படியாலும் 2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருடாந்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. இம்மதிப்பீடுகளை மேற்கொள்ளும் செய்முறையானது எதிர்காலத்தில் தொடரப்படும்.

பொது முகாமையாளரின் (GM) மதிப்பீடு

கூட்டாண்மைத் திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறு நிதி மற்றும் நிதிசாரா இலக்குகளின் அடிப்படையில் பொது முகாமையாளரினதும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரினதும் (KMP) செயற்றிறனானது வருடாந்தம் சபையினால் மதிப்பிடப்படுகின்றது. பெயர்குறித்த நியமனமும் கூட்டாண்மை ஆட்சியும் குழுவானது இம் முயற்சியில் சபைக்கு உதவுகின்றது. சபையின் எதிர்பார்க்கைகளில் தெளிவினை உறுதிப்படுத்தி, ஆண்டின் தொடக்கத்தில் பொது முகாமையாளருடன் / பிரதான முகாமைத்துவ ஆளணியினருடன் (KMP) தகுதிவிதிகள் இணங்கிக்கொள்ளப்படுகின்றன. தொழிற்படு தோற்றப்பாட்டிலுள்ள வழிமுறைகளையும் அதேபோன்று மதிப்பிடப்படுபவரிடமிருந்து பெறப்பட்ட பின்னூட்டத்தையும் மதிப்பீடானது கருத்திற்கொள்கின்றது.

பணிப்பாளர் மற்றும் நிறைவேற்றுநர் ஊதியம் அணுகுமுறையும் கொள்கையும்

செயற்றினால் செயலாற்றப்படும் கலாசாரமொன்றைப் பேணுவதை இலக்காகக் கொண்டு இணங்கிக்கொள்ளப்பட்ட வழங்கத்தக்கவற்றின் அடைவினை இழப்பீட்டுச் செய்முறைகள் கருத்திற்கொள்கின்றன. சபையின் மனித வளங்களும் ஊதியமும் குழுவானது பொது முகாமையாளரினதும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரினதும் (KMP) ஊதியம் தொடர்பில் சபைக்குப் பரிந்துரைகளைச் செய்கின்றது, அதன் அடிப்படையில் சபையானது அங்கீகாரம் வழங்கி, கட்டளைச்சட்டத்தினதும் அதன் திருத்தங்களினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க இறுதி அங்கீகாரத்தை வழங்கும் உரிய அமைச்சருக்கு பின்னூட்டத்தை அளிக்கின்றது. பொது முகாமையாளரினதும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரினதும் (KMP) ஊதியமானது ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மீளாய்வு செய்யப்படுகின்றது.

ஊதியக் கட்டமைப்பு

ஏற்புடைய மற்றும் நியாயமான ஊதியத்தை வழங்கும் பொருட்டு இலங்கை வங்கியின் சன்மானக் கட்டமைப்புகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. வகிபாகம் மற்றும் பொறுப்புக்களைப் பொறுத்து நிலையான மற்றும் மாறுபடும் சம்பளத்திற்கிடையிலான உத்தமமான சேர்க்கையினை அடைந்துகொள்வதற்கு உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வங்கியின் ஊதிய உள்ளடக்கக் கட்டமைப்பின் பிரதான கூறுகள் கீழே தரப்பட்டுள்ளன;

பணிப்பாளர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கான இவ்வங்கியின் ஊதியக் கோட்பாடானது அதன் அக்கறைதாரர்களுக்கான அதன் பரந்துபட்ட கடப்பாடுகளைப் பிரதிபலிப்பதுடன் ஒரு நீண்டகால அடிப்படையில் நிலைத்துநிற்கும் செயற்றிறனுக்கு சன்மானம் அளிப்பதற்கு கடுமையாக முயற்சிக்கின்றது. இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் கடிதங்களின் விபரங்களையும் கட்டளைச்சட்டத்தினதும் அதன் திருத்தங்களினதும் விபரங்களையும் பிரதிபலிக்கும் பணிப்பாளர்களின் ஊதியக் கொள்கை மூலம் பணிப்பாளர்களின் ஊதியம் நிர்ணயிக்கப்படுகின்றது. எந்தவொரு பணிப்பாளரும் அவரின் ஊதியத்தை நிர்ணயிப்பதில் உள்வாங்கப்படுவதில்லை.

பொது முகாமையாளர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கான ஊதியமானது சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கான ஊதியக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டது.

மாறுபடும் ஊதியம்
ஊக்குவிப்பு
மிகையூதியம்

காசு சாராத ஏனைய நன்மைகள்
தொழிலுக்குப் பின்னரான நன்மைகள்
விசேட திட்டங்களின் கீழான கடன்கள்
கடன் அட்டைகள்

நிலையான ஊதியம்
அடிப்படைச் சம்பளம் மற்றும் ஏனைய நிலையான கூறுகள் - வகிபாகம் மற்றும் ஊழியர் தரத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படல்

பணிப்பாளர் ஊதியம் பற்றிய விபரங்களுக்கு பக்கம் 236 ஐயும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் (KMP) சார்பில் பக்கம் 426 ஐயும் தயவுகூர்ந்து பார்வையிடுக.

சபையின் மனித வளங்களும் ஊதியமும் குழுவின் (HRRC) அறிக்கையானது 96 தொடக்கம் 97 வரையான பக்கங்களிலுள்ள குழு அறிக்கையில் கிடைக்கக்கூடியதாகவுள்ளது.

கூட்டாண்மை ஆட்சி

இடர் முகாமைத்துவமும் உள்ளகக் கட்டுப்பாடுகளும்

பயனுறுதி வாய்ந்த இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் ஊடாக வங்கியின் சொத்துக்களை பாதுகாப்பதற்கான உச்சநிலைப் பொறுப்பினை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது. ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாட்டை உறுதிப்படுத்தும் அதேவேளை, வங்கியின் தேசிய வகிபாகம், முழுமொத்த முக்கியத்துவம் மற்றும் அக்கறைதாரர்களின் எதிர்பார்க்கைகள் என்பவற்றினைக் கருத்திற்கொண்டு உத்தமமான இடர்-சன்மான சமநிலையொன்றை அடைந்துகொள்ளும் பொருட்டு இலங்கை வங்கியின் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. வங்கியின் இடர்ப் பண்பு மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளைக் கண்காணித்து, வங்கி எதிர்கொள்ளும் பிரதான இடர்களையும் இடர் தணிப்புக் கருவிகளின் போதுமானதன்மையையும் சபையானது ஒழுங்காக மதிப்பிடுகின்றது.

சபையானது அதன் இடர் முகாமைத்துவத்தினதும் உள்ளகக் கட்டுப்பாட்டினதும் பொறுப்புக்களை நிறைவேற்றுகையில் முறையே ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவினதும் (IRMC) கணக்காய்வுக் குழுவினதும் உதவியினைப் பெற்றுக்கொள்கின்றது. இவ்விரு குழுக்களினதும் நோக்கெல்லை உரிய குழுச் சாசனங்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (IRMC) மற்றும் கணக்காய்வுக் குழு அறிக்கைகள் சார்பில் முறையே 89 தொடக்கம் 95 வரையான பக்கங்களை தயவுகூர்ந்து பார்வையிடுக.

ஒழுக்க விதிக்கோவை

தலைவரினால் வழிநடத்தப்படும் பணிப்பாளர் சபையானது இவ்வங்கிக்கான ஒழுக்கப் பண்பினை வகுத்துள்ளதுடன் நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழல் ஒழிப்பு பற்றிய வலுவான கலாசாரமொன்றை உருவாக்கும் பணிப்பாளர்களின் ஒழுக்க விதிக்கோவைக்கு கட்டுப்பட்டுள்ளனர். ஆதலால் பணிப்பாளர்களானோர் முறையற்ற தனிப்பட்ட ஆதாய முரண்பாடுகளின்றி இவ்வங்கியின் மிகச் சிறந்த ஆதாயங்கள் கருதி செயலாற்றுவதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளதுடன் இவ்விதிக்கோவையின் ஏற்பாடுகளுடனான அவர்களின் இணக்கப்பாடு தொடர்பான வருடாந்த உறுதிப்பாடொன்றை சமர்ப்பிக்கின்றனர். வருடாந்தம் உரிய அமைச்சுக்கு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனமொன்றையும் பணிப்பாளர்கள் சமர்ப்பிக்கின்றனர்.

உள்ளக மற்றும் வெளியக அக்கறைதாரர்கள், நடத்தை, இலஞ்சம் மற்றும் ஊழல் என்பவற்றைக் கையாள்வதில் வங்கியின் எதிர்பார்க்கைகளை தெளிவாக விதித்துரைக்கும் ஊழியர் ஒழுக்க விதிக்கோவையினால் சகல ஊழியர்களுங்கூடக் கட்டுப்பட்டுள்ளனர்.

இணக்கப்பாடு தொடர்பான வருடாந்த உறுதிப்பாடொன்று ஊழியர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றது. சபையின் பெயர்குறித்த நியமன மற்றும் கூட்டாண்மை ஆட்சிக் குழுவானது இவ்விதிக்கோவைகளை ஒழுங்காக மீளாய்வு செய்கின்றது.

சட்டப் பிறழ்வுகளை அறிக்கையிடுதல் (Whistleblowing)

சந்தேகத்திற்கிடமான திருட்டு மோசடி, ஊழல், வங்கிச் சொத்துக்களின் துஸ்பிரயோகம் அல்லது ஒழுக்கமற்றது அல்லது சட்டத்திற்குப் புறம்பானது எனக் கருதப்படும் ஏதேனும் வேறு நடவடிக்கைகள் தொடர்பிலான முறைப்பாடுகளை அறிக்கையிடுவதற்கு ஊழியர்களை அல்லது ஊழியர்கள் சாராதவர்களை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட, சட்டப் பிறழ்வுகளை அறிக்கையிடும் கொள்கையானது ஊக்குவிக்கின்றது. முறைப்பாடுகளானவை பிரதம உள்ளகக் கணக்காய்வாளரினால் நெறிப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்ற அதேவேளை பிரதிப் பொது முகாமையாளர் தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தைக் கொண்ட ஊழியர்களுக்கு எதிராகச் செய்யப்படும் முறைப்பாடுகளானவை கணக்காய்வுக் குழுவின் தலைவரிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன.

ஊழல் ஒழிப்பு

நேர்மையானதும் ஒழுக்கமானதுமான ஒரு விதத்தில் அதன் சகல தொழிற்பாடுகளையும் மேற்கொள்வது இவ்வங்கியின் கொள்கையாகும். வங்கியானது இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு பூச்சிய சகிப்பு அணுகுமுறையொன்றைக் கைக்கொள்வதுடன் வங்கி தொழிற்படும் இடமெல்லாம் அதன் சகல வியாபாரச் செயற்பாடுகளையும் உறவுகளையும் தொழில் நிபுணத்துவ ரீதியிலும், நியாயமாகவும் நாணயமாகவும் செயலாற்றுவதற்கும் அத்துடன் இலஞ்சத்தை எதிர்த்துப் போராடுவதற்கு பயனுறுதி வாய்ந்த முறைமைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் செயல்வலுவளிப்பதற்கும் அர்ப்பணிப்புச் செய்கின்றது. வங்கி தொழிற்படும் நியாயாதிக்கம் அனைத்திலும் இலஞ்சம் மற்றும் ஊழலை எதிர்த்துப் போராடுதல் தொடர்பிலான அனைத்துச் சட்டங்களையும் அது நிலைநிறுத்துகின்றது.

அக்கறைதாரர் தொடர்பாடல்

திறந்த மற்றும் நிலைபேறான உறவுகளைப் பேணி, உள்ளக மற்றும் வெளியக அக்கறைதாரர்களுடன் பயனுறுதி வாய்ந்த மற்றும் உரிய தொடர்பாடலைப் பேணுதல் தொடர்பான வழிகாட்டலை இவ்வங்கியின் தொடர்பாடல் கொள்கை வழங்குகின்றது. பெயர்குறித்த நியமனமும் கூட்டாண்மை ஆட்சியும் குழுவினால் இக்கொள்கை மீளாய்வு செய்யப்படுகின்றது. வங்கியானது அதன் அக்கறைதாரர்களுடன் தொடர்பாடலைப் பேணும் அடிப்படைகள் கீழே சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன;

பங்குதாரர்கள்: இவ்வங்கியின் தனித்த பங்குதாரர் இலங்கை அரசாங்கம் என்பதுடன் நிதி அமைச்சிலிருந்து நியமிக்கப்படும் பதவி வழிவந்த பணிப்பாளரான சபையின் நிரந்தர பிரதிநிதிக்கூடாக நடைபெற்றுவரும் ஈடுபாட்டுநிலை பேணப்படுகின்றது. ஆண்டறிக்கையானது உரிய அமைச்சின் ஊடாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

ஊழியர்கள்: வங்கியானது அதன் சகல ஊழியர்களுடனும் திறந்த-நிலை (open-door) கொள்கையொன்றை பேணுகின்ற அதேவேளை தொழிற்சங்கங்களுடன் சிநேகபூர்வமான உறவுகள், பன்முக மட்டத்திலான பணியாட்டொகுதியினரின் கூட்டங்கள், மனக்குறையைக் கையாளும் பொறிமுறைகள் மற்றும் கலாசார, சுற்றாடல் மற்றும் விளையாட்டு நிகழ்வுகளைக் கொண்ட வருடம் முழுவதற்குமான நாட்காட்டி என்பவற்றிற்கூடாக ஈடுபாட்டிற்கும் வசதியளிக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்கள்: கிளைகள், தொடர்புகொள் முகாமையாளர்கள் மற்றும் பன்முக அம்சங்களைக் கொண்ட டிஜிட்டல் (digital) ஊடகங்கள் வாயிலாக வாடிக்கையாளர்களுடனான ஈடுபாடு பேணப்படுகின்ற அதேவேளை வாடிக்கையாளர் திருப்தி பற்றிய ஆய்வுகளும் ஓர் ஒழுங்கான அடிப்படையில் நடாத்தப்படுகின்றன.

துணை நிறுவன ஆட்சி

இவ்வங்கியின் துணை நிறுவன முகாமைத்துவ சாசனமானது வங்கியின் நேரடி மற்றும் நேரடியற்ற பத்து துணை நிறுவனங்கள் பூராகவும் சிறந்த ஆட்சி மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகளின் நிலையான பிரயோகத்தை உறுதிப்படுத்துகின்றது.

துணை நிறுவனங்களிலிருந்து விளையப்பெறும் சாத்தியமான நட்டங்கள் / இடர்களை மதிப்பிடுவதற்கும் சரிப்படுத்தும் நடவடிக்கையைப் பரிந்துரைப்பதற்கும் தாய் நிறுவனத்திடம் ஒழுங்கான செயற்றிறன் இற்றைப்படுத்தல்களும் இடர்சார் தகவல் காட்சிமுறைகளும் (dashboards) முன்வைக்கப்படுகின்றன. ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் (IRMC) ஊடாக சபையானது, வரையறுக்கப்பட்ட அளவுகளுக்குள் இடர்ப் பண்புகள் பேணப்படுவதை உறுதிப்படுத்தி, காலக்கிரமமான அடிப்படையில் துணை நிறுவன இடர் முகாமைத்துவ தகவல் காட்சிமுறைகளை மீளாய்வு செய்கின்றது.

இலங்கை வங்கியின் இணக்கப்பாட்டு அலுவலர் துணை நிறுவனங்களின் இணக்கப்பாட்டிற்குப் பொறுப்பாக இருக்கின்றார். தாய் நிறுவனத்தின் கரிசனைகள் பேணப்படுவதை உறுதிப்படுத்தி, துணை நிறுவன சபைகளில் குறைந்தது ஒரு சபைப் பதவியையேனும் வழமையாக வங்கிப் பிரதிநிதிகளும் வகிக்கின்றனர்.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டலுக்கான இவ்வங்கியின் இணக்கப்பாடு தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 401 தொடக்கம் 427 வரையான பக்கங்களையும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் (CA Sri Lanka) வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்கான கூட்டாண்மை ஆட்சி பற்றிய சிறந்த நடைமுறை விதிக்கோவைக்கான இணக்கப்பாடு சார்பில் 394 தொடக்கம் 400 வரையான பக்கங்களையும் தயவுகூர்ந்து பார்வையிடுக.

சபை உபகுழு அறிக்கைகள்

கணக்காய்வுக் குழு அறிக்கை

தலைவரின் கூற்று

கணக்காய்வுக் குழுச் சாசனம்

கணக்காய்வுக் குழுவின் ஆய்வெல்லையானது கணக்காய்வுக் குழுச் சாசனத்தின் மூலம் நிர்வகிக்கப்பட்டு, சபையினால் அங்கீகரிக்கப்பட்டு கடைப்பிடிக்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டில் இறுதியாக மீளாய்வு செய்யப்பட்ட கணக்காய்வுக் குழுச் சாசனத்தினை மீளாய்வு செய்கையில் கணக்காய்வுக் குழுவின் தொழிற்பாடுகள் தொடர்பிலான புதிய அபிவிருத்திகள் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்குழுவின் தொழிற்பாடுகளின் நோக்கெல்லையும் உள்ளடக்கல் பரப்புமானது, "இலங்கையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆட்சி" பற்றிய 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டலினதும் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அதன் அடுத்துவந்த திருத்தங்களினதும் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்கின்றது என்பதையும் இக்குழு உறுதிப்படுத்துகின்றது.

பிரதான கவனக்குவிப்பு

சபையானது அதன் கடமைகளை நிறைவேற்றுகையில் அதற்கு உதவிசெய்வது தொடர்பில், வங்கியின் நிதி அறிக்கையிடல் செய்முறையின் சுயாதீனமான மற்றும் பாராபட்சமற்ற மீளாய்வொன்றினை வழங்குவதன் மூலம், கணக்காய்வுக் குழுவானது பிரதான கவனத்தினைக் குவிக்கின்றது.

அறிக்கையிடல் ஊடகம்

சகல பிரதான பிரச்சினைகளும், கரிசனைகளும், எடுக்கப்பட்ட நடவடிக்கையும், எய்தப்பெற்ற அல்லது நிலுவையிலுள்ள பயன்விளைவுகளும், அத்துடன் முன்னெடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கையும் தெளிவுபடுத்தப்பட்டு, கலந்துரையாடப்பட்டு அது தொடர்பில் சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படும், சபைக் கூட்டங்களில் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன

உள்ளடக்கக் கட்டமைப்பு

2018 ஆம் ஆண்டில்

மீளாய்வின் கீழான ஆண்டின் போது, கணக்காய்வுக் குழுவானது பின்வரும் நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்களை உள்ளடக்கியது:

- **திரு. ரனெல் ரீ. விஜேசிங்ஹ**
  தலைவர் / சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்
  (2018 யூலை 31 ஆம் திகதியன்று இலங்கை வங்கி சபையிலிருந்தான அவரின் பதவிவிலகல் வரை)
- **திரு எஸ் ஆர் ஆட்டிகல**
  உறுப்பினர் / நிறைவேற்றுத் தரம் சாராத பதவி வழிவந்த பணிப்பாளர
- **திரு. சமந்த ராஜபக்ஷ**
  உறுப்பினர், சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்

2018 யூலை 31 ஆம் திகதியன்று இலங்கை வங்கி சபையிலிருந்து திரு. விஜேசிங்ஹவின் பதவிவிலகலைத் தொடர்ந்து, இக்குழுவானது பின்வரும் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களை உள்ளடக்கியது:

- **திரு. சமந்த ராஜபக்ஷ**
  தலைவர் / சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்
  (2018 நவம்பர் 25 ஆம் திகதியன்று இலங்கை வங்கி சபையிலிருந்தான அவரின் பதவிவிலகல் வரை)
- **திரு எஸ் ஆர் ஆட்டிகல**
  உறுப்பினர் / நிறைவேற்றுத் தரம் சாராத பதவி வழிவந்த பணிப்பாளர்
  (நிதி அமைச்சில் உயர் பதவியொன்றின் கடமைகளை அவர் பொறுப்பேற்றுக்கொண்டு, 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக பணிப்பாளர் ஒருவராக இருப்பதை அவர் முடிவுறுத்தும் வரையில்)

2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இடம்பெற்ற சபையின் மீளுருவாக்கத்திற்கு இணங்க, இக்குழு பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கியது -

- **திரு. பி லலித் பி விதான**
  தவிசாளர் / சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்
- **அம்மணி விசாக்கா அமரசேகர**
  உறுப்பினர் / நிறைவேற்றுத் தரம் சாராத பதவி வழிவந்த பணிப்பாளர்
- **அம்மணி ஏ வீ கே மாதவி ஹேரத்**
  உறுப்பினர் / சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்
- **திரு ஜி ஹர்ஷ விஜயவர்தன**
  உறுப்பினர் / சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர

திரு. விதானவும், அம்மணி ஹேரத்தும் திரு விஜயவர்தனவும் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி இலங்கை வங்கி சபையிலிருந்து பதவிவிலகியதுடன் அம்மணி. அமரசேகர 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக ஒரு புதிய வழிவந்த பணிப்பாளராக நியமனத்தைப் பெற்று ஒரு பணிப்பாளராக இருப்பதை முடிவுறுத்தினார்.

அவசியமான நிதிசார் மதிநுட்பம், அனுபவம், ஆற்றல்கள், பின்னணி மற்றும் இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பதற்கான சுயாதீனத்தன்மையின் பொருத்தமான மட்டங்கள் என்பவற்றை இக்குழுவின் உறுப்பினர்கள் கொண்டிருந்தனர்.

2018 ஆம் ஆண்டுக் காலத்தில் கணக்காய்வுக் குழு உறுப்பினர்களின் சுருக்கமான விபரக்குறிப்புகளானவை இக் கூட்டாண்மை அறிக்கையின் கீழ் 79 தொடக்கம் 85 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டில்

அரசாங்கத்தில் இடம்பெற்ற மாற்றத்துடன், இவ்வங்கியின் சபையானது 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் மீளுருவாக்கப்பட்டதுடன் அறிக்கையிடும் வேளையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இடைப்பட்ட காலத்தில், சபையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டு கணக்காய்வுக் குழுவைத் தாபிப்பதற்கு தீர்மானித்துள்ளது -

திரு. குமார் மாயாதுன்ன

தலைவர் / சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்

திரு. கே ஏ விமலேந்திரராஜா

உறுப்பினர் / நிறைவேற்றுத்தரம் சாராத பதவி வழிவந்த பணிப்பாளர்

திரு. பி ஏ ஷாப்ரெர்

உறுப்பினர் / சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்

மேற்போந்த உறுப்பினர்களின் விபரக் குறிப்புக்கள் 26 தொடக்கம் 27 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

கணக்காய்வுக் குழுவின் செயலாளர்

சட்டத்தரணி ஒருவராகவும் பிரதிப் பொது முகாமையாளர் ஒருவராகவும் உள்ள இலங்கை வங்கிச் செயலாளர் / சபைச் செயலாளர் இக் குழுவின் செயலாளராக செயலாற்றுகின்றார்.

குழுக் கூட்டங்கள்

மீளாய்வின் கீழான ஆண்டின் போது இக்குழு 10 தடவைகள் கூடியது. கூட்டங்கள் நிகழ்ந்த தடவையும் காலப்பகுதியும் குழுவின் பொறுப்புகளை அது பயனுறுதி வாய்ந்த விதத்தில் நிறைவேற்றுவதற்கு இயலுமைப்படுத்தியது. குழு உறுப்பினர்களின் வருகை 86 ஆம் பக்கத்திலுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

இக்குழுவின் கூட்ட நடப்பெண் இரண்டு ஆகும்.

சபை உபகுழு அறிக்கைகள்

கணக்காய்வுக் குழு அறிக்கை

2018.12.31 இல் முடிவடைந்த ஆண்டு சார்பில் இலங்கை வங்கியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் திரட்டு நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வானது கணக்காய்வாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட்டதுடன் ஆண்டு பூராகவும் முழுநேர அடிப்படையில் இவ்வங்கியில் பணியாற்றியுள்ள கணக்காய்வாளர் அதிபதியின் பிரதிநிதியுடன் தொடர்ந்துசெல்லும் தொடர்பை இக்குழு கொண்டிருந்துள்ளது.

ஒழுங்கான கூட்டங்களுக்கு மேலதிகமாக, இக்குழுவானது தேவை எழுந்த போது கணக்காய்வாளர் அதிபதியின் பிரதிநிதிகளுடன் (வங்கியின் வெளியகக் கணக்காய்வாளர்) தொடர்புகொண்டது.

கூட்டங்களில் பங்குபற்றல்

பின்வரும் முகாமைத்துவ ஆளணியினர் ஒழுங்கான அடிப்படையில் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் சமுகமளித்தனர்:

- பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்
- பிரதம இடர் அலுவலர்
- இணக்கப்பாட்டு அலுவலர்
- உதவிப் பொது முகாமையாளர் (மாகாணம் / கிளை மற்றும் கடன் கணக்காய்வு)
- உதவிப் பொது முகாமையாளர் (புலனாய்வுகள்)
- உதவிப் பொது முகாமையாளர் (தகவல் முறைமைக் கணக்காய்வு) உதவிப் பொது முகாமையாளர் (இடர் முகாமைத்துவம்)
- உள்ளகக் கணக்காய்வாளர்
- தகவல் தொழில்நுட்ப (IT) இடர் அலுவலர்
- கணக்காய்வாளர் அதிபதியின் பிரதிநிதிகள் (இவ்வங்கியின் வெளியகக் கணக்காய்வாளர்)

அழைப்பின் மூலம் மாத்திரம் சமுகமளித்த முகாமை உறுப்பினர்கள் பின்வருமாறு:

- பொது முகாமையாளர்
- பிரதம நிதி அலுவலர்
- பிரதிப் பொது முகாமையாளர் (நிதி மற்றும் திட்டமிடல்)

அவசியமானவிடத்து தெளிவினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு இந்த ஆண்டின் போதான பல்வேறுபட்ட நேரங்களில் இக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கு பிரிவுத் தலைவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

2018 ஆம் ஆண்டில் ஆற்றப்பட்ட செயற்பாடுகள்

நிதி அறிக்கையிடல்

- மாதாந்த, காலாண்டுக்குரிய மற்றும் வருடாந்த கணக்காய்வு செய்யப்படாத / கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களானவை மேற்பார்வை மற்றும் ஒழுங்குறுத்துகை அதிகாரபீடங்களினால் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கும் ஏற்புடைய கணக்கீட்டு நியமங்களுக்கும் இணங்க தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு அவை மீளாய்வு செய்யப்பட்டமை.
- காலாண்டுக்குரிய நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு முன்னர், வங்கியின் ஒட்டுமொத்தச் செயற்றிறன் பற்றியும் வரவுசெலவுத்திட்டங்கள், வருடாந்த தந்திரோபாயத் திட்டங்கள், வங்கித் தொழிற்றுறை மற்றும் போட்டிச் சூழல் தொடர்பான வியாபார அலகுகளின் செயற்றிறன் பற்றியும் பகுப்பாய்வு மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- வங்கியின் நிதி அறிக்கையிடல் தொடர்பில் குறிப்பிடத்தக்க திறனாய்வு முடிவுகள், மதிப்பீடுகள், கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் என்பன மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.
- 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்குவந்த 'நிதிக் கருவிகள்' பற்றிய SLFRS 9 இனது அமுலாக்கம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. இவ் வங்கியில் SLFRS 9 இனது அமுலாக்கத்திற்கான மதியுரைஞரான Messrs. (பங்காளிகள்) Ernst & Young நிறுவனத்துடன் உசாவுதலைச் செய்து நிலைமாறும் செய்முறைகளை இக்குழு உன்னிப்பாக கண்காணித்தது. SLFRS 9 இன் கீழ் பெறுமதியிறக்க ஏற்பாட்டின் பொருத்தப்பாட்டினையும் வங்கி மீதான அதன் தாக்கத்தினையும் இக்குழு மீளாய்வு செய்தது.

ஒழுங்குமுறை இணக்கப்பாடு

- கட்டாய வங்கி மற்றும் ஏனைய நியதிச்சட்டத் தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாட்டை மீளாய்வு செய்தமை.
- ஒழுங்குறுத்துநர்களினால் மேற்கொள்ளப்பட்ட நியதிச்சட்ட பரிசோதனைகளின் முடிவுகள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தமை.
- உள்ளக மூலதன போதுமானதன்மை மற்றும் மூலதன விரிவாக்கத் திட்டத்தையும் அதுபற்றிய அமுலாக்கத்தையும் மீளாய்வுசெய்தமை.
- தொடர்புபட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கையை கருத்திற்கொண்டமை.
- பாசல் III (Basel III) அமுலாக்கம் தொடர்பான நிலமையை மீளாய்வு செய்தமை.
- அரசாங்க / தனியார் துறைக்கான அத்துடன் பொருளாதாரத் துறைகள், உப துறைகள் மற்றும் கடன்படுநர்களுக்கான வெளிக்காட்டலை மீளாய்வு செய்தமை மற்றும் பொருத்தமான இடர்க் குறைப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளின் அமுலாக்கம் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுத்தமை.
- உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் அதன் ஒழுங்கான கணக்காய்வுகளின் பகுதியாக கட்டாய சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாடும் சோதிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தியமை.

உள்ளகக் கட்டுப்பாடுகள்

- 2018 ஆம் ஆண்டிற்காக இற்றைப்படுத்தப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு சட்டகத்திற்கூடாக 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டலின் 3(8) (ii) (ஆ) ஆம் இலக்க பிரிவுடன் ஒத்திசைவாக வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையின் போதுமானதன்மையையும் பயனுறுதி வாய்ந்த தன்மையையும் மீளாய்வு செய்தமை.
- ஓர் ஒழுங்கான அடிப்படையிலும் திட்டவட்டமான நிகழ்வுகள் அல்லது விடயங்கள் நியாயப்படுத்தப்பட்ட போதும், மூல காரணப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டமையும் முறைமைகள், நடைமுறைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கான மேம்படுத்தல்களைச் செய்தமையும்.
- கரிசனை கொண்ட வாடிக்கையாளர்களின் கடன் சேவை மீதான மேற்பார்வையையும் கண்காணிப்பையும் தொடர்ச்சியாக வலுப்படுத்தியமையும் சாத்தியமான கடன் நட்டங்களைத் தடுப்பதற்கு / தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை திட்டமிட்டமையும்.
- கடன் தொழிற்பாட்டில் ஈடுபட்ட அலுவலர் குழாத்துக்கான கிளை வலையமைப்பின் தரமான கடன் நிர்வாகத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு திறன் மேம்பாட்டை வடிவமைத்து நடைமுறைப்படுத்துவதற்கு மனித வளத் திணைக்களத்திற்கு தொடர்ந்து வழிகாட்டி உதவிசெய்தமை.

உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று மற்றும் அது தொடர்பிலான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை என்பன 188 தொடக்கம் 190 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன. அதற்கிணங்க, வங்கியின் சொத்துக்கள் பாதுகாக்கப்படுகின்றன என்றும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட நிதி நிலமை மற்றும் பெறுபேறுகள் என்பன பொருண்மையான தவறான கூற்றுக்கள் எதுவுமற்றவை என்றும் நியாயமான உறுதிப்பாட்டினை வழங்கும் பொருட்டு அவசியமான ஆதிக்க சமநிலைப்படுத்தல் முறைமை (checks and balances) அமுலில் உள்ளதென்பதே இக்குழுவின் கருத்தாகும்.

உள்ளகக் கணக்காய்வு

- பின்வருவனவற்றை திட்டவட்டமான ஆதாரமாகக் கொண்டு, உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டின் சுயாதீனத்தன்மை, பாராபட்சமற்றதன்மை மற்றும் செயற்றிறன் என்பவற்றையும் அதேபோல திணைக்கள வளங்களின் போதுமானதன்மையினையும் மீளாய்வு செய்தமை:
  - மாகாணம் / கிளை மற்றும் கடன் கணக்காய்வு
  - தகவல் முறைமைகள் கணக்காய்வு
  - தலைமை அலுவலகம், துணை நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுக் கிளைகள் கணக்காய்வு
  - புலனாய்வுகள்
- சுயாதீனமான கணக்காய்வுத் தொழிற்பாட்டை வழங்குவதற்கு பிரதம உள்ளகக் கணக்காய்வாளரின் பணிநோக்கு, பணியின் நோக்கெல்லை, பொறுப்புக்கூறல், பொறுப்பு மற்றும் அதிகாரம் என்பவற்றை வரையறுக்கும் உள்ளகக் கணக்காய்வுச் சாசனத்தை மீளாய்வு செய்தமை.
- உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை அங்கீகரித்தமை மற்றும் ஆண்டு பூராகவும் இத்திட்ட அமுலாக்கத்தின் பயனுறுதி வாய்ந்த தன்மையை மீளாய்வு செய்தமை.
- வெளிநாட்டுக் கிளைகளின் உள்ளகக் கணக்காய்வு கொள்கையின் அடிப்படையில் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படும் அக் கிளைகளின் அக்கொள்கையை மீளாய்வு செய்தமை.
- 2018 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுக் கைந்நூலை மீளாய்வு செய்தமை.
- உரிய நேரத்திலான சரிப்படுத்தல் நடவடிக்கையை எடுக்கும் நோக்குடன், முக்கியமான உள்ளகக் கணக்காய்வு முடிவுகளையும் அவற்றுக்கான முகாமையின் பதிலிறுப்புகளையும் மீளாய்வு செய்தமை.
- இனங்காணப்பட்ட பிரச்சினைகளை திருத்துவதற்காக செயல் திட்டம் மற்றும் கால திட்டத்துடன் என்பவற்றுடன் தலைமை அலுவலக அலகுகளின் தொடர் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை நுனுக்கமாக ஆராய்தமை.
- சென்னைக் கிளைக்கான புதிய சமநேர கணக்காய்வாளர் ஒருவரின் நியமனத்தைப் பரிந்துரைத்தமை.
- 2018/2019 ஆண்டுக்காலம் சார்பில் சென்னைக் கிளையின் உள்ளகக் கணக்காய்வுக் கொள்கையின் பின்பற்றலை பரிந்துரைத்தமை.

இலங்கை வங்கியின் துணை நிறுவனங்களினதும் இணை நிறுவனங்களினதும் மேற்பார்வையும் கணக்காய்வும்

- துணை நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வு பற்றிய கொள்கைக்கேற்ப துணை நிறுவனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளை மீளாய்வு செய்தமை மற்றும் இவ்வங்கியின் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் மீதான பொறுப்புக்கூறலையும் மேற்பார்வையையும் இது முன்னேற்றியுள்ளமை.
- துணை நிறுவனங்களினதும் இணை நிறுவனங்களினதும் செயற்றிறனை மீளாய்வு செய்தமை.

வெளியகக் கணக்காய்வு

இவ்வங்கியின் வெளியகக் கணக்காய்வுத் தொழிற்பாடு தொடர்பில் இக்குழுவின் வகிபாகம் பின்வருமாறு;

- இந்நாட்டின் அரசியலமைப்பிற்கேற்ப கணக்காய்வாளர் அதிபதியினால் இவ்வங்கியின் வெளியகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. வெளியகக் கணக்காய்வானது பயனுறுதி வாய்ந்த விதத்திலும் சுயாதீனமாகவும் மேற்கொள்ளப்படுவதை இக்குழு உறுதிப்படுத்தியதுடன் கணக்காய்வு அணுகுமுறை மற்றும் நடைமுறை தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதியின் பிரதிநிதிகளுடன் தொடர்ச்சியான சுமுகமான உறவொன்றைப் பேணியது.
- நிதியாண்டு 2017 இன் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதியினால் நியமிக்கப்பட்ட, முன்னைய கணக்காளர்களான பட்டயக் கணக்காளர் எம்/எஸ் KPMG நிறுவனத்துடன் மீளாய்வின் கீழான ஆண்டின் போது "மூடிய நிலை" ("Closed door") கூட்டமொன்றை இக்குழு நடாத்தியுள்ளது. 2018 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு தொடர்பில், கணக்காய்வாளர் அதிபதியின் பிரதிநிதிகளுடனும் "மூடிய நிலை" கூட்டமொன்றை இக்குழு ஏற்பாடு செய்துள்ளது.
- 2017 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதியினால் நியமிக்கப்பட்ட, முன்னைய கணக்காளர்களான பட்டயக் கணக்காளர் KPMG (பங்காளிகள்) நிறுவனத்தினால் இனங்காணப்பட்ட கணக்காய்வுப் பிரச்சினைகளை மீளாய்வு செய்து தொடர் நடவடிக்கை எடுத்தமை.
- 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான இவ்வங்கியின் கணக்குகள் தொடர்பில் இலங்கைப் பாராளுமன்றத்திற்கான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை, அதற்கான முகாமையின் கடிதம் மற்றும் முகாமையின் பதிலிறுப்புகள் என்பவற்றை மீளாய்வு செய்தமையும் கரிசனை கொண்ட பிரச்சினைகளைத் திருத்துவதற்கான கால அட்டவணை கொண்ட செயல் திட்டத்துடனும் சேர்த்து வங்கியினால் எடுக்கப்பட்ட சரிப்படுத்தல் நடவடிக்கைகள் பற்றியும் திருத்த முன்னேற்றம் பற்றியும் தொடர் நடவடிக்கை எடுத்தமை.
- கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்திருந்து கிடைக்கப்பெற்ற பிரதான அறிக்கைகளை மீளாய்வுசெய்து கலந்துரையாடியமை மற்றும் அவசியமெனக் கருதப்பட்டவிடத்து நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டமை.
- கணக்காய்விலிருந்து எழுந்த உரிய சகல விடயங்களையும் கணக்காய்வாளர் அதிபதியின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியமை.

ஆட்சி

பின்வரும் விடயத்தை திட்டவட்டமான ஆதாரமாகக் கொண்டு இவ்வங்கியில் சிறந்த கூட்டாண்மை ஆட்சி நடைமுறைகள் பின்பற்றப்பட்ட விதத்தை இக்குழு மீளாய்வு செய்துள்ளது:

- இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆட்சி பற்றிய 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டலின் 3(8) (ii)(g) ஆம் பிரிவிற்கேற்ப இலங்கை வங்கியின் உண்மைநிலை முடிவுகள் பற்றிய கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை.

முறைப்பாடுகளுக்கான நடைமுறை - சட்டப் பிறழ்வுகளை அறிக்கையிடும் கொள்கை

முறைப்பாடுகளைப் பெற்று, அவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்து கையாள்வதற்கான நடைமுறைகள் தொடர்பில் நீண்டகாலத்திற்கு நிலைபெற்ற "சட்டப் பிறழ்வுகளை அறிக்கையிடும் கொள்கை" ஒன்றை இவ்வங்கி கொண்டுள்ளது. இவ்வங்கியின் நிதி நலன் அல்லது நன்மதிப்பிற்கு தீங்குடையதாகவிருக்கும், சந்தேகத்திற்குரிய கணக்கீடு, உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள், இலஞ்சம் அத்துடன் / அல்லது தரகுகளை ஏற்றுக்கொள்தல், பதிவுகளை பொய்யாகப் பதிவுசெய்தல், அந்தரங்க தகவல்களை சட்டத்திற்குப் புறம்பாக கையாள்தல் (insider dealing), பணத் தூய்மையாக்கல், திருட்டும் மோசடியும், வங்கிச் சொத்துக்களின் துஸ்பிரயோகம், திரிவுபடுத்திக்கூறுதல் அல்லது பிழையான கூற்றுக்கள் அத்துடன் ஒழுக்கமற்றதும், சட்டத்திற்குப் புறம்பானதும் அல்லது முறையான கூட்டாண்மை ஆட்சி மற்றும் சொத்து மேற்பார்வைப் பொறுப்பு (stewardship) கொள்கைகளுக்கு முரண்பாடானதும் எனக் கருதப்படும் வேறு ஏதேனும் நடவடிக்கைகள் ஆகியவற்றுடன், ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாமல் முறைப்பாடுகள் தொடர்புபடலாம்.

சபை உபகுழு அறிக்கைகள்

கணக்காய்வுக் குழு அறிக்கை

மீளாய்வின் கீழான ஆண்டின் போது இக்கொள்கை மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டு மேற்பார்வையாளராக பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் செயலாற்றும் அதேவேளை பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் அதற்கு மேற்பட்ட தரங்களிலுள்ள ஊழியர்களுக்கு எதிரான முறைப்பாடுகளானவை சபைக் கணக்காய்வுக் குழுவின் தலைவரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

ஏதேனும் சட்டப்படியான கரிசனைகளை உடனடியாக முன்வைப்பதற்கு ஊழியர்கள் ஊக்குவிக்கப்படுவதுடன் அடையாளம் தெரியாத வகையில் தொடர்ந்திருப்பதற்கு அல்லது அவர்களின் அடையாளத்தை வெளிப்படுத்தாமலிருக்குமாறு கோருவதற்கு அவர்களுக்கு உரித்துள்ளது. இக் கொள்கையில் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதிகளுக்குள் முறைப்பாடுகளை புலனாய்வு செய்து அவசியமானவிடத்து கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கையிடுமாறு கோரப்படும் முறைப்பாட்டு மேற்பார்வையாளருக்கு அநாமதேயமான விதத்திலும் அந்தரங்கமாகவும் முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்கு வாடிக்கையாளர்களுக்கும் பொது மக்களில் கரிசனைமிக்க உறுப்பினர்களுக்கும் உரித்துள்ளது.

குழுவின் மதிப்பீடு

இக் குழுவின் பயனுறுதி வாய்ந்த தன்மையின் மதிப்பீடு வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டு பெறுபேறுகள் சபைக்கு தொடர்புபடுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டு தொடர்பில், கணக்காய்வுக் குழு தொடர்பான மதிப்பீடானது, இந்நாட்டின் உறுதியற்ற அரசியல் சூழ்நிலையின் விளைவாக 2018 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சபையில் இடம்பெற்ற மாற்றங்களின் விளைவாக, மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. புதிய குழுவானது நடைமுறையில் இருந்துள்ளவாறு அதன் செயற்றிறனை மதிப்பீடு செய்யும்.

2018 ஆம் ஆண்டில் செயலாற்றிய இக் குழுவின் தவிசாளர்களினாலும் உறுப்பினர்களினாலும் ஆற்றப்பட்டுள்ள பெறுமதிவாய்ந்த சேவைக்காக அவர்களுக்குப் பாராட்டைத் தெரிவிக்க இக்குழு விரும்புகின்றது.

இக்குழுவில் தற்போது சேவையாற்றும் உறுப்பினர்கள் எவரும் இந்த அறிக்கை உள்ளடக்கிய காலப்பகுதியில், அதாவது 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காலத்தில் சமுகமளிக்கவில்லை என்னும் விடயத்தின் மீது கவனம் செலுத்த இக்குழு விரும்புகின்றது. ஆதலால் இந்த அறிக்கையானது பதிவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன், அதன் நம்பகத்தன்மையானது சரிபார்க்கப்பட்டு சந்தேகத்திற்கிடமின்றி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆதலால், தற்போதய குழுவானது இந்த அறிக்கை துல்லியமானதென்றும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றதென்றும் முழுமையாக நம்புகின்றது.

குமார் மாயாதுன்ன
தலைவர்
கணக்காய்வுக் குழு

2019 ஏப்ரல் 3
கொழும்பு

ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு அறிக்கை

தலைவரின் கூற்று

குழுவின் வகிபாகம்

சபையானது இடர் முகாமைத்துவத்தின் சகல அம்சங்களுக்குமான அதன் மேற்பார்வைப் பொறுப்புகளை நிறைவேற்றுகையில் அதற்கு உதவிசெய்வதே இக் குழுவின் பிரதான வகிபாகமும் பொறுப்பும் ஆகும். இது குறித்து, பொருத்தமான இடர் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல்களின் ஊடாக கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாட்டு, நன்மதிப்பு மற்றும் தந்திரோபாய இடர்கள் போன்ற இடர்கள் மீது கவனத்தைக் குவித்து அவற்றை மீளாய்வு செய்கின்றது.

மேற்போன்றவற்றை விட, ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் சாசனத்தில் இனங்காணப்பட்டுள்ள பின்வருவனவற்றை மீளாய்வு செய்வதற்கு அத்துடன் / அல்லது பரிந்துரை செய்வதற்கு இக்குழு பொறுப்புடையது:

- இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கப்பாடு தொடர்பிலான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முகாமைத்துவக் குழு சாசனங்கள்.

- பிரதம இடர் அலுவலரினால் பரிந்துரை செய்யப்பட்டவாறு கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாட்டு மற்றும் ஏனைய இடர்களுக்கான நாட்டத்தை உருவாக்கும் இடர் எல்லைகளும் கொள்கைகளும்.

- திட்டவட்டமான இடர்களைத் தீர்ப்பதற்கும் அந்த இடர்களை இக்குழுவினால் குறித்துரைக்கப்பட்டவாறு கணியசார் மற்றும் பண்புசார் இடர் எல்லைகளுக்குள் முகாமை செய்வதற்கும் கடன் குழு மற்றும் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு போன்ற சகல முகாமைத்துவ மட்டக் குழுக்களினதும் போதுமானதன்மையும் பயனுறுதி வாய்ந்த தன்மையும்.

- இவ்வங்கியின் இடர்ப் பண்பு அதேபோன்று நிகழ்கால சந்தை மற்றும் ஒழுங்குறுத்துகை இடர்கள் தொடர்பான இடர் முகாமைத்துவ அறிக்கைகள் மற்றும் அத்தகைய இடர்களை இனங்கண்டு, அளவிட்டு, கண்காணித்துக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.

- இவ்வங்கியின் கொள்கைகள் அத்துடன் ஒழுங்குறுத்துகை மற்றும் மேற்பார்வைத் தேவைப்பாடுகளின் அடிப்படையில் இக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட மதிநுட்பமான மட்டங்களைத் திட்டவட்டமான இடர்கள் தாண்டிச்செல்லும் சந்தர்ப்பத்தில் அத்தகைய இடர்களின் விளைவுகளைத் தணிப்பதற்கான சரிப்படுத்தல் நடவடிக்கை.

- திட்டவட்டமான இடர்களை இனங்காண்பதற்கும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரால் வழிப்படுத்தப்பட்டவாறு அல்லது வேறுவகையில் உடனடி சரிப்படுத்தல் நடவடிக்கையை எடுப்பதற்கும் தவறியமைக்குப் பொறுப்பான அலுவலர்களுக்கு எதிரான பொருத்தமான நடவடிக்கைகள்.

- கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாட்டு மற்றும் இணக்கப்பாட்டு இடர்கள் தொடர்பான இடர் அடையாளங்காணல், அளவீடு, கண்காணிப்பு மற்றும் தணிப்பு ஆகியவற்றின் போதுமானதன்மையும் பயனுறுதி வாய்ந்த தன்மையும்.

உள்ளடக்க கட்டமைப்பும் கூட்ட நடப்பெண்ணும்

மீளாய்வின் கீழான ஆண்டின் போது இக்குழுவின் உறுப்பினர்கள் பின்வருவோர் ஆவர்:

- **திரு. சமந்த ராஜபக்ஷ**

  தவிசாளர் / சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் – 2018 நவம்பர் 25 ஆம் திகதி வரை இக்குழுவில் சேவையாற்றினார்.

- **திரு. எச். பி. அஜித் குணவர்த்தன**

  உறுப்பினர் / சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் - 2018 யூலை 20 ஆம் திகதி வரை இக்குழுவில் சேவையாற்றினார்.

- **திரு எஸ் ஆர் ஆட்டிகல**

  உறுப்பினர் / நிறைவேற்றுத் தரம் சாராத பதவி வழிவந்த பணிப்பாளர் - 2018 நவம்பர் 25 ஆம் திகதி வரை இக்குழுவில் சேவையாற்றினார்.

2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சபையின் மீளுருவாக்கத்துடன்:

- **திரு. நீல் ஏ உமகிலிய**

  Cதவிசாளர் / சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் – 2018 நவம்பர் 27 ஆம் திகதியிலிருந்து 2018 டிசெம்பர் 20 ஆம் திகதி வரை.

- **அம்மணி விசாக்கா அமரசேகர**

  உறுப்பினர் / நிறைவேற்றுத் தரம் சாராத பதவி வழிவந்த பணிப்பாளர் - 2018 நவம்பர் 27 ஆம் திகதியிலிருந்து 2019 பெப்ரவரி 27 ஆம் திகதி வரை.

- **அம்மணி ஏ வீ கே மாதவி ஹேரத்**

  உறுப்பினர் / சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் - 2018 நவம்பர் 27 ஆம் திகதியிலிருந்து 2018 டிசெம்பர் 20 ஆம் திகதி வரை.

- **திரு ஜி ஹர்ஷ விஜயவர்தன**

  தவிசாளர் / சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் – 2018 நவம்பர் 27 ஆம் திகதியிலிருந்து 2018 டிசெம்பர் 20 ஆம் திகதி வரை.

2018 ஆம் ஆண்டில் இக் குழு உறுப்பினர்களாகவிருந்த பணிப்பாளர்களின் சுருக்கமான விபரக்குறிப்புகளானவை இந்த ஆண்டறிக்கையின் 79 தொடக்கம் 85 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டுக்கான புதிய குழு

2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் சபையின் மீளுருவாக்கத்திற்கு இணங்க:

- **திரு. குமார் மாயாதுன்ன**

  தவிசாளர் / சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் - 2019 மார்ச் 19 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக நியமிக்கப்பட்டார்.

- **திரு. கே ஏ விமலேந்திரராஜா**

  உறுப்பினர் / நிறைவேற்றுத் தரம் சாராத பதவி வழிவந்த பணிப்பாளர் - 2019 மார்ச் 19 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக நியமிக்கப்பட்டார்.

- **திரு. பி ஏ ஷாப்ரெர்**

  உறுப்பினர் / சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் – 2019 மார்ச் 19 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக நியமிக்கப்பட்டார்.

புதிய உறுப்பினர்களின் விபரக் குறிப்புக்கள் 26 தொடக்கம் 27 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

இக்குழுவிலுள்ள நிரந்தர முகாமைத்துவப் பிரதிநிதிகள்

- **திரு. டீ. எம். குணசேகர**

  பொது முகாமையாளர் – 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி வரை இக்குழுவில் சேவையாற்றினார்.

- **திரு. செனரத் பண்டார**

  பொது முகாமையாளர் – 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதியிலிருந்து இக்குழுவில் சேவையாற்றுகின்றார்.

- **திரு. டி என் எல் பெர்னான்டோ**

  பிரதம இடர் அலுவலர்

இக்குழுவின் கூட்ட நடப்பெண் இரண்டு உறுப்பினர்கள் ஆவர்.

இலங்கை வங்கிச் செயலாளர் / சபைச் செயலாளர் இக் குழுவின் செயலாளராக செயலாற்றுகின்றார். பிரதம நிதி அலுவலரும் பிரதம உள்ளகக் கணக்காய்வாளரும் கூட்டங்களுக்கு சமுகமளிக்குமாறு அழைக்கப்படுகின்றனர். அலுவலர் குழாத்தின்

சபை உபகுழு அறிக்கைகள்

ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு அறிக்கை

ஏனைய உறுப்பினர்களின் வருகையை இக்குழு கோரும் போது கூட்டங்களுக்கு சமுகமளிக்குமாறு அவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

கூட்டங்களும் செயற்பாடுகளும்

மீளாய்வின் கீழான ஆண்டின் போது இக்குழு ஆறு தடவைகள் கூடியது. இக்கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் குழு உறுப்பினர்களின் வருகையானது இந்த ஆண்டறிக்கையின் 86 ஆம் பக்கத்திலுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

இக்குழுவின் பொறுப்புக்களை ஆற்றுகையில் மீளாய்வின் கீழான ஆண்டின் போது குழுவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன:

- வங்கியின் இடர்ப் பண்பு எக் கொள்கையின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளதோ அத்தகைய பின்வரும் கொள்கைகளை மீளாய்வுசெய்தமை அத்துடன் அல்லது பரிந்துரைத்தமை:

  அ. நெருக்கடிநிலை சோதனைக் கொள்கை

  ஆ. திரவத்தன்மை இடர் முகாமைத்துவக் கொள்கை

  இ. சீசெல்ஸ் கிளை மற்றும் இலங்கை நடவடிக்கைகளுக்கான பணத் தூய்மையாக்கல் (ML) தடுப்பு மற்றும் பயங்கரவாத நிதியீட்ட எதிர்ப்பு (CFT) பற்றிய கொள்கைகள்.

  ஈ. இலஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் ஒழிப்புக் கொள்கை.

  உ. குழும இடர் முகாமைத்துவக் கொள்கை.

  ஊ. சென்னைக் கிளையின் கடன் கொள்கைக் கைநூல்.

  எ. உள்ளக மூலதனத்தின் போதுமானதன்மை மதிப்பீட்டுச் செய்முறை 2018.

  ஏ. ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கொள்கை.

  ஐ. வியாபாரம் தொடர்ந்திருத்தல் முகாமைத்துவக் கொள்கை மற்றும் வியாபாரம் தொடர்ந்திருத்தல் திட்டம் 2017.

  ஒ. மாலே கிளை மற்றும் இலங்கை நடவடிக்கைகளுக்கான இணக்கப்பாட்டுக் கொள்கைகள்.

  ஓ. 2017 - 2018 வரையான ஆண்டுக்காலத்தில் சென்னைக் கிளைக்கான இணையம்சார் இடர் முகாமைத்துவக் கொள்கையும் இணையப் பாதுகாப்புக் கொள்கையும்.

  ஔ. தகவல் தொழில்நுட்ப இடர் முகாமைத்துவக் கொள்கை.

- இவ் வங்கியின் சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினால் மாதாந்த அடிப்படையில் இவ்வங்கியின் இடர்கள் மதிப்பிடப்பட்டதுடன் பொழிப்பாக்கப்பட்ட அறிக்கைகள் இக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றை இக்குழு மீளாய்வுசெய்து அதன் பின்னர் அதன் பரிந்துரையை கூட்ட அறிக்கைகள் மற்றும் திட்டவட்டமான பரிந்துரைகள் என்பவற்றின் மூலம் சபைக்குச் சமர்ப்பித்தது.

- 2018 ஆம் ஆண்டிற்கான இடர் நாட்டம் மற்றும் எல்லை நிர்ணயம் என்பன தாபிக்கப்பட்டன.

- அவற்றின் எல்லைகளுக்கு அப்பாற் சென்றுள்ள கணியசார் மற்றும் பண்புசார் இடர்களை கண்காணித்தமை மற்றும் அவசியமான பரிந்துரைகளைச் செய்தமை.

- இணக்கப்பாட்டு பரிமாணத்தை ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகளைக் கொண்டு மதிப்பிடுவதற்கான இணக்கப்பாட்டு அலுவலரினால் சமர்ப்பிக்கப்பட்ட முழுமையான இணக்கப்பாட்டு அறிக்கைகளை மீளாய்வுசெய்தமை.

- இடர் தொழிற்பாடுகளை பயனுறுதி வாய்ந்த விதத்தில் முகாமைசெய்வதற்கு துணை நிறுவனங்களுக்கு உதவும் பொருட்டு துணை நிறுவன இடர் முகாமைத்துவ தகவல் காட்சிமுறைகளை (dashboards) மீளாய்வுசெய்தமை. மேலும், துணை நிறுவனங்களின் இடர் விடயங்களில் அவற்றுக்கு உதவும் பொருட்டு இடர் முகாமைத்துவ பிரிவிலிருந்து ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

- கிளை வலையமைப்பு, முக்கியமான வியாபாரங்கள் மற்றும் துணைநிலைப் பிரிவுகள் ஆகியவற்றிலுள்ள முதன்மையான இடர் குறிகாட்டிகளை கண்காணித்தமை.

- மேற்கொள்ளப்பட்ட வியாபாரத் தொடர்ச்சித் திட்டத்தின் (BCP) ஒத்திகைகளை கண்காணித்தமை.

- காலாண்டு அடிப்படையில் நெருக்கடிநிலை சோதனைப் பெறுபேறுகளைக் கண்காணித்தமை.

- தகவல் தொழில்நுட்ப (IT) இடர் மற்றும் அதனுடன் இணைந்த இணையப் பாதுகாப்பு இடர் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டமையும் இணையத் தாக்குதல்களிலிருந்து வங்கியினைப் பாதுகாப்பதற்கான பல்வேறுபட்ட நடவடிக்கைகள் (அப்படிப்பட்டதாக, வங்கியின் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு வலையமைப்பின் உட்கட்டமைப்பு, தொழில்முயற்சி பாதுகாப்பு முறைமை (Enterprise Immune System) போன்றவை) தொடர்பில் தொடர் நடவடிக்கையினை முன்னெடுத்தமையும்.

- இஸ்லாமிய வங்கி அலகு சார்பில் நடைமுறையிலுள்ள தொழிற்பாட்டு நடைமுறையினை மீள ஆராய்ந்தமையும் முழுமையான தொழிற்பாட்டுக் கைநூல் ஒன்றை உருவாக்கியமையும்.

- ஒரு புதிய மூன்றாந்தரப்பு இடர் மதிப்பீட்டு முறைமையின் விருத்தியினைக் கண்காணித்தமை.

- தகவல் தொழில்நுட்ப (IT) இடருடன் தொடர்புபட்ட பிரச்சினைகளை முகாமை செய்வதற்கு புதிய பிரதம தகவல் பாதுகாப்பு அலுவலர் ஒருவரின் நியமனத்தை பரிந்துரைத்தமையும் நிறைவேற்றியமையும்.

- தலைமை அலுவலகத்தில் தரவு நிலைய நவீனமயமாக்கல் கருத்திட்டத்திற்கான பிரேரிப்பை மீளாய்வு செய்தமை.

- மைய வங்கி முறைமையின் பயன்படுத்தப்படாத கூறுகளின் இனங்காணலையும் அமுலாக்கத்தினையும் கண்காணித்தமை.

- பணத் தூய்மையாக்கல் தடுப்பு முறைமையின் அமுலாக்க முன்னேற்றத்தைக் கண்காணித்தமையும் அதில் எழுந்த பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தமையும்.

- வங்கியின் காப்புறுதிக் கொள்கைகளின் அடுத்த மீளாய்விற்குள் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்படும், ஊழியர்களின் விசுவாசமின்மை காரணமாக ஏற்படும் இடர்களுக்கான காப்புறுதிக் காப்பீட்டை மீளாய்வு செய்தமை.

- பட்டயக் கணக்காளரான எம்எஸ் பிறைஸ்வோட்டர்ஹவுஸ் கூப்பேர்ஸ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தகவல் பாதுகாப்பு மீளாய்வில் இனங்காணப்பட்ட பிரச்சினைகளை மீளாய்வு செய்தமை.

- தரவிழப்புத் தடுப்புக் கருத்திட்டத்தின் அமுலாக்கம் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுத்தமை.

- கூட்டாண்மை மற்றும் நடுத்தர கூட்டாண்மை கடன்பெறுநர்களை தரப்படுத்துவதற்கான, இவ்வங்கியின் கூட்டாண்மைப் பிரிவிலும் கிளை வலையமைப்பிலுமுள்ள பாவனையாளர்களினால் தற்போது பயன்படுத்தப்படும் நடைமுறையிலுள்ள கடன்பெறுநர் தரப்படுத்தல் மாதிரிகளின் மீளாய்வு முன்னேற்றத்தைக் கண்காணித்தமை.

- சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவ (ALM) கூறின் தன்னியக்க முன்னேற்றத்தைக் கண்காணித்தமை.

- அதிகாரமளிக்கப்படாத தற்காலிக மேலதிகப்பற்றுக்களைத் தடுப்பதற்கு கடன் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட செயல் திட்டமொன்றைப் பின்பற்றியமை.

- தொழில்முயற்சி வாரியான மோசடித் தடுப்பு முகாமைத்துவ மென்பொருளின் பெறுகை முன்னேற்றத்தைக் கண்காணித்தமை.

- பிரேரிக்கப்பட்ட புதிய, முழுமையாக விருத்தியடைந்த அனர்த்த மீட்சித்தளம் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுத்தமை.

- நிதிசாரா துணை நிறுவனங்களுக்கான இணக்கப்பாட்டு சரிபார்ப்புப் பட்டியலொன்றை முற்றாக்கியமை

- நலிவுறுநிலை மதிப்பீட்டு அறிக்கை முடிவுகளின் முன்னேற்றத்தையும் மேற்கொள்ளப்பட்ட ஊடுறுவல் சோதனையின் போது இனங்காணப்பட்ட பிரச்சினைகளையும் கண்காணித்தமை.

- வங்கியின் நிகழ்நிலை (இணைய இணைப்பு) அடித்தளங்கள் பற்றிய இடைவெளிப் பகுப்பாய்வொன்றை மேற்கொண்டமை மற்றும் வங்கியின் நிகழ்நிலை அடித்தளங்களை மேம்படுத்துவதற்கு வங்கியின் முன்னோக்கிய வழி தொடர்பான திட்டமொன்றை வகுத்தமை.

- வங்கியின் தகவல் தொழில்நுட்ப (IT) பெறுகைகளையும் தகவல் தொழில்நுட்ப உடன்படிக்கைகளையும் மீளாய்வு செய்தமை அத்துடன் / அல்லது பரிந்துரை செய்தமை.

- வங்கியில் கடன் தரப்படுத்தல் சுட்டி / சட்டகம் ஒன்றை ஆரம்பித்தமை.

இக் குழுவானது அதன் பரிந்துரைகளை வழங்கும் அறிக்கையினூடாக சபைக்கு அறிக்கையிட்டது. இக்குழுவின் கூட்ட அறிக்கைகள் அனைத்தும் சபையின் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் சபையின் அங்கீகாரமானது இக்குழுவினால் செய்யப்பட்ட பரிந்துரைகளின் அமுலாக்கம் கருதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஒழுங்கான அடிப்படையில் முக்கியமான விடயங்கள் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

முடிவுரை

இக் குழுவானது வங்கி எதிர்கொள்ளும் பல்வேறுபட்ட இடர்களை தொடர்ந்து மீளாய்வு செய்வதுடன், நிறுவனத்தில் உள்வாரியான நிபுணத்துவத்தை விருத்தி செய்தும் இடர் வெளிக்காட்டல்களையும் நெருக்கடிநிலை சோதனைகள் அல்லது நிலவரப் பகுப்பாய்வுகள், தரவுப் பகுப்பாய்வுகள் மற்றும் நேரிணை வங்கிப் பகுப்பாய்வு ஆகியவற்றின் பெறுபேறுகளையும் இடர் அறிக்கையானது துல்லியமாகத் தொடர்புபடுத்துகின்றது என்பதை உறுதிப்படுத்தியும், ஓர் உறுதியான இடர் ஆட்சிக் கட்டமைப்பு, இடர் நாட்ட நிர்ணயிப்பை உள்ளடக்கிய நன்கு விருத்தியடைந்த மற்றும் வெளிப்படையான ஓர் இடர் முகாமைத்துவக் கொள்கை, நிதி இடர்களை அளவிடுவதற்கான நவீன வழிமுறைகளின் பிரயோகம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்குப் பாடுபடுகின்றது.

தொழில்நுட்ப முன்னேற்றம், பேரினப் பொருளாதார அதிர்ச்சி மற்றும் உறுதியற்ற நிலையுடன்கூடிய அதிகரித்த நலிவுறுநிலை என்பவற்றுடனும் வங்கி மோசடிகள் மற்றும் இணையக் குற்றங்கள் என்பன பாரிய சவாலொன்றை உருவாக்க ஆரம்பிப்பதாலும் இக் குழுவானது அதன் இடர் எதிர்ப்பு தந்திரோபாயத்தில் விழிப்பாகவும் அதற்குப் பரிச்சயமாகவும் இருக்க வேண்டும் என்ற விடயத்தை நன்கு புரிந்துகொண்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் இக் குழுவின் உறுப்பினர்களால் ஆற்றப்பட்ட பெறுமதி வாய்ந்த பங்களிப்புகளுக்காக அவர்களுக்கு நன்றிகூற இக் குழு விரும்புகின்றது.

இக்குழுவில் தற்போது சேவையாற்றும் உறுப்பினர்கள் எவரும் இந்த அறிக்கை உள்ளடக்கிய காலப்பகுதியில், அதாவது 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காலத்தில் சமுகமளிக்கவில்லை என்னும் விடயத்தின் மீது கவனம் செலுத்த இக்குழு விரும்புகின்றது. ஆதலால் இந்த அறிக்கையானது பதிவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன், அதன் நம்பகத்தன்மையானது சரிபார்க்கப்பட்டு சந்தேகத்திற்கிடமின்றி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆதலால், தற்போதய குழுவானது இந்த அறிக்கை துல்லியமானதென்றும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றதென்றும் முழுமையாக நம்புகின்றது.

ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் சார்பில்,

குமார் மாயாதுன்ன

தலைவர்

ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு

2019 ஏப்ரல் 3 ஆம் திகதி
கொழும்பு

சபை உபகுழு அறிக்கைகள்

மனித வளங்களும் ஊதியமும் குழு அறிக்கை

தலைவரின் கூற்று

குழுவின் வகிபாகம்

பிரதானமாக, இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட இலங்கையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆட்சி பற்றிய 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டலினை அடிப்படையாகக் கொண்ட இக்குழுவின் பிரதான பொறுப்புக்கள் பின்வருமாறு:

- வங்கியின் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் (KMP) தொடர்பான ஊதியக் கொள்கையை (சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய நிதிக் கொடுப்பனவுகள்) நிர்ணயித்தல்.
- பொது முகாமையாளர் (GM) மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கான குறிக்கோள்களையும் இலக்குகளையும் உருவாக்குதல்.
- உருவாக்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கு எதிராக பொது முகாமையாளரினதும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரினதும் செயற்றிறனை காலக்கிரமமாக மதிப்பிடுதலும் ஊதியம், நன்மைகள் மற்றும் செயற்றிறனை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்புகள் பற்றிய ஏனைய கொடுப்பனவுகள் என்பவற்றைத் திருத்துவதற்கான அடிப்படையை நிர்ணயித்தலும்.
- சபையினால் இதற்கு தொடர்புபடுத்தப்பட்ட அலுவலர் குழாத்து விடயங்களை மீளாய்வு செய்தல்.
- இவ்வங்கியின் மனிதவள கொள்கையையும் நிறுவனக் கட்டமைப்பையும் நிர்ணயித்தல்.

இந்த ஆண்டின் போதான உள்ளடக்க கட்டமைப்பும் கூட்ட நடப்பெண்ணும்

மீளாய்வின் கீழான ஆண்டின் போது, இக்குழுவின் உறுப்பினர்கள் பின்வருவோர் ஆவர்:

- **திரு. எச். பி. அஜித் குணவர்த்தன**
  தவிசாளர் / சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் - (2018 யூலை 20 ஆம் திகதியன்று இலங்கை வங்கி சபையிலிருந்தான அவரின் பதவிவிலகல் வரை)
- **திரு. ரோனால்ட் சி பெரேரா**
  சனாதிபதி சட்டத்தரணி
  உறுப்பினர் / சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் - 2015 பெப்ரவரி 27 ஆம் திகதியிலிருந்து 2018 நவம்பர் 18 ஆம் திகதி வரை
- **திரு எஸ் ஆர் ஆட்டிகல**
  உறுப்பினர் / சுயாதீனமற்ற நிறைவேற்றுத் தரம் சாராத பதவி வழிவந்த பணிப்பாளர் - 2016 மே 11 ஆம் திகதியிலிருந்து 2018 நவம்பர் 18 ஆம் திகதி வரை

2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இடம்பெற்ற சபையின் மீளுருவாக்கத்திற்கு இணங்க, இக்குழு பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கியது

- **திரு. நீல் ஏ உமகிலிய**
  தவிசாளர் / சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்
- **அம்மணி. விசாக்கா அமரசேகர**
  உறுப்பினர் / சுயாதீனமற்ற நிறைவேற்றுத் தரம் சாராத பதவி வழிவந்த பணிப்பாளர்
- **திரு. எச் இசுறு பாலபட்டபென்தி**
  உறுப்பினர் / சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்

திரு. நீல் ஏ உமகிலியவும் திரு. இசுறு பாலபட்டபென்தியும் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி இலங்கை வங்கி சபையிலிருந்து பதவிவிலகியதுடன் அம்மணி. விசாக்கா அமரசேகர 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக பணிப்பாளராக இருப்பதை முடிவுறுத்தினார்.

2018 ஆம் ஆண்டில் உறுப்பினர்களாகவிருந்த பணிப்பாளர்களின் சுருக்கமான விபரக் குறிப்புக்கள் இந்த ஆண்டறிக்கையின் 79 தொடக்கம் 85 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டுக்கான புதிய குழு

2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் சபையின் மீளுருவாக்கத்திற்கு இணங்க, பின்வரும் பணிப்பாளர்கள் 2019 மார்ச் 19 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மனித வளங்களும் ஊதியமும் குழுவிற்கு நியமிக்கப்பட்டனர்:

- **திரு. கே ஏ விமலேந்திரராஜா**
  தவிசாளர் / சுயாதீனமற்ற நிறைவேற்றுத் தரம் சாராத பதவி வழிவந்த பணிப்பாளர்
- **திரு. குமார் மாயாதுன்ன**
  உறுப்பினர் / சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்
- **திரு. பி ஏ ஷாப்ரெர்**
  உறுப்பினர் / சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர

புதிய உறுப்பினர்களின் விபரக் குறிப்புக்கள் 25 தொடக்கம் 27 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

இக்குழுவின் கூட்ட நடப்பெண் இரண்டு உறுப்பினர்கள் ஆவர். பொது முகாமையாளருடன் தொடர்புபட்ட விடயங்கள் கலந்துரையாடப்படும் வேளை தவிர்ந்த சகல கூட்டங்களிலும் பொது முகாமையாளர் கலந்துகொள்கின்றார்.

பிரதிப் பொது முகாமையாளரினதும் (மனித வளங்கள்) அலுவலர் குழாத்தின் ஏனைய உறுப்பினர்களினதும் வருகையை இக்குழு கோரும் போது கூட்டங்களுக்கு சமுகமளிக்குமாறு அவர்கள் அழைக்கப்படுகின்றனர். இலங்கை வங்கிச் செயலாளர் / சபைச் செயலாளர் இக் குழுவின் செயலாளராக செயலாற்றுகின்றார்.

கூட்டங்களும் செயற்பாடுகளும்

பணிப்பாளர் சபையினால் கோரப்படும் போதெல்லாம் அத்துடன் / அல்லது சட்டத்தினால் அல்லது இக்குழுவின் சாசனத்திற்கு இணங்க ஏற்புடைய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளினால், இக்குழுவின் தவிசாளர் அது அவசியமெனக் கருதும் போதும் மனித வளங்களும் ஊதியமும் குழுவானது கூடுகின்றது. இக்குழுவில் குறைந்த எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் இருப்பதை விளைவித்த 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இலங்கை வங்கி சபையிலான மாற்றங்கள் காரணமாக மீளாய்வின் கீழான ஆண்டின் போது இக்குழு ஒரு தடவை மாத்திரமே கூடியுள்ளது. இக் கூட்டத்தில் உறுப்பினர்களின் வருகையானது 86 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

இக்குழுவின் கூட்ட அறிக்கைகள் சபையின் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் இவ்வாறாக சபையின் அங்கீகாரமானது இக்குழுவினால் செய்யப்பட்ட பரிந்துரைகளின் அமுலாக்கம் கருதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. முக்கியமான விடயங்கள் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

மேற்போன்ற 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டலுக்கு இணங்க, பணிப்பாளர்கள் தொடர்பான ஊதியக் கொள்கையை இக்குழு நிர்ணயிக்க வேண்டியிருக்கின்றது. எவ்வாறாயினும், இலங்கை வங்கி என்னும் பட்சத்தில், பணிப்பாளர்களின் ஊதியமானது, இவ்வங்கியின் தனித்த பங்குதாரரான இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நிர்ணயிக்கப்படுகின்றது. 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்திலும் அதன் திருத்தங்களிலுமுள்ள ஏற்பாடுகளும் இது குறித்து கருத்திற்கொள்ளப்படுகின்றன. மேற்போன்றவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதும், புதிய ஒழுங்குவிதிகள் அரசாங்கத்தினால் வெளியிடப்படும் போது மீளாய்வுசெய்யப்படுவதுமான, அமுலிலுள்ள ஊதியக் கொள்கையொன்றை இவ்வங்கி கொண்டுள்ளது. பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் பற்றிய விபரங்கள் வருடாந்த அடிப்படையில் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்படுகின்றன.

பொது முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர்களுக்கான (DGMs) குறிக்கோள்களும் இலக்குகளும் சுழற்சிமுறை கூட்டாண்மைத் திட்டத்திலும் செயல் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. பிரதிப் பொது முகாமையாளர்களின் ஊடாக கூட்டாண்மைத் திட்டத்தை அமுலாக்குவதற்கு பொது முகாமையாளர் பொறுப்புடையவர். கூட்டாண்மைத் திட்டத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்ட செயல் திட்டத்தின் அடிப்படையில், உரிய பிரதிப் பொது முகாமையாளர்களினால் உதவிப் பொது முகாமையாளர்களுக்கு இலக்குகள் அளிக்கப்படுகின்றன.

மீளாய்வின் கீழான ஆண்டின் போது இக் குழு பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது

- கூட்டாண்மைத் திட்டத்திற்கு ஒத்திசைவாக 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வகுக்கப்பட்ட இலக்குகளின் அடிப்படையில் 2017 இல் முடிவடைந்த ஆண்டு சார்பில் பொது முகாமையாளர் உள்ளடங்கலாக பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் (KMP) செயற்றிறன் மதிப்பீடு. உதவிப் பொது முகாமையாளர்களின் செயற்றிறனானது அவர்கள் தொடர்பில் அவர்களின் மேலதிகாரிகளினால் அதாவது பிரதிப் பொது முகாமையாளர்களினால் (DGMs) மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டிற்கூடாக மதிப்பிடப்படுகின்றது.

- இக்குழுவின் சாசனத்திற்கு அமைவாக 2017 ஆம் ஆண்டிற்கான அதன் வருடாந்த செயற்றிறனை இக்குழு மதிப்பிட்டது.

சபையிலும் அதன் விளைவாக இக்குழுவிலும் குறைந்த எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் இருப்பதை விளைவித்த, இந்த ஆண்டில் இடம்பெற்ற இக்குழுவின் உள்ளடக்க கட்டமைப்பிலான மாற்றங்கள் காரணமாக பின்வரும் செயற்பாடுகளை சபை நேரடியாக மேற்கொண்டுள்ளது

- மூன்று வருடங்களுக்கு ஒருமுறை திருத்தப்படும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் (KMP) சம்பளமானது இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இவ்வங்கிக்குப் பொறுப்பான அமைச்சின் அங்கீகாரத்துடன் 2018 – 2020 வரையான காலப்பகுதி சார்பில் திருத்தப்பட்டது.

- பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் (KMPs) நட்டாண்டு செயற்றிறன் மீளாய்வானது கூட்டாண்மைத் திட்டத்திற்கு ஒத்திசைவாக ஆண்டின் ஆரம்பத்தில் வகுக்கப்பட்ட இலக்குகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது.

முடிவுரை

இக் குழுவானது இக் குழுவின் முன்னைய உறுப்பினர்களுக்கு அதன் பாராட்டைத் தெரிவிக்க விரும்புகின்றது.

இக் குழுவானது அதன் விடய நோக்கெல்லையின் கீழ் வரும் சகல விடயங்கள் தொடர்பிலும் சபைக்கு பரிந்துரைகளைச் செய்வதற்கான பொறுப்பினை தொடர்ந்து ஏற்கும். மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுவின் சாசன ஆய்வெல்லைக்கு அமைவாக, சபையானது அதன் மேற்பார்வைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு அதற்கு தொடர்ந்து உதவிசெய்வதுடன் மனித வள முகாமைத்துவத்தில் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதையும் ஊக்குவிக்கும்.

இக்குழுவில் தற்போது சேவையாற்றும் உறுப்பினர்கள் எவரும் இந்த அறிக்கை உள்ளடக்கிய காலப்பகுதியில், அதாவது 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காலத்தில் சமுகமளிக்கவில்லை என்னும் விடயத்தின் மீது கவனம் செலுத்த இக்குழு விரும்புகின்றது. ஆதலால் இந்த அறிக்கையானது பதிவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன், அதன் நம்பகத்தன்மையானது சரிபார்க்கப்பட்டு சந்தேகத்திற்கிடமின்றி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆதலால், தற்போதய குழுவானது இந்த அறிக்கை துல்லியமானதென்றும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றதென்றும் முழுமையாக நம்புகின்றது.

மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுவின் சார்பில்.

கே ஏ விமலேந்திரராஜா
தலைவர்

மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு

2019 ஏப்ரல் 3
கொழும்பு

சபை உபகுழு அறிக்கைகள்

பெயர்குறித்த நியமனமும் கூட்டாண்மை ஆட்சியும் குழு அறிக்கை

தலைவர் கூற்று

குழுவின் வகிபாகம்

பெயர்குறித்த நியமனமும் கூட்டாண்மை ஆட்சியும் குழுவானது பிரதானமாக பின்வருவனவற்றிற்குப் பொறுப்பாகவுள்ளது:

- பொது முகாமையாளரையும் (GM) பிரதான முகாமைத்துவ ஆளணியினரையும் (KMP) தெரிவுசெய்வதற்கான / நியமிப்பதற்கான நடைமுறைகளை அமுல்படுத்தல்.
- பொது முகாமையாளர் பதவிக்கும் பிரதான முகாமைத்துவ பதவிகளுக்குமான நியமனத்திற்கு அல்லது பதவியுயர்விற்கு கருத்திற்கொள்ளப்பட வேண்டிய தகுதிக்கான தகைமைகள், அனுபவம் மற்றும் பிரதான பண்புகள் போன்ற தகுதிவிதிகளை உருவாக்குதல்.
- இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட, இலங்கையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆட்சி பற்றிய 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டலின் 3 (3) ஆம் இலக்க வழிகாட்டலில் தரப்பட்ட தகுதிவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறும் நியதிச்சட்டங்களில் விதித்துரைக்கப்பட்டவாறும் பதவியினை வகிப்பதற்கு பொது முகாமையாளரும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரும் (KMP) பொருத்தமானதும் சரியானதுமான ஆட்களாவர் என்பதை உறுதிப்படுத்துதல்.
- பிரதான முகாமைத்துவ ஆளணியினர் (KMP) சார்பில் மேலதிக புதிய நிபுணத்துவத் தேவைப்பாடுகள் மற்றும் அடுத்து பதவியிலமர்பவர் பற்றிய ஏற்பாடுகள் என்பவற்றைக் காலத்திற்குக்காலம் கருத்திற்கொண்டு பரிந்துரை செய்தல்.
- சபையினதும் ஒவ்வொரு சபைக் குழுவினதும் பயனுறுதி வாய்ந்த தன்மை பற்றிய வருடாந்த மதிப்பீடுகளின் முறைகள் மற்றும் நிறைவேற்றம் என்பவற்றை நிர்ணயித்தலும் வருடாந்த செயற்றிறன் மதிப்பீட்டுச் செய்முறைக்கு உதவுதலும்.
- வங்கியின் ஒழுக்க விதிக்கோவையினை மீளாய்வு செய்தல்.
- கூட்டாண்மை ஆட்சித் தத்துவங்களுடனான இணக்கப்பாட்டு மட்டத்தை நிர்ணயித்தல்.

இக்குழுவின் உள்ளடக்கக் கட்டமைப்பு

மீளாய்வின் கீழான ஆண்டின் போது இக்குழுவின் உறுப்பினர்கள் பின்வருவோர் ஆவர்:

- **திரு. ரோனால்ட் சி பெரேரா**
  சனாதிபதி சட்டத்தரணி
  தலைவர் / சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் - 2018 நவம்பர் 18 ஆம் திகதி வரை இக்குழுவில் சேவையாற்றினார்.
- **திரு. எச். பி. அஜித் குணவர்த்தன**
  உறுப்பினர் / சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் - 2018 யூலை 20 ஆம் திகதி வரை இக்குழுவில் சேவையாற்றினார்.
- **திரு எஸ் ஆர் ஆட்டிகல**
  உறுப்பினர் / சுயாதீனமற்ற நிறைவேற்றுத் தரம் சாராத பதவி வழிவந்த பணிப்பாளர் - 2018 நவம்பர் 25 ஆம் திகதி வரை இக்குழுவில் சேவையாற்றினார்.

2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சபையின் மீளுருவாக்கத்துடன்:

- **அம்மணி விசாக்கா அமரசேகர**
  தவிசாளர் / நிறைவேற்றுத்தரம் சாராத பதவி வழிவந்த பணிப்பாளர் - 2018 நவம்பர் 27 ஆம் திகதியிலிருந்து 2019 பெப்ரவரி 27 ஆம் திகதி வரை
- **திரு. எச் இசுறு பாலபட்டபென்தி**
  உறுப்பினர் / சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் - 2018 நவம்பர் 27 ஆம் திகதியிலிருந்து 2018 டிசெம்பர் 20 ஆம் திகதி வரை
- **திரு ஜி ஹர்ஷ விஜயவர்தன**
  உறுப்பினர் / சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் - 2018 நவம்பர் 27 ஆம் திகதியிலிருந்து 2018 டிசெம்பர் 20 ஆம் திகதி வரை

2018 ஆம் ஆண்டில் இக்குழுவின் உறுப்பினர்களாகவிருந்த பணிப்பாளர்களின் சுருக்கமான விபரக் குறிப்புக்கள் இந்த ஆண்டறிக்கையின் 79 தொடக்கம் 85 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டுக்கான புதிய குழு

2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் சபையின் மீளுருவாக்கத்திற்கு இணங்க:

- **திரு. ரோனால்ட் சி பெரேரா**
  சனாதிபதி சட்டத்தரணி
  தவிசாளர் / சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் - 2019 மார்ச் 19 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக நியமிக்கப்பட்டார்.
- **திரு. கே ஏ விமலேந்திரராஜா**
  உறுப்பினர் / நிறைவேற்றுத் தரம் சாராத பதவி வழிவந்த பணிப்பாளர் - 2019 மார்ச் 19 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக நியமிக்கப்பட்டார்.
- **திரு. பி ஏ ஷாப்ரெர்**
  உறுப்பினர் / சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் - 2019 மார்ச் 19 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக நியமிக்கப்பட்டார்.

புதிய உறுப்பினர்களின் விபரக் குறிப்புக்கள் 25 தொடக்கம் 27 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

பொது முகாமையாளர் அழைப்பின் மூலம் கூட்டங்களுக்கு சமுகமளிக்கின்றார். அலுவலர் குழாத்தின் ஏனைய உறுப்பினர்களின் வருகையை இக்குழு கோரும் போது கூட்டங்களுக்கு சமுகமளிக்குமாறு அவர்கள் அழைக்கப்படுகின்றனர். இலங்கை வங்கிச் செயலாளர் / சபைச் செயலாளர் இக் குழுவின் செயலாளராக செயலாற்றுகின்றார்.

கூட்டங்கள்

மீளாய்வின் கீழான ஆண்டின் போது இக்குழு இரு தடவைகள் கூடியது. இந்தக் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் இக்குழு உறுப்பினர்களின் வருகையானது இந்த ஆண்டறிக்கையின் 86 ஆம் பக்கத்திலுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

சபைக்கு அறிக்கையிடல்

இக்குழுவின் கூட்ட அறிக்கைகள் அனைத்தும் சபையின் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் இவ்வாறாக சபையின் அங்கீகாரமானது இக்குழுவினால் செய்யப்பட்ட பரிந்துரைகளின் அமுலாக்கம் கருதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஒழுங்கான அடிப்படையில் முக்கியமான விடயங்கள் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

சபைக்குச் செய்யப்பட்ட நியமனங்கள்

மேற்போந்த 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டலுக்கு இணங்க, புதிய பணிப்பாளர்களை தெரிவுசெய்வதற்கான / நியமிப்பதற்கான ஒரு நடைமுறையை இக்குழு அமுலாக்க வேண்டியிருக்கின்றது. எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கத்திற்கு முழுமையாக உடமையாக்கப்பட்ட இலங்கை வங்கி என்னும் பட்சத்தில், 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்திலும் அதன் திருத்தங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டவாறு, இவ்வங்கி எந்த அமைச்சருடைய

விடயநோக்கெல்லையின் கீழ் வருகின்றதோ அந்த அமைச்சரினால் பணிப்பாளர்களின் நியமனம் மேற்கொள்ளப்படுகின்றது. ஆதலால் இக்குழுவானது பணிப்பாளர்களின் நியமனம் தொடர்பில் எதுவித வகிபாகத்தையும் ஆற்றுவதில்லை.

மீளாய்வின் கீழான ஆண்டின் போது ஆற்றப்பட்ட செயற்பாடுகள்

- பின்வருவனவற்றை மீளாய்வுசெய்து பரிந்துரைத்தமை:
    - o சுயாதீனமான தொழில் நிபுணத்துவ ஆலோசனைக்கான பணிப்பாளரின் அணுக்கம் பற்றி கொள்கை.
    - o கூட்டாண்மை முகாமைத்துவம் மற்றும் நிறைவேற்று முகாமைத்துவம் (KMP) என்பவற்றுக்கான அடுத்து பதவியிலமர்பவர் திட்டம்.
- பிரதான முகாமைத்துவ ஆளணியினராக (KMP) அலுவலர்கள் பதவியுயர்த்தப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட போது பிரதான முகாமைத்துவ ஆளணியினர் (KMP) தமது பதவிகளை வகிப்பதற்கு பொருத்தமானதும் சரியானதுமான ஆட்களாவர் என்பதை உறுதிப்படுத்தியமை.
- முன்னைய ஆண்டு சார்பில் இக்குழுவின் செயற்றிறனை மதிப்பீடு செய்தமை.

முடிவுரை

இவ்வங்கியின் சிறந்த கூட்டாண்மை ஆட்சி நடைமுறைகளைப் பேணுவதற்கும் முன்னேற்றுவதற்கும் இக்குழு முயற்சிக்கும்.

2018 ஆம் ஆண்டின் போது இக்குழுவின் உறுப்பினர்களாக செயலாற்றிய பணிப்பாளர்களுக்கு நன்றிகூறுவதற்கு இக்குழு விரும்புகின்றது.

இக்குழுவில் தற்போது சேவையாற்றும் உறுப்பினர்களில் ஒருவர் மாத்திரமே (அதாவது, 2018.01.01 ஆம் திகதியிலிருந்து 2018.11.18 ஆம் திகதி வரை சேவையாற்றிய பணிப்பாளர் / தவிசாளர் திரு. ரொனால்ட் சி பெரேரா) இந்த அறிக்கை உள்ளடக்கிய காலப்பகுதியில், அதாவது 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காலத்தில் சமுகமளித்தார் என்னும் விடயத்தின் மீது கவனம் செலுத்த இக்குழு விரும்புகின்றது. ஆதலால் இந்த அறிக்கையானது பதிவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன், அதன் நம்பகத்தன்மையானது சரிபார்க்கப்பட்டு சந்தேகத்திற்கிடமின்றி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆதலால், தற்போதய குழுவானது இந்த அறிக்கை துல்லியமானதென்றும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றதென்றும் முழுமையாக நம்புகின்றது.

பெயர்குறித்த நியமனமும் கூட்டாண்மை ஆட்சியும் குழுவின் சார்பில்.

திரு. ரொனால்ட் சி பெரேரா
தலைவர்
பெயர்குறித்த நியமனமும் கூட்டாண்மை ஆட்சியும் குழு

2019 ஏப்ரல் 3
கொழும்பு

சபை உபகுழு அறிக்கைகள்

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் குழு அறிக்கை

தலைவரின் கூற்று

குழுவின் வகிபாகம்

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) குழுவானது பிரதானமாக பின்வருவனவற்றிற்குப் பொறுப்பாகவுள்ளது:

- இவ் வங்கியின் தகவல் தொழில்நுட்ப (IT) கணக்குகள் (உற்பத்திகள்) மற்றும் சேவைகளைக் கண்காணித்தல், அவை மதிப்பிடப்பட்டு முகாமைசெய்யப்படும் விதத்தினை மதிப்பிடுதல் மற்றும் அத்தகைய தகவல் தொழில்நுட்ப (IT) கணக்குகள் (உற்பத்திகள்) மற்றும் சேவைகள் கருதி வகுக்கப்பட்ட ஒப்பீட்டு நியமங்கள் மற்றும் பிரதான தொழிற்பாட்டு வெளிக்காட்டல்கள் என்பவற்றை மீளாய்வுசெய்தல்.

- நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்கால தகவல் தொழில்நுட்ப (IT) கணக்குகள் (உற்பத்திகள்) மற்றும் சேவைகளின் சீரான மற்றும் தடையற்ற தொழிற்பாடு கருதி பொருத்தமான கொள்கைகளும் நடைமுறைகளும் அமுலில் உள்ளதை உறுதிப்படுத்தல்.

- இவ் வங்கியின் தகவல் தொழில்நுட்ப (IT) வெளிக்காட்டல்களை முகாமை செய்யும் பொருட்டு ஆதிக்க சமநிலைப்படுத்தல் முறைமையைக் கண்காணித்து மதிப்பிடல்.

- தகவல் தொழில்நுட்ப (IT) பெறுகைகளுக்கான சபையின் இறுதி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு பரிந்துரைகளை மீளாய்வுசெய்து சபையிடம் முன்வைத்தல்.

- இவ் வங்கியின் தகவல் தொழில்நுட்ப (IT) கணக்குகள் (உற்பத்திகள்), சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு என்பன வங்கியின் தகவல் தொழில்நுட்ப (IT) திட்டத்துடன் சீராக்கப்படுவதை உறுதிப்படுத்தல்.

- தொழில்முயற்சி தகவல் தொழில்நுட்ப (IT) கண்ணோட்டமொன்றிலிருந்து வங்கியின் வியாபாரத் தந்திரோபாயங்கள் மற்றும் திட்டங்கள் பற்றி முக்கியமான மதிப்பீடொன்றை வழங்குதல்.

- இவ் வங்கியின் தகவல் தொழில்நுட்ப (IT) கணக்குகள் (உற்பத்திகள்) மற்றும் சேவைகளை பிரதான நியதிச்சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுடன் மீளாய்வுசெய்து கண்காணித்தல்.

- வங்கியின் அனர்த்த மீட்சி வசதிகள் தொடர்பில் பரிந்துரைகளை மீளாய்வுசெய்து சபையிடம் முன்வைத்தல்.

- தகவல் தொழில்நுட்ப (IT) பாதுகாப்புடன் தொடர்புபட்ட சகல தந்திரோபாயங்களும் அமுலாக்கங்களும் தொடர்பில் பரிந்துரைகளை மீளாய்வுசெய்து முன்வைத்தல்.

இக்குழுவின் உள்ளடக்கக் கட்டமைப்பு

இக்குழுவின் முதலாவது உறுப்பினர்கள் பின்வருவோர் ஆவர்:

- **திரு. ஜீ ஹர்ஷ விஜயவர்தன**
  தவிசாளர் / சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் - 2018 நவம்பர் 27 ஆம் திகதியிலிருந்து 2018 டிசெம்பர் 20 ஆம் திகதி வரை

- **திரு. பி லலித் பி விதான**
  உறுப்பினர் / சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் - 2018 நவம்பர் 27 ஆம் திகதியிலிருந்து 2018 டிசெம்பர் 20 ஆம் திகதி வரை

- **திரு. எச் இசுறு பாலபட்டபென்தி**
  உறுப்பினர் / சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் - 2018 நவம்பர் 27 ஆம் திகதியிலிருந்து 2018 டிசெம்பர் 20 ஆம் திகதி வரை

இக்குழுவின் உறுப்பினர்களாகவிருந்த பணிப்பாளர்களின் சுருக்கமான விபரக் குறிப்புக்கள் இந்த ஆண்டறிக்கையின் 79 தொடக்கம் 85 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டுக்கான புதிய குழு2019

ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் சபையின் மீளுருவாக்கத்திற்கு இணங்க:

- **திரு. பி ஏ ஷாப்ரெர்**
  தவிசாளர் / சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் - 2019 மார்ச் 19 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக நியமிக்கப்பட்டார்.

- **திரு. குமார் மாயாதுன்ன**
  உறுப்பினர் / சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் - 2019 மார்ச் 19 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக நியமிக்கப்பட்டார்.

- **திரு.கே ஏ விமலேந்திரராஜா**
  உறுப்பினர் / நிறைவேற்றுத் தரம் சாராத பதவி வழிவந்த பணிப்பாளர் - 2019 மார்ச் 19 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக நியமிக்கப்பட்டார்.

புதிய உறுப்பினர்களின் விபரக் குறிப்புக்கள் 25 தொடக்கம் 27 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

பொது முகாமையாளர், தகவல் தொழில்நுட்பத் தலைவர், பிரதிப் பொது முகாமையாளர் (உற்பத்தி மற்றும் வங்கி அபிவிருத்தி) மற்றும் பிரதம இடர் அலுவலர் ஆகியோர் அழைப்பின் மூலம் கூட்டங்களுக்கு சமுகமளிக்கின்றனர். அலுவலர் குழாத்தின் ஏனைய உறுப்பினர்களின் வருகையை இக்குழு கோரும் போது கூட்டங்களுக்கு சமுகமளிக்குமாறு அவர்கள் அழைக்கப்படுகின்றனர். இலங்கை வங்கிச் செயலாளர் / சபைச் செயலாளர் இக் குழுவின் செயலாளராக செயலாற்றுகின்றார்.

கூட்டங்கள்

இக் குழுவை தாபிப்பதற்கான தீர்மானம் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆம் திகதி எடுக்கப்பட்டது. எவ்வாறாயினும், உறுப்பினர்கள் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதியன்று நியமிக்கப்பட்டதுடன் மீளாய்வின் கீழான ஆண்டின் போது அது ஒருதடவை கூடியது. இந்தக் கூட்டத்திலான இக்குழு உறுப்பினர்களின் வருகையானது இந்த ஆண்டறிக்கையின் 86 ஆம் பக்கத்திலுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

சபைக்கு அறிக்கையிடல்

இக்குழுவின் கூட்ட அறிக்கைகளானவை சபையின் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் இவ்வாறாக சபையின் அங்கீகாரமானது இக்குழுவினால் செய்யப்பட்ட பரிந்துரைகளின் அமுலாக்கம் கருதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஒழுங்கான அடிப்படையில் முக்கியமான விடயங்கள் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

மீளாய்வின் கீழான ஆண்டின் போது ஆற்றப்பட்ட செயற்பாடுகள

- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் குழுவிற்கான சாசனத்தின் போதுமானதன்மை மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மாற்றங்கள் என்பவற்றை மீளாய்வு செய்தமை.

- 2019 தொடக்கம் 2021 வரையான ஆண்டுகளுக்கான கூட்டாண்மைத் திட்டத்தின் அடிப்படையில் கால வரிசைக்கோடுகளை (time lines) சுட்டிக்காட்டும் செயல் திட்டத்துடன் சேர்த்து 2019 தொடக்கம் 2021 வரையான காலப்பகுதி சார்பில் தகவல் தொழில்நுட்ப பிரிவுக்கான தந்திரோபாயத் திட்டத்தை விதித்துரைக்கும் இவ்வங்கியின் கால அட்டவணையைக் கொண்ட தகவல் தொழில்நுட்ப (IT) திட்டத்தை மீளாய்வு செய்தமை.

முடிவுரை

தற்கால வியாபார சூழலில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) குழுவொன்றின் நன்மையக்கும் மற்றும் வளர்ந்துவரும் வகிபாகமொன்றினை அடையாளங்கண்டு பணிப்பாளர் சபையினால் இவ்வங்கியின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) குழு தாபிக்கப்பட்டது. இக்குழுவானது, அதன் வகிபாகம் பரிணாமம்பெற்று வருவதை அடையாளங்காணும் அதேவேளை, தொழில்நுட்பவியல் தந்திரோபாயங்களை வகுப்பதற்கும், இவ்வங்கியினுள் பயனுறுதி வாய்ந்த மற்றும் பாதுகாப்பான தொழில்நுட்ப பயன்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கும், வங்கியின் தொழில்நுட்பவியல் அபிவிருத்தி வழிகாட்டல் தொடர்பில் மதிப்பீடு செய்வதற்கும் ஆலோசனை வழங்குவதற்கும் அத்துடன் வங்கியின் நிதி மற்றும் ஒழுங்குறுத்துகை கடப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு தொழில்நுட்பம், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பரிந்துரைப்பதற்கும் மற்றும் சபையின் தொழிற்பாடுகளில் அதற்கு உதவுவதற்குமென செயலாற்றுகின்றது.

2018 ஆம் ஆண்டின் போது இவ்வங்கியின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) குழுவில் சேவையாற்றிய உறுப்பினர்கள் சார்பில் பாராட்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது.இக்குழுவில் தற்போது சேவையாற்றும் உறுப்பினர்கள் எவரும் இந்த அறிக்கை உள்ளடக்கிய காலப்பகுதியில், அதாவது 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காலத்தில் சமுகமளிக்கவில்லை என்னும் விடயத்தின் மீது கவனம் செலுத்த இக்குழு விரும்புகின்றது. ஆதலால் இந்த அறிக்கையானது பதிவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன், அதன் நம்பகத்தன்மையானது சரிபார்க்கப்பட்டு சந்தேகத்திற்கிடமின்றி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆதலால், தற்போதய குழுவானது இந்த அறிக்கை துல்லியமானதென்றும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றதென்றும் முழுமையாக நம்புகின்றது.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் குழுவின் சார்பில்



பிரகாஷ் ஏ ஷாப்ரெர்
தலைவர்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் குழு

2019 ஏப்ரல் 3
கொழும்பு

இடர் முகாமைத்துவம்

பொருளாதாரச் சுழற்சிகள் மற்றும் உள்ளக / வெளியக சவால்களுக்கு ஊடாக மீண்டெழும் இலக்குடன் இடர் மற்றும் வருவாய் முகாமைத்துவம் நோக்கியதாக முழுமையானதும் ஒழுங்குமுறைமை வாய்ந்ததுமான அணுகுமுறையொன்றை இவ் வங்கி பின்பற்றுகின்றது.

இலங்கை வங்கியின் முழுமையான இடர்முகாமைத்துவக் கட்டமைப்பானது இவ் வங்கி பூராகவும் இடர்களின் ஒத்திசைவான முகாமைத்துவத்தை உறுதிப்படுத்தும் தெளிவாக வரையறுக்கப்பட்ட ஆட்சிக் கட்டமைப்புகள், சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைக் கட்டமைப்புகள் மற்றும் இடர் விழிப்புணர்வு பற்றிய கலாசாரம் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

நிதியீட்டக் கட்டமைப்பு



14.6%

மூலதன போதுமானதன்மை விகிதம்

2018 ஆம் ஆண்டின் சிறப்புக்கூறுகள்

வங்கியின் மொத்த VaR



திரவச் சொத்து விகிதம்



கடன் உரிமை மூலதன இணைப்பு விகிதம்



தோற்றம்பெறும் இடர்கள்

ஒழுங்குமுறைமை வாய்ந்த முக்கியமான வங்கியொன்றாக, இலங்கை வங்கியானது அதன் இடர்ப் பண்பின் மீது தாக்கமொன்றைக் கொண்டுள்ள வெளியக அழுத்தங்களின் தொகுதியொன்றுக்கு முகங்கொடுக்கின்றது.நிச்சயமற்ற தன்மையைக் கண்டறிவதற்கும் விழிப்புணர்வு பொருந்திய இடர் பொறுப்பேற்றலை வலுப்படுத்துவதற்குமென எமது இடர் தோற்றப்பாட்டை நிலையாகக் கண்காணிப்பதன் மூலம் இத் தோற்றம்பெறும் இடர்களை முன்கூட்டியே இனங்கண்டுகொள்வதற்கும் அவற்றுக்கு செயல்முகங்கொடுப்பதற்கும் நாம் பாடுபடுகின்றோம்.இவ் இடர்கள் பற்றிய சுருக்கமான கண்ணோட்டமொன்று கீழே பட்டியற்படுத்தப்பட்டுள்ளதுடன் இவ் அறிக்கையின் 52 ஆம் பக்கத்தில் சந்தை வாய்ப்புகள் மற்றும் இடர்கள் பற்றிய அத்தியாயத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும். முன்னெப்பொழுதுமில்லாத தொழில்நுட்ப முன்னேற்றங்கள், அதிகரித்துவரும் வாடிக்கையாளர் உயர்நயப் பண்பு, சனத்தொகை மாற்றங்கள் அதேபோன்று சமூக மற்றும் சுற்றாடல் சவால்களைக் கருத்திற்கொள்ளும் போது மென்மேலும் நிச்சயமற்ற தொழிற்படு தோற்றப்பாட்டிலிருந்து எழுகின்ற இடர்களாக கீழே தரப்பட்ட இடர்கள் உள்ளன.

இவ் வங்கியின் வியாபார மாதிரியிலிருந்து எழுகின்ற மரபுவழி இடர்களும் உள்ளக அமையக் காரணிகளும் இவ் அறிக்கையின் அடுத்துவரும் பிரிவுகளில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்ப மற்றும் சைபர் இடர்கள்

வாடிக்கையாளர் எதிர்பார்க்கைகள் மற்றும் போட்டிக்கு ஒத்திசைவாக உறுதியானதும் பாதுகாப்பானதுமான தொழில்நுட்பத்தை அடைந்துகொள்வதற்கும் பேணுவதற்குமான ஆற்றலின்மையிலிருந்து எழுகின்ற இடர்கள். வாடிக்கையாளர் தரவு இழப்பு, தொழிற்பாட்டு இடையூறு அல்லது நன்மதிப்புக் கேடு என்பவற்றை விளைவிக்கும் இணைபத்தின் ஊடாக தாக்குதல்களின் அல்லது முறைமைகள், வலையமைப்புகள் அல்லது தரவுத்தளங்கள் என்பவற்றின் செயலிழப்புகளின் விளைவுகளாக சைபர் இடர்கள் உள்ளன.

தணிப்புக் காரணிகள்

- உறுதியான தகவல் தொழில்நுட்ப ஆளுகை கொள்கையையும் தெளிவாக வரையறுக்கப்பட்ட பொறுப்புகளையும் உள்ளடக்கும் வலுவான தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு கொள்கை
- தகவல் தொழில்நுட்ப பாதிப்புகள் சம்பந்தமான தொடர்ச்சியான மதிப்பீடுகள்
- வன்பொருள் மற்றும் மென்பொருள் தரமுயர்த்தலில் தொடர்ந்து இடம்பெறும் முதலீடுகள
- சுயாதீன தரப்பினர்களினால் மேற்கொள்ளப்படும் தகவல் தொழில்நுட்பக் கணக்காய்வுகள



ஆட்களுடன் தொடர்புபட்டது

நிறுவனத்திற்கு சரியான ஆற்றலினைப் பெற்று அதனைத் தக்கவைத்துக் கொள்வதிலான சிரமங்கள் மற்றும் வாடிக்கையாளர் எதிர்பார்க்கைகளை நிறைவேற்றுவதற்கும் வங்கியின் தந்திரோபாயத்தை செயற்படுத்துவதற்குமான ஊழியர்களின் ஆற்றலின்மையிலிருந்து எழுகின்ற இடர்கள்.

தணிப்புக் காரணிகள்

- திறன்கள் மற்றும் ஆற்றல்களை விருத்தி செய்வதில் கணிசமானளவு முதலீடுகள்
- ஆலோசனை வழங்கலையும் அறிவினைப் பகிர்தலையும் ஊக்குவிக்கும் நிறுவனக் கலாசாரம்
- ஊழியர் பங்களிப்புகளுக்கு மதிப்பளிக்கும் அங்கீகார நிகழ்ச்சித்திட்டங்கள்

தகவல் இடர்கள்

துல்லியமற்ற தரவுகளிலிருந்தும் வாடிக்கையாளர் தகவல்களைப் பேணுவதற்கான ஆற்றலின்மையிலிருந்தும் எழுகின்ற நன்மதிப்புக் கேடுகள் அல்லது தொழிற்பாட்டு இடையூறுகள்.

தணிப்புக் காரணிகள்

- உறுதியான தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகளின் கட்டமைப்பு
- தகவல் பாதுகாப்பு தொடர்பில் தொடர்ந்து இடம்பெறும் ஊழியர் பயிற்சிகள்

இடர் முகாமைத்துவம்

மாறிவரும் வாடிக்கையாளர எதிர்பார்க்கைகள

முன்னெப்பொழுதுமில்லாத தொழில்நுட்ப முன்னேற்றங்களானவை,வாடிக்கையாளர் எதிர்பார்க்கைகளுக்குப் பொருந்தும் வாய்ப்புகளின் ஊடாக அவர்கள் மென்மேலும் கோரிக்கையிடும் உடனடித் தீர்வுகளுடன்கூடிய வாடிக்கையாளர் எதிர்பார்க்கைகளாக நிலைமாறிவருகின்றன.இவ் வழிமுறைகளுக்கு பயனுறுதி வாய்ந்த விதத்தில் செயல்முகங் கொடுப்பதற்கான ஆற்றலின்மையானது, குறிப்பாக இளையோர் / புத்தாயிரமாமாண்டின் வாடிக்கையாளர் அடித்தளத்திற்கு இடையில், போட்டி நிலமையின் சீர்கேடொன்றுக்கு வழிவகுக்கும்.

தணிப்புக் காரணிகள

- சுய சேவை மற்றும் பல்லூடக மாதிரியைச் செயற்படுத்தும் எண்ணிம (டிஜிட்டல்) தந்திரோபாயம்
- இளையோர் வாடிக்கையாளர் பிரிவினை இலக்காகக் கொண்ட புத்தாக்கத் தீர்வுகள்
- எண்ணிம தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு (digitalisation) மீது மையப்படுத்திய தொடர்பாடல் தந்திரோபாயம்



போட்டி அழுத்தங்கள்

சிறிய, கூடுதல் விரைந்து செயல்ப்படும் திறன் கொண்ட போட்டியாளர்கள் விரைவான வேகமொன்றில் சந்தை மாற்றங்களை உள்ளடக்குவதில் திறன் வாய்ந்தவர்களாக உள்ளனர்.நெகிழ்வுத்தன்மை கொண்ட, விரைவான மற்றும் அணுகக்கூடிய தீர்வுகளை வழங்கும் நிதித் தொழில்நுட்ப (fintech) கம்பனிகள் போன்ற மரபுவழி சாராத தொழிற்பாட்டாளர்களிடமிருந்தான தீவிர போட்டியானது இவ் வங்கியின் போட்டி நலனின் சீர்கேடொன்றுக்கு வழிவகுக்க முடியும்.

தணிப்புக் காரணிகள்

- நம்பிக்கை, உறுதி, அரசுடமை மற்றும் நிலைபெற்ற கடந்தகால அடைவுகள் என்பவற்றின் அடிப்படையிலான தனித்துவமான போட்டி நலன்
- மேம்பட்ட வாடிக்கையாளர் வசதி மற்றும் அணுகக்கூடியதன்மையினை செயற்படுத்துவதற்கான எண்ணிம மயமாக்கல் (டிஜிட்டல் மயமாக்கல்) தந்திரோபாயம்

அரசாங்கக் கொள்கை

வரி ஆட்சிமுறைக்கான மாற்றங்கள், இறக்குமதி மட்டுப்பாடுகள், நாணயக் கொள்கைத் திருத்தங்கள் மற்றும் சலுகைக் கடன் திட்டங்கள் போன்ற அரசாங்கக் கொள்கையின் விளைவுகளானவை இவ் வங்கியின் தொழிற்பாடுகளிலும் அதன் இடர்ப் பண்பிலும் நேரடியான தாக்கத்தைக் கொண்டுள்ளன.

தடுக்கக்கூடிய காரணிகள்

- சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன்கூடிய ஒப்பீட்டு நியம வங்கி நடைமுறைகள்
- நெருக்கடிநிலை சோதனை மற்றும் நிலவரப் பகுப்பாய்விற்கூடாக நியாயமாகத் தோன்றும் நிகழ்வுகளை இனங்காணுதல்.

இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு



இடர் முகாமைத்துவ ஆளுகைக் கட்டமைப்பு

இவ் வங்கியின் இடர் ஆளுகைக் கட்டமைப்பானது இடர்களை இனங்காணுதல், அளவிடுதல், முகாமைசெய்தல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் என்பவற்றுக்கான பொறுப்புகளைத் தெளிவாக வரையறுக்கின்றது.சபை மற்றும் நிறைவேற்று மட்டம் இரண்டிலுமேயுள்ள இடருடன் தொடர்புபட்ட ஆட்சிக் குழுக்களின் அதிகாரங்களானவை இடர் முகாமைத்துவத்திற்கு முழுமையானதும் ஒழுங்குமுறைமை வாய்ந்ததுமான அணுகுமுறையொன்றை வசதிப்படுத்தி, நிறுவனம் பூராகவுமுள்ள அனைத்து வகையான இடர்களுக்குமான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துகின்றது. சபை மற்றும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை உள்ளடக்கும் இடர் ஆளுகைக் கட்டமைப்பானது கீழே வரைபட ரீதியில் காட்டப்பட்டுள்ளது;



பணிப்பாளர் சபை

இடர் வருவாய் வழிமுறைகளை பொருத்தமாக சமநிலைப்படுத்தும் ஒரு விதத்தில் இவ் வங்கியின் இடர்கள் முகாமை செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான இறுதிப் பொறுப்பினை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது. இக் கடமைகளை நிறைவேற்றுகையில், இவ் வங்கியின் இடர் நாட்டத்தினை வரையறுத்தல், இடர் முகாமைத்துவ கட்டமைப்பை வகுத்தல், இடர்களின் தொடர்ச்சியான கவனிப்பை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைகளையும் நடைமுறைகளையும் வகுத்தல் மற்றும் வரையறுக்கப்பட்ட இடர் நாட்டத்திற்கு எதிராக இடர்ப் பண்பினை தொடர்ச்சியாகக் கண்காணித்தல் என்பவற்றுக்கு இச் சபை பொறுப்புடையதாகும்.ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (IRMC), கணக்காய்வுக் குழு மற்றும் அண்மையில் உருவாக்கப்பட்ட சபை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் குழு (ICTC) என்பன சபையின் இடருடன் தொடர்புபட்ட பொறுப்புகளை நிறைவேற்றுகையில் அதற்கு உதவுகின்றன.

இடர் முகாமைத்துவம்

ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (IRMC)

ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது (IRMC) பின்வருவன உள்ளடங்கலாக இடர் முகாமைத்துவத்தின் அனைத்து அம்சங்களுக்குமான சபையின் மேற்பார்வைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அதற்கு உதவுகின்றது;

- இடர் முகாமைத்துவத்துடன் தொடர்கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் குழுப் பட்டயங்களை மீளாய்வு செய்தல்
- அனைத்து முதன்மையான இடர் வெளிக்காட்டல்களுக்குமான இடர் எல்லைகளை நிர்ணயித்தல் மற்றும் இடர் நாட்டத்தினை வரையறுத்தல்
- இடருடன் தொடர்புபட்ட முகாமைத்துவ மட்டக் குழுக்களின் பயனுறுதி வாய்ந்த தன்மையினை மீளாய்வு செய்தல்
- இடரை இனங்காணுதல், அளவிடுதல், கண்காணித்தல் மற்றும் தணித்தல் கருவிகளின் போதுமானதன்மை மற்றும் பயனுறுதி வாய்ந்த தன்மையினை மீளாய்வு செய்தல்
- உள்ளக மூலதனத்தின் போதுமானதன்மை மதிப்பீட்டுச் செய்முறைக்கு (ICAAP) ஒத்திசைவாக இவ் வங்கியின் மூலதனத் தேவைப்பாட்டை மீளாய்வு செய்தல்
- பாதிப்புகள் மற்றும் இனங்காண்பதற்கும் இடர் தணிப்புக் காரணிகளைப் பிரேரிப்பதற்கும் காலக்கிரம நெருக்கடிநிலை சோதனையை மீளாய்வு செய்தல்
- இவ் வங்கியின் வியாபாரத் தொடர்ச்சித் திட்டத்தினை (BCP) மீளாய்வு செய்தல்

சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு (IIRMD)

சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவப் பிரிவிற்கு (IIRMD)பிரதம இடர் அலுவலர் (CRO) தலைமை வகிப்பதுடன் வருமானத்தை உருவாக்கும் தந்திரோபாய வியாபார அலகுகளிலிருந்து சுயாதீனமாக அது தொழிற்படுகின்றது. இப் பிரிவானது சுயாதீன இடர் மதிப்பீடுகளை மேற்கொள்வதுடன் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவிற்கு (IRMC),அதன் பணிப்பாணையை நிறைவேற்றுவதில் உதவி செய்கின்றது.சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் முதன்மையான பொறுப்புக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன,

- மூலதனம் மற்றும் உழைப்புகள் மீதான சாத்தியமான தாக்கத்தை அளவிடுவதற்கு அழுத்தமிக்க நிலவர வீச்சொன்றைப் பயன்படுத்தும் ஒழுங்கான நெருக்கடிநிலை சோதனை
- முழுமையான உள்ளக மூலதனத்தின் போதுமானதன்மை மதிப்பீட்டுச் செய்முறை (ஐஊயுபீ) ஒன்றைத் தயாரித்தல்
- பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பொருட்டு திட்டவட்டமான முதன்மையான இடர் குறிகாட்டிகளுடன்கூடிய இடர் நாட்டம், வீச்சு மற்றும் எல்லைகள் என்பவற்றை வகுத்தல்
- பாதுகாப்பின் முதலாவது வரிசையின் மூலம் இடர்களை இனங்காண்பதற்கும், கண்காணிப்பதற்கும் அறிக்கையிடுவதற்கும் ஒத்தாசை புரிதல்
- இடர் தணிப்புக் காரணிகளை அறிமுகம் செய்தல் மற்றும் அமுல்படுத்துதல்
- வியாபாரத் தொடர்ச்சித் திட்டத்தின் பயனுறுதி வாய்ந்த அமுலாக்கத்தை உறுதிப்படுத்துதல்
- இவ் வங்கியின் புதிய கணக்குகளினதும் (products) செய்முறைகளினதும் இடர் மதிப்பீடுகள்
- உள்ளக ஈடுபாடு, தொடர்பாடல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கூடாக இடர் விழிப்புணர்வு மற்றும் இடர் உணர்வுநிலை பற்றிய கலாசாரமொன்றைப் பேணுதல்

கொள்கைக் கட்டமைப்பு

இந் நிறுவனத்தின் சகல மட்டங்களிலும் நிலையானதும் ஒழுங்குமுறையானதுமான ஒரு விதத்தில் இடர்கள் இனங்காணப்படுவதை, அளவிடப்படுவதை, தணிக்கப்படுவதை மற்றும் அறிக்கையிடப்படுவதை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளின் முழுமையான தொகுதியொன்று உறுதிப்படுத்துகின்றது. தொழில்துறையின் சிறந்த நடைமுறைகளுடன் ஒழுங்கமைந்திருப்பதையும் தோற்றம்பெறும் இடர்களைத் தீர்ப்பதிலான பொருத்தப்பாட்டையும் உறுதிப்படுத்தும் பொருட்டு இக் கொள்கைகள் ஒழுங்காக மீளாய்வு செய்யப்பட்டு திருத்தப்படுகின்றன.இவ் ஆண்டின் போது இவ் வங்கியானது இலஞ்சத்தின் எந்தவொரு வடிவத்தையும் தடுத்து எதிர்த்துநிற்றல் தொடர்பிலான வழிகாட்டல்களை தெளிவாக விதித்துரைத்து, இலஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் ஒழிப்புக் கொள்கையொன்றை அறிமுகப்படுத்தியது. அமுலிலுள்ள, முதன்மையான இடர் தொடர்புபட்ட கொள்கைகளானவை அருகில் பட்டியற்படுத்தப்பட்டுள்ளன்



பாதுகாப்பு மாதிரியின் மூன்று வரிசைகள்

பொறுப்புக்களின் தெளிவான பிரிவை வழங்கி, அதன்மூலம் இடர்களை இனங்காண்பதிலும் முகாமை செய்வதிலும் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்துகின்ற, உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு மாதிரியின் மூன்று வரிசைகளை இவ் வங்கி பின்பற்றுகின்றது. வகிபாகங்களின் பாகுபாட்டின் ஊடாக நிபுணத்துவத் திறன்களைப் பேணுவதையும் இம் மாதிரி கருத்திற்கொள்கின்றது.

1வது பாதுகாப்பு வரிசை

வியாபார அலகுகளின் இடர் உரிமைத்துவம்

- இடர் பொறுப்பேற்றலும் இடர் உரிமைத்துவமும்
- நாளாந்த இடர் முகாமைத்துவம்
- இடர் கொள்கைகளுக்கு இணங்க செயலாற்றுதல்
- உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரயோகமும் இடர் செயல் முகங்கொடுப்புகளும்

2வது பாதுகாப்பு வரிசை

IIRMD இன் இடர் முகாமைத்துவம்

- இடர் முகாமைத்துவக் கட்டமைப்பை விருத்தி செய்தல்
- வழிகாட்டலை வழங்குதல் கண்காணித்தல், அறிக்கையிடல் மற்றும் இடர் கட்டுப்பாடு
- 1ம் வரிசை இடர் ஏற்பு மற்றும் உரிமைத்துவத்தை உறுதிப்படுத்தல் (வியாபார அலகு)

3வது பாதுகாப்பு வரிசை

கணக்காய்வுத் தொழிற்பாட்டின் உறுதிப்பாடு

- பாதுகாப்பின் 1 ஆம் 2 ஆம் வரிசைகளின் பயனுறுதி தன்மையினை சபைக்கு சுயாதீனமானதும் பாராபட்சமற்றதுமான உறுதிப்பாடு

இடர் கலாசாரம்

இடர்களின் இனங்காணல், முகாமைத்துவம் மற்றும் அதிகரிப்புக்கு சகல ஊழியர்களும் பொறுப்பாகவுள்ள இடர் விழிப்புணர்வுக் கலாசாரமொன்றை இவ் வங்கி ஊக்குவிக்கின்றது.

சரியான வியாபாரத்தை, சரியான வழியில் செய்வதை வலியுறுத்தும் இவ் வங்கியின் ஒழுக்க விதிக்கோவைக்கு ஒத்திசைவாகவுள்ள நடத்தையினை வெளிக்காட்டுமாறும் ஊழியர்கள் எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.இடருடன் தொடர்புபட்ட பொறுப்புக்களின் தெளிவான ஒதுக்கீட்டிற்கூடாக வலுவான இடர் கலாசாரமொன்றை உருவாக்குவதற்கு பாதுகாப்பு மாதிரியின் மூன்று வரிசைகளும் உதவியுள்ளன. ஒழுங்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்,சட்டப் பிறழ்வுகளை அறிக்கையிடும் (whistle-blowing) நடைமுறைகள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் ஊழியர் ஈடுபாட்டு வாய்ப்புக்களின் ஊடாக இவ் வங்கியின் விழுமியங்கள் மற்றும் ஒழுக்கத்தை வலுவூட்டுதல் என்பனவும் இடர் கலாசாரமொன்றைப் பேணுவதற்குப் பங்களிப்புச் செய்துள்ளன.

அழுத்த பரிசோதனை

பேரினப் பொருளாதாரப் போக்குகளுக்கு அல்லது ஏனையநியாயமாகத் தோன்றும் நிகழ்வுகளுக்கான இவ் வங்கியின் இடர்ப் பண்பின் உணர்திறனை மதிப்பிடுவதற்கு நெருக்கடிநிலை சோதனை பயன்படுத்தப்படுகின்றது.கூட்டாண்மை திட்டமிடல், மூலதனத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், இடர் நாட்டத்தை வரையறுத்தல், எல்லைகளை மாற்றுதல் மற்றும் வெளிக்காட்டல்களைத் திருத்துதல் போன்ற இடர்தணிப்பு நடவடிக்கைகள், இடர் தொடர்புபட்ட பிரச்சினைகள் தொடர்பில் அக்கறைதாரர் தொடர்பாடலுக்கு உதவுதல் என்பவற்றை உள்ளடக்கி சில வியாபாரச் செய்முறைகளுக்கு இது உதவுகின்றது. சபையினால் அங்கீகரிக்கப்பட்டநெருக்கடிநிலை சோதனைக் கொள்கைக்கு இணங்க வழமையான நெருக்கடிநிலை சோதனை மேற்கொள்ளப்படுவதுடன் மூலதனம், திரவத்தன்மை மற்றும் இலாபத்தன்மை மீதான சாத்தியமான தாக்கங்கள் மதிப்பிடப்படுகின்றன.

இடர் அறிக்கையிடல்

ஒழுங்கான இடர் அறிக்கையிடலானது இவ் வங்கியின் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பின் ஒன்றிணைந்த பகுதியொன்றாக உள்ளதுடன் பொருண்மையான நிதி மற்றும் நிதிசாரா இடர்களை முன்கூட்டியே அறிவிப்பதற்கு அர்ப்பணிப்பான குழுக்கள் அமுலில் உள்ளன. வரையறுக்கப்பட்ட நாட்டத்திற்கு எதிரான இடர் வெளிக்காட்டல்கள் மற்றும் இடர்ப் பண்பு என்பன கணக்கு (உற்பத்தி) வரிசைகள், புவியியல் பிராந்தியங்கள் மற்றும் வியாபார அலகுகள் போன்ற இவ் வங்கி பூராகவுமுள்ள பல்வேறுபட்ட மட்டங்களில் வகைப்படுத்தப்பட்ட ஒழுங்கான ஓர் அடிப்படையில் சபைக்கு அறிக்கையிடப்படுகின்றன.மாதாந்த அடிப்படையிலும் தேவைப்படும் போதும் இடர் குறிகாட்டி தகவல்காட்சிமுறை (dashboard) ஒன்று உள்ளடங்கிய முழுமையான இடர் அறிக்கையொன்றை ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (IRMC) பெற்றுக்கொள்கின்றது.

2018 ஆம் ஆண்டில் இடர்ப் பண்பு

இவ் வங்கியானது, அதன் தந்திரோபாய நிகழ்ச்சிநிரலை முன்னெடுத்துச் செல்கையில் பொறுப்பேற்க விரும்பும் இடரின் அளவை இடர் நாட்டம் காட்டுவதுடன் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இடர் நாட்டக் கூற்று (RAS) ஒன்றின் வடிவில் வெளிப்படுத்தப்படுகின்றது.இடர் நாட்டக் கூற்றை (RAS) வகுக்கும் போது, இவ் வங்கியின் கூட்டாண்மைத் திட்டம் மற்றும் இடருக்கும் வருவாய்க்கும் இடையிலான விரும்பத்தக்க சமநிலை என்பவற்றுக்கு உரிய கவனம் செலுத்தப்படுகின்றது.இக் கூற்றானது வழமையில்,திருத்த முகாமைத்துவ நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதிசெய்து இடர் நாட்டத் தூண்டல்களையும் சகிப்பு எல்லைகளையும் உள்ளடக்குகின்றது.

இடர் நாட்டக் கூற்றானது (RAS) வருடாந்த அடிப்படையில் அல்லது தேவைப்படும் போது சபையினால் மீளாய்வு செய்யப்பட்டு திருத்தப்படுகின்றது.

இடர் முகாமைத்துவம்

முழுமை இடர்

இவ் வங்கியின் முதன்மையான இடர் வெளிப்படுத்தல்களானவை கீழுள்ள வரைபடத்தில் பொழிப்பாகத் தரப்பட்டுள்ளன;



கடன் இடர்

கடன் கொடுக்கல் வாங்கல் ஒன்றுக்கான இணைத்தரப்பினர் ஒருவர் இணங்கிக் கொள்ளப்பட்ட நியதிகளுக்கு இணங்க தனது கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்குத் தவறுவதன் காரணமாக எழுகின்ற சாத்தியமான நட்டங்களாக கடன் இடர் வரையறுக்கப்படுகின்றது.

கடன் இடரானது தவணை தவறல் இடர், இணைத்தரப்பினர்களின் அடர்த்தி, புவியியல் பிராந்தியங்கள் அல்லது கைத்தொழில் துறைகள் எனும் வடிவினை எடுக்க முடியும். அண்ணளவாக, இடர் நிறையளிக்கப்பட்ட சொத்துக்களின் 91% தொகையுடன்,கடன் இடரானது இவ் வங்கியின் முதன்மையான இடர் வெளிப்படுத்தல்களில் ஒன்றாகும்.

ஐந்தொகையில் பிரதிபலிக்கப்படும் நேரடி கடன் வழங்கல் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, வழங்கப்பட்ட நிதி உத்தரவாதங்கள், நாணயக் கடிதங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளல்கள் போன்ற ஐந்தொகைக்கு அப்பாற்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் கடன் இடருக்கு அதிகரிப்பைத் தருகின்றன.

கடன் இடர் ஆளுகை

இவ் வங்கியின் கடன் இடர் முகாமைத்துவமானது இதன் கடன் இடர் முகாமைத்துவக் கொள்கைக்கு இணங்க நிர்வகிக்கப்படுவதுடன் தனியாள் பொறுப்பிலும் ஒன்றிணைந்த மேற்பார்வையிலும் தங்கியுள்ளது. கடன் இடரானது தாங்கிக்கொள்ளப்படவுள்ள தத்துவங்களை இக் கொள்கை தெளிவாக விதித்துரைப்பதுடன் நிறுவனம் பூராகவுமுள்ள கடன் இடரை தொடர்ந்து இனங்காண்பதற்கும், முகாமை செய்வதற்கும் மற்றும் அறிக்கையிடுவதற்குமான கட்டமைப்பையும் வரையறுக்கின்றது.பொது முகாமையாளர் தலைமைதாங்கும் கடன் குழு மற்றும் சபை மட்டத்தில் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (IRMC) என்பவற்றிற்கூடாக கடன் இடரானது முகாமை செய்யப்படுகின்றது. கடன் இடர் நாட்ட எல்லைகளை வகுத்து, மீளாய்வுசெய்து நடைமுறைப்படுத்துதல், அதிகாரமளிக்கப்பட்ட எல்லைகள் வரை கடனை அங்கீகரித்தல், இவ் வங்கியின் இடர் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களில் ஒழுங்குறுத்தல் இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்தல் மற்றும் இடர் செறிவுகளைக் கண்காணித்தல் என்பவற்றை கடன் குழுவின் பொறுப்புக்கள் உள்ளடக்குகின்றன. கடன் இடர் முகாமைத்துவத்திற்கான முதனிலைப் பொறுப்பானது சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் (IIRMD) கடன் இடர் அலகின் சுயாதீன மீளாய்வு மூலம் உதவியளிக்கப்படும், வியாபார அலகுகளைச் சாரும்.

கடன் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு

இவ் வங்கியின் கடன் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பின் அடிப்படைக் கூறுகள் அருகில் தரப்பட்டுள்ளன;

கொள்கைக் கட்டமைப்பு

ஏனையவற்றுக்கிடையில் இடர் தரப்படுத்தல், முதலீட்டுப்பட்டியல் முகாமைத்துவம் மற்றும் கடன் மீளாய்வு தொடர்பில் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளின் தொகுதியொன்றை இவ் வங்கியின் கடன் இடர் கொள்கைக் கட்டமைப்பு உள்ளடக்குகின்றது. கடமைகளைப் பாகுபடுத்தல், முழுமையான கடன் மதிப்பீட்டு பொறிமுறைகள், கையளிக்கப்பட்ட அதிகார எல்லைகள் மற்றும் மதிநுட்பமான எல்லைகள் என்பவற்றை அடிப்படை அம்சங்கள் உள்ளடக்குகின்றன.

சந்தை நிலமைகளுக்கான பொருத்தப்பாட்டையும் விருத்தியடைந்துவரும் சிறந்த நடைமுறைகளுக்கான ஒழுங்கமைப்பையும் உறுதிப்படுத்தும் பொருட்டு கொள்கைகளானவை பணிப்பாளர் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டு ஒழுங்காக இற்றைப்படுத்தப்படுகின்றன.



கடமைகளைப் பாகுபடுத்தல்

முன்-செலவீட்டு மதிப்பீடு மற்றும் பின்-அங்கீகாரக் கண்காணிப்பு என்பவற்றுக்கான பொறுப்பானது, மதிப்பீட்டு வழிகாட்டல்களின் பயனுறுதி வாய்ந்ததும் பாராபட்சமற்றதுமான அமுலாக்கத்தை அனுமதித்து, தெளிவாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது.புதிய கடன், நடைமுறையிலுள்ள கடன் விரிவாக்கம் மற்றும் நடைமுறையிலுள்ள வசதிகளுக்கான பொருண்மையான மாற்றங்கள் என்பன பொருத்தமான, கையளிக்கப்பட்ட அதிகாரத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டுள்ளன. அதேவேளை, வரையறுக்கப்பட்ட குறைந்தபட்ச எல்லையொன்றுக்கு மேற்பட்ட கடன் வசதிகளானவை பிரதம இடர் அலுவலரினால் சுயாதீனமாக மீளாய்வு செய்யப்படுகின்றன.

பிணைய முகாமைத்துவம்

பிணையமானது சாத்தியமான கடனை செலுத்த தவறுதல் ஒன்றுக்கு எதிராக இரண்டாந்தர தீர்வொன்றாகப் பெற்றுக்கொள்ளப்படுவதுடன் வழமையில் இது காசு, தங்கம், ஆதனங்கள், நிலையான சொத்துக்கள், நாணயக் கடிதங்கள், கடன்படுநர்கள் மற்றும் மற்றவர்களுக்கிடையிலான வருமதிகள் வடிவினை எடுக்கின்றது. வழங்கப்பட்ட வசதிக்கு எதிராக போதுமான காப்பீட்டினை உறுதிப்படுத்தும் பொருட்டு பிணையமானது ஒழுங்காக மதிப்பிடப்படுகின்றது. நிதி சாராத பிணையமானது சுயாதீனமான மூன்றாந்தரப்பு விலைமதிப்பீட்டாளர்களினால் மதிப்பிடப்படுகின்றது

கடன் தரப்படுத்தல்

கொடுக்கல் வாங்கலையும் கடன்பெறுநர் சார்ந்த திட்டவட்டமான காரணிகளையும் பயன்படுத்தும் இடர் தரப்படுத்தல் மாதிரிகளானவை கூட்டாண்மை வெளிப்படுத்தல்களை மதிப்பிடுவதிலும் தவணை தவறும் சாத்தியப்பாட்டை மதிப்பிடுவதிலும் பயன்படுத்தப்படுகின்றன.கடன்பெறுநர் இடர் தரப்படுத்தல் முறைமையானது செயலாற்றும் அனைத்து கூட்டாண்மை கடன்களையும் அடிப்படையான கடன் தரத்தைப் பொறுத்து எட்டுத் தரங்களாக வகைப்படுத்துகின்றது. இசைவாக்கப்பட்ட கடன் மதிப்பீட்டு புள்ளிவிபரப் பதிவுகளானவை (ளஉழசநஉயசனள) தனியாள் (சில்லறை) வெளிக்காட்டல்களை மதிப்பிடுவதில் பயன்படுத்தப்படுகின்றன. பாசல் ஐஐ இன் கீழ் உள்ளகத் தரப்படுத்தல் அடிப்படையிலான அணுகுமுறையின் அமுலாக்கத்தை நோக்கி நாம் முன்னேறிவருகின்றோம்.

பொறுப்பான கடன்வழங்கல் கலாசாரம்

கடன் மதிப்பீடு தொடர்பில் நடைபெற்றுவரும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் இணையத்தை அடிப்படையாகக் கொண்ட கற்கை சிற்றலகுகள் (modules) என்பனவும் அதேபோன்று வழிகாட்டல் மற்றும் அறிவுப் பகிர்வுக் கலாசாரமொன்றும் இடர் விழிப்புணர்வு மற்றும் பொறுப்பான கடன்வழங்கல் பற்றிய கலாசாரமொன்றை பேணுவதற்குப்பங்களிப்புச் செய்துள்ளன.இவ் ஆண்டின் போது, பல்வேறுபட்ட பயிற்சி முன்னெடுப்புகள் ஊடாக செயற்பாட்டு மட்ட அலுவலர் குழாத்தின் கடன் மதிப்பீட்டுத் திறன்களை முன்னேற்றுவதில் நாம் கவனம் செலுத்தினோம்.

கடன் இடர் முகாமைத்துவச் செய்முறை

கடன் வழங்கமுன் ஒப்புறுதி

- கட்டமைக்கப்பட்ட கடன் மதிப்பீட்டுப் பொறிமுறைகள் மற்றும் வரையறுக்கப்பட்ட கடன் தகுதிவிதிகள்
- அங்கீகார அதிகாரத்தின் பன்முக மட்டங்கள்
- இடர் தரப்படுத்தல் மற்றும் புள்ளியிடல் முறைமைகள்
- செறிவு இடருக்கான மதிநுட்பமான எல்லைகள்
- பிரதம இடர் அலுவலரின் CRO சுயாதீன மீளாய்வு

கடன் வழங்கிய பின் கண்பாணிப்பு

- கடன் மீளாய்வுப் பொறிமுறையை உறுதியாக்குதல்
- முதலீட்டுப் பட்டியல் மதிப்பீடு
- தெரிவுசெய்யப்பட்ட வெளிக்காட்டல்களின் மீளாய்வு
- கரிசனை கொண்ட வாடிக்கையாளர்களை இனங்காணுதல்
- நெருக்கடிநிலை சோதனையும் நிலவரப் பகுப்பாய்வுகளும்

இடர் கண்காணிப்பும் அறிக்கையிடலும்

கொள்கைக் கட்டமைப்பு ∴ நடைமுறைகள், மாதிரி அபிவிருத்தி மற்றும் செல்லுபடியாக்கம்

கடன் இடர் ஆளுகை

2018 இல் கவனம் குவித்த பிரதான துறைகள் / அபிவிருத்தி

- அபிவிருத்தி செய்யப்பட்ட தொழிற்றுறை சார்ந்த திட்டவட்டமான கடன் கொள்கை வழிகாட்டல்கள்
- தொழிற்றுறை சார்ந்த சிறந்த நடைமுறை மற்றும் தோற்றம்பெறும் சந்தை நிலைமைகளைப் பிரதிபலிப்பதற்கு தனியாள் கடன்வழங்கலுக்கான செம்மைப்படுத்தப்பட்டதும் மேம்படுத்தப்பட்டதுமான கடன் மதிப்பீட்டு புள்ளிவிபரப் பதிவுகள்
- கடன் தர உறுதிப்பாட்டு அலகின் விரிவாக்கப்பட்ட நோக்கெல்லை
- தரப்படுத்தல் அடிப்படையிலான கடன்வழங்கலின் அமுலாக்கம்
- இடர் அடிப்படையிலான விலையிடலை அறிமுகப்படுத்தல்
- எமது செயற்பாட்டு அலுவலர் குழாத்தின் கடன் மதிப்பீட்டுத் திறன்களை வலுப்படுத்துவதை இலக்காகக் கொண்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள்
- சகல கடன் தொடர்புபட்ட நடைமுறைக் கைந்நூல்களுக்கான இணைய வழி விருத்தியினை விருத்தி செய்தல்.

கடன் இடர் மீளாய்வு 2018

கடன் மீளச்செலுத்த தவறுதல் இடர்

இவ் ஆண்டின் மீதான இறுக்கமான பொருளாதார கட்டுப்பாடுகளினால் தொழிற்றுறை பூராகவும் காணப்படும் பெறுமதி இறக்கங்களிலான அதிகரிப்பொன்றுடன் முதலீட்டுப் பட்டியல் தரத்தின் மீது தொழிற்றுறை வாரியான தாக்கமொன்றைக் கொண்டிருந்தது.இவ் ஆண்டின் போது இவ் வங்கியின் கடன்களும் முற்பணங்களும் 24% இனால் அதிகரித்த போது, இவ் வங்கியின் பெறுமதி இறக்க கட்டணங்கள் 48% இனால் அதிகரித்தன. தொழிற்றுறை கடன் தரத்தில் பலவீனமான போக்கு இனங்காணப்பட்டு, இவ் வங்கியானது ஜாக்கிரதையாக பட்டியற்படுத்தப்பட்டவாறு செயலாற்றலற்ற கடன்களின் (NPLs) உள்வருகையை குறைப்பதற்கு உடனடி மற்றும் நீண்டகால நடவடிக்கைகளை எடுத்தது.கடன் நிலுவை மதிப்பீட்டுப் பகுப்பாய்வு (loan aging analysis) மற்றும் நகர்வுகளைக் கண்காணிப்பதில் தொடர் கவனம் செலுத்தப்பட்ட அதேவேளை சில தொழிற்றுறைகள், வாடிக்கையாளர்கள் மற்றும் சந்தைப் பிரிவுகளுக்கு கடன் வழங்குவதில் எச்சரிக்கையான அணுகுமுறையொன்றை இவ் வங்கி பின்பற்றியது.

இடர் முகாமைத்துவம்

இடர் தரப்படுத்தல் மூலம் வகைப்படுத்தப்பட்ட கடன் செறிவுப் பட்டியல்



முதலீட்டுப் பட்டியலின் தரத்தைப் பேணுதல்

- குறுங்காலம்: நாடளாவிய அர்ப்பணிப்புடைய அறவீட்டு முயற்சிகள்.

  மீளாய்வு செய்யப்பட்ட மற்றும் இறுக்கமான கடன் இடர் நாட்டம்.

- நீண்டகாலம்: கடன் கொள்கை வழிகாட்டல்கள் மற்றும் நிதிப்பொறுப்பேற்றல் நியமங்களை வலுவூட்டுதல்.

  கடன் மதிப்பீடு தொடர்பான பயிற்சிக்கூடாக முன்னேற்றப்பட்ட கடன் கலாசாரம்.

செறிவு இடர்

இணைத்தரப்பு/ குழு, துறை,கணக்கு (product) அல்லது பிராந்தியம் ஒன்றுக்கான உயர் கடன்வழங்கல் வெளிக்காட்டலிலிருந்து செறிவு இடர் எழுகின்றது.செறிவு இடரை அளவிடுவதில் ஹேர்பின்டால் ஹிர்ஸ்ச்மன் (Herfindahl-Hirschman) சுட்டி (HHI) பயன்படுத்தப்படுகின்றது. சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு (IIRMD),கடன் குழு மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (IRMC) என்பன பெயர், புவியியல் சார்ந்தவை, துறைகள் மற்றும் கணக்குகள் (products) போன்ற இடர் நாட்டக் கூற்றில் வரையறுக்கப்பட்ட வெளிக்காட்டல் எல்லைகளுக்கு எதிராக இவ் இடரைத் தொடர்ந்து கண்காணிக்கின்றன. செயற்பாட்டு தோற்றப்பாட்டில் தோற்றம்பெறும் போக்குகளுக்கான பொருத்தப்பாட்டை உறுதிப்படுத்தும் பொருட்டு இவ் எல்லைகள் ஒழுங்காக மீளாய்வு செய்யப்பட்டு மாற்றம் செய்யப்படுகின்றன.

பெயர்சார் செறிவு (Name Concentration): திட்டவட்டமான தனியாள் கடன்பெறுநர்களுக்கான பாரியளவு வெளிக்காட்டல்கள் "பெயர்சார் செறிவு" இடருக்கு அதிகரிப்பை தருவதுடன் தனியாள் கடன்பெறுநர் எல்லை மற்றும் ஹேர்பின்டால் ஹிர்ஸ்ச்மன் (Herfindahl- Hirschman) சுட்டி (HHI) ஊடாக கண்காணிக்கப்படுகின்றது. தனியார் துறை கடன்வழங்கல் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க பெயர்சார் செறிவு எதுவுமில்லை.

தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலுக்கு தந்திரோபாய ரீதியில் சீரமைக்கப்பட்டுள்ள அரச வங்கியொன்றாக இலங்கை வங்கியானது அரசாங்கம் மற்றும் அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில்முயற்சிகள் (SOEs) என்பவற்றுக்கான பிரதான கடன் வழங்குநர்களில் ஒன்றாகவுள்ளது. எனினும், அவை அரசாங்கத் திறைசேரியிடமிருந்து வெளிப்படையான உத்தரவாதமொன்றைக் கொண்டிருப்பதனால் இவ் வசதிகளானவை பொதுவாக இவ் வங்கியினை குறிப்பிடத்தக்க கடன் இடருக்கு வெளிக்காட்டுவதில்லை.

கடன் உற்பத்தி பொருள்கள் ரீதியான செறிவு

உற்பத்தி பொருள் வாரியான வெளிக்காட்டல்களுக்கு ஏற்ப, மேலதிகப்பற்றுக்கள் மற்றும் தனியாள் கடன்கள் மூலம் தொடரப்படுகின்ற மொத்த முற்பணங்களின் 21%ஆன தொகையினைக் கொண்ட தவணைக் கடன்களின் மிகப்பெரிய வெளிக்காட்டலுடன் நன்கு பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டுப் பட்டியலொன்றை இவ் வங்கி பேணுகின்றது.

கடன் உற்பத்திபொருள் வாரியான இடர்



துறைசார் செறிவு

மொத்தக் கடன் வெளிக்காட்டலின் 35% ஆன தொகையினைக் கொண்ட, அரச (Sovereign) மற்றும் நேரடி அரசாங்க வெளிக்காட்டலுடன், அரசாங்க கடன் வழங்கல் நோக்கி அதன் முயற்சியினை இலங்கை வங்கியின் மொத்தச் சொத்து வெளிக்காட்டலின் தொழிற்றுறை வகைப்படுத்தலும் பிரதிபலிக்கின்றது. இத் துறை நீங்கலாக (அது கடன் இடரைத் தேவைப்படுத்துவதில்லை), 2018 ஆம் ஆண்டில் வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் உட்கட்டமைப்பு (15%), நுகர்வு (15%) மற்றும் வாணிப வியாபாரம் (9%) என்பவற்றிலிருந்து விளையப்பெறும் அதிஉயர் வெளிக்காட்டலுடன் இவ் வங்கியின் முதலீட்டுப் பட்டியலானது நன்கு பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஆண்டின் போது சகல வெளிக்காட்டல்களும் இடர் நாட்ட எல்லைகளுக்குள் பேணப்பட்டன.

துறைசார் செறிவு



பிணைய வெளிக்காட்டல்

2018 ஆம் ஆண்டில், இவ் வங்கியின் கடன்வழங்கலின் 62% ஆனது பிணையத்தின் மூலம்,பிரதானமாக அரசாங்கப் பிணையங்கள் / உத்தரவாதங்கள் மற்றும் ஆதனங்கள் மூலம் பாதுகாக்கப்பட்டது.

பிணைய வெளிக்காட்டல்



எல்லை தாண்டிய வெளிக்காட்டல்

வாடிக்கையாளர்களிடமிருந்து கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கான இவ் வங்கியின் ஆற்றலை மட்டுப்படுத்தும் வெளிநாட்டு அரசாங்கங்களின் நடவடிக்கைகளிலிருந்து எல்லை தாண்டிய இடர்கள் எழுகின்றன.இலங்கை வங்கியின் எல்லை தாண்டிய வெளிக்காட்டலானது இந்தியா, மாலைதீவு, சீசெல்ஸ் மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் அதன் கடல் கடந்த நிதியியல் நடவடிக்கைகளினால் ஏற்படுவதுடன் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தின் இறுதியிலுள்ளவாறு இவ் வங்கியின் மொத்தச் சொத்துக்களின் 5%ஆன தொகையினைக் கொண்டது.

சபையினால் ஒழுங்காகக் கண்காணிக்கப்படும் முன்-வரையறை செய்யப்பட்ட கடன் எல்லைகள் மற்றும் நாட்டுக்குரிய எல்லைகளைக் கொண்டு சகல வெளிநாட்டுக் கிளைகளும் தொழிற்படுகின்றன.

சந்தை இடர் (வியாபார பொருட்கள்/சேவைகள்)

வட்டி வீதங்கள், அந்நியச் செலாவணி வீதங்கள், பங்கு விலைகள் மற்றும் வியாபார பொருட்கள்/சேவைகள் விலைகள் போன்ற சந்தை மாறிகளிலான பாதகமான நகர்வுகளின் விளைவாக நிதிக் கருவிகள் பட்டியலின் உழைப்புக்கள், சந்தை அல்லது எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் என்பவற்றிலான மாற்றங்களிலிருந்து எழுகின்ற சாத்தியமான நட்டங்களாக சந்தை இடரை வரைவிலக்கணப்படுத்த முடியும்.

இவ் வங்கியானது 3 வேறுபட்ட வகையான சந்தை இடர்களுக்கு வெளிக்காட்டப்படுகின்றது;

- இவ் வங்கியின் வர்த்தக மற்றும் வர்த்தகம் சாராத ஏடுகளிலிருந்து எழுகின்ற வட்டி வீத இடர்
- அந்நியச் செலாவணியினால் குறித்துக் காட்டப்படும் கொடுக்கல் வாங்கல்களினால் ஏற்படும் அந்நியச் செலாவணி இடர்
- உரிமைமுதல் இடர் - உரிமைமுதல் விலைகளிலான மாற்றங்களிலிருந்தான நட்டங்கள்

சந்தை இடர் ஆளுகை

இவ் வங்கியின் பிரதான சந்தை இடர் வெளிக்காட்டலானது, மொத்தச் சொத்துக்களின் 90% ஆன தொகையினைக் கூட்டாகக் கொண்டுள்ள அதன் வர்த்தக மற்றும் வங்கி ஏடுகளின் வட்டிவீத இடரிலிருந்து

விளையப்பெறுகின்றது இவ் ஆண்டின் போது அந்நியச் செலாவணி இடர் வெளிக்காட்டலானது மூலதன நிதியங்களின் விகிதாசாரமொன்றாக 0.02% ஆன தொகையினைக் கொண்டு மொத்த அந்நியச் செலாவணி (forex) வெளிக்காட்டல் மற்றும் தங்கத்தின் நிலமையாக நடுத்தர அளவில் உள்ளது. உடமை வர்த்தக முதலீட்டுப் பட்டியலானது ஐந்தொகையின் வெறும் 0.2% ஆன தொகையினைக் கொண்டிருந்தபடியால் இவ் வங்கியின் உரிமைமுதல் இடருக்கான வெளிக்காட்டலானது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சந்தை இடர் ஆளுகை

ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது (IRMC) இவ் வங்கியின் சந்தை இடர் முகாமைத்துவக் கொள்கை அதேபோன்று சந்தை இடருடன் தொடர்புபட்ட ஏனைய கொள்கைகள் தொடர்பில் சபைக்கு பரிந்துரைகளை வழங்குவதற்குப் பொறுப்பாகவுள்ளது.

சந்தை இடர் வெளிக்காட்டலானது வரையறுக்கப்பட்ட இடர் நாட்டத்திற்குள் உள்ளதை உறுதிப்படுத்தும் பொருட்டு சந்தை இடர் முகாமைத்துவக் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தும், அத்துடன் முதிர்வுக்காலப் பொருத்தமின்மைகள், முற்பணங்கள் மற்றும் வைப்புகளைக் கண்காணிக்கும் பொறுப்பானது, நிறைவேற்று மட்டத்தில், சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழுவுக்கு (ALCO) அளிக்கப்பட்டுள்ளது.

திறைசேரி நடுப்பகுதி அலுவலகமானது திறைசேரி அலகிலிருந்து சுயாதீனமாக தொழிற்படுவதுடன் பொதுவாக கணிசமான சந்தை இடர்களுக்கு அதிகரிப்பை வழங்கக்கூடிய திறைசேரி கொடுக்கல் வாங்கல்களையும் கண்காணிக்கின்றது. சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நடுப்பகுதி அலுவலக தொழிற்பாட்டுக் கைந்நூலுக்கு இணங்க நடுப்பகுதி அலுவலகம் தொழிற்படுகின்றது.

சந்தை இடர் முகாமைத்துவத்திற்கான அணுகுமுறை

இவ் வங்கியின் சந்தை இடர் முகாமைத்துவக் கட்டமைப்பானது பின்வருவனவற்றின் மீது நிலைநிறுத்தப்பட்டுள்ளது;

கொள்கைகளிற்கான முழுக் கட்டமைப்பு

முழுமையான சந்தை இடர் முகாமைத்துவக் கொள்கைக்கு மேலதிகமாக, இவ் வங்கியின் சந்தை இடர் முகாமைத்துவமானது சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் கொள்கை, எல்லை முகாமைத்துவக் கட்டமைப்பு, அந்நியச் செலாவணி இடர் முகாமைத்துவக் கொள்கை மற்றும் நடுப்பகுதி அலுவலக தொழிற்பாட்டுக் கைநூல் என்பவற்றின் மூலம் நிர்வகிக்கப்படுகின்றது.

திறைசேரி நடவடிக்கைகள் தொடர்பில் இடரை மட்டுப்படுத்தும் குறைந்தபட்ச எல்லைகளை உருவாக்கியும் சந்தை வழிமுறைகளிலிருந்து விளையப்பெறும் சாத்தியமான தாக்கங்களை முகாமை செய்தும், திறைசேரி நடவடிக்கைகளின் பயனுறுதி வாய்ந்த கண்காணிப்பிற்கான வழிகாட்டலை இக் கொள்கைகளும் நடைமுறைகளும் கூட்டாக வழங்குகின்றன. தோற்றம்பெறும் சந்தை இடர்களைக் கருத்திற்கொண்டு இக் கொள்கைகளானவை ஒழுங்காக மீளாய்வு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்படுகின்றன.

இடர் எல்லைகள்

சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழுவின் (ALCO) பரிந்துரைகளின் அடிப்படையில், சபையானது, சந்தை இடருக்கு அதிகரிப்பைக் கொடுக்கக்கூடிய திறைசேரி மற்றும் முதலீட்டுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளின் வீச்செல்லை இடர் எல்லைகளை வரையறுக்கின்றது; அந்நியச் செலாவணி திறந்த நிலை எல்லைகள், இணைத்தரப்பு எல்லைகள், நட்டத்தடுப்புக் கட்டளை (stop loss) எல்லைகள் மற்றும் திறைசேரி வணிகர் எல்லைகள் என்பவற்றை இவை உள்ளடக்குகின்றன. இவ் எல்லைகளுக்கு எதிரான உண்மையான செயற்றிறனானது ஒழுங்கான அடிப்படையில் கண்காணிக்கப்பட்டு சபைக்கு அறிக்கையிடப்படுகின்றது. இவ் எல்லைகளானவை சந்தை வழிமுறைகளுக்கு ஒத்திசைவாக சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழுவின் (ALCO) பரிந்துரைகளைக் கொண்டு சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினால் (IIRMD) ஒழுங்காக மீளாய்வு செய்யப்பட்டு திருத்தப்படுகின்றன.

இடர் முகாமைத்துவம்

இடர் கண்காணிப்பு

இவ் வங்கியின் கடன் வழங்கல் மற்றும் நிதியீட்ட தந்திரோபாயங்களுக்கு ஒத்திசைவாக முதிர்வுக்காலப் பொருத்தமின்மைகள், வட்டி மிகைவீதம் மற்றும் நிதியீட்டத் தேவைப்பாடுகளை சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவப் பிரிவானது (IIRMD) தொடர்ந்து கண்காணிக்கின்றது.இவ் வங்கியின் ஐந்தொகையின் வட்டிவீத இடரினை கண்காணிப்பதற்கு இடரிலுள்ள பெறுமதி (VaR),சதவிகிதப் புள்ளிக்கான (Basis Point) விலைப் பெறுமதி (PVBP), கால இடைவெளிப் பகுப்பாய்வு, நெருக்கடிநிலை சோதனை மற்றும் உணர்திறன் பகுப்பாய்வு போன்ற கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. அந்நியச் செலாவணி வீத இடரானது இடரிலுள்ள பெறுமதி (VaR), எல்லைகள் மற்றும் அந்நியச் செலாவணிகளின் தேறிய தொகை (net open positions) என்பவற்றிற்கூடாக கண்காணிக்கப்படுகின்றது.

சந்தை இடர் மீளாய்வு 2018

வட்டிவீத இடர்

வட்டிவீத இடருக்கான (IRR) இவ் வங்கியின் வெளிக்காட்டலானது, பெறுமதிகளானவை வட்டிவீத மாற்றங்களிலும் கடன் பரம்பல்களிலும் தளம்புகின்ற அதன் கடன் வழங்கல் பட்டியல், வர்த்தகப் பிணையங்கள் மற்றும் வைப்பு பொறுப்புகள் என்பவற்றிலிருந்து எழுகின்றது.

வட்டிவீத இடர் முகாமைத்துவம்

மதிநுட்பமான எல்லைகள், வட்டி இடைவெளிகள் மற்றும் இடரிலுள்ள பெறுமதி (VaR) என்பவற்றை தெளிவாக விதித்துரைக்கும் வட்டிவீத இடரை (IRR) முகாமை செய்வதற்கு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைக் கட்டமைப்பு அமுலில் உள்ளது.இவ் வங்கியின் சொத்து மற்றும் பொறுப்பு முதிர்வுக்காலங்களிற்கு இடையிலான இயல்பான பொருத்தமின்மையினைக் கருத்திற்கொண்டு, வட்டிவீத இடருக்கான (IRR) கால இடைவெளி மற்றும் ஒட்டுமொத்த வெளிக்காட்டலை மதிப்பிடும் பொருட்டு சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவப் பிரிவானது (IIRMD) முதிர்வுக்காலங்களை காலக்கூடைகளில் (time buckets) தொடர்ந்து கண்காணிக்கின்றது. வங்கி மற்றும் வர்த்தக ஏட்டின் வட்டிவீத இடர் (IRR) வெளிக்காட்டல்கள் தொடர்பான ஒழுங்கான நெருக்கடிநிலை சோதனையானது, இவ் வங்கியின் இலாபத்தன்மை மற்றும் மூலதன நிலைமை பற்றிய மாறிவரும் பொருளாதாரக் குறிகாட்டிகளின் சாத்தியமான தாக்கத்தை நாம் தொடர்ந்து அறிந்துகொள்கின்றோம் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

அந்நியச் செலாவணி இடருக்கு உட்பட்டு முதலீட்டுப் பட்டியல்கள் தொடர்பில் இடரிலுள்ள பெறுமதி (VaR) கணிப்பீடுகள் மற்றும் நெருக்கடிநிலை சோதனை என்பவற்றையும் இவ் வங்கி மேற்கொள்கின்றது.

கவனம் குவித்த பிரதான துறைகள் / அபிவிருத்தி 2018ம் ஆண்டில்

- சந்தை இடர் குறிகாட்டிகளின் நோக்கெல்லையை விரிவுபடுத்தியதன் ஊடாக கண்காணிப்பை வலுப்படுத்தியமை
- எல்லைக் கண்காணிப்பு பொறிமுறையை மேம்படுத்தியமை
- மாறிகளின் பரந்த வீச்சொன்றை உள்ளடக்குவதற்கு நெருக்கடிநிலை சோதனைப் பொறிமுறையின் நோக்கெல்லையை விரிவாக்கியமை
- நாளாந்த மற்றும் மாதாந்த இடர் அறிக்கைகளில் அறிக்கையிடல் கூறுகளை மேம்படுத்தியமை

PVBP திறைசேரி உண்டியல்



PVBP திறைசேரி முறி



சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் உணர்திறன் பகுப்பாய்வு



திறந்த நிலை



திறைசேரி உண்டியல் VaR



தங்கம் VaR



உரிமைமுதல் இடர்

இவ் வங்கியின் வசமுள்ள உரிமைமுதல் முதலீடுகளிலான விலைத் தளம்பல்களிலிருந்து எழுகின்ற நட்டங்களே உரிமைமுதல் இடர்களாகும்.இலங்கை வங்கியின் உரிமைமுதல் வெளிக்காட்டலானது அதன் வர்த்தகப் பட்டியல்களினால் ஏற்படுவதுடன் தந்திரோபாய முதலீடுகளை உள்ளடக்குவதில்லை.2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தின் இறுதியிலுள்ளவாறு இவ் வங்கியின் மொத்தச் சொத்துக்களின் வெறும் 0.3%தொகையினைக் கொண்ட உரிமைமுதல் பங்குகளிலுள்ள முதலீடுகளாக இவ் வங்கியின் உரிமைமுதல் இடருக்கான வெளிக்காட்டலானது ஒப்பீட்டு ரீதியில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

உரிமைமுதல் இடர் முகாமைத்துவம்

இவ் வங்கியின் முதலீட்டு இடர்களானவை சபையின் வரையறுக்கப்பட்ட இடர் நாட்டத்திற்கு ஒத்திசைவாக முகாமிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பினை, நிறைவேற்று மட்டத்தில், முதலீட்டுக் குழு கொண்டுள்ளது. அதேவேளை,பரந்த பேரினப் பொருளாதார நிலைமைகளை உள்ளடக்கி, பங்குச் சந்தை விலைகளை சாத்தியமுடையதாக பாதிக்கக்கூடிய போக்குகளானவை ஒழுங்கான அடிப்படையில் முதலீட்டுக் குழுவினால் கண்காணிக்கப்படுகின்றன.

உரிமை முதல் VaR



சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் முதிர்வுப் பகுப்பாய்வு



இடர் முகாமைத்துவம்

திரவத்தன்மை இடர்

வங்கியின் ஒப்பந்தக் கடப்பாடுகள் நிலுவையாக உள்ள போது அவற்றைத் தீர்ப்பதற்கான ஆற்றலின்மை காரணமாக உழைப்புக்கள் அத்துடன் அல்லது மூலதனம் மீது ஏற்படும் சாத்தியமான நட்டமே திரவத்தன்மை இடராகும்.

வங்கியின் வைப்புப் பொறுப்புக்களின் குறுங்கால முதிர்வுகளையும் அதன் கடன் வழங்கல் பட்டியலின் நீண்ட கால முதிர்வுகளையும் கருத்திற்கொள்ளும் போது, திரவத்தன்மை இடர்களுக்கு வங்கிகள் தவிர்க்கமுடியாத விதத்தில் பாதிப்புறக்கூடியனவாக உள்ளதுடன் அத்தகைய இடர்களை முகாமை செய்வது நிதி உறுதிப்பாட்டைப் பேணுவதற்கு முக்கியமானதாகும்.

திரவத்தன்மை இடர் முகாமைத்துவம்

வங்கியின் ஒப்பந்தக் கடப்பாடுகள் நிலுவையாக உள்ள போது அவற்றைத் தீர்க்கும் பொருட்டு போதுமானளவு திரவத்தன்மை பாதுகாப்பு (buffer) ஒன்றை பேணுதல் தொடர்பான தெளிவான வழிகாட்டலை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட திரவத்தன்மை இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு வழங்குகின்றது.திரவத்தன்மை இடர்களின் முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்வதற்கு சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு (ALCO) பொறுப்பாகவிருப்பதுடன் ஒழுங்குறுத்தல்தேவைப்பாடுகளுக்கும் உள்ளக இலக்குகளுக்குமான இணக்கத்தினை உறுதிப்படுத்துவதற்கு இவ் வங்கியின் திரவத்தன்மை நிலமையைத் தொடர்ச்சியாகக் கண்காணிக்கின்றது. இடர் நாட்டத்தில் வரையறுக்கப்பட்ட அளவுகளிற்குள் திரவத்தன்மை குறிகாட்டிகள் பேணப்படுகின்றன என்பதை ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவிற்கும் (IRMC) சபைக்கும் செய்யப்படும் ஒழுங்காக அறிக்கையிடல் உறுதிப்படுத்துகின்றது.

திரவத்தன்மை இடர் முகாமைத்துவத்திற்கான அணுகுமுறை

கொள்கைக் கட்டமைப்பு

நிறுவனம் பூராகவுமுள்ள திரவத்தன்மை இடர்களின் முகாமைத்துவம் தொடர்பான வழிகாட்டலை திரவத்தன்மை இடர் முகாமைத்துவக் கொள்கையும் சொத்துப் பொறுப்பு முகாமைத்துவக் கொள்கையும் வழங்குகின்றன.திரவத்தன்மை குறிகாட்டிகளானவை வசதியான மட்டங்களில் பேணப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கான அளவீட்டு முறைகள், நெருக்கடிநிலை சோதனை முறைமைகள், எதிர்பாராத நிகழ்வு நிதியீட்ட ஒழுங்குகள் மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் என்பவற்றையும் இக் கொள்கைகள் தெளிவாக வரையறுக்கின்றன.

திரவத்தன்மை அளவீடு

திரவத்தன்மை இடரை மதிப்பிடுகையில், இவ் வங்கியானது பாய்ச்சல் மற்றும் நிதிய அணுகுமுறைகள் இரண்டையுமே பின்பற்றுகின்றது. காசு பாய்ச்சல் அணுகுமுறையின் கீழ், வங்கியானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்வுக்காலத்தின் அடிப்படையில் பல்வேறுபட்ட காலப்பகுதிகளிலான உட்பாய்ச்சல்களுக்கும் வெளிப்பாய்ச்சல்களுக்கும் இடையிலான பொருத்தமின்மையை பகுப்பாய்வு செய்வதன் ஊடாக திரவத்தன்மை இடரை அளவிடுகின்றது. திரவச்சொத்து விகிதம், திரவத்தன்மை காப்பு விகிதம், தேறிய உறுதியான நிதியீட்ட விகிதம் மற்றும் வைப்புக்கான கடன் விகிதம் போன்ற அடிப்படைக் குறிகாட்டிகளின் / விகிதங்களின் தொகுதியானது நிதியீட்ட அணுகுமுறையின் கீழ் பயன்படுத்தப்படும் அளவீடாகும்.

எதிர்பாராத வகையில் நிகழும் நிதியீட்டத் திட்டம்

திரவத்தன்மை நெருக்கடிநிலை நிகழ்வின் போது வங்கியின் அக்கறைதாரர்களின் ஆதாயங்களைப் பாதுகாப்பதற்கும் பொதுமக்களின் வங்கி மீதான நம்பிக்கையினைப் பேணுவதற்கும் எதிர்பாராத வகையில் நிகழும் நிகழ்வு நிதியீட்டத் திட்டம் (CFP) அமுலில் உள்ளது. உரிய அதிகாரிகளுக்கு குறித்தொதுக்கப்பட்ட திட்டவட்டமான பொறுப்புக்களுடன் சேர்த்து திட்டவட்டமான தூண்டல் நிலமைகளையும் (trigger points) செயல் திட்டங்களையும் இத் திட்டம் வரையறுக்கின்றது.

திரவத்தன்மை இடர் மீளாய்வு 2018

இடர் நாட்டக் கூற்றின் மூலம் வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்குள்ளும் உரிய சகல ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகளுடன் ஒத்திசைவாகவும் குறிகாட்டிகளுடன் சேர்த்து இவ் ஆண்டின் போது வசதியான திரவத்தன்மை பாதுகாப்பொன்றை இவ் வங்கி நன்கு பேணியது.சந்தை நிலமைகள் மற்றும் திரவத்தன்மை தேவைப்பாடுகளைப் பொறுத்து நிதிமூலங்களின் தொகுதியொன்றிலிருந்து வங்கியானதுநிதிமூலத்தைப் பெற்றுக்கொள்வதை அனுமதிக்கும் இவ் வங்கியின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியீட்டப் பட்டியலினாலும் திரவத்தன்மை நிலமை பேணப்படுகின்றது.இவ் வங்கியின் நிதியீட்டப் பட்டியல் சார்பில் 16% ஆனவை கடன்பெறுதல்கள் மற்றும் 6% ஆனவை பங்குதாரர்கள் நிதியங்கள் என்பன அடுத்து தொடர்கின்ற, வைப்புக்கள் 78% ஆனவை தொகையினைக் கொண்டுள்ளன. அதேவேளை, நிதியீட்டத்திற்கு கிடைக்கக்கூடியதாகவுள்ள தடையற்ற (unencumbered) பிணையங்களானவை 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தின் இறுதியிலுள்ளவாறு 221,723 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு சமமாக இருந்தது.

தடையற்ற பிணையங்கள்



திரவத்தன்மைக் காப்பு விகிதம்



	2018 மார்ச் 31	2018 யூன் 30	2018 செப்டெம்பர் 30	2018 டிசெம்பர் 31
கடன் வைப்பு விகிதம்	75.0%	76.5%	80.5%	83.3%
நியதிச்சட்ட திரவச்சொத்து விகிதம்	30.44%	26.13%	23.79%	24.47%
தேறிய உறுதியான நிதியீட்ட விகிதம்	140.41%	138.29%	127.37%	128.68%
திரவத்தன்மை காப்பு விகிதம்	102.04%	113.48%	99.77%	114.99%

செயற்பாட்டு இடர்

முழுமையற்ற அல்லது தோல்வியான உள்ளக செய்முறைகள், ஊழியர்கள் மற்றும் முறைமைகள் என்பவற்றிலிருந்து அல்லது வெளியக நிகழ்வுகளிலிருந்து விளையப்பெறும் நட்டமே செயற்பாட்டு இடராகும். செயற்பாட்டு இடரானது சட்ட இடரையும் உள்ளடக்கிய அதே வேளை, ஆனால் தந்திரோபாய இடர் மற்றும் நன்மதிப்பு இடரினை உள்ளடக்கவில்லை.

செயற்பாட்டு இடரானது வங்கியின் வியாபாரம் நடவடிக்கைகள் மற்றும் துணை அலகுகள் எனும் இரண்டிலிருந்தும் தோன்றுவதுடன் வியாபாரச் செயற்பாடுகளின் இயல்பான வழிமுறை, கணக்குகள் மற்றும் செய்முறைகள் என்பவற்றின் தவிர்க்கமுடியாத கூறொன்றாகவும் உள்ளது



செயற்பாட்டு இடர் ஆளுகை

ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் (IRMC) உதவியுடன் பணிப்பாளர் சபையானது இவ் வங்கியின் செயற்பாட்டு இடர் வெளிக்காட்டல்களை முகாமைசெய்வதற்கும் செயற்பாட்டு இடர் முகாமைத்துவத்தின் உறுதியினை உறுதிப்படுத்துவதற்குமான மேற்பார்வைப் பொறுப்பினை கொண்டுள்ளது. நிறைவேற்று மட்டத்தில், செயற்பாட்டு இடர் முகாமைத்துவ நிறைவேற்றுக் குழு (ORMEC) மற்றும் மோசடி இடர் முகாமைத்துவ குழு (FRMC) என்பனசுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவப் பிரிவுடன் (IIRMD) ஒன்றுசேர்ந்து கட்டமைப்பு அமுலாக்கத்திற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளன. செயற்பாட்டு இடருடன் பரந்திருக்கும் தன்மையானது, நிறுவன வாரியாக பொறுப்பொன்றாகவுள்ளதுடன், இனங்காணலையும் முகாமைத்துவத்தையும் தருகின்றது. 'பாதுகாப்பின் முதல் வரிசை' ஆகவுள்ள கிளைகள் மற்றும் வியாபார அலகுகள் தோற்றப்புள்ளியில் இடர்களை இனங்காண்பதற்குப் பொறுப்பாகவுள்ளன. சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவப் பிரிவானது (இரண்டாம் வரிசை) கட்டமைப்பை அமுல்படுத்துவதற்கும் வரையறுக்கப்பட்ட நாட்டத்திற்கு எதிராக இடர் செயற்றிறனைக் கண்காணிப்பதற்கும் பொறுப்பாகவுள்ளது. அதேவேளை, கணக்காய்வும் இணக்கப்பாடும் அமுலிலுள்ள செயற்பாட்டு இடர் முகாமைத்துவத்தின் செய்முறைகள் தொடர்பான பயனுறுதித்தன்மை தன்மை பற்றி சபைக்கு உறுதிப்பாட்டினை வழங்குகின்றன.

செயற்பாட்டு இடர் முகாமை செய்வதற்கான அணுகுமுறை

கொள்கைக் கட்டமைப்பு

சபையினால் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கையானது செயற்பாட்டு இடர்களின் இனங்காணல், மதிப்பீடு, தணிப்பு மற்றும் கண்காணிப்பு தொடர்பில் தெளிவான வழிகாட்டலை வழங்குகின்றது. மேலும், மோசடி இடர் முகாமைத்துவக் கொள்கை மற்றும் தகவல் தொழில்நுட்ப இடர் முகாமைத்துவக் கொள்கை என்பன இவ் வங்கியின் செயற்பாட்டு இடர் முகாமைத்துவ நோக்கங்களுக்கு உதவுகின்றது.இவ் வங்கியின் செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் கட்டமைப்பை அமுல்படுத்துவதில் சபையினதும், நிறைவேற்றுக் குழுக்களினதும், முகாமைத்துவக் குழுக்களினதும் மற்றும் இடர் உரிமையாளர்களினதும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றையும் இக் கொள்கைக் கட்டமைப்பு வரையறுக்கின்றது

இடர் முகாமைத்துவம்

இடரை இனங்காணுதலும் அளவிடுதலும்

சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு (IIRMD) மூலம் சகல முதன்மையான வியாபார அலகுகளுக்கும் நிர்வகிக்கப்படும் இடர் மற்றும் கட்டுப்பாட்டு சுய-மதிப்பீடுகள் (RCSA) ஊடாக பாதுகாப்பு மட்டத்தின் முதலாவது வரிசையில் செயற்பாட்டு இடர்களின் இனங்காணல் நிகழ்கின்றது.

அடிப்படை இடர் குறிகாட்டிகள், உள்ளக நட்டத் தரவு மற்றும் மூலகாரணப் பகுப்பாய்வு போன்ற கருவிகளும்செயற்பாட்டு இடருக்கான வெளிக்காட்டலை மதிப்பிடுவதற்கு வங்கி பூராகவும் பயன்படுத்தப்படுகின்றன.இம் முடிவுகளானவை இனங்காணப்பட்ட இடைவெளிகளுக்கான செயல் திட்டங்களை வகுப்பதில் உள்ளீடுகளாக உள்ளதுடன் சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு (IIRMD) மூலம் செயற்பாட்டு இடர் முகாமைத்துவ நிறைவேற்றுக் குழுவிற்கும் (ORMEC), ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவிற்கும் (IRMC) இறுதியாக சபைக்கும் அறிக்கையிடப்படுகின்றன.

இடர் குறைப்பு

தாக்கத்தின் தீவிரத்தன்மை அல்லது நிகழ்வின் சாத்தியப்பாடு குறைக்கப்படுவதை பின்வரும் இடர் குறைப்பு கருவிகள் உறுதிப்படுத்துகின்றன.

(1) இனங்காணப்பட்ட செயற்பாட்டு இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கான மீள்கட்டமைப்பு (Re-engineering) செய்முறைகள்

(2) பாதிப்புறக்கூடிய தன்மைகள் மூலம் எழும் செயற்பாடுகள் தொடர்பில் எச்சரிக்கை செய்தல்

(3) வங்கியின் இடர் நாட்டத்திற்குள் ஏற்றுக்கொள்ள முடியாத இடர்களைத் தவிர்ப்பதற்கு ஆலோசனை வழங்கல்

(4) வியாபார தொடர்ச்சி திட்டங்கள்:சகல முக்கியமான வியாபார அலகுகளும் துணைத் தொழிற்பாடுகளும் வியாபார தொடர்ச்சி திட்டங்களை விருத்தி செய்துள்ளன; பயறுதித்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு இத் திட்டங்கள் ஒழுங்காக பரிசோதனை செய்யப்படுகின்றது.

(5) கொழும்பு நகர எல்லைக்கு வெளியே ஸ்தாபிக்கப்பட்ட அனர்த்த மீள்எழுதல் நிலையம்

(6) உயர் தீவிரத்தன்மையுடைய கட்டுப்படுத்த முடியாத இடர்களைத் தணிப்பதற்கு காப்புறுதியைப் பெற்றுக்கொள்தல்

கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடலும்

சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவப் பிரிவானது (IIRMD) செயற்பாட்டு இடர் நிகழ்வுகள் / நட்டங்கள் மற்றும் கட்டுப்பாட்டு செயலிழப்புகள் பற்றி ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவிற்கும் (IRMC) சபைக்கும் ஒழுங்கான பதிவேற்றங்களை வழங்குகின்றது.போக்குகள் மற்றும் மூலகாரணங்களை இனங்காண்பதை அனுமதித்து, செயற்பாட்டு நட்டங்கள் மற்றும் கிட்டிய தவறல் நிலமைகள் (near misses) பற்றிய தரவுத்தளமொன்றும் பேணப்படுகின்றது. அதேவேளை, சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவப் பிரிவானது (IIRMD), கணிசமான செயற்பாட்டு இடர் வெளிக்காட்டலொன்று நிகழும் போது சகல ஊழியர்களுக்கும் உரியகால எச்சரிக்கை ஒன்றுக்கூடாக கற்றுக்கொண்ட விடயங்களை பரப்புவதில் முன்கூட்டியே செயலாற்றும் வகிபாகமொன்றைக் கொண்டுள்ளது.

2018 இல் கவனம் குவித்த பிரதான துறைகள் / அபிவிருத்தி

- வங்கியின் காசு முகாமைத்துவ முறைமையினை சீராக்கியமை
- வங்கியின் காப்புறுதி ஆவணத்தை மீள ஆராய்வதனூடாக இடர் இடமாற்றத் தந்திரோபாயத்தை முன்னேற்றியமை
- SWIFT நடவடிக்கைகள் செயற்பாட்டு மீதான பாதுகாப்பை வலுப்படுத்தியமை மற்றும் இலத்திரனியல் கொடுப்பனவு சமநிலைப்படுத்தல் பொறிமுறையினை சீராக்கியமை
- ஊழியர் அபிவிருத்தியில் முதலீடு செய்வதன் மூலம் தகவல் தொழில்நுட்ப இடர் முகாமைத்துவத்தை வலுப்படுத்தியமை
- அனர்த்த மீண்டெழல் ஆற்றலை வலுப்படுத்தியமை

செயற்பாட்டு இடர் மீளாய்வு 2018

வங்கியின் செயற்பாட்டு நட்டங்களானவை வரையறுக்கப்பட்ட உள்ளக எல்லைகளுக்கு கீழே தொடர்ந்து காணப்பட்டன.பாதிப்புறக்கூடிய தன்மைகளானவை மூலகாரணப் பகுப்பாய்விற்கூடாக இனங்காணப்பட்டுள்ளதுடன் இவ் ஆண்டின் போது இடைவெளிகளை நிவர்த்திப்பதற்கு பொருத்தமான தந்திரோபாயங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.அடுத்தடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான செயற்பாட்டு நட்டங்கள் அருகில் தரப்பட்டுள்ளன

நட்டத்தரவுப் பகுப்பாய்வு



தொழில்நுட்ப இடர்

இவ் வங்கியினுள்ளே தகவல் தொழில்நுட்பத்தின் (IT) உரிமைத்துவம், பயன்பாடு, தொழிற்பாடு, உள்வாங்கல் மற்றும் பின்பற்றல் என்பவற்றுடன் இணைந்த இடர்களே தொழில்நுட்ப இடராகும்.தகவல் தொழில்நுட்ப முறைமைகளிலான தடைகள் மற்றும் செயலிழப்புகள், இணையத் வழி தாக்குதல்கள் (Cyber Attack), தொழில்நுட்பம் வழக்கற்றுப்போதல், போட்டியாளர்களின் பின்னால் செல்வதன் காரணமாக போட்டி நிலமையின் சீர்கேடு மற்றும் ஏனையவற்றுக்கிடையில் வியாபாரத் தொகுதிகளுக்கு உதவுவதற்கு பற்றாக்குறையான உட்கட்டமைப்பு என்பவற்றை இது உள்ளடக்கும்.

தொழிற்பாட்டு வினைத்திறன்களை செயற்படுத்துவதற்கும், வாடிக்கையாளர் தகவல்களைக் கையாள்வதற்கும் மற்றும் வாடிக்கையாளர் மதிப்பு நலன்களை வலுப்படுத்துவதற்கும் நிறுவனங்கள் தொழில்நுட்பத்தின் மீது வெகுவாக நம்பிக்கைவைத்து, அண்மைய ஆண்டுகளில் வங்கித் துறை நடவடிக்கைகள் மற்றும் வியாபார மாதிரிகளை தொழில்நுட்பமானது நிலைமாற்றியுள்ளது. இலங்கை வங்கி சார்பில், எண்ணிம தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு (digitalisation)மற்றும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை முன்னேற்றுவதில் நடைபெற்றுவரும் முதலீடுகள் என்பவற்றின் மீதான அதன் தந்திரோபாய கவனக்குவிப்பைக் கருத்திற்கொள்ளும் போது, தொழில்நுட்ப இடர்களானவை அடிப்படை வெளிக்காட்டல் ஒன்றாக தோற்றம்பெற்றுள்ளன.பயனுறுதி வாய்ந்த தகவல் தொழில்நுட்ப இடர் முகாமைத்துவத்தின் அதி முக்கியத்துவத்தை அடையாளங்கண்டு, சபையானது,சபையின் தகவல் தொழில்நுட்ப தந்திரோபாயத்தின் பயனுறுதி வாய்ந்த அமுலாக்கத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு இந்த ஆண்டு காலப்பகுதியில் அர்ப்பணிப்புமிக்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் குழு (ICTC) ஒன்றை அமைத்தது.

தொழில்நுட்ப இடர் மீளாய்வு 2018

- 'பிரதம தகவல் பாதுகாப்பு அலுவலர்' (CISO) பதவி உருவாக்கப்பட்டமை.
- வங்கியின் பாதுகாப்பு நடவடிக்கையினை மேற்பார்வை செய்யும் நிலையமொன்றை அமைத்தல் ஊடாக வங்கியின் தகவல்தொழில்நுட்ப நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.
- பாதிப்புறக்கூடிய தன்மை மதிப்பீடுகளை மேற்கொண்டமை.
- ISO 27001 சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கான செய்முறையினை ஆரம்பித்தமை.
- வங்கியின் உள்ளக வலையமைப்பு (மீதான) பாதுகாப்பினை வலுப்படுத்தியமை.
- முறைமைக் கிடைப்பனவை மேம்படுத்தியமை மற்றும் முக்கியமான முறைமைகளின் செயலறு நேரத்தினை (downtime) குறைத்தமை

சட்ட இடர்

ஒழுங்குறுத்துகை / நியதிச்சட்ட ஏற்பாடுகளுடன் இணக்கமுறாமை, சட்ட நடவடிக்கைகள் காரணமாக ஏற்படும் நிச்சயமற்றதன்மை அல்லது இவ் வங்கிக்கு ஏற்புடைய உரிய சட்டங்கள் அல்லது ஒழுங்குவிதியின் பிரயோகத்தில் அல்லது பொருள்கோடலில் ஏற்படும் நிச்சயமற்றதன்மை என்பவற்றிலிருந்து எழுகின்ற, உழைப்புக்களுக்கான சாத்தியமான நட்டங்களும் நன்மதிப்புக் கேடுகளுமே சட்ட இடர்களாகும்.

சட்ட இடர் வெளிக்காட்டல்களானவை சாத்தியப்படக்கூடிய அளவிற்கு குறைக்கப்படுவதை உறுதிப்படுத்தும் கொள்கைகள், நியமங்கள் மற்றும் உள்ளக நடைமுறைகள் என்பவற்றின் முழுமையான தொகுதியொன்றின் மூலம் இவ் வங்கியின் தொழிற்பாடுகள் வழிப்படுத்தப்படுகின்றன.இவ் வங்கியின் இணக்கப்பாடு மற்றும் சட்டத் தொழிற்பாடுகளின் மூலம் சட்டப் பிணைப்புடைய சகல உடன்படிக்கைகளும் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு தெளிவாக வரையறுக்கப்பட்ட செய்முறைகளும் அமுலில் உள்ளன. இவ் வங்கியின் சட்ட இடரை செய்யும் பொருட்டு சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் (IIRMD) மூலம் காலக்கிரமமான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இணக்கப்பாட்டு இடர்

ஏற்புடைய சட்டங்கள், ஒழுங்குவிதிகள், நன்நடத்தை விதிக்கோவைகள் மற்றும் மற்றும் நடைமுறை நியமங்கள் என்பவற்றுடன் இணக்கமுறாமை காரணமாக ஏற்படும், உழைப்புக்களிலான சாத்தியமான நட்டம் அத்துடன் அல்லது இவ் வங்கியின் நன்மதிப்பு மீதான தாக்கமே இணக்கப்பாட்டு இடராகும்.

சபைக்கு நேரடியாக அறிக்கையிடும் இணக்கப்பாட்டு அலுவலர் தலைமைதாங்கும் அர்ப்பணிப்புமிக்க இணக்கப்பாட்டு அலகொன்றானது, உரிய சகல வெளியக ஒழுங்குவிதிகளுடனும் உள்ளக வழிகாட்டல்களுடனும் இவ் வங்கி இணக்கமுறுகின்றது என்பதை உறுதிப்படுத்துகின்றது. அதேவேளை, எவ்வாறு வங்கியினால் ஒழுங்குமுறையானதும் முழுமையானதுமான விதத்தில் இணக்கப்பாட்டு இடர்கள் இனங்காணப்பட்டு, கண்காணிக்கப்பட்டு முகாமிக்கப்படுகின்றது என்பதைக் குறித்துரைக்கும், சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இணக்கப்பாட்டு கொள்கையொன்றும் அமுலில் உள்ளது.

இணக்கப்பாட்டு தொழிற்பாட்டின் அடிப்படைப் பொறுப்புகள்

- ஒழுங்குறுத்தல் தோற்றப்பாட்டிற்கான மாற்றங்கள் தொடர்பில் பணிப்பாளர் சபைக்கும் சிரேட்ட முகாமைத்துவக் குழுவிற்கும் ஆலோசனை வழங்குதல் மற்றும் அத்தகைய மாற்றங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பான பரிந்துரைகளைச் செய்தல்
- இணக்கப்பாடு தொடர்பில் ஊழியர்களுக்கு இடையில் விழிப்புணர்வை அதிகரித்தல்
- புதிய கணக்குகள் (உற்பத்திகள்), வியாபார நடைமுறைகள் சாத்தியமான இணக்கப்பாட்டு இடர்களுக்காக தொடர்புகளை மதிப்பிடுதல்
- இணக்கப்பாடு தொடர்புபட்ட சகல விடயங்கள் தொடர்பிலும் ஒழுங்குறுத்துநருடன் தொடர்புகொள்தல்

இவ் ஆண்டின் போது, வழிகாட்டல்கள் அத்துடன் / அல்லது ஏதேனும் சமூக சுற்றாடல் ஒழுங்குவிதிகள் சம்பந்தமாக இணக்கமுறாமை பற்றிய பொருண்மையான நிலமைகள் எதுவும் காணப்படவில்லை.

தந்திரோபாய இடர்

இவ் வங்கியின் எதிர்கால வியாபாரத் திட்டங்களில் ஏற்படும் சாத்தியமான வழுக்களிலிருந்தும் தந்திரோபாயங்கள் பற்றாக்குறையாக உள்ள சாத்தியப்பாடுகளிலிருந்தும் எழுகின்ற சாத்தியமான நட்டங்களே தந்திரோபாய இடராகும்.

கூட்டாண்மை மற்றும் நிறைவேற்று முகாமைத்துவத்தின் உள்ளீடுகளின் அடிப்படையில், வடிவமைக்கப்படும் மூன்று வருட கூட்டாண்மைத் திட்டம் ஒன்றுடன் சேர்த்து தந்திரோபாயத்தை வகுத்தலை நோக்கிய ஒழுங்குமுறையானதும் முழுமையானதுமான அணுகுமுறையொன்றை இவ் வங்கி பின்பற்றுகின்றது. முகாமைத்துவக் குழுவுடன் மேற்கொள்ளப்படும் விரிவான கலந்துரையாடல்களை அடுத்து கூட்டாண்மைத் திட்டத்தை சபை அங்கீகரிக்கின்றது.

வியாபார நோக்கங்கள் மற்றும் செயல் திட்டங்கள் என்பன சகல வியாபார அலகுகளுக்கும் கிளைகளுக்கும் பரவிச் செல்வதுடன் திட்ட அமுலாக்கமானது வரையறுக்கப்பட்ட இலக்குகளுக்கு எதிராக கண்காணிக்கப்படுகின்றது. இவ் வங்கியின் அர்ப்பணிப்புமிக்க ஆராய்ச்சித் திணைக்களமானது பொருளாதார மற்றும் அரசியல் அபிவிருத்திகள், வாடிக்கையாளர் பின்னூட்டம் மற்றும் தொழிற்றுறையின் எதிர்கால நோக்கு என்பவற்றை தொடர்ந்து வழங்குகின்றது. இவ் அறிக்கைகளின் அடிப்படையில்,சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவப் பிரிவானது (IIRMD) தந்திரோபாய இடரை மதிப்பிட்டு அவற்றை உரிய வியாபார அலகுகளுக்குப் பரப்புகின்றது. முழுமையான மதிப்பீட்டு புள்ளிவிபரப் பதிவானது (scorecard) இவ் வங்கியின் தந்திரோபாய இடரை அளவிடுவதற்கும் கண்காணிப்பதற்கும் பயன்படுத்தப்படுவதுடன் வருடாந்த உள்ளக மூலதனத்தின் போதுமானதன்மை மதிப்பீட்டுச் செய்முறையில் (ICAAP) உள்ளடக்கப்பட்டுள்ளது.

நன்மதிப்பு இடர்

உழைப்புகள், சொத்துக்கள், மூலதன நிலைமை என்பன அடையாளத்தின் மதிப்பு என்பவற்றில் பாதகமான தாக்கத்தை உண்டுபண்ணக்கூடிய, நம்பிக்கை இழப்பிலிருந்தும் இவ்வங்கியின் மீதான எதிர்மறைக் கண்ணோட்டத்திலிருந்தும் நன்மதிப்பு இடர்கள் எழுகின்றன.

- ஒரு நிதி நிறுவனமாக, பொதுமக்கள் நம்பிக்கை முக்கியமானது, எனவே நன்மதிப்பு இடருடன் தொடர்புபட்ட நிகழ்வுகளை சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு (IIRMD) தொடர்ந்து கண்காணித்து முகாமை செய்கின்றது. இவ் வங்கியானது அதன் நன்மதிப்பு இடரை ஆகக் குறைந்த மட்டத்தில் பேணுகின்றமைக்கு, பின்வருவன சான்றாகும்: இலங்கை வங்கியின் வர்த்தக அடையாளத்தின் உறுதி: உள்நாட்டு மற்றும் சர்வதேச சுயாதீனமான,வர்த்தகத்தை அடையாளப்படுத்தும் நிறுவனங்களினால் நாட்டின் முதல்தர வர்த்தக அடையாளமாக இலங்கை வங்கி தொடர்ச்சியாக தரப்படுத்தப்பட்டுள்ளது.
- நம்பிக்கை மற்றும் உறுதியின் வர்த்தக அடையாளப் பண்புகள்
- வங்கியின் எட்டு தசாப்த காலங்களில் நிலைபெற்ற கடந்தகால அடைவு மட்டம்
- எண்ணற்ற விருதுகளும் பரிசுகளும்

முழுமையான மதிப்பீட்டு புள்ளிவிபரப் பதிவானது (scorecard) இவ் வங்கியின் நன்மதிப்பு இடரை அளவிடுவதற்கும் கண்காணிப்பதற்கும் பயன்படுத்தப்படுவதுடன் வருடாந்த உள்ளக மூலதனத்தின் போதுமானதன்மை மதிப்பீட்டுச் செய்முறையில் (ICAAP) உள்ளடக்கப்பட்டுள்ளது.

இடர் முகாமைத்துவம்

உள்ளக மூலதனத்தின் போதுமானதன்மையினை மதிப்பீட்டுச் செய்முறை (ICAAP)

இவ் வங்கியின் தந்திரோபாய நிகழ்ச்சிநிரலை மேற்கொள்வதற்கு போதுமானளவு மூலதனம் பேணப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்தி, அதன் இடர்ப் பண்பின் அடிப்படையில் அதன் மூலதனத் தேவைப்பாட்டை மதிப்பிடுவதற்கு உள்ளக மூலதனத்தின் போதுமானதன்மையினை மதிப்பீட்டுச் செய்முறைக்கு (ICAAP) இவ் வங்கிக்கு இடமளிக்கின்றது. தூண் II (Pillar II) தேவைப்பாடுகளுக்கு இசைவாக,வங்கி ஏட்டிலுள்ள கடன், சந்தை, செயற்பாட்டு, திரவத்தன்மை, வட்டிவீத இடர், நன்மதிப்பு, இணக்கப்பாட்டு மற்றும் தந்திரோபாய இடர் பற்றிய முக்கியமான இடர்களை இவ் வங்கியின் உள்ளக மூலதனத்தின் போதுமானதன்மை மதிப்பீட்டுச் செய்முறையினை (ICAAP) கவனத்திற் கொள்கின்றது. வங்கியின் பொது முகாமையாளர் தலைமை வகிக்கும் உள்ளக மூலதனத்தின் போதுமானதன்மை மதிப்பீட்டுச் செய்முறை (ICAAP) வழிப்படுத்தல் குழுவானது இப் பொருண்மையான இடர்களை இனங்காண்பதற்கும் அதேபோன்று நெருக்கடிநிலை சோதனை நிலவரங்களைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பாகவுள்ளது.

நெருக்கடிநிலை சோதனையானது தூண் II (மேற்பார்வை மீளாய்வுச் செய்முறை) இன் முக்கியமான கூறொன்றாக உள்ளதுடன் மாறிகளின் வீச்சொன்றுக்கு இவ் வங்கியின் இடர்ப் பண்பின் உணர்திறனைக் காட்டுகின்றது. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நெருக்கடிநிலை சோதனைக் கொள்கைக்கு ஒத்திசைவாக ஒழுங்காகவும் பயனுறுதி வாய்ந்த விதத்திலும் நெருக்கடிநிலை சோதனை நடாத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையதாகும்.மூலதன ஒதுக்கீடு தொடர்பான வழிகாட்டலை வழங்குவதற்கு மேலதிகமாக, நெருக்கடிநிலை சோதனைப் பிரயோகமானதுஇடர் நாட்டத் தூண்டல்களையும் சகிப்பு எல்லைகளையும் உருவாக்குவதற்கும் எதிர்பாரா நிகழ்வுத் திட்டங்களை வகுப்பதற்கும் உதவுகின்றது.இவ் ஆண்டின் போது, சவால்மிக்க பேரினப் பொருளாதாரத் துறையினைக் கவனத்திற்கொண்டு எமது நெருக்கடிநிலை சோதனைச் செய்முறையினை நாம் மேலும் வலுப்படுத்தியதுடன்; அதற்கு அமைவாக, புதிய நெருக்கடிநிலை நிலவரங்களும் நெருக்கடிநிலை எல்லைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

மூலதன நிலமை

2018 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தின் (GoSL) (LKR') இலங்கை ரூபா 5.0 பில்லியன் கொண்ட உரிமைமுதல் உட்சேர்ப்பானது 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாத முடிவில் 25.0 பில்லியனாக பங்கு மூலதனத்தைக் கொண்டுவந்து, இலங்கை வங்கியின் ஐந்தொகையை மேலும் வலுப்படுத்தியது.அண்மைய ஆண்டுகளில் பிரதான பங்குதாரரினால் அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட உரிமைமுதல் உட்செலுத்துகைகளானவை பாசல் III(Basel III) இன் கீழ் உரிமம்பெற்ற வர்த்தகவங்கிகளுக்கான அதிகரித்த மூலதனத் தேவைப்பாடுகளுக்கு ஒத்திசைவாக இவ் வங்கியின் மூலதன அடித்தளத்தை வலுப்படுத்தியுள்ளது. 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் நடைமுறைப்படுத்தவிருந்த குறைந்தபட்ச மூலதன விகிதங்களை படிப்படியாக அதிகரிப்பதற்கு வழங்கப்பட்ட கால அட்டவணைகளுடன் சேர்த்து, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கானகுறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளை 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வங்கிச் சட்ட வழிகாட்டலானது அறிமுகப்படுத்தியது. கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டவாறு, இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச மூலதன தேவைப்பாட்டு இலக்குகளைப் பூர்த்திசெய்வதற்கான முன்னேற்றகரமான நிலையில் தற்போது வங்கி உள்ளது.

	இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச மூலதன தேவைப்பாடு (2019 ஜனவரி)	2018 டிசெம்பர் மாத இறுதியிலுள்ளவாறான இலங்கை வங்கியினது
அடுக்கு 1 CAR	10%	10.31%
மொத்த CAR	14%	14.58%

இயக்குவிக்கும்
மூலோபாயத்தினூடாக

வியாபாரத் துறைகள்

பொருளாதார மற்றும் கைத்தொழிற் கண்ணோட்டம்

தொழிற்பாட்டு மீளாய்வு

பொருளாதார மற்றும் கைத்தொழிற் கண்ணோட்டம்

பொருளாதார மீளாய்வு

உலகளாவிய பொருளாதாரம்

சர்வதேச நாணய நிதியமானது, உலகளாவிய வளர்ச்சி 3.5% (2017 இல் 3.8%) என மதிப்பிடுகிறது. ஆண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் செயற்பாடு மந்தமானதாவும், பிரதேசங்கள் மற்றும் நாடுகளுக்கிடையே குறைந்த அளவு ஒத்தகாலத் தன்மை கொண்டதாகவும் இருந்தது. வளர்ந்துவரும் சந்தைகளில் முன்னைய ஆண்டில் வளர்ச்சியானது சார்பளவில் மாற்றமடையாத நிலையில் இருந்தபோது, உலகளாவிய வர்த்தக பதற்றங்கள், கொள்கையில் நிச்சயமற்ற தன்மை மற்றும் இறுக்கமான நிதி நிலைமைகள் என்பன காரணமாக அநேக முன்னேற்றமடைந்த நாடுகளில் பொருளாதார நடவடிக்கை மிதமானதாகவே இருந்தது

- யூரோ பிரதேசம் - மெதுவான ஏற்றுமதி வளர்ச்சி
- ஐ. இரா. – காலநிலை சார்பான குழப்பங்களும் "பிரெக்சிற்"ஆல் எழுந்த நிச்சயமற்ற நிலையும்
- அ.ஐ. நா. – கணிசமான நிதித் தூண்டலால் மிதக்கவைக்கப்படும் உறுதியான வளர்ச்சி
- இந்தியா – உள்ளூர்க் கேள்வியால் வழிநடத்தப்படும் வளர்ச்சி
- சீனா – செயல் மிதமானது. ஆனால் வளர்ச்சி உறுதி
- எரிபொருள் ஏற்றுமதி நாடுகள் - உயர்ந்த எண்ணெய் விலைகள் மிதக்கும் வளர்ச்சிக்கு இட்டுச் சென்றன
- இலத்தீன் அமெரிக்கா – உறுதியற்ற மீட்டெழல்

அநேக வரத்தக பபங்காண்மையாளர்கள்மீது அமெரிக்கா உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு நாட்டிற்குமாக விதித்த சுங்கத் தீர்வைகள் காரணமாக பழிக்குப் பழி வாங்கும்விதமான நடவடிக்கைகள் வெளிப்பட்டு அதன்விளைவாக, வாணிப வளர்ச்சியில் ஒரு மந்த நிலை ஏற்பட்டது. சீனாவுடன் ஒரு பாரிய வர்த்தகப் பற்றாக்குறையைக் கொண்டிருந்த அமெரிக்கா, வரத்தக சமநிலையற்ற தன்மையைக் குறைக்கும்பொருட்டு, 250 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இறக்குமதிப் பொருட்கள்மீது, பேச்சுவார்த்தைக்குப் பின்னரான 267 பில்லியன் அமெரிக்க டொலரை சுங்க வரியாக விதித்தது. இதற்குப் பழிவாங்கும் விதத்தில் சீனாவும் 110 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அமெரிக்க இறக்குமதிப் பொருட்களுக்கு சுங்க வரியை விதித்தது. எண்ணெய் விலைகளில் அதிகரிப்பானது, எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளை எதிர்மறையாகப் பாதித்த அதேவேளை, உள்நாட்டுப் பூசல்களை, பூகோள அரசியல் பதற்றங்களை அல்லது பேரண்டப் பொருளா தார வீழ்ச்சியினை அனுபவித்த நாடுகள் தவிர்ந்த ஏனைய எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் உயர் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தது. உலகளாவிய நிதிசார் நிலைமை களும் இறுக்கமடைந்ததுடன், அமெரிக்காவிற்கும் ஏனைய முன்னேற்றமடைந்த பொருளா தாரங்களுக்குமிடையேயான வளர்ச்சி வேறுபாடும் அமெரிக்க டொலர் மதிப்பேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்தது. அமெரிக்காவின் அதிகரித்த வட்டி விகிதங்களும் வளர்ந்துவரும் சந்தைகளிலிருந்தான மூலதனப் பாய்வுகளை அவற்றின் மறுதலைக்கு இட்டுச் சென்றதுடன் இதன் விளைவாக வளர்ந்துவரும் சந்தைகளின் நாணயங்களும் மதிப்பிறக்கத்தைச் சந்தித்தன.

2017 உடன் ஒப்பிடுகையில், 2018 இலும் 2019 இலும் முதலீட்டு விரிவாக்க வேகமானது

வர்த்தக வளர்ச்சியில் மேலும் குறிப்பிடத்தக்க ஒரு வீழ்ச்சியுடன் இலகு நிலைக்கு நீட்டப்படுகிறது. இதற்கிடையில், மூலதனம் மற்றும் இடைநிலைப் பண்டங்கள் என்பன உலகளாவிய வர்தகத்தில் ஒரு முக்கிய பங்கினைக் காட்டுவதால், அதிகரிக்கும் வர்த்தக பதற்றங்களும் கொள்கை ஐயப்பாட்டு நிலையும் உலகளாவிய வர்த்தக வெற்றிவாய்ப்பு மற்றும் பலவீனமான வர்த்தக வளர்ச்சி என்பன மட்டில் கவலையளிப்பதாய் உள்ளன.

அதன் பிரகாரம், சர்வதேச நாணய நிதியமானது குறித்த ஆண்டுக்ககான வளர்ச்சி எதிர்வுகூறலை 2019 இல் 3.5% ஆகவும், 2020 இல் 3.6% ஆகவும் இருக்குமென மீளாய்வு செய்துள்ளது.

உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி



	GDP வளர்ச்சி 2018
முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள்	2.3%
வளர்ந்துவரும் சந்தையும் வளர்முக பொருளாதாரமும்	4.6%





World Economic Outlook (January 2019)-IMF

இலங்கைப் பொருளாதாரம்

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி



செயற்படும் சக்திகள்



நாணய மதிப்பில் சரிவு

2018 இல் இலங்கையானது, உலகளாவிய மாற்றம் ஏற்படுத்தும் உந்து சக்திகள், உயர்ந்து செல்லும் எண்ணெய் விலைகள், வலுவில்லாத முதலீட்டாளர்-நுகர்வோர் உணர்வுகள் மற்றும் ஆண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட அரசியல் உறுதியீனம் ஆகியவற்றினால் ஏற்பட்ட விரைந்து மோதும் வெள்ளத்தில் சிக்கிய உணர்வைப் பிரதிபலிக்கும் வகையில் சவாலுக்குரிய ஒரு பொருளாதார சூழலை எதிர்கொண்டது. அதன் பிரகாரம், குறித்த ஆண்டிற்கான மொத்த உண்ணாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது, விவசாயத் துறையின் எதிர் வீச்சான 4.8% ஆலும், பரந்த அடிப்படையிலான சேவைகள் துறையின் 4.7% ஆலும் தாங்கப்பட்ட நிலையில் 3.2% ஆக இருந்தது. எனினும் பிரதானமாக நிருமாணிப்பு உபதுறையின் சுருக்கத்தினால் கைத்தொழிற் துறையின் வளர்ச்சியானது 0.9% ஆகக் குறைவடைந்திருந்தது.

நிதியியல் சேவைதுறை - 2018

GDP க்கு பங்களிப்பு	துறைசார் வளர்ச்சி
7.3%	11.8%

நிதிக் கொள்கை

கடந்த 2 வருடங்களாக அரசாங்கமானது நிதி உறுதிப்பாட்டை ஏற்படுத்தும் நோக்குடன் ஒரு தொகுதி வரிச் சீர்திருத்தங்களை செயற்படுத்தியது. அதன் பிரகாரம், நேரடி வரியை விரிவுபடுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்ட பரந்த அடிப்படையிலான சீர்திருத்தங்களை அறிமுகம் செய்யும் புதியதொரு உண்ணாட்டு இறைவரிச் சட்டம் 2018 ஏப்ரல் 1 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வந்தது. சர்வதேச எண்ணெய் விலை அதிகரிப்பின் விளைவாக அரசுக்குச் சொந்தமான சக்திசார் துணை நிறுவனங்களின் நிதிச் செயல் நிறைவேற்றம் பலவீன மடையவே, உலகளாவிய போக்கிற்கொப்ப, 2018 மே மாதத்தில் எரிபொருளுக்கான மூலோபாய விலைச் சூத்திரமொன்றைச் செயற்படுத்த அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது.

அரசாங்கத்தின் நிதி உறுதிப்பாட்டு முயற்சிகளின் விளைவு ஒரு கலவையாக இருந்தது. எதிர்பார்க்கப்பட்டதை விடக் குறைவான வருமானத் திரட்டலானது, இலக்கு வைக்கப்பட்ட 2018 பாதீட்டின் பற்றாக்குறையை எட்டும் முயற்சிக்குச் சவால் விடுப்பதாக அமையலாம். எனினும், வட்டிமீதான செலவினத்தை உட்சேர்க்காத முதனிலை மீதியானது 2018 இல் இரண்டாவது அடுத்துவரும் ஆண்டுக்கான ஒரு வருமான மிகுதியைப் பதிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1955 க்குப் பின் இது மூன்றாம் தடவை.

மொத்த உண்ணாட்டு உற்பத்தியின் ஆக்கம் - 2018



பொருளாதார மற்றும் கைத்தொழிற்துறை சுருக்கப் பார்வை

மொத்த வருவாயும் அரசாங்க செலவினமும்



வரி வருவாய் பாகுபாடு



பணவீக்கம் - 2018



நாணயக் கொள்கை

மத்திய வங்கியானது தனது நாணயக் கொள்கையை ஒரு சவாலுக்குரிய உலகளாவிய மற்றும் உள்ளூர் சூழலில் முன்னெடுத்தது. முகாமை செய்யக்கூடிய பணவீக்க மட்டங்கள் 2015 இறுதியிலும் 2018 ஏப்ரல் தொடக்கத்திலும் மத்திய வங்கியால் எடுக்கப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கையின் முடிவுக்கு அறிகுறி காட்டியது. வட்டி விகிதங்களின் மேல் எல்லைகள் குறைக்கப்பட்டன. உள்ளூர் பணச் சந்தையில் பேணப்பட்ட ரூபாய்த் திரவத்தன்மையின் உயர் பற்றாக் குறைகள் வர்த்தக வங்கிகளில் அனைத்து ரூபாய் வைப்புக்கள்மீதும் பிரயோகிக் கத்தக்க சட்டப்படி தேவைப்படுகின்ற ஒதுக்க வீதத்தை 2018 நவம்பரில் 150 bps முதல் 6% வரை குறைக்குமாறும், அதேவேளை வட்டி வீதங்களின் தாக்கத்தை மட்டுப்படுத்த, காப்பீட்டுப் பத்திர வட்டி வீதங்களை 75 bps முதல் 8% வரை உயர்த்துமாறும் நிர்ப்பந்தித்தன. எச்சரிக்கையான இந்த அணுகு முறையானது, பணவீக்கத்தை நடு ஒற்றை இலக்க மட்டங்களுக்கு நிலைப்படுத்தி, தன் இயல்திறனை நடுப் பருவத்தில் எட்டுவதைப் பொருளாதாரத்திற்கு இயலுமானதாக்கும் வகையில் பணவீக்க எதிர் பார்ப்புக்களை நிலையாய் வைத்திருக்கும் பரந்த மனத்துடன் பின்பற்றப்பட்டது.

செலாவணி விகிதம்

ரூபாயின் பெறுமதி குறிப்பாக ஆண்டின் பிற் பகுதியில்16.4% ஆல் குறைந்தது (2017 – 2.87%). 31.12.2018 இல் உள்ளவாறு செலாவணி விகிதத் தின்படி அமெரிக்க டொலருக் கெதிரான ரூபாயின் பெறுமதி 182.75 ஆக இருந்தது. குறித்த ஆண்டில் டொலரின் பெறுமதியை உறுதிப்படுத்துமுகமாக, அநேக விகித உயர்வுகளுடன் நாணயக் கொள்கை தொடர்ந்து இறுக்கமடைநதமையானது, இலங்கை யின் நடைமுறைக் கணக்கின்மீது அழுத்தத்தை அதிகரித்தவாறு, மூலதன வெளிப் பாய்வுகளில் ஓர் எழுச்சியை ஏற்படுத்தியது. ரூபாயின் அவலங்களோடு ஒரு விரிவாக்கும் பற்றாக்குறையும் சேர்ந்து கொண்டது. ஒழுங்கீனமான சரிக்கட்டல்களைத் தடுப்பதற்காவென்றே மத்திய வங்கியானது, அந்நிய செலாவணிச் சந்தையில் ரூபாயின் செலாவணி விகிதத்தின் மட்டத்தையும் திசையையும் தீர்மானிக்க கேள்வி மற்றும் நிரம்பல் சக்திகளை அனுமதித்தது.

வெளித் துறை

எதிர்பார்க்கப்பட்டதிலும் கூடிய கதியில் ஏற்றுமதி வளர்ச்சி இருந்ததால் வர்த்தக பற்றாக்குறையில் கணிசமான விரிவு ஏற்பட்டது. 2018 செப்டம்பரில் GDP யின் 11.9% ஐ எட்டியது. (2017 இல் 11%) 4.7% வீத ஏற்றுமதி வளர்ச்சிக்கு (ஜனவரி – நவம்பர் 2018) ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ வரிச் சலுகை மீளளிப்பு, நுகர்பண்டங்களின் விலை யுயர்வு, உகந்த வெளி வர்த்தகக் கொள்கைகள் மற்றும் மத்திய வங்கியால் பின்பற்றப்பட்ட நெகிழ் வுத்தன்மை கொண்ட செலாவணி விகிதக் கொள்கை என்பன உதவின. அதே காலப் பகு தியில் 6% ஆல் அதிகரித்த இறக்குமதிச் செல வினத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட எரி பொருளின் அளவிலும் சர்வதேச எண்ணெய் விலையிலும் அத்துடன், வாகன இறக்குமதிகள், துணி இறக்குமதிகள் என்பவற்றிலும் ஏற்பட்ட உயர்வு காரணமாயிருந்தது.

உலகளாவிய நிதி நிலைமைகள் மற்றும் அமெரிக்க டொலர் பெறுமதியின் உறுதிப் படுத்துகை என்பனவற்றால் விளைந்த அந்நிய செலாவணி வெளிப் பாய்வுகள் காரணமாகப் பாரிய அழுத்தத்தை அனுபவித்த கொடுப்பனவு மீதிகள், உல்லாசப் பயணத்துறை ஈட்டல்களாலும், கடன் தொடர்பான உட்பாய்வுகளினாலும் ஓரளவு தாங்கிக்கொள்ளப்பட்டன.

இலங்கையின் வெளிக் கடன் நிலை உயர் மட்டத்தில் உள்ளது. அத்துடன் உண்மையான கடன் தீர்த்து வைத்தலின் சவாலானது அநேக சர்வதேச நாணய முறிகளுடனும், ஒன்றாய்ச் சேர்ந்து வரும் கூட்டுக் கடன் தீர்த்துவைத்தல் களைக் கொண்டும் 2019 இல் ஆரம்பிக்கவுள்ளது.

மார்ச் 2018 இல் நடுத்தர வெளிக் கடன் தீர்த்து வைத்தலுக்கு உதவுமுகமாக, செயற்படு பொறுப்பு முகாமைத்துவச் சட்டம் இயற் றப்பட்டது. இச் சட்டத்தின்கீழ், பாராளுமன்றத் தால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்தக் கடன்படு எல்லைக்கும் மேலாக நிதிகளைத் திரட்டப்

பாராளுமன்றம் அனுமதிக்கப்படுகிறது. நிதியிடல் இடர்களைக் குறைக்கும்பொருட்டு, திரட்டப்

பட்ட இந் நிதிகள் எதிர்காலக் கடன் தீர்த் தல்களுக்கென ஒதுக்கிவைக்கப்பட முடியும்.

ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகச் சமநிலை



கண்ணோட்டம்

வருமானப் பிறப்பாக்கத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், செலவினத்தை ஆய்வறிவுக்கு இணக்குவித்தல் மற்றும் கடன் முகாமைத்துவத்தைப் பெரும்போக்குப்படுத்தல் போன்ற நிதித் திரட்டுகை நோக்கியதான அரசாங்கத்தின் தொடர்ச்சியான அர்ப்பணப்பானது பல காரணங் களுக்காக முக்கியத்துவம் பெறுகிறது. இடைக்காலத்தில் நிதித் துறையின் ஒட்டுமொத்த மேம் பாட்டிற்கு உதவுவதுடன், நெகிழ்வுத்தன்மை கொண்ட பணவீக்கக் குறிவைத்தலைப் பின்பற்று வதைநோக்கிய மத்திய வங்கியின் நகர்வின் வெற்றிக்கும் இது உதவியாயிருக்கும். விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறை 2018 இல் வெளி நடைமுறைக் கணக்கின் செயல் நிறைவேற்றத்தைப் பலவீனப்படுத்தககூடும். எனினும், செலாவணி விகித சரிக்கட்டல்களால் குறைநிரப்பப்பட்ட இறக்குமதிச் செலவினத்தின் விரிவாக்கத்தைச் சுருக்க முன்னெடுக்கப்பட்ட கொள்கை நடவடிக்கை கள் வெளி நடைமுறைக் கணக்குச் செயல் நிறைவேற்றத்தை 2019 இல் மேம்படுத்தும் என எதிர்பார்க்கப் படுகின்றது. துடிப்பான தனியார் துறைப் பங்களிப்புடன் நிலையான மற்றும் ஒருங் கிணைக்கப்பட்ட விதத்தில் அரசாங்கத்தால் ஏலவே ஒழுங்குசெய்யப்பட்ட வெற்றிகரமான வளர்ச்சி மூலோபாய செயற்படுத்துகையானது, இடைக்கால வளர்ச்சியின் முன்னேற்றத்திற்குப் படிப்படியாக உதவி செய்யும். வலுவற்ற பொருளாதார செயல்நிறைவேற்றத்தின் மத்தியிலான நாணய, நிதி மற்றும் வெளிக்கள கொள்கை வெளிகள் இறுக்கமடைந்து செல்லும் ஒரு பின்புலத்தில், விவேகமான, நிலையான மற்றும் பரந்த செயல்விளைவுடைய, பொருளாதாரத்தில் அதிகரித்த உற்பத்தித்திறனுக்கு ஆதரவளிக்கின்ற தனியார் துறைக்கு முன்னேற உதவி வழங்குவது முக்கியமானதாகும்.

பொருளாதார மற்றும் கைத்தொழில் கண்ணோட்டம்

கைத்தொழில் கண்ணோட்டம்

வங்கித் தொழிற் துறையானது ஒரு கலப்பு அதிர்ஷ்ட ஆண்டை 2018 இல் கண்டது. ஆண்டின் கூடிய காலப் பகுதியில் கடன் வளர்ச்சி ஆரோக்கியமானதாக இருந்த துடன், வட்டி வீத நிலைமை வட்டி விளிம்பின் ஒரு விரிவுபடுத் தலை அனுமதித்தது. மறுபுறத்தே, சேதாரக் கட்டணங்களில் ஒரு திடீர் அதிகரிப்பை வழங் கியது. இதனால் பேரண்டப் பொருளாதார நிலைமைகளும் இலங்கை நிதியறிக்கையிடல் நியமங்கள் 9 (SLFRS-9) இன் செயற்படுத்து கையும் துறையின் இலாபமீட்டலைப் பாதித்தன.

வளர்ச்சி: கடன்களில் 20% விரிவாக்கம் மற்றும் முற்பணங்கள் என்ப வற்றால் வழிநடத்தப்பட்ட நிலையில், 2018 இல் துறையின் மொத்த சொத்துக்கள் 15% வளர்ச்சியுற்றதுடன், ஆண்டின் முதல் அரையாண்டுப் பகுதியில் கடனுக்கு சார்பளவில் அதிக கேள்வியிருந்தது. எனினும், முக்கிய கட்டுப்பாடுகள் உள்ளிட்ட அதிவிவேக நடவடிக்கைகள், நிரு மாணத் துறையில் காணப்பட்ட ஒரு மந்தநிலை மற்றும் ஆண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட அரசியல் உறுதியீனம் என்பன மிதமான கடன் வளர்ச்சிக்கு இட்டுச் சென்றன. உற்பத்திகளைப் பொறுத்தவரையில், வளர்ச்சியானது மிகைப்பற்று வசதிகளின் உறுதியான விரிவுபடுத்தலி னாலும் அதுபோல் பருவகாலக் கடன்களாலும் முன்னோக்கிச் செலுத்தப்பட்டது. அடகு மற்றும் குத்தகைப் பிரிவும் சற்றுக் குறைந்த அளவில் இதற்கு உதவின. உரொக்கப்பணம் மற்றும் உரொக்கத்திற்கு இணையானவற்றிலான முதலீடுகள் முறையே 5% மற்றும் 4% ஆல் வளர்ச்சி கண்டதால், துறையின் சொத்தாக்கம் நன்மதிப்புச் சொத்துக்கள் பக்கமே சாய்ந்திருந்தது. 2018 டிசம்பர் முடிவில் மொத்த சொத்துக்களின் 64% ஆக இருந்தமைக்கு இவை காரணமாயின (ஒப்பிடுக: முன்னைய ஆண்டில் இது 64% ஆகஇருந்தது).

துறை செயல் நிறைவேற்றம்: துறையின் வட்டி வருவாய் 14% ஆல் அதிகரித்தது. கடன் வளர்ச்சியும் தற்போதைய உயர் வட்டி நிலைமை களும் இதற்கு உதவிய அதேவேளை தேறிய வட்டி வருவாய் (NII) விரி வாக்கம் 16% ஆக இருந்தது. இது தேறிய வட்டி வேறுபாடுகளின் (NIM) அகலப் படுத்தலைப் பிரதிபலித்தது. குறித்த ஆண்டின்போது குறிப்பாகப் பணியாட்டொகுதியின் செலவினங்களால் தொழிற்பாட்டுச் செலவுகள் 24% ஆல் அதிகரித்தன. அதேவேளை, துறையின் வருவாய்க்கு – செலவு விகிதம் 48.5% ஆகப் பதிவாகியது. முன்னைய ஆண்டில் இது 45.2% ஆக இருந்தது. துறையின் இலாபமீட்டு தன்மையும் வங்கியின் பங்கு முதலீட்டுத் திரட்டின் தரத்தின் விரிவகல்வான நலிவடைவு மற்றும் உணவு போன்ற அத்தியாவசிய பண்ட வழங்கலில் ஓர் அதிகரிப்பைத் தேவைப்படுத்திய SLFRS-9 எனப்படும் இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமங்களின் அமுலாக்கம் ஆகிய காரணங்களால் 104% எனப் பதிவாகிய சேதாரக் கட்டணங்களின் திடீர் அதிகரிப்பினால் பாதிப்படைந்தது. இதன் விளைவாக, குறித்த ஆண்டின்போது துறையின் வரிக்கு முந்திய இலாபம் சார்பளவில் ரூ. 194.7 பில்லியன் என மாற்றம் அடையாதிருந்தது. துறையின் கூட்டாண்மை வரி 23% ஆல் அதிகரித் ததால, குறித்த ஆண்டின்போது வரிக்குப் பிந்திய இலாபம் 9% ஆல் வீழ்ச்சி கண்டது. இதன் விளைவாக, 2018 டிசம்பர் முடிவில் உரிமைப் பங்குகளின் மீளுகை மற்றும் சொத்துக்களின் மீளுகை முறையே (17.6% இல் இருந்து) 13.2% ஆகவும், (2.0% இல் இருந்து) 1.8% ஆகவும் வீழ்ச்சி கண்டது.

வங்கித் தொழிற் துறை – வளர்ச்சி



பங்குகள், முதலீடுகள் திரட்டின் தரம்



சொத்துத் தரம்: குறித்த ஆண்டில் NPA க்கள் பிரிவு 64% அதிகரிப்பைக் காட்டியபோது, அதேவேளை தேறிய NPA விகிதம் 2017 இன் 2.5% இல் இருந்து 3.4% ஆக உயர்ந்து நின்றபோது, பங்குகள் முதலீடுகள் திரட்டின் தரத்தில் பரந்த அடிப்படையிலான சிதைவு இருந்தது. பெரும்பாலான செயற்பாட்டாளர்கள் கடன் கொடுத்தல் மற்றும் திரட்டலை வலுப்படுத்தல் மற்றும் அறவீட்டு முயற்சிகள் என்பனமட்டில் எச்சரிக்கையான ஓர் அணுகுமுறையைப் பின்பற்றுவதன்மூலம் பங்குகள், முதலீடுகள் திரட்டின் தரத்தைப் பேண விழைந்தனர். முன்னேற்பாட்டுக் கவிவளவு 2017 இன் 69.9% இல் இருந்து 57.4% ஆகக் குறைந்தது.

மூலதனம் மற்றும் நிதியிடல்: சார்பளவில் உயர்ந்த வட்டிவீதச் சூழ்நிலையால் ஆதரவளிக்கப்பட்ட நிலையில், குறித்த ஆண்டில் வாடிக்கையாளர் வைப்புக்கள் 15% வளர்ச்சி கண்டன. வைப்புக்களே நிதியிடலுக்கான பிரதான மூலமாக இருந்தன. கொடுகடன்கள் துறையின் மொத்த சொத்துக்களின் 64% ஐ வகித்தன. BASEL III ஒழுங்கு விதிகளுக்கமைவாக வங்கியானது மூலதனத்திற்கு வலுவூட்டமுனைந்தது. BASEL III அமைந்தொழுகற் கடனீட்டுப் பத்திரங்கள் வழங்கீட்டு முறையைப் பின்பற்றியதால், படுகடன்கள் 10% ஆல் அதிகரித்தன. 2018 டிசம்பரில் பொதுவான பங்குரிமை விகிதமும் மொத்த மூலதன விகிமும் முறையே 12.0 %, 15.1% ஆக இருந்தன. எனினும், நிலவுகின்ற சந்தை நிலைகள் மற்றும் உயர்ந் வரித் தேவைப்பாடுகள் காரணமாக, BASEL III தேவைப்பாடுகளின்கீழ் மூலதனத் தேவைகளை மேம்படுத்தும்பொருட்டு, நிதி திரட்டுவதில் வங்கிகள் சவாலுக்கு முகங் கொடுக்கநேரிடலாம்.

தொழிற்பாட்டு மீளாய்வு

பரந்த வகையில் நோக்கும்போது வங்கியின் தொழிற்பாடுகள் கீழே காட்டப்பட்டவாறு மூன்று வியாபார நிலைகளில் வகைப்படுத்தப்படுகின்றன. இவ்வறிக்கைக்கு அடுத்துவரும் பிரிவானது, குறித்த ஆண்டில் ஒவ்வொரு வியாபாரக் கொத்தணியினதும் செயல் நிறைவேற்றத்திற்கு உருக் கொடுத்த மூலோபாயத்தினதும் காரணிகளினதும் உயர் மட்டமேலோட்டத்தை வழங்குகிறது.

வியாபாரக் கொத்தணிகள்



சில்லறை வங்கித்தொழில்

செயல்நிறைவேற்ற முனைப்பம்சங்கள் 2018

ரூ. மில்லியன்	2018	2017	வருடாந்த மாற்றம்
தேறிய வட்டி வருவாய்	37,158	28,650	30%
தொழிற்பாட்டு வருவாய்	44,472	36,075	23%
சேதாரக் கட்டணங்கள்	6,134	1,831	235%
தொழிற்பாட்டு இலாபம்	16,486	15,415	7%
மொத்த சொத்துக்கள்	690,007	632,146	9%
மொத்தப் பொறுப்புக்கள்	653,062	596,145	10%

தொழிற்பாட்டு வருவாய்க்குப் பங்களிப்பு



சொத்துகளுக்குப் பங்களிப்பு



மூலதனப் பெறுமதி



சில்லறைக் கொத்தணிமூலமாக வங்கியானது தனி நபர்கள், புதுத் தொழில் முயற்சிகள் மற்றும் சிறிய, நடுத்தரத் தொழில் முயற்சியாளர்கள் உள்ளிட்ட பல்வகைமை கொண்ட வாடிக்கையாளர் தளத்திற்கு முதலீடு, கடன் வழங்கல் மற்றும் கொடுக்கல் வாங்கல் போன்ற பல்வகைத் தீர்வுகளை வழங்குகிறது. கொத்தணியின் போட்டித்தன்மை கொண்ட அனுகூலமானது அதன் தாங்கு தகவுடைய பல்வகை உற்பத்திகள், இணையற்ற பூகோள ஆற்றல் எல்லைகள் மற்றும் அதியுயர் வாடிக்கையாளர் சேவை என்பவற்றால் வலுவூட்டப் படுகிறது.

தொழிற்படு சூழல்

பின்வரும் காரணங்களால் தொழிற்படு சூழலானது கொத்தணிக்குப் பல சவால்களை முன்வைத்தது:

- பேரண்டப் பொருளாதார வளர்ச்சியை மிதப்படுத்தல் மற்றும் முதலீட்டாளரின் எச்சரிக்கை உணர்வுகள்
- ஆண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட அரசியல் உறுதியீனம்.
- நிருமாணத்துறையில் மந்த நிலை
- அரசினால் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள்
- நுண் நிதியிடற் துறையில் கடன்படு நிலை அதிகரிப்பு
- பாதகமான கால நிலை

தொழிற்படு சூழல்பற்றிய மேலதிக தகவலுக்கு 120 முதல் 125 வரையான பக்கங்களைப் பார்வையிடுக.

மூலோபாயமும் செயல்நிறைவேற்றமும்

தொழிற்படு தளத்தில் சவால்கள் இருந்தபோதிலும் தனது வளர்ச்சி வேகத்தையும் இலாபமீட்டு தன்மையையும் தக்கவைத்துக்கொண்டு, சில்லறைக் கொத்தணியானது ஓர் உறுதியான செயல்நிறைவேற்றத்தின் ஆண்டைத் தந்தது. தேறிய வட்டி வருவாய் 30% ஆல் அதிகரித்தது. இதற்கு, அபிவிருத்திக் கடன்களில் (ஆரம்பத்தில் திட்டக் கடன்கள்மூலமாக) உறுதியான வளர்ச்சி, மிகைப்பற்று மற்றும் அடகு என்பவற்றால் நிலை நிறுத்தப்பட்ட 13% ஆன ஒரு கடன் விரிவாக்கம் துணை நின்றது. புரிந் துணர்வுத்திறன்கொண்ட கடன் தரமானது குறித்த ஆண்டில் அழுத்தத்திற் குட்பட்டதால், சேதாரக் கட்டணங்கள் கிட்டத்தட்ட மும்மடங்கு அதிகரித்து, ரூ. 6.1 பில்லியன் ஆனது. இதன் விளைவாகக் குறித்த ஆண்டில் கொத்த ணியின் இலாப வளர்ச்சியானது 7.0% க்கு முடக்கப்பட்டு, ரூ. 16.5 பில்லியன் ஆனது.

சில்லறைப் பிரிவுச் செயல்நிவேற்றம்



உற்பத்தி வரைபடம்

கடன் உற்பத்திகள்	முதலீட்டு உற்பத்திகள்	கொடுக்கல் வாங்கல் உற்பத்திகள்
பிரத்தியேக கடன்கள்	சேவை ஓய்வுத் திட்டங்கள்	நடைமுறைக் கணக்குகள்
வீடமைப்புக் கடன்கள்	கால வைப்புக்கள்	கடன் அட்டைகள்
வர்த்தகக் கடன்கள்	மூத்த பிரசைகள் சேமிப்புக்கள்	பற்று அட்டைகள்
அபிவிருத்திக் கடன்கள்	பராயமடையாதோர் சேமிப்புக்கள்	ATM அட்டைகள்
நுண் கடன்	இளையோர்சேமிப்புக்கள்	இணைய வங்கித்தொழில்
அடகுவைத்தல்	மகளிர் சேமிப்புக்கள்	நடமாடும் வங்கித்தொழில்
குத்தகை வசதிகள்		பயண அட்டைகள்

கடன்கள் மற்றும் முற்பணங்கள்

கொத்தணியின் கடன் வழங்கு பிரிவானது பிரதானமாக பிரத்தியேக கடன்கள், வீடமைப்புக் கடன்கள், வர்த்தக/அபிவிருத்திக் கடன் வழங்கல், குத்தகை, மிகைப்பற்றுக்கள் மற்றும் அடகுத் தொழில் என்ப வற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சிநதொமு (SME) துறைக்கு ஆதரவளிப்பது குறித்த ஆண்டில் பிரதான குவிமையமாக இருந்தது. அத்துடன், இலங்கை வங்கியானது, இலங்கைத் தொழில் முயற்சிக் கடன் திட்டத்தினூடாகப் புதியதொரு வாடிக்கையாளர் தளத்தினைப் பெற விழைந்தது. இத் திட்டத் தினூடாக வங்கியானது சுமார் 13.6 பில்லியன் ரூபாவை வழங்கியது. இதற்காக மொத்த வசதிகளின் 45% க்கும் அதிகமான தொகையைக் கொண்டதாக, வங்கித் துறையால் ''என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா'' ஊடாக இது ஆக்கப்பட்டுள்ளது. குறித்த ஆண்டில் வங்கியின் அடகுப் பிரிவும் தங்கத்தின் சாதகமான விலைகளால்12.5% வளர்ச்சிகண்டு, உறுதியாக விரிவு கண்டது. வீடமைப்பு மற்றும் பிரத்தியேக கடன்களும் முறையே 17% ஆலும் 18.4% ஆலும் இந்த ஆண்டின்போது வளர்ச்சி கண்டன.

கடன் பிரிவின் அமைவாக்கம்



பங்குகள் முதலீடுகள் திரட்டின் தரம்

மிதமான பேரண்டப் பொருளாதார நிலைமைகள், நிருமாணத்துறையில் நிலவிய திரவத்தன்மை நசுக்கல்கள் மற்றும் கிழக்கு மற்றும் வட கிழக்கு மாகாணங்களில் நிலவிய பாதகமான கால நிலைகள் என்பவற்றால் குறித்த ஆண்டில் முழுத் துறையுமே செயலற்ற கடன் (NPL) களின் உட்பாய்வுக்கு முகங் கொடுத்ததால், பங்குகள் முதலீடு கள் திரட்டின் தரத்தைப் பேணுவது ஒரு பிரதான சவாலாக இருந்தது. கண்காணித்தலுக்கும் பொறி முறைகளைத் திரட்டுவதற்கும் சமாந்தரமாக முக்கியத்துவம் கொடுத்த அதேவேளை புதிய NPL களின் உட்பாய்வுகளைத் தடுப்பதற்கு கொத்தணியானது முன்னெச்சரிக்கையாக சில நடவடிக்கைகளை எடுத்தது. இந்த நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன:

- அறவீடுகளின்பொருட்டு, சுமுகமான ஒரு வேலைப் பாய்வை அறிமுகம் செய்தது. அதன் மூலம் வினைத் திறனையும் திட்பநுட்பத்தையும் மேம்படுத்தியது
- செயல் நிறைவேற்ற முகாமைத்துவ சட்டகத்திற்கு திரட்டல் வினைத்திறனுக்கான பிரதான செயல் நிறைவேற்றல் குறிகாட்டி (KPI) களை அறிமுகம் செய்தது
- செயலற்ற சொத்துக்கள் குறித்தான (NPA) தானியங்கி எச்சரிக்கை முறைமைகள் தாபிக்கப்பட்டன
- அறவீடுகள் தொடர்பில் புதிதாய் ஆட்திரட்டல் செய்யப்பட்டோருக்கு ஆற்றலைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டங்கள்

இந் நடவடிக்கைகளின் விளைவாக, பங்குகள் முதலீடுகள் திரட்டின் தரத்தைப் பலவீனப்படுத்துவதைக் கொத்தணியால் ஓரளவு தடுக்கமுடிந்தது. கொத்தணியின் முன்னைய ஆண்டின் செயலுறாச் சொத்து (NPA) விகிதத்துடன் (3.2%) ஒப்பிடுகையில், குறித்த ஆண்டில் அது 3.8% ஆக சிறந்து காணப்படுகிறது.

வைப்பு அமைவாக்கம்



வைப்புக்கள்

மொத்த வைப்புத் தளத்தின் 68% ஐப் பங்களிப்புச் செய்கின்ற சில்லறைக் கொத்தணியே வங்கிக்கான வைப்பினைப் பிரதானமாக அணிதிரட்டுகிறது. எமது வைப்புக் கருத்துரையானது எமது வாடிக்கையாளர் தொடர்பு மையங்களின் ஈடிணையற்ற வலையமைப்பு, நம்பிக்கை, தர முத்திரையுடன் தொடர்புடைய உறுதித்தன்மை மற்றும் மேம்படுத்தப்பட்ட இலக்கமுறைக் கருமபீடங்கள்மூலமாக வழங்கப்படும் வசதி என்பவற்றால் வலுவூட்டப்படுகிறது. குறித்த ஆண்டின்போது வைப்புத் தளமானது 14% ஆல் வளர்ச்சியுற்று, 1.2 ட்ரில்லியன் ரூபாய் ஆனது. இதற்கு சார்பளவில் உயர்வாய் இருந்த வட்டி விகித சூழல் துணை நின்றது. குறித்த ஆண்டின்போதான வைப்பின் விரிவுக்கு அநேக புத்தாக்கம் நிறைந்த வைப்பு அணிதிரட்டல் பிரசாரங்கள், வங்கியின் நடமாடு சேவை முன்னெடுப்பு மற்றும் தீவு முழுவதிலும் விரிவடைந்துசெல்லும் CRM களின் வலையமைப்பு என்பன ஆதரவளித்தன. எனினும், உயர் வட்டி வீத சூழல் காரணமாக நடைமுறை கணக்கு சேமிப்புக் கணக்கு (CASA) விகிதம் 44% ஆக நலிவடைந்தது.

சில்லறை வங்கித்தொழில்

ஒரு சேமிப்புக் கலாசாரத்தைப் பேணிவளர்த்தல்

ஒரு சேமிப்புக் கலாசாரத்தை அடுத்த தலைமுறையினர் மத்தியில் பேணி வளர்க்கும் அதே வேளை வங்கியானது தனது பிரசன்னத்தை மேம்படுத்தும்வகையில், நாடு தழுவிய பாடசாலை சேமிப்பு அலகுகளின் விரிவான வலையமைப்பை செயற்படுத்துகிறது. 2018 டிசம்பர் முடிவில் இலங்கை வங்கியானது 1,373 சன்சத அலகுகளையும் 628 நாடு முழுவதிலுமான நடமாடும் பாடசாலை அலகுகளையும் நடத்தியது. இதன் மாகாண அடிப்படையிலான விபரங்கள் இதனருகே தரப்படுகின்றன.

எமது CASA விகிதத்தை மேலும் வலுப்படுத்துமபொருட்டு, குறித்த ஆண்டின்போது புதுவிதமான பல வைப்புகள் தொடர்பில் பல பிரசாரசாரங்களை நடாத்தியது.

- முதலாம் தரத்தில் / முன்பள்ளியில் புகுகின்றவர்களுக்கான கணக்கு திறக்கும் பிரசாரம்
- ''லிட்டில் பிக்காசோ''போட்டிக்கமைவாக பராயமடையாதோர் கணக்கு திறக்கும் பிரசாரம்
- உலக மகளிர் தினத்தின்கீழ் கணக்கு திறக்கும் பிரசாரம்
- சிங்கள மற்றும் இந்து புத்தாண்டுக்கமைவாக சிறுவருக்கான கணக்கு திறக்கும் பிரசாரம்
- பிறந்த நாள் தொடர்பான "உப தின சமட்ட கினுமக்'' கணக்கு திறக்கும் பிரசாரம்

மாகாண பாடசாலை "சன்சத" பகிர்வு



கொடுக்கல் வாங்கல் வங்கி உற்பத்திகள்

வங்கியின் இலக்கமுறைப்படுத்தல் மூலோபாயத் திற்கமைவாக, பற்று மற்றும் கடன் அட்டையின் பயன்பாட்டை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்துள் ளோம். குறித்த ஆண்டின்போது எம்மால் மேலும் வழங்கப்பட்ட 852,401 பற்று அட்டைகளோடு 2018 டிசம்பர் முடிவில் மொத்தமாக வழங்கப்பட்ட இவ் அட்டைகளின் எண்ணிக்கை 4.5 மில்லியன் ஆனது. மேலும் குறித்த ஆண்டின்போது வழங்கப் பட்ட கடன் மற்றும் பற்று அட்டைகளின் எண் ணிக்கை முறையே 9% ஆலும் 15% ஆலும் வளர்ச்சி கண்டிருந்தது. குறித்த ஆண்டில் பற்று அட்டைகள் மூலமான கொடுக்கல் வாங்கல் பெறுமதியின் வளர்ச்சி 3% ஆல் அதிகரித்தது. இதன் பணப் பெறுமதி ரூ.65 பில்லியன் ஆகும். அத்துடன் கடனட்டைமூலக் கொடுக்கல் வாங்கல் பெறுதியின் வளர்ச்சி 5% ஆல் அதிகரித்தது. அதன் பணப் பெறுமதி 10.4 பில்லியன் ஆகும்.

வங்கியின் 65.5% ஆன செயற்பாடுகளில் இலக்கமுறைப்படுத்தல் பின்பற்றப்படுகிறது. 2020 ஆம் ஆண்டளவில் இது 90% அதிகரிக்கும் என நாம் நம்புகிறோம். மொத்தக் கொடுக்கல் வாங்கல்களில் 4.6% ஆனவை பணமற்ற கொடுக் கல் வாங்கல்கள் ஆகும். இலக்கமுறைச் செயற் பாட்டின்மூலம் இந் நூற்று வீதத்தை உயர்த்துவதே எமது குறிக்கோளாகும்.

பற்று அட்டை கொடுக்கல் வாங்கல் வளர்ச்சி



கடன் அட்டை கொடுக்கல் வாங்கல் வளர்ச்சி



கொடுகடன் அபிவிருத்தி

சிறிய நடுத்தரப் பிரிவானது (SME) நீண்ட கால மாக இலங்கைப் பொருளாதாரத்தின் இயந்திரம் என்றும் சமூக பொருளாதார வலுவூட்டலின் வாகனம் என்றும் இனங் காணப்பட்டுள்ளது. SME துறையின் பிரதான கடன் கொடுநராக இருந்துவரும் இலங்கை வங்கியானது, நாட்டின் பொருளாதாரத்தின் உயிர் நாடிபோன்ற கைத் தொழிற் துறைகளுக்கு வரிசையான பல திட்டங்களை வழங்குவதனூடாக அவற்றிற்கான நிதியிடலை வாய்ப்பமைவாக்குகிறது.

2018 டிசம்பர் முடிவில் உள்ளவாறு, வங்கியின் (நுண் நிதியிடல் கொடுகடன் உள்ளிட்ட) SME கடன் பிரிவின் 550,000 க்கும் மேற்பட்ட கடன் சேவைகளில் நிலுவையாய் உள்ள கடன்கள் பெறுமதி ரூ. 64.4 பில்லியன் ஆகும். ஓர் அரச வங்கி என்ற வகையில், அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் நாமும் ஒருநிலைப்படுவதுடன், சலுகையுடன்கூடிய நிதியிடற் திட்டங்களூடாக, ஆர்வங் கொண்ட தொழில் முயற்சியாண்மையாளருக்கு வலுவூட்டுவதைக் குறிக்கோளாகக் கொண்ட "என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா" கடன் திட்டத்தின் ஒரு துடிப்பான பங்கேற்பாளராகவும் விளங்குகிறோம். 2018 இல் "என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா" திட்டத்தின்கீழ் இலங்கை வங்கியானது 2018 டிசம்பர் முடிவில் 10,507 க்கும் மேற்பட்ட சேவைகளுக்காக மொத்தமாக ரூ. 13.6 பில்லியனை வழங்கியது

அபிவிருத்தி கொடுகடன் திரட்டு



நுண் நிதியிடல்

வங்கியின் நுண் நிதியிடல் முன்னெடுப்பானது பெரும்பாலும் வாய்ப்மைவான நிதியிடலுக்கு வழியில்லாத அடிமட்டப் பொருளாதாரத்திற்கு நிதி வழங்குவதனூடாக வர்த்தக மற்றும் சமூகப் பேண்தகு நிலை நோக்கங்களைப் பூர்த்தி செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டதாகும். மித்துரு நுண் நிதியிடல் நிகழ்ச்சித் திட்டமானது ஒரு குழுக் கடன் வழங்கல் முன்னெடுப்பாகும். இதனூடாக குழுக்களுக்கும் சங்கங்களுக்கும நிதிகள் வழங்கப்படுகின்றன. இந்த முன்னெடுப் பானது இலங்கையின் கிராமப்புறங்களில் தொழில் முயற்சியாண்மையை வளர்ப்பதையும் சமூக பொருளாதாரத்திற்கு வலுவூட்டுவதையும் இலக்காகக் கொண்டுள்ளது. 2018 டிசம்பர் முடிவில் 496,000 க்கும் மேற்பட்ட வசதிகளுக்காக வழங்கப்பட்ட வங்கியின் நுண் நிதிக் கடன் தொகை ரூ. 8.7 பில்லியன் ஆகும். நிதிசார் ஒழுக்கத்தைப் பேணி வளர்ப்பதை நோக்காகக் கொண்டு வங்கியானது தனது நுண நிதி வாடிக்கையாளருக்காக நிதிசார் கற்கை நிகழ்ச்சித் திட்டங்களையும் நடாத்துகிறது.

என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா

10,507 கடன் வசதிகள்

பிரிவின் கடன் நிலுவை ரூ. 13.6 பில்லியன்

என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்காவின் கீழ் மிகப் பெரிய கடன் வழங்குநர்

1% இலும் குறைவான NPL விகிதம்



சில்லறை வங்கித்தொழில்

குறித்த ஆண்டின்போது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைசேர்.ந்துண்கடன் துறைகளை இலக்கு வைத்து மூன்று புதிய கடன் திட்டங்களை ஆரம்பித்தது

எரம்புமா	பசுமைக் கடன்	சிற்றுடைமை விவசாயத்தொழிற் பங்காண்மைகள்
வியாபாரத் தொடக்கிவைத்தலின் பொருட்டு இளம் பட்டதாரிகளுக்கு நிதியுதவி வழங்குவதற்காக	உக்கக்கூடிய கழிவுப் பொருளைப் பயன்படுத்திப் பைகள்/ பொதிசெய் மூலப் பொருளை உற்பத்தி செய்வதற்கான நிதியுதவி மற்றும் உல்லாசப் பயணத்துறை சார்ந்த சிறு தங்குமனை உரிமையாளர்களுக்கான	பண்ணை உபகரணம், இயந்திராதி மற்றும் விவசாயக் கருத்திட்ட மூலதனத் தேவைப்பாடுகளைக் கொள்வனவு செய்வதற்கான

முன் செல்லல்

கடன் வழங்கல் மற்றும் அடகுத் தொழில் ஆகியவற்றின் அபிவிருத்திமீதான கவனக் குவிப்புடன், சில்லறைக் கொத்தணியானது, பிரதான கடன் வழங்கல் உற்பத்திகளின் வளர்ச்சியைத் தொடர்ந்து பின்பற்றிச் செல்லும் நாட்டின் SME துறைக்கு ஆதரவளித்து, கடன் கொடுத்தலை விருத்தி செய்வதனூடாகத் தொழில்முயற்சியாண்மையை முன்னெடுத்துச் செல்லப் பல சந்தர்ப்பங்கள் இருப்பதைக் காண்பதோடு, இத்துறையில் நாம் ஆழமாக ஈடுபடவும் எதிர்பார்க்கின்றோம். செயலுறாக் கடன்களைத் தடுப்பதற்கும் திரட்டல்களை உறுதிப்படுத்துவதற்கமாக 2018 இல் தொடங்கப்பட்ட முன்னெடுப்புக்கள்மீது தொடரந்தும் நாம் அவதானம் செலுத்திவருவதால், பிரிவின் தரத்தைப் பேணிக் காப்பதானது 2019 இலும் எமது முன்னுரிமையாக இருக்கும். குறுகிய காலத்தில் சவால்கள் இருக்கும் அதேவேளை, இடைக்காலம் தொட்டு நீண்ட காலம் வரையான வெளி நோக்கு சாதகமாக இருகின்றது என்பதுடன், அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் ஒருநிலைப்பட்டிருப்பதன்மூலம் கொத்தணியானது நாட்டின் பொருளாதார சுபீட்சத்திற்கு நேரடியாகப் பங்களிப்புச் செய்யும் விதத்தில் நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வங்கித் தொழில்

செயல்நிறைவேற்ற முனைப்பம்சங்கள்

ரூ. மில்லியன்	2018	2017	வருடாந்த மாற்றம்
தேறிய வட்டி வருவாய்	17,327	19,819	(13%)
தொழிற்படு வருவாய்	25,426	22,871	11%
சேதாரக் கட்டணங்கள்	8,231	7,781	6%
தொழிற்பாட்டுச் செலவுகள்	5,219	4,110	20%
தொழிற்பாட்டு இலாபம்	11,975	10,980	9%
மொத்த சொத்துக்கள்	833,652	601,742	39%
மொத்தப் பொறுப்புக்கள்	789,016	567,473	39%

தொழிற்பாட்டு வருவாய்க்குப் பங்களிப்பு



சொத்துக்களுக்கு பங்களிப்பு





கொத்தணியானது நாடு முழுவதிலுமான பொருளாதார நடவடிக்கையை இலகுபடுத்துவதில் பிரதான வகிபாகத்தை ஆற்றிக்கொண்டு, கூட்டாண்மை வாடிக்கையாளர், அர சாங்கம், அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சியாண் மைகள் மற்றும் பாரிய அளவிலான கருத்திட்டங்கள் ஆகியவற்றிற்கு நீண்ட கால, நடுத்தர மற்றும் குறுகிய கால நிதியை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது. சிறந்த விலை களையும் உன்னத வாடிக்கையாளர் சேவையையும் வழங்குவதன் மூலம் தனியார் துறைக் கூட்டாண்மை வாடிக்கை யாளர் குழுமத்தினரை விரிவுபடுத்துவது முக்கிய பார்வைக் குவிமையமாக இருந்து வந்துள்ளது. இந்த எதிராளர் சந்தைப் பிரிவில் போட்டித் தன்மை கொண்ட அனுகூலத்தைக் கட்டியெழுப்புவதை இது வங்கிக்கு இயலுமானதாக்குகிறது.

தொழிற்படும் சூழல்

ஆண்டின் பெரும்பாலான காலப் பகுதியில், பேரண்டப் பொருளாதார நிலைமைகள் பின்வரும் பண்புகளுடன் சவாலுக்குரிதாக விளங்கியது:

- மந்த நிலையிலான முதலீட்டாளர் உணர்வுகள்
- ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களின்போது கரைக்கப்பா லான வங்கித் தொழில் அலகுகளின் தேறிய வெளிநாட்டு சொத்துகளில் அதிகரிப்பு
- மிதமான உயர் வட்டிவீத நிலைமைகளால தனியார் துறைக்கான கடனில் மிதமான வளர்ச்சி மற்றும் ரூபாயின் மதிப்புக் குறைவு காரணமாக நுகர்வில் மந்த நிலை.
- செயலற்ற கடன்கள் அதிகரிப்பு
- புதிய வரி ஒழுங்கு விதிகள்

(தொழிற்பாட்டு சூழல்பற்றிய மேலும் விபரங்களுக்கு 120 - 125 வரையான பக்கங்களைப் பார்க்க)

மூலோபாயமும் செயல்நிறைவேற்றமும்

புதிய வாடிக்கையாளர் சேர்ப்பு, கூட்டமைக்கப்பட்ட கடன்களின் விரிவு மற்றும் முன்னேற்றகரமான சேவைத் தரம் என்பவற்றால் தாங்கப்பட்ட நிலையில் குறித்த ஆண்டின்போது கூட்டமைக்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் 35% அதிகரித்தன. புதிய வாடிக்கையாளர்களைக் கவரும்பொருட்டு, போட்டித் தன்மை கொண்ட வீதங்களை வழங்கும் வளர்ந்துவரும் சந்தைப் பங்கு களைக் கருத்திற்கொண்டு, கொத்தணியானது அளவுப் பிரகாரம் முன்னெடுக் கப்படும் ஒரு மூலோபாயத்தைக் கடைப்பிடித்தது. அதன்படி, குறித்த ஆண்டில் தேறிய வட்டி வருமானம் 13% ஆல் குறைய, தேறிய வட்டி விளிப்பு நிலை சுருங்கியது. இதற்கிடையில், சார்பளவில் அதிக நம்பிக்கைக்குரிய வாடிக்கையாளர் பிரிவானது குறித்த ஆண்டின்போது சேதாரக் கட்ணங்களின் 6% அதிகரிப்பைத் தடுப்பதை கொத்தணிக்கு இயலுமானதாக் கியது. துறையின் ஒட்டுமொத்தத் தொழிற்பாட்டு இலாபமும் பாதியாகக் குறைந்து ரூ. 11.8 பில்லியன் ஆனது. இதற்கிடையில், மொத்த சொத்துக்கள் 39% ஆல் வளர்ச்சி கண்டு கடன் பிரிவின் தொடர்ச்சியான விரிவாக்கத்தைப் பிரதிபலித்தது.

கூட்டாண்மை மற்றும் கரைக்கப்பாலான வங்கித்தொழில்

கூட்டாண்மை வங்கித்தொழில்

வங்கியானது, குறித்த ஆண்டின்போது தனியார் கூட்டாண்மைகளுக்கான கொடுகடன்களை 23% அதிகரித்து, தனது பிரசன்னத்தின் விரிவாக்கத் தினுள் ஊடுருவிச் சென்று வளர்ப்பதைத் தொடர்ந்தது. புதிதாகத் தனியார்துறை வாடிக் கையாளர்கள் வங்கியின் கூட்டாண்மை வாடிக் கையாளர் தளத்திற்குக் குறைந்த அளவில் சேர்க்கப்பட்டனர். எனினும், வாடிக்கையாளர் களின் நன்மதிப்பினாலும், கடன் தரம் பேணப் பட்டு வந்ததாலும், கொத்தணியின் இடர்மீளல் இயக்குவிசை அதியுச்சம் பெறுவதை இது இயலு மானதாக்கியது. வாடிக்கையாளர்களுடனான எமது உறவைத் தொடர்ந்து வலுப்படுத்துவதும், சேவைத் தரம் மற்றும் நியமங்களை முன்னேற்று வதும் எமது ஒட்டுமொத்த மூலோபாயத்தின் ஆக்கக்கூறுகளாகும். வாடிக்கையாளர் பாராட்டு விழாக்கள், மதியுரைச்சேவைகளின் ஏற்பாடு மற்றும் பிரச்சினைகளுக்குட்பட்ட வியாபாரங் களுக்கு மீளுயிர்ப்பூட்டுவதற்காகக் கடன்களையும் முற்பணங்களையும் செலுத்துவதற்கான நாளைப் பின்போடுதல் போன்ற ஈடுபாட்டு முன்னெடுப்புக்கள், உறுதியான உறவுநிலைகளைப் பேணுவதையும் வாடிக்கையாளர்களுக்கு மேலதிக பெறுமதியை உருவாக்குவதையும் இயலுமானதாக்கியது இலங்கை வங்கியானது இலங்கை அரசாங்கத் திற்கு ஒரு பிரதான கடன் வழங்குநராகும். அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சியாண் மைகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்குமான கொடுகடன்கள் குறித்த ஆண்டில் 45% அதி கரித்தது. மொத்தக் கூட்டாண்மைக் கடன் புத்தகத்தின் 60% இனுள் இதுவும் அடக்கம்.

கருத்திட்டக் கடன்வழங்கல்

அண்மைக் கால வருடங்களில் அதிகமான அரச மற்றும் தனியார்துறைக் கருத்திட்டங் களுக்கு நிதியிடல் செய்ததன்மூலம் இலங்கை வங்கியானது நாட்டின் உட்கட் டமைப்பிற்கு நேரடியாகப் பங்களிப்புச் செய் ததுகுறித்த ஆண்டின்போது வங்கியானது புதுப்பிக்கத்தக்க சக்தி, கழிவிலிருந்து சக்தி மற்றும் மாலேயில் உள்ள ஹோட்டல் கருத்திட்டங்கள் ஆகியவற்றிற்கு நிதி அளித்தது. குறித்த ஆண்டில் நிதியளிக்கப் பட்ட அரசதுறைக் கருத்திட்டங்கள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையூடான நீர்க் கருத்திட்டங்கள், நெடுஞ் சாலை நிர்மாணிப்புக் கருத்திட்டங்கள், துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டங்கள் முதலியவற்றை உள்ளடக்கும்.

கூட்டாண்மைப் பிரிவு செயல் நிறைவேற்றம்



கூட்டாண்மைக் கடன் பிரிவு



கூட்டாண்மைப் பிரிவின் துறைகளை வெளிப்படுத்தல்



வர்த்தக நிதிப் பிரிவு

வர்த்தக நிதிப் பிரிவானது இறக்குமதிகளையும் ஏற்றுமதிகளையும் இலகுபடுத்தப் பலவகையான உற்பத்தி களை வழங்குவதுடன், அரசாங்கத்திற்கும், கூட்டாண்மை வாடிக்கையாளர்கள் மற்றும் கைத்தொழிற் சங்கங் களுக்கும் ஆலோசனைச் சேவைகளையும் வழங்குகிறது. இப் பிரிவு ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB), இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (SLECIC) மற்றும் வர்த்தக அமைச்சு என்பவற்றுடன் நெருக்கமான ஈடுபாட்டைப் பேணுவதுடன், புதிய ஏற்றுமதிச் சந்தைகளையும் ஏற்றுமதியாளர்களையும் இனங் கண்டு, அவற்றிற்கு ஏற்றுமதிச் சந்தைகள் தொடர்பான வங்கி நடைமுறைகள் உள்ளிட்ட ஆலோசனைச் சேவைகளையும் வழங்குகிறது.காலத்திற்குக் காலம் கிளைப் பணியாட்டொகுதியினர்க்கு இப் பிரிவினால் வர்த்தக நிதிசார் செயலமர்வுகள் நடாத்தப்படுவதுடன், வர்த்தக நிதி நடைமுறைகள்பற்றி அறிவூட்டுவதற்கும்/விழிப்புணர்வூட்டுவதற்குமான செயலமர்வுகளும் EDB யில் நடாத்தப்படுகின்றன. குறித்த ஆண்டின்போது வர்த்தக நிதியிடற் கடன்கள் 18% வளர்ச்சி கண்டு ரூ. 54.3 பில்லியனாய் இருந்தது.

எழுத்தாண்மைத் தொடர்புகளின் மிகப் பெரிய வலையமைப்பையும் அதன் உறுதியான வர்த்தகப் பெயர் அங்கீகாரத்தையும் கொண்ட வர்த்தக நிதிப் பிரிவு அதன் மதிப்பாண்மையில் மிக உறுதியாயுள்ளது.

கரைக்கப்பாலான வங்கித்தொழிற் பிரிவு

குறித்த ஆண்டின்போது வங்கியானது இந்தியாவிலும் சிங்கப்பூரிலும் ஏனைய வர்த்தக வங்கிகளின் பங் காண்மையுடன் கூட்டமைப்புக் கடன் வழங்கலில் 38.8 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கருத் திட்டங்களுக்கு நிதியளித்துக் கூட்டமைப்புக் கடன் வழங்கலில் தனது நிலைப்பாட்டைத் தொடர்ந்து உறுதிப்படுத்தியது. இலங்கை வங்கியானது மாலைதீவிலும் 22 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஒரு ஹோட்டல் கருத்திட்டத்திற்கான கூட்டமைப்புக் கடன் ஒன்றிற்கான முன்னிலை ஒழுங்படுத்துநராக இருந்தது. மேலும் இப்பிரிவானது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ரூ. 10.3 பில்லியன் பெறுமதியான ஏற்றுமதி நோக்கிய கருத்திட்டங்களுக்கு நியளித்ததுடன், இலங்கை அரசாங்கத்திற்கும் ரூ. 27.0 பில்லியனைக் கடனாக வழங்கியது.

வர்த்தகம்சார் வருவாயின் அமைவாக்கம்



முன் செல்லல்

எதிர்வரும் ஆண்டில் எமது குவிமையமானது இப் பிரிவின் தேவைப்பாடுகளை வழங்குவதற்கென உருவாக்கப்பட்ட தனித்துவம் வாய்ந்த ஓர் அலகைக்கொண்டு கருத்திட்டக் கடன்களை வழங்குதல்மீதே பதிந்திருக்கும். அரசுக்கும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சியாண்மைகளுக்கும் நிதியளித்தல்மூலம் எமது தேசத் திற்கு நாம் சேவை செய்வதால், எமது தனியார் துறைக் கூட்டாண்மைப் பிரிவு சம நிலையை அடைவதற்கு நாம் எமது தொடர்புகளைத் தொடர்ந்தும் வலுப்படுத்தி வளர்வோம். கூட்டமைப்புக் கடன் வசதிகளில் பங்காண்மையின் வெற்றியானது இலங்கை வங்கியை மேலும் வரக்கூடிய கூட்டமைப்புக் கடன் வசதிகளுக்கான வாய்ப்புக்களை ஒரு முன்னிலையாளராகவோ அல்லது ஒரு பங்காண்மையாள ராகவோ பின்தொடரச் செய்யும். வர்த்தக நிதியிடலானது, விசேடத்துவ உற்பத்திப் பொருட்களுக்கான சந்தைகள் தம் பொருட்களுக்காகப் பிரசாரம் செய்யத் தேடிச் செல்லும் அதேவேளை, கடன் மதி கடிதச் செயன்முறையைத் தொடரறா முறையில் செய்வதை இயலுமானதாக்கும் இலக்கமுறைத் தீர்வுகளில் முதலீடு செய்வதன்மூலம் தனது வாடிக்கையாளருக்குப் பெறுமதியைச் சேர்க்கும்

சர்வதேச, திறைசேரி, முதலீடு மற்றும் கடல்கடந்த செயற்பாடுகள்

செயல்நிறைவேற்ற முனைப்பம்சங்கள்

ரூ. மில்லியன்	2018	2017	வருடாந்த மாற்றம்
தேறிய வட்டி வருவாய	10,914	9,657	13%
தொழிற்பாட்டு வருவாய	18,077	14,340	26%
தொழிற்பாட்டுச் செலவுகள்	4,953	4,216	17%
தொழிற்பாட்டு இலாபம்	12,737	10,424	22%
மொத்த சொத்துக்கள்	643,024	621,866	3%
மொத்தப் பொறுப்புகள்	608,595	586,451	4%

தொழிற்பாட்டு வருவாய்க்குப் பங்களிப்பு



சொத்துகளுக்குப் பங்களிப்பு



சர்வதேச, திறைசேரி, முதலீடு மற்றும் கடல் கடந்த முதலீடுகள் பிரிவின் மூல மாக பிரிவானது முழு வங்கியினதும் பல்வகைமை கொண்ட அதன் செயற் பாடுகளை இலகுபடுத்துவதில் பிரதான வகிபாகத்தை ஆற்றுகிறது. சர்வதேச பிரிவானது அந்நிய நாணயம் தொடர்பான கொடுக்கல் வாங்கல், பண அனுப்பீடு களை இலகுபடுத்தல், அந்நிய நாணய பயண அட்டைகளை வழங்கல் மற்றும் அந்நிய நாணய வைப்பு உற்பத்திகளை வழங்கல் போன்றவற்றில் பிரதானமாக ஈடுபடுகிறது. திறைசேரியானது வங்கியின் திரவத்தன்மை, ரூபாய் மற்றும் அந்நிய நாணயம், சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவம் மற்றும் பொரெக்ஸ் மற்றும் வட்டி வீத இடர்களுக்கு முகங் கொடுத்தல் ஆகியவற்றை முகாமை செய்வதில் முக்கிய வகிபாகத்தை ஆற்றுகிறது. முதலீட்டுப் பிரிவானது, பிரிவு முகாமைத்துவ சேவைகள், நம்பிக்கையாளர் மற்றும் பாதுகாவலர் சேவைகள் ஆகியவற்றை வழங்குவதுடன், கடனீட்டுப் பத்திரங்கள், பாதுகாக்கப்படும் ஆவணங்கள் போன்ற முதலீட்டுச் சாதனங்களைக் கட்டமைப்பதிலும் ஈடுபடுகிறது.

தொழிற்பாட்டுச் சூழல்

2018 இல் பிரிவின் செயல் நிறைவேற்றத்தைப் பாதித்த தொழிற்பாட்டுச் சூழலின் பிரதான போக்குகள் பின்வருமாறு:

- நிதிக் கொள்கையின் திசைமுகம்: 2018 செப்டம்பரில் நியதிச் சட்டத்தின் பிரகாரமான தேவைப்பாட்டுவிகிதத்தில் (SRR) 150 bps குறைப்பு ஏற்பட்டதையடுத்து, வட்டிவீத இடைவழிக் கொள்கையின் உயர் எல்லைக் குறைப்பு.
- வட்டி வீதங்கள்: ஆண்டின் பிற்பகுதியில் வைப்பும் கடன்கொடு வீதங்களும் ஓர் அதிகரித்த போக்கினைப் பதிவு செய்தன.
- செலாவணி வீதம்: 2018 இல் அமெரிக்க டொலர் ஒன்றிற்கான ரூபாயின் பெறுமதி நேர் குத்தான 20% ஆல் மதிப்பிறக்கமடைந்தது

(தொழிற்பாட்டு சூழல்பற்றிய மேலதிக தகவலுக்கு 120 - 125 வரையான பக்கங்களைப் பார்க்க)

மூலோபாயமும் செயல் நிறைவேற்றமும்

பிரிவானது 26% தொழிற்பாட்டு வருவாய் அதிகரிப்புடன் 2018 இல் செயல் நிறைவேற்றத்தின் மற்றுமோர் உறுதியான ஆண்டைத் தந்தது. அந்நிய செலா வணி வருவாய், முதலீட்டு வருவாய் மற்றும் வங்கியின் கடல் கடந்த கிளைகளிலிருந்து ஆரோக்கியமான இலாப உருவாக்கம் ஆகிய உறுதியான விரிவாக்கத்தால் செயல் நிறைவேற்றமானது ஏறுமுகத்துடன் தக்கவைக்கப் பட்டது. 2018 இல் வங்கியின் மொத்த தொழிற்பாட்டு வருவாயின் 21% ஐ இப் பிரிவு பிறப்பித்தது.

சர்வதேச, திறைசேரி மற்றும் முதலீடு மற்றும் கடல்கடந்த பிரிவின் செயல் நிறைவேற்றம்



முதலீட்டு வங்கித்தொழிற் பிரிவு

தனது முதலீட்டுச் சலுகை அறிவிப்பு, நிதிசார் இடையீட்டாளர்களுடன் உறுதியான தொடர்புகளை வளர்த்தல் மற்றும் கூட்டாண்மைக் கடன் மற்றும் பங்குரிமைகள் என்பவற்றைக் கட்டமைத்தல்/ முகாமை செய்தலில் ஊடுருவல் என்பவற்றை விரிவுபடுத்துவது மூலம் வங்கியானது முதலீட்டு வங்கித் தொழிலில் தனது நிலையை வலுப்படுத்த முனைந்தது. அத்துடன், உயர் தேறிய பெறுமானம் கொண்ட தனிநபர்கள், நிறுவன முதலீட்டாளர்கள் மற்றும் நிதியங்களுக்கும் தற்றுணிபுடைய பிரிவு முகாமைத்துவ சேவைகளை விரிவுபடுத்தினோம். குறித்த ஆண்டின்போது பிரிவானது

ரூ. 12.0 பில்லியன் பெறுமதியான பட்டியலில் உள்ள டக்கப்படாத கடனீட்டுப் பத்திரங்களை வெற்றிகரமாக ஒழுங்கு செய்தமையானது இவ் வியாபாரத் துறையில் எமக்கிருக்கும் ஆற்றல்களுக்குச் சான்றாய் அமைகிறது

சர்வதேசப் பிரிவு

உள்வரு அனுப்பீடுகளில் தனது சந்தைத் தலைமைத்துவத்தைப் பேணியவாறு சர்வதேசப் பிரிவானது 2018 இல் பல மைல் கற்களை எட்டியது. போட்டித் தன்மை கொண்ட இப் பிரிவில் எமது வலையமைப்பை விரிவுபடுத்தி, தற்போதுள்ள பரிமாற்று மனைகள்/வங்கிகளுடன் தொடர்புகளை ஆழமாக்கி, செயன்முறைகளை இலகுவாக்கிப் பெரும்போக்குப்படுத்திப் புதிய வாடிக்கையாளர்களைப் பெறுவதன் ஊடாகப் போட்டித்தன்மை கொண்ட இப் பிரிவில் 40% சந்தைப் பங்குகளைப் பேணுவதன் மேலேயே இதன் மூலோபாய அழுத்தம் இருந்தது. ஐரோப்பா, ஐக்கிய அமெரிக்க நாடுகள், கனடா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளில் உள்ள பயன்படுத்தப்படாத வாடிக்கையாளர் பிரிவுகளைக் கவர்வதற்காக, வங்கியின் இணையத் தளத்துடன் இணைக் கப்பட்ட இலக்கமுறை அனுப்பீட்டுத் தளமொன்றை ஆரம்பிப்பதன் மூலம் தரகுப் பண வருவாயை மேம்படுத்துவதையும் நாம் குறிவைத்துள்ளோம். சிறந்ததொரு வாடிக்கையாளர் சேவையினை வழங்கும் நோக்குடன், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம கருமபீடங்களில் உள்ள செயன் முறைகளின்

வினைத் திறன்களையும் பணியாட் டொகுதியின் உற்பத்தித் திறனையும் இயக்குவிப்பதன் மூலம் பிரிவானது தனது சலுகைகளுக்கு வலுவூட்டியது. பிரிவானது உற்பத்திப் பிரிவின் விரிவு படுத்தலைத் தொடர்கின்றது.

திறைசேரிப் பிரிவு

முதலீட்டு வருமானங்களைப் பெருக்குவதற்காக திறைசேரிப் பிரிவானது தனது அந்நிய செலாவணி வருவாயை மேம்படுத்துவதன் மூலமாகவும் அரசாங்கப் பிணையங்கள் பிரிவிலிருந்து உச்ச பயனைப் பெறுவதன் வழியாகவும் பிரிவின் இலாபமீட்டுதன்மைக்குக் குறிப்பிடத்தக்க வகையில் பங்களிப்புச் செய்தது. பிரிவானது பரிமாற்ற மனைகளுடனான தொடர்புகளைப் பலப்படுத்தி, அதிகரித்த அந்நிய செலாவணி வருவாயை ஊக்குவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் வழியாகத் தனது திறைசேரி அலுவலை விரிவுபடுத்தியது பிரிவானது, பொருளாதார மற்றும் சந்தை இயக்க விசைகளின் அடிப்படையிலான கடன் கொடு விகிதங்கள் மற்றும் நிதியிடற் கட்டமைப்பு என்பவற்றைக் கூர்மதியுடன் முகாமை செய்ததன்மூலம் வங்கியினது தேறிய வட்டி விளிப்பு நிலையை உச்ச நிலைப் படுத்துவதிலும் முக்கிய வகிபாகத்தை ஆற்றுகிறது. முழுமையான ஒரு திரவத்தன்மை முகாமைத்துவ சட்டகத்தைச் செயற்படுத்துவதனூடாக தனது மூலோபாய வளர்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தை வழங்குகையில், வங்கியானது போதுமான அளவு திரவத்தன்மை மட்டங்களைப் பேணுகிறது என்பதைத் திறைசேரி உறுதிப்படுத்துகிறது. அத்துடன், போதுமான திரவத்தன்மை மட்டங்கள் எல்லாக் காலங்களிலும் பேணப்படுவதை உறுதி செய்யுமுகமாக, பிரிவானது சொத்து மற்றும் பொறுப்புப் பொருத்தப்பாடுகளை எப்போதும் கணண்காணிக்கிறது. குறித்த ஆண்டின்போது காலப் பொருத்தமான முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்வதன் வழியாக அரசாங்கப் பிணையங்கள் பிரிவிலிருந்து பிறப்பிக்கப்பட்ட அதிகரிக்கும் வட்டி வருவாய் மற்றும் மூலதன ஆதாயங்கள்மீதும் எமது மூலேபாயமான கவனக்குவிப்பு இருந்தது. குறித்த ஆண்டிற்கான பிரிவின் சாதனைகள் மத்தியில் முக்கிய ஒன்றாக இருந்தது 2018 ஏப்ரலில் 500 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இரண்டாவது சர்வதேச முறியின் வெற்றிகரமான கடனடைப்பாகும்.

கடல் கடந்த தொழிற்பாடுகள்

2018 இல் வங்கியானது வளர்ந்துவரும் உல்லாசப் பயணத்துறையால் முன்வைக்கப்பட்ட வாய்ப்புக்களை ஆதாயமாக்கிக்கொள்ளும் பொருட்டு, மாலை தீவில் தனது 2 ஆவது கிளையைத் திறந்து வைத்ததன் மூலம், தனது சர்வதேச பிரசன்னத்தை மேலும் விரிவுபடுத்தியது. குறிப்பாக வளர்ந்துவரும் சந்தைகளில், தாபிக்கப்பட்ட நிதி நிறுவனங்களுடன் பங்காண்மைகளை ஏற்படுத்திக்கொள்வதன்மூல மாகவும், இலங்கை வங்கியின் தர நாமத்தை மேம்படுத்துவதன்மூலமாகவும், நாம் எமது பிரதேசத் தொடுமையங்களின் விரிவாக்கத்தைத் தொடர்ந்து முன்னெடுக்கிறோம். கடல் கடந்த கிளைகளின் இலாபமீட்டு தன்மையையும் வளர்ச்சியையும் முன்னேற்றும் முயற்சிகள் குறித்த ஆண்டின்போது எமது பிரதான முன்னுரிமையாக இருந்தது என்பதுடன், எமது உற்பத்திச் சலுகைகளை மெருகூட்டி, செயல் நிறைவேற்று முகாமைத்துவச் சட்டகங்களையும் ஊக்குவிப்புத் திட்டங்களையும் பெரும்போக்குப் படுத்தி, இலக்கமுறைப்படுத்தல் மூலமான வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தும் வகையில், விநியோக வழிமுறைகளை முன்னேற்ற விழைந்தோம். இந்த முன்னெடுப்புக்களின் விளைவாக, குறித்த ஆண்டின்போது கடல் கடந்த கிளைகள் 2.3 பில்லியன் ரூபாய் ஈட்டலைப் பங்களிப்புச் செய்தது. அத்துடன், கடல் கடந்த கிளைகளின் கடன் நிருவாகச் செயற்பாடுகளைப் பெரும்போக்குப்படுத்தி, கடன் - இடர் உணர்வுடைய கலாச்சாரம் ஒன்றைப் பேணி வளர்க்கவேண்டும் என்பதில் அழுத்தத்தைப் பிரயோகித்தோம்.

முன் செல்லல்

பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மேலும் உகந்தாய் இருக்குமென எதிர்பார்க்கப் படுவதால், 2019 க்கான தனது மூலோபாய முன்னுரிமைகள்மீது கொத்தணி தனது குவி மையத்தைத் தொடர்ந்தும் பேணும். சர்வதேசப் பிரிவானது எழுத்தாண்மை மூல வங்கிகளுட னான ஈடுபாட்டை வலுப்படுத்தும் அதேவேளை, தனது சந்தைத் தலைமைத்துவ நிலையைப் பேணத் தொடர்ந்தும் முயற்சிக்கும். திறைசேரியானது வங்கியின் திரவத்தன்மை முகா மைத்துவம் தேறிய வட்டி விளிம்பு(NIM) என்பவற்றின்மீதான குவிமையத்தைப் பேணி, சந்தை இடர் வெளிப்பாடுகள்மீதான பயனுறுதியான முகாமைத்துவத்தை உறுதிப்படுத்தும் அதே வேளை, ஊழியர் தகுதிகளின் விருத்தியும் பரந்த உற்பத்திப் பிரிவும் முதலீட்டு வங்கித் தொழிற் பிரிவின் இலாபமீட்டு தன்மைக்குத் துணை நிற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெருமதி உருவாக்கம்

எமது மூலதனங்கள்

மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

நிதி மூலதனம்

நிதி ரீதியான மூலதனம்

வங்கியானது தனது சந்தை நிலையை தக்கவைத்துக் கொள்வதற்கான ஆற்றல், அதாவது உபாய ரீதியான அபிலாசைகளை முன்னெடுத்துச் செல்லல், நிலைபேறான பங்கீட்டுப்பாட்டாளர் பெறுமதிகளை உருவாக்கல் ஆகியவற்றிற்கு வங்கியின் நிதி ரீதியான மூலதனம் முக்கியத்துவம்மிக்கதாகும். முறையான முக்கியத்துவம் மிக்க நிதி நிறுவனம் என்ற முறையில், பொருத்தமான வகையில் இடர் பரிசீலனைகளை முகாமைத்துவம் செய்கின்ற அதேவேளை, பல்வேறு வகையான பங்கீட்டுபாட்டாளர்களது நலன்களை சமநிலைப்படுத்தும் விதமாக நிதிரீதியான மூலதனங்களின் மூலத்தை அறிந்து அவற்றை நாம் பயன்படுத்துகின்றோம்.



ரூபா
1,765.0 பில்லியன்
வாடிக்கையாளர் வைப்புகள்

ரூபா
350.0 பில்லியன்
கடன் வாங்குதல்

ரூபா
121.4 பில்லியன்
பங்காளர் நிதி

AA+(lka) Stable
ஃபிச் ரேடிங்ஸ் லங்கா (என் எஸ்)

AAA Stable
ICRA Lanka Limited

B2 ஸ்டேபில் மூடியின் முதலீட்டாளர் சேவைகள் **(Mood's)**

B Stable
ஃபிச் தரப்படுத்தல் **(Fitch Ratings)**

2018 இல் உபாய ரீதியான முன்னுரிமைகள்

அபிவிருத்திற்கான வாய்ப்புகள் மற்றும் சிறிய மற்றும் வணிக முயற்சிகான நடுத்தர கடன் கொடுத்தலை அதிகரித்தல

அபிவிருத்தி சார் அபிலாசைகளை மூலதன தேவைப்பாடுகளுடன் சமநிலைப்படுத்தல்

வட்டி எல்லைகளை உச்ச மட்டத்தில் முகாமைத்துவம் செய்தல்

முதலீட்டு பட்டியல் தன்மையை பாதுகாத்தலில் கவனம் செலுத்துதல்

2018இல் முன்னெடுப்புகள்

- கடன் திட்டத்தின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர வணிக முயற்சிகளுக்கான கடன் கொடுத்தலை அதிகரித்தல்.
- முதலீட்டுப் பட்டியல் தன்மையை பாதுகாக்கும் முகமாக சேகரித்தல் மற்றும் மேற்பார்வை பொறிமுறைகளை வழுப்படுத்துதல்.
- உரிய நேரத்தில் மீள் விலையிடல் தீர்மானங்கள்
- SLFRS 9 தேவைப்பாடுகளுக்கு ஏற்ப நிதி ரீதியான அறிக்கையிடலை தானியங்கிப்படுத்துதல்.
- சொத்துக்கள் தொடர்பில் 2 டிரில்லியன் எல்லையை விட அதிகமாக காணப்படல்.

2018இல் எமது செயலாற்றுகைகள் எவ்வாறு இருந்தன

- 2018 ஆண்டுக்கென இலக்காக நிர்ணயக்கப்பட்ட சகலதும் அடையப்பெற்றது (NPL தவிர)
- தேரிய வட்டி வருமான வளர்ச்சி 12%
- மொத்த தொழிற்பாட்டு வருமான 20%
- வருமான விகிதத்திற்கான செலவு 38%
- வரிக்கு முன்னரான இலாப வளர்ச்சி 5%
- கடன் முதலீட்டு பட்டியல் வளர்ச்சி 24%
- மொத்த NPL விகிதம் 3.6% பேணப்பட்டது
- புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனம் மற்றும் நிதி ரீதியான அறிக்கையிடல் தொடர்பான ஒழுங்கமைப்பு தேவைகளுக்கு ஏற்ப உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்டது

2019இற்கான முன்னுரிமைகள்

- மூலதன தேவைகளை பேணுகின்ற அதேவேளை உபாய ரீதியான வளர்ச்சி
- இலக்குகள் அடையப்பெற்றன என்பதை உறுதி செய்தல்
- முதலீட்டுப் பட்டியல் தன்மையை பாதுகாத்தல்
- செயன்முறைகளை தானியங்கி முறைக்குள்ளாக்குதல்

மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

நிதி ரீதியான

உறுதியான செயலாற்றுகையை மீண்டுமொரு வருடத்தில் இலங்கை வங்கி வெளிப்படுத்தியது, 2018 ஆம் ஆண்டில் வரிக்கு முன்னரான இலாபம் மற்றும் சொத்துக்கள் வளர்ச்சி ஆகிவற்றை முறையே 5% ஆகவும் 16% ஆகவும் வழங்கும் முகமாக பல்வேறு வகையான வெளிநிலை சவால்களுக்கு எதிராக தாக்குப்பிடிக்கும் தன்மையை புலப்படுத்தியது. முதலீட்டுப் பட்டியலின் தன்மை நலிவடைந்து மற்றும் கடன் வளர்ச்சி குறுகி வருகின்ற தன்மைகள் ஆகியன குறியீடாக புலப்படுகின்ற வருடத்தில் முதலீட்டுப் பட்டியலின் தன்மையை பேணி பாதுகாத்து கடன் வளர்ச்சியை சராசரி மட்டத்திற்கு மேல் காட்டக்கூடியதாக தனது பங்கீட்டுப்பாட்டாளர் தொடர்பான அர்பணிப்புகளை தொடர்ச்சியாகவும் வழங்கக்கூடியதாகவும் இலங்கை வங்கி திகழ்ந்தது.

நிதி ரீதியான செயலாற்றுகை

தேறிய வட்டி வருமானம்

வருடத்தின் பெரும்பாலான காலப்பகுதியில் காணப்பட்ட 24 வீத கடன் வளர்ச்சி மட்டும் அதனுடன் சேர்த்து ஒப்பீடளவில் காணப்பட்ட கூடிய வட்டி வீதம் ஆகியவற்றின் காரணமாக 2018ஆம் ஆண்டில் வங்கியினால் 14 வீத அதிகரித்த வட்டி வருமானத்தை பதிவு செய்ய முடிந்தது. இது இலங்கை ரூபாய் 195.4 பில்லியன் ஆகும். கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவு கணக்குகள் ஆகியவற்றில் உருவாக்கப்பட்ட வட்டி வருமானமானது வங்கியின் மொத்த வட்டி வருமானத்தில் 74 வீதமாகும். அதனைத் தொடர்ந்து கடன் மீதான வருமானம் மற்றும் ஏனைய கருவிகள் காணப்பட்டன. அதேவேளை வங்கயின் வட்டி செலவுகள் 15 வீதத்தினால் அதிகரித்தன. இது இலங்கை ரூபாய் 129.8 பில்லியன் ஆகும். வாடிக்கையாளர் வைப்புகளில் இருந்து அடிப்படையில் இது ஏற்பட்டது: சேமிப்பு வைப்புகள் மற்றும் அவற்றிற்கான காலப்பகுதி ஆகியவற்றிற்கு இடையில் பரந்த வட்டி வீத வேற்றுமைகள் காணப்பட்ட பொழுதிலும் வங்கியானது தனது CASA அடிப்படையை வெற்றிகரமாக 4 வீதத்தினால் வளர்த்தெடுத்தது. இது வைப்பு உரிமம் வலுப்பத்தப்பட்டதை உறுதிப்படுத்துகிறது. 2018 ஆம் ஆண்டில் வங்கியின் ஒட்டுமொத்த தேரிய வட்டி வருமானமானது 12 வீத்தினால் வளர்ச்சி கண்டது. இது இலங்கை ரூபாய் 65.6 பில்லியன் ஆகும். தேரிய வட்டி எல்லை அடிப்படையில் 3.1 வீதமாக குறைந்தது. அதற்கு முந்திய வருடம் இது 3.2 வீதமாக காணப்பட்டது. ஏனெனில் சந்தை விகிதத்தில் உயர்வுகள் காணப்பட்ட பொழுததிலும் கூட தனது கடன் கொடுத்த விகிதங்களை பேணுவதற்கு வங்கி முனைந்தது. குறிப்பிட்ட வருடகாலப்பகுதியின் பொழுது திரட்டிய மட்டமானது (அதாவது NII) 12 வீதத்தினால் அதிகரித்தது. இது இலங்கை ரூபாய் 68.7 பில்லியன் ரூபாய் ஆகும்.

வட்டி சாராத வருமானம்

பொதுவாக வட்டி சாராத வருமானமானது அடிப்படையில் தேரிய கடன்கள் மற்றும் தரகு வருமானம், வியாபார இலாபங்கள் மற்றும் ஏனைய தொழிற்பாட்டு வருமானம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. குறிப்பிட்ட வருடகாலத்தின் பொழுது தேரிய கட்டணங்கள் மற்றும் தரகு ஆகியன 11 வீதத்தினால் அதிகரித்தன. இது 8.4 பில்லியனாகும். கடன் மற்றும் பற்று அட்டைகள் தொடர்பான வருமானம் 23 வீதத்தினால் அதிகரித்தமை உத்தரவாதங்கள் மற்றும் அதனோடு தொடர்புடையவை ஏனையவற்றுடன் 21 வீதத்தினால் அதிகரித்தமை இதற்கான காரணிகளாகும். குறிப்பிட்ட வருட காலப்பகுதியின் பொழுது வட்டி சாராத வருமானத்திற்கான முக்கிய காரணியாக காணப்பட்டது ஏனைய தொழிற்பாட்டு வருமானமாகும். இது சுமார் 3 மடங்கு அதிகரித்து காணப்பட்டது. இது 12.1 பில்லியன் ரூபாய் ஆகும். வங்கியன் வெளிநாட்டு நாணய நிதிகளினால் உருவாக்கபட்ட நாணய மாற்று இலாபங்களே இதற்கான காரணிகளாகும். குறிப்பிட்ட வருட காலத்தின் பொழுது ஒட்டுமொத்தமாக நோக்குகையில் வங்கியின் வட்டி சாராத வருமானம் ஆனது 47 வீத்தினால் அதிகரித்து காணப்பட்டது. இது 23.5 பில்லியன் ரூபாய் ஆகும்.

போக்குகள் தேறிய வட்டி வருமானம்



மொத்த தொழிற்பாட்டு வருமானம்

தேறிய வட்டி வருமானத்தினால் ஏற்பட்ட ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் ஏனைய தொழிற்பாட்டு வருமானங்களை உறுதியான முறையில் விரிவாக்கம் செய்தமை ஆகியவற்றின் காரணமாக மொத்த தொழிற்பாட்டு வருமானத்தை 20% வங்கியினால் 2018 ஆம் ஆண்டில் பதிவு செய்யக்கூடியதாக இருந்தது. இது இலங்கை ரூபாய் 89.0 பில்லியன் ஆகும். குறிப்பிட்ட வருட காலத்தின் பொழுது வங்கியின் மொத்த தொழிற்பாட்டு வருமானத்தில் நிதி மற்றும் கட்டண அடிப்படையிலான வளங்களானது முறையே 74% மற்றும் 26% பங்களிப்புகளை வழங்கியது. குழுவின் மொத்த தொழிற்பாட்டு வருமானமானது 19% அதிகரித்தது. இது இலங்கை ரூபாய் 94.0 பில்லியனாகும்.

தொழிற்பாட்டு வருமான ஆக்கமைவு



தேய்வு கட்டணங்கள்

குறிப்பிட்ட வருட காலத்தின் பொழுதான மிதமான பொருளாதார நிலைமைகள், கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவுகளுக்கான தேய்மான கட்டணங்களில் தொழிற்துறை ரீதியான அதிகரிப்பிற்கு இட்டுச்சென்றது. 2018 ஆம் ஆண்டில் வங்கியின் தேய்மான கட்டணங்களானது 48% அதிகரித்தது. இது இலங்கை ரூபாய் 14.3 பில்லியன் ஆகும். இத்துறையின் 104% வளர்ச்சியுடன் ஒப்புநோக்குகையில் சேகரித்தல் கண்காணிப்பு பொறிமுறை தொடர்பான தற்போதைய அக்கரைகளையும் இங்கு கருத்தில் கொள்ள வேண்டும். தேய்மான கட்டணங்களில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பானது SLFRS-9 ற்கு ஏற்ப நடந்துள்ளமையை பிரதிபலிக்கின்றது. கடன் இழப்பு ஏற்பாடுகளை கணக்கிடுவது தொடர்பான எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு முறையை ஏற்றுக்கொண்டதன் விளைவாக இது ஏற்பட்டது. இருப்பினும் SLFRS-9 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான தயார்படுத்தலின் பொழுது கட்டண அடிப்படையிலான அனுகுமுறையினை வங்கி ஏற்றுக்கொண்டது. இதன் விளைவாக கடந்த சில வருடங்களாக தேய்மான ஏற்பாடுகள் தொடர்பில் படிப்படியாக அதிகரிப்புகள் ஏற்பட்டன. கடந்த வருடத்தில் 2.8% ஆக காணப்பட்ட

வங்கியின் மொத்த செயற்படாக்கடன் வீதமானது (ஒழுங்கமைப்பு விதிகளிகன் பிரகாரம் கணிப்பிடப்பட்டது) 3.6% வீதமாக அதிகரித்தது. இத்துறையில் NPL வீதமானது 3.4% என்பது குறிப்பிடத்தக்கது.

செலவு முகாமைத்துவம்

குறிப்பிட்ட வருடகாலத்தின் பொழுது மொத்த தொழிற்பாட்டு செலவினங்கள 19% அதிகரித்தன. இது 32.5 பில்லியன் ஆகும். ஆளணியினருக்கான செலவு 11% ஆல் அதிகரித்தமையும் ஏனைய செலவுகள் 35% அதிகரித்தமையும் இதற்கான பிரதான காரணங்களாகும். ஆளணியினர் தொடர்பான செலவு அதிகரிப்பாக 1622 புதிய ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டமை மற்றும் கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மீளாய்வு செய்யப்பட்டமை போன்றவற்றை குறிப்பிட முடியும். பிரதானமாக ஏனைய செலவினங்கள் அதிகரிப்பாக நிரந்தர சொத்துக்களை பேணுவது தொடர்பான செலவினங்கள் மற்றும் அலுவலக நிர்வாகம் மற்றும் தாபன ரீதியான செலவுகள் போன்றவற்றை குறிப்பிட முடியும். குறிப்பிட்ட வருடகாலத்தின் பொழுது வங்கியின் செலவு மற்றும் வருமானம் தொடர்பான வீதம் 38% ஆகும். இத்தொழிற்துறையின் சராசரி வீதமான 47% ஐ விட இது குறைவானதாகும். வங்கி தற்சமயம் மேற்கொண்டு வருகின்ற பயனுறுதிமிக்க செலவு நடவடிக்கைகள் மற்றும் ஆக்கபூர்வமான மேம்பாடுகள் ஆகியவற்றிற்கு இவை சான்று பகிர்கின்றன.

வரிவிதிப்பு

வரிவடிவத்தில் அரசாங்கத்திற்கு பல்வேறு விதமான பெறுமதிகளை வங்கி வழங்கி வருகின்றது. அவற்றுள் நிதி சேவைகளுக்கான சேர் பெறுமதி வரி மற்றும் தேசத்தை கட்டியெலுப்பும் வரி, கடன் மீள் செலுத்துகை வரிவிதிப்பு, வருமான வரி ஆகியன உள்ளடங்குகினறன. 2018ஆம் ஆண்டில் வங்கியின் வரி சார்ந்த பங்களிப்பானது 19% அதிகரித்தது. இது 19.3 பில்லியன் ஆகும். ஒத்திவைக்கப்பட்ட வருவாய் பங்கு அறிமுகப்படுத்தப்பட்டது இதற்கான பிரதான காரணியாகும். இதன் பெறுமதி 2018இல் இலங்கை ரூபாய் 1.4 பில்லியன் ஆகும் மற்றும் வருமான வரியில் 9% அதிகரித்தது. வருமான வரி சார்ந்த செலவுகள் 9.7 பில்லியன் ரூபாய் ஆகும். இதன் காரணமாக பயனுறுதிமிக்க வரி விகிதம் 2018இல் 39% ஆகும். அதற்கு முன்திய வருடத்தில் இது 30% ஆகும்.

செயற்பாட்டுச் செலவுகளின் போக்கு



இலாபம்

தொழிற்பாட்டு ரீதியாக எதிர்கொண்ட பல்வேறு விதமான சவால்களுக்கு மத்தியில் 2018 ஆம் ஆண்டில் வரி செலுத்துவதற்கு முன்னரான இலாபமாக ரூபாய் 31.9 பில்லியனை வங்கி பதிவு செய்தது. அதற்கு முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 5% அதிகரிப்பாகும். குறிப்பிட்ட வருடகாலப்பகுதியின் பொழுது வருமான வரி சார்ந்த செலவுகள் அதிகரித்தமையின் காரணமாக உரிமை முதல் பங்கீட்டுப்பாட்டளர்களுடன் தொடர்புடைய இலாபமானது 9% ஆல் குறைந்தது. இது 19.5 பில்லியனாகும். இருப்பினும் நாட்டின் தனி பாரிய இலாபம் ஈட்டும் நிறுவனம் என்னும் தனது நிலையினை வங்கி பேணி வந்தது. மேலும் முன்னனி சேவை வழங்குனர் என்ற தனது நிலையினையும் பாதுகாத்துக் கொள்ள முடிந்தது. குறிப்பிட்ட வருடகாலப்பகுதியின் பொழுது குழுமட்டம் சார்ந்த பண்பு ரீதியான இலாபம் 9 வீதத்தினால் குறைந்தது. இது 19.5 பில்லியனாகும். அதேவேளை சராசரி சொத்துக்கள் தொடர்பான இலாபம் (ROAA) அடிப்படையில் 1.5 வீதத்தினால் வீழ்ச்சி கண்டது. (அதற்கு முந்திய வருடம் இது 1.7 வீதமாகும்)

இலாபம்



ROAA மற்றும் ROAE



மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

நிதி ரீதியான

நிதி ரீதியான ஸ்திரத்தன்மை

சொத்து வளர்ச்சி

2018 ஆம் ஆண்டில் வங்கியானது தனது வளர்ச்சிப் பயணத்தில் பிரதான அடைவுகளை பதிவு செய்தது. சொத்துக்களில் இலங்கை ரூபாய் 2.0 ட்ரிலியனை விட அதிகமானதாகும். 2018 டிசெம்பர் இறுதிக்காலப்பகுதியில் மொத்த சொத்துக்கள் 16% இனால் வளர்ச்சி கண்டது. இது இலங்கை ரூபாய் 2.3 ட்ரிலியன் ஆகும். கடன்களில் ஏற்பட்ட காத்திரமான வளர்ச்சி, கடன் மற்றும் முற்பணங்களில் 24% வளர்ச்சி ஆகியவற்றுடன் வங்கியானது சகல வியாபாரம் சார்ந்த விடயங்களிலும் பரந்தளவிலான விரிவாக்கங்களை மேற்கொண்டது. வளர்ச்சிக்கு இட்டு சென்ற பிரதான கடன் கொடுத்தல்களானது 64% மேலதிகப்பற்றை கொண்டிருந்தது. திட்டம் சார்ந்த கடன் 16% மற்றும் தவனைக்கடன் 25% ஆக காணப்பட்டது. குறிப்பிட்ட வருட காலப்பகுதியில் வங்கியின் சிறிய மற்றும் நடுத்தர வணிக முயற்சி தொடர்பான அவதானம் மற்றும் அபிவிருத்தி சார் கடன் கொடுத்தல் ஆகியவற்றை இவை பிரதிபலித்தன. குறிப்பிட்ட வருட கால பகுதியில் வியாபார ரீதியாக நோக்குகையில் சில்லறை மற்றும் பெரு நிறுவன வளர்ச்சியானது முறையே. 9% மற்றும் 39% ஆக காணப்பட்டது. (மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளும் முகமாக வியாபாரம் விடயம் சார் மேலாய்வுகள் தொடர்பில் 126 முதல் 135 வரையிலான பக்கங்களை பார்க்கவும் குறிப்பட்ட காலப்பகுதியில் அரசாங்கம் கொடுத்த கடன்களும் 36% அதிகரித்தன குறிப்பாக வீதி நிர்மாணப்பணிகள், நீர்சார்ந்த கருத்திட்டங்கள் ஏனையவைகள் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்கள் இவற்றுள் உள்ளடங்கும். வங்கியின் முதலீட்டு பட்டியலானது அடிப்படையில் அரசாங்க பிணையங்கள், குறிப்பிடப்பட்ட உரிமை முதல்கள், குறிப்பிடப்படாத உரிமை முதல்கள் மற்றும் கடன்பிணைகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது. குறிப்பிட்ட வருட காலப்பகுதியில் காணப்பட்ட காத்திரமான கடன் வளர்ச்சியின் காரணமாக வங்கியின் சொத்துக்கள் தொடர்பான ஆக்க அமைவானது கடன் சொத்துக்களை நோக்கி அதிகளவில் தலைப்பிடப்பட்டுள்ளது. அதற்கு முன்திய வருடத்தில் 60% ஆன சொத்துக்களுடன் ஒப்பிடுகையில் தற்போது 63% ஆக காணப்படுகிறது

மொத்த சொத்து



சொத்து ஆக்க அமைவு



நிதியிடல் நிலை

இலங்கை ரூபாய் 5 பில்லியன் உரிமை முதல் உள்வருகையுடன் ஒப்பிட்டளவில் காத்திரமான பண வைப்பு ஆகியவற்றின் காரணமாக வங்கியின் நிதியிடல் முதலீட்டு பட்டியலனாது வலுவடைந்தது. மொத்த பொறுப்புகள் 17% இனால் அதிகரித்தன. வைப்பு வளர்ச்சி 14% இனாலும் மற்றும் நேர் மாற்று மீள் கொள்வனவு வீதம் (REPO) கடன் பெறுகைகள் அதேவேளை 119% லும் வெளிநாட்டு நாணய கடன் பெறுகைகள் 7% லும் அதிகரிப்பிற்கு இட்டுச் சென்றன. இலங்கை வங்கியின் பெயர் நாமம் அதன் பலம் மற்றும் புவியியல் ரீதியான விரிவான பல பிரதேசங்களை சென்றடைந்தமை ஆகியவற்றின் காரணமாக வைப்பு அணிதிரட்டல் ரீதியாக இலங்கை வங்கி தொடர்ந்தும் முன்னணியில் திகழ்கின்றது. வைப்புகளே வங்கியின் பிரதான நிதியிடல் மூலங்களாக தொடர்ந்தும் காணப்படுகின்றன. 2018 டிசெம்பர் இறுதியில் மொத்த சொத்துக்களில் இது 78% வீதமாகும்.

நிதியிடல் விபரம்



சந்தை வட்டி வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக வைப்புகளுக்கான செலவுகள் அதிகரித்தன. அதிகரித்த ஏனைய கடன் பெறுகைகள் மூலம் தனது கடன் வளர்ச்சிற்கு நிதியிட வங்கி முனைந்தது. இதன் பிரகாரம் கடன் பெறுகைகள் 32% ஆல் அதிகரித்தன. இது இலங்கை ரூபாய் 350 பில்லியன் ஆகும். REPO கடன் பெறுகைகள் 2 மடங்கு அதிகரித்தமையை இது பிரதி பலிக்கின்றது, இலங்கை ரூபாய் 12 பில்லியன் பெறுமதியான பயன்படுத்தாத தொகுதிக் கடனானது விநியோகித்தமை மற்றும் வெளிநாட்டு நாணயக் கடன் பெறுகைகள் அதிகரித்தமை ஆகியன இவற்றுக்கான காரணியாகும். ஒட்டு மொத்தமாக நோக்குகையில் வங்கியின் ஐந்தொகையில் 15% கடன் பெறுகைகள் மூலம் நிதியிடப்பட்டது.

பங்கீட்டுப்பாட்டாளர்கள் நிதி

அரசாங்கத்திடமிருந்து இலங்கை ரூபாய் 5 பில்லியன் உரிமை முதல் உள்வருகையாக கிடைக்கப்பெற்றதன் காரணமாக வருடகாலப்பகுதியின் பொழுது வங்கியானது தனது மூலதன நிலையை மேம்படுத்தக்கூடியதாக இருந்தது. தனது மூலதன மட்டத்தை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே வங்கிக்கு காணப்பட்டதன் காரணமாக இலாப பங்கு செலுத்துகை 25% இனால் குறைக்க வேண்டிய எமக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக குறிப்பிட்ட வருட காலத்தின் பொழுது உள்ளக ரீதியில் உருவாக்கப்பட்ட நிதியை அதிகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. 2018 டிசெம்பர் இறுதியின் பொழுது வங்கியின் பங்கீட்டுப்பாட்டாளர்கள் நிதியானது 9% இனால் அதிகரித்தது. இது இலங்கை ரூபாய் 121.4 பில்லியன் ஆகும். ஒரு மூலதான வீதத்திற்கான வங்கியின் பொதுவான உரிமை முதல் மட்டமானது 10.3% பதியப்பட்டது. (ஆக குறைந்த 8.875% ஒப்பிடுகையில்) 2018 ஆம் ஆண்டில் இறுதி காலப்பகுதியில் மொத்த மூலதன வீதமானது 14.6% ஆக காணப்பட்டது. (ஆக குறைந்தது தேவைப்பாடு 12.875% ஆகும்) பாசல் III வழிகாட்டிகள் மற்றும் SLFRS-9 ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் தனது மூலதன நிலையை மேலும் வலுப்படுத்துவதற்கான மாற்று வழிமுறைகளை நாடுகின்ற அதேவேளை ஒழுங்கமைப்பு மூலதன தேவைப்பாடுகளுக்கு ஏற்ப தனது வளர்ச்சி சார்ந்த அபிலாசைகளை மிக கவனமாக சமநிலைப்படுத்த வேண்டியக் தேவை வங்கிற்கு காணப்பட்டது.

திரவத்தன்மை

உறுதியான முதலீட்டுப் பட்டியல் வளர்ச்சி அடைந்ததற்கு மேலதிகமாக இலங்கை வங்கியானது குறிப்பிட்ட வருடகாலப் பகுதியின் பொழுது சௌகரியமானது திரவத்தன்மை நிலைமையை பேணி வந்தது. வருட காலப்பகுதியில் வங்கியின் உறுதியான கடன் வளர்ச்சியின் காரணமாக வங்கியின் திரவத்தன்மை நிலைமையில் சிறிதளவு மாற்றம் ஏற்பட்டது. அதேவேளை ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகள் தொடர்பிலும் நிலைமை சிறப்பாக காணப்பட்டது. கடந்த வருடம் வங்கியின் கடன் வைப்பு விகிதம் 79% ஆக காணப்பட்ட பொழுதிலும் இவ்வருடம் 86% ஆக அதிகரித்தது. 2018 டிசெம்பர் இறுதியில் சட்ட பூர்வமான திரவத்தன்மை சொத்துக்கள் ஆனது 24.47% பதியப்பட்டது.ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளான 20% விட இது அதிகமாக காணப்பட்டதுடன் தொழிற்துறை மட்டமான 24.5% ஏற்ப காணப்பட்டது.

பிரதான திரவத்தன்மை விகிதங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

	2018	2017
திரவத்தன்மை சொத்துக்கள் விகிதம் (உள்நாடு)	24.47	27.22
திரவத்தன்மை காப்பு விகிதம (இலங்கை ரூபாய்)	143.51	141.46
திரவத்தன்மை காப்பு விகிதம் (சகல நாணயங்களும்)	114.99	105.04

குழு செயலாற்றுகை

10 துணை கம்பனிகளும் 4 இணை கம்பனிகளும் வங்கியிடம் காணப்படுகின்றன. இவை நிதி ரீதியான சேவைகள், சொத்து முகாமைத்துவ சேவைகள், மின் உற்பத்தி உள்ளடங்களாக ஏனைய சிலவற்றுடன் பல்வேறு வகையான தொழிற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. இக்குழுவில் வங்கியே பாரிய அமைப்பாக காணப்படுகின்றது. ஒன்று திரட்டிய சொத்துக்களில் 98% வங்கிக்கு உரியவை.

ஓப்பீட்டளவில் குழுக் கம்பனிகள் வழங்குகின்ற சிறிய பங்களிப்புகளுடன் துணைக்கம்பனி முகாமைத்துவ சமவாயத்தின் கீழ் துணைக்கம்பனிகன் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன.இதில் வருடாந்த பூரணத்துவமிக்க துணைக்கம்பனி செயலாற்றுகை உள்ளடங்குகின்றது. துணைக்கம்பனிகளின் நிதி ரீதியான மற்றும் தொழிற்பாட்டு ரீதியான செயலாற்றுகையில் வங்கியினால் முறையாக மேற்பார்வை செய்யப்படுகின்ற அதே வேளை குழுவின் ஒட்டுமொத்த இடர் அளவுகளுக்கு ஏற்ப இடர்கள் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன என்பதை உறுதி செய்து கொள்ளும் முகமாக வங்கியின் பிரதான இடர் தொடர்பான அதிகாரியுடன் இடர்கள் தொடர்பான விடயங்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. மேலும் தாய் கம்பனியின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப துணைக்கம்பனிகளும் இணைகம்பனிகளும் தனது செயற்பாடுகளை மேற்கொள்கின்றன என்பதை உறுதி செய்து கொள்ளும் முகமாக வங்கியின் பிரதிநிதி ஒருவர் சபைகளில் பதவி வகிக்கின்றார்.

மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

உற்பத்தி மூலதனம்

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்

நாடளாவிய ரீதியிலும் சர்வதேச ரீதியாகவும் பல்வேறு இடங்களில் நிதி ரீதியான சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகளை வழங்குவதுடன் நிதி ரீதியான உள்ளடக்கத்தை இலகுப்படுத்தும் முகமாக இத்துறையின் மிகவும் விரிவான வாடிக்கையாளர் தொடர்பு புள்ளி வலயமைப்பு மூலம் வங்கி தொழிற்பட்டு வருகின்றது. CRM மற்றும் சுய வங்கி கிசோக் மற்றும் டிஜி (DIGI) நிலையங்கள், இணையத்தளம் மற்றும் தொலைபேசி பிரயோகங்கள் ஆகியவற்றின் மூலம் மேற்கொண்ட அதிகரித்த முதலீட்டின் காரணமாக தனது டிஜிட்டல் சார் சுய சேவைகள் மூலம் சுய சேவைகளை விரிவாக்குதல் தொடர்பில் உபாய ரீதியான வலியுறுத்தல்களை இலங்கை வங்கி மேற்கொண்டுள்ளது.

நாடளாவிய வலையமைப்பு
9 மாகாணங்களிலும் 577 கிளைகள் பரவிக் காணப்படல்
52 மட்டுப்படுத்தப்பட்ட சேவை கிளைகள் **14** RLCs* **15** SME** நிலையங்கள்

284
ஸ்மாட் வலயம்

06
நடமாடும் கிளைகள்

776 தன்னியக்க ரெலர் இயந்திரங்கள்
163 பணம் வைப்பிடும் இயந்திரங்கள்
118 பண மீள்சுழற்சி இயந்திரங்கள்
49 கட்டணம் செலுத்தும் கியொஸ்கள்

ஒன்லைன்/ கைபேசி வங்கியியல்
இயங்குதளம்

2018 இல் உபாய ரீதியான முன்னுரிமைகள்

மிலேனியம் வாடிக்கையாளர்களை கவர்ந்து அவர்களை தம்முடன் வைத்திருக்கும் முகமாக எமது டிஜிட்டல் சார் வாய்ப்புகளை மேம்படுத்தல்.

அதிகரித்த வினைத்திறன் மற்றும் ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு இட்டுச்செல்லும் முகமாக சீர் செய்தல் மற்றும் புத்தாக்கம் சார்ந்த முறைகள்.

மின்னுகர்வை குறைத்து பசுமை சார் கிளைகளை நிர்மானிப்பதன் மூலம் வங்கியின் நேரடி செயற்பாடுகள்

*RLC - பிரதேசக் கடன் மையங்கள்

**SME - சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் மையங்கள்

2018இல் முன்னெடுப்புகள்

- தானியங்கி மற்றும் சுய தேவை தொடு திறைகளை கொண்ட டிஜி (DIGI) நிலையங்கள்
- NFC இயலுமையுடன் கூடிய ATM இயந்திரங்கள்
- NFC அட்டைகள் மற்றும் MPOS கொடுப்பனவு வசதிகளை பெற்றுக்கொள்ள முடியும்
- புதிய டிஜிட்டல் வங்கி தீர்வுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. எமது டிஜிட்டல் வழங்கள் முறைகள் மீளாய்வு செய்யப்பட்டதுடன் புதிய உற்பத்தி சார் விடயங்கள் மீள் அறிமுகப்படுத்தப்பட்டன
- டிஎம்எஸ் மூலமாக தற்போதைய முறை தானியங்கிகள்
- தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் - வலையமைப்பு சார் உட்கட்மைப்புகளில் பாரிய தரம் உயர்த்தல்கள்

2019இற்கான முன்னுரிமைகள்

- கிளை அடர்த்தி : 100,000 நபர்களுக்கு சுமார் 2.93 இலங்கை வங்கிக் கிளைகள்
- ATM அடர்த்தி : 100,000 நபர்களுக்கு சுமார் 4.17 ATM இயந்திரங்கள்
- 65% டிஜிட்டல் ஏற்றக்கொள்ளல்கள் (2017: 60%)
- கிளைகள் மூலமாக 885,238 kWh புதிப்பிக்க தக்க சக்தி உருவாக்கப்பட்டது.
- பசுமை அங்கீகாரமளிக்கப்பட்ட கிளையாக மற்றுமொரு கிளை அங்கீனரிக்கப்பட்டது.
- ஸ்மார்ட் இணையம் சார் வங்கி முறைகள் பல இடங்களில் மீள் ஆரம்பிக்கப்பட்டன.
- ஸ்மார்ட் பாஸ்புத்தகத்தின் IOS முறை ஆரம்பிக்கபட்டது
- புதிய பின்டெக் உற்பத்திகளை அறிமுகம் செய்தல்

2018இல் எமது செயலாற்றுகைகள் எவ்வாறு இருந்தன

- வங்கி பௌதீக ரீதியாக காணப்படுவதை விரிவாக்கம் செய்தல் - புதிய 10 கிளைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
- ஸ்மார்ட் வலையங்களாக வங்கிக் கிளைகளை மாற்றி அமைத்தல்.
- ஓவ்வொரு மாகாணத்திலும் நடமாடக்கூடிய வங்கிக் கிளைகளை உருவாக்குதல்.
- ஓட்டுமொத்த கொடுக்கல் வாங்கல்களில் சுமார் 75% ஐ டிஜிட்டல் முறை கொடுக்கல் வாங்கல்களாக அதிகரித்தல்.

டிஜிட்டல் உட்கட்டமைப்பு

நிதி ரீதியான சேவைகளில் டிஜிட்டல் புரட்சியானது வாடிக்கையாளர்கள் வங்கியுடன் ஊடாட்டத்தை ஏற்படுத்தக்கூடிய விதத்திலும் ஒட்டு மொத்த வாடிக்கையாளர் அனுபவங்கள் மாறக்கூடிய முறையிலும் இடம் பெற்று வருகின்றன. இணைய ரீதியான முறைகளை தொடர்ச்சியாக வாடிக்கையாளர்கள் கோரி வருகின்றனர். அவையாவன இணைய மூலமான மற்றும் கையடக்கத் தொலைபேசித் மூலம் தொடர்புகளை ஏற்படுத்தி தமது கொடுக்கல் வாங்கல்களை தாம் விரும்பியவாறு வங்கிகளுடன் மேற்கொள்வது. இலங்கையில் கணினி மற்றும் டிஜிட்டல் தொடர்பான அறிவு வீதம் அதிகரித்து வருவதன் காரணமாகவும் வாடிக்கையாளர்கள் நவீன மையப்பட்டு வருவதன் காரணமாகவும் டிஜிட்டல் மற்றும் சுய சேவை முறைகள் தொடர்பான கேள்விகள் அதிகரித்து வருகின்றன. இச்சூழ்நிலையில் இத்தகைய இயங்காற்றலுக்கு பதிலளிக்க முடியாத வங்கிகள் காலப்போக்கில் போட்டியிலிருந்து மென்மெதுவாக விளகிச்செல்ல நேரிடலாம்.

இலங்கை வங்கியின் பிரதான உபாய முறையானது மிலேனியம் வாடிக்கையாளர்களை மெம்மேலும் பெற்றுக்கொண்டு அவர்களை தக்க வைத்துக்கொள்வது என்ற முறையில் டிஜிட்டல் சார் தொழில் நுட்பங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் வளர்ந்து வருகின்ற சூழலில் வாழ்கின்றவர்களை கருத்திற் கொண்டு பல விடயங்களை எமது உபாய முறைகள் உள்ளடக்கியுள்ளன. டிஜிட்டல் வாடிக்கையாளர்களை எம்மோடு இணைத்து அவர்களை தக்க வைத்து கொள்ளும் முகமாக டிஜிட்டல் மாற்றம் என்ற பயனத்தை இலங்கை வங்கி முன்னெடுத்துள்ளது. வாடிக்கையாளர் அனுபவத்தை மாற்றதல் மற்றும் பெயர் நாம பண்புகளை மேம்படுத்துவதை இவை உள்ளடக்கியுள்ளன.

புதியமுறைகளை விருத்தி செய்வதற்காக தொழில் நுட்பத்தை பயன்படுத்துகின்ற அதே வேளை வாடிக்கையாளர்கள் இலகுவாக அனுகி விடயங்களை மேற்கொள்ளுதல் அவர்களது சௌகரியங்களை அதிகரிக்கச்செய்தல். வாடிக்கையாளர்களது அனுபவங்களை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக இலங்கை வங்கி உழைத்து வருகின்றது.

மூலதன பிணைப்புகள் மற்றும் சமநிலை



2018இல் உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தை விருத்தி செய்யும் முகமாக ஒதுக்கப்பட்ட வளங்கள்

பௌதீக ரீதியான உட்கட்மைப்புக்களில் முதலீடு

இலங்கை ரூபாய் **1.5 பில்லியன்**

டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட உட்கட்டமைப்புகளில் முதலீடு

இலங்கை ரூபாய் **2.0 பில்லியன்**

	கணினி கல்வி	டிஜிட்டல் கல்வி	இணையப் பயன்பாடு
இலங்கை			
2017	28.6	40.1	22.7
2016	27.6	33.8	16.4
2017இல் வயது அடிப்படையில்			
15 to 19	63.0	73.4	38.7
20 to 24	56.9	74.5	55.4
25 to 29	46.7	67.1	49.2
30 to 34	35.2	55.1	37.0
35 to 39	26.6	44.1	28.1
40 to 49	19.8	32.7	18.9
50 to 59	11.0	17.5	9.5

மூலம் : கணனிக்கல்வி புள்ளி விபரங்கள் - 2017, சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்

எமது டிஜிடல் மாற்ற பயணத்தில் குறிப்பிடக்கூடிய முதலீடுகள்



டிஜிடல் சார் மாற்றங்களை வெற்றிகரமாக மேற்கொள்ள வேண்டுமாயின் அமைப்பினுள் உறுதியான தலைமைத்துவம் மற்றும் புதிய கலாசார சிந்தனைகள் ஆகியன அவசியப்படுகின்றன. எமது டிஜிடல் மயப்படுத்தும் பயணத்தில் உபாய ரீதியான முன்னுரிமைகளை அடைவதற்கு பரந்தளவிலான மேற்பார்வை மற்றும் வழிகாட்டி ஆகியவற்றை அர்பணிப்புடன் செயற்படுகின்ற தகவல் தொழில் நுட்பம் தொடர்பான வழிப்படுத்தல் குழு வழங்குகின்றது. ஊழியர்களது தகவல் தொழில் நுட்பம் திறன்களை விருத்தி செய்வது இங்கு முக்கியமான விடயமாகும். அதன் நிமித்தம் தகவல் முறைமை, முன்னேற்றகரமான தொழில் நுட்ப மேன்மைகள், தகவல் தொழில் நுட்ப இடர் முகாமைத்தும், இணைய அதாவது சய்பர் பாதுகாப்பு போன்றவற்றில் பல்வேறு விதமான பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் குறிப்பிட்ட வருடத்தின் பொழுது இணைய பாதுகாப்பு தொடர்பான விடயங்களும் மேற்கொள்ளப்பட்டன. 2018 ஜனவரியில் B-App பிரயோகம் ஆரம்பிக்கப்பட்ட பொழுது ஆரம்பத்தில் ஏற்பட்ட இது சார்ந்த பிரச்சினைகளை தீர்க்கும் முகமாக எமது ஆய்வு திணைக்களம் பல ஆய்வுகளை மேற்கொண்டு இது தொடர்பான உதவிகளை எமக்கு நல்கியது. இத்தகைய முதலீடுகளுக்கு சமாந்தரமாக உறுதித்தன்மை, பாதுகாப்பு, நாம் பயன்படுத்துகின்ற தொழில் நுட்பத்தில் நிலைபேறு தன்மை ஆகியவற்றை உறுதி செய்து கொள்ளும் முகமாக வளங்களை ஒதுக்கீடு செய்தோம். வங்கியின் தகவல் தொழில் நுட்பம் மற்றும் சைபர் பாதுகாப்பு இடர் முகாமைத்துவ வரைவு சட்டகம் தொடர்பான விடயங்கள் இவ் அறிக்கையின் 116 முதல் 117 வரையிலான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

எமது டிஜிடல் முறையின் சிறப்பான செயல்திறன்

வங்கியானது தற்சமயம் 776 ATMகள் , 163 CDMகள் மற்றும் 118 CRMகள் ஆகியவற்றை நாடலாவிய ரீதியில் தொழிற்படுத்தி வருகின்றது. வங்கித்துறையில் மிகவும் பாரிய டிஜிட்டல் வலையமைப்பு இதுவாகும். எமது ஒட்டுமொத்த ATMகளில் 67% வை மேல் மாகாணத்திற்கு வெளியில் பொருத்தப்பட்டுள்ளன. வாடிக்கையாளர்களை டிஜிட்டல் பயன்பாட்டு வங்கி முறையை நோக்கி கவர்ந்து செல்வதற்கான எமது உபாய ரீதியான நடவடிக்கைகளுக்கான பலன் 2018இல் கிடைத்தது. சுமார் 65% கள் இந்த டிஜிட்டல் முறையை பயன்படுத்தி வருகின்றனர்.

ஒருநாளுக்கான சராசரி கொடுக்கல் வாங்கல்.

- முக்கிய வங்கிமுறை 1.6 மில்லியன்
- ATM கொடுப்பனவுகள் 168,317
- CDM கொடுப்பனவுகள் 43,760
- கடன் அட்டை கொடுப்பனவுகள் 196,275
- Credit card Transactions 8,645
- POS கொடுப்பனவுகள் 54,469

டிஜிடல் முறை பயன்பாடு

	2018	2017	2016
வீதம் (%)	65.5	60.5	51.2

பௌதீக ரீதியான உட்கட்மைப்பு வசதிகள்

நாடலாவிய ரீதியில் இலங்கை வங்கியிடம் மொத்தமாக 1,721 நேரடி வாடிக்கையாளர் தொடர்பு நிலையங்கள் காணப்படுகின்றன. இலங்கையின் மிகவும் விரிவான வங்கி வலையமைப்பை கொண்டு இலங்கை வங்கி திகழ்கின்றது. புவியல் ரீதியாக பரந்து காணப்படுவதன் காரணமாக இலங்கை வங்கியானது 62% செல்வாக்கினை அடையக்கூடியதாக இருந்தது. இலங்கையில் உள்ள சகலருக்கும் நிதி ரீதியான உதவிகளை பெற்றுக்கொளள் இலகுப்படுத்துகின்றது. குறிப்பிட்ட வருடத்தின் பொழுது நாம் புதிய கிளையொன்றை திறந்ததுடன் 80 கிளைகளை நவீன மயப்படுத்தினோம். மேலும் நாடளாவிய ரீதியில் 111 அரசாங்க அலுவலகங்களிலும் 2001 பாடசாலைகளிலும் வங்கிச் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்

ஆவண முகாமைத்துவ முறை - 2018இல் அடைவுகள்

- தனிப்பட்ட கடன், வீட்டுக்கடன் மற்றும் வியாபார கடன் செயன்முறைகள் உள்ளடங்களாக பல்வேறு விதமான பணிகள் தானியங்கி முறையின் கீழ் கொண்டுவரப்பட்டன.
- இணைய மூலமான கடன் விண்ணப்பங்கள் - தொழில் வான்மைமிக்கவர்களினால் சிறப்பாக பயன்படுத்தப்பட்டது.
- தானியங்கி மற்றும் மத்தியப்படுத்தப் பட்ட வாடிக்கையாளர் அனுபவ முகாமைத்துவ மாதிரிகள் இவை வாடிக்கையாளர் முறைப்பாடுகள் மற்றும் தொடர்பாடல்களை கையாளுகின்றனர். மேலும் “Tell us online” (online மூலமாக குறிப்பிடுங்கள்) என்ற அம்சத்தையும் வங்கியின் இணையத்தளம் கொண்டுள்ளது.
- வங்கியின் இணையத்தளத்தில் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புகளின் காரணமாக தானியங்கி முறையில் CASA கணக்குகளை திறக்க முடியும்.
- செலுத்தப்படாத கடன்களை மேற்பார்வை செய்தல் - முறையாக செலுத்தப்படாத கடன்கள் தொடர்பில் முன் எச்சரிக்கை
- DMS முறை மூலமாக 127,404 A4 தாள்கள்

மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்

நிதி ரீதியான உள்ளடக்கத்திற்கு இட்டுச்செல்லல்.

கடன்களை வழங்குதல், முதலீடு, நாட்டின் மிகவும் பின் தங்கிய துறைக்கு உற்பத்தி சார் உதவிகளை வழங்குதல் ஆகியவற்றின் மூலம் அரசாங்கத்தின் நிதி ரீதியான உள்ளடக்க நிகழ்ச்சித் திட்டத்தை இலகுப்படுத்துவதற்கு முக்கியமான வகிபாகத்தினை வங்கி மேற்கொண்டு வருகின்றது. வங்கியின் ஒட்டுமொத்த கிளைகளின் 77% வை மேல் மாகாணத்திற்கு வெளியில் அமைந்துள்ளன. இவற்றுள் 27% வை பொருளாதார ரீதியான பின்தங்கிய அல்லது பாதிப்புறும் நிலையில் வாழ்கின்ற மக்களை கொண்ட மாகாணங்களில் காணப்படுகின்றன. மேலும் வங்கியின் 6 நடமாடும் பிரிவுகள் காணப்படுகின்றன.(வாகனங்களில் தொழிற்படும் வங்கி) மரபு ரீதியான வங்கிமுறையை சென்றடைவதற்கு மிகவும் சிரமமாக காணப்படுகின்ற ஓரம் கட்டப்பட்ட சமுதாயங்கள் வாழ்கின்ற பிரதேசங்களுக்கு இதன் மூலம் வங்கி சேவைகள் வழங்கப்படுகின்றன. (மேலதிக தகவல்களுக்கு பக்கம் 22 ஐ பார்க்கவும்)

எமது வலையமைப்பை பசுமையாக்கல்

2015 ஆம் ஆண்டு முதல் இலங்கை வங்கியானது தனது 27 கிளைகளுக்கு சூரிய மின் சக்தி வசதிகளை வழங்கியது. எனவே தனது தொழிற்பாடு மூலம் சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற தாக்கங்களை குறைப்பதற்கு பங்களிப்புச் செய்ததுடன் தேசிய மின் உற்பத்திற்கு புதிப்பிக்கக் கூடிய மின் சக்தியாக 1000kw (1MW)இற்கு பங்களிப்பு செய்தது. மேலும் இலங்கையின் பசுமை கட்டிட சபையினால் எமது திருகோணமலை மற்றும் கெக்கிராவை ஆகியக் கிளைகளுக்கு முறையே பிலடினம் மற்றும் தங்கம் விருதுகள் முறையே வழங்கப்பட்டன.

நிலைபேரான அபிவிருத்திசார் பங்களிப்புகள்

அவதானம் செய்யப்பட்ட பிரதேசங்கள்	2018இல் முன்னேற்றம்	
பின்தங்கிய சமூகங்களில் வாடிக்கையாளர் தொடர்பு நிலையங்கள்	வருடகாலப்பகுதியின் பொழுது வாகனங்கள் மூலமாக இயங்கும் 4 வங்கிகள் மேலதிகமாக இணைத்துக் கொள்ளப்பட்டன.	10 REDUCED INEQUALITIES
பசுமை கட்டிடங்கள், சூரிய மின்சக்தி கிளைகளாக சில மாற்றப்பட்டன.	சூரிய மின் சக்தி கிளைகளின் எண்ணிக்கை: 27 சூரிய மின் சக்தியில் இலங்கை ரூபாய் 146 மில்லியன் முதலீடு. தேசிய மின் சக்தியுடன் சேர்க்கப்பட்ட புதுப்பிக்க கூடிய சக்தி: 1,000 kW சான்றுப்படுத்தப்பட்ட பசுமை கட்டிடங்களின் எண்ணிக்கை : 2	13 CLIMATE ACTION 7 AFFORDABLE AND CLEAN ENERGY
டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டதன் மூலம் பத்திரிகை பயன்பாடு மட்டுப்படுத்தபப்பட்டுள்ளது.	மின்னியல் கூற்றுக்களை பயன்படுத்தும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை : 382,188 டிஜிட்டல் முன்னெடுப்பு மூலம சேமிக்கப்பட்ட பத்திரிகை தாள்கள்: 7 மில்லியன் A4 தாள்கள்	12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION

மனித மூலதனம்

மனித மூலதனம்

இலங்கை வங்கியின் மனித மூலதனத்தை பல்வேறு திறன்களையுடைய அர்பணிப்புடன் செயற்படக்கூடிய 8724 ஊழியர்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். இவர்கள் போட்டி சந்தையின் பிரதான மூலமாகவும் எமது வங்கியின் உபாய ரீதியான எதிர்ப்பார்புகளை முன்னெடுத்து செல்வதில் முக்கியதுவம் மிக்கவர்களாகவும் திகழ்கின்றனர்.

8,724
ஊழியர்கள்

சராசரி சேவை அளவு
09
வருடங்கள்

60%
பெண்கள்
பிரதிநிதித்துவம்

இலங்கை ரூபாய்
338.0
மில்லியன்
பயிற்சி மற்றும்
அபிவிருத்தி
தொடர்பான
முதலீடுகள்

1,622
புதிதாக
ஆட்சேர்க்கப்பட்டவர்கள்

2018 இல் தந்திரோபாயரீதியான முன்னுரிமைகள்

துரிதமாக மாறிவரும் வங்கிச் சூழ்நிலையில் காத்திரமான முன்னேற்றத்தைக் கருதி திறன்கள் மற்றும் அறிவு ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்குடன் ஆற்றலை கட்டியெழுப்பும் செயற்திட்டங்கள்

பல துறைகளில் அனுபவங்களை வழங்குதல்.

மனப்பாங்கு, திசைமுகப்படுத்தல் மற்றும் நிறுவன ரீதியான கலாச்சாரம்

விசேட நிபுணத்துவம் மற்றும் தொடர்ச்சியான தொழில்வான்மை அபிவிருத்தி

பௌதீக ரீதியான உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான உதவி

முழு ஆற்றலுடைய மனித மூலதன முகாமைத்துவ முறை

2018 இல் முன்னெடுப்புகள்

- ஊழியர் வாக்குறுதிகளை அறிமுகம் செய்தல்.
- வங்கியின் டிஜிட்டல் மாற்றங்களுக்கு ஏற்ப புதிய யுகத்திற்கான தொழில்நுட்பங்களை கருதிற்கொண்டு தகவல் தொழில்நுட்ப திறன்கள் மற்றும் அறிவு ஆகியவற்றை மேம்படுத்தும் முகமாக பூரணத்துவ மிக்க பயிற்சி.
- ஊழியர்கள் மத்தியில் தலைமைத்துவ பண்புகளை மேம்படுத்தும் முகமாக விசேட வெளிநிலை பயிற்சி
- வருடாந்த பயிற்சி அட்டவணையில் எதிர்கால பயிற்சிகள் தொடர்பில் புதிய நிகழ்ச்சி திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை.

2018இல் நாம் எவ்வாறு செயலாற்றினோம்.

- ஊழியர்களுக்காக உருவாக்கப்பட்ட பெறுமதி : இலங்கை ரூபாய் 18.9 பில்லியன்
- தக்க வைத்த விகிதம்: 98%
- புதிதாக ஆட்சேர்க்கப்பட்டவர்களது எண்ணிக்கை: 1,622
- 98% செயலாற்றுகை மதிப்பீடுகளை பெற்றுக்கொண்டனர்.
- 174 ஊழியர்கள் பதவி உயர்த்தப்பட்டனர்.
- ஒரு ஊழியருக்கான பயிற்சி தொடர்பான முதலீடு: இலங்கை ரூபாய் 38,071.0
- கைத்தொழில் பிணக்கு காரணமாக வேலை நிறுத்தங்கள் இடம் பெறவில்லை. (பூச்சியம்)
- சிறந்த கிளைகள் தொடர்பான போட்டியின் பொழுது 219 ஊழியர்களுக்கு விருது வழங்கப்பட்டது.
- சதப் புள்ளி விருது வழங்கல் திட்டத்தின் மூலம் 4689 ஊழியர்களுக்கு விருது வழங்கப்பட்டமை.
- பராட்டு கடிதங்கள் மூலம் 145 ஊழியர்களது சேவைகள் அங்கீகரிக்கப்பட்டன.
- 20 ஊழியர்களுக்கு சிறப்பு பாராட்டு கடிதம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.
- வருடத்திற்கான வேலை செய்யும் நாட்கள்: 239

2019 இற்கான முன்னுரிமைகள்

- வருடாந்த பயிற்சி அட்டவணையில் எதிர்கால பயிற்சிகளை கருத்திற்கொண்டு புதிய கற்கை நெறிகள் அறிமுகம் செய்யப்பட்டன.
- விடுமுறை இல்ல வசதிகள் தரமுயர்த்தப்பட்டன.
- எமது ஊழியர்களது தொடர்ச்சியான தொழில்வான்மை அபிவிருத்திகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.
- உள்ளார்ந்த ஆற்றல்களை மேம்படுத்தல்.
- HCM முறைகள் மூலம் மனித வளம் தொடர்பான தொழில்களை தொடர்ச்சியாக தானியங்கி முறைக்கு உட்படுத்தல்.

மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

மனித மூலதனம்

எமது குழு

8724 ஊழியர்களைக் கொண்ட பல்வேறு குழுக்ககள் மூலம் வங்கி வலுப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் எமது வாடிக்கையாளர் அனுபவம் வங்கியின் கூட்டாண்மை விழுமியங்களில் வாழ்தல் ஆகியவற்றை இலகுபடுத்துவதுடன் எமது தந்திரோபாய ரீதியான நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுத்து செல்வதற்கு ஊக்கியாக திகழ்கின்றனர். ஊழியர்களது விருத்தி தொடர்பில் காணப்படும் காத்திரமான நற்பெயர், தொழில் முற்னேற்றத்திற்கான வாய்ப்புகள், வேலை செய்வதற்கான சாதகமான சூழ்நிலைகள் ஆகியன இத்துறையில் பணியாற்றுவதற்கான மிகவும் சிறந்த தொழில்வழங்குனராக எமது வங்கியை உருவாக்கியுள்ளது.

2018 இல் மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட வளங்கள்

ஊழியர்களுக்கான மொத்த கொடுப்பனவு இலங்கை ரூபாய் 18.9 பில்லியன்

புயிற்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான முதலீடுகள் இலங்கை ரூபாய் 338.0 மில்லியன்

HCM முறைகளில் முதலீடுகள்



ஏனைய மூலதனங்களுடன் தொடர்பு மற்றும் பணியாளர் பயிற்சி

ஏனைய மூலதனங்களுடன் தொடர்புடைய பணியாளர் பயிற்சி - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு, திறன்கள், ESMS வழிக்காட்டல், வாடிக்கையாளர் சேவை மற்றும் ஏனையவைகள் HCM முறை மற்றும் தானியங்கி மற்றும் ஏனைய மனித வள உட்கட்டமைப்புக்களில் மதலீடு

சுதர்சன கெலும் கஜநாயக
பிரதான முகாமையாளர் - கண்டி மேற்தரக் கிளை

2003இல் இலங்கை வங்கியில் முகாமைத்துவ பயிலுனராக நான் இணைந்து கொண்டேன்.எனக்கு முதல் நியமனம் அனுராதாபுரம் மாவட்டத்திலுள்ள பெமதுவ கிளையில் வழங்கப்பட்டது. இலங்கை வங்கிற்காக அர்பணிப்புடன் வேலை செய்தமைக்காக சிறந்த பெறுபேறுகள் எனக்கு கிடைத்தன. நான் வங்கித்துறையில் தொடர்சியாக முன்னேற்றம் அடைந்து வந்தேன். முகாமையாளர், சிரேஸ்ட முகாமையாளர் அதனை தொடர்ந்து பிரதான முகாமையாளர் போன்ற தரங்களுக்கு

தொழில் ஒப்பந்தத்தின் பிரகாரம் ஊழியர்கள் - பால்நிலை GRI 102-8 (a)

	ஆண்		பெண்		மொத்தம்	
	2018	2017	2018	2017	2018	2017
நிரந்தரம்	3,467	3,237	5,257	4,350	**8,724**	**7,587**
வெளிமூலவளப்படுத்தல்	1,356	1,363	42	36	**1,398**	**1,399**
ஒப்பந்தம்	152	151	2	7	**154**	**158**
மொத்தம்	**4,975**	**4,751**	**5,301**	**4,393**	**10,276**	**9,144**

கடந்த 15 வருடங்களினுள் பதவி உயர்த்தப்பட்டேன். இலங்கை வங்கியில் பணியாற்றுவதை சிறப்புரிமையாக நான் கருதுகின்றேன்.எனக்கு வழங்கிய சகல விதமான பயிற்சிகள் மற்றும் தொழில் விருத்தி வாய்ப்புகள் ஆகியவற்றிற்கு எனது நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன். இலங்கை வங்கியானது எனது நிதி ரீதியான ஸ்திரத்தன்மையை உறுதிசெய்து கொள்வதுடன் இலங்கை வங்கியில் பணியாற்றுவதன் காரணமாக சிறந்த நபராக திகழக்கூடியதாக உள்ளது. மேலும் எனது சமூக வலையமைப்புகள் விரிவாக்கப்பட்டதுடன் திறன்களும் மேம்படுத்தப்பட்டன.

தொழில் ஒப்பந்தத்தின் பிரகாரம் ஊழியர்கள் - E GRI 102-8 (b)

	நிரந்தரம்		ஒப்பந்தம்	
மாகாணங்கள்	2018	2017	2018	2017
மேல்	3,902	3,459	71	75
தென்	746	631	18	18
சப்ரகமுவ	571	481	11	11
ஊவா	480	401	6	6
வடமேல்	708	606	6	7
மத்திய	728	583	16	17
வட மத்திய	588	542	10	9
கிழக்கு	470	412	7	7
வடக்கு	531	472	9	8
மொத்தம்	**8,724**	**7,587**	**154**	**158**

தொழில்வகைப்படி ஊழியர்கள் - பால்நிலை GRI 102-8 (c)

	ஆண்		பெண்	
	2018	2017	2018	2017
கூட்டாண்மை முகாமைத்துவம்	12	14	3	2
நிறைவேற்று முகாமைத்துவம்	29	35	17	13
பிரதான முகாமையாளர்கள்	56	65	43	39
சிரேஸ்ட முகாமையாளர்கள்	90	98	86	86
கிளை முகாமையாளர்கள் மற்றும் உதவி முகாமையாளர்கள்	409	475	658	620
முகாமைத்துவ பயிலுனர்கள் மற்றும் எனைய உத்தியோகத்தர் தரங்கள்	929	715	1,853	1,537
ஆளணி உதவியாளர்கள் மற்றும் அவைசார்ந்த தரங்கள்	1,520	1,312	2,581	2,037
அலுவலக உதவியாளர்கள் மற்றும் அவைசார்ந்த தரங்கள்	422	523	16	16
மொத்தம்	**3,467**	**3,237**	**5,257**	**4,350**

சகிலா நசாத்
சிரேஸ்ட முகாமையாளர்
வெள்ளவத்தை கிளை

1991 இலங்கை வங்கியில் கனிஷ்ட இலிகிதராக / உதவி காசாளராக நான் இணைந்து கொண்டேன் பல்வேறு பதவி உயர்வுகளுக்கு பின்னர் தற்சமயம் சிரேஸ்ட முகாமையாளர் பதவியினை வகித்து வருகின்றேன். என்னுடன் இணைந்து பணியாற்றுகின்ற சக ஊழியர்கள் மற்றும் மேலதிகாரிகள் ஆகியோரின் உதவியுடன் இலங்கை வங்கியுடன் இணைந்து நான் மேற்கொண்ட பயணமானது தனிப்பட்ட முறையிலும் தொழில் ரீதியாகவும் முன்னேற்றம் அடைய உதவின. இலங்கை வங்கிற்க்கும் இங்கு நான் சந்தித்த சிறப்பான மக்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். நான் பெரும்பாலும் எனது தொழில் சார்ந்த எல்லா இலக்குகளையும் அடைந்துள்ளேன். நான தற்சமயம் வெற்றிகரமான,மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்க்கையை அனுபவித்து வருகின்றேன்.இலங்கை வங்கியின் மத்திய பயிற்சி நிறுவகத்தில் பீட உறுப்பினராக சேவை ஆற்றுவதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தமையினால்

இலங்கை வங்கியின் மனித மூலதனம் அபிவிருத்தி அடைவதற்கு பங்களிப்புச் செய்ய முடிந்தமையையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கை வங்கியிள் மேலும் பல வருடங்கள் சிறப்பாக பணியாற்றுவதற்கு நான் எதிர்பார்கிறேன்.

ஈ. பிரேமராஜன்
சிரேஸ்ட முகாமையாளர்
யாழ்பாண மேற்தர கிளை

1982 நவம்பரில் இலங்கை வங்கியுடனான எனது தொழில் ஆரம்பித்தது. அப்பொழுது அபிவிருத்தி உதவியாளராக இலங்கை வங்கியுடன் நான் இணைந்து கொண்டேன். அன்று முதல் பல்வேறு பதவிகளுக்கு நான் பதவி உயர்த்தப்பட்டேன். மேலும் பல இலங்கை வங்கிக் கிளைகளில் பணியாற்றுவதற்கான வாய்ப்புகளும் எனக்கு கிடைத்தன. குறிப்பாக திருநெல்வேலி, யாழ்பாணம், பருத்தித்துறை, மானிப்பாய் போன்ற கிளைகளில் முகாமையாளராக பணியாற்றினேன் மற்றும் வன்னி பிரதேச அலுவலகம், யாழ் பிரதேச அலுவலகம் ஆகியவற்றில் பிரதேச முகாமையாளராக பணியாற்றினேன். 2018ஆம் ஆண்டு நவம்பரில் யாழ்ப்பாண அதிமேற்தர கிளையில் பதில் பிரதான முகாமையாளராக நியமிக்கப்பட்டேன். கடந்த 37 வருடங்களாக இலங்கை வங்கியில் பணியாற்றுவதானது எனக்கு கிடைத்த கௌரவமாக நான் கருதுகின்றேன். எனது தனிப்பட்ட மற்றும் தொழில் வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சங்களையும் இலங்கை வங்கி செழிப்புர செய்தது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்ற அதேவேளை இன்று நான் இருக்கின்ற நிலைக்கு என்னை உருவாக்கியது இலங்கை வங்கியே. எனது குடும்பம் எதிர்கொண்ட நிதி ரீதியான சகல பிரச்சினைகளையும் தீர்ப்பது தொடர்பில் இலங்கை வங்கி முக்கிய வகிபாகத்தை வகித்ததோடு இன்று நாம் அனுபவிக்கின்ற தராதரம் மிக்க வாழ்க்கை தரத்தை அடைவதற்கும் இலங்கை வங்கியே காரணமாகும்.

மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

மனித மூலதனம்

மனித வளங்கள் ஆளுகை மற்றும் முகாமைத்துவ அணுகுமுறை

திறன்களை முகாமைத்துவம் செய்வது தொடர்பான வங்கியின் அனுகு முறையானது மனித வளங்களுடன் தொடர்புடைய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய பூரணத்துவமிக்க கொள்கைகள் மூலம் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. சபை ஒப்புதல்களுக்காக கொள்கைகளை உருவாக்கி அதனை விதப்புரை செய்வதற்கு பொறுப்பாக பொது முகாமையாளரின் தலைமையின் கீழ் அரப்பணிப்பு மிக்க மனித வளங்கள் கொள்கை குழு காணப்படுகின்றது. வங்கியின் மனித வளங்களை ஆளுகை செய்கின்ற மனித வளங்கள் மற்றும் ஊதியம் தொடர்பான உப குழு சபைக்கு அவசியமான உதவிகளை வழங்குகின்றது. வங்கியின் மனித வளங்கள் தொடர்பான உபாயமுறையானது கூட்டாண்மைத் திட்டத்தின் மூலமாக விருத்தி செய்யப்பட்டு மனித வளங்கள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மனித வளங்கள் கொள்கையானது ஆட்களை வேலைக்கு சேர்த்தல், வேலையில் இருந்து நிறுத்துதல், விடுகை உரித்துகள், சம்பளங்கள், ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. தொழில் நடைமுறை மற்றும் கண்ணியமான வேலை ஆகியவற்றின் பிரகாரம் வங்கியை கடைகள் மற்றும் அலுவலக கட்டளைச்சட்டம் கட்டுப்படுத்துகின்றது. மனித உரிமைகளை உள்ளடக்கியதாக உடன் படிக்கைகளும் ஒப்பந்தங்களும் காணப்படுகின்றன. ஒவ்வொரு ஊழியரும் தனது சாதி பால்நிலை அல்லது இனம் எதுவாக இருந்தப் பொழுதிலும் சம வாய்ப்புகள் என்பதன் கீழ் சமத்துவமான நடத்தையை பெற்றுக்கொள்வதற்கு அருகதையுடையவர்கள்.





திறமையானவர்களை கவர்ந்து தக்கவைத்துக்கொள்ளுதல்

இலங்கையின் முன்னணி வங்கி என்ற முறையிலும் நிதித்துறையின் சந்தைப்படுத்துதல் முதன்மையாளர் என்ற முறையிலும் ஊழியர்களை கவருவது தொடர்பில் இலங்கை வங்கி உறுதியான நிலையில் உள்ளது. ஆளணி பயிலுனர்கள் மற்றும் முகாமைத்துவ பயிலுனர்கள் ஆகிய பதவிகளுக்கான ஆரம்பக்கட்ட வேலைகளுக்காக இலங்கை வங்கிற்கு ஆயிர கணக்கானக விண்ணப்பங்கள் வந்து குவிகின்றன. இலங்கை வங்கியானது நன்கு கட்டமைக்கப்பட்ட தெளிவாக வரையரை செய்யப்பட்ட ஆட்சேர்த்தல் செயன்முறையை பின்பற்றுகின்றது. பணியாளர்களுக்கான பிரதேச ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பில் பணிப்பாளர்கள் சபையின் ஒப்புதலை பெற்றுக்கொள்வதற்காக மனித வளங்கள் கொள்கை குழுவினால் சபைக்கு விதப்புரைகள் செய்யப்படுகின்றன. ஒப்புதல் கிடைக்கப்பெற்ற பின்னர் வேலைவாய்ப்புகள் தொடர்பாக 3 மொழிகளிலும் செய்தித்தாள் மற்றும் வங்கியின் இணையத்தளம் ஆகியவற்றில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்படுகின்றன. எழுத்து மூலமான பரிட்சை பெறுபேறுகள் மற்றும் நேர்முக பரிட்சை ஆகியவற்றின் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொது முகாமையாளரினால் நேர்முக பரிட்சையை நடத்தும் குழு தீர்மானிக்கப்படுகின்றது.

சகல புதிய ஊழியர்களும் முழுமையான துரித பயிற்சி ஒன்றினை பெற்றுக்கொள்கின்றனர். சுமார் 4 வருடங்களுக்கு பின்னர் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் பாரியளவில் ஆட்சேர்த்தல் பணி இடம்பெற்றது. அரச நிறுவனம் என்ற முறையிலே மேற்குறிப்பிடப்பட்ட கட்டமைக்கப்பட்ட நடைமுறைகளை ஆட்சேர்த்தல் தொடர்பில் நாம் பின்பற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ள காரணமாக பொதுவாக எமது ஆட்சேர்த்தல் செயன்முறைக்கு சற்று நீண்ட காலம் எடுக்கின்றது. இருப்பினும் இங்கு வெளிப்படைத் தன்மைகள் பேணப்படுகின்றன. ஆட்சேர்த்தல் செயன்முறைக்கு நீண்ட காலம் எடுத்த பொழுதிலும் வினைத்திறன் மிக்க முகாமைத்துவம் மற்றும் தனது மனித வளங்களை அதிகளவு பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலமாக சுமூகமான செயற்பாடுகளை வங்கி உறுதிப்படுத்துகின்றது.

1,622	20	1,590	12
2018 இல் ஆட்சேர்த்தல்கள்	முகாமைத்துவ பயிலுநர்கள்	வங்கி உதவியாளரகள்	ஏனையவர்கள்

2018 இல் ஆட்சேர்ப்புகள் - GRI 401-1



ஊழியர்களை தக்கவைத்திருத்தல்

வங்கியிலிருந்து வேலையை விட்டு விலகிச்சென்ற ஊழியர்களது விகிதம் கடந்த சில வருடங்களாக மிகக்குறைவாகவே காணப்பட்டது. 2018 இது 0.9% (ஓய்வு பெற்றுச் சென்றவர்களை தவிர) பயிற்சி மற்றும் அபிவிருத்திகளில் நாம் மேற்கொண்ட சிறப்பான முதலீடுகள், தொழில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள், சுமுகமான தொழிற்சங்க உறவுகள், துன்பங்களை களையும் காத்திரமான பொறிமுறைகள், உயரிய அளவிலான ஊழியர் ஈடுபாடு (விடுமுறை இல்லங்கள், தொழில் வாழ்க்கையை சமநிலையாக கொண்ட பகல் போசர நேர கருத்தரங்குகள்) இவை யாவும் எமது தனித்துவமான ஊழியர் பெறுமதிசேர் நடவடிக்கைளுக்கு சான்று பகர்கின்றன. இவை யாவும் அமைப்பு ரீதியான கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கு உதவின. இவற்றை ஊழியர்கள் பெரிதும் மதிக்கின்றனர். குறிப்பிட்ட காலப்பகுதியில் பொதுவான சுகாதார பிரச்சினைகள் மற்றும் மார்பக புற்றுநோய் தொடர்பான மருத்துவ முகாம்கள் போன்றனவும் விசேட விரிவுரைகளும் இடம் பெற்றன. இவ்வருட காலப்பகுதியின் பொழுது இத்தகைய நிகழ்வுகளில் சுமார் 500 பேர் பங்குப்பற்றினர்.

ஊழியர் புரள்வு 2018 - GRI 401-1



மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

மனித மூலதனம்

ஊழியர்கள் விலகிச்சென்றமைக்கான காரணங்கள்

காரணம்	ஊழியர்களின் எண்ணிக்கை
புதிய வாய்ப்புகள்	25
தனிப்பட்ட காரணங்கள்	17
புலம்பெயர்தல்	14
ஊயர்கல்வி	5
மோசமான உடல்நிலை	3
ஏனையவை	10
ஓய்வு	311
மொத்தம்	**385**

விருதுகள் மற்றும் அங்கீகாரம்

வங்கியானது கவர்சிகரமான நட்ட ஈட்டு திட்டத்தை கொண்டுள்ளது இதில் மொத்த சம்பளம், ஊழியர் சேம இலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பங்களிப்புகள், மருத்துவ உதவி திட்டங்கள், ஓய்வூதிய திட்டங்கள், விதவைகள், தபுதாரர், அனாதைகள் நிதியம் (தகுதியுடைவர் முறை ஏற்புடையது), விருப்பத்திற்குரிய மிகையூதியம், ஊக்குவிப்புகள் போன்றன உள்ளடங்கும். இலங்கை வங்கியானது ஊழியர் சேம் இலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிற்கு முறையே 12% , 3% ஐ பங்களிப்பு செய்கின்றது. மேலும் எமது ஊழியர்கள் வீட்டுக்கடன்கள், வாகனக்கடன்கள் மற்றும் கணினி கடன்கள், சூரிய சக்தி கடன்கள், முதலீட்டுக்கடன்கள், தனித்துவமான பொதுக்கடன்கள் ஆகியவற்றை சலுகை அடிப்படையில் பெற்றக்கொள்வதற்கு தகுதியடையவர்கள். மேலும் கல்விசார் உதவிகள் மற்றும் தொழில் சார் சலுகைகள், மீள் செலுத்துகைகள் போன்றனவும் ஏற்புடையன. சம்பளம் மற்றும் சம்பளம் சாராத நன்மைகளை உள்ளடக்கிய நஷ்ட ஈடானது அரசதுறை வங்கி முகாமைத்துவமானது தொழிற் சங்கங்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டு 3 வருடங்களுக்கு ஒரு முறை தீர்மானிக்கின்றது.

இதனை பெற்றுக்கொள்வதற்கு ஊழியர்கள் அருகதையுடையவர்கள். சம்பள ஏற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பில் சகல ஊழியர்களும் சமத்துவமாக நடத்தப்படுகின்றனர் என்பதை உறுதி செய்து கொள்ளும் முகமாக கட்டமைக்கப்பட்ட செயலாற்றுகை முகாமைத்துவ முறையொன்று நடைமுறையில் உள்ளது. வங்கியன் கூட்டாண்மை தந்திரோபாய முறைகளுள் இவை உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் சுமார் 97% ஆன நிரந்தர ஊழியர்களின் செயலாற்றுகைகள் ஆகக் குறைந்தது வருடாந்த அடிப்படையிலாவது மதிப்பீடு செய்யப்படுகின்றன.

தொழில் சார் முன்னேற்றங்களானது வெளிப்படை தன்மை மிக்கதும் தெளிவாக தொடர்பாடப்பட்ட பதவி உயர்வு கொள்கைகளினாலும் வழிநடத்தப்படுகின்றன. தற்போதைய பதவியில் அவசியப்படுகின்ற சேவை காலத்தை பூர்த்தி செய்த ஊழியர்கள் பதவி உயர்வின் நிமித்தம் விண்ணப்பிப்பதற்கு தகுதி உடையவர்கள். குறிப்பிட்ட் வருட காலப்பகுதியில் சுமார் 174 ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டதுடன் உள்நுளைவு மட்ட நிலைகளை தவிர ஏனைய சகல வேலை வாய்ப்புகளும் உள்ளக ரீதியாக பணியாற்றுகின்ற ஊழியர்களிளால் நிரப்பப்பட்டது.

பெற்றோருக்கான விடுப்பு 2018 - GRI 401 - 3

	Male	Female
ஊழியர்கள்		
பெற்றோருக்கான விடுப்பிற்கு தகுதியுடையவர்கள்		5,257
பெற்றோருக்கான விடுப்பை பெற்றுக்கொண்டவர்கள்		383
விடுப்பிற்கு பின்னர் வேலைக்கு வந்தவர்கள்		358
பெற்றோருக்கான விடுப்பின் பின்னர் வேலைக்கு வந்து 12 மாதங்களாகியும் இதுவரை வேலையிலுள்ள ஊழியர்கள்		242
பெற்றோருக்கான விடுப்பை பெற்று வேலைக்கு திரும்புகின்ற ஊழியர் வீதம்		93.2%
பெற்றோருக்கான விடுப்பை பெற்று தொடர்ந்து இருக்கின்ற ஊழியர் தக்கவைத்தல் வீதம்		99.4%

பணியாளர் நலநோம்புகை

- பணியாளர்களுக்கு கிடைக்கப்பெற்ற விடுமுறை இல்லங்கள் 11
- அவ் வசதிகளைப் பயன்படுத்திய பணியாளர்களின் எண்ணிக்கை 7,305.
- நலநேம்புகை வாகனங்களை பயன்படுத்திய பணியாளர்களின் எண்ணிக்கை 6,000
- உடற்பயிற்சிக் கூடம், யோகா நிலையம் போன்றவற்றில் உறுப்புரிமைப் பெற்ற பயணாளிகளின் எண்ணிக்கை – மாதாந்தம் 55
- சலுகை அடிப்படையில் வழங்கப்பட்ட பணியாளர்களுக்கான கடன் இ.ரூ. 29.9 மில்லியன்

பல்வகைத்தன்மை

இலங்கை வங்கியானது சமத்துவமான வாய்ப்புகளை வழங்கும் தொழில் வழங்குனர் நிறுவனமாகும். வேலைக்கு ஆட்களை சேர்த்தல், பதவி உயர்வுகள் அல்லது கொடுப்பனவு தொடர்பான தீர்மானங்கள் ஆகியவற்றின் பொழுது ஒருவரது பால்நிலை, வயது அல்லது இனம் ஆகியவற்றின் அடிப்படையில் எத்தகைய பராபட்சங்களும் காட்டப்படுவதில்லை. இலங்கை வங்கியின ஒட்டு மொத்த

பெண்கள் பிரதிநித்துவம் 60% ஆகும். இத்துறையில் இதுவே ஆகக்கூடியதாகும். அதே வேளை வயது பிரிவானது 21 முதல் 60 வரை ஆகும். பெண்கள் சுமுகமாக பணியாற்றுவதற்கான ஒரு சூழலை இலங்கை வங்கி வழங்கி வருகின்றது. அதிகமானோர் வங்கிக்கு வேலைக்கு வருதல் தொடர்பான விடயத்தில் இது பிரதிபலிக்கப்பட்டுள்ளது. அதேவேளை ஆண் பெண் இருபாலாருக்குமான சம்பள விகிதம் 1:1 ஆகும். எமது ஆட்சேர்ப்பு தொடர்பான கோட்டாவில் 1% மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ஊழியர் பல்வகைமை 2018

	வயது			
	<30 வருடங்கள்	30-50 வருடங்கள்	>50 வருடங்கள்	மொத்தம்
கூட்டாண்மை முகாமைத்துவம்	-		15	15
நிறைவேற்று முகாமைத்துவம்	-	18	28	46
பிரதான முகாமையாளர்கள்	-	53	46	99
சிரேஸ்ட முகாமையாளர்கள்	-	125	51	176
கிளை முகாமையாளர்கள் மற்றும் உதவி முகாமையாளர்கள்	-	875	192	1,067
முகாமைத்துவ பயிலுனர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர் தரங்கள்	510	2,083	189	2,782
ஆளணி உதவியாளர்கள் மற்றும் அவைசார்ந்த தரங்கள்	3,027	919	155	4,101
அலுவலக உதவியாளர்கள் மற்றும் அவைசார்ந்த தரங்கள்	75	288	75	438
மொத்தம்				**8,724**

மூன்றாம் நபர் நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.

பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	பங்குபற்றியோர்
ஆசிய பசுபிக் பிராந்திய கிராமிய கடன் நிகழ்ச்சித்திட்டம்	10
PIM Glo-Bus உருவகப்படுத்தல்	24
இலங்கை இராணுவத்துடன் நடாத்தப்பட்ட வெளிநிலைப் பயிற்சி	1,847

பயிற்சியும் அபிவிருத்தியும்

தற்போதைய பயிற்சி மற்றும் அபிவிருத்தியானது வங்கியின் ஊழியர் பெறுமதி அதிகரிப்பில் முக்கியமான பங்காகும் நாம் தொடர்ந்தும் எமது ஊழியர்களின் தொழில்நுட்ப மற்றும் மென்திறன்கள் அபிவிருத்தியில் கவனம் செலுத்துகிறோம். சகல புதிதாக சேர்த்துக்கொள்ளப்படும் ஊழியர்கள் முழுமையான விசேடமான அறிமுக பயிற்சிக்கு உட்படுத்தப்படுவார்கள் இதன் போது வங்கியின் விசேட மஹரகம பயிற்சி நிலையத்திலும் தேவைப்படும் போது வெளியகப் பயிற்சி நிலையங்களிலும் பயிற்சி வழங்கப்படும். பயிற்சிகளின் போது வங்கி தொடர்பான அறிவும் கலாச்சாரமும் அவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படும் மேலும் வங்கியின் ஊழியர்களுக்கு தொடர்ச்சியான வாழ்நாள்முழுதும் பயிற்சிகள் வெவ்வேறு துறைகளில் வழங்கப்படுகின்றன. வங்கி பல்வேறு முகாமைத்துவ தரங்களுக்கு விசேட முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிகளை வழங்குகின்றது.

வங்கியானது உள்ளக பயிற்சி நிலையம் ஒன்றையும் 7 ஆசிரிய உறுப்பினர்களையும் 132 துணை ஆசிரிய உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. இந்த பயிற்சி நிலையத்தில் 315 உழியர்களுக்கு வதிவிடப் பயிற்சியும் வழங்க முடியும்

பதவிநிலை உதவியாளர் பயிலுநர்களுக்கான வெளிநிலைப் பயிற்சி

மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

மனித மூலதனம்

பயிற்சி தொடர்பான முதலீடுகள்



மொத்த பயிற்சி நேரம்				
நிகழ்ச்சி நேரம்				
	உள்ளகம்	உள்நாட்டு பயிற்சி	உவெளிநாட்டு பயிற்சி	மொத்தம்
2018	6,218	2,134	3,416	11,768
2017	4,087	2,997	4,800	11,884

சராசரி பயிற்சி நேரம்		
	Male	Female
கூட்டாண்மை முகாமைத்துவம்	13	11
Eநிறைவேற்று முகாமைத்துவம்	10	8
சிரேஸ்ட முகாமைத்துவம் (பிரதான/ சிரேஷ்ட/ கிளை முகாமையாளர்)	3	3
நிறைவேற்று உத்தியோகத்தர்கள்	2	1
வங்கி பயிலுநர்கள் மற்றும் ஏனையவர்கள்	1	1

ஊழியர் ஈடுபாடு

ஊழியர்கள் மத்தியில் உற்சாகம், உந்துதல் ஆகியவற்றை ஏற்படுத்தி தோழமை உணர்வை வளர்க்கும் முகமாக விளையாட்டு, கலாசாரம் ஆகியவற்றை உள்ளடக்கிய வருடம் முழுவதும் செயற்பாடுகளை கொண்ட கெலன்டரை மையமாகக் கொண்டு நிகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. வருட காலப்பகுதியின் பொழுது மேற்கொள்ளப்பட்ட சில செயற்பாடுகள் தொடர்பான மேலோட்ட பார்வை கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி பௌத்த சங்கத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட ஒருநாள் "சில் பெறுகை" நிகழ்வு

வெசாக் கொண்டாட்ட நிகழ்வின் போது

தொழில்சார் உறவுகள்

இலங்கை வங்கியானது தனது ஊழியர்களது ஒன்றுகூடுவதற்கான உரிமைகள் தொடர்பில் மிகவும் அக்கறையுடன் கவனமாக நடந்து கொள்கின்றது. அதனது ஊழியர்கள் தொழிற்சங்கங்களில் இணைந்து கொள்வதை எந்த விதத்திலும் இது மட்டுப்படுத்துவதில்லை. இங்குள்ள 7 தொழிற்சங்கங்களுள் சுமார் 92 வீதமான வங்கி ஊழியர்கள் ஏதோ ஒரு தொழிற்சங்கத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கின்றனர். மேலும் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக 7 ஊழியர்கள் நிரந்தரமாக விடுவிக்கப்பட்டுள்ளனர். பதிவு செய்யப்பட்ட பல்வேறுபட்ட தொழிற்சங்கங்களின் பிரதி நிதிகள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்படுவதுடன் அவர்களுக்கு அவசியமான உதவிகள் வழங்கப்படுவதுடன் அத்தகைய முன்னெடுப்புகளுக்கான நிதியும் வழங்கப்படுகின்றன. மிக முக்கியமான பிரச்சினைகள் வங்கி முகாமைத்துவத்துடன் எழுப்பப்படுகின்றன என்பதை உறுதி செய்து கொள்கின்ற அதே வேளை நாம் மிகவும் சுமுகமான ஒன்றினைந்த தொடர்பு முறைகளை பேணி வருகின்றோம்.

2018 ஆம் ஆண்டில் சகல தொழிற்சங்கங்களுடன் கூட்டு ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்பட்டு கையொப்பம் செய்யப்பட்டது. இந்த கூட்டு ஒப்பந்தமானது 77% தொழிற்படையை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. குறிப்பிட்ட வருடத்தின் பிறகு தொழில் பிணக்கின் காரணமாக எத்தகைய வேலை நிறுத்தங்களோ அல்லது தடைகளோ ஏற்படவில்லை. ஊழியர்களை பாதிக்கக்கூடிய முக்கியமான ஏதாவது தொழிற்பாடு ரீதியான மாற்றங்கள் நடைமுறைப்படுத்தவிருந்தால் 6 மாதங்களுக்கு முன்னர் அவை பற்றி முன்கூட்டியே அறிவித்தல்கள் வழங்கப்படும். அறிவித்தலுக்கான காலப்பகுதி, ஆலோசணைகள் மற்றும் பேச்சு வார்த்தைகள் தொடர்பான ஏற்பாடுகள் ஆகியன பற்றி சம்பந்தப்பட்ட கூற்று உடனபடிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

நத்தாரைக் கொண்டாடும் முகமாக ஊழியர்களினால் வழங்கப்பட்ட கரோல் நிகழ்ச்சி

வங்கியின் 79வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் விஷேட இந்து பூஜை நிகழ்வு

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

வங்கியில் பணியாற்றுகின்ற சூழலின் பொழுது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு இடர்கள் தொடர்பான முக்கிய பிரச்சினைகள் எழாத சந்தர்ப்பத்திலும் ஊழியர்களது நலன் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் நாம் முன்னுரிமை அளிக்கின்றோம். சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் கூட்டு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மருத்துவ உதவி திட்டத்தின் கீழ் ஊழியர்கள் பெற்றுக்கொள்ள அருகதையுடைய விடயங்களும் உள்ளடங்கும். வங்கி ஊழியர்களது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான இலக்குகளை வழங்கும் பொருட்டு நடைமுறையிலுள்ள முன்னெடுப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

2018ம் ஆண்டு ரமழான் காலத்தில் இப்தார் நிகழ்வு

- பதவிகள் உறுதிப்படுத்தப்பட்ட சகல ஊழியர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்பம் ஆகியவற்றிற்கான பூரணத்துவமிக்க மருத்துவ காப்புறுதித் திட்டங்கள்
- தலைமை அலுவலகத்தில் மருத்துவ ரீதியான அவசர நிலைமைகள் ஏற்படும் பொழுது அதற்கென அங்கே தங்கியிருக்கின்ற வைத்தியர், தாதி, பாமசி ஆகியன காணப்படுகின்றன.
- தலைமை அலுவலகத்தில் உடற்பயிற்சிக் கூடம்,யோகா நிலையம், எரோபிக் உடற்பயிற்சி வசதிகள் காணப்படுகின்றன.
- பணத்தை போக்குவரத்து செய்வதில் ஈடுபடுகின்ற ஊழியர்களுக்கு விசேட பயிற்சியும் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளன.
- தலைமை அலுவலகத்தில் ஒவ்வொரு வருடமும் தீயணைப்பு தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

ஊழியர் பெறுமதி சேர்த்தல் 2018

கவனம் செலுத்தப்பட்ட விடயம்	2018 இல் முன்னேற்றம்	
ஊழியர்களுக்கான மொத்தக் கொடுப்பனவு	இலங்கை ரூபாய் 18.9 பில்லியன்	8 DECENT WORK AND ECONOMIC GROWTH
தகவல் தொடர்பாடல் தொடர்பான திறன்கள் மற்றும் அறிவு உள்ளடங்களாக பயிற்சி முதலீடுகள்	இலங்கை ரூபாய் 338.0 பில்லியன்	4 QUALITY EDUCATION
பெண்கள் பிரதிநிதித்துவம் : முகாமைத்துவ மட்டம் ஒட்டு மொத்தம் விடுப்பின் பின்னர் வேலைக்கு திரும்பியவர்கள்	58% 60% 358	5 GENDER EQUALITY
10 வருட சேவையை பூரணப்படுத்தியவர்களுக்கான பங்களிப்பு செலுத்தாத ஓய்வூதியம்	இலங்கை ரூபாய் 6.8 பில்லியன் (வருடத்திற்கான ஏற்பாடுகள்)	1 NO POVERTY

மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

புலமைசார் மூலதனம்

புலமைசார் மூலதனம்

இலங்கை வங்கியின் புலமைசார் மூலதனமானது அதனது மிக முக்கியமான தந்திரோபாய ரீதியான சொத்துக்களை பிரதிநிதித்துவம் செய்கின்றது. அத்தோடு போட்டி மிக்க நிலையில் வங்கியை ஸ்திரத்தன்மை மிக்க முறையில் செயற்படுவதற்கான இயலுமைகளை ஏற்படுத்துவதுடன் வாடிக்கையாளர்களை பெற்றுக்கொள்வதற்கான முன்னோடி நடவடிக்கைகள், வர்த்தக நாம ஒப்புரவு மேம்படுத்தல், துரிதமாக மாறிவரும் சுற்றாடலில் பொருத்தமாக திகழ்தல் ஆகியவற்றை வழங்குகின்றது.

வர்த்தக நாமம்
இலங்கை ரூபாய் 42.9 பில்லியன்

81,627
பணியாளர்களது திரள் சேவை அனுபவம் மற்றும் அனுபவ அறிவு

புத்தாக்கத்திற்கான ஆற்றல்கள்

கூட்டாண்மை விழுமியங்கள்

2018 இல் தந்திரோபாய ரீதியான முன்னுரிமைகள்

மில்லேனியம் வாடிக்கையாளரை தக்க வைத்துக்கொள்ளும் முகமாக மற்றும் அவர்களை கவரும் முகமாக டிஜிட்டல் பயன்பாட்டினை மேம்படுத்துதல்.

சிறந்த செயலாட்சி முறை, ஒழுக்க நெறிகள், காத்திரமான இடர் முகாமைத்துவத்தை வலுப்படுத்தல்.

எமது மரபு ரீதியான வாடிக்கையாளரை தக்க வைத்து கொள்கின்ற அதே வேளை அடுத்த தலைமுறை வாடிக்கையாளரை கவரும் முகமாக வர்த்தகநாம முன்னெடுப்புகளை மேற்கொள்ளல்.

2018 இல் முன்னெடுப்புகள்

- புத்தாக ரீதியான டிஜிட்டல் உற்பத்திகளை அபிவிருத்தி செய்தல்.
- ஒழுக்நெறிகள், மரியாதை, செயலாட்சி தொடர்பான பயிற்சிகளில் கவனம் செலுத்துதல்.
- தானியங்கிமுறை மற்றும் செயன்முறைகளை மேம்படுத்துதல்.
- டிஜிட்டல் செயன்முறைகளுக்கான வர்த்தகநாமத்தை மேம்படுத்துதல்.

2018இல் நாம் எவ்வாறு செயலாற்றினோம்

- தொடர்ச்சியாக 10 வருடங்களாக இலங்கையின் முதன் தர வர்த்தக நாமம் என்ற நிலைமையை பேணுதல் - பிராண்ட் பினான்ஸ்
- பிரேன்ட் பினாஸ் லங்காவினால் அங்கீகரிக்கப்பட்டதன் பிரகாரம் இலங்கை ரூபாய் 42.9 பில்லியன் பெறுமதியான 6% வளர்ச்சி
- இலங்கையில் மிகவும் உறுதியான வங்கி : தி ஏசியன் பாங்கர் சஞ்சிகை
- ஐக்கிய இராஜியம் பேன்கர் சஞ்சிகையின் பிரகாரம் சிறந்த 1000 வங்கியகளுள் ஒன்று
- சந்தைப்படுத்தல் தலைமைத்துவ நிலையை பேணல்.
- SLIM Nielsen பீபில்ஸ் அவார்ட்ஸ் 2018 மூலம் மக்கள் சேவை வங்கியாக அங்கரிக்கப்பட்டமை
- குறிப்பிட்ட வருடத்தின் பொழுது 272,975 வாடிக்கையாளர்கள் நடமாடும் வங்கிச்சேவை பிரயோகங்களை பயன்படுத்தினர

2019 இற்கான முன்னுரிமைகள்

- வர்த்தக நாம கொள்கையினை அபிவிருத்தி செய்தல்.
- வர்த்தக நாமத்தை விருத்தி செய்வது தொடர்பில் தொடர்ச்சியான முதலீடு
- மெய்நிகர் வங்கியியல் எண்ணக்கருவை யதார்த்தமாக்கல்
- பாரிய தரவு பகுப்பாய்வுகள் மூலம் ஆற்றல்களை மேம்படுத்துதல்.
- புத்தாக்கத்திற்கான ஆற்றல்களை மேம்படுத்தும் முகமாக புத்தாக்க ஆய்வு கூடம்.

கூட்டாண்மை விழுமியங்கள்

வங்கியின் கூட்டாண்மை விழுமியங்கள் பெறுமானமானது அதன் அடையாளத்தின் சாரத்தினை பிரதிபலிப்பதுடன் அதன் கலாசாரத்தை வடிவமைப்பதோடு எதனை நிறுவனம் பெறுமதியாக கருதுகிறது என்பது தொடர்பில் உள்ளக மற்றும் வெளிநிலை பங்கீட்டுப்பாட்டாளர்களுக்கு தெளிவினை வழங்குகிறது. ஒரு வங்கி என்ற முறையில் அதன் பணிநோக்கானது வெறுமனே வருமானமீட்டல் எல்லைகளுக்கு அப்பால் சென்று சமூக மற்றும் பொதுமக்கள் நலன்களை நோக்காக கொண்டு செயற்படுகின்றது. தொடர்ச்சியான ஈடுபாடு, தொடர்பாடல் ஆகியவற்றின் மூலம் முறையாக இவை மீள் உறுதி செய்யப்படுகின்றன. எமது விழுமியங்களானது எமது ஊழியர்கள் பொறுப்பு வாய்ந்த முறையிலும் ஒழுக்கநெறி சார்ந்த முறையிலும் நடந்து கொள்வதற்கு வழிக்காட்டுகின்ற அதேவேளை உறுதியான வியாபார தொடர்பு முறைகளை வங்கியானது வளர்த்து அவற்றை வலுப்படுத்துவதற்கும் வங்கியை இயலச் செய்துள்ளன.



2018 இல் புலமை சார் மூலதனத்தில் அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட வளங்கள்

வியாபாரக் குறி அபிவிருத்தியில முதலீடு

இலங்கை ரூபாய் 1.2 பில்லியன்

டிஜிட்டல் தீர்வுகளில் முதலீடு: இலங்கை ரூபாய் 2.0 பில்லியன்

ஊழியர் பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் முதலீடு: இலங்கை ரூபாய் 338.0 பில்லியன்

டிஜிட்டல் பயன்பாட்டின் மூலம் மேம்பட்ட வாடிக்கையாளர் பெறுமதியை அதிகரித்தல்

அமைப்பு ரீதியான மூலதனத்தை வளர்த்தெடுப்பதன் மூலம் மனித மூலதனத்தின் தன்மையை வலுப்படுத்துதல்.

டிஜிட்டல் தொழில் நுட்பம் தொடர்பான மூலதனமானது நிதி ரீதியான மூலதனத்தில் குறுகிய கால மற்றும் நீண்ட கால தாக்கங்களை ஏற்படுத்தும்.

- வாடிக்கையாளர் நிலையமாக இருத்தல்
- சுகல விதமான வேற்றுமைகளையும் பல்வகைத்தன்மையையும் மதித்தல்
- உயர் மட்டத்திலான ஒழுக்க நெறிகள், செயலாட்சி, தொழில்வாண்மை ஆகியவற்றை அர்பணிப்புடன் மேற்கொள்ளல்.
- சுறுசுறுப்பு மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றில் அக்கறை செலுத்துதல்.
- எங்களது சகல நடவடிக்கைகளுக்கும் பொறுப்பு கூறல்

BANK OF CEYLON
BOC
Bankers to the Nation

தொடர்ந்து 10 வருடங்களாக இலங்கையின்
இல.1 வியாபாரக்குறி
பிராண்ட் பைனான்ஸ் ஸ்ரீ லங்கா

இலங்கையின் உறுதியான வங்கி
த ஏசியன் பாங்கர்

2012 முதல் உலகின் மிகச்சிறந்த 1000 வங்கியகளில் ஒன்று
த பாங்கர் சஞ்சிகை - யுகே

எமது வியாபாரக் குறி

இலங்கை வங்கியின் வியாபார குறியானது தொடர்ச்சியாகக் இலங்கையின் முதல் தரமான வியாபார குறி என உள்நாட்டு சுயாதீன மற்றும் சர்வதேச வியாபாரக் குறி நிறுவனங்களினால் தரப்படுத்தப்பட்டுள்ளது. வியாபாரக் குறியானது ஸ்திரத்தன்மை, நம்பிக்கை, நேர்மை ஆகிய பண்புகளை புலப்படுத்துவதாக காணப்படுகிறது. இதன் மூலம் அடிநிலை வாடிக்கையாளர்களை பெற்றுக்கொண்டு அவர்களை உயர்வான மட்டத்தில் தக்க வைத்துக்கொள்வதற்கு இவை உதவின. 2018ஆம் ஆண்டில்

இலங்கை வங்கியின் வர்த்தகப் பெறுமதி



மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

புலமைசார் மூலதனம்

அனுபவ அறிவு

சந்தைப்படுத்தல் துறை முழுவதும் 79 வருடங்களுக்கு மேலதிகமாக ஒப்பட்ட வாடிக்கையாளர்களுடன் பணியாற்றிய அனுபவம் மற்றும் இத்தொழிற் துறையின் மிகப்பாரிய முதலீட்டுப் பட்டியலை முகாமைத்துவம் செய்த அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் நோக்குகையில் இலங்கை வங்கியானது தனித்துவமான அமைப்பு ரீதியான மூலதனத்தை வளர்த்து வந்துள்ளது. இந்த அனுபவ அறிவானது வறையரை செய்யப்பட்ட கற்றல் கட்டமைப்புகள், உதவிகரமான தலைமைத்துவ குழுக்கள், எமது தொழிலுடன் பின்னிப்பிணைந்துள்ள கற்றல் செயன்முறைகள் ஆகியவற்றின் மூலமாக இந்த அனுபவ அறிவானது கிளைகள் மற்றும் பல தலைமுறையை சார்ந்த ஊழியர் மத்தியில் பரப்பப்பட்டுள்ளது. 98% அதிகமான ஊழியர்கள் எமது நிறுவனத்துடனேயே தங்கி வேலை செய்தல், மேலும் முகாமைத்துவ பயிலுனர்களாகவும், பயிலுனர் வங்கி உதவியாளராகவும் இணைத்துக் கொள்ளப்பட்டதன் காரணமாக இத்துறையில் அதிகளவு பரந்தளவு பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்ற அனுபவம் மிக்க மற்றும் திறமையான குழுக்களை கொண்ட அமைப்பாக இலங்கை வங்கியை கட்டியெழுப்ப இலங்கை வங்கிக்கு முடிந்தது.



புத்தாக்கத்திற்கான ஆற்றல்கள்

இன்றைய இயங்காற்றல் மிக்க வங்கிச்சூழலில் பயனுறுதி மிக்க முறையில் போட்டியிடுவதற்கு தொடர்ச்சியாக புத்தாக்க ரீதியான வழிமுறைகளை வழங்குவதன் அவசியத்தை இலங்கை வங்கி உணர்ந்துள்ளது. சிக்கல்களை குறைக்கும் முகமாக புதிய தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வது மற்றும் வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்கள் மற்றும் மத்தியில் அதிகரிக்க செய்தல் ஆகியன வங்கியின் பிரதான அக்கறை செலுத்தப்பட்ட விடயங்களாக காணப்படுகின்றன. இச் செயன்முறைகளை நவீன மயப்படுத்தல், தொழிலாற்றும் முறைகளை எளிமையாக்குதல்,செயன்முறைகளை நவீனமயப்படுத்தல், வேலையோட்டத்தை எளிமைப்படுத்தல், சுயசேவை முறைகளை விரிவாக்கல் ஆகியவற்றில் குறிப்பிடக்கூடிய முதலீடுகளை நாம் மேற்கொண்டுள்ளோம்.

Major focus for future

வாடிக்கையாளர்கள்

- புதிய நிதித்தொழில்நுட்ப உற்பத்திகள் மூலம் மெய்நிகர் வங்கித் தெரிவுகளை மேம்படுத்தல்.
- பணமற்ற வங்கிமுறையை இலகுபடுத்துவதற்கான உற்பத்திகள்

உள்ளக செயன்முறைகள்

- புதிய மெய்நிகர் வங்கியியல் பின்தளம்
- பாரிய தரவு பகுப்பாய்வு கருவியுடன் கூடிய மத்திய தரவுக் களஞ்சியம்
- கடதாசி இல்லா வங்கிக் கலாசாரத்தை இலக்காகக் கொண்டு தானியங்கி முறையில் தொடர் வேலைகள்.
- வங்கிக்கு தொடர்பிலான புத்தாக்க ஆய்வு கூடம்.

ஊழியர்கள்

- முழுமையான தானியங்கி மனிதவள முகாமைத்துவ (HCM) முறைமூலம் பூரணத்துவமிக்க மனிதவள முறை
- இலங்கை வங்கி 360: செயலாற்றுகை முகாமைத்துவ செயலி

விருதுகள் மற்றும் பரிசுகள்

இலங்கையின் முதல்தர வங்கி

- முதல் தரவங்கி வியாபாரக்குறி - வியாபாரக் குறி நிதி
- முதல்தர மிகப் பெறுமதியான வாடிக்கையாளர் வியாபாரக்குறி - வியாபாரக்குறி நிதி

  (தொடர்ந்து 10 வருடங்கள் முதல்தரவங்கி)
- வருடத்தில் மக்களுக்கு சேவையாற்றிய வங்கி - SLIM – NIELSEN மக்கள் விருது

மனித வள விருதுகள்

- வேலை செய்வதற்கு சிறப்பான மனித வள அமைப்பு - 2018இல் மனித வளங்கள் சிறப்பு விருதுகள்
- ஆசியாவின் சிறந்த தொழில் வழங்குநர் வங்கி 2018 - தொழில் வழங்குநர் வங்கி நிறுவகம் இந்தியா
- இலங்கையில் சிறந்த தொழில் வழங்குநர் வங்கி 2018 - தொழில் வழங்குநர் வங்கி நிறுவகம் இந்தியா

வருடாந்த அறிக்கை சார் விருதுகள்

- அரச வங்கித்துறைக்கான தங்க விருது CA இலங்கை வருடாந்த அறிக்கை விருதுகள்
- வெற்றியாளர் - அரசதுறை வங்கி SAFA விருது 2017
- ARC விருதுகள் (சர்வதேச வங்கித்துறை வகை)
  - நிதிசார் தரவு - தங்கம்
  - எழுத்துமூல ஆவனம் - தங்கம்
  - மரபுசார் வருடாந்த அறிக்கை – தங்கம்

சிறப்பான செயலாற்றுகை

- இலங்கையில் உறுதியான வங்கி - ஆசிய வங்கி
- உலகில் முதல் தர 1000 வங்கிகளில் ஒன்று - பேங்கர்ஸ சஞ்சிகை (யுகே)
- சுவாபிமணி கௌரவ விருதுச்சேவை - சிறப்பான சேவை விருது வைபவம் (சீசெல்ஸ்)

ஸ்திர்தன்மைக்கான (நிலைபேறு) விருதுகள் / கூட்டாண்மை சமூகப்பொறுப்பு

- முதல்தர சிறப்பான கூட்டாண்மை பிரசைகள் - சிறப்பான கூட்டாண்மை பிரசைகள் நிலைபேறான விருதுகள் - 2018 - இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் வழங்கப்பட்டது.
- பசுமைக் கட்டிட பிளட்டினம் விருது - திருகோணமலை மேற்தர கிளை - இலங்கை பசுமைக்கட்டிட சபையால் (GBCSL) வழங்கப்பட்ட வருடாந்த பசுமைக்கட்டிட விருதுகள்

தொழில்நுட்ப மற்றும் டிஜிடல் முன்னெடுப்புகளுக்கான விருதுகள்

- நிதித்துறையில் சிறப்பான மொபைல் பாவனை SLT ZERO One விருது
- பின்வருவனவற்றிற்கான “டெக்னோவேஷன்” விருதுகள்
  - வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுகள் தொடர்பான ஒட்டு மொத்த சிறப்பு விருதுகள்
  - வெற்றியாளர் - மிகவும் பிரபல்யமான இலத்திரனியல் கொடுப்பனவு (B App)
  - வெற்றியாளர் - வருடத்திற்கான சிறந்த பொது ATM வழங்குநர்.
  - வெற்றியாளர் -ஐ.அ டொலர் இணைய கொடுப்பனவு சிறப்பு வழங்குநர்
  - வெற்றியாளர் - வருட நிதி உள்ளடக்கதிற்கான வங்கி (A)
  - இரண்டாம் இடம் - சில்லறை கொடுப்பனவிற்கான சிறந்த வங்கி Payments

மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

சமூகம் மற்றும் மூலதனம்

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

எமது முக்கிய பங்கீட்டுபாட்டாளர்களுடைய உறுதியான மற்றும் பரஸ்பரம் நன்மையளிக்கக்கூடிய தொடர்பு முறையானது எமது தொடர்ச்சியான வெற்றி மற்றும் சமூக பொருத்தப்பாடு ஆகியவற்றிற்கு முக்கிய காரணி என நாம் நம்புகின்றோம். எனவே உபாய ரீதியான செயற்பாடு மூலம் அதனது பங்கீட்டுப்பாட்டாளர்களது அக்கறைகளை முறையாக இனம் கண்டு அவை தொடர்பில் அர்பணிப்புடன் செயற்படுகின்றது.

13.4 மில்லியன்

வாடிக்ககையாளர் தொடர்பு முறைகள்

9,722

மேற்பட்ட எமது பெறுமதி உருவாக்கத்திற்கு உதவி செய்கின்ற வியாபார பங்காளர்கள்

14,580

வாடிக்கையாளர் கல்வி நிகழ்ச்சித்திட்டம் மூலம் நன்மையடைந்த வாடிக்கையாளர்கள்

ரூபா

21.9 மில்லியன்

வாடிக்கையாளர் கல்வி மற்றும் ஆற்றல் விருத்திற்காக செலவிடப்பட்டது

ரூபா

108.0 மில்லியன்

கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பிற்காக

2018 இல் உபாய ரீதியான முன்னுரிமைகள்

பல் ஊடக விநியோகம் மூலம் துரிதமான சேவை

டிஜிட்டல் மயப்படுத்தல் மூலம் நிதி ரீதியான உள்ளடக்கம்.

இலங்கை வங்கியின் டிஜிட்டல் மயப்படுத்தல் உபாயம் மூலம் இளைஞர் உள்வருகை

வாடிக்கையாளர் சமுதாய ஈடுபாடு

சேவை தராதரங்களை மேம்படுத்தல்.

2018 இல் முன்னெடுப்புகள்

- சேவையில் மற்றும் ஒப்பீட்டளவு சேவை மட்டங்கள் தொடர்பில் வாடிக்ககையாளர் எண்ணக்கருக்களை அளவிடும் முகமாக சகல மாகாணங்களையும் உள்ளடக்கி வாடிக்கையாளர் திருப்தி தொடர்பான சேவைகள் மேற்கொள்ளப்பட்டன.
- வாடிக்கையாளர்களது டிஜிட்டல் பயன்பாட்டினை வலுப்படுத்துதல்.
- நிதி ரீதியான அறிவு மற்றும் ஆற்றல் விருத்தி தொடர்பில் தற்போதைய முதலீடுகள்.
- உபாய ரீதியான நிலைப்பேரான நோக்கங்களை முன்னெடுக்கும் முகமாக கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு கருத்திட்டங்களை சீர் செய்தல்.

2018இல் நாம் எவ்வாறு செயலாற்றினோம்

- வாடிக்கையாளர்களுக்காக 113 நிதி சார்ந்த மற்றும் ஆற்றல் விருத்தி தொடர்பான அமர்வுகள் நடத்தப்பட்டன.
- கடன் கொடுத்தலில் 24% வளர்ச்சி
- வைப்பாளர்களுக்கு செலுத்தப்பட்ட வட்டியில் 21% அதிகரிப்பு
- பூகோல ரீதியான நிதி மாற்று 2 நிறுவனங்களுடன் புதிய தொடர்பு முறைகள் கட்டியெழுப்பப்பட்டன. (Western Union, G S Cash Line)
- இலங்கை ரூபாய் 6670.3 மில்லியன் விநியோகத்தரர்களுக்கு கொடுப்பனவாக வளங்கப்பட்டது.
- CSR மற்றும் அனுசரனை மூலம் சமூக மேம்பாட்டடிற்காக இலங்கை ரூபாய் 30.4 மில்லியன் முதலீடு செய்யப்பட்டது.
- சிறுவர் கல்விற்காக இலங்கை ரூபாய் 89.2 மில்லியன் செலவிடப்பட்டது.

2019 இற்கான முன்னுரிமைகள்

- பயனுறுதித்தன்மை , புத்தாக்கம், டிஜிட்டல் தீர்வுகள் தொடர்பில் வாடிக்கையாளர்களது எண்ணக்கருக்களை மேம்படுத்தும் முகமாக தொடர்பாடல் ரீதியான உபாய முறைகளை மீள்பார்வைக்கு உட்படுத்துதல்.
- விநியோகத்தர் தொடர்பான கணக்காளர்களை மேற்கொள்ளும் முகமாக விநியோகத்தர் வழிக்காட்களை உருவாக்குதல்.
- நிலைபேண் வளர்ச்சி இலக்குகளிற்கு ஏற்புடைய விதத்தில் உபாய ரீதியான கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு கருத்திட்டங்களில் ஈடுபடல்.
- டிஜிட்டல் மற்றும் பணமற்ற வங்கி சேவை முறைகளை வாடிக்கையாளர்கள் மத்தியில் மேலும் மேம்படுத்துதல்.
- புலம் பெயர்ந்தவர்கள் மேலும் சேவையாற்றும் நோக்குடன் புதிய பூகோல பிரதேசங்களில் எமது பிரசன்னத்தை விரிவாக்குதல்.

வாடிக்கையாளர்கள்

வாடிக்கையாளர் பிரிவுகள் முழுவதிலும் ஆழமாக ஊடுருவி துறைசார்ந்த பிரிவுகள் மற்றும் புவியில் ரீதியாக சுமார் நாட்டின் சனத்தொகையில் 62 வீதமானவர்களுக்கு இலங்கை வங்கி சேவையாற்றி வருகின்றது. எமது சந்தை நிலைமையை பேணும் முகமாக வளர்ந்து வருகின்ற வாடிக்கையாளர் தெரிவுகளை ஏற்று தொழில்நுட்பத்தை மையமாகக் கொண்ட போட்டியை கருத்திற்கொண்டு நம்பிக்கை, ஸ்திரத்தன்மை என்ற அடிப்படை பலத்தில் அமைந்த தனித்துவமான வாடிக்கையாளர் பெருமான திட்டத்தினை வழங்குவதன் அவசியத்தை நாம் உணர்ந்துள்ளோம். 2018இல் பல்வேறு விதமான குறிப்பிட்ட உற்பத்திகள் மற்றும் டிஜிட்டல் சார் தீர்வுகள் ஆகியவற்றின் மூலம் உதவப்பட்ட வகையில் இளைஞர்கள் மத்தியில் பரவச்செய்து அவர்களை கவர்வது தொடர்பில் நாம் கருத்திற்கொண்டு வலிமையுடன் செயற்பட்டோம்.

மாகாண ரீதியான வாடிக்கையாளர் விநியோகம் - 2018



மேல்மாகாகணத்திற்கு வெளியே வாடிக்கையாளர்கள் 80%

13.4 மில்லியன்

பால்நிலை ரீதியான வாடிக்கையாளர் விநியோகம் - 2018



நடைமுறையில் எமது சேவை

ஸ்ரீராகுல கல்லூரி அனுராதபுரம்

ஸ்ரீராகுல கல்லூரியானது அனுராதபுர மாவட்டத்தில் உள்ள மிகவும் பிரபல்யம் மிக்க தனியார் கல்லூரிகளுள் ஒன்றாகும். சராசரிக்கு மேற்பட்ட சித்திகள் தொடர்ச்சியாக இக்கல்லூரியில் பதிவு செய்யப்பட்டு வந்த இந்நிலையில் உயர் தரமான கல்வியை வழங்குவதில் சிறந்த நட்பெயரை இக்கல்லூரி கட்டியெழுப்பியிருந்தது. இப் பாடசாலையின் வெற்றியின் முக்கிய பங்காளராக இலங்கை வங்கி திகழ்ந்தது. இப்பாடசாலை தனது உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய வசதிகளை விரிவாக்க எதிர்பார்த்த வேலையில் மிகவும் சாதகமான முறையில் பல்வேறு விதமான வசதிகளை நாம் வழங்கினோம். இத்தகைய வசதிகளை வழங்கியதன் மூலமாக இலங்கை வங்கியானது அனுராதபுர மாவட்டத்தில் தரமான கல்வியை இக் கல்லூரி வழங்குவதற்கு பங்களிப்பு செய்தது.

இக்கல்லூரியின் உரிமையாளரான திரு ரோசான் அவர்கள் ஆரம்பத்தில் இக்கல்லூரியை நிறுவிய பொழுது அதனை விரிவாக்குவதற்கான நிதியை பெற்றுக்கொள்வதற்கான பல சவால்களை எதிர்கொண்டார். இத்தகைய சூழலில் அவருக்கு உதவுவதற்கு அர்பணிப்புடன் இலங்கை வங்கி முன்வந்தது. இப்பாடசாலையின் காத்திரமான கல்வி செயற்பாடுகள் காரணமாக இலங்கை அரசாங்கமானது பாடப்புத்தகங்களை இலவசமாக வழங்குவதற்கு முன்வந்ததுடன் ஆசிரியர்களுக்கான சம்பளத்தையும் செலுத்துவதற்கு பங்களிப்பு செய்தது. இலங்கையின் முன்னணி தனியார் பாடசாலைகளுக்கு நிகராக இந்த பாடசாலையையும் விருத்தி செய்வதற்கு இந்த பாடசாலையின் தரத்தினை மேலும் மேம்படுத்துவதற்கு இப்பாடசாலையின் உரிமையாளர் திரு.ரொசான் எதிர்பார்த்துள்ளார். உள்ளக நீச்சல் தடாகம் மற்றும் உடற்பயிற்சி கூடம் ஆகியன நிர்மானிக்கப்படவுள்ளன. இதற்கான உதவிகளை வழங்குவதற்கு இலங்கை வங்கி ஏற்கனவே இனங்கியுள்ளது.

இந்த கருத்திட்டத்திற்கு உதவுவதன் மூலம் சேவைகளை பெற்றுக்கொள்வதில் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்ற சமுதாயத்திற்கு உதவுவதுடன் உயர் தராதரமிக்க கல்வியை நியாய பூர்வமான முறையில் சமூகம் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளுக்கு உதவுவதன் மூலம் வங்கியானது தனது வர்த்தகம் மற்றும் சமூக ஸ்திரத்தன்மை சார்ந்த விடயங்களையும் நிறைவேற்றுகின்றது.

நடைமுறையில் எமது சேவை

வாகரை சமூக நலன் கருத்திட்டம்

மட்டக்களப்பு வாகரையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகத்திற்கென வெள்ளரிக்காய் பயிற்செய்கையை ஆரம்பிக்கும் முகமாக இளம் விவசாய குழுவொன்றிற்கு நிதி உதவி வழங்குவதற்கு இலங்கை வங்கி முன்வந்தது. இந்த சமூகம் ஏற்கனவே மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வந்தது. இருப்பினும் சுனாமி அதனை தொடர்ந்து ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களின் காரணமாக கடற்தொழிலை நீண்ட காலமாக மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்பட்டதன் காரணமாக அவர்களது வாழ்வாதாரம் அச்சுறுத்தப்பட்டது. முன்னணி விவசாய ஏற்றுமதி கம்பனி யொன்றுடனான பங்கான்மையுடன் இந்த வெல்லரிக்காய் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பது. உற்பத்தி பொருட்களை கொள்வனவு செய்வதற்கான தெளிவான ஏற்பாடுகள் அமைந்த நிலையில் இப்பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு அவசியமான விதைகள், உரம் மற்றும் தொழில் நுட்ப அறிவு ஆகியன வழங்கப்பட்டன. இலங்கை வங்கியினால் இவ்வகையான வசதிகள் வழங்கப்பட்டதை தொடர்ந்து சுமார் 150 விவசாயிகளுக்கு இக்கருத்திட்டம் விரிவாக்கப்பட்டது. இவர்கள் வெல்லரிக்காயை ஏற்றுமதி செய்வதன் மூலமாகவும் கிடைக்கின்ற வருமானத்தின் காரணமாக பாதுகாப்பான வருமானமொன்றினை தற்சமயம் பெற்று வருகின்றனர். அவர்களுக்கு நிதி ரீதியான அறிவு சார் பயிற்சிகள் மற்றும் சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்துதல் ஆகியவற்றின் மூலமும் இலங்கை வங்கி உதவிகளை நழ்கியது. இந்த கருத்திட்டம் சிறப்பாக வெற்றிப்பபெற்றது. உதாரணமாக பொது/தனியார் பங்கான்மை சிறந்த கருத்திட்டத்திற்கு இது உதாரணமாகும். எனவே சமூகங்கள் தமது வருமையில் இருந்து மென்மெதுவாக விடுபட்டு சமூக பொருளாதார ரீதியாக அவர்கள் வலுவடைவதற்க்கு இத்திட்டம் உதவியது. அதேவேளை நாட்டிற்கு அந்நிய செலாவளையை ஈட்டுவதற்கும் இது உதவியது

நடைமுறையில் எமது சேவை

பிரம்புக் கருத்திட்டம்

திருமதி ஞானவதி மொனராகலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இவர் பிரம்பை மையமாகக் கொண்டு பொருட்களை உற்பதித செய்யும் வியாபாரம் ஒன்றை வெற்றிகரமாக நடத்தி வருகின்றார். அருகிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த 20 பெண்களுக்கு பயிற்சிகளை வழங்கியதன் பின்னர் பல்வேறு விதமான பிரம்பு சார் உற்பத்தி பொருட்களை இவர்கள் தயாரிக்க ஆரம்பித்தனர். அதன் பின்னர் 2000 ஆம் ஆண்டு ஞானவதி இந்த வியாபாரத்தை ஆரம்பித்தார். அவரது வியாபராத்தின் ஆரம்பக்கட்டத்தின் பொழுது இலங்கை வங்கி அவரை அனுகி அவரது வியாபாரத்தை விருத்தி செய்வதற்கு அவசியமான உபகரணங்களை கொள்வனவு செய்யும் முகமாக இலங்கை ரூபாய் 100,000 இனை வழங்கியது. ஆதன் பின்னரும் அவர் இலங்கை வங்கியிடம் இருந்து பல்வேறு விதமான உதவிகளை பெற்றுக்கொண்டார். இவற்றின் காரணமாக தனது உற்பத்தியை அதிகரித்தல், அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குதல, மேலும் தனது பொருடகளை போக்குவரத்து செய்வதற்காக முசக்கர வண்டியொன்றினை கொள்வனவு செய்தல் போன்ற வாய்ப்புகள் அவருக்கு கிடைத்தன. அன்மையில் என்ட பிரைஸ் சிரிலங்கா என்ற கடன் திட்டத்தின் கீழ் இலங்கை ரூபாய் 1.5 மில்லியனை கடனாக பெற்றுக்கொள்வதற்காக வாய்ப்பு ஞானவதிக்கு கிடைத்தது. இதன் மூலமாக 60 பெண்களை வேலைக்கு அமர்த்துவதற்கும் தனது உற்பத்தியை குறிப்பிடக்கூடியளவு விரிவுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் இவருக்கு கிடைத்தன. பிரம்பு சார் பொருட்களை உற்பத்தி செய்வது தொடர்பான சர்வதேச பயிற்சியை பெற்றக்கொள்வதற்கான வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. இப்பொழுது உயர் தராதரமிக்க பல்வேறு விதமான உற்பத்தி பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றார்.இலங்கை வங்கி அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுடன் மிக நெருக்கமான உறவை இவர் பேணி வருவதுடன் அவரது வெற்றிக்கு பங்காளர்களாக திகழ்ந்தமையின் காரணமாக இலங்கை வங்கிற்கு எப்பொழுதும் தனது உளமார்ந்த நன்றியை வெளிப்படுத்தி இக்கருத்திட்டம் மூலமாக இலங்கை வங்கியானது அண்மைகாலமாக சமூக நிலைப்பேறுத்தன்மை முக்கியத்துவம் அளித்து வருவதுடன் பெண் தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்தி அவர்களை வலுவூட்டுவதற்கான தனது அர்பணிப்பு மிக்க செயற்பாட்டினை வெளிப்படுத்தி வருகின்றது.

மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

சமூக மற்றும் தொடர்பு முறை மூலதனம்

2018 சமூக மற்றும் தொடர்புமுறை மூலதனத்தை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட வளங்கள்

விநியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த கொடுப்பனவு 6.7 பில்லியன்

வாடிக்கையாளர் ஈடுபாட்டில் முதலீடு: இலங்கை ரூபாய் 325.5 மில்லியன்

கூட்டாண்மை சமூகப் பொறுப்பு முதலீடுகள்: இலங்கை ரூபாய் 107.9 மில்லியன்

மூலதன தொடர்புகள் மற்றும் வர்த்தகச் சமனிலை

டிஜிட்டல் துறைகளில் அதிகப்படியானவர்களை கவரவேண்டுமெனில் அதனோடு தொடர்புடைய முதலீடுகளை மேற்கொள்வது அவசியமாகும். குறிப்பாக தகவல் தொழில் நுட்ப பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி.

எமது வாடிக்கையாளர்கள் நிதி ரீதியான இடர்பாடுகளை எதிர்கொள்கின்றபொழுது அவர்களுக்கு மீள் கட்டமைத்தல், மீள் அட்டவணைப்படுத்தல் ஆகியவற்றின் மூலம் உதவிகளை வழங்குகின்றோம். மீள் கொடுப்பனவில் தாமதங்கள் காணப்பட்ட பொழுதிலும் இது உறுதியான வாடிக்கையாளர் தொடர்பு முறைக்கு இட்டுச்செல்வதுடன் செலவு மிக்க சட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான தேவையை இல்லாதொழிக்கிறது.

பின்வரும் அடிப்படைகளை மையமாகக் கொண்டு வாடிக்கையார்களுடன் இலங்கை வங்கியானது தனது தொடர்பு முறையை கட்டியெழுப்பியது. எமது சகல விதமான உபாயங்களும் பின்வரும் பிரிவுகளின் கீழ் செயலாற்றுகைகளை மேம்படுத்தும் முகமாக நெறிப்படுத்தப்பட்டது.

- நம்பிக்கை மற்றும் ஸ்திரத்தன்மை
- உற்பத்திகள் மற்றும் சேவைகள்
- வாடிக்கையாளர் அனுபவம்
- பொறுப்பு வாய்ந்த வங்கி
- நிலைபேரான நடைமுறைகளை பரப்புதல்



நம்பிக்கை மற்றும் ஸ்திரத்தன்மை

அரச உடமையுடன் கூடிய சந்தை மேலாதிக்கம் 7 தசாப்பதங்களுக்கு மேல் நிலவி வரும் சிறப்பான பெயர் போன்றன இலங்கை வங்கியை நம்பிக்கை மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் உறுதியான வியாபார குறியை கட்டியெழுப்புவதற்கு உதவின. போட்டி சந்தையிலே காணப்படுகின்ற முக்கிய மூலமாக இது காணப்படுகின்றது. இதன் காரணமாக ஒப்பிட்டளவில் மிகவும் குறைவான செலவில் வாடிக்கையாளர்களை கவர்ந்து அவர்களை தக்க வைத்து கொள்ள முடிகிறது. வருடாந்தம் சராசரியாக சுமார் 600,000 மேற்பட்ட புதிய வாடிக்கையாளர்களை நாம் இணைத்துக்கொள்கினறோம்.

உற்பத்தி மற்றும் சேவைகள்

இலங்கை வங்கியின் பாரிய அளவிலான வாடிக்கையாளர் மையத்தை கருதிற்கொண்டு இலங்கை வங்கியானது பல்வேறு வகையான வைப்புகள், முதலீடுகள், கடன் கொடுத்தல் வசதிகள் ஆகியவற்றை வழங்கி வருகின்றது. விரிவான வாடிக்கையாளர் தொடர்பு முறையின் மூலம் வாடிக்கையாளர் நடத்தை தொடர்பில் எமக்கு ஏற்பட்ட ஆழமான புரிதலின் காரணமாக வாடிக்கையாளர்களது இலக்குகளை நிறைவேற்றக்கூடிய உற்பத்திகள் சேவைகள் மற்றும் தீர்வுகள் ஆகியவற்றை எம்மால் வெற்றிகரமாக வடிவமைக்கூடியதாக உள்ளது.

நோக்கம்	தனிநபர்	சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்	பெருநிறுவன, நிதி நிறுவனங்கள்	அரசாங்க நிறுவனங்கள்
முதலீடு செய்து மேலதிக பணத்தை சேமிக்கவும்	காலவைப்புகள், ஏனைய முதலீட்டுப் பொருட்கள், தொகுதிக்கடன்கள்			
	சேமிப்பு கணக்குகள்			
கொடுக்கல் வாங்கல் நிதி முகாமைத்துவம்	அன்றாட கொடுக்கல் வாங்கல் கொடுப்பனவுகளுக்கான நடைமுறைக்கணக்கு			
		பணமுகாமைத்துவ தீர்வுகள்		
கடன் கொடுத்தல் தீர்வுகள்	தனிப்பட்ட கடன்கள்			
	வீட்டுக்கடன்கள்			
	கல்விக்கடன்கள்			
	மிகைப்பற்று மற்றும் குத்தகை வசதிகள்			
	செயற்திட்ட கடன்கள் உள்ளடங்களாக வர்த்தக கடன்கள்			
			ஒருங்கு சேர்வமைப்பு நிதி	
	தவணைக்கடன்கள், வியாபார நிதி			
கொடுப்பனவு தீர்வுகள்	பற்று/கடன்/பிரயாண அட்டைகள்			
	நடமாடும், இணைய வங்கிச்சேவை வசதிகள்			
சர்வதேச சேவைகள்	உள், வெளி பண அனுப்புதல்கள்			
	தொடர்புசார் வங்கி முறை			

வாடிக்கையாளர் அனுபவம்

எமது சந்தை நிலையை தக்க வைத்து அதனை வலுப்படுத்துவதற்கு வங்கியின் வாடிக்கையாளர்கள் தொடர்பான திட்டமானது இலகுவாக அனுகிப்பெற வேண்டும் மற்றும் சௌகரிகம், தனிப்பணியாக்கம் போன்ற வாடிக்கையாளர்களது எதிர்பார்ப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து செயற்படவேண்டும் என்பதை நாம் புரிந்துகொண்டுள்ளோம். இத்துறையில் இலங்கை வங்கிக் கிளைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மிகவும் விரிவான வசதிகளை கொண்டுள்ளது. இதில் 1721 வாடிக்கையாளர் தொடர்பு புள்ளிகள் காணப்படுகின்றன. அன்மைக்காலங்களின் வங்கியின் டிஜிட்டல் சுய சேவை முறைகளை விரிவாக்குவது தொடர்பில் முன்னுரிமையளிக்கப்பட்டு வருகிறது. 2018 இல் ஸ்மாட் வலையங்களை வங்கி விரிவாக்கியுள்ளது. 2018இன் இறுதியில் இதன் மொத்த எண்ணிக்கை 284 ஆகும். ஸ்மாட் வலையங்களானது ATM, CDM, CRM, கட்டணங்களை செலுத்தும் இயந்திரங்கள் ஆகியவற்றை கொண்டுள்ளது. இதன் மூலம் வாடிக்கையாளர்கள் வரிசைகளில் நிற்காமல் உடனடியாக தமது கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ள முடியும்.வங்கியின் மினி முறைகளானது நடமாடும் வங்கிச்சேவை, இணைய வங்கித்தளங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகிறது

எமது வலையமைப்பு

	2018	2017
கிளைகள்	577	578
மட்டுப்படுத்தப்பட்ட சேவை கிளைகள்	52	48
நடமாடும் கிளைகள்	6	2
தன்னியக்க ரெலா இயந்திரங்கள்	776	764
பணம் வைப்பிடும் இயந்திரங்கள்	163	168
பணம் மீள்சுழற்சி இயந்திரங்கள்	118	-
SME நிலையங்கள்	15	15
பிராந்திய கடன் நிலையங்கள்	14	14

எமது வாடிக்கையாளர்கள் சுய வங்கிச்சேவை முறைகளை துரிதமாக ஏற்க்கொண்டுள்ளமை எம்மால் அவதானிக்கக்கூடியதாக உள்ளது: 2018இல் வங்கியில் மொத்த டிஜிட்டல் ஏற்றுக்கொள்ளல் ஆனது வங்கியின் மொத்த டிஜிட்டல் ரீதியில் கொடுக்கல் வாங்கல்களில் 65 வீதமாகும். ஆதற்கு முந்திய வருடம் இது 60 வீதம் ஆகும்.

வங்கியின் மொத்த கொடுக்கல் வாங்கல் பெறுமானங்களில் 13 வீதம் ஆகும். வங்கியின் ஸ்மாட் வலய எண்ணக்கருவானது டிஜிட்டல் வங்கி முறையை இலங்கையின் மாகாண மட்டங்களில் எடுத்துச்சென்றதுடன் அடிமட்ட மக்கள் மத்தியிலும் இந்த தொழில்நுட்பம் அதிகமாக பயன்படுத்தி வருவதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சுமார் 200 (70 வீதம்) இலங்கை வங்கி ஸ்மாட் வலையங்கள் ஆனது மேல் மாகாணத்திற்கு வெளியில் அமைக்கப்பட்டுள்ளன.

எமது ஊழியர்களுக்கு தொடர்ச்சியான தன்வயப்பட்ட அனுவங்களை சகல கிளைகளிலும் வழங்குவதன் மூலமாக அவர்களை வலுப்படுத்துவதன் ஊடாக சேவைகளை மேம்படுத்துவது தொடர்பான செயல்களில் நாம் ஈடுபட்டுள்ளோம். எமது கிளை கருமப் பீடங்களில் கொடுக்கல் வாங்கல்களில் மேற்கொள்கின்ற பொழுது எடுக்கப்படுகின்ற நேரம் தொடர்பான மேற்பார்வைகளையும் நாம் மேற்கொண்டு வருகின்றோம். இதன் மூலமாக இது சார்ந்த தடைகளை அல்லது இடைஞ்சல்களை இனங்கண்டுள்ளமை வந்து செல்கின்ற நேரத்தை குறைப்பது தொடர்பிலான பரிகார முறைகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம். மேலும் எமது சகல கிளைகளையும் 5s முறை பின்பற்றுவதன் காரணமாக கழிவுகள் குறைக்கப்பட்டுள்ளதுடன் வேலை செய்கின்ற இடத்தை சிறப்பாக பேணி பாதுகாக்கவும் முடிகிறது.

மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

சமூக மற்றும் தொடர்பு முறை மூலதனம்

வாடிக்கையாளர் கொடுக்கல் வாங்கலுக்கான எடுக்கப்பட்ட நேரம்



DMS மூலமாக வினைத்திறன் மேம்பாடு

	Manual Process	Automated Process
கடன் கணக்கை ஆரம்பித்தல்	10 நிமிடங்கள்	1 நிமிடம்
கடன் மதிப்பீட்டிற்கான முக்கிய வங்கி முறையிலிருந்து தரவுகளைப் பெறல்	1 நிமிடம்	15 செகன்கள்
கடன் அட்டை விநியோகம்	1 நிமிடம்	15 செகன்கள்
தொலைபேசி குறுஞ்செய்தி	1 நிமிடம்	15 செகன்கள்
கணக்குகளுக்கான குறிப்பாணை தயார்செய்தல்	1 நிமிடம்	15 செகன்கள்

பொறுப்பு வாய்ந்த வங்கி

இலங்கை வங்கியானது, இலங்கை மத்திய வங்கியின் வாடிக்கையாளர் சமவாயத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. நேர்மையான வங்கி நடைமுறைகள் தொடர்பான வாடிக்கையாளர் கடப்பாடுகள் மற்றும் தராதரங்கள் பற்றி இதில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. வட்டி விகிதங்கள், முதிர்வு காலங்கள், ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் போன்ற பொருத்தமான தகவல்கள் வாடிக்கையார்களுக்கு விருப்பமான மொழியில் தெரிவு செய்யக்கூடிய விதத்தில் தெளிவாக இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. சந்தைப்படுத்தல் மற்றும் உற்பத்தி சிட்டையிடல் தொடர்பில் குறிப்பிட்ட வருடகாலத்தின் பொழுது ஒழுங்கு விதிகள் / தன்னார்வ நெறிமுறைகள் ஆகியவற்றை மீறியதற்கான எவ்வித சந்தர்ப்பங்களும் இல்லை.

வாடிக்கையாளர் தொடர்பான அந்தரங்க தரவுகள் பாதுகாக்கப்படுகின்றன என்பதை உறுதி செய்து கொள்ளும் முகமாக எமது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் இணைய பாதுகாப்பு வரைவுச்சட்டகம் ஆகியவற்றை வலுப்படுத்துவதற்கான தொடர்ச்சியான முதலீடுகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். கட்டுப்பாட்டு முறைகள் நடைமுறையில் உள்ளன. இவற்றுள் தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் பாதிப்புறும் தன்மை தொடர்பான மதிப்பீடுகளை முறையாக மேற்கொள்ளல், வலையமைப்பை இற்றைப்படுத்துதல், மூன்றாம் தரப்பிரனால் மேற்கொள்ளப்படுகின்ற தகவல் தொழில்நுட்ப கணக்காய்வுகள், தகவல தொடர்பாடல் தொழில்நுட்ப பாதுகாப்பு அம்சங்கள் தொடர்பில் ஊழியர்களுக்கு தற்போது வழங்கப்படும் பயிற்சிகள் போன்றன உள்ளடங்கும். 2018ஆம் ஆண்டில் வாடிக்கையாளர் தரவுகள் இலக்கப்பட்டமை தொடர்பில் எவ்விதமான முறைப்பாடுகளும் இல்லை. சுமார் 1.2 மில்லியன் வாடிக்கையாளர்கள் தமது கொடுக்கல் வாங்கல் தொடர்பான விவரங்களை அறிந்து கொள்ளும் முகமாக SMS வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக நம்மை பதிவு செய்து கொண்டனர். இதனை ஓர் பாதுகாப்பு அம்சமாக கருதி வாடிக்கையாளர் மத்தியில் இதனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வங்கி மேற்கொண்டு வருகின்றது.

நிலைப்பேரான நடைமுறைகளை பிரச்சாரம் செய்தல்

நிலைபேரான நடைமுறைகளை உட்சாகப்படுத்துவதற்கும் பகிரப்பட்ட சுபிட்சத்திற்கு இட்டுச் செல்கின்ற பொருளாதார நடவடிக்கைகளை இலகுப்படுத்துவதற்கும் எமது வாடிக்கையாளர்கள் மத்தியில் நாம் மிகவும் நெருக்கமாக செயற்படுகின்றோம். நாம் சில செயன்முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளோம். இதன் மூலம் எமது வாடிக்கையாளர்களின் எதிர் மறையான பொருளாதார தாக்கங்களை குறைப்பதற்கு எந்த விதத்தில் வங்கி உதவ முடியும் என்பதை முறையாக இனம்காணுதல், அதேபோல் சமூக மற்றும் சுற்றாடல் சார் தாக்கங்களை இனம் கண்டு புதிய வியாபார மாதிரிகள் மற்றும் தொழில் நுட்பங்கள் ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு அதன்மூலம் நிலைப்பேரான நடைமுறைகளை பிரசாரம் செய்வதற்கான வாய்ப்புகளை இவை வழங்குகின்றன. குறிப்பிட்ட வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய செயற்பாடுகள் அருகில் தரப்பட்டுள்ளன.

e- கணக்கறிக்கைகளிற்கு மாறியவர்கள்

382,188 வாடிக்கையாளர்கள்

SmartGen கணக்குகளுக்கு மாறியவர்கள் **309,624**

ESMS வகைக்கான சோதனையிடப்பட்ட வசதிகள் **508**

நிதி ரீதியான உள்ளடக்கம் மற்றும் ஆற்றல்களை கட்டியெழுப்புதல்

அரசுக்கு சொந்தமான வங்கி என்ற முறையில் அரசாங்கத்தின் தேசிய பொருளாதார நிகழ்ச்சி நிரலுக்கேற்ப பங்காளர்களாக திகழ்வது எமது கடமையாகும். நிதி ரீதியான உள்ளடக்கம் மூலமாக சமூக பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்து செல்வதானது தொடர்ச்சியான அரசாங்கங்களது முன்னுரிமையாகும். நாம் பூகோல ரீதியாக பரவிக்காணப்படும் தன்மை மற்றும் எமது உறுதியான நிதி முதலீட்டுப்பட்டியல ஆகியவற்றை கருத்திற்கொண்டு நாடு முழுவதும் நியாய பூர்வமான நிதியிடலை இலகுப்படுத்துவதற்கு இலங்கை வங்கி முக்கிய வகிபாகத்தை மேற்கொண்டுள்ளது. நிதி ரீதியான உள்ளடக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு பல்வேறு வகையான தளங்களையும் உற்பத்திகளையும் இலங்கை வங்கி ஏற்றுக்கொண்டுள்ளது. அவை பற்றி சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளன.

பல்வேறு வகையான கடன் திட்டங்களின் பொழுது பங்குபற்றல் நிதி நிறுவனங்கள்

50இற்கும் மேற்பட்ட கடன் திட்டங்களின் பொழுது இலங்கை வங்கியானது பங்குபற்றல் நிதி நிறுவனமாக திகழ்கின்றது. சமூகத்தில் பின்தங்கிய நிலையில் வாழ்கின்ற மக்களுக்கான நிதி உதவிகள் இதன் மூலம் வழங்கப்படுகின்றன. சிறிய மற்றும் நடுத்தர வணிக முயற்சிகள் இவற்றுள் உள்ளடங்கின்றன. இவற்றிற்கு ஏற்கனவே வங்கி மூலம் கடன்கள் வழங்கப்படவில்லை மற்றும் பெண்கள் தலைமைத்துவ சிறிய மற்றும் நடுதர வணிகமுயற்சிகள், விவசாயம், மீன்பிடித்துறை, சிறிய மற்றும் நடுத்தர வணிக முயற்சி தொடர்பான பால் பண்ணைகள்

பங்குபற்றல் நிதியிடல் திட்டங்கள் மூலமாக வழங்கப்பட்ட தொகை இலங்கை ரூபாய் **12,477.6** மில்லியன்

பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை **32,460**

பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரதேசங்களில் வாடிக்கையாளர் தொடர்பு நிலையங்கள

வங்கியின் நன்கு பரவிக்காணப்படும் கிளைகளின் வலையமைப்பானது கடன் கொடுத்தல் மற்றும் வைப்புகள் மூலமாக வங்கி சாராத துறைகளுக்கு உதவுவதற்கான அதன் தனித்துவமான நிலையை புலப்படுத்துகின்றது. வாகனங்களில் இயங்கி வரும் வங்கிகள் மூலம் நடமாடும் வங்கி சேவை இடம்பெற்று வருகின்றது. இதன் மூலம் கிராமப்புரங்களை சேர்ந்த மக்கள் நேரடியாக வங்கி கிளைகளுக்கு விஜயம் செய்யாமல் வங்கி தொடர்பான பல்வேறு விதமான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடியும்.

பின்தங்கிய சமூகங்களுக்கு உதவும் முகமாக வாகனங்களில் செயற்படும் 06 வங்கிக்கிளைகள்

பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரதேசங்களில 99 கிளைகள்

பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரதேசங்களில 112 வாடிக்கையாளர் தொடர்பு நிலையங்கள்.

நுண்நிதி கடன்கொடுத்தல்

கடன் திட்டங்கள் மூலம் நாட்டின் நுண் நிதியை வழங்குவதற்காக பல்வேறு விதமான அரசாங்க நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இலங்கை வங்கி பங்கான்மையை ஏற்படுத்தியுள்ளது. மிதுறு நுண்நிதியிடல் நிகழ்ச்சித்திட்டமானது இலங்கை வங்கியின் சொந்த முன்னெடுப்பாகும். இதன் மூலம் மிதுறு குழுக்களும் மற்றும் சமூகங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இவை பரஸ்பரம் உத்தரவாதம் மூலம் கடன்களை வழங்குகின்றன. தொழில் முயற்சிகளை மேற்கொள்ளும் முகமாகவே ஆரம்பக்கட்ட நிதிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு இல்லாத பட்சத்தில் இத்தகைய சமூகங்களுக்கு முறைசார்ந்த முறையில் நிதியை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லை. மேலும் மிதுறுபொல போன்ற சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துவதன் மூலம் இம் மக்கள் தமது உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்கான உதவிகளை வங்கி ஏற்படுத்தி கொடுக்கின்றது.

ஒட்டுமொத்த மைக்ரோ நிதி : முதலீடு இலங்கை ரூபாய் 8.7 பில்லியன்

மிதுறு திட்டத்தின் மூலம் சுமார் இலங்கை ரூபாய் 189.0 மில்லியன் 18459 குழுக்களுக்கும் 195 சங்கங்களுக்கும் வழங்கப்பட்டன.

நிதி ரீதியான கல்வி மற்றும் ஆற்றல்களை கட்டியெழுப்புதல்

இத்துறையின் முன்னோடி என்ற முறையிலும் வங்கித்துறை சார்ந்த பொறுப்பு வாய்ந்த அமைப்பு என்ற முறையிலும் நிதி ரீதியான ஒழுக்கம் மற்றும் நிதி ரீதியான கல்வி ஆகியவற்றை சமூகங்கள் மத்தியில் வளர்ப்பதில் எமக்கு முக்கிய வகிபாகம் உள்ளது என நாம் நம்புகிறோம். தற்சமயம் இலங்கை வங்கியானது பல்வேறு வகையான நிதி ரீதியான கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. 2018இல் ஏற்பட்ட முன்னேற்றங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- ஹபன கருத்தரங்கு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 5ஆம் ஆண்டில் புலமை பரிசில் பரிட்சைக்கு தோற்றுகின்ற 27662 மாணவர்களுக்கும் 20830 பெற்றோர்களுக்கும் வெளி மாவட்டங்களில் சுமார் 150 கருத்தரங்குகள் நடத்தப்பட்டது. (75 மாணவர்களுக்கு 75 பெற்றோர்களுக்கு)
- வெளிநாட்டு வேலை வாய்ப்பை நாடிச்செல்லும் தனிநபர்களுக்காக 74 செயலமர்வுகள் நடத்தப்பட்டன. இவை வெளிநாட்டு நாணயம் மற்றும் பணம் அனுப்புதல் என்ற தொனிப்பொருளில் இடம் பெற்றது – பயணாளிகளின் எண்ணிக்கை 10790
- தலைமைத்துவ திறன்களை மேம்படுத்தும் முகமாக நாடளாவிய ரீதியில் நித் FM இன் உதவியுடன் நிகழ்ச்சித்திட்டங்கள் இடம்பெற்றன. இத்தகைய 6 நிகழ்ச்சித்திட்டங்கள் '' நீங்கள் தலைவர்கள்'' என்ற தொனிப்பொருளில் இடம் பெற்றது
- சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான "வியாபாரிக்க ஹமுவ" அமர்வு இடம் பெற்றது. வலையமைப்பு மற்றும் அறிவு பரிமாற்றலுக்கு இது உதவியது- பயனாளிகள் 600
- சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி வாடிக்கையாளர்களுக்காக 20 '' இலங்கை வங்கியின் மிதுறு'' நிதி கல்வி விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம் இடம்பெற்றது – பயனாளிகளின் எண்ணிக்கை 1452
- நாட்டில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்தும் முகமாக 10 பிராந்திய நிகழ்ச்சித்திட்டங்கள் இடம் பெற்றன – பயனாளிகள் 409

எமது வாடிக்கையாளரை செவிமடுத்து பதிலளித்தல்

குறிப்பிட்ட வருட காலத்தின்பொழுது வங்கியின் அர்பணிப்பு மிக்க ஆராய்ச்சிப் பிரிவு பூரணத்துவமிக்க வாடிக்கையாளர் ஆய்வினை மேற்கொண்டடது. வுாடிக்கையாளர்களது எண்ணக்கருக்கள் மட்டும் திருப்தி மட்டங்கள் ஆகியவற்றை இனம் காணும் முகமாக 10 000 வாடிக்கையாளர்கள் இதில் நாடளாவிய ரீதியில் பங்குப்பற்றினர். வங்கியின் சந்தைப்படுத்தல் தொடர்பாடல் தொடர்பான பயனுறுதித்தன்மை மற்றும் ஒப்பீட்டு சேவைகள் தொடர்பான போட்டி பகுப்பாய்வுகள் பற்றி ஆய்வுகளை நடத்தினோம். இத்தகைய ஈடுபாடுகளின் கண்டறிதலானது வங்கியின் பெருநிறுவன திட்டமிடல் செயலில் முக்கியமான உள்ளீடாக காணப்பட்டது. (சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது)



எமது பதில்கள்:

வங்கியின் சுய சேவை மற்றும் டிஜிட்டல் தீர்வுகள் தொடர்பில் கவனம் செலுத்தும் முகமாக மீளாய்வு செய்யப்பட்ட தொடர்பாடல் உபாயம், ஒவ்வொரு கிளையிலும் காத்திரமான மானி அறிமுகப்படுத்தப்பட்டது, உபாய ரீதியான முறையில் தீர்மானம் மேற்கொள்ளல் கண்டறிதல்களை பரிசீலித்தல்.

மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

சமூக மற்றும் தொடர்பு முறை மூலதனம்

2018 இல் வாடிக்கையாளர் பெறுமதி உருவாக்கம்

கவனம் செலுத்தப்பட்ட பிரதேசம்	2018 இல் முன்னேற்றம்	
2018இல் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு அல்லது விரிவாக்குவதற்காக வழங்கப்பட்ட நிதி பெண் வாடிக்கையாளருக்காக வழங்கப்பட்ட சேமிப்பு சார்ந்தவைகள்	இலங்கை ரூபாய் 3.2 பில்லியன் காந்தா ரன் கினும் (0.5% மேலதிக வட்டி)	
மக்கள் வீடுகளை கெள்வனவு செய்வதற்காக அல்லது நிர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட கடன் கொடுத்தல் உதவிகள்	இலங்கை ரூபாய் 66.8 பில்லியன்	
நாட்டின் விவசாய, மீன்பிடித் துறைக்கு உதவுதல்	இலங்கை ரூபாய் 68.0 பில்லியன்	
வாடிக்கையாளர்கள் சார்பாக சேமிப்பு மற்றும் வைப்புகள் சார்ந்த கலாசாரத்தை மேம்படுத்தல்.	இலங்கை ரூபாய் 1627.0 பில்லியன்	

வியாபார பங்காளர்கள்

வங்கியானது பரஸ்பரம் நன்மையளிக்கக்கூடிய தொடர்பு முறைகளை பெறுமதியாகக் கருதுகிறது. தனது வியாபார பங்காளர்களை வங்கியானது போசித்து வந்துள்ளதுடன் நெறிமுறை சார்ந்த நடத்தை, வெளிப்படைத்தன்மை, தொழிற்பாட்டு நடைமுறைகள், நேர்மையான உரிய நேரத்தில் வெளியிடல் போன்றவற்றின் மூலமாக பகிரப்பட்ட பெறுமானங்களை முன்னெடுக்கும் முயற்சிகளை மேற்கொண்டது. இத்தகைய தொடர்பு முறைகளானது தொழிற்பாடுகள் சுமுகமாக தொடர்வதை உறுதிப்படுத்துவதுடன் எமது விநியோக சங்கிலியின் முக்கிய பாகமாகவும் திகழ்கின்றது. இலங்கை வங்கியின் சுற்றுச்சூழல் மைய வியாபார பங்காளர்கள் தொடர்பான விபரங்கள் கீழுள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளது.



விநியோகத்தர் ஆராய்வு

விலை மற்றும் உற்பத்தி தன்மை தொடர்பான பரிசீலனைகளுக்கு மேலதிகமாக இலங்கை வங்கியானது இலங்கை வங்கியின் மதிப்பீட்டு நெறிமுறைகளானது சமூக மற்றும் சுற்றாடல் சார் பரிசீலனைகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இவை சுற்றாடல் சார் சான்றிதல்கள், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஒழுங்கு விதிகள், சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல் தொடர்பான இடர்கள், நிர்பந்த வேலை, ஏனைய விதிமுறைகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு அந்த விதிமுறைகளுக்கு இனங்கவே நடந்து கொள்கின்றது. குறிப்பிட்ட வருடகாலப்பகுதியின் பொழுது விநியோகத்தர், செயற்பாடு தொடர்பில் ஏதாவது சிறுவர்கள் தொடர்பான இடர்களோ அல்லது கட்டாய நிர்பந்த வேலை தொடர்பான இடர்களையோ நாம் எதிர்கொள்ளவில்லை.

கொள்வனவு சார் அனுகுமுறை மற்றும் ஆளுகை

தேசிய கொள்வனவு வழிமுறைகளுக்கு ஏற்பவே வங்கியின் கொள்வனவு செயல்முறைகள் காணப்படுகின்றன. விநியோகத்தர்களை தெரிவு செய்கின்றப் பொழுது சம்பந்தப்பட்ட வழிகாட்டிகள் முறையாக பின்பற்றபட்டிருக்கின்றன என்பதை உறுதிசெய்து கொள்ளும் முகமாக மத்திய கொள்வனவு குழு மற்றும் நிறைவேற்று கொள்வனவு குழு ஆகியன நடைமுறையில் உள்ளன. விநியோகத்தர்களை தெரிவு செய்யும் பொழுது பின்பற்றப்பட்ட நடைமுறைகள் கீளுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளன.



மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

சமூக மற்றும் தொடர்பு முறை மூலதனம்

தொடர்பாடல் வங்கிகள்

சுமார் 758இற்கு மேற்பட்ட தொடர்பாலர் தொடர்புமுறைகள் காணப்பட்ட பொழுதிலும் இலங்கை வங்கியிடமே மிகப் பெரிய தொடர்பாளர் வங்கி வலையமைப்பு காணப்படுகின்றது. இத்தகைய தொடர்பு முறைகள் மூலம் பல்வேறு வகையான சர்வதேச கொடுக்கல் வாங்கல்களை இலங்கை வங்கி இலகுப்படுத்தி வருகின்றது. இவற்றுள் கம்பி மூலமான மாற்றங்கள், வியாபார கொடுக்கல் வாங்கல்கள், வாடிக்கையாளர் சார்பாக வைப்புகளை ஏற்றுக்கொள்ளல் ஆகியன உள்ளடங்குகின்றன.

தொழில் சதார் ஒன்றியங்களின் பங்குபற்றுதல்

நாட்டின் மிகப்பெரிய வங்கி என்ற முறையின் தொழில்துறை சார்ந்த அமைப்புகள் மற்றும் ஒன்றியம் ஆகியவற்றில் வங்கியின் பிரதி நிதிகள்முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றனர். இதன் மூலம் சாதகமான தொழிற்பாட்டுச் சூழல் மற்றும் தொழிற்துறை சார்ந்த சவால்களுக்கு தீர்வு காணல் ஆகியவற்றிற்கு இவர்கள் பங்களிப்பு செய்கின்றனர்.

- ஆசிய பசுவிக் கிராமிய, விவசாய கடன் அமைப்பு (APRACA)
- வங்கித்துறை இடர் பற்றிய தொழில்வாண்மை அமைப்
- இலங்கை வங்கியாளர் நிறுவகம்
- சர்வதேச வர்த்தக சம்மேளனம் - இலங்கை
- தேசிய வர்த்தக சம்மேளனம் - இலங்கை
- இலங்கை வங்கியாளர் சங்கம் லிமிடெட் (உத்தரவாதம்)
- இலங்கை சட்ட நூலகம்
- இலங்கை வர்த்தக சம்மேளனம்
- இலங்கை உயிர் பல்வகைமை
- இலங்கை நிதிசார் ஒம்பூட்ஸ்மன் ஒப் பேங்க்
- இலங்கை சட்டதரணிகள் சங்கம்

சமுதாய ஈடுபாடு

முகாமைத்துவ அனுகுமுறை

2018 ஆம் ஆண்டில் இலங்கை வங்கி தனது அனுகு முறைகளை பெறுநிறுவன சமூக பொறுப்பாக மாற்றியமைந்தது. இதன் மூலம் கிளை அடிப்படையிலான பெருநிறுவன சமூக பொறுப்பு மதிப்பீடு மாதிரிகளை நடைமுறைப்படுத்தியது. 10 நிர்வாக மாகாணங்களை நடைமுறைப்படுத்தியது. இதன் பிரகாரம் நிலைபேரான அபிவிருத்தி இலக்குகளுக்கு ஏற்ப பரந்த கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டிகள் 10 நிர்வாக மாகாணங்களுக்கும் வழங்கப்பட்டன. 2019ஆம் ஆண்டு முதல் இலங்கை வங்கியானது நீண்ட கால உபாய ரீதியான பெறுநிறுவன சமூக பொருப்பு உபாய கருத்திட்டங்களில் ஈடுபடும். வங்கி செயற்படும் கருத்திட்டங்களில் உள்ள சமுதாயங்கள் மத்தியில் அர்த்தமுள்ள மாற்றங்களை இது ஏற்படுத்தும். 2018ஆம் ஆண்டில் இலங்கை வங்கியின் பெறுநிறுவன சமூக தொடர்பான அனுகுமுறைகள் பின்வருமாறு.



கல்வி

நீங்கள் ஒரு தலைவர் நிகழ்ச்சித்திட்டம்

இது தொடர்ச்சியாக நடைபெறும் ஒரு நிகழ்ச்சித்திட்டமாகும். ஏதிர்கால தலைவர்களை வளர்த்தெடுக்கும் முகமாக இலங்கை வங்கியானது Asset Radio ஒளிபரப்பு சேவையுடன் (Neth FM Radio) பங்கான்மையுடன் கூடிய பூரணத்துவமிக்க தலைமைத்துவ விருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றினை ''நீங்கள் ஒரு தலைவர் என்ற தொனிப்பொருளில்'' நடத்தியது. குறிப்பிட்ட வருடத்தின் பொழுது இலங்கையிலுள்ள பல மாகாணங்களில் உள்ள 6 பாடசாலைகளில் இந்த நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது. மொத்த நிகழ்ச்சித்திட்டமானது 4 பிரிவுகளை உள்ளடக்கியதாக காணப்பட்டது.

- தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் இருந்து சுமார் 300 மாணவர்கள் பங்குபற்றிய ஒருநாள் பொது நிகழ்ச்சித்திட்டம்
- அதே பாடசாலையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட தங்குமிட வசதிகளுடன் கூடிய செயலமர்வு 2ஆவது நாள்
- பெற்றோர்களுக்கான விசேட பயிற்சி நிகழ்சிசத்திட்டம்.
- பாடசாலையிலுள்ள சகல ஆசிரியர்களுக்குமான விசேட ஆசிரியர் பயிற்சி திட்டம்.

2018 இல் முன்னேற்றம்	6 நிகழ்ச்சிகள்	8,421 பயணாளிகள்

2018இல் பயனாளிகள் பாடசாலைகளாக காணப்பட்டவை உடவலவ மகா வித்தியாலய- உடவலவ, பஸ்தியன் சில்வா மகா வித்தியாலய – கெகிராவ, அகுரெஸ்ஸ மகா வித்தியாலய - அகுரெஸ்ஸ, ஸ்ரீபாத கல்லூரி - ஹட்டன், பதுளை மத்திய கல்லூரி – பதுளை மற்றும் மஹித ராஜபக்ஸ கல்லூரி – ஹோமாகம.

நநஜய புலமைப்பரிசில் 2017

இலங்கையின் சிறப்பான பெறுபேறுகளைப் பெருகின்ற இளைஞர்கள் தமது உயர்க்கல்வியை தொடரும் முகமாக மாதாந்த கொடுப்பனவொன்று ஒன்று BoC நநஜய புலமைப்பரிசில் மூலமாக வழங்க்கப்படுகன்றது. 2018ஆம் ஆண்டில் 562 அத்தகைய புலமை பரிசில்கள் வழங்கப்பட்டன. 2016, 2017ஆம் ஆண்டுகளில் க.பொ.த.உயர் தர பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை, பொறியியல், தொழில்நுட்பம், உயிரியல் தொழிநுட்பம், பொதுத் துறை ஆகியவற்றில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்ற 18+ கணக்குகளை உடையவர்ளுக்கு இது வழங்கப்பட்டது. தேசிய ரீதியாக உயர் புள்ளிகளை பெற்ற மாணவர்களுக்கு திறமையை அடிப்படையாக கொண்ட புலமை பரிசில் தொடர்பாக 48,000 ரூபாய் வழங்கப்பட்டது. அதேவேளை மாவட்ட பெறுபேற்றின் அடிப்படையில் 412 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு 36,000 ரூபாய் புலமை பரிசில் தொகையாக வழங்கப்பட்டது.

2018 இல் முன்னேற்றம்	562 பயணாளிகள்	வழங்கப்பட்ட மொத்த தொகை 22 மில்லியன்

உயர்தர பரீட்சையை பூரணப்படுத்திய மாணவர்கள் தமது உயர்கல்வியை தொடரும் முகமாக 2013 ஆம் ஆண்டில் அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. (சிறப்பு புலமை பரிசில்) 4 வருடங்களுக்கு வழங்கப்பட்டது. அத்துடன் 3 வருடங்களுகான (முறையான புலமைபரிசில்களும் வழங்கப்பட்டன. இதுவரை இலங்கை வங்கியானது 1894 அத்தகைய புலமைப்பரில்களை வழங்கியது. பெறுமானம் 61.8 மில்லியன் ஆகும்

மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

சமூக மற்றும் தொடர்பு முறை மூலதனம்

தரம் 5 புலமைபரிசில் 2018

2002ஆம் ஆண்டு முதல் இந்த நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. இலங்கை வங்கியானது சுமார் 2000 புலமைப்பரிசில்களை தரம் 5 புலமைபரிசு பரிட்சையில் உயர்வான பெறுபெறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது. தகமையடைய ஒவ்வொரு மாணவனுக்கும் புலமைப்பரிசில் தொகையாக இலங்கை ரூபாய் 15 000 மற்றும் அங்கீகார சான்றுதல்,தங்கப்பதக்கம், பெறுமதியான பரிசுப்பொதி ஆகியன வழங்கப்படுகின்றன. மேலும் தேசிய மட்டத்தில் ஆக கூடிய புள்ளிகளைப் பெற்ற முதல் 3 மாணவர்களுக்கு விசேட பணப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. அதே வேளை தகமைக்கொண்ட சகல ரன்கெகுலு கணக்குகளையுடைய தரம் 5 புலமைப்பரிசு பரிட்சையில் சித்தி பெறுகின்ற மாணவர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் சான்றிதல்களும் வழங்கப்படுகின்றன. அதே போல் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு உதவும் முகமாக வங்கி நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பித்தது. இதன் அடிப்படையில் 25 மாணவர்கள் மாதாந்தம் ரூபாய் 15 000 என்ற அடிப்படையில் புலமைப்பரிசில் தொகையை பெற்றுக்கொள்கின்றனர் மற்றும் இவர்கள் க.பொ.த. சாதாரண தர பரிட்சைக்கு தோற்றும் வரையில் மாதாந்தம் ரூபாய் 1000 படியாக வழங்கப்பட்டு வருகின்றது.

2018 இல் முன்னேற்றம்	2,000 பயணாளிகள்	வழங்கப்பட்ட மொத்த தொகை 30.0 மில்லியன்

தேசிய மட்டத்தில் முதலாம்,இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்ற மாணவர்களுக்கு முறையே 150,000 ரூபாய், 100,000 ரூபாய் மற்றும் 75,000 ரூபாய் பணப்பரிசில்கள் வழங்கி விசேடமாக கௌரவிக்கப்பட்டனர். 2002ஆம் ஆண்டு முதல் வங்கியானது தொடர்சியாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடத்தி வருகின்றது.

லிடில் பிகாசோ வரைதல் போட்டி

இலங்கை வங்கியானது கல்வி அமைச்சுடன் ஒன்றாக இணைந்து லிடில் பிகாசோ வரைதல் போடியினை 2ஆவது வருடமாகவும் வெற்றிகரமாக நடத்தியது. இந்த கண்காட்சியானது 2018 ஒக்டோபர் 12 மற்றும் 13ஆம் திகதிகளில் பண்டாரநாயக சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைப்பெற்றது. சுமார் 300 000 இற்கு மேற்பட்ட மாணவர்கள் இந்த போட்டியில் பங்குபற்றினர். 64 பாடசாலைகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இதன் பெறுமதி மொத்தமாக ரூபாய் 1.3 மில்லியன் ஆகும். மேலும் வெற்றிப்பெற்ற மாணவர்களுக்கு சுமார் 6.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான பரிசுகள் வழங்கப்பட்டன.

2018 இல் முன்னேற்றம்	விருது வழங்கப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 64	விருது வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 780

பாடசாலை மாணவர்களது கலைத்திறன்களை விருத்தி செய்யும் முகமாகவும் திறமையான மாணவர்களுக்கு களம் அமைத்துக்கொடுத்து அவர்களது ஆற்றல்களை வெளிக்கொனர்வதுடன் அவற்றை அங்கீகரிப்பதை நோக்காகக் கொண்டு இந்த கருத்திட்டம் செயற்படுகிறது.

இயற்கை மூலதனம்

இயற்கை மூலதனம்

சக்தி, நீர்பாவணை, பொருட்கள், கழிவு அகற்றல், கழிவு வெளியேற்றங்கள், கடன் கொடுத்தல், ஆகிய செயற்பாடுகள் மூலமாக இலங்கை வங்கியானது இயற்கை மூலதனம் தொடர்பில் அடிப்படையில் தனது பங்களிப்புகளை செய்து வருகின்றது. இலங்கையில் மிகப்பெரிய கடன் கொடுக்கும் நிறுவனம் என்ற முறையில் பொறுப்பு வாய்ந்த கடன் வழங்கள் நடவடிக்கைகள் மூலம் நிலைபேரான வியாபாரத்தை பரப்புரைச் செய்வது தொடர்பில் எமது வகிபாகம் என்னவென்பதை நாம் நன்கு உணர்ந்துள்ளளோம்.

02
பசுமை சான்றளிக்கப்பட்ட கிளை கட்டிடங்கள்

5%
மின் பயன்பாடு குறைதல்

டிஜிட்டல் முன்னெடுப்புகள் மூலமாக
7 மில்லியன்
A4 தாள்கள் சேமிக்கப்பட்டன



1MW
சூரியக்கதிர் பயன்பாட்டின் மூலம் தேசிய மின் உற்பத்திக்கான பங்களிப்பு

ரூபாய் 6.3 பில்லியன்
பசுமை கடன் காடுத்தல்

2018 இல் உபாய ரீதியான முன்னுரிமைகள்

சூரிய சக்தி போன்ற புதிப்பிக்கக் கூடிய சக்தி முறைகளை பின்பற்றுவதன் காரணமாக எரிபொருளில் தங்கியிருப்பதை குறைத்தல்.

அமைப்பு ரீதியான பசுமை நிறைந்த வாயு மதிப்பீட்டில் ஈடுபடல்

சுற்றாடல் சார் நிலைப்பேறு தன்மை தொடர்பில் ஊழியர் ஈடுபாட்டினை மேம்படுத்துதல்.

2018இல் முன்னெடுப்புகள்

- சூழல் மற்றும் சமூக முகாமைத்துவம் தொழிற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.
- ஸ்திரத்தன்மை மற்றும் பெறுநிறுவன சமூகப் பொறுப்பு தொடர்பாக ஊழியர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- சூரியபின்சக்தி பொருத்தும் கருத்திட்டங்களை மேலும் விரிவுப்படுத்துதல்.
- பசுமைக்கட்டிட எண்ணக்கருவின் பிரகாரம் சகல புதிய கிளைகளையும் நிர்மானிப்பது தொடர்பிலான கொள்கைத் தீர்மானம

2018இல் நாம் எவ்வாறு செயலாற்றினோம்

- மொத்த GHG கழிவு வெளியேற்றம் 13,255.6 tCO_2e
- உருவாக்கப்பட்ட புதிப்பிக்கதக்க சக்தி : 885,238 Kwh
- டிஜிட்டல் முன்னெடுப்புகள் மூலம் 7 மில்லியன் A4 தாள்கள் சேமிக்கப்பட்டன.
- க்ரீன் பில்டிங் மற்றும் பிளாட்டினம் விருது திருகோணமலை கிளைக்கு வழங்கப்பட்டது.
- சுற்றாடல் சார் நெறிமுறைகளின் கீழ் 508 வாடிக்கையாளர்கள் பரிசோதிக்கப்பட்டனர்.
- பசுமை சார் கடன் கொடுத்தல் 6.3 பில்லியன்
- ஊழியர் வாக்குறுதி அறிமுகம்
- பசுமை சார் கட்டிங்களுக்கு மேலும் முதலீடுகளை மேற்கொண்டதன் மூலமாக மின்சாரம் மற்றும் நீர் கொள்வனவு குறைக்கப்பட்டன.
- சூரிய சக்தி மின் களங்களை பொருத்தியதன் மூலம் தேசிய மின் உற்பத்திக்கு மொத்தமாக 2 ஆறு புதிப்பிக்க தக்க மின் சக்தி வழங்கப்பட்டது.
- கடன் கொடுத்தல் மூலம் சுற்றாடல் சார் ஸ்திரத்தன்மைக்கு தொடர்சியாக உதவப்பட்டது.
- பெறுநிறுவன சமூகப்பொருப்பு முன்னெடுப்புகள் மூலம் சுற்றாடலை பாதுகாத்து மேம்படுத்துவது தொடர்பான விடயங்களுக்கு எமது அர்பணிப்பு மேலும் விரிவாக்கப்பட்டது.

2019இற்கான முன்னுரிமைகள்

மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

இயற்கை மூலதனம்

முகாமைத்துவ அனுகுமுறை

வங்கியின் இயற்கை மூலதன தாக்கங்களை முகாமைத்துவம் செய்வது தொடர்பான வங்கியின் அனுகு முறைகள் பற்றி அதனது நிலைப்பேறான கொள்கைகளில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. இது ஐநா வின் நிலைப்பேறான அபிவிருத்தி இலக்குகலுக்கு ஏற்ப காணப்படுகின்றது. (மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து 58 முதல் 62 வரையிலான பக்கங்களை பார்க்கவும்). எமது நேரடி செயற்பாடுகள் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற தாக்கங்களை குறைப்பதை மையமாகக் கொண்டு இந்த அனுகுமுறை காணப்படுகின்றது. அதே வேளை பொறுப்பு வாய்ந்த கடன் கொடுத்தல் நடைமுறைகள் மற்றும் விநியோகம் சார்ந்த மதிப்பீடுகள் ஆகியவற்றின் மூலமாக இயற்கை வளங்களை பாதுகாப்பதற்காக பங்களிப்பு செய்வதும் எமது பணியாகும். சுற்றாடலுக்கு ஏற்படும் நேரடியான தாக்கங்களை குறைக்கும் முகமாக புதுப்பிக்கத்தக்க சக்தி பயன்பாட்டில் தங்கியிருப்பதை அதிகரித்தல், நீர் மற்றும் பேப்பர்களை சேமித்தல், கழிவுகளை பொறுப்பு வாய்ந்த முறையில் அகற்றுதல் ஆகிய விடயங்களில் அக்கறை செலுத்துவதும் இதில் உள்ளடங்குகிறது. இலங்கை வங்கிற்கு ISO 14064 - 1 தரச்சான்றிதல் கிடைக்கப்பெற்றது. GHG வெளியீட்டு முகாமைத்துவம் தொடர்பில் இதன் அர்பணிப்புகளை இது புலப்படுத்துகின்றது. இந்த சான்றிதல் முதன் முறையாக இலங்கை வங்கிற்கு கிடைத்தது. உதவி சேவைகள் பிரிவின் மூலம் சகல விதமான சுற்றாடல் சார் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் ஆகியவற்றிற்கு ஏற்ப நடத்தல் பற்றி மதிப்பீடு செய்யப்படுகின்றது. இத்தகைய ஒழுங்கு விதிகளை மீறியதாகவோ அல்லது அவற்றிற்கு எதிராக செயற்பாடுகள் இடம் பெற்றதாகவோ எத்தகைய முறைப்பாடுகளும் அல்லது சம்பவங்களும குறிப்பிட்ட வருட காலப்பகுதியினுள் இடம் பெறவில்லை.

நோக்கெல்லை 1 மற்றும் நோக்கெல்லை 2 பச்சை வீட்டு வயுக்கள் வெளியேற்றல் மூலம், இலங்கை வங்கி தொடர்பில் தனித்தனியாக பாகுபாடு





2018இல் இயற்கை மூலதனங்களை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட வளங்கள்

சூரிய சக்தி முதலீடுகள்:
இலங்கை ரூபாய் 146.0 மில்லியன்

பசுமை கட்டிட முதலீடுகள்:
இலங்கை ரூபாய் 1.5 பில்லியன்

நிலைபேறான பிரிவின் ஆற்றல்களை விரிவாக்குதல்:



மூலதன தொடர்புகள் மற்றும் பரிமாற்றங்கள்

ESMS வழிகாட்டிகள் தொடர்பில் எமது பிரதான பணியாட்களை பயிற்றுவித்தமையின் காரணமாக எமது மனித மூலதனம் வலுப்படுத்தப்பட்டது.

சுற்றாடல் தொடர்பிலான ஊழியர்களது வாக்குறுதிகளை பேணுதல்

சுற்றாடல் கரிசனைமிக்க வங்கி என்ற பங்கீட்டுப் பாட்டாளர்களது எண்ணக்கருவானது சமூக மற்றும் தொடர்பு முறை சார்ந்த மூலதனங்களை வலுப்படுத்துகின்றது.

பசுமை கட்டிடங்கள் மற்றும் புதிப்பிக்கதக்க சக்தி தொடர்பான முதலீடுகள் நிதி ரீதியான முதலீட்டில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

சக்தியை வினைதிறன் மிக்க முறையில் பயன்படுத்துதல்

வங்கியின் விரிவான கிளையமைப்புகளை கருத்திற்கொண்டு நோக்குகையில் வங்கியின் நேரடி சக்தி கொள்வனவானது முக்கியதுவமிக்கதாக காணப்படுகின்றது.எமது ஆரம்ப சக்தி மூலங்கலாக மின்சாரத்தை கொள்வனவு செய்தல், எரிபொருள், சூரிய மின்பொருள்கள் பொருத்தப்பட்ட எமது கிளைகள் மூலமாக உற்பத்தி செய்யப்படும் புதிப்பிக்கத்தக்க மின் சக்தி ஆகிய முக்கியதுவம் பெருகின்றன. எரிபொருள்களை மையமாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் தங்கியிருப்பதை குறைக்கும் நோக்குடன சக்தி மூலங்கள் மற்றும் எமது ஊழியர்கள் மத்தியில் மின்சாரத்தை சேமித்தல் மற்றம் மின்சாரத்தை சிக்கனமாக பாவித்தல் தொடர்பில் எமது சகல வங்கி ஊழியர்களுக்கும் தொடர்ச்சியாக எடுத்துரைக்கப்டுகின்றது. இவற்றுள் அவசியமில்லாத சந்தர்ப்பங்களில் மின் குமில்களை அணைத்து விடுதல் மற்றும் தமது கணினிகளை அணைத்துவிடுதல் போன்றனவாகும்.

எமது தலைமை அலுவலகத்தில் ஒவ்வொரு மாடிக்கும் பொறுப்பாக சக்தி தொடர்பாக முகாமையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தேவையற்ற விதத்தில் மின்சாரம் வீனடிக்கப்படுவதை குறைப்பது இவர்களுடைய பொறுப்பாகும். மின்சாரம் மற்றும் நீர்பாவனை ஆகியவற்றை எசவ்வாறு சிக்கனமாக பயன்படுத்தி சேமிக்கமுடியும் என்பது தொடர்பில் வங்கி வலையமைப்புகள் முழுவதும் அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. வங்கியில் மரபு ரீதியான மின் விளக்குகள் பயன்படுத்தப்பட்டமைக்கு பதிலாக தற்சமயம் வினைத்திறன் மிக்க முறையில் மின்சாரத்தை பயன்படுத்தக்கூடிய LED மின் விளக்குகள் பயன்படுத்தப்படுகின்றன. அத்தோடு மாநாட்டு அறை மற்றும் கழிப்பறை போன்றவற்றில் சுயமாக பாவணையை கட்டுப்படுத்தக்கூடிய கூறுணர்வு மிக்க கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

சூரிய மின் சக்தி

2015 ஆம் ஆண்டில் இலங்கை வங்கியானது தனது கிளைகளை சூரிய மின் சக்தி பயன்படுத்தும் கிகைளாக மாற்றும் முகமாக ஆர்வமிக்க கருத்திட்மொன்றை ஆரம்பித்தது. அன்று முதல் தனது வளையமைப்பு முழுவதும் படிம எரிபொருள் சக்தியில் தங்கியிருப்பதை குறைக்கும் முகமாக துரித முன்னெற்றங்களை கண்டது. ஆரம்பக்கட்டமாக திஸ்ஸமகாராம மற்றும் கிளிநொச்சி ஆகிய கிளைகள் இவ்வாறு மாற்றப்பட்டன. அதனை தொடர்ந்து 2018 டிசெம்பர் 20 வரையிலான காலப்பகுதியில் 27 கிளைகள் சூரிய மின் சக்தியை பயன்படுத்த கூடியதாக மாற்றப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் இது சூரிய மின் சக்தி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மொத்த முதலீடு இலங்கை ரூபாய் 146.0 மில்லியனாகும். இதன் காரணமாக புதிப்பிக்கத்தக்க மூலங்களை பயன்படுத்தி இலங்கை வங்கியினால் உற்பத்தி செய்யப்பட்ட தேசிய மின் உற்பத்திக்கு 1 MW பங்களிப்பு செய்யப்பட்டது.இத்தகைய மாற்றத்தின் காரணமாக இலங்கை வங்கியின் காபன் பிரயோகம் 756.8 tCO2e ஆல் குறைக்கப்பட்டது.

பசுமைக் கட்டிடங்கள்

இலங்கை பசுமைக் கட்டிட சபையினால் 2018 ஆம் ஆண்டு இலங்கை வங்கியின் திருகோணமலைக் கிளைக்கு பசுமை பிலேடினம் விருது வழங்கப்பட்டது. இந்த கிளையின் விசேட அம்சம் என்னவெனில் இங்கு காணப்படும் செங்குத்தான பசுமை பூந்தோட்டமாகும். இது உள்ளக குளிர்ச்சியை சௌகரியமான வெப்பநிலையில் பேணுவதற்கு உதவுவதுடன் இதன் கட்டமைப்பானது காற்றின் தன்மை மற்றும் பசுமை பூந்தோட்டம் ஆகியவற்றிற்கு உதவுகிறது. மழைநீர் அறுவடை முறை மூலம் இதற்கு அவசியமான நீர் பெறப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டு கெகிராவை கிளைக்கு பசுமை தங்க விருது வழங்கப்பட்டது. சுற்றாடல் ரீதியான நிலைப்பேரான பொருட்களை பயன்படுத்தி இக்கிளை புனரமைக்கப்பட்டது. மேலும் பசுமை கட்டிட வழிகாட்டிகளின் கீழ் இன்னும் 2 கிளைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

பசுமை கட்டிட முறையை மையமாகக் கொண்டு கட்டப்பட்ட பல்வேறு விதமான கிளைகள் மற்றும் அங்கு காணப்படும் சுவர்கள் ஆகியன உள்ளக வெப்பநிலையை குறைப்பதற்கு உதவுகின்றன. இலங்கை வங்கியின் பெலியத்தை கிளை ஆனது தனது மின் விளக்கு சார் தேவையான முழுமையான சூரிய மின்கல குழாய்களை பயன்படுத்தி வருகின்றது. எத்தகைய செயற்கை வெளிச்ச முறைகளையும் இது பயன்படுத்துவதில்லை. வங்கி

மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

இயற்கை மூலதனம்

பசுமை இலங்கை தரப்படுத்தல் முறை

நிர்மானத்துறையின் முக்கிய பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற செயற்பாட்டாளர்கள் மற்றும் நிபுணர்களைக் கொண்ட பல்வேறு விதமான குழுக்களை உள்ளடக்கி பசுமை சுற்றாடல் தரப்படுத்தல் மற்றும் வாழ்க்கை சுற்று மதிப்பீட்டு குழு ஆகியவற்றின் மேற்பார்வையின் கீழ் பகிரங்க மற்றும் கருத்தொருன்மை அடிப்படையிலான செயல்முறை மூலம் விருத்தி செய்யப்பட்டது பசுமைத்தரப்படுத்தல் முறையாகும். நிர்மான சுற்றாடல் தொடர்பான பின்வரும் அம்சங்கள் பற்றி இது தொழிற்படுகிறது.

- முகாமைத்துவம்
- நிலைபேறான தளங்கள்
- சக்தி மற்றும் சூழல்
- பொருட்கள் மற்றும் வளங்கள்
- அறை சுற்றாடல் தன்மை
- புத்தாக்கம் மற்றும் வடிவமைப்பு செயன்முறை
- சமூக மற்றும் காலாசார விழிப்பூட்டல்கள்

தனது எறிபொருள் நுகர்வினை குறைக்கும் முகமாக பல்வேறு விதமான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அதன் அடிப்படையில் தனது வாகனத்தொகுதி பயன்பாட்டினை உச்ச அளவில் சீர் செய்துள்ளதுடன் பொருத்தமான நேரத்தில் புதிய வாகனத்தை கொள்வனவு செய்து அதேவேளை பழைய வாகனங்களை அகற்றி விடுகின்றது. மேலும் ஆவன முகாமைத்துவ முறைகளை பயன்படுத்துதல், வீடியோ மாநாட்டு வசதிகளை பயன்படுத்துதல், மின் அஞ்சல் மூலமாக வழங்கப்பட்ட பயிற்சிகள் ஆகியவற்றின் காரணமாக வங்கி கிளையின் சேர்ந்த ஆளணியினர் தலைமை அலுவலகத்திற்கும், மத்திய பயிற்சி நிருவகம் ஆகியவற்றிற்கு பிரயாணங்களை மேற்கொள்வதற்கான தேவைகள் குறைக்கப்பட்டன. இதன் எறிபொருள பயன்பாட்டை குறைப்பதற்கும் பங்களிப்பு செய்ய முடிந்தது.

ஏனைய சுற்றாடல் சார் முன்னெடுப்புகள்

எழுது தாள்களை சேமித்தல்

வங்கியின் டிஜிட்டல் மயப்படுத்திய உபாய முறையின் காரணமாக வாடிக்கையாளர்கள் டிஜிட்டல் முறைகளையே பயன்படுத்துவதற்கான முயற்சிகளை அதிகமாக மேற்கொண்டு வருவதன் காரணமாக எழுதுதாள் நுகர்வுக்கான தேவைகள் குறைக்கப்பட்டன. மேலும் குறிப்பிட்ட கால வருடப்பகுதியின் பொழுது மேற்கொள்ளப்பட்ட பல்வேறு விதமான உள்ளக செயன்முறைசார் வினைத்திறன்களின் காரணமான எழுதுதாள் பயன்பாடு குறிப்பிடக்கூடியளவு குறைக்கப்பட்டது.



சேமிக்கப்பட்ட A4 தாள்கள்
7 மில்லியன்

கழிவு அகற்றல்

வங்கியின் தொழிற்பாட்டின் காரணமாக உருவாக்கப்படும் பிரதான வகை கழிவாக பேப்பர்களும் மின்னியல் கழிவுகளும் காணப்படுகின்றன. பேபர்களை சேமிக்கும் படி அமைப்பு முழுவதும் உற்சாகப்படுத்தப்படுகின்றனர். மேலும் பயன்படுத்தப்பட்ட பேப்பர்களானது அங்கீகரிக்கப்பட்ட மீள் சுழற்சியாளர்கள் மூலம் சேகரிக்கப்பட்டு அகற்றப்படுகின்றன. அதே போல் மின்னியல் கழிவுகளும் பொறுப்பு வாய்ந்த மூன்றாம் தரப்பு மீள் சுழற்சியாளர்களினால் அதாவது மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மீள்சுழற்சியாளர்களினால் சேகரிக்கப்பட்டு அகற்றப்படுகின்றன. இத்தகைய அங்கீகரிக்கப்பட்ட மீள்சுழற்சியாளர்கள் மூலம் குறிப்பிட்ட ஆண்டின் பொழுது சுமார் 447 அலகு மின்னியல் கழிவுகள் அகற்றப்பட்டன. அதேபோல் 43,118 கிலோ கிராம் கழிவுப் பேப்பர்கள் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்பட்டன.

நிலைப்பேரான கடன் கொடுத்தல் நடைமுறைகள்

வங்கியின் காத்திரமான பரவலான தொழிற்பாடுகளை கருத்திற்கொண்டு எமது மிக முக்கியமான சுற்றாடல் சார் பங்களிப்பான அதன் பயன்கள் எமது கடன்கொடுத்தல் பட்டியல் மூலம் இடம் பெறுகின்றது. இவற்றுள் சுற்றாடல் நேய கருத்திட்டங்களுக்காக நேரடியாக கடன் கொடுத்தல் மற்றும் எமது மதிப்பீட்டின் நெறிமுறையின் ஓர் அங்கமாக சுற்றாடல் சார் பரிசீலினைகளை உள்ளடக்குதல் ஆகியன இவற்றுள் உள்ளடங்குகின்றன. இலங்கை வங்கியானது நிதி அமைச்சுடன் கூட்டாக அமைந்து சூரிய மின் களங்களை பொருத்துவதற்கான கடன் உதவிகளை வழங்குகின்றது. மேலும் சக்தி சார்ந்த கருத்திட்டங்களின் பொழுது உயிரியல் ரீதியாக சிதைவடைய கூடிய பொருட்களை பயன்படுத்தி பொதியிடல் போன்ற நடவடிக்கைகள் மூலம் சுற்றாடல் மேன்மைக்கு பங்களிப்பு செய்வதுடன் காற்று மூலமான மின் உற்பத்திக் கருத்திட்டங்கள் மற்றும் பசுமை கட்டிட நிர்மானப் பணிகள் ஆகியவற்றிற்கும் பங்களிப்புச் செய்து வருகின்றது. குறிப்பிட்ட வருடத்தின் பொழுது பசுமை சார் திட்டங்களுக்கென மொத்தமாக கடன் கொடுக்கப்பட்ட தொகை 6.3 பில்லியன் ஆகும். குறிப்பிட்ட வருடத்தின் பொழுது 2 பாரிய கழிவில் இருந்து மின் உற்பத்தி செய்கின்ற கருத்திட்டங்களுக்கு இலங்கை வங்கியானது நிதியிடல்களை மேற்கொண்டது. எமது வாடிக்கையாளர்கள் மத்தியில் மின்சாரத்தை சேமித்தல், கழிவு முகாமைத்துவம், மீள் சுழற்சி செய்தல் போன்ற சுற்றாடல் நேயமிக்க வியாபார நடைமுறைகளை மேம்படுத்தி நிலைபேரான நடைமுறைகளை பின்பற்றுவதற்கு எமது வாடிக்கையாளர்களை உற்சாகப்படுத்தி வருகின்றோம்.

சுற்றாடல் சோதனை

இலங்கை வங்கியன் சுற்றாடல் சார் மற்றும் சமூக முகாமைத்துவ முறையானது 2018இல் இருந்து நடைமுறைக்கு வந்தது. அன்று முதல் சகல விதமான அபிவிருத்தி சார் கடன் கொடுத்தலுக்கும் இலங்கை வங்கியானது சுற்றாடல் சமூக முகாமைத்துவம் அடிப்படையின் வழிகாட்டிகளில் ஆசிய அபிவிருத்தி வங்கி விசேட கடன் கொடுத்தல் முறை மூலமாக சோதனை செய்து வருகிறது. அதே வேளை ESMS

தொடர்பிலான பரந்தளவிலான பயிற்சிகள் இலங்கை வங்கி கிளை முகாமையாளர்களுக்கும் மற்றும் கடன் அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. வங்கியானது தனது ஒட்டு மொத்த கடன் கொடுத்தலுக்கும் ESMS முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பான செயன்முறையில் ஈடுபட்டு வருகின்றது.

விநியோகத்தர்கள் தொடர்பான சுற்றாடல் நல மதிப்பீடுகள்

விநியோகத்தர்களுக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்படுகின்ற பொழுது அவர்கள் தேசிய சுற்றாடல் சார் சட்டங்கள் மற்றும் தொழில் ஒழுங்கு விதிகள் ஆகியவற்றிற்கு ஏற்ப நடந்து கொள்கின்றார்களா? என்பதை இலங்கை வங்கி மதிப்பிடுகின்றது. தொழில் ஒழுங்கு விதிகளுக்கு இணங்கி நடந்து கொள்கின்றார்களா? என்பது மதிப்பீடு செய்யப்படுவதுடன் பணியாளர்கள் மூலம் விநியோகங்கள் இடம் பெறுகின்ற பொழுது மிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு சேவை ஒப்பந்தங்களுள் உள்ளடக்கப்படுகின்றன.

பசுமை பெறுநிறுவன சமூகப் பொறுப்பு

"கும்புக் அரன" கருத்திட்டம்

சுப்ரகமுவ மாகாணத்தின் தாழ்நிலை பிரதேசங்களில் ஏற்படுகின்ற வெள்ளப்பெருக்கினை தனிக்கும் முகமாக நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட கருத்திட்டமே கும்பக் அரன கருத்திட்டமாகும். இந்த கருத்திட்டதின் கீழ் விஞ்ஞான ரீதியான அடையாளம் காணப்பட்ட இடங்களில் சுமார் 10,000 கும்பக் மரக்கன்றுகளை நடுவதற்கு இலங்கை வங்கி திட்டமிட்டுள்ளது. இந்த கருத்திட்டத்திற்கு பரந்தளவிலான பங்கீட்டுப்பாட்டாளர்கள் பங்குபற்றுதல் உண்டு. இவற்றுள் வன திணைக்களம், கமநல திணைக்களம், விவசாய சமூகங்கள், பாடசாலை மாணவர்கள், நில அளவை திணைக்களம், பிரதேச செயலகம் போன்றன உள்ளடங்குகின்றன. வன திணைக்களமானது சுமார் 4000 கும்பக் மரக்கன்றுகளை வளர்ப்தற்கான செயன்முறைகளில் ஈடுபட்டுள்ளன. இக்கன்றுகள் 2019 ஆம் வருடத்தின் ஆரம்பத்தில் இணங்கானப்பட்ட இடங்களில் நடப்படும்.

இரட்டை மரம் கருத்திட்டம்

எண்ணக்கருவொன்றின் மூலம் பொது மக்கள் மத்தியில் மரக்கன்றுகளை நடுவதற்கான செயன்முறையை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு இக்கருத்திட்டம் அமைந்துள்ளது. இதன் பிரகாரம் பிள்ளையொன்று பிறக்கின்ற பொழுது அதனுடன் தொடர்புபடுத்தி மரக்கன்று நடப்படும். இத்திட்டத்தின் அடிப்படையில் சுகாதார துறையை சேர்ந்த சம்பந்தப்பட்ட பங்கீட்டுப்பாட்டாளர்களுடன் கை கோர்த்து இலங்கை வங்கியானது சுமார் 6240 மரக்கன்றுகளை வடமேல் மாகாணத்திலுள்ள பெற்றோர்களுக்கு வழங்கும். இந்த கருத்திட்டமானது குருணாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களிலிலுள்ள 2 ஆதார வைத்தியசாலைகளை அடிப்படையாகக் கொண்டு அமையும்.

பசுமை வலையமைப்பு

அடையாளம் காணப்பட்ட இடங்களில் மரக்கன்றுகளை நடுவதன் மூலம் பசுமை வலையமைப்பு கருத்திட்டத்தின மூலம் நாட்டின் தென் மாகாணம் முழுவதும் மேற்கொள்ளப்படும் பெறு நிறுவன சமூகப் பொறுப்பு கருத்திட்டமே பசுமை வளையமைப்பு ஆகும். இதுவரை பாடசாலை மாணவர்களின் உதவியுடன் சுமார் 2394 மரக்கன்றுகளை இலங்கை வங்கி நட்டுள்ளது. தற்சமயம் மேலும் மரக்கன்றுகளை நடுவதற்காக வளர்த்தெடுக்கும் நோக்கத்துடன் 4 மரக்கன்றுகளை வளர்க்கும் நிலையங்கள் காணப்படுகினறன.

மூலதன முகாமைத்துவ அறிக்கைகள்

இயற்கை மூலதனம்

சுற்றாடல் தாக்க அறிக்கை

	அலகு	2018	2017	GRI சுட்டிகள்
சக்தி				**302**
ஸ்தாபனத்தின் சக்தி நுகர்வு				302-1
புதிப்பிக்க முடியாத மூலங்கள்				
நுகரப்பட்ட மின்சாரம்	Mwh	21,135	22,325	
நுகரப்பட்ட எரிபொருள்	Litre	732,101	444,180	
புதிப்பிக்க தக்க மூலங்கள்	Mwh	885	493	
மொத்த சக்தி				
நீர்				**303**
மூலங்களில் இருந்து பெறப்பட்ட நீர்		N/A	N/A	303-1
மாநகரசபை நீர் விநியோகங்கள்	m3	501,229	489,560	
மழை நீர் அறுவடை நேரடியாக		N/A	N/A	
நில நீர்r		N/A	N/A	
மொத்த நீர்	m3	501,229	489,560	
வெளியேற்றம்				**305**
நேரடியான CO2 வெளியேற்றம் (GHG Scope 1) (எரிபொருள்)	tCo2e	2,902	N/A	305-1
மறைமுக CO2 வெளியேற்றம் (GHG Scope 2) (மின்சாரம்)	tCo2e	10,354	N/A	305-2
GHG வெளியேற்றம் அதிகரித்த விகிதம்	tCo2e/Total employee	1.5	N/A	305-4
CO2 வெளியேற்றம் குறைக்கப்பட்டுள்ளன (குறைத்தல் முன்னெடுப்புகளின் நேரடி விளைவு)	tCo2e	757	422	305-5
கழிவு வகை மற்றும் அகற்றப்படும் முறை				**306-2**
மீள்சுழற்சி				
கடதாசி	Kg	43,118	-	
மின்னியல் உபகரணம்	Units	447	-	

கவனம் செலுத்தப்பட்ட பிரதேசங்கள்	2018 இல் முன்னேற்றம்
புதிப்பிக்கத்தக்க சக்தி தொடர்பில் வழங்கப்பட்ட கடன் கொடுத்தல்கள் சூரிய மின் சக்தி பயன்பாட்டிற்காக மாற்றப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை	3.6 பில்லியன் ரூபாய் 27 கிளைகள்
குறிப்பிட்ட வருடகாலப்பகுதியில் நீர்பாசனம், நீர்தொடர்பில் வழங்கபட்ட கடன்	4.7 மில்லியன் ரூபாய்
வங்கியின் சக்தி மற்றும் நீர் பயன்பாடு ஆகியவற்றை குறைப்பது தொடர்பிலான தற்போதைய கவனம் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்பட்ட கழிவு பேப்பர்	மின் பயன்பாட்டில் குறைவு 5% 43,118 கிலோ கிராம்
சுற்றாடல் நேய நடைமுறை தொடர்பிலான பிரச்சாரங்களை மேற்கெள்வதற்காக வாடிக்கையாளர்கள் மற்றும் விநியோகத்தர்களுடனான பங்கான்மை	ESMS நெறிமுறையின் கீழ் 508 வாடிக்கையாளர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

நிதியியல் அறிக்கைகள்

இலங்கை வங்கியின் நிதியியல் நடவடிக்கைகள் மீதான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை • **179**

ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் பங்கு • **185**

நிதியியல் அறிக்கையிடலின் உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று • **188**

சுயாதீன உத்தரவாத அறிக்கை • **190**

நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு • **191**

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை • **192**

இலாப நட்டக் கூற்று • **196**

முற்றடக்க வருமானக் கூற்று • **197**

நிதியியல் நிலைமைக் கூற்று • **198**

உரிமையாண்மையில் ஏற்படும் மாற்றங்களைக் காட்டும் கூற்று • **200**

காசுப்பாய்ச்சல்கள் கூற்று • **204**

நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் • **206**

இலங்கை வங்கியின் நிதியியல் நடவடிக்கைகள்மீதான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

1. பொதுவான விடயங்கள்

இலங்கை வங்கியின் பணிப்பாளர்கள் சபையானது 2018 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கி மற்றும் குழுமத்தின் நடவடிக்கைகள் குறித்த அறிக்கை, கணக்காய்வு செய்யப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் அந்நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை என்பவற்றை 1938 ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச்சட்டம் மற்றும் அவற்றின் மீது பின்னர் கொண்டுவரப்பட்ட திருத்தங்களின் தேவைப்பாடுகளுடன் இசைவுறுவதை உறுதிப்படுத்தும் வகையில் அந்நிதிக்கூற்றுகளை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.
அத்துடன் இவ்வறிக்கையானது கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலைய பட்டியலிடல் விதிமுறைகளால் முன்வைக்கப்பட்ட சில வெளிப்படுத்தல்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்காக, கூட்டாண்மைச் செயலாட்சி குறித்து வெளியிடப்பட்ட 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டல் மற்றும் அதன் திருத்தங்களின் பணிப்புரையின் கீழ் மேற்கொள்வதற்கெனத் தேவைப்படுத்தப்பட்ட சில வெளிப்படுத்தல்கள் என்பவற்றையும் உள்ளடக்குகிறது. 2019 மார்ச் 19 ஆம் திகதி பணிப்பாளர்கள் நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்து அங்கீகாரம் அளித்தனர்.

இலங்கை வங்கியானது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச்சட்டத்தினதும், அதன் திருத்தங்களிற்கு அமைவான உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாக இருப்பதோடு, 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் கீழ் 1939 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி முறைப்படி கூட்டிணைக்கப்பட்டுள்ளது. வங்கியானது முற்று முழுதாக இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமானதாகும். வங்கியால் வெளியிடப்பட்ட காப்பளிக்கப்படாத, இரண்டாந்தர, மீட்கத்தக்க தொகுதிக்கடன்கள் கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன.

2. வங்கி நடவடிக்கைகளின் மீளாய்வு

2.1 வங்கியின் பிரதான நடவடிக்கைகள்

பிரத்தியேக வங்கியியல், தொகுதி வங்கியியல், அபிவிருத்தி வங்கியியல், கரைகடந்த வங்கியியல், வியாபார நிதியிடல், குத்தகை நிதியிடல், முதன்நிலை வணிகத் தொடர்பு, முதலீட்டு வங்கியியல் மற்றும் திறைசேரி நடவடிக்கைகள், நிறுவனத் தொடர்புகள் வங்கியியல் மற்றும் பண அனுப்புகைகள், இஸ்லாமிய வங்கியியல், வங்கிக் காப்புறுதி, தங்க நகை அடகுச்சேவை, கடனட்டை வசதிகள், வெளிநாட்டு நாணயச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய நிதிச் சேவைகள் ஆகியன ஆண்டுக் காலப்பகுதிக்கான வங்கியின் பிரதான நடவடிக்கைகள் ஆகும்.

2.2 துணைநிறுவனங்களும் கூட்டு நிறுவனங்களும்

துணைக்கம்பனிகள் மற்றும் கூட்டுக்கம்பனிகள் என்பவற்றின் பிரதான நடவடிக்கைகள் 206 மற்றும் 207ஆம் பக்கங்களில் காணப்படும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களில் தரப்பட்டுள்ளன. கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் குறிப்பிடப்பட்ட மாற்றங்கள் தவிர மீளாய்வின் கீழான ஆண்டின்போது வங்கி மற்றும் குழுமத்தின் பிரதான நடவடிக்கைகளின் தன்மையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களேதுமில்லை.

2.3 குழுமக்கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள்

ஆண்டின்போது குழுமக்கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்கள் 30 மற்றும் 31 இல் இவ்வாண்டறிக்கையின் 287 முதல் 294 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

2.4 தூரநோக்கு, பணிநோக்கு மற்றும் கூட்டாண்மை நடத்தை

வங்கியின் தூரநோக்கு மற்றும் பணிநோக்கு என்பன இவ் ஆண்டறிக்கையின் முன் அட்டையில் உட்பக்கத்தில் தரப்பட்டுள்ளது. வங்கியின் தூரநோக்கு, பணிநோக்கு மற்றும் மதிப்பு அறிக்கைகள் என்பனவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களைப் பின்தொடர்ந்து செல்லும் அதேவேளை வங்கியானது அதன் செயற்பாடுகளில் உயர்ந்த ஒழுக்க நியமங்களை பேணிவருகின்றது.

2.5 ஆண்டுச்செயல் நிறைவேற்றம் பற்றிய மீளாய்வு

10 முதல் 13 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ள வங்கி தலைவரின் செய்தியானது குறித்த ஆண்டிற்கான வங்கி/குழுமத்தின் செயல் நிறைவேற்றத்தையும் இலங்கையின் பொருளாதாரத்தையும் ஆராய்கிறது.
14 முதல் 17 வரையான பக்கங்களிலுள்ள பொது முகாமையாளரின் மீள்பார்வையானது மீளாய்வுக்குரிய குறித்த ஆண்டில் வங்கியின் வியாபார நடவடிக்கைகள் பற்றிய விரிவான விளக்கத்தைத் தருகிறது. 137 முதல் 141 வரையான பக்கங்களில் காணப்படும் “நிதியியல் மூலதனம்” வங்கியின் வியாபார நடவடிக்கைகள் குறித்த விரிவானபகுப்பாய்வைத் தருகின்றது. வங்கியின் நடவடிக்கைகள் குறித்த நியாயபூர்வமான மீள் பார்வையைத்தருகின்ற இவ்வறிக்கைகள் ஆண்டறிக்கையின் பிரிக்க முடியாத ஒரு பாகமாய் அமைகின்றன.

2.6 ஆண்டின் கிளை விரிவாக்கம்

வங்கியானது மேலதிகமாக புதிய உள்நாட்டு வங்கி கிளைகளுடன் புதிதாக ஒரு "BOC DIGI" கிளையினையும் திறந்து இம் மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் தனது சேவையினை விரிவுபடுத்தியது. வலையமைப்பானது, வாடிக்கையாளர்களின் சௌகரியத்தினை உயர்மட்டத்தில் பேண மேலும் விரிவுபடுத்தப்பட்டது. ஆண்டுக் காலப்பகுதியில், வங்கி நாடு தழுவிய ரீதியில் புதிதாக 12 தன்னியக்க ரெலர் இயந்திரங்கள், 09 பணவைப்பிலிடும் இயந்திரங்கள், 104 பண மீள் சுழற்சி இயந்திரங்கள் மற்றும் 150 பாடசாலைச் சேவை அலகுகளை நிறுவியதன் மூலம் மொத்தமாக 776 தன்னியக்க ரெலர் இயந்திரங்கள், 163 பணவைப்பிலிடும் இயந்திரங்கள், 118 பணமீள் சுழற்சி இயந்திரங்கள் மற்றும் 1373 பாடசாலைச் சேவை அலகுகளைக் கொண்டுள்ளது. இந்த தன்னியக்க ரெலர் இயந்திரங்களின் எண்ணிக்கை சக வங்கிகளுடான இலங்கை வங்கி வாடிக்கையாளர்கள் பணப் பரிமாற்றம் செய்யும் இயந்திரங்களின் எண்ணிக்கையினை உள்ளடக்கவில்லை.

2.7 கூட்டாண்மை நன்கொடைகள்

2018 ஆம் ஆண்டின்போது வங்கி நன்கொடை எதையும் வழங்கவில்லை. ஆனால் ரூபா.107.9 மில்லியனை நிறுவன சமூகப் பொறுப்பு நடவடிக்கைகளுக்கு ஆண்டுக் காலப்பகுதியில் வழங்கியது.

2.8 நிதிசார் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள்

வங்கியின் நடவடிக்கைகள் குறித்த உண்மையும் நியாயமுமான ஒரு பார்வையைப் பிரதிபலிக்கும் நிதிக்கூற்றுகளின் தயாரித்தலுக்குப் பணிப்பாளர்களே பொறுப்பாவர். இலங்கை கணக்கீட்டு நியமங்கள், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அதன் மீதான திருத்தங்கள், 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் மீதான திருத்தங்கள் மற்றும் கொழும்பு பங்குப்பரிவர்த்தனை நிலையத்தின் பட்டியலிடல் ஒழுங்கு விதிகள் என்பவற்றின் தேவைப்பாடுகளுக்கமைவாக இந்நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதெனப் பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.
துணைக்கம்பனிகளின் நிதிக்கூற்றுகள் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமே தயாரிக்கப்பட்டுள்ளன. நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு பற்றிய கூற்று இவ்வாண்டறிக்கையில் 191 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. அது இப்பணிப்பாளர்கள் அறிக்கையில் முக்கியமான ஒரு பாகத்தை ஆக்குகின்றது.

இலங்கை வங்கியின் நிதியியல் நடவடிக்கைகள்மீதான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

2.9 கணக்காய்வாளரின் அறிக்கை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களே இலங்கை வங்கியினதும் கணக்காய்வாளராவார்.

2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு, வங்கியின் நிதிக்கூற்றுகள் மற்றும் வங்கியினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் ஒன்று திரட்டிய நிதிக்கூற்றுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதிஅவர்களின் அறிக்கை இவ்வாண்டறிக்கையின் 192 முதல் 195 வரையுள்ள பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

2.10 கணக்கீட்டுக் கொள்கைகள்

வங்கியும் குழுமமும் இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் (SLFRS)என்பனவற்றிற்கு அமைவாக நிதிக்கூற்றுகளைத் தயாரித்தன.

நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தலில் பின்பற்றப்பட்டுள்ள கணக்கீட்டு நியமங்கள் இவ்வாண்டறிக்கையின் 206 தொடக்கம் 392 வரையுள்ள பக்கங்களில் தரப்பட்டுள்ளன. வங்கியானது 2018 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் அறிக்கைகளை SLFRS9 இற்கு அமைவாக தயாரிக்கப்பட்டது. வங்கி நடவடிக்கைகள் காரணமாக தேறிய தாக்கம் ரூபா.7,393.5 மில்லியன் (குழுமம் ரூபா.8,174.0 மில்லியன்) இது தொடர்பான மேலதிக விபரங்கள் இவ் ஆண்டறிக்கையின் 370 தொடக்கம் 375 வரையுள்ள பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

3. திட்டமிட்டுள்ள அபிவிருத்திகள்

வங்கியின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி குறித்த கண்ணோட்டமானது இவ்வாண்டறிக்கையில் 10 தொடக்கம் 13 வரையான பக்கங்களில் காணப்படும் தலைவரின் செய்தியிலும், 14 தொடக்கம் 17 வரையான பக்கங்களில் காணப்படும் பொதுமுகாமையாளர் மீள்பார்வையிலும் தரப்படுகிறது.

4. மொத்த வருமானம்

2018 ஆம் ஆண்டிற்கான குழுமத்தின் மொத்த வருமானம் முந்திய வருட ரூபா 197,013.0 மில்லியனுடன் ஒப்பிடும்போது, ரூபா.229,461.6 மில்லியன் ஆகும். வங்கியின் மொத்த வருமானமானது குழுமத்தின் மொத்த வருமானத்தின் 96.4% (2017 இல் 96.0%) ஆகும். குழுமத்தின் பிரதான வருமானமான வட்டி வருமானம், மொத்த வருமானத்தின் 87.9% ஆகும்.

5. பங்குலாபங்களும் ஒதுக்கங்களும்

5.1 இலாபம் மற்றும் நிதி ஒதுக்கீடு

2017 இல் வங்கியானது வரிக்கு முந்திய இலாபமாக ரூபா.31,892.2 மில்லியனை 2018இல் பதிவுசெய்தது. இது முந்திய வருடத்தில் பதிவு செய்யப்பட்ட ரூபா.30,343.0 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 5.1% வீழ்ச்சியைப் பிரதிபலிக்கின்றது. வருமான வரியாக ரூபா.12,413.4 மில்லியனைக் (2017 இல் ரூபா.9,030.7 மில்லியன்) கழித்த பின், 2018 ஆம் ஆண்டிற்கான வரிக்கு பின்னரான இலாபம் ரூபா.19,478.7 மில்லியனாகக் காணப்பட்டது. இது 2017 இல் பதிவு செய்யப்பட்ட வரிக்குப் பின்னரான இலாபம் ரூபா.21,312.3 மில்லியனுடன் ஒப்பிடும் போது 14.0% ஆல் குறைவடைந்துள்ளது. குறைந்தமைக்கான காரணம் 2018ம் ஆண்டு ஏப்ரல் 1ம் திகதியிலிருந்த இலங்கை அபிவிருத்தி பிணையில் முதலீடு செய்யப்பட்டதியிலிருந்து உழைத்த வட்டி வருமானத்தின் மிது சாதாரண வரி அறவிடப்பட்டமையினால் ஏற்பட்டதாகும்.

வங்கி மற்றும் குழுமத்துடன் தொடர்புடைய இலாப விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன:

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான	வங்கி		குழுமம்	
	2018	2017	2018	2017
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்
வரிக்கு முந்திய அனைத்துச் செலவுகள், பெறுமானத் தேய்வு, காலத் தேய்மானம், கடன்களும் ஏனைய நட்டங்களும் மீதான பெறுமதிக் குறைப்பு மற்றும் நிகழத்தக்கவைகளிற்கான கொடுப்பனவு கழித்த பின்னரான இவ்வாண்டிற்கான இலாபம்	41,480	37,592	42,246	38,195
நிதிச் சேவைகள் மீதான வரி	(9,588)	(7,249)	(9,818)	(7,431)
கூட்டுக் கம்பனிகளின் வரி கழித்த, இலாபம்/(நட்டம்) பங்கு	-	-	9	52
வருமான வரிக்கு முந்திய இலாபம்	31,892	30,343	32,437	30,816
வருமானவரி செலவினங்கள்	(12,413)	(9,031)	(12,922)	(9,329)
ஆண்டிற்கான இலாபம்	19,479	21,312	19,515	21,487
வரி கழித்த, ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்	(1,952)	4,340	(1,669)	4,833
ஆண்டுக்கான வரி கழித்த மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்	**17,527**	**25,652**	**17,846**	**26,320**
பகிர்வுகள்				
நிலையான ஒதுக்க நிதிக்கான மாற்றல்கள்	(2,463)	(2,431)	(2,463)	(2,431)
நியதிச்சட்ட ஒதுக்கத்திற்கான மாற்றல்கள்	-	-	-	(22)
பங்குலாபங்கள்	(4,846)	(12,346)	(4,846)	(12,346)

வரிக்குமுந்திய குழுமத்தின் இலாபம் ரூபா.30,815.6 மில்லியனிலிருந்து ரூபா.32,437.2 மில்லியனாக அதிகரித்துள்ளது. முந்திய ஆண்டோடு ஒப்பிடுகையில் இது 5.3% அதிகரிப்பாகும். வருமான வரிக்காகரூபா 12,922.0 மில்லியனைக் (2017 இல் ரூபா.9,328.9 மில்லியன்) கழித்தபின் குழுமத்திற்கான வரிக்குப் பிந்திய இலாபமானது 2017 இல் அறிக்கையிடப்பட்ட வரிக்குப் பிந்திய இலாபமான ரூபா.21,486.9 மில்லியனிலிருந்து 2018 ஆம் ஆண்டில் ரூபா.19,515.2 மில்லியனாக குறைவடைந்துள்ளது.

5.2 பங்குலாபங்கள்

வங்கி வரி, கடனிழப்பிற்கான ஏற்பாடு மற்றும் அவ்வாறான ஏதும் ஒதுக்கங்கள் என்பவற்றைக் கழித்ததன் பின்னரான இலாபத்தில் வங்கியின் பங்குதாரரான அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து விவேகமாக பங்குலாபத்தினைத் தீர்மானிக்கின்றது. அதன் பிரகாரம் ரூபா.4,846.4 மில்லியன் தொகையானது, 2018 ஆம் ஆண்டிற்கான பங்குலாபங்களாக வங்கியினால் செலுத்தப்பட்டுள்ளது. (2017 இல் ரூபா 12,346.4மில்லியன்).

5.3 ஒதுக்கங்கள்

2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு குழுமத்தின் மொத்த ஒதுக்கங்கள் ரூபா.106,445.1 மில்லியன் ஆகும் (2017 இல் ரூபா.101,399.1 மில்லியன்). குழுமத்தின் ஒதுக்கங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

டிசம்பர் 31 இல் உள்ளவாறான	2018	2017
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்
நிலையான ஒதுக்க நிதி	12,890	10,427
மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	18,747	18,681
சுதந்திர ஒதுக்கம்	367	367
நாணயமாற்றுப் பெயர்ப்பு ஒதுக்கம்	3,157	1,703
விற்பனைக்குக்கிடைக்கத்தக்கவைக்கான ஒதுக்கம்	-	4,761
FVTOCI ஒதுக்கங்கள்	2,474	-
நியதிச்சட்ட ஒதுக்கங்கள்	359	359
நிறுத்தி வைத்த உழைப்புக்கள்	68,452	65,101
மொத்தம்	106,446	101,399

6. ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

குறித்த ஆண்டின்போது ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணம், குத்தகை ஆதனம், அருவச் சொத்துக்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு, குழுமத்திற்கு ரூபா.4,360.3 மில்லியன் (2017: ரூபா.3,963.8 மில்லியன்) பெறுமதியான மொத்த மூலதனச்செலவு ஏற்பட்டது. இதன் விபரங்கள் இவ்வாண்டறிக்கையின் 297 முதல் 315 வரையான பக்கங்களில் உள்ள நிதிக் கூற்றுக்களின் 33 தொடக்கம் 35 வரையான குறிப்புக்களில் தரப்பட்டுள்ளன.

7. இறையிலி ஆதனங்களின் பெறுமதி

2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு குழுமத்திற்குச் சொந்தமான இறையிலி ஆதனங்களின் பெறுமதியானது ரூபா 21,655.1 மில்லியன் (2017: ரூபா.21,470.2 மில்லியன்) ஆக நிதிக் கூற்றுகளுக்கான குறிப்பு 33 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

8. கூறப்பட்ட மூலதனமும் பங்குரிமையும்

8.1 கூறப்பட்ட மூலதனம்

2018 டிசம்பர் 31இல் உள்ளவாறு வங்கியின் மொத்தமாக வழங்கப்பட்ட மற்றும் முற்றாகச் செலுத்தப்பட்ட மூலதனமானது ரூபா.20,000 மில்லியனாகும். (2017: ரூபா.15,000 மில்லியன்).

2018 ஆம் ஆண்டின் தேசிய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையான ரூபா 10,000 மில்லியனின் ஒதுக்கப்பட்டுள்ளது. முதலாவது கட்டமாக 2018 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்திடமிருந்து வங்கி ரூபா 5,000 மில்லியனை பெற்றுக்கொண்டது. 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு இவ் ஒதுக்கீடானது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மூலதன ஒதுக்கீட்டின் கீழ் அறிக்கையிடப்படுகின்றது. வங்கியானது ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியுடைய ஐந்து மில்லியன் சாதாரண பங்குகளை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கொள்கின்றது. இதன் மூலம் வங்கிநிறுத்தி வைக்கப்பட்டுள்ள மூலதன ஒதுக்கீட்டை பங்கு மூலதனத்திற்கு 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாற்றும்.

8.2 பங்குரிமை

இலங்கை அரசாங்கமே வங்கியின் ஏக பங்குதாரர் ஆகும்.

9. இரண்டாந்தர தொகுதிக்கடன்களின் வழங்கீடு

நம்பமுடியாத எழுத்திலான அம்சங்களுடன் பட்டியற்படுத்தப்படாத. காப்பளிக்கப்படாத, இரண்டாந்தர, மீட்கத்தக்க ரூபா.12,000 மில்லியன் பெறுமதியான தொகுதிக்கடன்களை குழுமம் 2018 டிசம்பர் 31 இல் வழங்கியுள்ளது (2017 இல் ரூபா.10,000 மில்லியன்பெறுமதியான இரண்டாந்தர, பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்கள்). இத் தொகுதிக் கடன்களின் வருமானமானது சாதாரண வியாபார நடவடிக்கையின் வங்கியின் கடன் புத்தகத்தை விரிவாக்க பயன்படுத்தப்பட்டது. இதுஒதுக்கீட்டின்போது வங்கியானது பின்வருவனவற்றை அடைவதற்கு உதவும்:

- வங்கியின் அடுக்கு II மூலதனத்தை அதிகரித்து மூலதனப்போதுமை விகிதம் மற்றும் தனிப்பட்ட கடன் வாங்கியவர்க்கான எல்லை ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் கடன் புத்தகத்தை விரிவுபடுத்தலிற்கு வசதியளித்தல்.
- வங்கியின் நிதிச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் பட்டியலின் இடைவெளி வெளிப்பாட்டை குறைத்தல் மற்றும் முகாமை செய்தல்.
- வங்கியின் திரவத்தன்மை நிலையை வலுப்படுத்தல் மற்றும் சொத்து மட்டத்தினை அதிகரித்தல்.

நிதியியல் நிலைமைக்கூற்றுத் தினத்தன்று மீதியாகவுள்ள தொகுதிக்கடன்கள் பற்றிய விபரங்கள் 335 முதல் 337 வரையான பக்கங்களில் நிதிக்கூற்றுக்களுக்கான 48வது குறிப்பில் தரப்பட்டுள்ளன.

10. பங்குத் தகவல்

குழுமத்தின் ஆய்வுக்குட்பட்ட ஆண்டுக் காலத்திற்கான பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பு மற்றும் பங்கொன்றிற்கான தேறிய சொத்துக்கள் என்பன முறையே ரூபா.1,047.68 மற்றும் ரூபா.8,093.3

11. கூட்டாண்மை நீடுறுதித் தன்மை மற்றும் பொறுப்பு

கூட்டாண்மை நீடுறுதித் தன்மை மற்றும் பொறுப்பு (CSR) என்பதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் 58 ஆம் பக்கம் முதல் 62 ஆம் பக்கம் வரை உள்ள 'இலங்கை வங்கியின் நிலைத்திருக்கும் தன்மை' என்ற தலைப்பின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை வங்கியின் நிதியியல் நடவடிக்கைகள்மீதான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

12. பணிப்பாளர்கள்

2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபையானது 04 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. வங்கியின் பணிப்பாளர்கள் வங்கியில் எந்தவொரு நிறைவேற்று பதவிகளையும் வகிக்கவில்லை. (அரசாங்கம் பிரதான பங்காளாராக இருப்பதனால் பணியாளர்கள் அமைச்சினுடாக நியமிக்கபடுகிறார்கள்) எப்படியாயினும் பணிப்பாளர் சபையானது 2019 பெப்பிரவரி காலப்பகுதியில் நியமிக்கப்பட்டது.
2018 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை பின்வரும் பணிப்பாளர்களை கொண்டிருந்தது.

12.1 பணிப்பாளர்கள் பட்டியல்

திரு. ரொனால்ட் சீ பெரேரா, ஜனாதிபதி சட்ட ஆலோசகர்
சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்/ தலைவர்
(18 நவம்பர் 2018 இல் பதவி விலகி பின் மீள் நியமிக்கப்பட்டார் 12 பெப்ரவரி 2019ல் அமுலுக்கு வரும் வகையில் 2019 பெப்ரவரி 14இல் அமுலுக்கு வரும் வகையில் மிண்டும் கடமைகளை பொறுப்பேற்று கொண்டார்.

திரு. சஜித் ஆர். ஆட்டிகல
நிறைவேற்றதிகாரமற்ற பதவிவழி பணிப்பாளர்
(2018 நவம்பர் 25இல் அமுலுக்கு வரும்வகையில் பதவி நிறுத்தப்பட்டார்.)

திரு. ரணெல் ரீ விஜேசிங்க
சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்
(2018 யூலை 31இல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்.)

திரு. எச் பி அஜித் குணவர்தன
சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்
(2018ல் யூலை 20இல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்.)

திரு.சமந்த ராஜபக்ஷ
சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்
(2018 நவம்பர் 25இல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்)

திரு.மொஹான் விஜேசிங்ஹ
சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்
(2018 யூலை 02இல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்)

திரு. நெய்ல் உமகிலிய
சுயாதீனமாக நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்/தலைவர்
(2018 நவம்பர் 19இல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டு 2018 டிசெம்பர் 20இல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்.)

திரு. எம்.ரி.ஐ.வி அமரசேகர
நிறைவேற்றதிகாரமற்ற பதவிவழி பணிப்பாளர்
(2018 நவம்பர் 26இல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டு 2019 பெப்ரவரி 27ல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்.)

திரு. லலித் பி. விதான
சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்
(2018 நவம்பர் 26இல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டு 2018 டிசம்பர் 20இல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்.

திருமதி. ஏ.வி.கே.எம் ஹேரத்
சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்
(2018 நவம்பர் 26இல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டு 2018 டிசம்பர் 20இல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்.)

திரு. எச்.ஐ. பாலாபட்டபென்டி
சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்
(2018 நவம்பர் 26இல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டு, 2018 டிசம்பர் 20இல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்)

திரு. ஜி.எச் விஜேயவர்தன
சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்
(2018 நவம்பர் 26இல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டு 2018 டிசம்பர் 20இல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்.

நிதியியல் கூற்றுத் திகதியில் (2018 டிசம்பர் 31 இல்) உள்ளவாறான வங்கியின் தற்போதைய பணிப்பாளர்களின் விபரம் பின்வருமாறு:

பணிப்பாளர்களின் பெயர்	நிறைவேற்று/நிறைவேற்றுனரல்லாத நிலை	சுயாதீன நிலை
திரு. ரொனால்ட் சீ பெரேரா	நிறைவேற்றதிகாரமற்ற	சுயாதீனமான
திரு. க. விமலேந்திரராஜா	நிறைவேற்றதிகாரமற்ற பதவிவழி பணிப்பாளர்	சுயாதீனமற்ற
திரு. டி.டபிள்யு.கே மாயாதுன்ன	நிறைவேற்றதிகாரமற்ற	சுயாதீனமான
திரு. பிரகாஷ் ஆனந் ஷவ்ரர்	நிறைவேற்றதிகாரமற்ற	சுயாதீனமான

மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட 2007 இன் 11 ஆம் இலக்க வங்கித்தொழிற் சட்டப் பணிப்புரை, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிற்கான கூட்டாண்மை செயலாட்சி மீதான அடிப்படையின் பிரகாரமே பணிப்பாளர்கள் சுயாதீனமான பணிப்பாளர்களென வகைப்படுத்தப்படுகின்றனர்.

12.2 சபையின் உபகுழுக்கள்

வங்கியின் நடவடிக்கைகள் குறித்து எழக்கூடிய மேற்பார்வைப் பிழைகளைக் கட்டுப்படுத்தப்படுவதை உறுதி செய்யும்பொருட்டு, மேற்கூறிய 2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித் தொழிற்சட்டத்தின் வழிகாட்டற் குறிப்பிற்கமைவாக சபையானது "தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் குழு" என பெயரிடப்பட்ட குழுவினை வங்கியின் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காக நியமித்தார்கள். இவ் உபகுழுவின் உள்ளடக்கம் இவ்வாண்டறிக்கையின் 89 தொடக்கம் 101 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

12.3 பணிப்பாளர்களின் கூட்டங்கள்

பணிப்பாளர்களின், சபை மற்றும் உப குழுக்களின் கூட்டங்களிற்கான வருகை பற்றிய விபரங்கள் இவ்வாண்டறிக்கையின் 89 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

12.4 ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் அக்கறைகள்

வங்கியுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் நேரடியான மற்றும் மறைமுகமான அக்கறைகள் 185 முதல் 187 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன. இந்த அக்கறைகள் குறித்து பணிப்பாளர்கள் சபையின் கூட்டங்களில் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன. அங்கு வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் தவிர வங்கியுடனான வேறு ஒப்பந்தங்களில் அல்லது உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் வேறு எந்த அக்கறையையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ கொண்டிருக்கவில்லை

12.5 வங்கியால்/குழுமத்தால் வழங்கப்பட்ட தொகுதிக் கடன்களில் பணிப்பாளர்களின் அக்கறைகள்

எந்தவொரு பணிப்பாளரது பெயரிலும் எந்தவொரு தொகுதிக்கடனும் பதியப்படவில்லை.

12.6 பணிப்பாளர்களின் உபகாரங்கள்/ கட்டணங்கள்

பணிப்பாளர்கள் சபைக்குச் செலுத்த வேண்டிய உபகாரங்கள் மற்றும் கட்டணங்கள் என்பன நிதியமைச்சின் பொது நிறுவனங்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2015 செப்டெம்பர் 17ஆந் திகதியிடப்பட்ட பொது நிறுவன சுற்றறிக்கை இல.PED 3/2015, கடிதம் மற்றும் 1938 இன் 53ஆம் இலக்க இலங்கை வங்கிக்கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் என்பவற்றின் ஏற்பாடுகள்/ உள்ளடக்கங்கள் என்பவற்றின் பிரகாரமே வழங்கப்படுகின்றன. 2018 டிசம்பர் 31 இல் முடிவுற்ற நிதியாண்டிற்கான, குழுமம் மற்றும் வங்கி தொடர்பான பணிப்பாளர்களின் ஊதியங்கள் 236 ஆம் பக்கத்தின் குறிப்பு 16 இல் தரப்பட்டுள்ளன.

13. இடர் முகாமைத்துவமும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையும்

13.1 இடர் முகாமைத்துவம்

இடர்களை முகாமை செய்வதற்கான ஒட்டு மொத்தப் பொறுப்பையும் பணிப்பாளர்கள் சபை ஏற்கிறது. இடரைத் தணிக்கும் பொருட்டு வங்கியால் எடுக்கப்பட்ட திட்டவட்டமான நடவடிக்கைகள் இவ்வாண்டறிக்கையின் 102 முதல் 118 வரையான பக்கங்களில் விபரிக்கப்பட்டுள்ன.

13.2 உள்ளகக் கட்டுப்பாடு

கணக்காய்வுக் குழுவின் மூலம் வங்கியில் ஒரு வினைத்தினான மற்றும் முழுமையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் அமுலாக்கத்தைப் பணிப்பாளர்கள் சபை உறுதிப்படுத்தியுள்ளது.பணிப்பாளர் சபையினர் தமது சட்டபூர்வப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குக் கணக்காய்வுக் குழு உதவுகிறது. கணக்காய்வுக் குழுத் தலைவரின் அறிக்கையானது இவ்வாண்டறிக்கையின் 89 தொடக்கம் 92 வரையான பக்கங்களில் காணப்படுகிறது. குறித்த ஆண்டின்போதும் ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுகள் என்பன தயார் செய்யப்படும் வரைக்குமான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறன் குறித்துப் பணிப்பாளர்கள் திருப்தி கொள்கின்றனனர். உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கூட்டாண்மைச் செயலாட்சி பற்றிய 2007 இன் 11 ஆம் இலக்க வங்கித் தொழிற்சட்டப் பணிப்புரையின் 3 (8) (ii) (b) இலக்கப் பணிப்புரையின் பிரகாரம் வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறை குறித்துப் பணிப்பாளர்கள் சபை கூற்று ஒன்றை விடுத்துள்ளது. மேற்படி அறிக்கையானது இவ்வாண்டறிக்கையின் 188 மற்றும் 189 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளது. நிதிசார் அறிக்கையிடல் முறைமையானது நிதிசார் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை குறித்த நியாயபூர்வமான உத்தரவாதத்தை வழங்குவதற்கென வடிவமைக்கப்பட்டுள்ளதென்பதையும் வெளியக நோக்கங்களுக்கான நிதிக்கூற்றுகளின் தயாரிப்பானது உரிய கணக்கீட்டுக்கோட்பாடுகள் மற்றும் சீராக்கற் தேவைப்பாடுகள் என்பவற்றுக்கமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் சபை உறுதி செய்துள்ளது. உள்ளகக் கட்டுப்பாடுகள் குறித்த பணிப்பாளர்களின் கூற்று மீதான ஓர் உத்தரவாத அறிக்கையைச் சபையானது கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து பெற்றுள்ளது. அது இவ்வாண்டறிக்கையின் 190 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது

14. கூட்டாண்மை செயலாட்சி

பயனுறுதியான ஒரு கூட்டாண்மைச் செயலாட்சி கட்டமைப்பையும் செயன் முறையையும் பேணுவது குறித்துப் பணிப்பாளர்கள் சபையானது அர்ப்பணிப்போடுள்ளது. வங்கியின் நிதிசார், தொழிற்பாடுசார் மற்றும் இணக்கப்பாடுசார் செயல்கள் என்பன கூட்டாண்மைச் செயலாட்சி நடைமுறைகளினுள் திறம்பட நெறிப்படுத்தப்பட்டுக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட கூட்டாண்மைச் செயலாட்சிப் பணிப்புரைகள் மற்றும் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவனம் என்பவற்றால் கூட்டாக வெளியிடப்பட்ட கூட்டாண்மைச்செயலாட்சி பற்றிய சிறந்த நடைமுறைகள் என்பவற்றுடன் ஒத்திசைகின்ற இந் நடைமுறைகள் இவ்வாண்டறிக்கையின் 77 முதல் 88 வரையான பக்கங்களில் காணப்படுகின்றன. மேலே கூறப்பட்ட 2007 இன் 11 ஆம் இலக்கப் பணிப்புரையின் ஏற்பாடுகளுடன் கொண்டுள்ள இணக்கப்பாடு குறித்து கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து சபை அறிக்கையொன்றைப் பெற்றுள்ளது.

15. மனித வளங்கள்

வங்கியின் மிகவும் பெறுமதி வாய்ந்த சொத்துகளுள் ஒன்றாக இருப்பது அதன் ஊழியர்கள். அவர்களை அபிவிருத்தி செய்வது வங்கிக்கு மிகவும் முக்கியமானதாகும். கூட்டாண்மையின் நோக்கங்களை அடையப்பெறுவதில் அவர்களின் உயர்ந்தபட்ச பங்களிப்பைப் பெறும் பொருட்டு, மிகவும் பெறுமதி வாய்ந்தது எனக் கருதப்படும் மனித வளத்தைப் பலப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வங்கியின் மனிதவள முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் இவ்வறிக்கையின் 147 முதல் 155 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ள "மனித மூலதனம்" என்ற தலைப்பின் கீழ் விளக்கப்பட்டுள்ளன.

16. சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதி என்பவற்றுடன் இணக்கப்பாடு

சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பவற்றை மீறுகின்ற எந்த நடவடிக்கைகளிலும், தமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் குழுமம் ஈடுபட்டிருக்கவில்லை என்பதைப் பணிப்பாளர்கள் உறுதி செய்கின்றனர்.

சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பவற்றுடனான வங்கியின் இணக்கப்பாடு குறித்த விபரங்கள் இவ்வறிக்கையின் பிரிக்க முடியாதவொரு பாகமாக விளங்கும் "இணக்கப்பாட்டு இணைப்புக்கள்" எனத் தலைப்பிடப்பட்ட பிரிவின் கீழ் 304 தொடக்கம் 447 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன. மேலும்,வங்கியானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பரிமாற்ற விலைக்கட்டுப்பாடுகளுடன் உடன்படுகின்றது. அத்துடன் பணிப்பாளர்கள் வங்கியானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கஉள்நாட்டு இறைவரிச் சட்டத்தின், பகுதி 104 இன் கீழ் வெளியிடப்பட்ட பரிமாற்ற விலைக் கட்டுப்பாடுகளுடன் உடன்படுவதை உறுதிப்படுத்துகின்றனர். மாற்றல் விலையிடல்தொடர்பான பணிப்பாளர்களின் சான்றிதழ் பக்கம் 448 இல் தரப்பட்டுள்ளது.

17. நிலுவையாக உள்ள சட்ட நடவடிக்கைகள்

வங்கிக்கெதிராகத் தற்போது நடைபெற்று வரும் வழக்கானது அறிக்கையிடப்பட்ட நிதிசார் பெறுபேறுகள் மீதோ அல்லது வங்கியின் எதிர்கால நடவடிக்கைகள் மீதோ பொருண்மைத் தாக்கமொன்றைக் கொண்டிராது என்று வங்கியின் சட்டத்தரணிகளின் உறுதிப்பாட்டிற்கமைய பணிப்பாளர்கள் அபிப்பிராயம் கொள்கின்றனர்.

இலங்கை வங்கியின் நிதியியல் நடவடிக்கைகள்மீதான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

18. நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

அரசாங்கத்திற்குரியதும் மற்றும் பணியாட்கள் தொடர்புடையதுமான அனைத்து நியதிச்சட்டக் கொடுப்பனவுகளும் உரிய நேரத்திற் செலுத்தப்பட்டுள்ளதென சபை உறுதி செய்கிறது.

19. சூழல் பாதுகாப்பு

சூழலுக்கு கேடு விளைவிக்கக்கூடிய எதுவித நடவடிக்கையிலும் வங்கி ஈடுபட்டிருக்கவில்லை. மேலும் சூழலைப் பாதுகாக்கவென எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 171 தொடக்கம் 176 வரையான பக்கங்களில் உள்ள "இயற்கை மூலதனம்" என்று தலைப்பிடப்பட்ட பகுதியில் தரப்பட்டுள்ளன.

20. ஐந்தொகைக்குப் பிந்திய நிகழ்வுகள்

நிதியாண்டின் முடிவிற்கும் இந்த அறிக்கையின் திகதிக்குமிடைப்பட்ட காலப்பகுதியில் சீராக்கல்களை அல்லது வெளிப்படுத்தல்களைத் தேவைப்படுத்தும் எந்தவொரு பொருண்மை நிகழ்வுகளும் எழவில்லையென்ற கருத்தைப் பணிப்பாளர்கள் கொண்டுள்ளனர்.

21. தொடர்ந்து செல்லல் எண்ணக்கரு

வங்கியின் வளங்கள் வங்கிச் செயற்பாடுகளைத் தொடர்வதற்குப் போதுமானவை என்ற நம்பிக்கையைப் பணிப்பாளர்கள் கொண்டுள்ளனர்.

ஆகவே, தனது நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் வங்கியானது தொடர்ந்து செல்லல் எண்ணக்கரு அடிப்படையைப் பிரயோகித்துள்ளது.

சபையின் கட்டளையின் பிரகாரம்

ஜானகி சேனநாயக்க சிறிவர்த்தன
செயலாளர்,
இலங்கை வங்கி/சபையின் செயலாளர்

19 மார்ச் 2019
கொழும்பு

ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் பங்கு

"தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்துகை" மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 24 இன் தேவைப்படுத்துகைக்கு அமைய தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்துகைகள் நிதியியல் கூற்றுக்களுக்கானகுறிப்பு இல. 59 இல் பக்கங்கள் 351 தொடக்கம் 357 வரைவிபரமாகத் தரப்பட்டுள்ளது.

மேலும், வங்கியின் தலைவர் அல்லது பணிப்பாளர்கள், தலைவராகவோ அல்லது ஒரு பணிப்பாளராகவோ காணப்படுகின்ற அத்தகைய நிறுவனங்களுடனான வங்கியின் நியாயமான வியாபார நடவடிக்கைகள் கீழே விபரமாகத் தரப்படுகின்றது:

2018 டிசம்பர் 31இல் அதாவது ஆண்டிறுதியில் பணிப்பாளர் சபையிருக்கவில்லை. எனினும் 2019 டிசம்பர் மாதத்தில் பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டதுடன் சிறந்த வெளிப்படுத்ததல் காரணமாக, பணிப்பாளர்களின் ஒப்பந்தங்களின் அக்கறையினால் பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகின்றது.

2018ம் ஆண்டுக்காலப்பகுதியில் பணிப்பாளர்களி யார் அலுவலகத்தில் இருந்தார்களோ, அவர்களுடைய ஒப்பந்தகங்களின் மீதான அக்கறை 2018 ஆண்டிறுதியில் அல்லது LKAS பதவி விலகிய திகதியிலிருந்தவாறு காட்டப்படுகின்றது.

கம்பனியின் பெயர்	உறவுமுறை	கொடுக்கல் வாங்கலின்மை	எல்லை '000	தீர்க்காதிருக்கும் மீதி/தொகை '000**	31.12.2017 இல் உள்ளவாறு தீர்க்காதிருக்கும் மீதி/தொகை '000
தற்போதுள்ள பணிப்பாளர் சபையின் பணிப்பாளர்களின் ஒப்பந்தங்களின் மீதான பங்கு திரு. ரொனால் சி. பெரேரா (ஜனாதிபதி சட்டத்தரணி) (திரு. ரொனாட் சி. பெரேரா 2018ம் ஆண்டில் பதவி விலகி மீண்டும் இலங்கை வங்கியின் தலைவராக 2019 பெப்ரவரி 12இல் அமுலுக்கு வரும் வகையில் தலைவராக நியமிக்கப்பட்டார்.) ** (2018 டிசம்பர் 31இல் வெளிப்படுத்தப்படுகின்றது)					
இலங்கை வங்கி (யூகே) லிமிட்டெட்	தலைவர்	நடைமுறைக் கணக்குகள்		USD 602	USD 4,881
		(நொஸ்ரோ கணக்குகள்)		*110,015	*746,084
				GBP 66	GBP 232
				*15,303	*47,684
				EURO 687	EURO 1,017
				*143,578	*185,588
		வைத்திருப்புக்கள்		USD 8,000	USD 8,000
				*1,461,999	*1,222,838
				GBP 127,900	GBP 55,300
				*29,665,393	*11,366,152
				EURO 1,000	EURO 1,000
				*208,993	*182,486
ஹொட்டல்ஸ் கொழும்பு (1963) லிமிட்டெட்	பதில் பணிப்பாளர்	சேமிப்பு கணக்குகள்		-	6,046
		நடைமுறைக் கணக்குகள்		5,338	12,563
		கால வைப்புக்கள்		166,896	152,278
		கடன்கள்		-	5,243
		ஏனைய வருமதிகள்		81,126	47,050
திரு. பிரகாஷ் ஆனந் ஷாவ்ரர் (திரு. பிரகாஷ் ஆனந் ஷாவ்ரர் 2019 பெப்ரவரி 26ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் பணியாளராக நியமிக்கப்பட்டார். **(2019 மார்ச் 19இன் படி வெளிப்படுத்தப்படுகின்றது)					
ஜனசக்தி இன்சூரன்ஸ் பிஎல்சி	தலைவர்	நடைமுறைக் கணக்குகள்		12	
ஜனசக்தி பிஎல்சி	பணிப்பாளர்	நடைமுறைக் கணக்குகள		4,544	
		கடன்கள்		107,604	

ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் பங்கு

கம்பனியின் பெயர்	உறவுமுறை	கொடுக்கல் வாங்கலின்மை	எல்லை '000	தீர்க்காதிருக்கும் மீதி/தொகை '000**	31.12.2017 இல் உள்ளவாறு தீர்க்காதிருக்கும் மீதி/தொகை '000
ஒறியன்ற் பைனான்ஸ் பிஎல்சி	பணிப்பாளர்	மேலதிகப் பற்றுகள்	50,000	10,941	
		கடன்கள்		794,222	
பான் நிப்போன் டிவலப்மன்ற் (பிறைவேற்) லிமிட்டெட்	பணிப்பாளர்	நடைமுறைக் கணக்குகள்		47	
ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் பங்கு - முன்னைய பணிப்பாளர் சபை					
திரு. ரணெல் ரி. விஜேசிங்					
(திரு. ரணெல் ரி. விஜேசிங்க 2018 யூலை 31ம் திகதி பதவியை ராஜனாமா செய்தார்)					
**(2018 டிசம்பர் 31ன் படி வெளிப்படுத்தப்படுகின்றது)					
கோலதெனிய ஹைட்ரொபவர் (பிறைவேற்) லிமிட்டெட	பணிப்பாளர்	நடைமுறைக் கணக்குகள்		1,271	2,551
		கால வைப்புக்கள்		221,715	237,165
		ரிப்போ		5,020	6,103
திரு. எச்.பீ அஜித் குணவர்தன					
(திரு. எச.பீ அஜித் குணவர்தன 2018 யூலை 20ம் திகதி பதவியை ராஜனாமா செய்துள்ளார்)					
**(2018 டிசம்பர் 31இல் வெளிப்படுத்தப்படுகின்றது)					
லங்கா செக்கியூரிட்டீஸ் (பிரைவேற்) லிமிட்டெட்	பணிப்பாளர்	நடைமுறைக் கணக்குகள்		9,902	10,835
		கால வைப்புக்கள்		233,334	231,400
		மேலதிகப் பற்றுகள்	50,000	-	-
		ரிப்போ		26,005	77,037
திரு. சமந்த ராஜபக்ஷ					
(திரு. சமந்த ராஜபக்ஷ 2018 நவம்பர் 25ஆம் திகதி பதவியை ராஜினாமா செய்தார்)					
அசொசியேட்டட் மோட்டர் வேய்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் (ஓய்வுபெறும் திகதியில் திரு.சமந்த ராஜபக்ஷ அவர்கள் அசோசியேட்டட் மோட்டர் வேல்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்டின் பணிப்பாளராக இருக்கவில்லை	பணிப்பாளர்	சேமிப்பு கணக்குகள்			71,849
		சேமிப்பு கணக்குகள்			USD 3,306
					*505,274
		நடைமுறைக் கணக்குகள்			119,592
		கால வைப்புக்கள்			USD 156
					*23,904
		கப்பல் உத்தரவாதம்	250,000		20,709
		நாணயக் கடிதம்	1,000,000		822,239
		அடைமானக் கடன்	200,000		-
		ஏற்றுக்காற்றல்			9,960
		கடன் உத்தரவாதம்	100,000		36,267
		ஏற்றுமதி சேகரிப்புகள்			15,124
		இறக்குமதி ஆவணங்கள்			234
அசோசியேட்டட் ஒட்டோவேய்ஸ் (பிறைவேட்) லிமிடெட்	பணிப்பாளர்	நடைமுறைக் கணக்குகள்			1,946
(ஓய்வுபெறும் திகதியில், திரு. சமந்த ராஜபக்ஷ அவர்கள் அசேரிட்டெட் ஒப்டோவெவ்ஸ் (பிறைவேற்)		உத்தரவாதக் கடிதம்	1,000		-
லிமிட்டெட்டின் பணிப்பாளராக இருக்கவில்லை)		கப்பல் உத்தரவாதம்	6,000		-
		நாணயக்கடிதம்	6,000		-
		அடைமானக் கடன்	8,000		-

கம்பனியின் பெயர்	உறவுமுறை	கொடுக்கல் வாங்கலின்மை	எல்லை '000	தீர்க்காதிருக்கும் மீதி/தொகை '000**	31.12.2017 இல் உள்ளவாறு தீர்க்காதிருக்கும் மீதி/தொகை '000
அசோச்சியேட்டட் மோட்டர் (லங்கா) கம்பனி லிமிடெட்	பணிப்பாளர்	நடைமுறைக் கணக்குகள்			249
(ஓய்வுபெறும் திகதியில் திரு. சமந்த ராஜபக்ஷ அவர்கள் அசோசியேட்டட் மோட்டர் (லங்கா) கம்பனி லிமிட்டெட்டின் பணிப்பாளராக இருக்கவில்லை.		நாணயக்கடிதம்	90,000		-
		கப்பல் உத்தரவாதம்	120,000		-
		அடைமானக் கடன்	19,975		-
		உத்தரவாதக் கடிதம்	5,000		-
ஏஎம்டப்லியு கப்பிட்டல் லீசிங் அன்ட் பைனான்ஸ் லிமிட்டெட் (ஓய்வுபெறும் திகதியில் திரு. சமந்த ஜெயபக்ஷ அவர்கள	பணிப்பாளர்	சேமிப்புக் கணக்குகள்			4,700
அசோசியேட்டட் மோட்டார் (லங்கா) கம்பனி லிமிட்டெட் என		நடைமுறைக் கணக்குகள்			15,523
பணிப்பாளராக இருக்கவில்லை)					
**(2018 நவம்பர் 30ஆம் திகதியின்படி வெளிப்படுத்தப்படுகிறது) நாஷனல் அப்பிரன்டிஸ் அன்ட் இன்டஸ்ளியல் ரெயினிங் ஒதோரிட்டி)	பணிப்பாளர்	நடைமுறைக் கணக்குகள்		9	

திரு. மொஹான் விஜேசிங்க

(திரு. மொஹான் விஜேசிங்க 2018 யூலை 2இல் பதிவியினை இராஜனாமா செய்தார்)

லங்கா ஹொஸ்பிட்டல் பிஎல்சி	பணிப்பாளர்	சேமிப்புக் கணக்குகள்			USD 235
(ஓய்வுபெறும் திகதியில் திரு. மொஹன் விஜேசிங்க லங்கா					*35,944
ஹொஸ்பிட்டல் பிஎல்சி யின் பணிப்பாளராக இருக்கவில்லை)		நடைமுறைக் கணக்குகள்			53,555
		கால வைப்புக்கள்			USD 6,301
					*963,159
**(2018 யூலை 31இன் படி வெளிப்படுத்தப்படுகின்றது) மக நகும கொன்சல்ரன்சி அன்ட் புரோஜக்ட் மனேஜ்மன்ற் சேவிசேஸ் கம்பனி (பிறைவேற்) லிமிட்டெட்	பணிப்பாளர்	நடைமுறைக் கணக்குகள்		2,172	2,864

திரு. ஜி.எச் விஜேயவர்தனா

(திரு. ஜி.எச் விஜேயவர்தனா 2018 டிசம்பர் 20இல் பதிவியினை இராஜனாமா செய்தார்)

**(2018 டிசம்பர் 31இன்படி வெளிப்படுத்தப்படுகின்றது)

LK டொமைன் றெஜிஸ்ரி	பணிப்பாளர்	நடைமுறைக் கணக்குகள்		122	
		கால வைப்புக்கள்		70,000	

* LKR ற்கு சமமான பெறுமதி

குறிப்பு:- நாணயங்கள் விசேடமாக குறித்துரைக்கப்படாதவிடத்து இலங்கை ரூபாவில் உள்ளன.

நிதியியல் அறிக்கையிடலின் உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று

பொறுப்பு

பணிப்பாளர் சபை 2007 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழிற் சட்டவழிகாட்டலின் பிரிவு3 (8) (ii) (b) இற்கிணங்க நிதியியல் அறிக்கையிடலுக்கான உள்ளகக் கட்டுப்பாடு மீதான அறிக்கையை வழங்குகின்றது.

பணிப்பாளர் சபையானது (சபை) இலங்கை வங்கியில் (வங்கி) உள்ளஉள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறி முறையின் போதுமான தன்மைக்கும் அதன் வினைத்திறனுக்கும் பொறுப்பாக உள்ளது. இப் போதுமானதன்மையையும் வினைத்திறனையும் கவனத்திலெடுக்கும்போது முகாமை செய்யக் கூடிய அடிப்படையில் இடருடன் ஈடுசெய்யக் கூடியளவுக்கு வெகுமதிகளை வங்கியியல் வியாபாரம் தேவைப்படுத்துகின்றது என்பதை சபை அங்கீகரிக்கின்றது. அத்துடன், இவ் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது முதன்மையாக வங்கியின் இடர் விருப்புக்களை உள்ளடக்கிய குறிகாட்டிகள் எல்லைகளிலிருந்து ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமிடத்து அவற்றை வெளிச்சமிட்டுக் காட்டுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ்வெளிச்சத்தில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையான துநிதித் தகவல்கள் மற்றும் தரவுகளின் பொருண்மைப் பிறழ் கூற்றுக் கெதிராக அல்லது நிதிநட்டங்களுக்கும் மோசடிகளுக்கும் எதிராக முழுமையான உத்தரவாதத்தையன்றி, நியாயமான அளவு உத்தரவாதத்தை மட்டுமே வழங்க முடியும்.

வங்கியால் முகங்கொடுக்கப்படும் முக்கியமான இடர்களை இனங்காணுதல்,மதிப்பீடு செய்தல், மற்றும் முகாமைசெய்வதற்காக சபை ஒரு தொடர்ச்சியான செயன்முறையை ஸ்தாபித்துள்ளது. அத்துடன், வியாபாரச் சூழல் அல்லது ஒழுங்குபடுத்தும் வழிகாட்டிகள் போன்றன மாற்றமடையும் போது இந்தச்செயன்முறையானது நிதியியல் அறிக்கையிடல் மேலான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மேம்படுத்தி வலுப்படுத்துகின்றது. இச்செயற்பாடுசபையால் கிரமமாக மீளாய்வு செய்யப்படுவதுடன் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்றுக்கள் மீதுவங்கியின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டுதல்களுடன் உடன்படுகின்றது. அந்தவழிகாட்டியில் வழங்கப்பட்டஉள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் மதிப்பீட்டுக்கான கணக்கீட்டுக் கொள்கைகளை கவனத்திலெடுத்து நிதியியல் அறிக்கையிடலுக்கான உள்ளகக் கட்டுப்பாட்டை சபை மதிப்பீடுசெய்தது.

நிதியியல் அறிக்கையிடலின் நம்பகத் தன்மை தொடர்பாக நியாயமான உத்தரவாதமளிப்பதற்கு நிதியியல் அறிக்கையிடலின் மீதானஉள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைமிகவும் போதுமானதாக உள்ளதென சபை கருதுகின்றது. அத்துடன் வெளித்தேவைகளுக்கானநிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு அதனோடு தொடர்புடைய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்படுத்தல்களுடன் இணைந்தவாறு காணப்படுகின்றது

முகாமைத்துவமானது, இந்த இடர்களைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது குறைப்பதற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டின் வடிவமைப்பு, செயற்பாடுமற்றும் கண்காணிப்பில், எதிர்நோக்கப்படுகின்ற இடர்களின் மதிப்பீடுமற்றும் இனங்காணலில் சபையின் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை அமுல்படுத்துவதற்கு சபைக்கு உதவி செய்கின்றது.

நிதியியல் அறிக்கையிடலின் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறன் மற்றும் வடிவமைப்பு மீளாய்வில் பிரயோகிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட செயன்முறையின் முக்கிய அம்சங்கள் ஆகும்.

நிதியியல் அறிக்கையிடலுக்கானஉள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் போதுமான தன்மை,ம ற்றும் நேர்மைத்தன்மையை மீளாய்வு செய்தலில் நிறுவப்பட்ட முக்கிய செயன்முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன :

- அங்கீகரிக்கப்பட்ட அதன் கூட்டாண்மைத் திட்டத்திலிருந்து பெறப்பட்டவருடாந்தப் பாதீட்டுடனும் கூட்டாண்மைக் குறிக்கோள்களுடனும் தந்திரோபாயங்களுடனும் இணைந்தவாறு வங்கியின் செயற்பாடுகள் காணப்படுகின்றன என்பதையும் வங்கியின் நாளாந்த நடவடிக்கைகளின் வினைத்திறனை உறுதிப்படுத்துவதில் சபைக்கு உதவிசெய்வதற்காக சபையால் வேறுபட்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரிவானது உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறனையும் வங்கியின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுடனான இணக்கப்பாடுகளையும் சுழற்சிச் செயன்முறைகள் மற்றும் மாதிரிகளைப் பயன்படுத்தி தொடர்ச்சியான முறையில் பரிசீலித்து ஏதாவது குறிப்பிடத்தக்க இணக்கப்பாடற்றதன்மை காணப்படுமிடத்து அவற்றைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றன. எல்லாஅலகுகள் மற்றும் கிளைகளின்மீது ஒரு சுயாதீனமானதும் குறிக்கோள் நோக்கியதுமான அறிக்கையை வழங்குவதற்கு கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது. இக் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்ற தடவைகள் மதிப்பீடுசெய்யப்பட்ட இடர்களின் அளவினால் தீர்மானிக்கப்படுகின்றன. வருடாந்தக் கணக்காய்வுத் திட்டம் சபையின் கணக்காய்வு மீளாய்வுக் குழுவினால் மீளாய்வுசெய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் முடிவுகள் சபையின் கணக்காய்வு மீளாய்வுக் குழுவுக்கு அவர்களின் காலத்திற்குக் காலம் நடைபெறும் கூட்டங்களில் மீளாய்வு செய்வதற்காகச் சமர்ப்பிக்கப்படுகின்றன.

- வங்கியின் சபை கணக்காய்வுக் குழுவானது, உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம், வெளியகக் கணக்காய்வாளர்கள், ஒழுங்குபடுத்தல் அதிகாரங்கள் மற்றும் முகாமைத்துவத்தினால் அடையாளம் காணப்பட்ட உள்ளகக்கட்டுப்பாட்டு சிக்கல்களை, கணக்காய்வின் நோக்கம் மற்றும் தரம் என்பவற்றின் மீது குறிப்பிடத்தக்க வலியுறுத்தலுடன் மீளாய்வு செய்கின்றது. மேலும், உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகளை கணக்காய்வின் நோக்கம் மற்றும் தரம் என்பவற்றின் மீதான குறிப்பிடத்தக்க வலியுறுத்தலுடன் மீளாய்வு செய்கின்றது. கணக்காய்வுக் குழுவின் கூட்டஅறிக்கைகள் வங்கியின் சபைக்கு காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படுகின்றன. வங்கியின் கணக்காய்வுக் குழுவால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் மேலதிகவிபரங்கள் கணக்காய்வுக் குழுவின் அறிக்கையில் 89 தொடக்கம் 92 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

- நிதியியல் அறிக்கையிடல் மீதானஉள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மதிப்பீடு செய்கையில் இனங்காணப்பட்ட அலுவலர்கள் வங்கியின் நிதிக்கூற்றுக்களின்

முக்கிய மானகணக்குகள் மற்றும் வெளிப்படுத்தல்களுடன் இணைந்த எல்லாச் செய்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளையும் தொகுத்தனர். இந்த முறைமையின் வடிவமைப்புமற்றும் செயற்திறன் தன்மையின் பொருத்தப்பாடு ஒரு தொடர்ச்சியான முறையில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையால் அவதானிக்கப்பட்டு பரீசீலிக்கப்பட்டுள்ளது.

- வங்கியானது முன்னெச்சரிக்கையுடன் நிதிக்கருவிகளின் மீதான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - SLFRS 9 இனை 2018 ஜனவரி 1 முதல் அமுலுக்கு வரும் வகையில் பின்பற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுத்ததுடன் கடன்கள் மற்றும் முற்பணங்களிற்கான சேதங்களிற்கான கணக்கீடுகளையும் மேற்கொண்டு வருகின்றது. முன்னர் பயன்படுத்தப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களிலிருந்து (LKAS 39) (நிதி கருவிகள் - அங்கிகாரம் மற்றும் அளவிடுதல்) இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்களிற்கு SLFRS 9 மாறும் போது மிகவும் கவனமாக அவதானிக்கப்பட்டதுடன், குறிப்பாக முன்னோக்கி பார்க்கப்பட்ட கடன் இழப்பு மாதரி அறிமுகமானது இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 39 ற்கு கீழ் ஏற்பட்ட இழப்பு மாதிரிக்கு மாறாக காணப்படுகின்றது. வெளிவாரி கணக்காய்வாளர், ஒழுங்குபடுத்துணர்கள் மற்றும் சபை கணக்காய்வு குழு என்பனவற்றின் உள்ளிடுகளிற்கு அப்பால் ஒரு ஆலோசகர் (மெய்சேர்ஸ் ஏனெஸ்ட் அன் யங்) நியமிக்கப்பட்டார்.

- முதலாம் நாள் பூர்வாங்க மதிப்பீட்டின் தாக்கத்திலிருந்து இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் SLFRS 9க்கான விண்ணப்பங்கள் கணிக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை அறிக்கையிடல் நியமங்கள் SLFRS 9ற்கு வெற்றிகரமாக உள்வாங்கும் முகமாக தேவையான நடைமுறை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. வங்கியினுடைய ஒரு வழிகாட்டும் குழு ஆனது பல்வேறுபட்ட தாக்கங்களை உருவாக்கியதுடன் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தும் செயன்முறையையும் ஒருங்கிணைத்தனர்.

- கடந்தவருட நிதியியல் அறிக்கையிடல் மீதானஉள்ளகக் கட்டுப்பாட்டு முறைமீது வெளியக் கணக்காய்வாளரால் வைக்கப்பட்ட கருத்துக்கள் இந்தவருடத்தின் பொழுதுமீள்பார்வையிடப்பட்டு அவற்றை சரிப்படுத்துவதற்காக பொருத்தமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் நிதியியல் அறிக்கையிடல் மீதானஉள்ளகக் கட்டுப்பாட்டுமுறை மீது வெளியக் கணக்காய்வாளரால் வைக்கப்பட்ட சிபாரிசுகள் எதிர்காலத்தில் கருத்தில் கொள்ளப்படும்.

சான்றுறுதிப்படுத்தல்

மேற்படி செய்முறைகளின் அடிப்படையில் வங்கியின் நிதி அறிக்கையிடல் முறைமையானது, இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கும் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்கு முறைப்படுத்தும் தேவைகளுக்கும் இணங்க வடிவமைக்கப்பட்டதுடன் வெளியார் தேவைகளுக்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் நிதி அறிக்கையிடல்களின் நம்பகத்தன்மை பற்றிய நியாயமான அளவு உத்தரவாதத்தை வழங்குகின்றதென சபை உறுதிப்படுத்துகின்றது.

சபையின் கட்டளையின் பிரகாரம்,

தலைவர்
கணக்காய்வுக் குழு

தலைவா

பணிப்பாளர்

27 மார்ச் 2019
கொழும்பு

சுயாதீன உத்தரவாத அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. BAF/B/BOC/IC/2018

මගේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 09 April 2019

தலைவர்
இலங்கை வங்கி

பணிப்பாளர் சபைக்கு இலங்கை வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் பற்றிய பணிப்பாளர்களின் கூற்றின் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுயாதீன உத்தரவாத அறிக்கை

அறிமுகம்

இவ்வறிக்கை 2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட இலங்கை வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்றுக்கு உத்தரவாதம் வழங்குவதற்கானது. இவ்வுத்தரவாதத்தை வழங்குவதற்கு பொதுத் தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்றின் உதவி பெறப்பட்டது.

முகாமையினரின் பொறுப்பு

இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தால் 2007 இன் 11 ஆம் இலக்க வங்கித்தொழிற் சட்ட வழிகாட்டலின் 3 (8) (ii) (b) பிரிவுக்கு இணக்கமாக வழங்கப்பட்ட 'உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்றுத் தொடர்பில் வங்கிகளின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டலுக்கு' இணங்கக் கூற்றைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் முகாமையினர் பொறுப்பாயுள்ளனர்.

SLSAE 3050 உடனான எனது பொறுப்புக்களும் இணக்கமும்

நிறைவேற்றப்பட்ட வேலையை அடிப்படையாகக் கொண்டு கூற்று பற்றிய அறிக்கையொன்றை பணிப்பாளர் சபைக்கு வழங்க வேண்டியது எனது பொறுப்பாகும். நான் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் வழங்கப்பட்ட உத்தரவாத ஈடுபாடுகள் பற்றிய இலங்கை நியமம் SLSAE 3050 - உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்றின்மீது வங்கிகளுக்கான உத்தரவாத அறிக்கைக்கிணங்க எனது பணியில் ஈடுபட்டேன்.

நிறைவேற்றப்பட்ட வேலையின் சுருக்கம் பணிப்பாளர்களால் அல்லது அவர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் கூற்றுக்கு ஆதாரமாயிருக்கின்றனவாவென்றும் வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மீளாய்வு செய்வதற்குப் பணிப்பாளர்கள் கையாண்ட செயல்முறை பொருத்தமான முறையில் பிரதிபலிக்கப்படுகின்றதாவென்றும் மதிப்பீடு செய்வதற்காக இவ்வீடுபாட்டுப் பணி நடாத்தப்பட்டுள்ளது.

இந் நோக்கத்தை அடைய கீழ்வரும் நடைமுறைகளைப் பின்பற்றியதன் மூலம் பொருத்தமான சான்று பெறப்பட்டுள்ளது.

அ) உள்ளக கட்டுப்பாட்டின் வடிவமைப்பு மற்றும் வினைத்திறன் என்பவை தொடர்பில் பணிப்பாளர்களின் மீளாய்வுக்கென பணிப்பாளர் சபையால் வரையறுக்கப்பட்டுள்ள செயல்முறை பணிப்பாளர்களால் புரிந்து பெற்றுக்கொள்ளப்பட்டதா என்பது விசாரிக்கப்பட்டதுடன் ஆண்டறிக்கையில் பணிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கூற்றுத் தொடர்பில் அவர்களின் புரிந்துணர்வும் ஒப்பிடப்பட்டது.

ஆ) பணிப்பாளர்களின் கூற்றுக்கு ஆதரவாக அவர்களால் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் மீளாய்வு செய்யப்பட்டது.

இ) நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வின் போது வங்கி விடயங்கள் தொடர்பில் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவு மற்றும் அநுபவங்களுடன் பணிப்பாளர்கள் மேற்கொண்ட கூற்று தொடர்புபடுத்திப் பரிசீலிக்கப்பட்டுள்ளது.

ஈ) பணிப்பாளர் சபை மற்றும் அதனுடன் தொடர்புடைய சபை குழுக் கூட்டங்களின் கூட்ட அறிக்கை மீளாய்வு செய்யப்பட்டது.

உ) உள்ளகக் கட்டுப்பாட்டுக் கூற்று உள்ளடக்கப்படுகின்ற ஆண்டறிக்கை பரிசீலிக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கான அனுமதி வழங்கப்படுகின்ற கணக்காய்வுக் குழுவின் கூட்டங்களுக்கு சமுகமளித்தல்.

ஊ) உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பில் பணிப்பாளர்களின் கூற்றானது ஆய்விற்குப்படும் வருடம் முழுவதையும் உள்ளடக்குகின்றதா என்பதும் குறிப்பிடத்தக்க விடயங்கள் ஏதேனும் எழுகின்ற போது அவற்றை இனங்காண்பதற்குப் போதிய செயன்முறைகள் காணப்படுகின்றனவா என்பதும் கருத்தில் கொள்ளப்பட்டது.

எ) பொருத்தமான வேறு கணக்காய்வுச் சான்றுகள் போதுமானளவில் காணப்படுகின்றதென நியாயமான முறையில் எதிர்பார்க்க முடியாதவிடத்து அவை உள்ளகக் கட்டுப்பாடு மீதான கூற்றுக்களுக்கு பொருண்மையான விடயங்களாகக் கருதப்பட்டு பணிப்பாளர்களிடமிருந்து எழுத்திலான பிரதிநிதித்துவம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

கூற்று எல்லா இடர்களையும் கட்டுப்பாடுகளையும் உள்ளடக்குகின்றதாவென்று நான் பரிசீலனை செய்ய வேண்டுமென்றோ அல்லது வங்கியின் இடர் மற்றும் கட்டுப்பாட்டு நடைமுறைகளின் பயனுறுதித்தன்மை பற்றி ஓர் அபிப்பிராயத்தைக் கூறவேண்டுமென்றோ SLSAE 3050 தேவைப்படுத்தவில்லை. ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் குறிப்பிடத்தக்க பிரச்சினைகளின் முக்கிய உள்ளகக் கட்டுப்பாட்டு அம்சங்களைக் கையாள்வதற்கு விவரிக்கப்பட்ட செயல்முறைகள், உண்மையில் அப்பிரச்சினைகளுக்குப் பரிகாரமாக அமைகின்றனவாவென்று நான் பரிசீலனை செய்யவேண்டுமென்றுகூட SLSAE 3050 தேவைப்படுத்தவில்லை.

முடிவுரை

நிறைவேற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில், வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக்கட்டுப்பாட்டின் வடிவமைப்பையும் பயனுறுதித்தன்மையையும் மீளாய்வதில் பணிப்பாளர் சபை கைக்கொண்டுள்ள செயல்முறைபற்றி நான் விளங்கிக்கொண்டதுடன் முரண்படுகின்ற வகையில் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டகூற்று காணப்படுகின்றதென்று நம்புவதற்கு ஏதுவான எதையும் நான் அவதானிக்கவில்லை.

எச் எம் காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

இது பணிப்பாளர்கள் சபையினால் விசேடமாக, நிதியறிக்கைகள் தொடர்பில் பணிப்பாளர்களதும் கணக்காய்வாளர்களினதும் பொறுப்புக்களை முறையே வேறுபடுத்துவதற்காக தயாரிக்கப்படுகின்ற கூற்று ஆகும். இலங்கை வங்கியினதும் குழுமத்தினதும் நிதி அறிக்கையிடல் தொடர்பில் பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பின்வரும் கூற்றில் விவரிக்கப்படுகின்றது.

நிதியியல் கூற்றுக்கள்

1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்துடனும் அதற்கான திருத்தங்களுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 1938 ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் மற்றும் அதற்கான திருத்தங்களின் ஏற்பாடுகளினதும், அதன்கீழ் வழங்கப்பட்ட வழிகாட்டல்களினதும், பிரகாரம் வங்கியின் பணிப்பாளர்கள், வங்கி ஒழுங்கான கணக்குப் புத்தகங்களைப் பராமரிக்கின்றது என்பதற்கும் அக்கணக்குகள் எப்பொழுதும் வங்கியின் நிதி நிலைமைகளை நியாயமானவரையில் சரியாக வெளிப்படுத்துகின்றது என்பதற்கும் பொறுப்புடையவர்களாவர். அத்துடன் ஒவ்வொரு நிதியாண்டுக்கும் பொருத்தமான நிதிக்கூற்றுகளை வங்கியினது அலுவல்களின் நிலை பற்றிய உண்மையானதும் நேர்மையானதுமான ஒரு நோக்கைப் பிரதிபலிக்கின்ற வகையில் தயாரிக்கின்றனவென்று உறுதிப்படுத்துகின்றனர்.

இவ்வாண்டறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பதில், மிகப் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளனவென்றும், நியாயமானதும் விவேகமானதுமான திறனாய்வு முடிவுகளினதும் மதிப்பீடுகளினதும் ஆதரவுடன் அவை நிலைமாறாது பிரயோகிக்கப் பட்டுள்ளன என்றும் பணிப்பாளர்கள் ஒப்புக் கொள்கின்றனர். ஏதாவது முக்கியமான விலகல்கள் இருப்பின் அவை வெளிப்படுத்தப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள 2018 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள், 1938 ஆம் ஆண்டின் 53ம் இலக்க இலங்கை வங்கிக்கட்டளைச் சட்டத்திற்கும் அதன் திருத்தங்களுக்கும், 1988 ஆம் ஆண்டின் 30ம் இலக்க வங்கிச் சட்டத்திற்கும் அதன் திருத்தங்களுக்கும் வழிகாட்டல்களுக்கும், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகளுக்கும் இணங்கவும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நிதிக்கூற்றுக்கள் 2018 டிசம்பர் 31ல் உள்ளவாறான வங்கியினதும் அதன் குழுமத்தினதும் நிலவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன.

தொடர்ந்து இயங்கும் நிறுவனம்

வங்கியும் குழுமமும் முன்னுணரக்கூடிய எதிர்காலத்துக்கு வியாபாரத்தைத் தொடர்வதற்குப் போதிய வளங்களைக் கொண்டுள்ளனவென்று பணிப்பாளர்கள் கருதுகின்றனர். அதற்கிணங்க அவர்கள் நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பதில் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு அடிப்படையைத் தொடர்ந்தும் கைக்கொண்டுள்ளனர்.

உள்ளகக் கட்டுப்பாடுகள், இடர்முகாமைத்துவம் மற்றும் இணக்கப்பாடு

பணிப்பாளர்கள் உள்ளக நிதியியல் கட்டுப்பாடுகளின் முறைமைக்கும் இடர் முகாமைத்துவத்துக்கும் பொறுப்பானவர்களாதலால், வங்கியின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் இடர்காப்பதற்கும் மோசடி மற்றும் முகாமைச் சீர்கேடுகளைத் தடுப்பதற்கும் ஓர் உறுதியான கட்டுப்பாட்டுச் சூழலைப் பேணுவதற்குக் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் அளிக்கின்றனர். இயல்பான மற்றும் இழிவு இடர்களை முழுமையாக ஒழிக்க முடியாதென்கின்ற போதிலும், பொருத்தமான உட்கட்டமைப்பு, கட்டுப்பாடுகள், முறைமைகள் மற்றும் நெறிமுறையான நடத்தை என்பவற்றை, முன்தீர்மானிக்கப்பட்ட நடைமுறைகள், வரையறைகளினுள் பிரயோகிப்பதன்மூலமும் பின்பற்றுவதன்மூலமும் அவற்றை இழிவளவாகக் குறைப்பதற்கு வங்கி பெருமுயற்சி செய்கின்றது.

குழுமத்தின் ஒன்றிணைந்த நிதியியல் கூற்றுக்களானது, குழுமத்திற்கும், வங்கிக்கும் தனித்தனியாகத் தயாரிக்கப்பட்டது. ஒன்றிணைக்கப்பட்ட குழுமத்தின் நிதிக்கூற்றுக்களும் வங்கியின் தனிப்பட்ட நிதிக்கூற்றுக்களும் இலங்கை நிதியிடல் அறிக்கையிடல் நியமங்களோடு இணைந்த இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன. (இலங்கை நிதியிடல் அறிக்கையிடல் நியமங்கள் என இந்நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றோடு இணைந்து) 2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிச் சட்டத்திற்கும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தினது தேவைப்பாடுகளுக்கேற்ப இந்த நிதிக்கூற்றுக்களின் தயாரித்தலும், பிரசுரித்தலும் இணங்குகின்றன. நிதிக்கூற்றுக்களின் பிரசுரித்தலானது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்காகவும் மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்கீட்டுக் கொள்கைகளில் விபரிக்கப்பட்டவாறு, குழுமமானது 2017 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிலுள்ளவாறான ஒப்பீட்டு ஆண்டுத் தரவுகளுடன் சேர்த்து 2018 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டிற்கு ஏற்புடைத்தான இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டுக் கொள்கைகளுக்கிணங்க நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்திருக்கின்றது.

நிதிக் கூற்றுகளுக்காக பாவிக்கப்பட்ட வடிவங்கள் அனைத்தும் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட 2019ம் ஆண்டு சுற்று நிருபம் இல. 02 அங்கிகாரமளிக்கப்பட்ட வங்கிகளின்காலாண்டு மற்றும் வருடாந்த வெளிப்படுத்துகைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டவை.

3.2 அளவீட்டு அடிப்படை

ஒன்றுதிரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் பின்வருவன நீங்கலாக வரலாற்றுக்கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன:

- பெறுதி நிதியியல் சாதனங்கள் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டன. (கூற்று 25 மற்றும் 40)

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

- வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் நியாயப் பெறுமதி அடிப்படையில் அளவிடப்பட்டன. (கூற்று 26)

  நிதியியல் சொத்துக்கள், நிலைமாறக்கூடிய தொகையில் - கடன்களும்/முற்பணங்களும் நிதியியல் சொத்துக்கள் நிலைமாறக்கூடிய தொகையில் - கடன் முறிகள் மற்றும் ஏனைய நிதியியல் கருவிகள் / நிதியியல் முதலீடுகள் - கடன்களும் அறவீடுகளும் நிதியியல் முதலீடுகள் - முதிர்விற்காக வைத்திருக்கப்பட்டவை - (கூற்று 27 மற்றும் 28)

- விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் முதலீடுகள் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டன. (கூற்று 29)

- உரிமையாளரினால் பயன்படுத்தப்படும் இறையிலி நிலமும் கட்டடங்களும் மற்றும் குத்தகையிலுள்ள காணிகள் ஒன்று சேர்ந்த தேய்மானம் மற்றும் பழுதுறக்கூடிய இழப்புக்கள் ஏதேனும் இருப்பின் அவற்றைக் கழித்த பின்னர் மீள்மதிப்பிடத்தக்க தொகையில் அளவிடப்பட்டன. (கூற்று 33)

  நிதியியல் பொறுப்புக்கள் நிலைமாறக்கூடிய தொகையில் (கூற்று 41,42,43 மற்றும் 48)

- நிச்சயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகள் ஒன்று சேர்ந்த அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியின் மொத்தத்தினைக் கழித்து நிச்சயிக்கப்பட்ட நன்மைகள் கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதியாக அங்கீகரித்துள்ளது. (கூற்று 47)

3.3 நிதியியல் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

வங்கியும் குழுமமும் அவை தொடர்பிலான திரவத்தன்மை மற்றும் முதிர்ச்சி ஒழுங்கில் அவற்றின் நிதியியல் நிலைமையினை பரந்தளவில் சமர்ப்பித்துள்ளன. அறிக்கையிடும் திகதிற்குப் பின்னரான 12 மாதங்களுக்கு உட்பட்ட (நடைமுறை) மற்றும் அறிக்கையிடும் திகதிக்குப் பின்னரான 12 மாதங்களுக்கு மேற்பட்ட (நடைமுறை அல்லாத) அறவீடு அல்லது தீர்ப்பனவு தொடர்பிலான பகுப்பாய்வொன்று 58ம் குறிப்பில் தரப்பட்டுள்ளது.

3.3.1 தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பிப்பு நாணயம்

ஒன்று திரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள், வங்கி தொழிற்படுகின்ற பிரதாதன பொருளாதார சூழலின் நாணயமான இலங்கை ரூபாவில் அளவிடப்படுகின்றது. ஒன்று திரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்கள், குழுமம் தொழிற்படுகின்றதும் சமர்ப்பிக்கப்படுகின்றதுமான நாணயமான இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

3.3.2 அட்டுறு அடிப்படையிலான கணக்கியல்

காசுப்பாய்ச்சல் கூற்றில் காணப்படுகின்ற தகவல்கள் தவிர்ந்த ஏனைய நிதி கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையிலான கணக்கினை பின்பற்றி தயாரிக்கப்படுகின்றது.

3.3.3 சமநிலை

நிதியியல் சொத்துக்களும் நிதியியல் பொறுப்புக்களும் மொத்தமாக கூட்டிணைக்கப்பட்ட நிதியியல் நிலைமையின் கூற்றில் பொதுவாக அறிக்கையிடப்படுகின்றன. எதிர்கால நிகழ்வொன்றின் மீது நிகழத்தக்கதாக இருக்காமல் இனங்காணப்பட்ட தொகைகளை எதிரீடு செய்வதற்கான நிபந்தனையற்ற சட்ட ரீதியாக அமுலிலிருக்கத்தக்க உரிமையொன்றைக் கொண்டிருப்பதற்கு மேலதிகமாக, பின்வரும் சகல சூழ்நிலைகளிலும் ஒரு தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கும்கூட தரப்பினர்கள் உத்தேசிக்கும் போது அவை மாத்திரமே எதிரீடு செய்யப்பட்டு தேறியது அறிக்கையிடப்படுகின்றது:

- சாதாரண வியாபார நடவடிக்கை
- பணம் செலுத்தத் தவறும் சந்தர்ப்பம்
- வங்கியின் அத்துடன்/அல்லது அதன் எதிரிணைத் தரப்பினர்களின் வங்குரோத்து அல்லது வகையற்றுப் போகும் சந்தர்ப்பம்

ஏதேனும் கணக்கீட்டு நியமம் அல்லது வியாக்கியானங்களின் மூலமும் தேறல்படுத்தப்பட்டு அல்லது அனுமதிக்கப்பட்டு அத்துடன் குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கையில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டிருந்தாலொழிய வருமானம் மற்றும் செலவினங்கள் திரட்டப்பட்ட வருமானக்கூற்றில் எதிரீடு செய்யப்படமாட்டாது.

3.3.4 ஒப்பீட்டுத் தகவல்கள்

ஒப்பீட்டுத் தகவல்கள், நடைமுறை நிதியியல் கூற்றுக்களை விளங்கிக் கொள்வதுடன் விளங்கிக் கொள்வதுடன் தொடர்புடையதாகவும், நடைமுறை ஆண்டின் சமர்ப்பித்தல்களுடன் இணங்குவது அவசியமாகும் போது மீள் வகைப்படுத்தப்படுவதாலும் இவை விரிவாகவும் விளக்கமாகவும் தரப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், நிதியியல் கருவிகளுக்கான 2017 இன் ஒப்பீட்டுத் தகவல்களை SLFRS 9 - "நிதியியல் கருவிகள்" இனுள் குழுமமானது மீள் குறிப்பிடவில்லை.

SLFRS ஐத்தழு வியதால் ஏற்படும் மாற்றங்கள் பங்காக 01 ஜனவரி 2018 இல் மாற்றத்திற்கான வெளிப்படுத்துகையில் கீழ் வகைப்படுத்தப்பட்டன. இருப்பினும் குழுமமானது 2017ம் வருட நிதியியல் கருவிகள் கீழ் வரும் ஒப்பீட்டுத் தகவல்கள் SLFRS 9 கீழ் அல்லாமல் LKAS 39ன் கீழ் "நிதியியல் கருவிகள் அங்கீகரிப்பு மற்றும் அளவீடு" எனும் தலைப்பின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன.இது 2018ம் வருடத்துடன் ஒப்பிட முடியாது.

(குறிப்பு 62)

3.3.5 உருவமுள்ள தன்மையும் திரட்டலும்

LKAS – 1 "நிதியியல் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு" கணக்கீட்டு நியமத்திற்கிணங்க, ஒவ்வொரு பொருள் வகுப்பிற்கும் ஏற்ப விடயங்கள் வேறாக நிதியியல் கூற்றுக்களில் தரப்பட்டுள்ளன. வெவ்வேறுபட்ட தொழிற்பாடுகள் அல்லது இயல்பைக் கொண்ட விடயங்கள் வேறாகத் தரப்பட்டுள்ளன.

3.3.6 முழுதாக்குதல்

நிதியியல் கூற்றில் தரப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் கிட்டிய ஆயிரக்களுக்கு முழுதாக்கப்பட்டுத் தரப்பட்டுள்ளன. எனினும் LKAS-1 நிதியியல் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு" நியமத்தில் குறிப்பிடப்படுள்ள ஒரு சில தரவுகள் மட்டும் விலக்களிக்கப்பட்டுள்ளன.

3.3.7 காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்றானது LKAS-7

"காசுப்பாய்ச்சல் கூற்று" நியமத்தில் குறிப்பிடப்பட்ட "மறைமுக முறையின்" படி தயாரிக்கப்பட்டுள்ளது. அதாவது இலாபமானது, காசுப்பாய்ச்சலுக்குள், செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக மாற்றப்பட்டது. காசும், காசுக்குச் சமமானவையும் சேர்ந்து கையிலிருக்கும் காசாக காட்டப்படுள்ளது.
மேலும் அதிக திரவத்தன்மை உடைய 7 நாட்களுக்குள் முதிர்ச்சித் திகதியைக் கொண்ட நிதியியல் கருவிகளும், மேலதிகப் பற்றுக்களும் கூட மேற்குறிப்பிட்டவற்றில் அடங்குகின்றன.

3.3.8 கணக்கீட்டுத் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை குறிப்பிடத்தக்களவிற்குப் பயன்படுத்துதல்

திரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு, கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகம் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவு என்பனவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகை என்பன மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்தினை தேவைப்படுத்துகின்றன. உண்மையான பெறுபேறுகள் இம்மதிப்பீடுகளிலிருந்தும் வேறுபடலாம்.

தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன வரலாற்று ரீதியான அனுபவங்களையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் நியாயமானது என நம்பப்படுகின்ற ஏனைய பல்வேறு காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் தற்போதைய நடத்தையின் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள், மதிப்பீடுகள் திருத்தப்படுகின்றதொரு காலப்பகுதியில் அத்துடன் அல்லது எதிர்காலப்பகுதியில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமிடத்து திருத்தங்கள் எதிர்காலத்தையும் பாதிக்குமானால், எதிர்காலத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கையினை பிரயோகிக்கும் செயன்முறையின் போது, முகாமைத்துவம், திரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளின் மீது மிகக் குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருக்கும் பின்வரும் மதிப்பீடுகள், அனுமானங்கள் மற்றும் தீர்ப்புக்களைச் செய்திருக்கிறது.

3.3.8.1 தொடர்ந்து இயங்கும் நிறுவனம்

தொடர்ந்து இயங்கும் நிறுவனத்தினை அவ்வாறே தொடர்வதற்கான வங்கியின் இயலாற்றலின் மீது முகாமைத்துவம் மதிப்பீடுகளை மேற்கொண்டிருப்பதுடன் அண்மிய எதிர்காலத்திலும் தொழில்களை தொடங்குவதற்கான மூலவளத்தினை அது கொண்டிருப்பது பற்றி திருப்திப்பட்டிருக்கிறது. மேலும் முகாமைத்துவம் இடம்பெற்று வருவது போன்று வர்த்தகத்தினை தொடங்குவதற்கான வங்கியின் இயலாற்றல் தொடர்பாக குறிப்பிடத்தக்க தாக்கமெதனையும் விளைவிக்கும் ஏதேனும் பொருண்மைமிக்க நிச்சயமற்ற தன்மையினையும் முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. ஆகவே, நிதியியல் கூற்றுக்கள் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு அடிப்படையிலேயே தொடர்ந்தும் தயாரிக்கப்படும்.

3.3.8.2 கடமைப்பாடுகள் மற்றும் நிகழத்தக்க பொறுப்புக்கள்

எல்லா அறியப்பட்டதும் கணிப்பிடக் கூடியதுமான பொறுப்புக்களின் தொகை அல்லது பெறுமதி தீர்மானிக்கப்பட்டு எல்லா அறியப்பட்ட இடர்களும் கணக்கு வைக்கப்பட்டுள்ளன. நிகழத்தக்க பொறுப்புக்கள் சாத்தியமான கடப்பாடுகளாகும். பொருளாதார நன்மையின் பரிமாற்றமானது சாத்தியமற்றபோது அல்லது நம்பத்தகுந்தவகையில் கணிப்பிடப்பட்டிருக்காதபோது நிகழத்தக்க பொறுப்புக்களின் இருப்புக்களானது நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது தற்போதய கடப்பாடுகளால் மட்டுமே உறுதிப்படுத்தப்படும். நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதி நிலைமை அறிக்கையில் கணக்குப் பதியப்படுவதில்லை. ஆனால் இவ் நிகழ்ச்சி தொலைவில் இல்லையெனில் வெளிப்படுத்தப்படுகின்றன.

3.3.8.3 நிதியியல் சாதனங்களின் நியாயப்பெறுமதி

நிதியியல் நிலைமைக் கூற்றில் நிதியியல் சொத்துக்களினதும் நிதியியல் பொறுப்புக்களினதும் நியாயப் பெறுமதி தீவிரமான சந்தைகளிலிருந்து பெறப்படமுடியாமல் இருக்கும்பொழுது அவை, கணித மாதிரிகளைப் பயன்படுத்துவது உட்பட பல்வேறுபட்ட மதிப்பீட்டு நுணுக்கங்களைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றன. இம்மாதிரிகளுக்கான உள்ளீடுகள், சாத்தியமானவிடத்து அவதானிக்கப் படக்கூடிய சந்தைகளிலிருந்து எடுக்கப்படுகின்றனவெனினும் அத்தகைய தரவுகள் கிடைக்காதவிடத்து, தீர்ப்பின் அளவு நியாயப் பெறுமதியினை நிறுவுவதன் மூலம் பெறப்படுகின்றது. இது அவதானிக்கப்படாத உள்ளீட்டுப் பாவனையால் ஏற்படுகின்ற தாக்கங்களைக் குறைக்கின்றது. நிதியியல் சாதனங்களின் விலை மதிப்பீடுகள் குறிப்பு 61இல் விபரமாக விபரிக்கப்பட்டுள்ளன.

3.3.8.4 கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான பெறுமதிக் குறைப்பின் இழப்புக்கள்

குழுமமானது, வருமானக் கூற்றுக்களில் பெறுமதி குறைந்த இழப்புக்கள் பதிவு செய்யப்படவேண்டும் என்பதனை மதிப்பிடுவதற்காக குழுமமானது ஒவ்வொரு அறிக்கையிட்ட திகதியிலும் குறிப்பிடத்தக்க கடன்களையும் முற்பணங்களையும் அதன் தனிப்பட்ட முறையில் SLFRS9 நியமம் மற்றும் LKAS 39 நியமத்தின் அடிப்படையில் மீளாய்வு செய்கிறது. குறிப்பாக பெறுமதிக்குறைவு இழப்பினைத் தீர்மானிக்கும் பொழுது, எதிர்காலக் காசுப்பாய்ச்சலின் தொகை மற்றும் நேரமிடல் என்பனவற்றின் மதிப்பிடலால் முகாமைத்துவத்தின் தீர்ப்பு தேவையாகவுள்ளது. இம்மதிப்பீடுகள் பல்வேறு காரணிகள் பற்றிய அனுமானங்களை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன், உண்மையான பெறுபேறுகள் வேறுபடலாம் என்பதுடன் சம்பளப்படிகளிலும் எதிர்கால மாற்றல்களைத் தோற்றுவிக்கின்றது.

தனிப்பட்ட முறையில் மதிப்பீடு செய்யப்பட்டு பெறுமதி குறையக்கூடிய தன்மையற்றவை என கண்டறியப்பட்ட கடன்களும் முற்பணங்களும் ஏனைய தனிப்பட்ட சிறியளவு கடன்களும் முற்பணங்களும் ஒன்றுசேர மதிப்பிடப்பட்டதுடன், இழப்புக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களின் அடிப்படையில் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமா என்பதனை தீர்மானிப்பதற்காக ஒரேமாதிரியான இடர் பண்புகளைக் கொண்ட சொத்துக்களின் தொகுதியில் சான்றுகள் காணப்பட்டதெனினும் தாக்கத்தினை தெளிவாகக் காணமுடியவில்லை. ஒன்றுசேர்ந்த மதிப்பீடுகள் கடன்களின் சொத்துப்பட்டியல் தரவுகளையும் (கடன்களின்வகை, நிலுவையிலுள்ள மட்டங்கள் போன்றவை) இடர் நேர்வுகளினது திரட்சியின் தாக்கம் மற்றும் பொருளாதார தரவுகள் (தொழிலின்மை மட்டங்கள், சொத்து வியாபார விலைகளின் சுட்டெண்கள், நாட்டின் இடர்நேர்வு மற்றும் வேறுபட்ட தனிப்பட்ட குழுமங்களின் செயலாற்றம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

என்பனவற்றை உள்ளடக்குகிறது) என்பனவற்றைக் கவனத்தில் கொள்கிறது.

SLFRS 9 அடிப்படையிலான புதிய கடனிழப்பு ஏற்பாடுகள், எதிர்பார்க்கப்படும் கடனிழப்பை ஆதாரமாகக் கொண்டவை. அதனடிப்படையில் உருவாக்கப்பட்ட மாதிரியானது. கடன் தொகுப்பினை ஆராய்ந்து ஏற்பாட்டைத் தீர்மானிக்கின்றது. ஐயக்கடன் ஏற்பாட்டுத் தொகை கடன் தொகையில் ஏற்பட்ட பாதிப்பின் அடிப்படையில் பின்வரும் விடையங்களை உள்ளடங்கி ஏற்படுத்தப்படுகின்றது.

- 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கடனிழப்பு (கட்டம் 1) இது சகல கடன் தொகுப்புக்களுக்கும் பொருந்தும் அந்தத் தொகுப்பில் குறிப்பிடத்தக்க கடன் இடர் இல்லாத பட்சத்தில்

- வாழ்நாட்கால கடனிழப்பு (கட்டம் 2, மற்றும் 3) இது சகல கடன் தொகுப்புகளிலும் குறிப்பிடத்தக்க அளவு கடன் இடர்/இழப்பு ஏற்படும்போது பொருந்தும்

மேலும் குழுமமானது மேலதிக தீர்மானங்களையும் மதிப்பீடுகளையும் மேற்கொள்ளும் கீழ் குறிப்பிட்ட கடனிழப்பு மாதிரியின் படி.

- குழுமத்தின் கடனிழப்பு ஆய்வு அடிப்படைகளில் முதன்மையானது, கடன் தொகையில் அதாவது குறிப்பிடத்தக்க கடன் இடர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதா என நிதியியல் சொத்துக்களின் கடன்களில் ஆயுள் கால அடிப்படையில் ஆய்வு செய்தல்.

- வேறுபட்ட கணித சூத்திரங்கள், மற்றும் தெரிவுசெய்த உள்ளீடுகளின் அடிப்படையில் மாதிரிகளை விருத்தி செய்தல்.

- பொருளாதார வளர்ச்சி அடிப்படையிலான உள்ளீடுகளான GDP வளர்ச்சி, பணவீக்கம், வட்டி வீதங்கள், நாணய மாற்றுவீதங்கள், மற்றும் வேலையற்றோரின் வீதம் என்பவற்றுடன், கொடாநிலைக்கான நிகழ்தகவு, கொடாமைக்கான வெளிப்பாடு இழப்பு ஏற்பட்ட கடன் கொடாமை என்பவையும் கணக்கில் எடுக்கப்படும்.

- எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் என்பவையும் கணக்கில் கொள்ளப்படும்.

LKAS 39 நியமத்தின் படி, கூட்டு கடனிழப்புத் தொகையானது, ஒரியல்பான கடன்களுக்கும் முற்பணங்களுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது புள்ளிவிபரவியல் முறைகளின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. முன்பு ஏற்பட்ட கடனிழப்புக்கள், தவணை தவசரப்னரின் தரவுகள், என்பனவும் நட்டத்தின் அளவைத் தீர்மானிக்கின்றன. முகாமைத்துவமானது முன்னைய தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இழப்புத் தொகையை கணக்கிட்டாலும் தற்போதைய பொருளாதார நிலவரங்களையும், கடன் வகைப்படுத்தலையும் ஒப்பிட்டு ஒழுங்குமுறையாக தொகையை மீள் பரிசீலனை செய்கின்றது.

குழுமத்தின் கொள்கைகளில் ஒன்றானது. ஒழுங்கு முறையாக கடன் இழப்பீட்டு மாதிரியை மதிப்பீடு செய்வது. இழப்பீட்டுத் தொகை ஒதுக்கத்தின் துல்லியமானது அதைக் கணக்கிடும் மாதிரியிலும், கற்பதங்களிலும், அளவுருக்களிலும் தங்கியுள்ளது. கடனிழப்பு ஒதுக்கங்கள், நட்டங்கள் என்பவற்றின் விபரம் கூற்று 14ல் தரப்பட்டுள்ளது.

3.3.8.5 துணை நிறுவனங்கள், ஏனைய நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிசாராச் சொத்துக்களிலான முதலீட்டின் பெறுமதிக் குறைவு

இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 36 இன் வழிகாட்டல் - 'சொத்துப் பெறுமதிக் குறைவு மற்றும் SLFRS 09' - நிதிக் கருவிகள்: முதலீடு ஒன்று அல்லது நிதிச் சொத்து ஒன்று பெறுமதி குறைவடைகின்றதா என்பதை வரையறுப்பதில் கண்டறிதல் மற்றும் அளவிடுதல், என்பவற்றை குழுமம் மற்றும் வங்கி ஆகியன பின்பற்றுகின்றன. துறை மற்றும் தொழில்துறை செயற்றிறன், தொழில்நுட்பம் மற்றும் எதிர்கால காசுப் பாய்ச்சல்களுடன் சேர்ந்த செயற்பாட்டு சூழ்நிலை மாற்றங்கள் போன்ற காரணிகளைக் கவனத்திற்கொண்டு, நிதிச் சொத்து ஒன்றுக்கான முதலீட்டின் நியாயப் பெறுமதியானது அதன் கிரயத்தை விடக் குறைவாகவுள்ள காலப்பகுதி மற்றும் அளவு, அத்துடன் அம் முதலீட்டின் அல்லது நிதிச் சொத்தின் குறுங்கால வியாபார கண்ணோட்டத்தின் நிதி உறுதிப்பாடு ஆகியவற்றை மதிப்பிடும் பொருட்டு குழுமத்தையும் வங்கியையும் பெறுமதிக் குறைவுக் குறிகாட்டிகளை வரையறை செய்தலும் இனங்காணலும் தேவைப்படுத்துகின்றன. மேற்கூறப்பட்ட துறைகளிலான முக்கியமான மதிப்பீட்டினை இச் செய்முறை உள்ளடக்குவதுடன் உரிய குறிப்புக்களில் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

3.3.8.6 நிச்சயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகள்

கணிப்பு மதிப்பீடுகளைப் பயன்படுத்தி நிச்சயிக்கப்பட்ட நன்மை ஓய்வூதியத்திட்டங்கள் மற்றும் தொழிலுக்குப் பின்னரான மற்றைய நன்மைகள் திட்டங்கள் என்பன நிர்ணயிக்கப்படுகின்றன. கணிப்பு மதிப்பீடொன்று கழிவிடல் வீதங்கள், சொத்துக்களின் மீதான வருவாயின் எதிர்பார்க்கப்பட்ட வீதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புக்கள் என்பனவற்றை நிர்ணயிக்கின்ற பல்வேறு அனுமானங்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் தொடர்புபட்டிருக்கிறது. இத்திட்டங்களின் நீண்ட காலத்தன்மையின் காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்களவிற்கு நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டுள்ளன. அனைத்து அனுமானங்களும் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் இவ்வாண்டுக் காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட எடுகோள்கள் குறிப்பு 47இல் தரப்பட்டுள்ளன.

3.3.8.7 காணி கட்டிடங்களின் நியாயப்பெறுமதி

குழுமத்தின் இறையில் காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் குத்தகைக் காணியிலுள்ள கட்டிடங்கள் என்பன நியாயப் பெறுமதியில் பிரதிபலிக்கப்படுகின்றன. அத்தகைய சொத்துக்களின் நியாயப் பெறுமதியினை நிர்ணயிப்பதற்காக குழுமம் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்களின் சுதந்திரமான தீர்மானங்களில் ஈடுபட்டிருந்தது. இதையொத்த சொத்துக்களின் நடைமுறை நியாய விலைகள் கிடைக்கும் பொழுது அத்தகைய சான்றுகள் இச்சொத்துக்களின் நியாயப் பெறுமதியினை மதிப்பிடுவதற்கான இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 13 - நியாயப் பெறுமதி மதிப்பீடு என்பதற்கிணங்க பரிசீலனையில் கொள்ளப்படுகின்றன. இறையில் காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் குத்தகைக் காணியிலுள்ள கட்டிடங்களின் விபரமும் குறிப்பு 33இல் தரப்பட்டுள்ளன.

3.3.8.8 ஆதனம், பொறி, உபகரணங்கள் மற்றும் கட்டிலனாகாத சொத்துக்களின் பயன்மிக்க ஆயுள்காலம்

குழுமமானது, ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் எஞ்சிய பெறுமதிகள், பயன்மிக்க ஆயுள்காலம் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் தேய்மான முறை என்பனவற்றை மீளாய்வு செய்கிறது. முகாமைத்துவத்தின் தீர்ப்பு இப்பெறுமானங்கள், வீதங்களின் முறைகள் என்பனவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதனால் அவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டனவாகவுள்ளன.

ஒவ்வொரு சொத்து வகைக்கும் பயன்படுத்தப்பட்ட தேய்மான முறைகள் மற்றும் வீதங்களின் விபரங்கள் குறிப்பு 33இல் தரப்பட்டுள்ளன.

3.3.8.9 முதலீட்டு அதனங்களின் வகைப்படுத்தல்

முதலீட்டு ஆதனமாக இருப்பதற்கான தகுதியைக் கொண்டுள்ளனவா என தீர்மானிப்பதற்கு முகாமை தேவைப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு ஆதனமானது, வாடகை வருமானங்களை உழைப்பதற்காக அல்லது மூலதன இலாபத்திற்காக அல்லது இரண்டுக்குமாக வைத்திருக்கப்படுவதோடு சுதந்திரமாகவும் பாரிய அளவிலும் காசுப்பாய்ச்சல்களை உருவாக்குகின்ற தொகுதியால் வைத்திருக்கப்படும் ஏனைய சொத்துக்கள் முதலீட்டு ஆதனங்கள் ஆகக் கருதப்படுகின்றன. வேறுவகையில் கூறின், செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும் ஆதனங்கள் அல்லது சேவை வழங்குதல் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படும் சொத்துக்கள், நிர்வாகத் தேவைகளுக்காக வைத்திருக்கப்படுவதுடன் நேரடியாக காசுப்பாய்ச்சல்களை தனியே உருவாக்காத சொத்துக்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

3.3.8.10 முதலீட்டாளர்களின் மீதான கட்டுப்பாட்டின் மீதான தீர்மானம்

முகாமைத்துவம் தீர்மானங்களின் மேற்கொண்ட அடிப்படையில் கூற்று 30 மற்றும் 31 குறிப்பிட்ட வகையில் வங்கி தன்னுடைய முதலீடுகளின் மீது கட்டுப்பாட்டை பேணுகின்றது.

3.3.8.11 வரி விதிப்பு

குழுமமானது, வருமானவரி, நிதிச் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி, நிதிச் சேவைகள் மீதான தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி மற்றும் ஏற்புடைய ஏனைய வரிகளுக்கு உட்பட்டதாகும்.

இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் வேளையில் ஏற்புடையதான வரிச் சட்டங்களின் பொருள்கோடல் தொடர்பில் காணப்படும் நிச்சயமற்றதன்மை காரணமாக தற்போதய, பிற்போடப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்கான மொத்த ஏற்பாட்டினை வரையறுக்கும் பொருட்டு மதிப்பீடொன்று தேவைப்படுத்தப்படுகின்றது. ஏற்புடையதான வரி வீதங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் ஏனைய தகவல்கள், 409, 17 மற்றும் 36ஆம் குறிப்புக்களின் கீழ் தரப்பட்டுள்ளன.

குழுமமானது மாற்றல் விலையிடல் பிரமாணங்களுக்கு உட்பட்டுள்ளதுடன் மாற்றல் விலையிடல் பிரமாணங்களின் தாக்கத்தினை வரையறுக்கும் பொருட்டு முகாமைத்துவ மதிப்பீட்டினைப் பயன்படுத்துதல் அவசியப்படுத்தப்படுகின்றது. மாற்றல் விலையிடல் நெறிமுறைகள் உட்பட ஏனைய வரிகள் மற்றும் வருமான வரிக்கு குழுமம் கட்டுப்படுகின்றது. தொடர்புடைய மாற்றல் விலையிடல் நெறிமுறைகள் நிச்சயமற்ற தன்மைகளைக் கொண்டுள்ளது. எனவே, இந்நிச்சயமற்ற தன்மைகளின் தாக்கம் தொடர்பில் முகாமைத்துவத்தின் தீர்மானம் அவசியமாகின்றது. இதன் பிரகாரம் கடும் தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகள் மாற்றல் விலையிடல் நெறிமுறைகளைப் பிரயோகிப்பதில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது, கூட்டு நிறுவனங்களைக் கண்டறிதல், பொருத்தமான விலையிடல் பொறிமுறைகளைத் தெரிவு செய்தல் மட்டுமன்றி, வேறு பல அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது. தற்போதைய வரி அறவீடு அத்தகைய தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டது. முகாமைத்துவ வியாக்கியானம் மற்றும் மாற்றல் விலையிடல் நெறிமுறைகளைப் பிரயோகிப்பதன் விளைவாக மதிப்பிடப்பட்ட வருமான வரிக்கும் உண்மையில் செலுத்தப்பட்ட வருமான வரிக்கும் இடையில் வேறுபாடுகள் எழக்கூடும்.

4. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்

வேறு விதமாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி வங்கியினாலும், குழுமத்தினாலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் பிரயோகிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே உள்ளடக்கப் பட்டுள்ளதோடு, குழுமத்தினதும், வங்கியினதும் நிதிக் கூற்றுக்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ள சகல காலப்பகுதிகளுக்கும் நிலைமாற்றமின்றிப் பிரயோகிக்கப் பட்டவையாகும். ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள் குறித்த மேலும் விஸ்தாரமான விபரிப்பு இயையுள்ள இடங்களில் முறையே குறிப்புகளில் தரப்பட்டுள்ளன.

4.1 2018 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து பயன்படுத்தப்படும் கணக்கீட்டுத் தரநியமங்களுக்கான புதிய திருத்தங்கள

குழுமம் இந்த நிதிக்கூற்றுக்களில் SLFRS 9 – "நிதிச் சாதனங்கள்" SLFRS 7 – "(திருத்தப்பட்ட) நிதிச் சாதனங்கள் வெளிப்படுத்தல்" மற்றும் SLFRS 15- "வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து கிடைக்கும் வருவாய்" என்பவற்றைப் பிரயோகித்துள்ளது. இவை முதல் தடவையாக 2018 யூலை 01 ஆந் திகதி அல்லது அதற்குப்பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதிக்கு பயனுறுதியுள்ளவையாகும். குழுமம் வழங்கப்பட்டதும், ஆயினும் பயனுறுதியற்றதுமான வேறு ஏதாவது தரநியமத்தையோ, வியாக்கியானத்தையோ அல்லது திருத்தத்தையோ மேற்கொள்ளவில்லை.

4.1.1 SLFR 9 – "நிதிச் சாதனங்கள்"

2014 டிசம்பரில் வழங்கப்பட்ட SLFRS 9 LKAS 39 க்குப் பதிலீடாக அமைந்ததோடு, அது 2018 ஜனவரி 01 ஆம் திகதி அல்லது அதற்குப்பின்னர் ஆரம்பித்த வருடாந்த அறிக்கையிடல் காலப் பகுதிகளுக்குப் பிரயோகமானதாகும். SLFRS 9 நிதிச் சாதனங்களுக்கும் அத்தகைய நிதிச் சாதனங்கள் குறித்த சீர்குலைவுக் கணிப்பீட்டினதும் வகையினப்படுத்தல் மற்றும் அளவீட்டுக்கான கணிசமான மாற்றங்களைக் கொண்டுவந்தது. இந்த மாற்றங்கள் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள் 4.1.1.1 மற்றும் 4.1.1.2 இல் கலந்துரையாடப்படுகின்றன.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

4.1.1.1 வகையினப்படுத்தல் மற்றும் அளவீட்டுக்கான மாற்றங்கள்

அவற்றின் வகையினப்படுத்தல் மற்றும் அளவீட்டு வகைப்பிரிவைத் தீர்மானிப்பதற்கு SLFRS 9 பங்கு மூலதனச் சாதனங்கள் மற்றும் வழிவரு விடயங்கள் தவிர்ந்தவகையில் சகல நிதிக் கூற்றுக்களும் தனியதார்த்த அமைப்பின் சொத்துக்கள் முகாமைத்துவத்துக்கான அதன் வியாபாரத்தொழில் மாதிரி மற்றும் சாதனத்தின் காசுப்பிரவாகப் பண்புகள் என்பவற்றின் அடிப்படையில் கணிப்பீடுசெய்யப்பட வேண்டுமென்று கோரிநிற்கின்றது.

LKAS 39 இல் குறித்துரைக்கப்பட்டவாறு, நிதிச் சொத்துக்களின் வகையினப்படுத்தல் மற்றும் அளவீட்டு வகைப்பிரிவுகள் (இலாபம் அல்லது நட்டத்தின்மூலம் ஏற்படும் நியாயமான பெறுமதி (FVTPL), விற்பனைக்குக் கிடைக்கக்கூடியவை (AFS), முதிர்ச்சிவரை பிடித்து வைக்கப்படுபவை (HTM) கடன் மற்றும் வருமானத் தொகைகள் - கடன் குறைத்தல் ஆகுசெலவு) என்பவை பின்வருவனவற்றால் பதிலீடு செய்யப்பட்டுள்ளன.

- கடன்குறைப்பு ஆகுசெலவில் நிதிச் சொத்துக்கள்
- ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தினுடாகக் கிட்டும் நியாயமான பெறுமதியில் அளவீடு செய்யப்படும் நிதிச்சொத்துக்கள் (FVTOCI)
- இலாபம் அல்லது நட்டத்தினுடாக ஏற்படும் நியாயமான பெறுமதியில் அளவீடுசெய்யப்படும் நிதிச்சொத்துக்கள் (FVTPL)

SLFRS 9 நிதிப்பொறுப்புகளின் வகையினப்படுத்தலுக்காக LKAS 39 இலுள்ள தற்போதைய நிபந்தனைத் தேவைகளைப் பெருமளவுக்குத் தக்கவைத்துக்கொண்டுள்ளது. எவ்வாறாயினும், LKAS 39 இன்கீழ், நியாயமான பெறுமதி விருப்புத் தெரிவின்கீழ் குறிப்பிடப்பட்ட பொறுப்புகளின் சகல நியாயமான பெறுமதி மாற்றங்களும் இலாபத்தில் அல்லது நட்டத்தில் அங்கீகாரம் பெற்றவையாகும்.

SLFRS 9 இன்கீழ், நியாயமான பெறுமதி மாற்றங்கள் பொதுவாகப் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகின்றன:

- பொறுப்பின் நாணயக்கடனில் இடர்வரவில் மாற்றங்கள் காரணமான நியாயமான பெறுமதியிலான மாற்றத்தின் அளவு ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தில் (OCI) காண்பிக்கப்படுகின்றது.
- அத்தோடு, நியாயமான பெறுமதியில் மாற்றத்தின் எஞ்சிய தொகை இலாபத்தில் அல்லது நட்டத்தில் காண்பிக்கப்படுகின்றது.

குறிப்பு: 4.5.2.2. வங்கி SLFRS 9 இன்கீழ் எவ்வாறு நிதிப் பொறுப்புகளை வகுப்பினப்படுத்துகின்றது என்பது குறித்த ஒரு விளக்கத்தை வழங்குகின்றது.

SLFRS 9 இன்கீழ் ஓர் அனுசரணை நிதிச் சொத்தில் பொதிந்துள்ள வழிவரு விடயங்கள் மேலும் தனிவேறான வழிவரு விடயங்களாகக் கணிக்கப்படுவதில்லை. அதற்குப்பதிலாக, குறிப்புகள் 4.5.5 மற்றும் 4.5.6 இல் விளக்கமளிக்கப்பட்டிருப்பது போன்று, இத்தகைய நிதிச் சாதனங்கள் வியாபாரத்தொழில் மாதிரியினதும், மற்றும் அவற்றின் ஒப்பந்த நியதிகளினடிப்படையிலும் வகுப்பினப்படுத்தப்படுகின்றன.

நிதிப்பொறுப்புகளிலும், நிதிசாரா அனுசரணை ஒப்பந்தங்களிலும் பொதிந்துள்ள வழிவரு விடயங்களுக்கான கணக்கீட்டுக் கையாளுகை மாற்றமுறவில்லை. குழுமத்தில் பொதிந்துள்ள வழிவரு விடயங்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள், குறிப்புகள் 25 மற்றும் 40 இல் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

நிதிச் சொத்துக்களின் வகுப்பினப்படுத்தலும், அளவீடும் கீழே தரப்பட்டுள்ள நிகழ்வுண்மைகளினடிப்படையிலும், சூழ்நிலைகளினடிப் படையிலும் மேற்கொள்ளப் படுகின்றன.

- ஒரு நிதிச்சொத்து காணப்படும் வியாபாரத்தொழில் மாதிரியைத் தீர்மானித்தல்
- FVTPL இல் அளவீடு செய்யப்பட்டவாறான சில நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் என்பவற்றின் முன்னைய பெயர்க்குறிப்பின் ஆக்கமும், அழித்தலும்
- FVTOIC இல் உள்ளவாறு வர்த்தகத்துக்கென வைத்திருக்கப்படாத சில பங்கு மூலதனச் சாதனங்களிலான முதலீடு
- FVTPL இல் உள்ளபடி பெயர்க்குறிப்புச் செய்யப்பட்ட நிதிப் பொறுப்புகள் விடயத்தில் OCI இல் நிதிப் பொறுப்புக்களின் நாணயக்கடன் இடர்வரவில் மாற்றங்களினால் ஏற்படும் தாக்கங்களைக் காண்பிப்பது இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஒரு கணக்கீட்டுப் பொருத்தமின்மையை உருவாக்குமா அல்லது அதிகரிக்குமா என்பதைத் தீர்மானித்தல்

குழுமத்தின் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் வகுப்பினப்படுத்தல் குறிப்புகள் 4.5.2.1 மற்றும் 4.5.2.2 இல் வழங்கப்பட்டுள்ளது. 2018 ஜனவரி 01 ஆந் திகதி அன்றுள்ளபடி SLFRS 9 ஐப் பிரயோகிப்பதன் அளவுசார் தாக்கம் குறிப்பு 62 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

4.1.1.2 சீர்குலைவுக் கணிப்பீட்டிலான மாற்றங்கள்

LKAS 39 இன் கீழான ஏற்பட்ட நட்ட அணுகுமுறைக்குப் பதிலாக, முன்னோக்கும் எதிர்பார்க்கும் நாணயக்கடன் இழப்பு (ECL) அணுகுமுறையைப் பயன்படுத்துவதனூடாக SLFRS 9 ஐ ஏற்றுச்செயற்படுவது கடன் சீர்குலைவு விதிப்பனவுக்கான குழுமத்தின் கணக்கீட்டை அடிப்படையான முறையில் மாற்றியமைத்துள்ளது. SLFRS FVTPL இல் வைத்திருக்கப்படாத சகல கடன்களுக்கும் மற்றும் ஏனைய படுகடன் நிதிச் சொத்துகளுக்கும், பங்கு மூலதன முதலீடுகளல்லாத கடன் கடப்பாடுகளுக்கும் மற்றும் நிதி உத்தரவாத ஒப்பந்தங்களுக்கும் குழுமம் ஓர் ECLs ஏற்பாட்டைப் பதிவு செய்யவேண்டுமென்று SLFRS 9 கோரி நிற்கின்றது. SLFRS 9 இன் கீழ் நாணயக்கடன் சீர்குலைவு விதிப்பனவுகள் LKAS 39 இன்கீழ் இருப்பதைவிட நேரகாலத்துடனேயே அங்கீகரிக்கப்படுகின்றன.

ஆரம்ப காலத்திலிருந்தே நாணயக்கடன் இடர்வரவில் கணிசமான அதிகரிப்பு காணப்படாதவரையில், ECLs ஏற்பாடு அடுத்த பன்னிரண்டு மாதங்களில் ஏற்படக்கூடிய தவணை தவறுதல் சாத்தியங்களுடனான (PD) இணைவுற்ற ECLs களின்

அடிப்படையில் அமைவதாகும். ஆரம்பகால இனங்காணலிலிருந்து, நாணயக்கடன் இடர்வரவு கணிசமான அளவு அதிகரித்துள்ள நிதிச்சொத்துகளுக்கும், ஆரம்பகால இனங்காணலுக்குப் பின்னராகச் சீர்குலைவுற்ற நாணயக்கடன் சொத்துகளுக்கும் வாழ்நாள் ECLs ஏற்பாடு வழங்கப்படுகின்றது. நிதிச்சொத்து கொள்வனவு செய்யப்பட்ட அல்லது ஏற்பட்ட நாணயக்கடன் சீர்குலைவு (POCI) சம்பந்தமான வரைவிலக்கணத்தின் கீழ் வருவதாயின், ஏற்பாடு சொத்தின் வாழ்நாள் காலப்பகுதியில் ECLs களிலான மாற்றத்தின் அடிப்படையில் அமைவதாகும்.

SLFRS 9 இன் பூர்வாங்கப் பிரயோகத் திகதியில் ஒரு படுகடன் பிணைப்பொறுப்பு குறைவான நாணயக்கடன் இடர்வரைவைக் கொண்டிருப்பின், குழுமம் அது ஆரம்பத்தில் கருத்தில் கொள்ளப்பட்டதிலிருந்து சொத்துச் சம்பந்தமான நாணயக்கடன் இடர்வரவு கணிசமான அளவு அதிகரித்திருக்கவில்லை என்றே ஊகித்திருக்கின்றது.

குழுமத்தின் நாணயக்கடன் சீர்குலைவு வழிமுறை சம்பந்தமான விபரங்கள் குறிப்பு 27 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

4.1.2 SLFRS 7 (திருத்தப்பட்டது) – நிதிச்சாதனங்கள்: வெளிப்படுத்தல்கள்

SLFRS 9 க்கும், LKAS 39 க்குமிடையிலான வேறுபாடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் குழுமம் 2018 ஜனவரி 01 ஆந் திகதியில் பயனுறும்வகையில் SLFRS 7 ஐயும், SLFRS 9 ஐயும் ஏற்றுச் செயற்படுத்தியது. குறிப்பு 62 இல் காண்பிக்கப்பட்டவாறான இடைமாற்ற வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட மாற்றங்களும், பயன்படுத்தப்பட்ட நிபந்தனைத் தேவைகளுக்கு அமைவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அனுமானங்கள் மற்றும் உள்ளீடுகள் போன்ற நுஊடு கணிப்பீடுகள் குறித்த விபரமான தரம்சார் மற்றும் அளவுசார் கணிப்பீடுகள் குறிப்பு 27 இன் தரநியமங்களின் நிபந்தனைத் தேவைகளுக்கு அமைவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வருடத்தின்போதான ECL ஏற்பாடுகளின் நகர்வுகள் குறிப்பு 27 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.

4.1.3 SLFRS 15- “வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து கிட்டும் வருவாய்”

SLFRS 15 2018 ஜனவரி 01 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னரான நிதிக் காலப்பகுதிகளுக்குப் பயனுறுதியுள்ளதாக அமைந்தது. ஒரு தனியதார்த்த அமைப்பு வாடிக்கையாளருக்கு வாக்குறுதியளித்த பொருட்கள் அல்லது சேவைகள் வழங்குவதைக் காண்பிப்பதற்கு வருவாயைக் கவனத்தில்கொள்ள வேண்டுமென்பதே SLFRS 15 இன் உள்ளமையக் கோட்பாடாகும். இந்த உள்ளமையக் கோட்பாடு கீழே வெளிப்படுத்தப்பட்டுள்ளதுபோன்று, ஒரு ஐந்துபடி மாதிரிச் சட்டகத்தில் விநியோகிக்கப்படுகின்றது.

- ஒரு வாடிக்கையாளருடன் இடம்பெறும் ஒப்பந்தத்தை / ஒப்பந்தங்களை இனங்காணுதல்
- ஒப்பந்தத்திலுள்ள செயல்நிறைவேற்ற கடப்பாடுகளை இனங்காணுதல்
- கொடுக்கல்வாங்கல் விலையைத் தீர்மானித்தல்
- ஒப்பந்தத்திலுள்ள செயல்நிறைவேற்றக் கடப்பாடுகளுக்கு கொடுக்கல்வாங்கல் விலையை ஒதுக்கியளித்தல்
- தனியதார்த்த அமைப்பு ஒரு செயல்நிறைவேற்றக் கடப்பாட்டை நிறைவேற்றும்போது வருவாயைக் கவனத்திலெடுத்தல்

இந்த வழிகாட்டலைப் பிரயோகித்தல் ஒரு வாடிக்கையாளருடனான ஒப்பந்தத்தில் காணப்படும் நிகழ்வுண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்ததாகும். இதற்கு மதிநுட்பத் தீர்ப்பு அவசியமாகும். குழுமம் 2018 ஜனவரி 01 ஆம் திகதி ஆரம்பமாகும் வருடத்துக்காக SLFRS 15ஐ ஏற்றுக்கொண்டபோது அதன் கட்டணம் மற்றும் தரகுக் கூலி வருமானத்தில் எந்தவிதமான பொருண்மைத் தாக்கமும் ஏற்படவில்லை.

4.2 திரட்டி வலுப்படுத்தலின் அடிப்படை

குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் SLFRS 10 நியதிகளான “திரட்டி வலுப்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள்” என்பதற்கிணக்கமான வங்கியினதும், அதன் உப-நிலைக் கம்பனிகளினதும் திரட்டி வலுப்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் LKAS 27 நியதிகளான “தனிவேறான நிதிக்கூற்றுக்கள்” மற்றும் இலங்கைக் கணக்கீட்டுத் தரநியமம் LKAS 28 நியதிகளான “இணைந்த நிறுவனங்கள் மற்றும் இணைந்த தொழில்முயற்சிகளிலான முதலீடுகள்” குறித்த அதன் இணைந்த நிறுவனங்களின் இலாபம் அல்லது நட்டம் மற்றும் சொத்துக்களின் வீதாசாரப் பங்கு என்பவற்றை உள்ளடக்குவதாகும்.

வங்கியின் நிதிக்கூற்றுக்கள் உள்நாட்டு வங்கித்தொழில் அலகு, கரைசார்ந்த வங்கித்தொழில் அலகு மற்றும் வங்கியின் வெளிநாட்டுச் செயற்பாடுகள் என்பனவற்றின் ஒருங்கிணைவான விடயங்களை உள்ளடக்குவனவாகும்.

உப-நிலைக் கம்பனிகள் மற்றும் இணைந்த நிறுவனங்களின் திரட்டி வலுப்படுத்துதல் சம்பந்தமான விபரமான கணக்கீட்டுக் கொள்கைகள் குறிப்புகள் 30 மற்றும் 31 இல் வழங்கப்பட்டுள்ளன.

4.2.1 வியாபாரத்தொழில் இணைவுநிலைகள்

குழுமம் SLFRS 3 - “வியாபாரத்தொழில் இணைவுநிலைகள்” என்பதிலுள்ள வரைவிலக்கணத்தைப் பிரயோகித்து, ஒரு கொடுக்கல்வாங்கல் அல்லது வேறு நிகழ்வு ஒரு வியாபாரத்தொழில் இணைவுநிலையா என்பதைத் தீர்மானிக்கின்றது. இது தேடி ஈட்டிக்கொள்ளப்படும் சொத்துக்களும் பொறுப்புகளுமே ஒரு வியாபாரத்தொழிலை ஆக்கவேண்டுமென்று கோரி நிற்கின்றது. வியாபாரத்தொழில் இணைவுநிலைகள் குறித்த கணக்கீடுகள் கொள்ளல் வழிமுறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றன. கொள்ளல் திகதியிலுள்ளபடி, கட்டுப்படுத்தாத நலனின் அளவு நியாயமான பெறுமதியில் அல்லது கொள்பவரின் இனங்காணக்கூடிய தேறிய சொத்துக்களில் கட்டுப்படுத்தாத நலன்களின் வீதாசாரப் பங்கினால் அளவீடு செய்யப்படுகின்றது.

கொள்ளல் சம்பந்தமான ஆகுசெலவுகள் கொள்பவர் ஒரு வியாபார இணைவுநிலையை ஏற்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளும் ஆகுசெலவாகும். இத்தகைய ஆகுசெலவுகள் கண்டறிபவர் கட்டணங்கனள், மதியுரை, சட்ட, கணக்கீட்டு, மதிப்பீட்டு மற்றும் ஏனைய தொழில்சார் ஆலோசனைக்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

கட்டணங்கள், உள்நிலைக் கொள்ளல் பிரிவொன்றைப் பேணுதல் உள்ளிட்ட வகையிலான பொது நிர்வாக ஆகுசெலவுகள் மற்றும் பதிவு ஆகுசெலவுகள் மற்றும் படுகடன் மற்றும் பங்கு மூலதனப் பிணைப்பொறுப்புகளை வழங்குதல் சம்பந்தமான ஆகுசெலவுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

படுகடன் மற்றும் பங்கு மூலதனப் பிணைப்பொறுப்புகளை வழங்குவதோடு தொடர்புற்றவை தவிர்ந்த கொள்ளல் சம்பந்தமான ஆகுசெலவுகள், அவை

ஏற்பட்ட மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் செலவிடப்படுகின்றன. குழுமம் கட்டுப்படுத்தாத நலன்களை அவற்றின் நியாயமான பெறுமதியிலா அல்லது கொள்ளல் திகதியில் கொள்பவரின் இனங்காணக்கூடிய தேறிய சொத்துக்களின் வீதாசாரப் பங்கினாலா அளவீடு செய்வது என்பதை கொடுக்கல்வாங்கலுக்கு கொடுக்கல்வாங்கல் என்ற அடிப்படையில் தெரிவு செய்கின்றது. படுகடன் அல்லது பங்குமூலதனப் பிணையங்கள் வழங்கல் என்பவற்றுடன் இணைவுற்றவை தவிர்ந்த குழுமத்தின் வியாபாரத்தொழில் இணைவுநிலை குறித்த கொடுக்கல்வாங்கல் ஆகுசெலவுகள் அவை ஏற்படும் தருணங்களில் செலவிடப்படுகின்றன.

4.2.2 கட்டுப்பாட்டை இழத்தல்

குழுமம் ஓர் உப-நிலைக் கம்பனியின் கட்டுப்பாட்டை இழந்துவிடும்போது, உப-நிலைக் கம்பனியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை, மற்றும் ஏதாவது இயைபுள்ள கட்டுப்படுத்தாத நலன் (NCI) மற்றும் ஏனைய பங்கு மூலதன ஆக்கக்கூறுகளைக் கவனத்தில் கொள்ளாதுவிடுகின்றது. இதன்விளைவாக ஏதாவது இலாபம் அல்லது நட்டம் இலாபத்தில் அல்லது நட்டத்தில் காண்பிக்கப்படுகின்றது. முன்னாள் உப-நிலைக்

கம்பனியில் தக்கவைக்கப்படும் ஏதாவது நலன் கட்டுப்பாடு இழக்கப்படும்போதான நியாயமான பெறுமதியில் அளவீடு செய்யப்படுகின்றது. மேலும், ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தில் (OCI) காண்பிக்கப்பட்ட வங்கியின் முன்னைய ஆக்கக்கூறுகளின் பங்கு பொருத்தமானவாறு இலாபத்துக்கு அல்லது நட்டத்துக்கு அல்லது தக்கவைக்கப்பட்டுள்ள, சம்பாத்தியங்களுக்கு மீள்வகுப்பினப் படுத்தப்படுகின்றது. கட்டுப்பாடு இழப்பின் காரணமாக ஏற்படும் ஏதாவது மிகை அல்லது குறைபாடு இலாபத்தில் அல்லது நட்டத்தில் காண்பிக்கப்படுகின்றது. குழுமம் முன்னைய உப-நிலைக் கம்பனியின் ஏதாவது நலனைத் தக்கவைத்துக்கொண்டால், அத்தகைய நலன் கட்டுப்பாடு இழக்கப்பட்ட திகதி அன்றுள்ளபடியான நியாயமான பெறுமதியில் அளவீடுசெய்யப்படுகின்றது. அதன்பின்னர் அது பங்கு மூலதனம் அளவீடு செய்யப்பட்ட முதலீடு பெறுபவராக, அல்லது தக்கவைக்கப்பட்ட செல்வாக்கு மட்டத்துக்கு ஏற்றவகையில் நிதிச்சாதனங்கள் சம்பந்தமான குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் காண்பிக்கப்படுகின்றது.

4.3 வெளிநாட்டு நாணயப் பரிமாற்றங்கள்

4.3.1 வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களும், மீதிகளும்

பூர்வாங்க கணிப்பீட்டில் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள் கொடுக்கல் வாங்கல்

தினத்தில், அந்த நிகழ்விடத்தில் நடைமுறையிலுள்ள பரிமாற்ற வீதாசாரத்தில் செயற்பாட்டின் கருமப்பாட்டு நாணயமாகிய இலங்கை ரூபாவுக்கு (LKR) மாற்றம் செய்யப்படுகின்றன அறிக்கையிடல் திகதியில் வெளிநாட்டு நாணயத்தில் வகுப்பினப்படுத்தப்படும் சொத்துக்களும், பொறுப்புகளும் மீண்டும் அத்திகதியில் அந்த இடத்தில் நிலவும் பரிமாற்ற வீதாசாரத்தில் கருமப்பாட்டு நாணயத்துக்கு மாற்றம் செய்யப்பட்டு, வர்த்தகமல்லாத செயற்பாடுகளில் எழும் சகல வேறுபாடுகளும் இலாபநட்டக் கூற்றில் "தேறிய ஏனைய செயற்பாட்டு வருமானத்தில்" காண்பிக்கப்படுகின்றன (குறிப்பு 13).

ஒரு வெளிநாட்டு நாணயத்தின் வரலாற்று ஆகுசெலவின் பிரகாரம் அளவீடு செய்யப்படும் நாணயமல்லாத சொத்துக்களும், பொறுப்புகளும் பூர்வாங்கக் கணிப்பீடு இடம்பெறும் திகதியில் நிலவும் பரிமாற்ற வீதாசாரத்தைப் பயன்படுத்தி மாற்றம் செய்யப்படுகின்றன. நியாயமான பெறுமதியில் அளவீடு செய்யப்படும் வெளிநாட்டு நாணயத்தில் வகுப்பினப்படுத்தப்படும் நாணயமல்லாத சொத்துக்களும், பொறுப்புகளும், நியாயமான பெறுமதி தீர்மானிக்கப்படும் தினத்தில் இலாபம் அல்லது நட்ட ஆக்கக்கூறு உள்ளிட்டவகையில் அந்த இடத்தில் நிலவும் பரிமாற்ற வீதாசாரத்தில் மீண்டும் மாற்றம் செய்யப்படுகின்றன. பரிமாற்ற ஆக்கக்கூறு உள்ளிட்ட வகையிலான நாணயமல்லாத விடயப்பொருள் சம்பந்தமாக இலாபம் அல்லது நட்டம் ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தில் காண்பிக்கப்படுகின்ற முன்னோக்கிய பரிமாற்ற ஒப்பந்தங்கள் அறிக்கையிடல் திகதியில் காணப்படும் முன்னோக்கிய சந்தை வீதாசாரங்களில் மதிப்பிடப்பட்டு அதன்விளைவான தேறிய எய்தப்பெற்றிராத இலாபங்கள் அல்லது நட்டங்கள், இலாபநட்டக் கூற்றினுள் காண்பிக்கப்படுகின்றன.

4.3.2 வெளிநாட்டுச் செயற்பாடுகள்

கருமப்பாட்டு நாணயம் இலங்கை ரூபாவாக இல்லாதவிடத்து. வெளிநாட்டுச் செயற்பாடுகளின் விளைவுகளும், நிதிநிலைமையும் பின்வரும் வழிகளில் இலங்கை ரூபாவாக மாற்றப்படுகின்றன வெளிநாட்டுச் செயற்பாடுகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அறிக்கையிடல் திகதியிலுள்ளபடி அந்த இடத்தில் நிலவும் பரிமாற்ற வீதாசாரத்துக்கேற்ப இலங்கை ரூபாவாக மாற்றப்படுகின்றன. வெளிநாட்டுச் செயற்பாடுகள் குறித்த வருமானம் மற்றும் செலவினங்கள் அக்காலப்பகுதிக்கான சராசரி பரிமாற்ற வீதாசாரத்துக்கேற்ப மாற்றப்படுகின்றன. வெளிநாட்டுச் செயற்பாடுகள் மதிப்பு மாற்றம் செய்யப்படும்போது இடம்பெறும் வெளிநாட்டு நாணய வேறுபாடுகள் ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தில் காண்பிக்கப்படுகின்றன.

ஒரு வெளிநாட்டுச் செயற்பாடு சம்பந்தமான கையுதிர்ப்பின்போது, மாற்று ஒதுக்கிலுள்ள இயைபுள்ள தொகை ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் அல்லது ஏனைய செயற்பாட்டுச் செலவினத்தில் கையுதிர்ப்பின்போதான இலாபம் அல்லது நட்டத்தின் ஒருபகுதியாக இலாபம் அல்லது நட்டத்தில் காண்பிக்கப்படுகின்றது

4.4 படுகடனுக்கும், பங்குமூலதனத்துக்கும் இடையிலான நிதிச் சாதனங்களின் வகுப்பினப்படுத்தல்

படுகடனுக்கும், பங்கு மூலதனத்துக்கும் இடையிலான நிதிச்சாதனங்களின் வகுப்பினப்படுத்தல் அத்தகைய சாதனங்களின் பின்வரும் பண்புகளில் தங்கிநிற்பதாகும்:

- சாதனங்களுக்கு வழங்கப்படும் பெயர் அல்லது வர்த்தகக் குறியீடு
- ஒரு நிலையான முதிர்ச்சித் திகதி இருத்தல் அல்லது இல்லாதிருத்தல்
- சாதனத்தின் வாழ்க்கைக்காலம்
- கொடுப்பனவுகளின் மூலம்
- முகாமைத்துவத்தில் பங்கெடுக்கும் உரிமைகள்
- கொடுப்பனவுகளின் வினைப்படுத்தும் உரிமைகள்
- சாதனங்களில் உள்ளடங்கும் இடர்வரவு
- காசுப் பிரவாகங்களில் எளிதில் மாறும் தன்மை
- கூட்டுத்தரவாதமாக வழங்கப்படும் பிணைப் பொறுப்புகள்

4.5 நிதிச் சொத்துக்களும், நிதிப் பொறுப்புகளும்

4.5.1 நிதிச் சாதனங்களின் அங்கீகாரமும், நிராகரிப்பும்

சகல நிதிச் சொத்துக்களும், பொறுப்புகளும் ஆரம்பத்தில் தீர்வுத் திகதியில், அதாவது, குழுமம் சாதனத்தின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பாக ஆகும் திகதியில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இது "கிரம ஒழுங்கு வழியிலான வர்த்தகங்களை" உள்ளடக்குவதாகும். கிரம ஒழுங்கு வழியிலான வர்த்தகம் என்பதன் கருத்து சந்தையில் பிரமாணப்படுத்தல் அல்லது வழக்காறு மூலம் நிச்சயிக்கப்படும் காலச்சட்டகத்தினுள் சொத்துக்கள் விநியோகத்தைக் கோரிநிற்கும் நிதிச் சொத்துக்கள் கொள்வனவு அல்லது விற்பனை என்பதாகும். கடன்படுநர்களுக்குகாசு வழங்கப்படும்போது (அல்லது செலுத்தித் தீர்க்கப்படும்போது) கடன்களும், வருமானத் தொகைகளும் உள்ளதாக அங்கீகரிக்கப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் அளவீடு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள் பூர்வாங்கமாக நியாயமான பெறுமதியில் உள்ளவையாக அங்கீகரிக்கப்படுகின்றன. ஏனைய சகல நிதிச் சொத்துக்களும் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதி, அத்துடன் நேரடியாக இடம்பெறும் கொடுக்கல்வாங்கல் ஆகுசெலவுகளுடனேயே காண்பிக்கப்படுகின்றன.

சொத்திலிருந்து கிடைக்கும் ஒப்பந்தக் காசுப் பிரவாகங்கள் முடிவடைகையில் அல்லது சொத்துக்களின் சகல இடர்வரவுகளும் வெகுமதிகளும் கணிசமான அளவுக்கு வேறொருவருக்கு உரித்துமாற்றம் செய்யப்படும் நிலையில், ஒப்பந்தக் காசுப் பிரவாகங்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமைகளை அது உரித்துமாற்றம் செய்யும்வகையில் குழுமம் ஒரு நிதிச் சொத்தைக் கவனத்திற் கொள்வதில்லை. குழுமத்தினால் உருவாக்கப்படும் அல்லது தக்கவைக்கப்படும் உரித்துமாற்றம் செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களின் ஏதாவது நலன் ஒரு தனிவேறான சொத்தாக அல்லது பொறுப்பாகவே காண்பிக்கப்படுகின்றது.

பொறுப்பின்கீழான கடப்பாடு நிறைவேற்றப்பட்டதும், அல்லது இரத்துச் செய்யப்பட்டதும் அல்லது காலாவதியாகியதும்

ஒரு நிதிப்பொறுப்பு கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. தற்போதுள்ள நிதிப்பொறுப்பின் இடத்தைக் கணிசமான வித்தியாசமான நியதிகளின்கீழ் அதே கடன்கொடுநரிடமிருந்து ஏற்படும் வேறொரு நிதிப்பொறுப்பு எடுத்துக் கொள்ளும்போது, அல்லது தற்போதுள்ள பொறுப்புகளின் நியதிகள் கணிசமான அளவுக்கு மாற்றப்படும்போது அத்தகையதொரு பரிமாற்றம் அல்லது மாற்றம் ஆரம்பத்திருந்த பொறுப்பின் நிராகரிப்பாகவும், ஒரு புதிய பொறுப்பின் அங்கீகாரமாகவுமே கையாளப்படுகின்றது.

அசல் நிதிப்பொறுப்புக்கும், செலுத்தப்பட்ட கிரயத்துக்குமிடையிலான வேறுபாடு இலாப அல்லது நட்டக்கூற்றில் காண்பிக்கப்படுகின்றது.

4.5.2 நிதிச் சொத்துக்களையும், நிதிப் பொறுப்புக்களையும் வகுப்பினப்படுத்துதல்

SLFRS 9 இன் பிரகாரம் இந்த வகுப்பினப்படுத்தல் நிதிச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்கான குழுமத்தின் வியாபாரத்தொழில் மாதிரி மற்றும் நிதிச் சொத்துக்களின் காசுப் பிரவாகங்கள் சம்பந்தமான ஒப்பந்த நியதிகளைப் பொறுத்த விடயமாகும். பின்வரும் உருவரிப் படம் வங்கி எவ்வாறு நிதிச் சொத்துக்களை வகுப்பினப்படுத்தகின்றது என்பதைக் காண்பிக்கின்றது.

4.5.2.1 ஆரம்பத்தில் நிதிச் சொத்துக்கள் பின்வரும் வகைப்பிரிவுகளுள் ஒன்றாக வகுப்பினப் படுத்தப்படுகின்றன

நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் அளவீடு செய்யப்படுதல் (குறிப்பு 4,5,7 மற்றும் 26)

- கடன்குறைப்பு ஆகுசெலவில் நிதிச் சொத்துக்கள் அளவீடு செய்யப்படுதல்

கடன்குறைப்பு ஆகுசெலவில் நிதிச் சொத்துக்கள் - கடன்கள் மற்றும் முற்பணங்கள் (குறிப்பு 27)

- கடன்குறைப்பு ஆகுசெலவில் நீதிச் சொத்துக்கள் - படுகடனும், ஏனைய சாதனங்களும் (குறிப்பு 4,5,8 மற்றும் 28)
- ஏனைய முற்றடக்க வருமானத்தினூடாக நியாயப்பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள் (குறிப்பு 4.5.9 மற்றும் 29)

4.5.2.2 ஆரம்பத்தில் நிதிப் பொறுப்புகள் பின்வரும் வகைப்பிரிவுகள் ஒன்றின் வகுப்பினப்படுத்தப் படுகின்றன

- கடன்குறைப்பு ஆகுசெலவில் நிதிப் பொறுப்புகள்
  - கடன்குறைப்பு ஆகுசெலவில் நிதிப் பொறுப்புகள்- வைப்பாளர்கள் காரணமானவை (குறிப்பு 41)
  - கடன்குறைப்பு ஆகுசெலவில் நிதிப்பொறுப்புகள்-ஏனைய கடன் பெறுதல்களும் கீழ்நிலைப்படுத்தப்பட்ட சாதனங்களும் (குறிப்பு 42 மற்றும் 48)

4.5.3 நிதிச் சாதனங்களின் பூர்வாங்க அளவீடுகள்

ஆரம்பத்தில் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் பதிவுசெய்யப்படும் நிதிச் சொத்துக்கள் தவிர்ந்தவகையில் நிதிச் சொத்துக்களும், பொறுப்புகளும் அவற்றின் நியாயமான பெறுமதி அத்துடன் கொடுக்கல்வாங்கல் ஆகுசெலவில் அளக்கப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான வகையில் அளவீடு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் சம்பந்தமான கொடுக்கல்வாங்கல் ஆகுசெலவு இலாபம் அல்லது நட்டக்கூற்றில் காண்பிக்கப்படுகின்றது.

4.5.4 "முதல் நாள் இலாபம் அல்லது நட்டம்"

ஒரே சாதனத்தில் கொடுக்கல்வாங்கல் விலை ஏனைய அவதானிக்கக்கூடிய நடைமுறைச் சந்தைக்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்



கொடுக்கல்வாங்கல்களின் நியாயமான பெறுமதியிலிருந்து வேறுபட்டால், அல்லது அவதானிக்கக்கூடிய சந்தைகளிலிருந்து மாத்திரம் மாறிகள் தரவுகளை உள்ளடக்கும். ஒரு மதிப்பீட்டு நுட்பத்தினடிப்படையில் இடம்பெற்றால், குழுமம் உடனடியாகவே கொடுக்கல்வாங்கல் விலைக்கும், நியாயமான பெறுமதிகளுக்குமிடையிலான வேறுபாட்டை (ஒரு "முதல் நாள்" இலாபம் அல்லது நட்டம்) இலாப நட்டக் கூற்றில் காண்பிக்கின்றது. அவதானிக்கப்பட முடியாத தரவுகளைப் பயன்படுத்தி, நியாயமான பெறுமதி தீர்மானிக்கப்படும் விடயங்களின் கொடுக்கல்வாங்கல் விலைக்கும் மாதிரிப் பெறுமதிகளுக்குமிடையிலான வேறுபாடு சாதனத்தின் வாழ்க்கைக்காலம் முழுவதுமான இலாப அல்லது நட்டக் கூற்றிலேயே காண்பிக்கப்படுகின்றது.

4.5.5 வியாபாரத்தொழில் மாதிரிக் கணிப்பீடு

2018 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து SLFRS 9 இன் பிரகாரம் குழுமம் தனது சகல நிதிச் சொத்துக்களையும் வியாபாரத்தொழில் மாதிரி அடிப்படையிலேயே வகுப்பினப்படுத்துவதோடு, ஒரு நிதிப்பட்டியல் மட்டத்தில் ஒரு சொத்து பிடித்து வைத்திருக்கப்படும் வியாபாரத்தொழில் மாதிரியின் குறிக்கோள் சம்பந்தமான கணிப்பீட்டைச் செய்கின்றது. அது ஒரு சாதனத்துக்கு சாதனம் என்னும் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படுவதில்லை. இதற்கான காரணம் இதுவே வியாபாரத்தொழில் முகாமைத்துவம் செய்யப்படும் வழியை மிகச் சிறந்த முறையில் பிரதிபலித்து, முகாமைத்துவத்துக்கான தகவலை வழங்குகின்றது என்பதாகும். கவனத்தில் கொள்ளப்படும் தகவல் பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றது:

- நிதிப்பட்டியலுக்கான எடுத்துரைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் குறிக்கோள்கள் அத்தோடு நடைமுறையில் அக்கொள்கைகள் செயற்படும் விதம் குறிப்பாக, முகாமைத்துவத்தின் தந்திரோபாயம் ஒப்பந்த வட்டி வருமானத்தைச் சம்பாதிப்பதில் கவனஞ்செலுத்துகின்றன. ஒரு குறிப்பிட்ட வட்டி வீதத் தோற்றப்பாட்டைப் பேணுகின்றதா, நிதிச் சொத்துக்களின் நிகழ்ச்சிக்காலத்துடன் அச்சொத்துக்களுக்கு நிதியளிக்கும் பொறுப்புக்களின் நிகழ்ச்சிக்காலத்தைப் பொருத்தியமைக்கின்றதா அல்லது சொத்துக்களின் விற்பனையூடாக காசுப் பிரவாகங்கள் தேறுதல் இடம்பெறுகின்றதா போன்ற விடயங்கள்
- நிதிப் பட்டியலின் செயல்நிறைவேற்றம் எவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டு வங்கியின் முகாமைத்துவத்துக்கு அறிக்கையிடப்படுகின்றது என்னும் விடயம்
- வியாபாரத்தொழில் மாதிரியின் செயல்நிறைவேற்றத்தைப் பாதிக்கும் இடர்வரவுகள் (மற்றும் அந்த வியாபாரத்தொழில் மாதிரியில் பிடித்து வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள்) மற்றும் அந்த இடர்வரவுகள் எவ்வாறு முகாமைத்துவம் செய்யப்படுகின்றன போன்ற விடயங்கள்
- எவ்வாறு வியாபாரத்தொழில் முகாமையாளர்களுகு ஊதியம் வழங்கப்படுகின்றது. உதாரணம்: ஊதியம் முகாமைத்துவம் செய்யப்படும் சொத்துக்களின் நியாயமான பெறுமதியின் அடிப்படையிலானதா அல்லது திரட்டப்படும் ஒப்பந்தக் காசுப் பிவாகங்களை அடிப்படையாகக் கொண்டதா என்னும் விடயம்; மற்றும்
- இதற்குமுந்திய காலப்பகுதிகளில் விற்பனைகளின் கிரம நிகழ்வுத்திறன், கனவளவு மற்றும் காலம், அத்தகைய விற்பனைகளுக்கான காரணங்கள், எதிகால விற்பனைச் செயற்பாடுகள் குறித்த அதன் எதிர்பார்ப்புகள் போன்ற விடயங்கள். எவ்வாறாயினும், விற்பனைச் செயற்பாடு குறித்த தகவல் தனியாகக் கவனத்தில்கொள்ளப் படுவதில்லை. மாறாக, அது நிதிச்சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதில்

வங்கியின் எடுத்துரைக்கப்பட்ட கொள்கைகள் எவ்வாறு ஈட்டிக்கொள்ளப்படுகின்றன மற்றும் காசுப்பிரவாகங்கள் எவ்வாறு தேறியமைகின்றன போன்றவற்றின் அனைத்துமடங்கும் கணிப்பீட்டின் ஒரு பகுதியாகவே இடம்பெறுகின்றது.

வியாபாரத்தொழில் மாதிரிக் கணிப்பீடு "மிக மோசமான விடய நிகழ்வு" அல்லது "பதற்ற விடய நிகழ்வு" காட்சிநிலைகளைக் கவனத்தில்கொள்ளாது, நியாயமான எதிர்பார்க்கப்படும் காட்சிநிலைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. பூர்வாங்க அங்கீகாரத்தின் பின்னரான காசுப் பிரவாகங்கள் வங்கியின் ஆரம்பகால எதிர்பார்ப்புகளைவிட வித்தியாசமான முறையில் தேறுமாயின் வங்கி அந்த வியாபாரத்தொழில் மாதிரியில் பிடித்து வைத்திருக்கும் எஞ்சியுள்ள நிதிச் சொத்துக்களின் வகுப்பினப்படுத்தலில் மாற்றம் செய்வதில்லை. மாறாக, முன்னோக்கிச் செல்லும் புதிதாக ஆரம்பமாகிய அல்லது புதிதாகக் கொள்முதல் செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களின் கணிப்பீட்டுடன் அத்தகைய தகவல்களைக் கூட்டிணைப்புச் செய்கின்றது.

4.5.6 ஒப்பந்த காசுப் பிரவாகப் பண்புகள் முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவு (SPPI) சோதனை நியமங்களைப் பூர்த்தி செய்கின்றனவா என்பதை உறுதிசெய்யும் கணிப்பீடு

சொத்துக்கள் வகுப்பினப்படுத்தல் செயல்முறையின் ஓர் இரண்டாவது படியாக குழுமம் அவை SPPI சோதனைக்கு இணக்கமாகவுள்ளனவா என்பதை இனங்காணும் வகையில் நிதிச் சொத்துக்களின் ஒப்பந்த நியதிகளைக் கணிப்பீடு செய்கின்றது.

இக்கணிப்பீட்டின் நோக்கங்களுக்காக, "முதல்" என்பது பூர்வாங்க இனங்காணலில் நிதிச் சொத்தின் நியாயமான பெறுமதியென வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. (உதாரணமாக – முதல் தொகை மீளச் செலுத்தப்படுமாயின் அல்லது தவணைக் கொடுப்பனவு / கழிவு கடன்குறைப்பு இடம்பெறுமாயின்).

"வட்டி" என்பது பணத்தின் காலப் பெறுமதிக்கான மற்றும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியின்போது வரவேண்டிய முதலுடன் இணைவுற்ற மற்றும் ஏனைய அடிப்படையான கடன் வழங்கல் இடர்வரவுகள் மற்றும் ஆகுசெலவுகள் அத்துடன் இலாப ஒரை சம்பந்தமான கிரயம்' என வலைரவிலக்கணப்படுத்தப்படுகின்றது.

இதற்கு நேரமாறாக, ஓர் அடிப்படையான கடன்வழங்கல் ஏற்பாட்டுடன் தொடர்பற்ற, ஒப்பந்தக் காசுப் பிரவாகங்களுக்கான இடர்வரவுகள் அல்லது திடீர் மாற்றங்கள் என்பவற்றை எதிர்நோக்குதலை அதிகுறைவாக்குவதற்கு எதிராகச் செயற்படுத்துவதற்கும் அதிகமான விடயங்களைக் கொணரும் ஒப்பந்த நியதிகள் வரவேண்டிய முதல் மற்றும் வட்டி சம்பந்தமான தனிநிலையாக முதல் மற்றும் வட்டியைச் செலுத்துவதற்கான ஒப்பந்தக் காசுப் பிரவாகங்களை ஏற்படுத்துவதில்லை. அத்தகைய விடய நிகழ்வுகளில் நிதிச் சொத்து இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் அளவீடு செய்யப்படுதல் வேண்டும்.

ஒப்பந்தக் காசுப் பிரவாகங்கள் தனிநிலையாக வரவேண்டிய முதல் தொகைமீதான முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளா என்பதைக் கணிப்பதில் குழுமம் இச்சாதனத்தில் ஒப்பந்த நியதிகளைக் கவனத்தில் கொள்ளுகின்றது.

இது நிபந்தனையை நிறைவேற்ற முடியாத அளவுக்கு ஒப்பந்தக் காசுப் பிரவாகங்கள் இடம்பெறும் காலம் அல்லது தொகையை மாற்றக்கூடிய வகையில் நிதிச்சொத்து ஓர் ஒப்பந்த நிதியைக் கொண்டுள்ளதா என்பதைக் கணிப்பீடு செய்வதையும் உள்ளடக்குகின்றது. இந்தக் கணிப்பீட்டை மேற்கொள்ளுவதில் குழுமம் பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொள்ளுகின்றது:

- காசுப் பிரவாகங்களின் காலம் மற்றும் தொகையை மாற்றக்கூடிய வகையிலான எதிர்பாரா நிகழ்வுகள்
- நேர்மையற்ற செல்வாக்கு அம்சங்கள்
- முன்கொடுப்பனவு மற்றும் விஸ்தரிப்பு நியதிகள்
- குறித்துரைப்பான சொத்துக்களிலிருந்து வரும் காசுப் பிரவாகங்களுக்கான குழுமத்தின் உரிமைக் கோரிக்கையை மட்டுப்படுத்தும் நியதிகள்
- பணத்தின் காலப்பெறுமதிக்கான கிரயத்தை மாற்றியமைக்கும் அம்சங்கள்

4.5.7 இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் அளவீடு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் கொண்டிருக்கும் விடய வகைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- வர்த்தக நோகங்களுக்காகப் பிடித்து வைத்திருக்கப்படும் விடய வகைகள்
- பூர்வாங்க அங்கீகாரத்தின்பேரில் இலாபத்தினூடாக அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிகளைப் பெயர் குறித்த குறித்துரைப்பான விடய வகைகள்
- முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்யாத, ஒப்பந்த நியதிகளைக்கொண்ட படுகடன் சாதனங்கள்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் கொண்டிருக்கும் நிதிச் சொத்துக்கள் பூர்வாங்க நிலையில் அவை ஏற்படும்போதான கொடுக்கல்வாங்கல் ஆகுசெலவுகளுடன் சேர்த்து நியாயமான பெறுமதியில் இலாப நட்டக் கூற்றில் காண்பிக்கப்படுகின்றன. அதன்பின்னராக அவை நியாயமான பெறுமதியில் அளவீடு செய்யப்பட்டு, அவை நிகழும் சந்தர்ப்பங்களில் இலாப அல்லது நட்டக்கூற்றில் காண்பிக்கப்படுகின்றன.

நிதிச் சொத்தொன்று நியாயமான பெறுமதியில் அளவீடு செய்யப்படும்போது, நேரெதிர் தரப்பினரின் நாணயக்கடன் தகைமையைப் பிரதிபலிக்கும்வகையில் ஒரு நாணயக் கடன் மதிப்பீட்டுச் சீராக்கல் உள்ளடக்கப்படுகின்றது. இது நாணயக்கடன் இடர்வரவின் மாற்றங்கள் காரணமாக ஏற்படும் நியாயமான பெறுமதியின் நகர்வைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

4.5.7.1 வர்த்தக நோக்கங்களுக்காகக் கொண்டிருக்கும் நிதிச் சாதனங்கள்

நிதிச்சாதனமொன்று, அது பிரதானமாக விற்பனைக்காக அல்லது குறுகிய தவணையில் மீள்கொள்வனவுக்காக அல்லது ஒன்றாக முகாமைத்துவம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

செய்யப்படும் நிதிச் சாதனங்களின் பட்டியலில் ஒரு பகுதியாவிருந்தால், குறுந்தவணை இலாபங்களின் சான்றுகள் இருந்தால், அல்லது அது வழிவரு தகைமை இழப்பு உத்தரவாதக் கொடுக்கல்வாங்கல் உறவுநிலையாக இல்லாதிருந்தால், அது வர்த்தகத்துக்காகப் பிடித்து வைத்திருக்கப்படுவதாக வகுப்பினப்படுத்தப்படுகின்றது.

வர்த்தக வழிவரு விடயங்களும், வர்த்தகப் பிணைப்பொறுப்புகளும், வர்த்தகத்துக்காக வைத்திருக்கப்படுவனவாக வகுப்பினப்படுத்தப்பட்டு, நிதிநிலைமைக் கூற்றில் நியாயமான பெறுமதியில் காண்பிக்கப்படுகின்றன. நியாயமான பெறுமதியிலான மாற்றங்கள் "வர்த்தகத்திலிருந்து கிடைக்கும் தேறிய இலாபங்கள்/(நட்டங்கள்)" (குறிப்பு 10) மற்றும் "இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் "நிதிச்சாதனங்களிலிருந்து கிடைக்கும் தேறிய நியாயமான பெறுமதி இலாபங்கள்/(நட்டங்கள்)" (குறிப்பு 11) என்பவற்றில் காண்பிக்கப்படுகின்றன. வர்த்தகத்துக்காகக் கொண்டிருக்கும் நிதியியல் சொத்துகளிலிருந்து கிடைக்கும் வட்டி தேறிய வட்டி வருமானத்தின்கீழ் காண்பிக்கப்படும் அதேவேளையில், (குறிப்பு 8) பங்கிலாப வருமானம் கொடுப்பனவுக்கான உரிமை நிலைநாட்டப்படுகையில் வர்த்தகத்திலிருந்து கிடைக்கும் தேறிய இலாபங்கள்/(நட்டங்கள்) என்பவற்றில் (குறிப்பு 10) பதிவு செய்யப்படுகின்றது.

4.5.7.2 இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் பெயர் குறிப்பிடப்பட்டு அளவீடு செய்யப்படும் நிதிச்சாதனங்கள்

பூர்வாங்க அங்கீகாரத்தின் பின்னர் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நிதிச்சாதனங்கள் நியாயமான பெறுமதியில் பெயர் குறிப்பிடப்பட்டு, அளவீடு செய்யப்படலாம். ஒரு நிதிச்சொத்து, அளவீட்டு அல்லது அங்கீகார நிலைமாற்றங்களை இல்லாமற் செய்தாலொழிய அல்லது கணிசமான அளவுக்குக் குறைத்தாலொழிய (அதாவது கணக்கீட்டுப் பொருத்தமின்மையை இல்லாதொழித்தல்) இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் பெயர் குறித்தலாகாது. இக்கணக்கீட்டுப் பொருத்தமின்மைகள் நிதிக் கூற்றுக்கள் அல்லது பொறுப்புகளை ஒரு வித்தியாசமான அடிப்படையில் அளவீடு செய்வதால் ஏற்படக்கூடியவையாகும்.

நிதிப் பொறுப்பொன்று ஒரு கணக்கீட்டுப் பொருத்தமின்மையை இல்லாதொழித்தால் அல்லது கணிசமான அளவுக்குக் குறைத்தால் அதை இலாபம் அல்லது நட்டத்தினூடாகக் கிட்டும் நியாயமான பெறுமதியாகப் பெயர் குறிப்பிடப்படலாம், அல்லது:

- அனுசரணை ஒப்பந்தமொன்றில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வழிவரு விடயங்கள் பொதிந்திருப்பின்; அல்லது
- நிதிச்சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் இரண்டுமே முகாமைத்துவம் செய்யப்பட்டு, அவற்றின் செயல்நிறைவேற்றம் ஆவணப்படுத்தப்பட்ட இடர்வரவு முகாமைத்துவ அல்லது முதலீட்டுப் தந்திரோபாயத்தின் பிரகாரம் ஒரு நியாயமான பெறுமதி அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டால்

ஒரு நிதிப் பொறுப்பு இலாபம் அல்லது நட்டத்தினூடாக, ஒரு நியாயமான பெறுமதியில் பெயர் குறிப்பீடு செய்யப்பட்டால், குழுமத்தின் சொந்த நாணயக்கடன் தரத்திலான மாற்றங்கள் காரணமாக நியாயமான பெறுமதியின் நகர்வுகள் அவதானிக்கக்கூடிய சந்தை வட்டி வீதங்களுக்கு மேலான நாணயக்கடன் பரவல் மாற்றங்களைத் தீர்மானிப்பதனூடாகக் கணிக்கப்படுகின்றன. இவை தனிவேறாக, ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தில் காண்பிக்கப்படுகின்றன.

4.5.7.3 முதல் மற்றும் வட்டியின் தனிநிலைக் கொடுப்பனவைக் காண்பிக்காத ஒப்பந்த நியதிகளைக்கொண்ட படுகடன் சாதனங்கள்

முதல் மற்றும் தனிநிலைக் கொடுப்பனவுச் சோதனையைப் பூர்த்தி செய்யாத நிதிப் படுகடன் சாதனங்கள் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியாக வகுப்பினப்படுத்தப்படும்.

4.5.8 கடன்குறைப்பு ஆகுசெலவு – படுகடன் சாதனங்களாக அளவீடு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள்

கடன்குறைப்பு ஆகு செலவில் அளவிடப்பட்ட படுகடன் சாதானங்களில் முதலீடுகள் அவை காணப்படுமிடத்து:-

- வரவேண்டிய முதல் தொகைமீதான தனிநிலையான முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவைக் காண்பிக்கும் குறித்துரைத்த திகதிகளிலான காசுப் பிரவாகங்களுக்கு இட்டுச்செல்லும் ஒப்பந்த நியதிகள்; மற்றும்
- ஒப்பந்த காசுப் பிரவாகங்களைத் திரட்டும் வகையில் கொண்டிருப்பதன் மூலம், குறிக்கோள் ஈட்டப்படும் வியாபாரத்தொழில் மாதிரிகளுள் வைத்திருக்கப்படுபவை

இப்படுகடன் சாதனங்கள் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதி மற்றும் நேரடியான கொடுக்கல்வாங்கல் ஆகுசெலவுகள் என்பவற்றுடன் கருத்திற்கொள்ளப்பட்டு, அதன்பின்னரான பயனுறுதிமிக்க வட்டி வீதத்தைப் பயன்படுத்தி, (EIR) கடன்குறைப்பு ஆகுசெலவில் அளவீடு செய்யப்படுகின்றது. நாணயக்கடன் சீர்குலைவு அளவீடு கீழே 4.5.11 இல் நிதிச் சொத்துக்களின் சீர்குலைவு என்பதில் விபரிக்கப்பட்டுள்ள, எதிர்பார்க்கப்படும் முப்படி நாணயக்கடன் இழப்பு மாதிரி அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

4.5.9 ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தினூடாக நியாயமான பெறுமதியில் அளவீடுசெய்யப்படும் நிதிச் சொத்துக்கள்

4.5.9.1 படுகடன் சாதனங்கள்

படுகடன் சாதனங்களிலான முதலீடுகள் பின்வரும் பண்புகளைக் கொண்ட, ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தினூடாக நியாயமான பெறுமதியில் அளவீடுசெய்யப்படுகின்றன:

- வரவேண்டிய முதல்தொகைமீதான முதல் மற்றும் வட்டியின் தனிநிலைக் கொடுப்பனவுகளைப் பிதிநிதித்துவம் செய்யும் வகையில் குறித்துரைப்பான திகதிகளில் காசுப் பிரவாகங்களை ஏற்படுத்தும் ஒப்பந்த நியதிகள்

- ஒப்பந்தக் காசுப் பிரவாகங்களைத் திரட்டுதல் மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பதனூடாகக் குறிக்கோள்களை ஈட்டிக்கொள்ளும் வியாபாரத்தொழில் மாதிரியினுள் வைத்திருக்கப்படுபவை

இந்தக் கடன் சாதனங்கள் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதி மற்றும் நேரடியான கொடுக்கல்வாங்கல் ஆகுசெலவுகளில் கருத்தில் கொள்ளப்பட்டு, அதன்பின்னர் நியாயமான பெறுமதியில் அளவீடு செய்யப்படுகின்றன. நியாயமான பெறுமதியிலான மாற்றங்களிலிருந்து இலாபங்களும் நட்டங்களும் ஒரு தனிவேறான பங்குமூலதன ஆக்கக்கூறினுள் ஈட்டப்படும் ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றன. சீர்குலைவு இழப்புகள் அல்லது பிரதிகூல விளைவுகள், வட்டி வருமானம் மற்றும் அந்நியச் செலாவணி இலாபங்களும், நட்டங்களும் இலாபத்தில் அல்லது நட்டத்தில் காண்பிக்கப்படுகின்றன. கையுதிர்ப்பின்போது முன்னர் ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தில் காண்பிக்கப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டம் ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்திலிருந்து இலாபத்துக்கு அல்லது நட்டத்துக்கு மீளவகுப்பினப்படுத்தப்படுகின்றது.

நாணயக்கடன் சீர்குலைவு அளவீடு கடன்குறைப்பு ஆகுசெலவில் நிதிச்சொத்துக்களுக்கு பிரயோகிக்கப்படும் முப்படி எதிர்பார்த்த நாணயக்கடன் இழப்பு மாதிரியை அடிப்படையாகக் கொண்டதாகும். எதர்பார்க்கப்படும் நாணயக்கடன் இழப்பு மாதிரி கீழே குறிப்பு 4.5.11 இல் நிதிச்சொத்துக்களின் சீர்குலைவு என்பதன்கீழ் விபரிக்கப்பட்டுள்ளது.

4.5.9.2 பங்குமூலதனச் சாதனங்கள்

வர்த்தகத்துக்குக் கொண்டிராத அல்லது SLFRS 3- "வியாபாரத்தொழில் இணைவு" பிரயோகமாகும் வியாபாரத்தொழில் இணைவு குறித்து குழுமத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் எதிர்பாரா நிகழ்வு ஏற்பாடு சம்பந்தமான அளவீடுகள், முகாமைத்துவத்தினால் அழிக்கமுடியாத தெரிவு ஒன்று மேற்கொள்ளப்பட்ட ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தினூடாக நியாயமான பெறுமதியில் மேற்கொள்ளப்படுகின்றன. முகாமைத்துவம் ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தினூடாக நியாயமான பெறுமதியை ஏற்றுக்கொள்ளும் அழிக்கமுடியாத தெரிவைச் செய்யாத நிதிப் பட்டியல் விடயத்தில், தவறுகைக்கான நடவடிக்கையாக இத்தகைய முதலீடுகள் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுதியில் அளவீடுசெய்யப்படுதல் வேண்டும்.

அங்கீகாரம் இல்லாதவிடத்து, ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தில் காண்பிக்கப்படும் திரண்ட இலாபம் அல்லது நட்டம் இலாபத்துக்கு அல்லது நட்டத்துக்கு கொண்டு செல்லப்படுவதில்லை. எவ்வாறாயினும், பூரணமான அங்கீகாரமின்மையாகக் கருதப்படும் திரண்ட இலாபம் அல்லது நட்டம் ஏனைய அனைத்துமடங்கும் வருமான ஒதுக்கிலிருந்து, பங்கு மூலதனத்தினுள் தக்கவைக்கப்பட்டுச் சம்பாத்தியங்களுக்குக் கொண்டு செல்லப்படும். இத்தகைய முதலீடுகள்மீதான பங்கு இலாபங்கள் இலாபம் அல்லது நட்டத்தில் "தேறிய ஏனைய செயற்பாட்டு வருமானத்தில்" காண்பிக்கப்படும் (குறிப்பு 13).

4.5.10 நிதிச் சொத்துக்களை மீள்வகுப்பினப்படுத்தல்

குழுமம் நிதிச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் வகையில் தனது வியாபாரத்தொழில் மாதிரியை மாற்றினால் மாத்திரமே தனது நிதிச் சொத்துக்களை மீள்வகுப்பினப்படுத்துகின்றது. குழுமம் ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தினூடாக கடன்குறைப்பு ஆகுசெலவு நியாயமான பெறுமதியில் அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களை அல்லது இலாபம் அல்லது நட்டத்தினூடாக அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களை மீள்வகுப்பினப்படுத்தினால், குழுமம் மீள்வகுப்பினப்படுத்தல் திகதியிலிருந்து அதை எதிர்காலத்தில் பிரயோகிக்கும். குழுமம் அதற்குமுன்னர் கவனத்திற்கொள்ளப்பட்ட ஏதாவது இலாபங்கள், நட்டங்கள் (சீர்குலைவு நட்டங்கள் உள்ளிட்டவகையில்) அல்லது வட்டியை மீண்டும் எடுத்துரைப்பதில்லை.

4.5.11 நிதிச் சொத்துக்களின் சீர்குலைவு

குழுமம் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் அளவிடப்படாத பின்வரும் வகைப்பிரிவுகளைச் சேர்ந்த நிதிச்சொத்துக்கள் சம்பந்தமாக எதிர்பார்க்கும் நாணயக்கடன் இழப்பை அளவீடுசெய்வதற்கு ஒரு முப்படி அணுகுமுறையைப் பிரயோகிக்கின்றது.

- ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தினூடாக நியாயமான பெறுமதியில் கடன்குறைப்பு ஆகுசெலவில் அளவீடுசெய்யப்படும் நாணயக்கடன் சாதனங்கள்
- கடன் அர்ப்பணக் கடப்பாடுகள்; மற்றும்
- நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள் பங்கு மூலதன முதலீடுகளில் ECL கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

குழுமம் நிதிச்சாதனத்தின் எஞ்சியிருக்கும் காலப்பகுதியில் தவணை தவறுதல் இடர்வரவிலான மாற்றங்களைக் கருத்திற்கொண்டு, நிதிச்சாதனத்தின் நாணயக்கடன் இடர்வரவு. பூர்வாங்க அங்கீகாரத்தின் பின்னர் கணிசமான அளவு அதிகரித்துள்ளதா என்பது குறித்து ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவிலும் ஒரு கணிப்பீட்டைச் செய்கின்றது. இச்செயல்முறையின் அடிப்படையில் பூர்வாங்க அங்கீகாரத்திலிருந்து நாணயக்கடன் இடர்வரவு மாற்றத்தினடிப்படையில் நிதிச் சொத்துக்கள் பின்வரும் மூன்று படிநிலைகளினூடாகச் செல்லுகின்றன.

4.5.11.1 படிநிலை 1:12 மாதங்கள் ECL

பூர்வாங்க அங்கீகாரத்திலிருந்து நாணயக்கடன் இடர்வரவில் கணிசமான அதிகரிப்பொன்று காணப்பட்ட விடயங்களிலும், உருவாக்கக் காலத்தில் நாணயக்கடன் சீர்குலைவு இல்லாத விடயங்களிலும் அடுத்த 12 மாதங்களுள் இடம்பெறக்கூடிய தவணை தவறுதல் நிகழ்வுகளோடு தொடர்புற்ற ECL வாழ்நாள் பாகம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

கீழே தரப்படும் அட்டவணை மீள்வகுப்பினப்படுத்தலின்போது இலாபங்கள் மற்றும் நட்டங்கள் கவனத்தில் கொள்ளப்படுவதைச் சாராம்சப்படுத்துகின்றது.

ஆரம்பகால அளவீடு	மீள்வகுப்பினப்படுத்தலுக்குப் பின்னரான அளவீடு	மீள்வகுப்பினப்படுத்தலுக்குப் பின்னரான கையாளுகை
இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதி	கடன்குறைப்பு ஆகுசெலவு	மீள்வகுப்பினப்படுத்தல் திகதியிலான நியாயமான பெறுமதி அதன் புதிய, தற்போதைய, மொத்தத் தொகையாக மாறுகின்றது. அந்தத் தொகையின் அடிப்படையிலேயே பயனுறுதியுள்ள வட்டிவீதம் கணிப்பிடப்படுகின்றது. சீர்குலைவு நிபந்தனைத் தேவைகளைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக மீள்வகுப்பினப்படுத்தல் திகதியே பூர்வாங்கப் பிரயோகத் திகதியாகக் கவனத்தில் கொள்ளப்படுகின்றது.
இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதி	ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தினூடாக நியாயாமான பெறுமதி	மீள்வகுப்பினப்படுத்தல் திகதியிலான நிதிச் சொத்தின் நியாயமான பெறுமதி அதன் புதிய, தற்போதைய தொகையாக மாறுவதுடன், பயனுறுதியுள்ள வட்டிவீதம் மீள்வகுப்பினப்படுத்தல் திகதியில் சொத்தின் நியாயமான பெறுமதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது.
ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தினூடாக நியாயமான பெறுமதி	கடன்குறைப்பு ஆகுசெலவு	ஏனைய பரிபூரண வருமானத்தில் முன்னர் காண்பிக்கப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டம் பங்கு மூலதனத்திலிருந்து அகற்றப்பட்டு, நிதிச்சொத்தின் மீள்வகுப்பினப்படுத்தல் திகதியில் நியாயமான பெறுமதிக்கெதிராகச் சீராக்கல் செய்யப்படுகின்றது. பயனுறுதியுள்ள வட்டிவீதமும் எதிர்பார்க்கப்படும் நாணக்கடன் அளவீடுகளும் மீள்வகுப்பினப்படுத்துதலின் விளைவாகச் சீராக்கல் செய்யப்படுவதில்லை.
ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தினூடாக நியாயமான	இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதி	மீள்வகுப்பினப்படுத்தல் திகதியிலான நிதிச்சொத்தின் நியாயமான பெறுமதி அதன் புதிய, தற்போதைய தொகையாக மாறுகின்றது. இதற்கு முன்னராக, ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தில் கருத்திற்கொள்ளப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டம் பங்கு மூலதனத்திலிருந்து மீள்வகுப்பினப்படுத்தல் திகதியில் ஒரு மீள்வகுப்பினப்படுத்தல் சீராக்கலாக இலாபம் அல்லது நட்டத்துக்கு மீள்வகுப்பினப்படுத்தப்படுகின்றது.
கடன்குறைப்பு ஆகுசெலவு	இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதி	நிதிச் சொத்தின் இதற்கு முன்னரான கடன்குறைப்பு ஆகுசெலவுக்கும், மீள்வகுப்பினப்படுத்தல் திகதியில் நியாயமான பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு காரணமாக எழும் ஏதாவது இலாபம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டத்தில் காண்பிக்கப்படுகின்றது.
கடன்குறைப்பு ஆகுசெலவு	ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தினூடாக நியாயாமான பெறுமதி	நிதிச் சொத்தின் இதற்கு முன்னரான கடன்குறைப்பு ஆகுசெலவுக்கும், மீள்வகுப்பினப்படுத்தல் திகதியில் நியாயமான பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு காரணமாக எழும் ஏதாவது இலாபம் அல்லது நட்டம் ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தில் காண்பிக்கப்படுகின்றது. மீள்வகுப்பினப்படுத்தலின் விளைவாக பயனுறுதியுள்ள வட்டிவீதமும், எதிர்பார்க்கப்படும் நாணயக்கடன் இழப்புகள் அளவீடும் சீராக்கப்படுவதில்லை.

கவனத்தில் கொள்ளப்படுகின்றது. வங்கி கணிசமான அளவு நாணயக்கடன் இடர்வரவு இல்லாத வாடிக்கையாளர்களிடமிருந்து 12 மாதங்களுக்கான ECL ஐத் தீர்மானிக்கின்றது.

4.5.11.2 படிநிலை 2: வாழ்நாள் ECL

பூர்வாங்க அங்கீகாரத்திலிருந்து நாணயக்கடன் இடர்வரவில் ஒரு கணிசமான அளவு அதிகரிப்பு ஏற்பட்டதும், ஆயினும் நாணயக்கடன் சீர்குலைவு இடம்பெறாததுமான விடயங்களில் ஒரு வாழ்நாள் ECL (அதாவது நிதிச்சொத்தின் எஞ்சியுள்ள காலப்பகுதியைப் பிரதிபலிப்பது) கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

4.5.11.3 படிநிலை 3: வாழ்நாள் ECL

இடர்காப்பின்மை நிலைகள் சொத்தின் முன்மதிப்பீடு செய்யப்பட்ட, எதிர்காலக் காசுப் பிரவாகங்களின்மீதான தீங்கான பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகளின்போதான நாணயக்கடன் சீர்குலைவாகக் கணிப்பீடு செய்யப்படுகின்றது. நாணயக்கடன் சீர்குலைவாக மாறும் இடர்காப்பின்மை நிலைகளுக்கு ஒரு வாழ்நாள் நுஊடு அங்கீகரிக்கப்படுவதோடு, வட்டி வருமானம் தற்போதைய மொத்த தொகைக்குப்பதிலாக கடன்குறைப்பு ஆகுசெலவுக்கு (ஏற்பாட்டின் தேறிய பெறுமதி) பயனுறுதிமிக்க வட்டிவீதத்தைப் பிரயோகிப்பதன்மூலம் கணிப்பிடப்படுகின்றது.

4.5.11.4 ECL கணிப்பீடு

குழுமம் பயனுறுதியுள்ள வட்டிவீதத்துக்கு (ETR) அண்ணளவு கழிவுநிலையில் எதிர்பார்க்கப்படும் காசுக் குறைபாடுகளை அளவீடு செய்வதற்கு ஒரு மூன்று சாத்தியவள நிறைசேர்த்த செயல் பரப்புகளினடிப்படையில் ECL ஐக் கணிப்பீடு செய்கின்றது. ஒரு காசுக் குறைபாடு என்பது ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒரு தனியதார்த்த அமைப்புக்கு வரவேண்டிய காசுப்பிரவாகங்களுக்கும், தனியதார்த்த அமைப்பு பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும்

காசுப்பிரவாகங்களுக்குமிடையிலான வேறுபாடாகும்.

குழுமத்தின் ECL கணிப்பீடுகளின் பொறிமுறை கீழே உருவரைக்குறிப்பாக வழங்கப்பட்டுள்ளன. இதன் முக்கிய மூலகங்கள் பின்வருமாறு:

- தவணை தவறுதல் சாத்தியப்பாடு (PD) PD என்பது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியின்போது தவணை தவறுதல் குறித்த சாத்தியவளத்தின் முன்மதிப்பீடாகும். கடன் இதற்குமுன்னர் கருத்திற்கொள்ளப் படாதுவிடின், அது இன்னமும் நிதிப்பட்டியலில் இருப்பின், ஒரு தவணை தவறுதல் கணிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியின்போது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இடம்பெறக்கூடும். PD க்கள சம்பந்தமான கருப்பொருள் குறிப்பு 27 இல் மேலும் விளக்கப்பட்டுள்ளது.

- தவணை தவறும்போது நிகழும் இடர்பாதுகாப்பின்மை (EAD)

  EAD என்பது ஒப்பந்தத்தினால் அட்டவணைப் படுத்தப்பட்டிருந்தாலும்சரி, வேறு விதத்திலும்சரி முதல் மற்றும் வட்டியின் மீள்செலுத்துகைகள் உள்ளிட்ட விதத்தில் அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான எதிர்பார்க்கப்படும் இடர் பாதுகாப்பின்மையிலான மாற்றங்களைக் கவனத்திற்கொண்டும், எதிர்பார்த்த அர்ப்பணக் கடப்பாடுகொண்ட கடன்களிலிருந்து பணம்பெறுதல் மற்றும் தவணை தவறிய கொடுப்பனவுகளுக்கான அட்டுறு வட்டி என்பவற்றைக் கவனத்திற்கொண்டும் இடம்பெறும் இடர்பாதுகாப்பின்மை குறித்த ஒரு முன்மதிப்பீடாகும். EAD குறிப்பு 27 இல் மேலும் விளக்கப்படுகின்றது.

- தவணை தவறுதலின்போது ஏற்படும் இழப்பு (LGD)

  LGD என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு தவணை தவறுதல் இடம்பெறும்போது, ஏற்படும் நட்டம் சம்பந்தமான ஒரு முன்மதிப்பீடாகும். அது வரவேண்டிய ஒப்பந்தக் காசுப் பிரவாகங்களுக்கும் ஏதாவது பிணைப்பொறுப்பின் தேறல் உள்ளிட்ட வகையில் கடன்வழங்குநர் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் தொகைகளுக்குமிடையிலான வேறுபாட்டினடிப்படையில் அமைந்ததாகும். LGD குறிப்பு 27 இல் மேலும் விளக்கப்படுகின்றது.

4.5.11.5 சீர்குலைவுக்கான படிநிலையைத் தீர்மானித்தல்

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் குழுமம் பூர்வாங்க அங்கீகாரத்திலிருந்து, இடர் பாதுகாப்பின்மை காரணமாக எழும் நாணயக்கடன் இடர்வரவில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதைக் கணிப்பீடு செய்கின்றது. இது பூர்வாங்க அங்கீகாரக் காலத்திலிருந்து அறிக்கையிடல் திகதிக்கும், பூர்வாங்க அங்கீகாரத் திகதிக்குமிடையில் எதிர்பார்க்கும் கடன்காலத்தின்போது எழக்கூடிய தவணை தவறுதல் இடர்வரவை ஒப்பிடுவதன்மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. குழுமம் இந்த நோக்கத்துக்காகத் தேவையற்ற ஆகுசெலவு அல்லது பிரயத்தனமின்றி கிடைக்கக்கூடிய, இயைபுள்ள, நியாயமான, ஆதாரங்கொண்ட தகவல்களைக் கருத்தில் கொள்ளுகின்றது. இது அளவுசார் மற்றும் தரம்சார் தகவல்களையும், முன்னோக்கிய பகுப்பாய்வுகளையும் உள்ளடக்குவதாகும்.

சொத்தின் தரம் சீர்குலைவடைகையில் இடர்பாதுகாப்பின்மை ECL படிநிலைகளூடாகச் செல்லுகின்றது. பின்னரான ஒரு காலப்பகுதியில் சொத்தின் தரம் மேம்பாடுற்றால் மற்றும் ஆரம்பத்திலிருந்து முன்னர் கணிப்பீடு செய்யப்பட்ட நாணயக்கடன் இடர்வரவில் கணிசமான அதிகரிப்பு நிலைகளில் எதிர்த்திசையிலான மாற்றங்கள் ஏற்பட்டால், வாராக்கடன்களுக்கான ஏற்பாடு வாழ்நாள் ECL என்பவற்றிலிருந்து 12 மாதங்கள் ECL என்பதாக மாற்றமுறுகின்றது. ஆரம்பத்திலிருந்து கணிசமான அளவு சீர்குலைவு இடம்பெறாத இடர்பாதுகாப்பின்மைகள் அல்லது சீர்குலைவு குழுமத்தின் முதலீட்டுத் தர அளவுகோல்களுள் இருக்கும்போது அல்லது அவை வரவேண்டிய காலங்கடந்து 30 நாட்களுக்குக் குறைவாக இருக்கையில், அவை மிகவும் குறைவான நாணயக்கடன் இடர்வரவைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகின்றன. இந்த நிதிச் சொத்துக்களுக்கான சீர்குலைவு ஏற்பாடு ஒரு 12 மாத ECL என்பதன் அடிப்படையிலேயே இடம்பெறுகின்றது.

குழுமம் ஒரு தனிப்பட்ட அல்லது கூட்டு அடிப்படையில் இடர்பாதுகாப்பின்மை சம்பந்தமான ஒரு நாணயக்கடன் இடர்வரவு கணிசமான அளவு அதிகரித்துள்ளதா என்பதைக் கணிப்பீடு செய்கின்றது. சீர்குலைவின் ஒரு கூட்டு மதிப்பீட்டுச் சீராக்கல்களுக்காக சாதனத்தின் வகை, நாணயக்கடன் இடர்வரவுத் தரப்படுத்தல்கள், பிணைப்பொறுப்பின் வகை, பூர்வாங்க அங்கீகாரத் திகதி, முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலப்பகுதி, கைத்தொழில், கடன்படுநரின் புவிசார் இடஅமைவு மற்றும் ஏனைய இயைபுள்ள காரணிகளைக் கருத்திற்கொண்டு நிதிச் சாதனங்கள் பகிரப்படும் நாணயக்கடன் இடர்வரவு குணாம்சங்களின் அடிப்படையில் குழுப்படுத்தப்படுகின்றன.

4.5.11.6 ECL அளவீடு

ECL என்பது எதிர்பார்க்கப்படும் நட்டத்தின் பக்கச்சார்பற்ற மற்றும் சாத்தியவள நிறைசேர்க்கப்பட்ட முன்மதிப்பீடுகளிலிருந்து வழிவருவதாகும். அது பின்வரும் வழிகளில் அளவீடு செய்யப்படுகின்றது:

- பயனுறுதியுள்ள வட்டி வீதத்தினால் கழிவு பெற்றுக்கொள்ளும் நிதிச் சொத்தின் எதிர்பார்க்கப்படும் வாழ்நாளில் சகல குறைபாடுகளிலும் தற்போதைய பெறுமதியாக, அறிக்கையிடும் திகதியில் நாணயக்கடன் சீர்குலைவுறாத நிதிச் சாதனங்கள். காசுக் குறைபாடென்பது ஒப்பந்தப் பிரகாரம் குழுமத்துக்கு வரவேண்டிய காசுப்பிரவாகங்களுக்கும் குழுமம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் காசுப் பிரவாகங்களுக்குமிடையிலான வேறுபாடு ஆகும்.

- அறிக்கையிடல் திகதியில் நாணயக்கடன் சீர்குலைவு

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

ஏற்பட்ட நிதிச்சொத்துக்கள் -தற்போதைய மொத்தத் தொகைக்கும், பயனுறுதியுள்ள வட்டிவீதத்தின் கழிவு அனுகூலம்கொண்ட முன்மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்காலக் காசுப் பிரவாகங்களின் தற்போதைய பெறுமதிக்குமிடையிலான வேறுபாடாக.

- பெற்றுக்கொள்ளப்படாத கடன் அர்ப்பணக் கடன்பாடுகள்: அர்ப்பணக் கடப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டால், குழுமத்துக்கு வரவேண்டிய ஒப்பந்தக் காசுப் பிரவாகங்களுக்கும், குழுமம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் காசுப் பிரவாகங்களுக்குமிடையிலான வேறுபாட்டின் தற்போதைய பெறுமதியாக.
- நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள்: வைத்திருப்பவருக்கு மீளளிப்புச் செய்வதற்கான எதிர்பார்க்கப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்து குழுமம் மீளப்பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் ஏதாவது தொகைகளைக் கழித்துக்கொள்ளும் வகையில்.

ECL இலாப அல்லது நட்டக்கூற்றில் காண்பிக்கப்படுகின்றது. ஏனைய அனைத்துமடங்கும் வருமானத்தினூடாக நியாயமான பெறுமதியில் அளவீடு செய்யப்படும் கடன் சாதனங்கள் விடயத்தில் ECL அளவீடு கடன்பொறுப்பு ஆகுசெலவிலான நிதிச் சொத்துக்களுக்குப் பிரயோகிக்கப்படும் முப்படிநிலை அணுகுமுறையினடிப்படையில் அமைவதாகும்.

4.6 நிதியல்லாத சொத்துக்களின் சீர்குலைவு

குழுமம் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் ஒரு சொத்துக்குச் சீர்குலைவு ஏற்படக்கூடிய அறிகுறியேதாவது உள்ளதாவென்று கணிப்பீடு செய்கின்றது. அறிகுறி ஏதாவது இருப்பின், அல்லது ஒரு சொத்துக்கான வருடாந்த சீர்குலைவுப் பரிசோதனை அவசியப்பட்டால் வங்கி சொத்தின் மீளப்பெறக்கூடிய தொகையை முன்மதிப்பீடு செய்கின்றது. ஒரு சொத்தின் மீளப்பெற்றுக்கொள்ளக்கூடிய தொகை என்பது சொத்தின் நியாயமான பெறுமதியிலிருந்து விற்பனைக்கான ஆகுசெலவைக் கழிப்பதால் பெறப்படுவது மற்றும் பயன்பாட்டில் அதன் பெறுமதி என்பவற்றுள் உயர்வானதாகும். ஒரு சொத்தின் தற்போதைய தொகை அதிலிருந்து பெறக்கூடிய தொகையைவிட அதிகமாக இருக்கும்போது, சொத்து சீர்குலைவுற்றதாகக் கருதப்பட்டு, அதிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய தொகைக்கு குறைத்து எழுதப்படுகின்றது. பயன்பாட்டிலுள்ள பெறுமதியைக் கணிப்பீடு செய்வதில், பணத்தின் காலப்பெறுமதி சம்பந்தமான நடைமுறைச் சந்தைக் கணிப்பீடுகளையும் சொத்துக்களுக்குக் குறித்துரைப்பான இடர்வரவுகளையும் பிரதிபலிக்கும் ஒரு வரிக்கு முந்திய கழிவு வீததைப் பயன்படுத்தி, முன்மதிப்பீடு செய்யப்படும் எதிர்காலக் காசுப் பிரவாகங்கள் அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு கழிவுநிலையில் கையாளப்படுகின்றன. நியாயமான பெறுமதியிலிருந்து விற்பனைக்கான ஆகுசெலவைக் கழித்துக் கொள்வதைத் தீர்மானிப்பதற்கு ஒரு பொருத்தமான மதிப்பீட்டு மாதிரி பயன்படுத்தப்படுகின்றது. இக்கணிப்பீடுகளை மதிப்பீட்டுப் பெருக்கங்களும், பகிரங்க வர்த்தகத்துக்கான உபநிலைக் கம்பனிகளுக்கான பங்கு விலைகளும் அல்லது ஏனைய மதிப்பான நியாயமான பெறுமதிக் காட்டிகளும் ஒப்புறுதி செய்கின்றன.

4.7 நம்பகச் சேவைகள்

குழுமம் தனது வாடிக்கையாளர்களின் சார்பில் சொத்துக்களை வைத்திருக்க உதவும் மூன்றாந்தரப்பினர்களுக்கான நம்பகச் சேவைகளை வழங்கிவருகின்றது. குழுமம் இத்தகைய சொத்துக்களின் அனுகூல உரிமையாளர்கள் அல்லவென்ற காரணத்தினாலும், அவற்றைக் கட்டுப்படுத்துவதில்லையென்ற காரணத்தினாலும் நம்பக இயலுமையின்பேரில் வைத்திருக்கப்படும் சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுவதில்லை.

4.8 ஏற்பாடுகள்

குழுமத்துக்கு நம்பிக்கையாக முன்மதிப்பீடு செய்யக்கூடிய தற்போதைய (சட்டபூர்வமான அல்லது அமைப்புவழி) கடப்பாடொன்று கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக எழுமாயின், இக்கடப்பாட்டை நிறைவேற்றுவதற்குப் பொருளாதார அனுகூலங்கள் குழுமத்திலிருந்து வெளிச்செல்வது சாத்தியமாயின், அது ஓர் ஏற்பாடாகக் கொள்ளப்படுகின்றது. அது, அறிக்கையிடல் திகதியில் கடப்பாட்டைச் சுற்றியுள்ள இடர்வரவுகள் மற்றும் நிச்சயமின்மைகளைக் கருத்திற்கொண்டு, தற்போதைய கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கு அவசியமான கிரயத்தின் மிகச்சிறப்பான முன்மதிப்பீட்டுத் தொகையெனக் கருதப்படுகின்றது. ஓர் ஏற்பாடு தற்போதைய கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கு முன்மதிப்பீடு செய்யப்பட்ட காசுப் பிரவாகங்களைப் பயன்படுத்தி அளவீடு செய்யப்படும்போது, அதன் தற்போதைய தொகை அக்காசுப் பிரவாகங்களின் தற்போதைய பெறுமதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. ஓர் ஒப்பந்தத்திலிருந்து குழுமம் எதிர்பார்க்கும் வழிவரு அனுகூலங்கள், ஒப்பந்தத்தின் கீழ் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றும் தவிர்க்கமுடியாத ஆகுசெலவைவிடக் குறைவாகவிருக்கும்போது மிகுபொறுப்புடைய ஒப்பந்தங்களுக்கான ஏற்பாடொன்று கருத்திற்கொள்ளப் படுகின்றது. இந்த ஏற்பாடு ஒப்பந்தத்தை முடிவுறுத்த எதிர்பார்க்கும் ஆகுசெலவு மற்றும் ஒப்பந்தத்தைத் தொடருவதற்கு எதிர்பார்க்கும் ஆகுசெலவு ஆகிய இரண்டில் குறைவான தொகையில் தற்போதைய பெறுமதியாக அளவீடு செய்யப்படுகின்றது.

4.9 வருமான வரிச் செலவினங்களும், ஏனைய வரிகளும்

4.9.1. வருமான வரிச் செலவினங்கள்

வருமான வரிச் செலவினங்கள் நடைமுறை மற்றும் பிற்போட்ட வரி என்பவற்றை உள்ளடக்குகின்றன. மேலதிக விபரங்கள் குறிப்பு 17 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.

4.9.2 நிதியியல் சேவைகள் மீதான பெறுமதி சேர்வரி (VAT)

வருமான வரிக்கு முன்னரான கணக்கீட்டு இலாபம் மற்றும் விபரிக்கப்பட்டவாறான வீதங்களில் கணிக்கப்பட்ட தேய்மானத்திற்காக சீராக்கம் செய்யப்பட்ட ஊழியர்களின் ஊதியம் என்பனவற்றை கணக்கிடுவதன் மூலம் பெறுமதிசேர் வரியைக் கணிப்பதற்கான அடிப்படை பெறப்படுகின்றது. திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச்சட்டத்திற்கிணங்க இவ்வாண்டுப்பகுதிக்கான குழுமத்தின் மொத்த பெறுமதிசேர்வரி 15% (2017: 15%) பெறுமதிசேர் வரிக்கு உட்பட்டதாக இருக்கும். குழுமம் பெறுமதிசேர் வரியைக் கணிப்பதற்கு சட்டத்தில் விரித்துரைக்கப்பட்ட இரண்டு முறைகளில் ஒன்றான பெறுமதியினை சேர்ப்பதனை அடிப்படையாகக் கொண்ட முறையினைப் பின்பற்றுகின்றது.

4.9.3 பங்குலாபங்கள் மீதான பிடித்துவைத்தல் வரி (WHT)

- வங்கியினால் வழங்கப்படும் பங்குலாபம் மீதான பிடித்து வைத்தல் வரி வங்கியானது அதன் ஒரே பங்குடமையாளரான அரசாங்கத்திற்கு பங்கிலாபங்களைச் செலுத்துவதனால் பிடித்து வைத்தல் வரியினை வங்கி செலுத்துவதில்லை.

- துணை நிறுவனங்களினாலும் கூட்டு நிறுவனங்களினாலும் வழங்கப்படும் பங்குலாபங்கள் மீதான பிடித்து வைத்தல் வரி துணை நிறுவனங்களினதும் கூட்டு நிறுவனங்களினதும் வரி விதிக்கத்தக்க இலாபத்திலிருந்து வழங்கப்படுகின்ற பங்கு இலாபங்கள் 2018 ஏப்ரல் 1 இற்கு பின்பு மூலத்தில் 14% கழிவினைக் கொண்டிருக்கின்றது (2018 மார்ச் 31 வரை 10%)

4.9.4 பொருளாதார சேவைகள் கட்டணம் (ESC)

2006 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க பொருளாதார சேவைகள் கட்டணம் மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கமைவாக வங்கியின் வரியிடத்தக்க விற்பனைப் புரள்வின் 0.5% பொருளாதார சேவைகள் கட்டணமாக செலுத்த வேண்டியதாகும். அத்துடன் இவை வருமான வரிக் கொடுப்பனவிலிருந்து கழிக்கத் தக்கவையாகும்.

4.9.5 பயிர் காப்பு வரி (CIL)

2013ஆம் ஆண்டு 12ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி 2013 ஏப்ரல் 1ஆம் திகதியிலிருந்து வலுப்பெறும் வகையில் பயிர்காப்பு வரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் வரிக்குப்பின் இலாபத்தின் 1% ஆக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சபைக்கு இவ்வரி செலுத்தப்படுகின்றது.

4.9.6 நிதியியல் சேவைகள் மீதான நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (NBT)

நிதிச் சேவைகள் மீதான நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி. 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி சட்டத்தினதும் அதன் திருத்தங்களுக்கும் ஏற்ப கணிப்பிடப்படுகின்றது. நிதிச் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரிக்கணிப்பீட்டிற்குப் பயன்படுத்தப்படும் சேர்க்கப்பட்ட பெறுமதியின் 2% இல் நிதிச் சேவைகள் மீதான நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி கணிப்பிடப்படுகின்றது.

4.9.7 நிதி சேவையில் கடன் மீளமுக்கும்வரி (DRL)

2018 ஆம் ஆண்டு 35ஆம் இலக்க நிதி சட்டத்தின் படி இந்த வரியானது 1ஆம் திகதி ஐப்பசி 2018 இல் இருந்து அமுல்படுத்தபடுகின்றது. நிதி சேவைக்கு பெறுமதி சேர்க்கும் வகையில் 7% அற்விடப்படுகின்றது.

5. காப்புறுதித் தொழில்

5.1 மீள் காப்புறுதி

குழுமமானது அதன் அனைத்து தொழில்களுக்குமாக தொழிலின் வழமையான காலப்பகுதியில் ஏற்படும் காப்புறுதி இடர்களுக்கு இணங்கியிருக்கிறது. மீள் காப்புறுதிச் சொத்துக்கள் மீள் காப்புறுதியாளர்களிடமிருந்து மீட்கத்தக்க தொகைகள் வெளிநின்ற கோரல் ஒதுக்குகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் மீள்காப்புறுதியாளரின் கொள்கைகளுடன் இணைந்து தீர்ப்பனவு செய்யப்பட்ட கோரலுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் மதிப்பிடப்பட்டதுடன் தொடர்பான மீள்காப்புறுதி ஒப்பந்தத்துடன் இணங்கிச் செல்வதாகவும் இருக்கிறது.

பெறுமதிக் குறைப்பிற்காக மீள்காப்புறுதிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் அல்லது அறிக்கையிடுகின்ற ஆண்டில் பெறுமதி குறைவடைவதற்கான அறிகுறிகள் தோன்றுகின்ற போதும் அடிக்கடியும் மீளாய்வு செய்யப்படுகின்றன. பெறுமதிக்குறைப்பானது, ஒப்பந்தத்தின் நியதிகளின் கீழ்வர வேண்டிய வெளிநின்ற அனைத்துத் தொகைகளையும் குழுமமானது பெறாத மீள் காப்புறுதிச் சொத்துக்களின் ஆரம்ப அங்கீகரிப்பின் பின் நிகழ்கின்ற சம்பவங்களின் பெறுபேறாக வெளிப்படையான சான்றுகள் காணப்படும் பொழுது ஏற்படுவதுடன் நிகழ்வானது மீள் காப்புறுதியாளரிடமிருந்து குழுமம் பெறவிருக்கும் தொகையின் மீதும் நம்பத்தகுந்த குழப்பம் நிறைந்த தாக்கமொன்றினை ஏற்படுத்துகிறது. பெறுமதிக் குறைப்பினால் ஏற்படும் இழப்புக்கள் இலாப நட்டக்கூற்றில் பதிவு செய்யப்படுகின்றன.

இணங்கப்பட்ட மற்றும் அனுமானிக்கப்பட்ட காப்புறுதிகள் இரண்டிற்குமான காப்புறுதிக் கட்டணங்களும் கோரல்களும் மொத்த அடிப்படையில் காட்டப்படுகின்றன. ஒப்பந்த ரீதியான உரிமைகள் இல்லாதிருக்குமிடத்து அல்லது காலாவதியாகியிருக்குமிடத்து அல்லது ஒப்பந்தம் இன்னொரு தரப்பினருக்கு மாற்றல் செய்யப்படும் பொழுது மீள் காப்புறுதிச் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் அங்கீகரிக்காமல் விடப்படுகின்றன.

5.2 பெறத்தக்க காப்புறுதி

பெறத்தக்க காப்புறுதி அவை கிடைக்கும் வேளையில் அங்கீகரிக்கப்படுவதுடன் பெறப்பட்ட அல்லது பெறப்படுகின்ற தொகையின் சந்தைப் பெறுமதியின் ஆரம்பத் தொகையின் மீது அளவிடப்படுகின்றன. கொண்டிருக்கும் பெறுமதி அளவிட முடியாதது என்ற அறிகுறியினை சம்பவங்கள் அல்லது சூழ்நிலைகள் காட்டுகின்ற வேளையில் பெறத்தக்க காப்புறுதியில் கொண்டிருக்கும் பெறுமதியானது, பெறுமதிக் குறைப்பிற்காக மீளாய்வு செய்யப்பட்டு பெறுமதிக்குறைப்பு இழப்பு இலாப நட்டக்கூற்றில் பதிவுசெய்யப்படுகிறது.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

5.3 பிற்போடப்பட்ட செலவினங்கள்

5.3.1 பிற்போடப்பட்ட கொள்வனவுச் செலவு (DAC)

புதிய வியாபாரங்களின் கொள்வனவுக் கிரயமானது தரகு, குறைத்தெழுதுதல், சந்தைப்படுத்தல் மற்றும் கொள்கைவிடயச் செலவினங்களை உள்ளடக்கிய புதிய தொழில்களின் கொள்வனவின் பேரில் ஏற்பட்ட கிரயமானது புதிய தொழில்களின் உற்பத்தி அத்துடன், அல்லது தற்றுணிவு பங்கேற்புப் பண்புகளுடனான முதலீட்டு ஒப்பந்தங்களுடன் வேறுபட்டும் நேரடியாக தொடர்புபட்டும் இருப்பதுடன் இவை இக்கிரயங்கள் எதிர்காலக் கட்டுப்பணத்திலிருந்து அறவிடப்படுகின்ற காலம்வரை பிற்போடப்படுகின்றன.

ஏனைய அனைத்துக் கொள்வனவுக் கிரயங்களும் அவை ஏற்படும் வேளைகளில் செலவினங்களாக அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்ப அங்கீகரிப்பிற்குப் பின்னர் பொதுக் காப்புறுதிக்கான பிற்போடப்பட்ட கொள்வனவுக் கிரயம் ஈட்டப்படாத காப்புறுதிக் கட்டணம் தீர்க்கப்பட்டதன் அடிப்படையில் உரிய காலப்பகுதிக்காக தேய்விடப்பட்டது. குறிக்கப்பட்ட சொத்துக்களின் தேய்விடல் இலாப நட்டக்கூற்றில் பதிவு செய்யப்படுவதனால் பிற்போடப்பட்ட கொள்வனவுக் கிரயத்தின் மீள்காப்புறுதிப்பங்கு இதே விதத்தில் தேய்விடப்படுகிறது.

சொத்துக்களில் உள்ளடக்கியுள்ள எதிர்பார்க்கப்படும் பயன்மிக்க ஆயுள்காலம் அல்லது எதிர்காலப் பொருளாதார நன்மைகளின் நுகர்வினது எதிர்பார்க்கப்பட்ட மாதிரி என்பனவற்றில் ஏற்படுகின்ற மாற்றங்கள் பெறுமானத் தேய்வுகாலப்பகுதியின் மாற்றங்களுக்கேற்ப கணக்கிடப்படுவதுடன் கணக்கீட்டு மதிப்பீடுகளில் ஏற்படும் மாற்றமொன்றாகவும் கருதப்படுகின்றது.சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்கள் ஒன்றில் காலாவதியாகும் போது அல்லது இரத்துச் செய்யப்படும் போது பிற்போடப்பட்ட கொள்வனவுக் கிரயம் அங்கீகரிக்கப்படாமல் விடப்படுகிறது.

5.4 மீள் காப்புறுதித் தரகுகள்

வெளிச் செல்லும் மீள்காப்புறுதி ஒப்பந்தங்கள் மீது பெறத்தக்க தரகுகள் பிற்போடப்பட்டு காலப் பகுதியில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன.

5.5 முதலீட்டு ஒப்பந்தப் பொறுப்புக்கள்

முதலீட்டு ஒப்பந்தங்கள் தற்றுணிவு பங்கேற்புப் பண்புகளைக் கொண்ட ஒப்பந்தங்கள், அப்பண்புகள் இல்லாத ஒப்பந்தங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ள. தற்றுணிவு பங்கேற்புப் பண்புகளைக்கொண்ட முதலீட்டு ஒப்பந்த பொறுப்புக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் ஆயுள் காப்புறுதி ஒப்பந்த கொள்கைகளுக்கான அதே கொள்கைகளேயாகும்.

தற்றுணிவு பங்கேற்புப் பண்புகளைக்கொண்டிராத முதலீட்டு ஒப்பந்தப் பொறுப்புக்கள், ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு காப்புறுதிக் கட்டணங்கள் விதிக்கப்படுகின்றபோது அங்கீகரிக்கப்படுகின்றது. இப்பொறுப்புக்கள் ஆரம்பத்தில் நியாயப்பெறுமதியில் அங்கீகரிக்கப்படுவதுடன் இது ஒப்பந்தங்களின் வழங்கலுடன் நேரடியாக சேரவேண்டிய ஏதேனும் கொடுக்கல் வாங்கல் கிரயத்தினை நீக்குகிறது. ஆரம்ப அங்கீகரிப்பு முதலீடுகளின் பின்னர், ஒப்பந்தப் பொறுப்புக்கள் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

நிதியியல் நிலைமைக் கூற்றிலுள்ள பொறுப்பிற்கான சீராக்கமாக வைப்புக்களும் மீளப்பெறுகைகளும் நேரடியாகப் பதிவு செய்யப்படுகின்றன. நியாயப் பெறுமதிச் சீராக்கங்கள் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மேற்கொள்ளப்படுவதுடன், இலாப நட்டக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. கழிவிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதன் மூலமாக நியாயப் பெறுமதி நிர்ணயிக்கப்படுகிறது. அலகு மயப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களுக்காக, நியாயப் பெறுமதியானது, அறிக்கையிடும் திகதியில் கூறு இணைக்கப்பட்ட நிதியங்கள் கூறு விலைகளினால் பெருக்கப்பட்ட அந்நிதியம் ஒவ்வொன்றும் காப்புறுதி உடமையாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட கூறுகளின் எண்ணிக்கையாக கணிக்கப்பட்டது. அறிக்கையிடும் திகதியன்று கூறின் விலைகளைத் தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட நிதியத்தின் சொத்துக்களும் நிதியத்தின் பொறுப்புக்களும் நிதியத்திலுள்ள சொத்துக்கள் மீதான தேறல் செய்யப்படாத இலாபத்தின் மீதான பிற்போடப்பட்ட வரியின் பொறுப்புக்கள் மீதான தாக்கத்தினைக் கவனத்தில்கொள்ளும் விதத்தில் சீராக்கப்பட்ட நிதியியல் நிலைமையின் கூற்றிலுள்ள அவற்றின் அளவு முறைகளின் அடிப்படையுடன் ஒத்துச்செல்லும் விதத்தில் மதிப்பிடப்பட்டன.

அலகு மயப்படுத்தப்படாத ஒப்பந்தங்கள் அதன் பின்னரும் நியாயப் பெறுமதியில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டதுடன், இது கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சல் மற்றும் சம வாய்ப்பு கணக்கிடல் மாதிரிப்படுத்தல் போன்ற பெறுமதி தொழில் நுட்பங்களைப் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டது. மாதிரிகள் அனைத்தும் உறுதி செய்யப்பட்டு ஒழுங்கு படுத்தல் மற்றும் குறிப்பிட்ட நேரத்தில் தகுதிவாய்ந்த நபரால் சுதந்திரமாக மீள்பார்வையிடப்படும்.

ஒப்பந்தங்கள் காலாவதியாகும் பொழுது, விடுவிக்கப்படும் பொழுது அல்லது இரத்துச் செய்யப்படும் பொழுது பொறுப்புக்கள் அங்கீகரிக்கப்படுவதில்லை. பூட்கையாளர்களினால் இரத்துச் செய்யப்படக்கூடிய ஒப்பந்தங்களுக்காக, நியாயப் பெறுமதி, ஒப்படைப்புப் பெறுமதியிலும் பார்க்கக் குறைவாக இருக்க முடியாது. ஒப்பந்தங்கள் நிதியியல் இடர்நேர்வுக்கூறு மற்றும் குறிப்பிடத்தக்க காப்புறுதி இடர்நேர்வுக் கூறு ஆகிய இரண்டினையும் உள்ளடக்கியிருக்கும் பொழுதும் இரண்டு கூறுகளிலுமிருந்தான காசுப்பாய்ச்சல் தனித்துவமானதாகவும் நம்பகமாக அளவிடப்பட முடியுமென்பதனாலும் முக்கியமாக தொகைகள் பிரிக்கப்படவில்லை. காப்புறுதி இடர்நேர்வுக்கூறுகளுடன் தொடர்பான ஏதேனும் காப்புறுதிக் கட்டணங்கள் காப்புறுதியினைப் போன்றே அதே அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன.

5.6 தற்றுணிவு பங்கேற்புப் பணிகள் (DPF)

தற்றுணிவு பங்கேற்புப் பணிகள் என்பது தற்றுணிவு பங்கேற்பு பண்பு சொத்துப் பட்டியலிற்குள் வைத்திருக்கப்பட்ட சொத்துக்களின் செயலாற்றத்தினை அடிப்படையாகக் கொண்ட உத்தரவாத நன்மைகள் மற்றும் குறிப்பிடத்தக்க மேலதிக நன்மைகள் என்பனவற்றிற்கான துணைநிரப்பியாக பெறுவதற்கான ஒப்பந்தங்களை வைத்திருக்கின்ற உடமையாளர்களின் ஒப்பந்த ரீதியான உரிமைகளை வழங்குமொன்றாகும். ஒப்பந்தங்களின் நியதிகளின் கீழ் தற்றுணிவு பங்கேற்பு பண்புகளின் நிதிகளிலுள்ள மிகைகளை 90/10 என்ற அடிப்படையில் பூட்கையாளர்களுக்கும் பங்குடமையாளர்களுக்கும் விநியோகிக்க முடியும். இம்மிகைகளை பூட்கையாளர்களுக்கு விநியோகிக்கும் தொகையினையும் நோக்கத்தினையும் தற்றுணிவினை குழுமம் கொண்டிருக்கிறது உத்தரவாதப் படுத்தப்பட்ட மற்றும் தற்றுணிவு ரீதியான இரண்டையும் உள்ளடக்கிய ஒதுக்கீடு செய்யப்படாத மிகைகளான அனைத்து தற்றுணிப்புப் பங்கேற்பு பண்புப் பொறுப்புக்கள் பொருத்தமான விதத்தில் காப்புறுதிகளில் அல்லது முதலீட்டு ஒப்பந்தப் பொறுப்புக்களில் ஆண்டு தோறும் வைத்திருக்கப்படுகின்றன.

5.7 ஈட்டப்படாத காப்புறுதித் தவணைப்பண ஒதுக்கு

ஈட்டப்படாத காப்புறுதி ஒதுக்கு இவ்வாண்டில் எழுதப்பட்ட காப்புறுதியின் விகிதத்தினைப் பிரதிபலித்ததெனினும் உள்ளடக்கப்பட்ட காலாவதியாகாத காலத்துடன் தொடர்புபட்டதாக இருக்கவில்லை. ஈட்டப்படாத கட்டுப்பணம், 1/24 அடிப்படையில் கணிக்கப்பட்டது.

6. வெளியிடப்பட்ட ஆனால் அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு அமுலுக்கு வராத புதிய கணக்கீட்டு நியமங்கள்

2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியிலுள்ளவாறு இதுவரை அமுலுக்கு வராத பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களானவை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டன. அதற்கிணங்க 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இந்தக் கணக்கீட்டு நியமங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை.

6.1 இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 16 - குத்தகைகள்

ஐந்தொகை மீதான நிதிக் குத்தகைகள் மற்றும் ஐந்தொகைக்குப் பின்னரான தொழிற்பாட்டுக் குத்தகைகள் ஆகியவற்றுக்கிடையில் வேறுபாட்டைக் காட்டுகின்ற குத்தகை பெற்றுக்கொள்பவர்களுக்கான தற்போதய இரட்டை கணக்கீட்டு மாதிரியினை இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 16 ஆனது நீக்குகின்றது. பதிலாக, தற்போதய நிதிக் குத்தகை கணக்கீட்டுக்கு ஒத்ததான ஐந்தொகை மீதான தனித்த கணக்கீட்டு மாதிரியொன்று காணப்படும்.

LKAS 17 – குத்தகைகள், IFRIC 4 – ஒரு ஏற்பாட்டில் குத்தகைகள் உள்ளதா என்பதை தீர்மானித்தல், SIC 15 – தொழில்பாட்டு குத்தகைகள், மற்றும் சலுகைகள் மற்றும் SIS 27 – குத்தகையின் சட்ட வடிமத்தில் சம்பந்தப்பட்ட பறிமாற்றங்களை, மதிப்பீடு செய்தல் என்பவற்றை LKAS17 – குத்தகைகள் பதிலீடு செய்யப்படும்.

2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடும் காலப்பகுதிகளுக்காக இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 16 ஆனது செயல்வலுப்பெறும்.

குழுமமானது இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 16 இன் பிரயோகத்திலிருந்து விளைவிக்கப்பெறும் அதன் நிதிக் கூற்றுக்கள் மீதான சாத்தியமான தாக்கத்தினை மதிப்பிட்டு வருகின்றது.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

7 மொத்த வருமானம்

கணக்கீட்டுக் கொள்கை

பொருளாதார நலன்கள் குழு/வங்கிக்கு வருகின்ற விதத்திலும் வருவாயானது நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாகவும் வருமானமானது அடையாளம் காணப்பட்டுள்ளது.

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2018	2017	**2018**	2017
	ரூபா '000	ரூபா '000	**ரூபா '000**	ரூபா '000
வட்டி வருமானம் (குறிப்பு 8.1)	195,393,970	171,343,888	201,809,401	177,746,357
கட்டணம் மற்றும் தரகு வருமானம் (குறிப்பு 9.1)	10,699,565	9,465,330	11,088,043	9,723,455
வியாபாரத்திலிருந்தான தேறிய இலாபம்/(நட்டம்) (குறிப்பு 10)	3,431,822	2,802,048	3,468,191	2,822,168
நிதியியல் முதலீடுகளிலிருந்தான தேறிய இலாபம்/(நட்டம்) (குறிப்பு 11)	(681,365)	-	(717,194)	-
நிதியியல் முதலீடுகளிலிருந்தான தேறிய இலாபம்/(நட்டம்) (குறிப்பு 11.1)	-	905,527	-	925,733
நிதியியல் சொத்துக்களை அங்கீகரிக்காமையால் ஏற்பட்ட இலாபம்/நட்டம் (குறிப்பு 12)	152,029	-	153,240	-
தேறிய ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (குறிப்பு 13)	12,135,157	4,694,602	13,659,941	5,795,248
மொத்த வருமானம்	**221,131,178**	**189,211,395**	**229,461,622**	**197,012,961**

8 தேறிய வட்டி வருமானம்

கணக்கீட்டுக் கொள்கை

பயனுறு வட்டி முறையினைப் பயன்படுத்தி வட்டி வருமானம் மற்றும் செலவினங்கள் வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன

நிதியியல் கூற்றில் கூறப்பட்டுள்ள வட்டி வருமானம் மற்றும் செலவீனம் என்பன பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றன

- இலதாக்கல் கட்டணத்தில் நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்
- இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் அறியப்பட்ட நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்
- நியாயப்பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

பயனுறு வட்டிவீதம்

பயனுறு வட்டிவீதமென்பது, நிதியியல் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் (அல்லது பொருத்தமானவிடத்து, குறுங்காலமொன்று) எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலத்தினூடாக நிதியியல் சொத்து மற்றும் பொறுப்பில் கொண்டிருக்கும் தொகைக்கு மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவுகள் மற்றும் பெறுகைகளை மீளச்சரியாக கழிவிடுகின்ற ஒரு வீதமாகும். பயனுறு வட்டிவீதத்தினைக் கணிக்கும் பொழுது குழுமமானது நிதியியல் சாதனத்தின் அனைத்து ஒப்பந்த ரீதியான நியமங்களையும் பரிசீலனையில் கொண்டு எதிர்கால காசுப்பாய்ச்சலை மதிப்பிடுகின்றது.

பயனுறுவட்டி வீதக்கணிப்புக்கள், நிதியியல் சொத்துக்களின் கொள்வனவின் மீதான ஏதாவது கழிவு அல்லது தவணைக் கடடணத்தினையும் பயனுறுவட்டி வீதத்தின் முக்கியமானதொரு பகுதியாக விளங்கும் செலுத்தப்பட்ட அல்லது பெறப்பட்ட அனைத்துக் கட்டணங்களையும் கொடுக்கல் வாங்கல் செலவுகளையும் உள்ளடக்குகிறது. அதிகரிப்புச் செலவுகளை உள்ளடகிய கொடுக்கல்வாங்கல் செலவுகள் நேரடியாகக் கொள்வனவு அல்லது நிதியியல் சொததுக்களின் அல்லது பொறுப்புக்களின் வழங்கலில் சேர்க்கப்படுகின்றன.

பெறுமதி குறைக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களுக்கான சீராக்கம் செய்யப்பட்ட பயனுறு வட்டி வீதமானது மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களைப் பயன்படுத்திக் கணிப்பிடப்படுகின்றது.

8.1 வட்டி வருமானம்

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2018	2017	**2018**	2017
	ரூபா '000	ரூபா '000	**ரூபா '000**	ரூபா '000
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	637,183	716,983	729,559	794,400
வங்கிகளில் வைத்திருக்கப்படுபவை	735,748	623,881	910,847	688,805
மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	1,277,297	1,082,293	1,275,316	1,059,185
இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் அறியப்பட்ட நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்	575,655	585,342	575,809	586,073
இலதாக்கல் பெறுமதியில் நிதியியல் சொத்துக்கள்	190,735,241	167,580,587	196,834,925	173,620,948
கடன்கள் மறறும் முற்பணங்கள்	145,549,687	124,890,681	151,330,837	130,663,714
கடன் மற்றும் ஏனைய கருவிகள்	45,185,554	-	45,504,088	-
நிதியியல் முதலீடுகள் - கடன்களும் பெறத்தக்கவைகளும்	-	11,540,713	-	11,661,827
நிதியியல் முதலீடுகள் - முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படுபவை	-	31,149,193	-	31,295,407
நியாயப்பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்	1,432,846	754,802	1,482,945	996,946
மொத்த வட்டி வருமானம்	**195,393,970**	**171,343,888**	**201,809,401**	**177,746,357**

2018 ஆம் ஆண்டுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான வட்டிவருமானம் பெறுமதி குறைக்கப்பட்ட கடன்களுக்கான வட்டி ரூபா 1,052.6 மில்லியனையும் உள்ளடக்கியுள்ளது 2017 - ரூபா. 1,258.7 மில்லியன்

8.2 வட்டிச் செலவுகள்

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2018	2017	**2018**	2017
	ரூபா '000	ரூபா '000	**ரூபா '000**	ரூபா '000
வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை	113,325	30,262	115,735	33,853
மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்	5,379,122	5,464,801	5,414,844	5,495,603
இலதாக்கல் பெறுமதியில் நிதியியல் பொறுப்புக்கள்				
வாடிக்கையாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை	112,056,160	92,229,110	114,352,230	94,518,371
ஏனைய கடன்கள்	7,132,964	10,249,478	7,673,665	10,510,630
வழங்கப்பட்ட கடன் பிணையங்கள்	-	399,087	531,478	1,147,939
இரண்டாந்தர பொறுப்புக்கள்	5,154,425	4,614,958	5,031,970	4,549,859
மொத்த வட்டிச் செலவுகள்	**129,835,996**	**112,987,696**	**133,119,922**	**116,256,255**
தேறிய வட்டி வருமானம்	**65,557,974**	**58,356,192**	**68,689,479**	**61,490,102**

8.3 இலங்கை அரச பிணையங்களிலிருந்தான தேறிய வட்டி வருமானம்

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான	வங்கி		குழுமம்	
	2018	2017	**2018**	2017
	ரூபா '000	ரூபா '000	**ரூபா '000**	ரூபா '000
வட்டி வருமானம்	35,393,676	32,623,129	35,544,149	32,823,130
கழி : வட்டிச்செலவுகள்	5,379,122	5,464,801	5,414,844	5,495,603
இலங்கை அரச பிணையங்களிலிருந்தான தேறிய வட்டி வருமானம்	**30,014,554**	**27,158,328**	**30,129,305**	**27,327,527**

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

8.4 இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான கற்பித வரிச்சலுகை

திருத்தப்பட்டவாறான 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறை வரிச் சட்டத்தின் 137ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அரச பிணையங்கள் மீதான பிடித்து வைத்தல் வரிக்கான தேசிய வரிச் சலுகைகள், அரச பிணையங்களிலுள்ள இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து வட்டி வருமானப் பெறுமதிகளைப் பெற்ற கம்பனியொன்று அத்தகைய வட்டி வருமான மதிப்பீட்டிற்காக கம்பனியின் நியதிச் சட்ட வருமானத்தின் பாகமொன்றினை உருவாக்கக்கூடியதாக இருக்குமிடத்து தேசிய வருமான வரவுகளைப் பெறுவதற்கு வட்டி வருமானத்தில் ஒன்பதிலொரு (1/9) பங்குனைப் பெறுவதற்கு உரித்துடையதாகும். இதன்படி, 31 மார்ச் 2018 இல் முடிவடைந்த ஆண்டுக்குான 3 மாதங்களுக்கான அரச பிணையங்ளின் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் மீது வங்கிகளினாலும் மற்றும் குழுமங்களினாலும் ஈட்டப்பட்ட தேறிய வருமானம் நிதியியல் கூற்றுக்களில் மொத்தமாக சேர்க்கப்பட்டதுடன் இது வங்கிக்கு ரூபா 793.5 மில்லியன் (2017: ரூபா 2,165.0 மில்லியன்) மற்றும் குழுமத்திற்கு ரூபா 804.6 மில்லியன் (2017: ரூபா 2,206.4 மில்லியன்) கொண்ட கற்பிதவரிச் சலுகைகளைத் தோற்றுவித்தன. புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டம் 2017ம் ஆண்டு இல.24 இன் கீழ் இத்தகைய ஒதுக்கீடுகள் எதுவும் காணப்படாமையினால் 31 மார்ச் 2018 இன் பினனர் வங்கி இந்நடைமுறையினைத் தொடர்வதை நிறுத்தியது. 1 ஏப்ரல் 2018 இல் இருந்தான உள்நாட்டு இறைவரிச் சட்டம் 2017ம் ஆண்டு இல.24 இன் ஒதுக்கீடுகளின் அடிப்படையில் அரசாங்கப் பிணையங்கள் நிறுத்தி வைத்தல் வரியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதுடன் புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டம் 2017ம் ஆண்டு இல.24 இன் நடைமுறைப்படுத்தலுடன் கற்பித வரிச்சலுகைகளின் கோரிக்கையினைத் தொடர்வதை வங்கி நிறுத்தியது

9 தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்

கணக்கீட்டுக் கொள்கை

கட்டணம் மற்றும் தரகு வருமானம் குழுவால் வழங்கப்படும் பல்வேறு வகைப்பட்ட பணிகளிலிருந்து பெறப்பட்ட கட்டணம் மற்றும் தரகு வருமானத்தைக் கொண்டிருக்கின்றது. இவற்றை பின்வரும் இரண்டு முக்கிய பிரிவுகளாக பிரிக்கலாம்.

(i) குறிப்பிட்ட காலப்பகுதிக்கு வழங்கப்படுகின்ற பணிகளிலிருந்து ஈட்டப்படும் கட்டணம் மற்றும் தரகு வருமானம்

(ii) குறிப்பிட்ட நேரப்பகுதிக்கு வழங்கப்படுகின்ற பணிகளிலிருந்து ஈட்டப்படும் தரகு மற்றும் கட்டண வருமானம் குறிப்பிட்ட நேரகாலப்பகுதியில் பணிகளின் வழங்கலுக்காக ஈட்டப்படும் கட்டணம் அக்காலப்பகுதியில் ஒன்று சேர்ந்ததாக இருக்கிறது. இக்கட்டணமானது தரகு வருமானம் மற்றும் தனியார் வளம் மற்றும் சொத்து முகாமைத்துவ கட்டணம், கட்டுக்காப்பு மற்றும் ஏனைய முகாமைத்துவ மற்றும் மதியுரைக் கட்டணம் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான கட்டண மற்றும் தரகு செலவீனங்கள் சேவைகள் பெறப்படும் போதே செலவு செய்யப்படுகின்றது. இவை அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

9.1 கட்டணம் மற்றும் தரகு வருமானம்

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2018	2017	2018	2017
	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
வியாபாரம் தொடர்பான சேவைகள்	1,958,791	2,017,427	2,117,990	2,157,147
பற்று மற்றும் வரவு அட்டைகள்	3,244,546	2,646,648	3,244,546	2,646,648
பயணம் மற்றும் பண அனுப்பல்கள் தொடர்பான சேவைகள்	1,337,082	1,182,437	1,337,082	1,182,437
கட்டுக்காப்புப் பணிகள்	118,866	65,514	118,866	65,514
வைப்புக்கள் தொடர்பான சேவைகள்	2,290,705	2,128,212	2,299,838	2,137,580
உத்தரவாதங்கள் தொடர்பான சேவைகள	1,477,438	1,220,235	1,478,440	1,221,301
ஏனைய நிதிச்சேவைகள்	272,137	204,857	491,281	312,828
மொத்த கட்டணம் மற்றும் தரகு வருமானம்	**10,699,565**	**9,465,330**	**11,088,043**	**9,723,455**

9.2 கட்டணம் மற்றும் தரகு செலவினங்கள்

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2018	2017	2018	2017
	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
வியாபாரம் தொடர்பான சேவைகள்	94,307	95,306	94,307	95,306
பற்று மற்றும் வரவு அட்டைகள்	1,817,643	1,448,287	1,817,643	1,448,287
பயணம் மற்றும் பண அனுப்பல்கள் தொடர்பான சேவைகள்	97,898	105,762	97,898	105,762
வைப்புக்கள் தொடர்பான சேவைகள்	247,327	216,860	248,858	227,999
உத்தரவாதங்கள் தொடர்பான சேவைகள	10,275	8,562	10,275	8,562
ஏனைய நிதிச்சேவைகள்	13,278	8,525	25,858	86,458
மொத்த கட்டணம் மற்றும் தரகு செலவினங்கள்	**2,280,728**	**1,883,302**	**2,294,839**	**1,972,374**
தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்	**8,418,837**	**7,582,028**	**8,793,204**	**7,751,081**

10 வியாபாரத்திலிருந்தான தேறிய இலாபம்/(நட்டம்)

கணக்கீட்டுக் கொள்கை

வியாபார நடவடிக்கைகள் ஊடாக ஏற்படும் வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் அல்லது நட்டங்கள், உரிமை மூலதனம் மீதான பங்குலாப வருமானம் மற்றும் பெறுமதி நிதியியல் சாதனங்களின் நியாயப்பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக உருவாகும் இலாபம் அல்லது நட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

குழுவின் கொடுப்பனவினைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்படுகின்ற வேளையில் பங்குலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2018	2017	2018	2017
	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
அந்நியச் செலாவணி				
வங்கிகளில் இருந்து	4,291	1,479	19,168	20,403
ஏனைய வாடிக்கையாளர்களிடம் இருந்து	3,325,654	2,709,355	3,335,768	2,721,536
அரசாங்கப் பிணையங்கள்				
சந்தைப்படியான குறிக்கப்பட்ட பெறுமதி மதிப்பீட்டின் மீதான இலாபம்/(நட்டங்கள்)	-	75,448	-	75,448
விற்பனையில் இருந்தான இலாபம்/(நட்டங்கள்)	-	48,276	-	48,276
உரிமை மூலதனங்கள்				
சந்தைப்படியான குறிக்கப்பட்ட பெறுமதி மதிப்பீட்டின் மீதான இலாபம்/(நட்டங்கள்)	-	(174,510)	-	(170,717)
விற்பனையில் இருந்தான இலாபம்/(நட்டங்கள்)	-	30,217	-	7,008
பங்குலாப வருமானம்	101,877	111,783	113,255	120,214
வியாபாரத்திலிருந்தான தேறிய இலாபம்/(நட்டம்)	**3,431,822**	**2,802,048**	**3,468,191**	**2,822,168**

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

11 நிதியியல் சொத்துக்களை நியாயப் பெறுமதியில் அளவிடுவதால் ஏற்பாடும் (தேறிய இலாபம்/நட்டம்)

கணக்கீட்டுக் கொள்கை

நிதியியல் சொத்துக்களை நியாயப்பெறுமதியில் அளவிடுவதால் ஏற்படும் இலாபம்/நட்டமானது, உரிமையான்மை, மற்றும் முதலீட்டு அலகுகளின் முதலீடுகளில் இருந்து கிடைக்கவிருக்கும் இலாபத்தையும் கணக்கிடுகின்றது.

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2018	2017	2018	2017
	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
நிலையான வருமானப் பிணையங்களின சந்தைப்படியான குறிக்கப்பட்ட பெறுமதி மதிப்பீட்டின் மீதான இலாபம்/(நட்டங்கள்)				
நிரந்தர வருமான முதலீட்டு உரிமைகள்	(10,268)	-	(10,268)	-
உரிமை மூலதனம்	(226,795)	-	(259,736)	-
நம்பிக்கை அலகுகள்	(444,302)	-	(447,190)	-
பிணையங்களின் நியாயப் பெறுமதியின் மீதான இலாபம்/(நட்டம்)	**(681,365)**	**-**	**(717,194)**	**-**

11.1 நிதியியல் முதலீடுகளிலிருந்தான தேறிய இலாபம்/(நட்டங்கள்)

கணக்கீட்டுக் கொள்கை

நிதியியல் முதலீடுகளில் இருந்தான இலாபம்/நட்டம் ஆனது விற்பனை மூலம் கிடைத்த இலாபம் அல்லது நட்டம் மற்றும் விற்பனைக்கு கிடைக்கத்தக்கவை என வகைப்படுத்தப்பட்ட நிதியியல் முதலீடுகளில் இருந்தான பங்குலாப வருமானம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. குழுவுக்கு பங்குலாபத்தை பெறுவதற்கான உரிமை நிறுவப்படுகின்ற வேளையில் பங்குலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2018	2017	2018	2017
	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
நிதியியல் முதலீடுகள் - விற்பனைக்கு கிடைக்கத்தக்கவை				
அரச பிணையங்களின் விற்பனையிலிருந்தான இலாபம்/(நட்டங்கள்)	-	332,937	-	332,937
பங்கிலாப வருமானம்	-	572,590	-	592,796
நிதியியல் முதலீடுகளிலிருந்தான தேறிய இலாபம்/(நட்டங்கள்)	**-**	**905,527**	**-**	**925,733**

12 நிதியியல் சொத்துக்களை அங்கீகாரமளிக்காமையால் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டம்

கடன் கருவிகள் விற்பனையால் நிதியியல் சொத்துக்களை அங்கீகாரமளிக்காமையால் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டம்இலதாக்கல் கட்டணத்தில் நியாயப் பெறுமதியில் ஏனைய முற்றடக்க வருமானத்தின் கீழ் வகைப்படுத்தப்படும்

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2018	2017	2018	2017
	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
அங்கீகாரம் அளிக்கப்பட்டது				
நியாயப் பெறுமதியில் இலாபம் அல்லது நட்டம்	56,612	-	57,823	-
இலதாக்கல் கட்டணம்	-	-	-	-
ஏனைய முற்றடக்க வருமான அடிப்படையில் இலாபம் அல்லது நட்டம்	95,417	-	95,417	-
தேறிய நிதியியல் சொத்துக்களை அங்கீகாரமளிக்காமையால் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டம்	**152,029**	**-**	**153,240**	**-**

13 ஏனைய தொழிற்பாட்டு வருமானம்

கணக்கீட்டுக் கொள்கை

பங்குலாப வருமானம்

வங்கிக்கு பங்குலாபத்தை பெறுவதற்கான உரிமை நிறுவப்படுகின்ற வேளையில் துணை மற்றும் கூட்டு நிறுவனங்களிலிருந்தான பங்குலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

நிதியல்லா சொத்துக்களின் விற்பனையிலிருந்தான இலாபம்/(நட்டங்கள்)

ஆதனம், பொறி உபகரணங்கள் மற்றும் துணை மற்றும் கூட்டுக் கம்பனிகளில் முதலீடு செய்தவை அடங்கலாக ஏனைய நடைமுறையல்லா சொத்துக்களின் விற்பனை மீதான தேறிய இலாபம் அல்லது நட்டமானது அத்தகைய சொத்துக்களின் கொண்டிருக்கும் பெறுமதி மற்றும் விற்பனை தொடர்பான செலவுகளை விற்பனை தொகையிலிருந்து கழித்தபின் இலாப நட்டக்கூற்றில் பதியப்படுகின்றது

வெளிநாட்டு நாணய மீள்மதிப்பீட்டு இலாபம்/(நட்டங்கள்)

வெளிநாட்டு நாணய நிலைகள் ஒவ்வொரு அறிகையிடல் திகதியிலும் மீள்மதிப்பீடு செய்யப்படுகின்றது. உண்மைப்பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள காரணமாக உருவாகும் இலாபங்கள்/(நட்டங்கள்) அக்காலத்துக்குரிய இலாப நட்டக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

வாடகை வருமானம்

வாடகை வருமானம் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது. இது வங்கி வளாகங்கள், விடுதிகள், பாதுகாப்பு வைப்புப்பெட்டிகள் போன்றவற்றிலிருந்து அறவிடப்பட்ட வாடகையையும் வங்கி வளாகங்களில் இருந்தான குத்தகை வாடகை போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

சேவை வருமானம்

சேவை வருமானம் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது. இது குத்தகை மற்றும் கடன்களிலிருந்து அறவிடப்பட்ட ஆவணப்படுத்தல் கட்டணம், இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் (CRIB) கட்டணம், சட்ட அறவீடுகள், தொடர்பாளர் வங்கிச்சேவை கட்டணங்கள் மற்றும் தானியங்கி காசோலை தீர்வைகள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

மொத்தக் காப்புறுதிக் கட்டணம்

தற்றுணிபு பங்கேற்புப் பண்புகளுடனான ஆயுள் மற்றும் முதலீட்டு ஒப்பந்தங்கள் மீதான மொத்த மீண்டெழும் கட்டுப்பணங்கள் பூட்கையாளர்களிடமிருந்து பெறத்தக்கவையாக இருக்கும் பொழுது வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றன. தனியொரு கட்டுப்பண தொழிலினைப் பொறுத்தவரை வருமானமானது பூட்கை

மொத்த பொதுக்காப்புறுதி பதிவுக்கட்டுப் பணமானது கணக்கீட்டுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களினால் வழங்கப்பட்ட காலப்பகுதி முழுவதற்குமாகப் பெறப்பட்ட மொத்தக்கட்டுப் பணத்தினையும் உள்ளடக்கியிருந்ததுடன் பூட்கை ஆரம்பமான திகதியிலிருந்து அங்கீகரிக்கப்பட்டது.

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி		குழுமம்	
	2018	2017	**2018**	2017
	ரூபா '000	ரூபா '000	**ரூபா '000**	ரூபா '000
துணை மற்றும் கூட்டுக் கம்பனிகளிலிருந்தான பங்கிலாப வருமானம் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டது	284,383	-	321,923	-
துணை மற்றும் கூட்டுக் கம்பனிகளிலிருந்தான பங்கிலாப வருமானம்	309,685	76,680	-	-
நம்பிக்கை அலகுகளின் மீதான பங்கிலாப வருமானம்	3,985	-	3,985	-
அந்நியச் செலாவணி மீள்மதிப்பீட்டு இலாபம்/(நட்டம்)	7,622,372	701,621	7,622,372	701,621
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மீதான இலாபம்/(நட்டம்)	31,014	55,105	121,350	59,399
பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களின் விற்பனை மூலம் பெற்ற இலாபம்/(நட்டம்)	73,605	70,866	73,605	70,866
வாடகை வருமானம்	284,632	250,454	352,529	329,905
சேவை வருமானம்	1,864,650	1,627,798	2,098,355	1,987,792
தங்கப்பாளம் விற்பனையிலிருந்தான இலாபம்	8,951	15,342	8,951	15,342
சில்லறை வருமானம்	1,427,447	1,683,766	2,735,465	1,785,250
மொத்தக் காப்புறுதிக் கட்டணம்	-	-	96,973	632,103
இஸ்லாமிய வங்கித்தொழிலிலிருந்தான தேறிய வருமானம் (குறிப்பு 13.1)	224,433	212,970	224,433	212,970
மொத்த ஏனைய தொழிற்பாட்டு வருமானம்	**12,135,157**	**4,694,602**	**13,659,941**	**5,795,248**

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

13.1 இஸ்லாமிய வங்கித் தொழிலிலிருந்தான தேறிய வருமானம்

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி / குழுமம்	
	2018	2017
	ரூபா '000	ரூபா '000
இஸ்லாமிய வங்கியியல் தொழிற்பாடுகளிலிலிருந்தான வருமானம்	393,762	364,126
கழி: முதலீட்டாளர்களுக்குச் செலுத்தப்பட்ட இலாபம்	169,329	151,156
இஸ்லாமிய வங்கித்தொழிலிலிருந்தான தேறிய வருமானம்	**224,433**	**212,970**

14 கடன்கள் மற்றும் ஏனைய இழப்புக்களுக்கான பெறுமதி குறைப்பு விதிப்பனவு/ (மாற்றுப்பதிவு)

கணக்கீட்டுக் கொள்கை

வங்கி மற்றும் குழுமமானது "நிதியியல் சாதனங்கள் அங்கீகரித்தலும் அளவிடுதலும்" மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 39 இன் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான பெறுமதி குறைப்பு மதிப்பீட்டில் ஏற்படும் மாற்றங்களை அங்கீகரிக்கின்றது. விபரங்கள் வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் (குறிப்பு 27) வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் (குறிப்பு 27) கீழ் காட்டப்பட்டுள்ளது. மேலும் வங்கி/குழுமம் ஆனது ஒரு நிதியல்லா சொத்தின் மதிப்பிடப்பட்ட அறவீட்டு தொகையை விட கொண்டிருக்கும் பெறுமதி அதிகரிக்கும்போது ஏற்படும் பெறுமதி குறைப்பு நட்டத்தை "சொத்துக்களின் பெறுமதி குறைப்பு" மீதான இலங்கை கணக்கீட்டு நியமனம் LKAS 36 இன் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

ஆண்டுக் காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்ட கணக்கீட்டு சாதனங்களின் எதிர்ப்பார்க்கப்பட்ட கடன் இழப்பிற்கான ஏற்பாடானது இலாப நட்ட கணக்கீட்டு அறிக்கையில் பதியப்பட்டுள்ள அட்டவணையானது கீழே காட்டப்பட்டுள்ளது.

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி				குழுமம்			
	2018				2018			
	கட்டம் 1	கட்டம் 2	கட்டம் 3	மொத்தம்	கட்டம் 1	கட்டம் 2	கட்டம் 3	மொத்தம்
	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	(3,793)	-	-	(3,793)	(3,795)	-	-	(3,795)
ஏனைய வங்கிகளுடனான வைப்புக்கள்	22,720	-	-	22,720	22,452	-	-	22,452
இலதாக்கல் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள் கடன்களும் முற்பணங்களும்	2,010,203	(2,123,633)	14,377,860	14,264,430	2,038,648	(2,116,443)	14,476,548	14,398,753
இலதாக்கல் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள் கடன் கருவிகள்	731,392	-	26,212	757,604	732,850	-	26,212	759,062
ஏனைய முதலீடுகள்	-	-	-	-	-	-	-	-
மொத்தம்	**2,760,522**	**(2,123,633)**	**14,404,072**	**15,040,961**	**2,790,155**	**(2,116,443)**	**14,502,760**	**15,176,472**

வங்கி மற்றும் குழுமமானது "நிதியியல் சாதனங்கள் அங்கீகரித்தலும் அளவிடுதலும்" மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 39 இன் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான பெறுமதி குறைப்பு மதிப்பீட்டில் ஏற்படும் மாற்றங்களை அங்கீகரிக்கின்றது. 2017ம் ஆண்டுக் காலப்பகுதிக்கான விபரங்கள் வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	வங்கி			குழுமம்		
	2017			2017		
	தனிப்பட்ட பெறுமதிக் குறைப்பு மற்றும் ஏனைய ஏற்பாடு	கூட்டு பெறுமதி குறைப்பு	மொத்தம்	தனிப்பட்ட பெறுமதிக் குறைப்பு மற்றும் ஏனைய ஏற்பாடு	கூட்டு பெறுமதி குறைப்பு	மொத்தம்
D.2	**அபாயநேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்நிலைக் கட்டுப்பாடுகள் பற்றிய வங்கியின் தற்போதைய செயன்முறை** வங்கி அதன் உபாயமார்க்கமிகு குறிக்கோள்களை அடைவதற்கு எடுப்பதற்கு நாட்டம் கொண்டுள்ள முதன்மையான அபாயநேர்வுகளின் தன்மை அதன் அளவு ஆகியவற்றினைத் தீர்மானிப்பதற்கான பொறுப்பினைச் சபை கொண்டுள்ளது. இயைபுறல் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக வெவ்வேறு வகையான அபாயநேர்வுகளை முகாமைத்துவம் செய்வதற்காக வங்கியினால் பயன்படுத்தப்படும் அபாயநேர்வு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் இருப்பு, இயக்கம் மற்றும் செயற்திறன் தொடர்பான மேற்பார்வைப் பொறுப்பினைச் சபை ஒருங்கிணைக்கப்பட்ட அபாயநேர்வு முகாமைத்துவக் குழு வசதிப்படுத்துகின்றது. குழுவின் ஏனைய பொறுப்புக்களின் மத்தியில் இயக்க ரீதியான, நிதி ரீதியான மற்றும் இயைபுறல் ரீதியான பொறுப்புக்கள் உள்ளிட்ட வங்கியின் உள்நிலைக் கட்டுப்பாடுகளின் முறைமைகளின் குறிக்கோள்களை அடைவதற்குச் சபைக் கணக்காய்வுக் குழு வங்கிக்கு உதவுகின்றது. ஒருங்கிணைக்கப்பட்ட அபாயநேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் கணக்காய்வுக் குழு ஆகியவற்றின் மூலமாகச் சபை வங்கியின் அபாயநேர்வு முகாமைத்துவத்தினையும் உள்நிலைக் கட்டுப்பாட்டு முறைமைகளையும் கண்காணித்து வருவதுடன் குறிப்பிட்ட குழுக்களின் செயற்திறனினை வருடாந்தம் மீளாய்வு செய்து வருகின்றது. வங்கியின் உள்நிலைக் கணக்காய்வுச் செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு இலங்கை வங்கி பூரணமான உள்நிலைக் கணக்காய்வுத் திணைக்களத்தினைக் கொண்டுள்ளது. கணக்காய்வாளர் தலைமையதிபதியே வங்கியின் புறநிலைக் கணக்காய்வாளர் ஆவார்.

கோவையில் குறிப்பிடப் பட்டுள்ள பிரிவுகள்	இணக்கப்பாட்டு நிலை
D.3	**கணக்காய்வுக் குழு** சபைக் கணக்காய்வுக் குழு மீளாய்வின் கீழுள்ள வருடத்தின் போது நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்களைப் பிரத்தியேகமாகக் கொண்டிருந்தது. மீளாய்வின் கீழுள்ள வருடத்தின் போது குழுவின் தலைவர்கள் சுயாதீனமான நிறைவேற்று தரம் சாராத பணிப்பாளர்கள் ஆவர். கணக்காய்வுக் குழுவின் தலைவரும் உறுப்பினர்களும் நிதி அறிக்கையிடல் மற்றும் கட்டுப்பாட்டில் பொருத்தமான அனுபவத்தினைக் கொண்டிருந்தனர். வங்கியின் சபை அதன் மேற்பார்வைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குச் சபைக் கணக்காய்வுக் குழு உதவுகின்றது. அபாயநேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்நிலைக் கட்டுப்பாடுகளின் செயன்முறைகள் மற்றும் செயற்திறன் மீளாய்வுகளை நடத்துவதையும் கணக்காய்வு அறிக்கைகள் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படுவதையும் சபைக் கணக்காய்வுக் குழு உறுதிப்படுத்துகின்றது. கணக்காய்வுக் குழுவின் வகிபாத்திரமும் பொறுப்புக்களும் இந்த வருடாந்த அறிக்கையின் 90 முதல் 92 ஆம் பக்கங்களில் காணப்படுகின்ற கணக்காய்வுக் குழு அறிக்கையில் வெளிக்கூறப்பட்டுள்ளன. கணக்காய்வுக் குழு நோக்கெல்லை விதிகளினை எழுதியுள்ளது. இது குழுவின் வகிபாத்திரம் மற்றும் பொறுப்புக்களைத் தெளிவாக வரையறுக்கின்றது. மீளாய்வின் கீழுள்ள வருடத்தின் போது குழுவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் இந்த வருடாந்த அறிக்கையில் 90 முதல் 92 ஆம் பக்கங்களில் காணப்படுகின்றன.
D.4	**தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்** தொடர்புடைய தரப்பினர்கள், அவர்களின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் இது தொடர்பில் சபை உறுப்பினர்கள் கொண்டுள்ள ஏதாவது தனிநலன் சார்ந்த முரண்பாடுகளைத் தவிர்க்கும் முகமாக தொடர்புடைய தரப்பினரினைப் பரிவு காட்டாத முறையில் நடத்துதல் தொடர்பான கட்டுப்பாடுகள் உள்ளடங்கலாக தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாகச் சபை அங்கீகரித்த கொள்கையினை வங்கி கொண்டுள்ளது. பிரதம முகாமைத்துவ ஆளணி மற்றும் அவர்களின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய அறிக்கை இந்த வருடாந்த அறிக்கையின் 351 மற்றும் 352 ஆம் பக்கங்களில் காணக் கிடைக்கின்றன.
D.5	**வியாபார நடத்தை மற்றும் நெறிகள் கோவை** வங்கியின் ஊழியர்களுக்காக வங்கி நெறிக் கோவையொன்றினைப் பேணி வருவதுடன் பணிப்பாளர்களுக்காக வேறான நெறிக் கோவைகளைப் பேணி வருகின்றது. மேலும் இந்தக் கோவைகளுக்கு இயைபுறுவதை உறுதிப்படுத்துகின்ற அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.
D.6	**பெருநிறுவன ஆளுகை வெளிக்கூறல்கள்** 71 முதல் 88 வரையான பக்கங்களில் காணப்படுகின்ற பெருநிறுவன ஆளுகை அறிக்கையானது பெருநிறுவன ஆளுகை பற்றிய சிறந்த நடைமுறைக் கோவையின் ஏற்பாடுகளுடன் இயைபுறுகின்ற அளவினை வெளிக்கூறுகின்றது.
F.1 மற்றும் **F.2**	**பங்குடமையாளர்** வங்கியின் ஏக பங்குடமையாளராக இலங்கை அரசாங்கம் உள்ளது.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2017 ஆம் ஆண்டு விநியோகிக்கப்பட்ட பெருநிறுவன ஆளுகை பற்றிய சிறந்த நடைமுறைக் கோவைக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

கோவையில் குறிப்பிடப் பட்டுள்ள பிரிவுகள்	இணக்கப்பாட்டு நிலை
G	**இண்டர்நெட் மற்றும் சைபர் பாதுகாப்பு** வங்கியின் வியாபார மாதிரி, வங்கியின் உள்ளேயும் வெளியேயுமான தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் எவ்வாறு தகவல்களினை அனுப்புவதற்காகவும் பெறுவதற்காகவும் வங்கியின் வலையமைப்புடன் இணையலாம் என்பதை அடையாளம் காண்பதற்கும் வியாபாரத்தில் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய விளைவான சைபர் பாதுகாப்பு அபாயநேர்வுகளை அடையாளம் காண்பதற்கும் வங்கி ஒரு செயன்முறையினை அமுலில் கொண்டுள்ளது. சபை அங்கீகரித்த தகவல் பாதுகாப்புக் கொள்கை அமுலில் உள்ளது. இது முகாமைத்துவத்திற்கு நெறிப்படுத்தலினை வழங்குவதுடன் வங்கியின் தகவல் சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் உதவுகின்றது. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் சம்பந்தமாகப் பணிப்பாளர்கள் சபை அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு உதவுவதற்காக சபையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் குழு 2018 ஆம் ஆண்டிலே நிறுவப்பட்டது. மேலும் சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் வகுத்தலை வசதிப்படுத்துவதற்கு இது பொருத்தமான ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் வழங்குகின்றது. மேலும், பாதிப்புறு நிலை பற்றிய மதிப்பீடுகளைப் பரிந்துரைத்துப் பின்தொடர்வதன் மூலமாகவும் சபைக்கு அறிக்கையிடுவதன் மூலமாகவும் வங்கியானது சைபர் பாதுகாப்பு அச்சுறுத்தலிலிருந்து பாதுகாக்கப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்துவதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட அபாயநேர்வு முகாமைத்துவக் குழு சபைக்கு உதவி வருகின்றது. சைபர் பாதுகாப்பு அபாயநேர்வுகளை அடையாளம் கண்டு முகாமைத்துவம் செய்வதற்கான செயன்முறைகள் இந்த வருடாந்த அறிக்கையின் அபாயநேர்வு முகாமைத்துவ அறிக்கையில் 116 முதல் 117 வரையிலான பக்கங்களில் காணப்படுகின்றன. சைபர் பாதுகாப்பு அபாயநேர்வு முகாமைத்துவக் கொள்கையினை அமுல்படுத்துவதற்காக வங்கி பிரதம தகவல் பாதுகாப்பு அதிகாரியினை நியமித்துள்ளது.
H	**சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை** சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG) அறிக்கையானது இந்த வருடாந்த அறிக்கையின் 160 முதல் 176 வரையான பக்கங்களில் காணப்படுகின்றது.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (1)	சபைக்குரிய பொறுப்புக்கள்	
3 (1) (i)	பின்வருவனவற்றின் அமுலாக்கத்தினை உறுதிப்படுத்துவதன் மூலம் இவ் வங்கியின் பாதுகாப்பையும் உறுதித்தன்மையையும் இச் சபையானது வலுப்படுத்த வேண்டும்:	இணங்கப்பட்டது.
	அ. இவ் வங்கியின் தந்திரோபாய நோக்கங்களையும் கூட்டாண்மை விழுமியங்களையும் அங்கீகரித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் மற்றும் இவ் வங்கி பூராகவும் இவை தொடர்புபடுத்தப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தல்.	தந்திரோபாய நோக்கங்கள் மற்றும் விழுமியங்கள் ஆனவை சபை மற்றும் உயர் முகாமைத்துவம் அமர்வுகளில் சமூகமளிப்புடன் வெளியிடத்தில் நடைபெறும் அமர்வுகளில் நிறுவப்படுகின்றன. 2018 - 2020 ஆம் ஆண்டு காலப்பகுதிக்காக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டாண்மை திட்டத்தில் அவை உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை கிரமமான சுருக்கிக் கூறும் அமர்வுகள் ஊடாக கிளை முகாமையாளர் தர ஊழியர்கள் வரைக்கும் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவினால் கூட்டாண்மை திட்டமானது ஆரம்பிக்கப்பட்டு வலுப்படுத்தப்படும் வெளியிடக் கலந்துரையாடல் கூட்டங்களில் தெரிவிக்கப்படுகின்றன. 2018 - 2020 ஆம் ஆண்டுக்காக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டாண்மை திட்டமானது தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கூறியவாறு நிறுவி சபையில் அங்கீகரிக்கப்பட்ட கூட்டாண்மைத்திட்டம் 2019-2021 அமுலில் உள்ளது. 2018 இலிருந்து முன்னோக்கிச் செல்வதற்காக கூட்டாண்மை விழுமியங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. உள்ளக வலைப்பின்னலிலும் கிடைக்கக்கூடியதாகவுள்ளதுடன், சகல ஊழியருக்கும் வழங்கப்பட்ட ஊழியர் கையேட்டில் கூட்டாண்மை விழுமியங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
	ஆ. ஒட்டுமொத்த இடர்கொள்கை மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் அளவிடக்கூடிய இலக்குகளுடனான பொறிமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய இவ் வங்கியின் ஒட்டுமொத்த வியாபார தந்திரோபாயத்தினை குறைந்தது அடுத்த மூன்று வருடங்களுக்கு அங்கீகரித்தல்.	இணங்கப்பட்டது. இவ் வங்கியின் ஒட்டுமொத்த வியாபாரத் தந்திரோபாயமானது கூட்டாண்மைத் திட்டத்திலும் இச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட, அதே காலப்பகுதிக்கான செயல் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. தந்திரோபாய திட்டத்திற்கு அமைவாக இடர் நாட்டம், முகாமைத்துவ கட்டமைப்பு மற்றும் பொறிமுறைகள் என்பனவும் இச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. வங்கியின் அளவிடக்கூடிய இலக்குகள் ஒட்டுமொத்தமாக வடிவமைக்கப்பட்டதுடன் வெளியிட கலந்துரையாடல் கூட்டங்களிலும் இவ் இலக்குகளிற்கு அமைவாக செயற்றிறன் அளவிடப்படுகின்றது.
	இ. பிரதான இடர்களை அடையாளங்காணுதல் மற்றும் இவ் இடர்களை மதிநுட்பமாக முகாமிப்பதற்குப் பொருத்தமான முறைமைகளின் அமுலாக்கத்தினை உறுதிப்படுத்தல்.	இணங்கப்பட்டது. இவ் வங்கியின் இடர் கொள்கையினை அங்கீகரித்தல், இடர் நாட்டத்தினை வரையறுத்தல், பிரதான இடர்களை அடையாளங்காணுதல், ஆளுகை கட்டமைப்பை வடிவமைத்தல் மற்றும் பிரதான இடர்களை அளவிடுதல், கண்காணித்தல் மற்றும் முகாமைசெய்தல் ஆகியவற்றுக்கான முறைமைகளை அமுல்படுத்தல் போன்ற பணி ஒப்படைப்புகள் செய்யப்பட்ட சபை ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவை இச் சபை நியமித்துள்ளது. புதிய தந்திரோபாயங்களிலிருந்து எழுகின்ற இடர்களைப் பற்றியும் அத்தகைய இடர்களைக் குறைப்பதற்கான மேலதிக வழிமுறைகள் பற்றியும் விரிவாக சபை உறுப்பினர்கள் கலந்துரையாடும் செய்முறையொன்றை இவ் வங்கி அமுல்படுத்தியுள்ளது. சகல இடர் பிரிவுகளையும் உள்ளடக்கும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கொள்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இது குறித்தான மேலதிக விபரங்களை பின்வரும் அறிக்கைகளும் வழங்குகின்றன: • 102 தொடக்கம் 118 வரையான பக்கங்களிலுள்ள இடர் முகாமைத்துவ அறிக்கை. • 94 ஆம் 95 ஆம் பக்கங்களிலுள்ள ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு அறிக்கை.
	ஈ. வைப்பாளர்கள், கடன் வழங்குனர்கள், பங்குதாரர்கள் மற்றும் கடன் பெறுனர்கள் உள்ளடங்கலாக சகல நிறுவக நிறுவன நலனில் அக்கறையுடையோர்குமான தொடர்பாடல் கொள்கையொன்றின் அமுலாக்கத்தை அங்கீகரித்தல்	இணங்கப்பட்டது. காலக்கிரமத்தில் மீளாய்வுசெய்யப்படும், சகல நிறுவன நலனில் அக்கறையுடையோர் உள்ளடக்கிய ஒரு தொடர்பாடல் கொள்கையினை சபையானது அங்கீகரித்து அமுல்படுத்தியுள்ளது.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	உ. உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமைகளின் போதுமான தன்மை மற்றும் முழுமைத்தன்மையினை மீளாய்வு செய்தல்.	இணங்கப்பட்டது. சபைக்கு அறிக்கையிடும் சபைக் கணக்காய்வுக் குழுவுக்கு இவ் வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் போதுமான தன்மை மற்றும் முழுமைத்தன்மையினை மீளாய்வு செய்தல் பற்றிய பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. சபையானது முகாமைத்துவ தகவல் முறைமையின் (MIS) போதுமான தன்மையினையும் மீளாய்வு செய்கின்றது. கணக்காய்வு குழுவானது அதற்கு நேரடியாக அறிக்கையிடுகின்ற உள்ளக கணக்காய்வு திணைக்களத்தினுடைய அறிக்கைகள் மற்றும் இச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துகின்ற வெளியக கணக்காய்வாளர்கள் அறிக்கைகளை மீளாய்வு செய்தது. முகாமைத்துவ தகவல் முறைமையின் (MIS) பயனுறுதித் தன்மையினை மதிப்பிடும் பொருட்டு தகவல் முறைமைக் கணக்காய்வுகள் பணி உள்ளக கணக்காய்வு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவத் தகவல் முறைமை மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஆகியவற்றின் போதுமான தன்மை பற்றி சபையானது மீளாய்வு செய்துள்ளது.
	ஊ. பிரதான முகாமைத்துவ ஆளணியை அடையாளங்காணுதல் மற்றும் பதவியிலமர்த்தல்.	இணங்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதியிடப்பட்ட இலங்கை மத்திய வங்கி கைந்நூல் மற்றும் 2010 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க வங்கிச் சட்ட வரையறுப்பு ஆகியவற்றுக்கேற்ப, கூட்டாண்மை செயலாட்சி நோக்கங்களுக்காக இவ் வங்கியின் பொதுமுகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர்கள், உதவிப் பொது முகாமையாளர்கள் மற்றும் ஒன்றிணைந்த தரங்களிலுள்ள அதிகாரிகள் ஆகியோரை பிரதான முகாமைத்துவ ஆளணியினராக (KMP) இவ் வங்கி அடையாளங் கண்டுள்ளது.
	எ. சபை பணிப்பாளர்கள் தமக்காகவும் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணிக்குமாக அதிகார பரப்பினையும் முக்கிய பொறுப்புகளையும் வரையறை செய்தல்.	இணங்கப்பட்டது. பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணிக்கான அதிகாரப் பரப்பு மற்றும் பிரதான பொறுப்புக்கள் முறையே சபை சாசனம் மற்றும் பதவி விபரம் என்பவற்றினூடாக வரையறுக்கப்பட்டுள்ளன. சபையின் சாசனமானது இறுதியாக 2017ம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்டது.
	ஏ. சபை கொள்கையுடன் ஒத்திசைவாக இருக்கின்ற, பிரதான முகாமைத்துவ ஆளணியினால் வங்கி அலுவல்கள் மீது பொருத்தமான மேற்பார்வை இருப்பதை உறுதிப்படுத்தல்.	இணங்கப்பட்டது. வங்கியின் கூட்டாண்மைத் திட்டத்திற்கமைவான செயற்றினானது செயல் திட்டத்தின் அடிப்படையில் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டது. பிரதான முகாமைத்துவ ஆளணியானது தத்தமது நோக்கெல்லைக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பில் சபைக்கும் உபகுழுக்களுக்கும் கிரமமாக முன்னிலைப்படுத்தல்களை மேற்கொள்வதுடன், தமது விடயப் பரப்புடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து விளக்கமளிக்கும் பொருட்டும் தேவைப்படும் போதும் சபையினால் அழைக்கப்படுகின்றனர்.
	ஐ. பின்வருவன உள்ளடங்கலாக, சபைப் பணிப்பாளர்களின் சொந்த செயலாட்சி நடைமுறைகளின் பயனுறுதி வாய்ந்த தன்மையினை காலக் கிரமமாக மதிப்பிடுதல்: (i) பணிப்பாளர்களினதும் பிரதான முகாமைத்துவ ஆளணியினதும் தெரிவு, பெயர்குறித்த நியமனம் மற்றும் தேர்வு (ii) ஆர்வ முரண்பாட்டு முகாமைத்துவம் மற்றும் (iii) பலவீனங்களை வரையறுத்தல் மற்றும் அவசியப்படுமிடத்து மாற்றங்களை நடைமுறைப்படுத்தல்	இணங்கப்பட்டது. தத்தமது நிபுணத்துவத் துறையின் அடிப்படையில் வியாபாரத் தந்திரோபாயம் மற்றும் பங்களிப்பு ஆகியன தொடர்பில் சபையின் சுய செயற்றிறன் மதிப்பீடொன்று வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது. தத்தமது கூட்டாட்சி செயற்பாடுகளினை மதிப்பீடு செய்யும் வகையில் சபையின் செயற்திறனிற்கான ஒரு சுய மதிப்பீடு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
	ஒ. பிரதான முகாமைத்துவ ஆளணிக்கான பொருத்தமான தொடர்ச்சி திட்டமொன்றை இவ் வங்கி கொண்டுள்ளதென்பதை உறுதிப்படுத்தல்.	இணங்கப்பட்டது. பிரதான முகாமைத்துவ ஆளணிக்கான (அப்படிப்பட்டதாக, கூட்டாண்மை மற்றும் நிறைவேற்று முகாமைக்கான) தொடர்ச்சி திட்டம் ஒன்று நடைமுறையில் உள்ளது. இது பெயர்குறித்த நியமன மற்றும் கூட்டாண்மை செயலாட்சிக் குழுவினால் 2018ம் ஆண்டில் மீளாய்வு மற்றும் மீளாக்கம் செய்யப்பட்டு சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	ஓ. கொள்கைகளை மீளாய்வு செய்யும் பொருட்டும், தொடர்பாடல் இணைப்புகளைத் தாபிக்கும் பொருட்டும் மற்றும் கூட்டாண்மை நோக்கங்களை நோக்கி முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் பொருட்டும் பிரதான முகாமைத்துவ ஆளணியுடன் தேவை அடிப்படையில் கிரமமான சந்திப்புக்களைச் செய்தல்.	இணங்கப்பட்டது. தத்தமது பரப்புக்களுடன் தொடர்புபட்ட கொள்கை மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் சபை மற்றும் சபை உப குழுக்களின் கூட்டங்களிற்கு பிரதான முகாமைத்துவ ஆளணியினர் கிரமமாக வருகை தருகின்றனர் அல்லது அழைக்கப்படுகின்றனர். கூட்டுரிமைத் திட்டத்தின் செயற்றிறன் மீளாய்வானது முகாமைத்துவத்தின் பங்குபற்றலுடன் வெளியிட அமைவிடங்களில் மேற்கொள்ளப்படுகின்றது.
	ஒள.ஒழுங்கு முறைப்படுத்தல் சூழ்நிலையை விளங்கிக் கொள்ளுதல் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்துபவர்களுடன் பயனுறுதியுள்ள உறவை இவ் வங்கி பேணுகின்றதென்பதை உறுதிப்படுத்தல்.	இணங்கப்பட்டது. பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டதும், சபைக்கு அனைத்து பொருத்தமான ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளும் அமைத்துக் கொடுக்கப்படுகின்றது. அவர்களுடைய பொறுப்புக்களை பயனுறுதி வாய்ந்த முறையில் நிறைவேற்றுவதற்காக அவர்களுடைய அறிவு காலத்துக்கு ஏற்ற நிலையில் உள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காக சபை கூட்டங்களில் அவர்களிற்கு ஒழுங்குபடுத்தல் சூழலின் அபிவிருத்தி குறித்தும் சுருக்கமான முறையில் கூறப்படுகின்றது. ஒழுங்குமுறைப்படுத்துபவர்களுக்கான அனைத்து திரும்பல்களையும் உள்ளடக்கி இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கப்பாட்டு அறிக்கையானது மாதாந்தம் சபைக்கு முன்னிலைப்படுத்தப்படுவதுடன் சபையினால் உன்னிப்பாக கண்காணிக்கப்படுகின்றது.
	∴.. வெளியக கணக்காய்வாளர்களை வாடகைக்கு அமர்த்துதல் மற்றும் மேற்பார்வை செய்தலில் உரிய கடும் முயற்சியைப் பிரயோகித்தல்.	இணங்கப்பட்டது. இந் நாட்டின் அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு, இது அரசுக்குடமையான தொழில்முயற்சியொன்றாக உள்ளதனால், கணக்காய்வாளர் நாயகம் அவர்களே இவ் வங்கியின் வெளியக கணக்காய்வாளர் ஆவார். எவ்வாறாயினும் கணக்காய்வுக்கு குழுவானது கணக்காளர் நாயகத்திற்கு வங்கியின் கணக்காய்வில் உதவும் வெளியகக் கணக்காய்வாளர்களை மேற்பார்வை செய்யும் வேலை அளிக்கப்பட்டுள்ளது.
3 (1) (ii)	சபையானது தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரை நியமிக்க வேண்டும் என்பதுடன் இவ் வழிகாட்டல்களின் 3 (5) இன் வழிகாட்டலுக்கு ஒத்திசைவாக தலைவரினதும் பிரதம நிறைவேற்று அதிகாரியினதும் தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை வரையறுத்தலும் அங்கீகரித்தலும் வேண்டும்.	3 (9) (ii) இன் வழிகாட்டலுடன் சேர்த்து வாசிக்கப்படும் போது இணங்கப்பட்டது. இலங்கை வங்கியானது எந்த அமைச்சரின் விடய நோக்கெல்லையின் கீழ் வருகின்றதோ அந்த அமைச்சரின் அனுமதியுடன் இவ் வங்கியில் பொது முகாமையாளர் எனக் குறிப்பிடப்படும் பிரதம நிறைவேற்று அலுவலரினை இச் சபை நியமிக்கின்றது அத்துடன் 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு ஏற்ப கூறப்பட்ட அமைச்சரினால் தலைவர் நியமிக்கப்படுகின்றார். சபையானது சபை சாசனத்தினுடாக இவ்விரு வகிபாகங்களுக்கும் இடையிலான அதிகார சமநிலையை பேணி அவர்களுடைய தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களையும் அங்கீகரித்துள்ளது.
3 (1) (iii)	சபையானது ஒழுங்காக கூட வேண்டும் என்பதுடன் சபைக் கூட்டங்களானவை அண்ணளவாக மாதாந்த இடைவெளிகளில் வருடம் ஒன்றுக்கு குறைந்தது பன்னிரண்டு முறைகள் நடாத்தப்பட வேண்டும். சமுகமளிப்பதற்கு உரித்துடைய பெரும்பான்மையான பணிப்பாளர்களின் நேரடியான முனைப்பான பங்குபற்றலினை அத்தகைய ஒழுங்கான சபைக் கூட்டங்கள் சாதாரணமாக உள்ளடக்க வேண்டும். எழுத்து மூலமான தீர்மானங்களை.்.பத்திரங்களைச் சுற்றிப் பரப்புதல் ஊடாக சபையின் சம்மதத்தினைப் பெற்றுக்கொள்தலானது சாத்தியப்படக்கூடிய அளவிற்கு தவிர்க்கப்பட வேண்டும்.	இணங்கப்பட்டது. சபைக் கூட்டங்கள் இரு வாரங்களுக்கொரு முறை கிரமமாக நடாத்தப்படுவதுடன் தேவை ஏற்படும் போது விசேட கூட்டங்களும் ஒழுங்கு செய்யப்படுகின்றன. மீளாய்வின் கீழ் இவ் ஆண்டின் போது சபை 23 தடவை கூடியது. சுற்றறிக்கை தீர்மானங்கள் ஊடாக அனுமதி பெறலை வங்கியானது குறைத்துக் கொண்டுள்ளது அத்துடன் இது விலக்களிக்கப்பட்ட அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப்படுவதுடன் அத்தகைய தீர்மானங்கள் அடுத்த கூட்டத்தில் சபையினால் செயல்வலுவாக்கம் செய்யப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டின் போது ஐந்து தீர்மானங்கள் சுற்றறிக்கை மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
3 (1) (iv)	இவ் வங்கியின் வியாபார மேம்பாடு மற்றும் இடர் முகாமைத்துவத்துடன் விடயங்கள் மற்றும் முன்மொழிவுகள் தொடர்புறுமிடத்து ஒழுங்கான சபைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சிநிரலில் அத்தகைய விடயங்கள் மற்றும் முன்மொழிவுகளை சகல பணிப்பாளர்களும் உள்ளடக்குவதற்கு ஏதுவாக ஏற்பாடுகள் தயாராக உள்ளன என்பதை இச் சபை உறுதிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது. கிரமமான கூட்ட நிகழ்ச்சி நிரலிற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் கூட்டங்கள் அட்டவணைப்படுத்தப்பட்டு சபைக்கு அறிவிக்கப்படுகின்றது.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (1) (v)	சகல பணிப்பாளர்களுக்கும் பங்குபற்றுவதற்குச் சந்தர்ப்பமொன்று வழங்கப்படும் பொருட்டு ஒழுங்கான சபைக் கூட்டம் பற்றி குறைந்தது ஏழு நாட்களிற்கு முன்னர் அறிவித்தல் வழங்கப்படுவதை சபை நடைமுறைகள் உறுதிப்படுத்த வேண்டும். ஏனைய சகல சபைக் கூட்டங்களுக்காகவும் பொருத்தமான அறிவித்தல் வழங்கப்படலாம்.	இணங்கப்பட்டது. வருட ஆரம்பத்தில் ஒரு வருடாந்த நாட்காட்டி ஊடாக கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்படுகின்றன. சபைக் கூட்டங்களிற்கான நிகழ்ச்சி நிரல் மற்றும் சபை பத்திரங்கள் என்பன கூட்டத் திகதிக்கு ஏழு நாட்களிற்கு முன்னர் ஒரு பாதுகாப்பான இலத்திரனியல் தொடர்பினூடாக (eSolution) பணிப்பாளர்களிற்கு அனுப்பப்படுகின்றன. ஏதேனும் விசேட கூட்டமொன்றிற்கு முன்னர் நியாயமான வகையில் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.
3 (1) (vi)	உடன் முன்வரும் 12 மாத காலப்பகுதியில் குறைந்தது மூன்றிலிரண்டு பங்கு கூட்டங்களிற்குச் சமுகமளித்திராத அல்லது நடாத்தப்பட்ட உடன் முன்வரும் மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு சமுகமளித்திராத பணிப்பாளர் ஒருவர் பணிப்பாளர் ஒருவராக இருப்பதை முடிவுறுத்த வேண்டுமென்பதை சபை நடைமுறைகள் உறுதிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும் மாற்றீடான பணிப்பாளர் ஒருவருக்கூடாக பணிப்பாளர் கூட்டங்களில் பங்குபற்றுதலானது வருகையாக ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும்.	கூட்டாண்மை ஆளுகை நெறிமுறைக்கு அமைவாக பணிப்பாளர்களின் வருகை மதிப்பிடப்படுகின்றது. பணிப்பாளர்களின் வருகை குறித்த விபரங்கள் பக்கம் 86 இல் தரப்பட்டுள்ளது. பணிப்பாளர்களின் வருகை இந் நெறிமுறைக்கு அமைவாக இருந்தது.
3 (1) (vii)	சபைக்கான செயலக சேவைகளையும் பங்குதாரர் கூட்டங்களையும் கையாளுதல் மற்றும் நியதிச்சட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளில் கூறப்பட்டுள்ள ஏனைய தொழிற்பாடுகளை செயற்படுத்தல் என்பன தனது பிரதான பொறுப்புகளாக இருக்க வேண்டிய, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்யும் கம்பனி செயலாளர் ஒருவரை சபையானது நியமித்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் மற்றும் அதன் திருத்தங்களுடன் தனது ஆற்றல்கள்/தகைமைகள் ஒத்திசைவாக இருக்கும் சட்டத்தரணி ஒருவராக இலங்கை வங்கியின் செயலாளர்/ சபையின் செயலாளர் உள்ளார். சபைக்கான செயலக சேவைகளை கையாளுதல் மற்றும் நியதிச்சட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளில் கூறப்பட்டுள்ள ஏனைய தொழிற்பாடுகளை செயற்படுத்தல் என்பன இவரது பிரதான பொறுப்புக்கள் ஆகும்.
3 (1) (viii)	சபை நடைமுறைகள் மற்றும் சகல ஏற்புடைய விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பன பின்பற்றப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் நோக்குடன் கம்பனி செயலாளரின் ஆலோசனை மற்றும் சேவைகளுக்கான அடைவினை சகல பணிப்பாளர்களும் கொண்டிருக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. ஒரு சட்டத்தரணியாகவும் அத்துடன் சபை நடைமுறைகளின் தொடர் நடவடிக்கைகளுக்கும், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள், வழிகாட்டல்கள் மற்றும் நியதிச்சட்டங்கள் ஆகியவற்றுடனான ஒத்திசைவுக்கும் மற்றும் இவ் வங்கியின் கூட்ட அறிக்கைகள் மற்றும் தொடர்புடைய பதிவுகளை வைத்திருந்து பேணுவதற்கும் பொறுப்பாகவுமிருக்கின்ற சபை செயலாளரின் ஆலோசனை மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சபையின் சகல உறுப்பினர்களும் சந்தர்ப்பத்தினைக் கொண்டுள்ளனர்.
3 (1) (ix)	கம்பனிச் செயலாளரானவர் சபைக் கூட்ட அறிக்கைகளைப் பேண வேண்டும் என்பதுடன் அத்தகைய கூட்ட அறிக்கைகளானவை எந்தவொரு பணிப்பாளரினதும் பொருத்தமான அறிவித்தலின் பேரில் எந்தவொரு பொருத்தமான நேரத்திலும் பரிசோதனைக்காக காட்டப்பட வேண்டும்.	இணங்கப்பட்டது. இலங்கை வங்கியின் செயலாளர்/சபையின் செயலாளர் சபை கூட்ட அறிக்கைகளை பேணுவதுடன் அவற்றை அனைத்து சபை உறுப்பினர்களுக்கும் ஒரு பாதுகாப்பான இலத்திரனியல் தொடர்பினூடாக (eSolution) சுற்றனுப்புகின்றனர். கூட்ட அறிக்கைகள் தொடர்ந்துவரும் சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. மேலும், கடந்தகால சபை ஆவணங்கள் மற்றும் கூட்ட அறிக்கைகளை ஒரு பாதுகாப்பான இலத்திரனியல் தொடர்பினூடாக பணிப்பாளர்கள் அணுகுகின்றனர்.

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (1) (x)	சபையானது அதன் கடமைகளை ஆற்றுகையில் உரிய கவனத்துடனும் மதிநுட்பத்துடனும் செயற்பட்டதா என்பது குறித்து, கூட்ட அறிக்கைகளிலிருந்து பெற்றுக்கொள்வது சாத்தியப்படக்கூடியதாக போதுமான விபரங்கள் சபையின் கூட்ட அறிக்கைகளில் பதிவுசெய்யப்பட வேண்டும். சபைக் கூட்டங்களிலான கலந்தாய்வுகளின் ஆழமான தன்மையை மதிப்பிடுவதற்கென ஒழுங்குறுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரிகளுக்கான ஆதாரமொன்றாகவும் இவ் அறிக்கைகள் செயற்பட வேண்டும். ஆதலினால், சபைக் கூட்ட அறிக்கைகள் பின்வருவனவற்றை தெளிவாக உள்ளடக்க அல்லது குறிப்பிட வேண்டும்: அ) சபையினால் அதன் கலந்தாய்வுகளில் பிரயோகிக்கப்பட்ட தரவு மற்றும் தகவல்களின் ஒரு சுருக்கம் ஆ) சபையினால் கருத்தில் கொள்ளப்பட்ட விடயங்கள் இ) சபையானது அதன் கடமைகளை உரிய கவனத்துடனும் மதிநுட்பத்துடனும் ஆற்றியிருந்ததா என்பதை விபரிக்கக்கூடிய விடயக் கண்டறிவுக் கலந்துரையாடல்கள் மற்றும் வாத அல்லது கருத்து மறுப்புரைப் பிணக்குகள் ஈ) சபையின் தந்திரோபாயங்கள், கொள்கைகளுடனான ஒத்திசைவினையும் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இயைந்தொழுகலையும் சுட்டிக்காட்டுகின்ற, உரிய நிறைவேற்றுனர்களினுடைய நற்சான்றிதழ் மற்றும் உறுதிப்படுத்தல்கள் உ) வங்கி முகங்கொடுக்கின்ற இடர் பற்றிய சபையின் அறிவு மற்றும் புரிந்துணர்வு அத்துடன் பின்பற்றப்பட்ட இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் பற்றியதோர் கண்ணோட்டம் அத்துடன் ஊ) தீர்மானங்கள் மற்றும் சபைத் தீர்மானங்கள்.	இணங்கப்பட்டது. தரப்பட்ட தகுதிவிதிகளை உள்ளடக்கி கூட்ட அறிக்கைகள் பேணப்படுகின்றன.
3 (1) (xi)	நியாயமான கோரிக்கையின் பேரில், பொருத்தமான சூழ்நிலைகளில் சுயாதீன தொழில்துறை ஆலோசனையை, வங்கியின் செலவில் பணிப்பாளர்கள் கோரிப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக சபையினால் உடன்பாடு காணப்பட்ட நடைமுறையொன்று இருத்தல் வேண்டும். உரிய பணிப்பாளர் அல்லது பணிப்பாளர்களுக்கு அவரின்/அவர்களின் கடமைகளை வங்கிக்கு ஆற்றுவதற்கு உதவும் பொருட்டு பணிப்பாளர்களுக்கு வெவ்வேறான சுயாதீன தொழில்துறை ஆலோசனையை வழங்குவதற்கு சபை தீர்மானிக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. சுயாதீன தொழில்துறை ஆலோசனையை பெறுவதற்கான பணிப்பாளர்களின் அணுகுமுறை கொள்கையொன்று தயாராக உள்ளதுடன் அவசியமெனக் கருதப்படும் போது சுயாதீன தொழில்துறை ஆலோசனையைப் பணிப்பாளர்களால் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (1) (xii)	பணிப்பாளர்களானவர்கள் ஏனைய நிறுவனங்களுடன் அல்லது தொடர்புபட்ட தரப்பினர்களுடனான தமது செயற்பாடுகளில், மற்றும் ஈடுபாடுகளில் ஆதாய முரண்பாடுகளை அல்லது ஆதாய முரண்பாடு தோற்றமுறுவதை தவிர்க்க வேண்டும். சபையானது பொருண்மையுடையதாக வரையறுத்துள்ள, சபையினால் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயம் ஒன்றில் பணிப்பாளர் ஒருவர் ஆதாய முரண்பாடொன்றைக் கொண்டிருப்பாராயின், கொடுக்கல் வாங்கலில் பொருண்மையுடைய ஆதாயத்தைக் கொண்டிராத சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்கள் [இவ் வழிகாட்டல்களின் 3 (2) (iv) இன் வழிகாட்டலைப் பார்க்கவும்] சமுகமளிக்கும் சபைக் கூட்டமொன்றில் இவ் விடயம் கையாளப்பட வேண்டும். மேலும், ஒரு பணிப்பாளரானவர், தான் அல்லது எவரேனும் தனது நெருங்கிய உறவினர் அல்லது, ஒரு பணிப்பாளர் கணிசமானளவு ஆதாயத்தை எக் கரிசனையாளர் மீது கொண்டிருக்கின்றாரோ அக் கரிசனையாளர் ஒருவர் ஆதாயத்தைக் கொண்டிருப்பது தொடர்பான ஏதேனும் சபைத் தீர்மானம் குறித்து வாக்களிப்பதிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும் அத்துடன் அச் சபைக் கூட்டத்தில் உரிய நிகழ்ச்சிநிரல் விடயத்திற்கான கூட்ட நடப்பெண்ணில் அவர் கணக்கில் எடுக்கப்படலாகாது.	இணங்கப்பட்டது. எச் சூழ்நிலையில் ஆதாய முரண்பாடு ஒன்று காணப்படுகின்றதோ அச் சூழ்நிலையினை ஏற்புடைய ஒழுங்குவிதிகளுக்கு இணங்க கையாளுவதற்கான தமது கடப்பாடு பற்றி பணிப்பாளர்கள் அறிந்து கொண்டுள்ளனர். சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆதாய முரண்பாடுகள் மீதான கொள்கை அமுலில் உள்ளது. ஒவ்வொரு சபைக் கூட்டத்திலும் ஒரு நடைமுறையாக (இரு வாரங்களுக்கொருமுறை இடம்பெறும்) வேறு ஏதேனும் சபை அல்லது நிறுவனத்துக்கான ஒப்பந்தங்கள்/புதிய நியமனங்களிலுள்ள ஏதேனும் ஆதாயத்தை வெளிப்படுத்தும்படி பணிப்பாளர்கள் வேண்டப்படுகின்றனர். ஆதாய முரண்பாடொன்று உள்ள சந்தர்ப்பங்களில் கலந்துரையாடல்களில் பங்குபற்றுவதிலிருந்தும், தமது அபிப்பிராயங்களைத் தெரியப்படுத்துவதிலிருந்தும் அல்லது அங்கீகரிப்பதிலிருந்தும் பணிப்பாளர்கள் விலகியிருப்பார்கள் அத்துடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் கூட்ட நடப்பெண்ணில் அப்பணிப்பாளர்கள் கணக்கெடுக்கப்படுவதில்லை.
3 (1) (xiii)	வங்கியின் நெறிப்படுத்தல் மற்றும் கட்டுப்பாடு சபையின் அதிகாரத்தின் கீழ் உறுதியாக உள்ளது என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு தீர்மானம் கருதி விசேடமாக சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள முறைசார்ந்த விடய அட்டவணை ஒன்றை இச் சபை கொண்டிருக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. ஆண்டின்போது மீளாய்வு செய்யப்பட்ட சபை சாசனத்தில் சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
3 (1) (xiv)	வங்கியினால் அதன் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு இயலாமலுள்ளது அல்லது இயலாமற் போகும் சாத்தியக்கூறு உள்ளது என்றோ அல்லது வங்குரோத்து நிலையை அண்மித்துள்ளது என்றோ அல்லது வைப்பாளர்கள் அல்லது ஏனைய கடன்கொடுனர்களிற்கான நிலுவைக் கொடுப்பனவை இடைநிறுத்தப் போகின்றது என்றோ சபையானது கருதினால், எந்தவொரு தீர்மானம் அல்லது நடவடிக்கை மேற்கொள்ள முன் வங்கியின் இந் நிலமை பற்றி வங்கி மேற்பார்வை திணைக்களத்தின் பணிப்பாளருக்கு சபை உடனடியாக அறிவிக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் போது அத்தகையதோர் சூழ்நிலை எழுந்திருக்கவில்லை. சபைக்குச் சமர்ப்பிக்கப்படும் மாதாந்த நிதி கூற்றுக்களானவை வங்கியின் கடன் தீர்க்கும் ஆற்றல் பற்றி சபைக்கு உறுதிப்பாட்டை வழங்குகின்றது.
3 (1) (xv)	வங்கியினால் அதன் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு இயலாமலுள்ளது அல்லது இயலாமற் போகும் சாத்தியக்கூறு உள்ளது என்றோ அல்லது வங்குரோத்து நிலையை அண்மித்துள்ளது என்றோ அல்லது வைப்பாளர்கள் அல்லது ஏனைய கடன்கொடுனர்களிற்கான நிலுவைக் கொடுப்பனவை இடைநிறுத்தப் போகின்றது என்றோ சபையானது கருதினால், எந்தவொரு தீர்மானம் அல்லது நடவடிக்கை மேற்கொள்ள முன் வங்கியின் இந் நிலமை பற்றி வங்கி மேற்பார்வை திணைக்களத்தின் பணிப்பாளருக்கு சபை உடனடியாக அறிவிக்க வேண்டும்.	மூலதனத்தின் போதுமானதன்மை விகிதம் மற்றும் ஏனைய மதிநுட்பம் வாய்ந்த அடிப்படைகளிற்கு ஏற்ப நாணய சபையினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வங்கிக்கு பல மட்டங்களில் நிதியீட்டம் செய்யப்பட்டுள்ளதென்பதை சபை உறுதிப்படுத்துகின்றது. மூலதன விரிவாக்கத் திட்டமானது காலாண்டு அடிப்படையில் சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. வங்கியின் மாதாந்த நிதிக் கூற்றுக்களுடன் சேர்த்து மூலதனத்தின் போதுமானதன்மை விகிதத்தின் (CAR) கணிப்பீடானது சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.
3 (1) (xvi)	இவ் வழிகாட்டல்களின் 3 ஆம் வழிகாட்டலுடனான இணக்கப்பாட்டினை விதித்துரைக்கும் வருடாந்த கூட்டாண்மை செயலாட்சி அறிக்கையொன்றை வங்கியின் வருடாந்த அறிக்கையில் சபை பிரசுரிக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. இவ் வெளிப்படுத்தல்களானவை வங்கியின் வருடாந்த அறிக்கையில் உள்ள கூட்டாண்மை செயலாட்சி அறிக்கையின் பகுதியாக இருக்கின்றன.
3 (1) (xvii)	வருடாந்தம் ஒவ்வொரு பணிப்பாளரினாலும் மேற்கொள்ளப்பட வேண்டிய சுய மதிப்பீட்டு திட்டமொன்றை சபை பின்பற்ற வேண்டும் என்பதுடன் அத்தகைய மதிப்பீடுகள் பற்றிய பதிவுகளைப் பேணவும் வேண்டும்.	இணங்கப்பட்டது. சுய மதிப்பீட்டு திட்டமொன்று பின்பற்றப்பட்டுள்ளது. இலங்கை வங்கி செயலாளரினால்/சபை செயலாளரினால் சபையின் சுய மதிப்பீட்டு அறிக்கைகள் பேணப்படுகின்றன.

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (2)	**சபையின் அமைப்பு**	
3 (2) (i)	சபை மீதான பணிப்பாளர்களின் எண்ணிக்கையானது 7 இற்கு குறைவாகவோ 13 இற்கு கூடுதலாகவோ இருத்தலாகாது.	1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களிற்கு அமைவாக சபை தொடர்பில் அனுமதிக்கப்பட்ட பணிப்பாளர்களின் எண்ணிக்கை ஆறு ஆவதுடன் தற்போதுள்ள சபையானது ஆறு பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. இவ் வழிகாட்டலின் கூறப்பட்ட தேவைப்பாட்டுடன் ஒத்திசைவுறும் பொருட்டு கூறப்பட்ட இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தினை மாற்றியமைக்கும் செயல்முறையில் வங்கி உள்ளது.
3 (2) (ii)	அ. பிரதம நிறைவேற்று அலுவலர் பதவியினை வகிக்கும் பணிப்பாளர் ஒருவரைத் தவிர பணிப்பாளர் ஒருவரின் மொத்த சேவைக் காலப்பகுதியானது ஒன்பது வருடங்களை விஞ்சலாகாது என்பதுடன் பதவியிலுள்ள அத்தகைய காலப்பகுதியானது 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை அத்தகைய பணிப்பாளரினால் புரியப்பட்ட மொத்த சேவைக் காலப்பகுதியினை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. இலங்கை வங்கியின் தற்போதய பணிப்பாளர்கள் ஒன்பது வருடங்களுக்கு குறைவான சேவைக் காலப்பகுதியில் பதவியில் உள்ளனர். அவர்களின் நியமனம் சம்பந்தமான விபரங்கள் இவ் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 24 இலிருந்து 27 வரையில் தரப்பட்டுள்ளன.
3 (2) (iii)	சபைப் பணிப்பாளர்களின் எண்ணிக்கையின் மூன்றிலொரு பங்கினை நறைவேற்றுப் பணிப்பாளர்களின் எண்ணிக்கையானது விஞ்சாதுவிடின் வங்கியின் பணிப்பாளர் ஒருவராக (இதனகத்துப் பின்னர் ”நிறைவேற்றுப் பணிப்பாளர்” ஒருவராக குறிப்பிடப்படும்) வங்கி ஒன்றின் ஓர் ஊழியர் நியமிக்கப்படலாம். அத்தகையதோர் சந்தர்ப்பத்தில், நிறைவேற்றுப் பணிப்பாளர்களில் ஒருவர் வங்கியின் பிரதம நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. இலங்கை வங்கியில் நிறைவேற்றுப் பணிப்பாளர் எவரும் இல்லை.
3 (2) (iv)	சபையானது குறைந்தது மூன்று சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்கள் அல்லது மொத்தப் பணிப்பாளர் எண்ணிக்கையின் மூன்றிலொரு பங்கு இவற்றில் எது உயர்வானதோ அதனைக் கொண்டிருக்க வேண்டும். இவ் உப வழிகாட்டலானது 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து முன்நோக்கியதாக ஏற்புடையதாதல் வேண்டும். நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் ஒருவர்: அ. வங்கியின் 1% இற்குக் கூடுதலாக நேரடி மற்றும் மறைமுக பங்கு மூலதனத்தைக் கொண்டிருந்தால் ஆ. இதன்கண்ணுள்ள 3 (7) ஆம் இலக்க வழிகாட்டலில் விபரிக்கப்பட்டவாறு, வங்கியின் ஒழுங்குறுத்தல் மூலதனத்தின் 10% இற்கு மேற்பட்டு, வங்கியுடன் ஏதேனும் வியாபாரக் கொடுக்கல் வாங்கலை தற்போது கொண்டிருப்பின் அல்லது பணிப்பாளராக அவரின் நியமனத்திற்கு உடன் முன்வரும் இரு வருட காலப்பகுதியின் போது கொண்டிருந்தால் இ. பணிப்பாளரான நியமனத்திற்கு உடன் முன்வரும் இரு வருட காலப்பகுதியின் போது வங்கியினால் பணிக்கமர்த்தப்பட்டிருந்தால் ஈ. இவ் வங்கியின் அல்லது வேறொரு வங்கியின் ஒரு பணிப்பாளர் அல்லது பிரதம நிறைவேற்று அலுவலர் அல்லது பிரதான முகாமைத்துவ ஆளணியின் ஓர் உறுப்பினர் அல்லது ஒரு குறிப்பிடத்தக்க பங்குதாரராகவுள்ள நெருங்கிய உறவினர் ஒருவரைக் கொண்டிருந்தால். இந் நோக்கத்திற்காக, ஒரு ‘நெருங்கிய உறவினர்’ என்பது வாழ்க்கைத் துணையாக அல்லது நிதி ரீதியில் தங்கியிருக்கும் பிள்ளையொன்றாகப் பொருள்பட வேண்டும்	இணங்கப்பட்டது. இலங்கை வங்கியின் முழுச் சபையும் ஆறு நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. அவற்றில் ஐந்து பேர் இவ் வழிகாட்டலில் குறித்துரைக்கப்பட்ட தகுதிவிதிகளை அடிப்படையாகக் கொண்டு சுயாதீனப் பணிப்பாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். நிதியமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளரானவர் பங்குதாரரான அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதனால், சுயாதீனமற்ற பணிப்பாளராகக் கருதப்படுகின்றார். பணிப்பாளர்களின் சுயவிபரக் குறிப்புக்களுடனான 24 தொடக்கம் 27 வரையான பக்கங்களிலும் கீழே 3 (2) (viii) ஆம் இலக்க வழிகாட்டலின் கீழும் அவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	உ. வங்கியின் குறித்த நிறுவனநலனில் அக்கறை ஊடயோர் ஒருவரைப் பிரதிநிதித்துவம் செய்தால் ஊ. பின்வருமாறு உள்ள கம்பனி அல்லது வியாபார நிறுவனம் ஒன்றில் ஓர் ஊழியராக அல்லது ஒரு பணிப்பாளராக அல்லது குறிப்பிடத்தக்க பங்குதாரர் ஒருவராக இருந்தால்: i. இவ் வழிகாட்டல்களின் 3 (7) ஆம் இலக்க வழிகாட்டலில் வரையறுக்கப்பட்டவாறு, வங்கியின் ஒழுங்குறுத்தல் மூலதனத்தின் 10% இற்கு மேற்பட்டு, வங்கியுடன் ஏதேனும் வியாபாரக் கொடுக்கல் வாங்கலொன்றை தற்போது கொண்டிருக்கும் கம்பனி அல்லது வியாபார நிறுவனம், அல்லது. ii. வங்கியின் ஏனைய பணிப்பாளர்கள் எவரேனும் பணிக்கமர்த்தப்பட்டிருக்கும் அல்லது பணிப்பாளர்களாகவிருக்கும் அல்லது குறிப்பிடத்தக்க பங்குதாரர்களாகவிருக்கும் கம்பனி அல்லது வியாபார நிறுவனம் அல்லது. iii. வங்கியின் ஏனைய பணிப்பாளர்கள் எவரேனும் இவ் வழிகாட்டல்களின் 3 (7) ஆம் இலக்க வழிகாட்டலில் வரையறுக்கப்பட்டவாறு, வங்கியின் ஒழுங்குறுத்தல் மூலதனத்தின் 10% இற்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கலொன்றை கொண்டிருக்கும் கம்பனி அல்லது வியாபார நிறுவனம் சுயாதீனமுடையவராகக் கருதப்படலாகாது.	
3 (2) (v)	சுயாதீனப் பணிப்பாளர் ஒருவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருட்டு மாற்றீடான பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படும். பட்சத்தில் அவ்வாறு நியமிக்கப்படும் ஆள் சுயாதீனப் பணிப்பாளர் ஒருவருக்கு ஏற்புடைய தகுதிவிதிகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.	எந்தவொரு பணிப்பாளரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருட்டு மாற்றீடான பணிப்பாளர் எவரும் நியமிக்கப்படவில்லை. (நிதி அமைச்சினதுப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளரிற்கு மாத்திரம் ஒரு மாற்றீட்டுப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார்)
3 (2) (vi)	நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்கள் நம்பகத்தன்மையான முன்னைய பதிவுகளினை கொண்ட ஆட்களாக இருக்க வேண்டும் அத்துடன்/அல்லது தந்திரோபாயம், செயற்றிறன் மற்றும் வளங்கள் குறித்த விடயங்களைத் தொடர்புபடுத்துவதற்கான சுயாதீன தீர்வொன்றைக் கொண்டுவருவதற்கு அவசியமான திறன்களையும் அனுபவத்தையும் கொண்டிருக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. நடைமுறையிலுள்ள பணிப்பாளர்களது சுயவிபரக் குறிப்புகள் மற்றும் தேவையான தகவல்கள் பக்கம் 24-27 ல் கூறப்பட்டுள்ளது.
3 (2) (vii)	சபையின் கூட்டமொன்றில் சமுகமளிக்கும் பணிப்பாளர்களின் எண்ணிக்கையின் அரைவாசிக்கும் கூடுதலானவர்கள் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களாக இருந்தாலொழிய, அத்தகைய கூட்டத்தில் கூட்ட நடப்பெண்ணை உருவாக்குவதற்குத் தேவைப்படுத்தப்படும் பணிப்பாளர்களின் எண்ணிக்கையினர் சமுகமளிக்கும் போதிலும், அத்தகைய கூட்டமானது உரியவாறு கூட்டப்படலாகாது. இவ் உப வழிகாட்டலானது 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து முன்நோக்கியதாக ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. இலங்கை வங்கியின் சகல சபை உறுப்பினர்களும் நிறைவேற்றுத்தரம் சாராதவர்கள்.
3 (2) (viii)	வங்கியின் பணிப்பாளர்களின் பெயர்களை வெளிப்படுத்தும் சகல கூட்டாண்மை தொடர்பாடல்களிலும் நிறைவேற்றுத்தரம் சாராத சுயாதீன பணிப்பாளர்கள் உள்ளார்ந்தமாக தெளிவாக இனங்காணப்பட வேண்டும். தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர்கள், நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்கள் மற்றும் நிறைவேற்றுத்தரம் சாராத சுயாதீன பணிப்பாளர்கள் ஆகியோரின் பெயர்கள் உள்ளடங்கலாக சபையின் உள்ளடக்கத்தினை பணிப்பாளர்களின் வகுதிக்கு அமைவாக வருடாந்த கூட்டாண்மை செயலாட்சி அறிக்கையில் வங்கி வெளிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சபையானது பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கியது - ► **திரு. ரொனால்ட் சீ பெரேரா, ஜனாதிபதி சட்ட ஆலோசகர்** சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்.'.தலைவர் (18 நவம்பர் 2018 இல் பதவி விலகி பின் மீள் நியமிக்கப்பட்டார் 12 பெப்ரவரி 2019ல் அமுலுக்கு வரும் வகையில் 2019 பெப்ரவரி 12இல் அபெப்ரவரி 2019ல் அமுலுக்கு வரும் வகையில் 2019 பெப்ரவரி 12இல் அமுலுக்கு வரும் வகையில் மிண்டும் கடமைகளை பொறுப்பேற்று கொண்டார்.

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
		► **திரு. சஜித் ஆர். ஆட்டிகல** நிறைவேற்றதிகாரமற்ற பதவிவழி பணிப்பாளர் (2018 நவம்பர் 25இல் அமுலுக்கு வரும்வகையில் பதவி நிறுத்தப்பட்டார்) ► **திரு. ரணெல் ரீ விஜேசிங்க** சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் (2018 யூலை 31இல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்) ► **திரு. எச் பி அஜித் குணவர்தன** சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் 2018ல் யூலை 20இல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார். ► **திரு.சமந்த ராஜபக்ஷ** சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் (2018 நவம்பர் 25இல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்) ► **திரு.மொஹான் விஜேசிங்ஹ** சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் (2018 யூலை 02இல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்) ► **திரு. கே.ஏ. விமலேந்திரராஜா** (திரு. எஸ்.ஆர். ஆட்டிகலவிற்கு பதிலாக 09 நவம்பர் 2017 நியமிக்கப்பட்டார். பின் 25 நவம்பர் 2018 பதவிவிலகினார்) ► **திரு. நீல் உமகிலிய** சுயாதீனமாக நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்/தலைவர் (2018 நவம்பர் 19இல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டு 2018 டிசெம்பர் 20இல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்) ► **அம்மணி விசாகா அமரசேகர** நிறைவேற்றதிகாரமற்ற பதவிவழி பணிப்பாளர் (2018 நவம்பர் 26இல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டு 2019 பெப்ரவரி 27ல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்) ► **திரு. வலித் விதான** சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் (2018 நவம்பர் 26இல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டு 2018 டிசம்பர் 20இல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்) ► **திரு. எச். இசுறு பாலபெதபென்டி** சுயாதீனமாக நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் (26 நவெம்பர் 2018 நியமிக்கப்படார்) ► **அம்மணி ஏ.வி.கே.எம் ஹேரத்** சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் (2018 நவம்பர் 26இல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டு 2018 டிசம்பர் 20இல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்) ► **திரு. ஹர்ஷ விஜேயவர்தன** சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் (2018 நவம்பர் 26இல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டு 2018 டிசம்பர் 20இல் அமுலுக்கு வரும் வகையில் பதவி விலகினார்)
3 (2) (ix)	சபையின் புதிய பணிப்பாளர்களின் நியமனத்திற்காக முறைசார்ந்த, கருத்திற்கொள்ளப்பட்ட மற்றும் வெளிப்படையான நடைமுறையொன்று இருத்தல் வேண்டும். சபைக்கான ஒழுங்கான அடுத்துறும் நியமனங்களுக்கான நடைமுறைகளும் செயல்வலுவில் இருத்தல் வேண்டும்.	1938 ஆம் ஆண்டு 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் ஏற்பாடுகளின் கீழ் எந்த அமைச்சரின் விடய நோக்கெல்லையின் கீழ் இவ் வங்கி வருகின்றதோ அவ் அமைச்சரின் ஊடாக இலங்கை அரசாங்க பங்குதாரரினால் சபைக்கான நியமனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (2) (x)	அமைய வெற்றிடம் ஒன்றை நிரப்பும் பொருட்டு நியமிக்கப்படும் சகல பணிப்பாளர்களும் அவர்களின் நியமனத்திற்குப் பின்னரான முதலாவது பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களினால் நடாத்தப்படும் தேர்தல் ஒன்றுக்கு உட்பட வேண்டும்.	உரிய அமைச்சர் அவர்களை நியமிப்பதனால் இச்சந்தர்ப்பம் எழவில்லை.
3 (2) (xi)	பணிப்பாளர் ஒருவர் பதவிவிலகினால் அல்லது பதவியிலிருந்து நீக்கப்படின், சபையானது பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்: அ. வங்கியுடன் உரிய பணிப்பாளரின் உடன்பாடின்மை தொடர்பிலான தகவல்கள் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாமல் பணிப்பாளரின் பதவிவிலகல் அல்லது பதவிநீக்கம் பற்றியும் மற்றும் அத்தகைய பதவிவிலகல் அல்லது பதவிநீக்கத்திற்கான காரணங்கள் பற்றியும் அறிவித்தல் அத்துடன்.	இணங்கப்பட்டது. தனித்த பங்குதாரரான இலங்கை அரசாங்கமானது நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஊடாக நியமனங்களையும் அதேபோன்று பதவி நீக்கங்களையும் மேற்கொள்கின்றது. ஏதேனும் பதவி விலகலும் அதே அமைச்சரிடம் தொடர்புபடுத்தப்படுகின்றது. இப் பதவிவிலகல்கள் பற்றி இலங்கை மத்திய வங்கி மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனை ஆகியவற்றுக்கு அறிவிக்கப்படுகின்றது.
	ஆ. பங்குதாரர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட வேண்டிய ஏதேனும் விடயங்கள் உள்ளனவா அல்லது இல்லையா என்பது பற்றி உறுதிப்படுத்தும் கூற்று ஒன்றை வெளியிடுதல்.	குறிப்பிடத்தக்க தேவையான எந்தவொரு விடயமும் இல்லை. வங்கியின் பங்குதாரர் அரசாங்கம் மற்றும் பணிப்பாளர்களின் மாற்றங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சினூடாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.
3 (2) (xii)	வங்கி ஒன்றின் துணைக் கம்பனியாக அல்லது இணைக் கம்பனி ஒன்றாக இன்னொரு வங்கியானது உள்ள சந்தர்ப்பம் தவிர அத்தகைய வங்கியின் பணிப்பாளர் ஒருவராக முதலில் குறிப்பிடப்பட்ட வங்கியின் ஒரு பணிப்பாளர் அல்லது ஓர் ஊழியர் நியமிக்கப்படவோ, தேர்வு செய்யப்படவோ அல்லது பெயர் குறித்துநியமிக்கப்படவோ கூடாது.	இவ் வங்கியின் அமுலாக்கச் சட்டவாக்கத்தின் (2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டம்) தேவைப்பாடுகளுக்கு அமைவாக பிரதேச அபிவிருத்தி வங்கிக்கான ஒரு பிரதிப் பொது முகாமையாளர் நியமனத்திற்கான சந்தர்ப்பம் நீங்கலாக இலங்கை வங்கியின் பணிப்பாளர்களோ அல்லது ஊழியர்களோ இன்னொரு வங்கியின் பணிப்பாளர்களாக இருக்கவில்லை
3 (3)	**பணிப்பாளர்களின் உடலுறுதி மற்றும் பொருத்தப்பாட்டினை அளவிடுவதற்கான தகுதிவிதிகள்**	
3 (3) (i)	பணிப்பாளராகச் சேவையாற்றும் ஆளொருவரின் வயது 70. இற்கு மேற்படலாகாது. இச் சூழமைவில், பின்வரும் பொதுவான விதிவிலக்கு ஏற்புடையதாதல் வேண்டும்: 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலுள்ளவாறு 70 வயதை எட்டியுள்ள அல்லது 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னராக 70 வயதை எட்டும் பணிப்பாளர் ஒருவர் 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கும் ஆகக்கூடிய மூன்று வருட மேலதிக காலப்பகுதிக்கு பதவியில் தொடரலாம்.	இணங்கப்பட்டது. இவ் வங்கியின் எந்தவொரு பணிப்பாளரும் 70 வயதிற்கு மேற்படவில்லை.
3 (3) (ii)	வங்கியின் துணைக் கம்பனிகள் அல்லது இணைக் கம்பனிகள் உள்ளடங்கலாக 20 இற்கு மேற்பட்ட கம்பனிகளின்/தானங்களின்/ நிறுவனங்களின் பணிப்பாளர் ஒருவராக ஓர் ஆள் பதவி வகித்தலாகாது.	இணங்கப்பட்டது. 20 இற்கு மேற்பட்ட கம்பனிகளின்.'.தானங்களின் பணிப்பாளர் பதவிநிலையை எந்தவொரு பணிப்பாளரும் வகிக்கவில்லை.
3 (4)	**சபையினால் கையளிக்கப்படும் முகாமைத்துவ தொழிற்பாடுகள்**	
3 (4) (i)	பணிப்பாளர்கள் அமுலிலுள்ள கையளித்தல் ஏற்பாடுகள் பற்றி கவனமாக ஆராய்ந்து தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.	இணங்கப்பட்டது.
3 (4) (ii)	சபையின் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான சபையின் ஆற்றலினை முழுமையாக அத்தகைய கையளிப்பானது குறிப்பிடத்தக்களவிற்கு தடைப்படுத்தும் அல்லது குறைக்கும் அளவிற்கு ஏதேனும் விடயங்களை சபைக் குழுவொன்றுக்கு, பிரதம நிறைவேற்று அலுவலருக்கு, நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு அல்லது பிரதான முகாமைத்துவ ஆளணிக்கு சபை கையளித்தலாகாது.	சபையானது அமுலிலுள்ள கையளித்தல் ஏற்பாடுகளை காலக்கிரமமாக மீளாய்வு செய்து அங்கீகரிக்கின்றது அத்துடன் கையளித்தல் பரப்புக்கள் வங்கியின் தேவைகளைக் கவனத்தில் கொண்டுள்ளமையை உறுதிப்படுத்தும் அதேவேளை சபை அதன் தொழிற்பாடுகளை பயனுறுதிவாய்ந்த வகையில் நிறைவேற்றுவதற்கும் ஏதுவாகின்றது. இச் செயன்முறையின் போது ஆளுகைக் கட்டளைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் கருத்திற் கொள்ளப்படுகின்றன.
3 (4) (iii)	சபையானது காலக்கிரம அடிப்படையில் அமுலிலுள்ள கையளித்தல் செய்முறைகளை, அவை வங்கியின் தேவைகளுக்குரியதாக காணப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு மீளாய்வு செய்தல் வேண்டும்.	

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (5)	**தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர்**	
3 (5) (i)	தலைவரினதும் பிரதம நிறைவேற்று அலுவலரினதும் வகிபாகங்கள் வெவ்வேறாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒரே தனியாளினால் ஆற்றப்படலாகாது.	இணங்கப்பட்டது. தலைவரினதும் இலங்கை வங்கியில் பொது முகாமையாளராகக் குறிப்பிடப்படும் பிரதம நிறைவேற்று அலுவலரினதும் வகிபாகங்கள் இரு வேறு தனியாட்களினால் வகிக்கப்படுகின்றன. தலைவரினதும் பொது முகாமையாளரினதும் பொறுப்புக்களை வரைவிலக்கணப்படுத்தும் சபை சாசனமொன்று அமுலிலுள்ளது.
3 (5) (ii)	தலைவர் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் ஒருவராகவும் அதே போன்று பொருத்தமுடையதாக சுயாதீனப் பணிப்பாளர் ஒருவராகவும் இருத்தல் வேண்டும். தலைவர் சுயாதீனப் பணிப்பாளர் ஒருவராக இல்லாத பட்சத்தில், சபையானது சிறந்த சுயாதீன ஆக்கக்கூறு ஒன்றை உறுதிப்படுத்தும் பொருட்டு பொருத்தமுடையதாக ஆவணப்படுத்தப்பட்ட விடய ஆய்வெல்லையுடன் சேர்த்து சிரேஷ்ட பணிப்பாளராக சுயாதீனப் பணிப்பாளர் ஒருவரை பதவியிலமர்த்த வேண்டும். சிரேஷ்ட பணிப்பாளரின் பதவிப்பெயரானது வங்கியின் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.	இணங்கப்பட்டது. இலங்கை வங்கியின் தலைவர் ஒரு சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் ஆவார். ஆகையால் ஒரு சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளரினை நியமிப்பதற்கான தேவை எழவில்லை.
3 (5) (iii)	தலைவரினதும் பிரதம நிறைவேற்று அலுவலரினதும் அடையாளம் மற்றும் தலைவரிற்கும் பிரதம நிறைவேற்று அலுவலருக்கும் இடையிலான ஏதேனும் உறவுமுறை நிதி, வியாபார, குடும்ப அல்லது ஏனைய பொருண்மையான/உரிய உறவு (உறவுகள்) உள்ளடங்கலாகஸ வகை ஏதுமிருப்பின் அவ் வகை மற்றும் சபை உறுப்பினர்களுக்கிடையிலான உறவுகள் ஆகியவற்றை சபையானது அதன் ஆண்டறிக்கையின் முக்கியமான பகுதியொன்றாக இருக்க வேண்டிய அதன் கூட்டாண்மை செயலாட்சி அறிக்கையில் வெளிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது. தலைவர் மற்றும் பொது முகாமையாளரின் அடையாளம் இவ் ஆண்டறிக்கையின் 25 தொடக்கம் 30 வரையான பக்கங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், இவ் வகிபாகங்களுக்கான பல குறிப்பீடுகள் அதில் தொடர்ந்தும் காணப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டு இறுதியிலுள்ளதாகப் பெறப்பட்ட வருடாந்த வெளிப்படுத்தல்களுக்கு அமைவாக சபையின் தலைவர், பொது முகாமையாளர் மற்றும் ஏனைய சபை உறுப்பினர்களுக்கிடையில் குறிப்பிடத்தக்களவிலான, நிதி, வியாபார அல்லது குடும்ப உறவு முறைகள் எதுவும் இல்லை.
3 (5) (iv)	தலைவரானவர்: (அ)சபைக்கு தலைமைத்துவத்தினை வழங்க வேண்டும் (ஆ)சபை பயனுறுதிவாய்ந்த வகையில் தொழிற்படுகிறது என்பதையும் அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றது என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும் அத்துடன் (இ) சகல பிரதான மற்றும் பொருத்தமான விடயங்கள் யாவும் சபையினால் உரியநேரத்தில் கலந்துரையாடப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது.
3 (5) (v)	ஒவ்வொரு சபைக் கூட்டத்திற்குமான நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்குவதற்காக ஏனைய பணிப்பாளர்களினால் பிரேரிக்கப்படும் ஏதேனும் விடயங்களைப் பொருத்தமுடையதாக கவனத்திற்கு எடுத்து, அந் நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து அங்கீகரிக்கும் பிரதான பொறுப்பினை தலைவர் கொண்டிருக்க வேண்டும். கம்பனிச் செயலாளருக்கு நிகழ்ச்சிநிரல் தயாரிப்புக் கடமையினைத் தலைவர் கையளிக்கலாம்.	இணங்கப்பட்டது. சுபைத் தலைவரின் கையளிக்கப்பட்ட அதிகாரத்திற்கமைய பொதுமுகாமையாளரூடாக சமர்ப்பிக்கப்படும் பத்திரங்கள் மற்றும் சபை உறுப்பினரால் கூறப்பட்ட ஏதாவது ஏனைய சம்பந்தப்பட்ட விடயத்தினை அடிப்படையாகக் கொண்டு வங்கியின்.'.சபையின் செயலாளரால் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படுகின்றது..
3 (5) (vi)	சபைக் கூட்டங்களில் எழுகின்ற விடயங்கள் குறித்து சகல பணிப்பாளர்களிற்கும் உரியவாறு விளக்கம் அளிக்கப்படுகின்றது என்பதை தலைவர் உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன் உரிய நேரத்தில் பணிப்பாளர்கள் போதுமான தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றனர் என்பதையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.	சபைக் கூட்டங்களில் எழுகின்ற விடயங்கள் குறித்து சபைக்கு போதுமான விளக்கம் மற்றும் தகவல் வழங்கப்பட்டுள்ளது என்பதை தலைவர் உறுதிப்படுத்துகின்றார். இதனை உறுதிசெய்வதற்கு பின்வரும் நடைமுறைகள் அமுலில் உள்ளன: ▶ சபை பத்திரங்கள் சபை கூட்டத்திற்கு ஏழு நாட்களிற்கு முன்னர் பாதுகாப்பான இலத்திரன்சார் இணைப்பினூடாக அனுப்பப்படுகின்றன. ▶ விளக்கமளிப்பதற்கும் தெளிவூட்டுவதற்கும் முகாமைக் குழுவின் தொடர்புடைய உறுப்பினர்கள் தயாராகவுள்ளனர். ▶ பணிப்பாளர்கள் வங்கியின் செயலுறுதித் தன்மை மற்றும் உறுதிப்பாட்டினை அளவிடுவதற்கு ஏதுவாக ஒழுங்கான அடிப்படையில் ஏற்கப்பட்ட வடிவத்தில் முகாமைத்துவத் தகவல்கள் கிரமமான முறையில் வழங்கப்படுகின்றன. வங்கியின் செலவில் தேவையடிப்படையில் சுயாதீன தொழிற்துறை ஆலோசனை

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (5) (vii)	சபையின் அலுவல்களுக்கான முழுமையானதும் முனைப்பானதுமான பங்குபற்றலினை செய்யும் பொருட்டு சகல பணிப்பாளர்களையும் தலைவர் ஊக்கப்படுத்த வேண்டும் என்பதுடன் வங்கியின் அதிசிறந்த நலனிற்காக சபை செயற்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கான தலைமைத்துவத்தையும் வகிக்க வேண்டும்.	இணங்கப்பட்டது.
3 (5) (viii)	தலைவர் குறிப்பாக நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களின் பயனுறுதி வாய்ந்த பங்குபற்றலுக்கு உதவ வேண்டும் என்பதுடன் நிறைவேற்றுத்தரம் சார்ந்த மற்றும் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களுக்கிடையில் ஆக்கபூர்வமான உறவுகளை உறுதிப்படுத்தவும் வேண்டும்..	இணங்கப்பட்டது. முழுச் சபையும் நிறைவேற்றுத்தரம் சாராத சகல பணிப்பாளர்களையும் உள்ளடக்கியுள்ளது.
3 (5) (ix)	பிரதான முகாமைத்துவ ஆளணியின் நேரடி மேற்பார்வை உள்ளடங்கும் செயற்பாடுகளிலும் வேறு ஏதேனும் நிறைவேற்றுக் கடமைகள் யாவற்றிலும் தலைவர் ஈடுபடலாகாது.	இணங்கப்பட்டது. தலைவர் ஒரு சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் ஆவதுடன் பிரதான முகாமைத்துவ ஆளணியின் நேரடி மேற்பார்வையில் அல்லது வேறு ஏதேனும் நிறைவேற்றுக் கடமைகளில் சம்பந்தப்படுவதில்லை.
3 (5) (x)	பங்குதாரர்களுடன் பயனுறுதி வாய்ந்த தொடர்பாடல் பேணப்படுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதையும் பங்குதாரர்களின் கருத்துக்கள் சபைக்கு தொடர்புபடுத்தப்படுவதையும் தலைவர் உறுதிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது. தனித்த பங்குதாரரான இலங்கை அரசாங்கத்துடன் பயனுறுதி வாய்ந்த தொடர்பாடல் பேணப்படுகின்றது. சபைக்கும் பங்குதாரருக்கும் இடையிலான ஊடாகமாக பதவி வழிவந்த பணிப்பாளர் செயற்படுகின்றார்.
3 (5) (xi)	வங்கி நடவடிக்கைகள் மற்றும் வியாபாரத்தின் நாளாந்த முகாமைத்துவத்துக்குப் பொறுப்பான அதியுயர் நிறைவேற்று அதிகாரியாக பிரதம நிறைவேற்று அலுவலர் தொழிற்பட வேண்டும்.	இணங்கப்பட்டது. வங்கியின் நாளாந்த நடவடிக்கைகளுக்கு பொது முகாமையாளரே பொறுப்பாவார். பொது முகாமையாளரின் அத்தகைய அதிகாரம் பற்றி சபைச் சாசனம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (6)	**சபை நியமித்த குழுக்கள்**	
3 (6) (i)	இவ் வழிகாட்டல்களின் 3 (6) (ii), 3 (6) (iii), 3 (6) (iv) மற்றும் 3 (6) (v) ஆம் வழிகாட்டல்களில் விதித்துரைக்கப்பட்டவாறு குறைந்தது நான்கு சபைக் குழுக்களை ஒவ்வொரு வங்கியும் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் சபைக்கு நேரடியாக அறிக்கையிட வேண்டும். சகல குழுக்களும் குழுத் தலைவரின் மேற்பார்வையின் கீழ் கூட்டங்களை ஒழுங்குபடுத்தி கூட்ட அறிக்கைகள், பதிவுகள் போன்றவற்றைப் பேணும் பொருட்டு செயலாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும். சபையானது ஒவ்வொரு குழுக்களினதும் செயற்றிறன் பற்றிய அறிக்கையொன்றை, வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அவற்றின் கடமைகள் மற்றும் வகிபாகங்கள் தொடர்பில் சமர்ப்பிக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. சபைக்கு நேரடியாக அறிக்கையிடுகின்ற, இவ் வழிகாட்டலின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு நான்கு சபை உப குழுக்கள் (அப்படிப்பட்டதாக, கணக்காய்வு, மனித வளங்களும் ஊதியமும், பெயர்குறித்த நியமனமும் கூட்டாண்மை ஆட்சியும் குழு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழு) தாபிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு உபகுழுவிற்குமான விடய ஆய்வெல்லையானது அமுலில் உள்ளதுடன் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றன. இலங்கை வங்கியின் செயலாளர்/சபை செயலாளர் அனைத்து உப குழுக்களினதும் செயலாளராக சேவையாற்றுவதுடன் உரிய தலைவர்களின் மேற்பார்வையுடன் கூட்ட அறிக்கைகள் போன்றவற்றைப் பேணுகின்றார். உபகுழுக்களின் அறிக்கைகள் இவ் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கணக்காய்வு குழு பக்கங்கள் 89 இலிருந்து 92 வரை. ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழு பக்கங்கள் 93 மற்றும் 95 வரை. மனித வளங்களும் ஊதியமும் குழு பக்கங்கள் 96-97 பெயர்குறித்த நியமனமும் கூட்டாண்மை ஆட்சியும் குழு பக்கங்கள் 98-99 தகவல் தொழில்நுட்பக் குழு பக்கங்கள் 100 -101 அரசாங்கம் இவ் வங்கியின் தனித்த பங்குதாரராக இருந்து, இவ் வங்கியின் ஆண்டறிக்கையானது இலங்கை பாராளுமன்றத்திற்கும் உரிய அமைச்சுக்களுக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
3 (6) (ii)	கணக்காய்வு குழு தொடர்பில் பின்வரும் விதிகள் ஏற்புடையதாதல் வேண்டும். அ. கணக்கீடு அத்துடன்/அல்லது கணக்காய்வில் தகைமையும் அனுபவத்தையும் கொண்ட சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளராக குழுத் தலைவர் இருத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. 80 ஆம் பக்கத்திலுள்ள சுயவிபரக் குறிப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவையான தகைமைகளை கொண்ட ஒரு சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளரே கணக்காய்வு குழுவின் தலைவர் ஆவார்.
	ஆ. குழுவின் சகல உறுப்பினர்களும் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களாக இருக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. குழுவின் சகல உறுப்பினர்களும் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களாவர்.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	இ. குழுவானது பின்வருவனவற்றுடன் தொடர்புபட்ட விடயங்கள் பற்றிய பரிந்துரைகளைச் செய்ய வேண்டும்: (i) உரிய நியதிச்சட்டங்களிற்கு ஒத்திசைவாக வழங்கப்படவுள்ள கணக்காய்வுச் சேவைகளுக்கான வெளியகக் கணக்காய்வாளரின் நியமனம் (ii) காலத்திற்குக் காலம் கணக்காய்வாளர்களுக்கு வழங்கப்படும் மத்திய வங்கி வழிகாட்டல்களின் அமுலாக்கம் (iii) உரிய கணக்காய்வு நியமங்களின் பிரயோகம் அத்துடன் (iv) கணக்காய்வுப் பங்காளரினைப் பணிக்கமர்த்தலானது ஐந்து வருடங்களை விஞ்சாதிருப்பின், அத்துடன் குறித்த கணக்காய்வுப் பங்காளரானவர் முன்னைய பதவிக்கால முடிவுத் திகதியிலிருந்து மூன்று வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் கணக்காய்வுக்காக மீளப் பணிக்கமர்த்தப்படவில்லையாயின் கணக்காய்வாளரின் சேவைக்காலம், கணக்காய்வுக் கட்டணம் மற்றும் ஏதேனும் பதவிவிலகல் அல்லது பதவிநீக்கம்.	இணங்கப்பட்டது. விடய ஆய்வெல்லைக்கு இணங்க, கணக்காய்வுக் குழுவானது மற்றய பலவற்றுக்கிடையில் பின்வரும் பரிந்துரைகளைச் செய்கின்றது: ► காலத்திற்குக் காலம் கணக்காய்வாளர்களுக்கு வழங்கப்படும் மத்திய வங்கி வழிகாட்டல்களின் அமுலாக்கம். ► உரிய கணக்காய்வு நியமங்களின் பிரயோகம். கணக்காய்வாளர் நாயகமானவர் இவ் வங்கியின் வெளியகக் கணக்காய்வாளராக இருப்பதனால், வெளியகக் கணக்காய்வாளரின் பணிக்கமர்த்தலில் செயற்படுவதற்கான எந்தவொரு வகிபாகத்தையும் இக் குழு கொண்டிருக்கவில்லை.
	ஈ. ஏற்புடைய நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கிணங்க வெளியக கணக்காய்வாளரின் சுதந்திரம் மற்றும் குறிக்கோள் அத்துடன் கணக்காய்வு செயல்முறையின் பயனுறுதித் தன்மை ஆகியவற்றை குழுவானது மீளாய்வு செய்து கண்காணிக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. கணக்காய்வாளர் நாயகமே வங்கியின் கணக்காய்வாளர் ஆகையால் இலங்கை அரசியலமைப்பிற்கு அமைவாக அவருடைய சுதந்திரம் மற்றும் பயனுறுதித்தன்மைக்கு உத்தரவாதம் உள்ளது. அவ்வாறே கணக்காளர் நாயகமும் அவரிற்கு வங்கியின் கணக்காய்வு நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு உதவுவதன் நியமிக்கப்படும் எந்தவொரு கணக்காய்வாளரின் சுதந்திரத்தினை உறுதி செய்ய வேண்டும்.

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	உ. உரிய நியதிச்சட்டங்கள், ஒழுங்குவிதிகள், தேவைப்பாடுகள் மற்றும் வழிகாட்டல்கள் ஆகியவற்றின் கீழ் அனுமதிக்கப்பட்ட கணக்காய்வு சாராத சேவைகளை வழங்கும் பொருட்டு வெளியகக் கணக்காய்வாளர் ஒருவரைப் பணிக்கமர்த்தல் தொடர்பான கொள்கை ஒன்றை குழுவானது விருத்தி செய்து நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யும் போது, கணக்காய்வு சாராத சேவைகளின் வெளியகக் கணக்காய்வாளர் ஒருவரின் மூலமான ஏற்பாடானது வெளியகக் கணக்காய்வாளரின் சுதந்திரம் மற்றும் குறிக்கோளை பாதிப்பதில்லை என்பதை குழு உறுதிப்படுத்த வேண்டும். கணக்காய்வு சாராத சேவைகளின் ஏற்பாடு தொடர்பில் வெளியகக் கணக்காய்வாளரின் சுதந்திரம் மற்றும் குறிக்கோளை மதிப்பிடும் போது குழுவானது பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ள வேண்டும்: (i) கணக்காய்வு நிறுவனமொன்றின் திறன்களும் அனுபவமும் கணக்காய்வு சாராத சேவைகளின் பொருத்தமான வழங்குனராக அதனை உருவாக்குகின்றதர் (ii) வெளியகக் கணக்காய்வாளரின் மூலமான அத்தகைய சேவைகளின் ஏற்பாட்டிலிருந்து விளையப்பெறும் கணக்காய்வினை நடாத்தும் போது குறிக்கோள் அத்துடன்/அல்லது சுதந்திரம் மீது அச்சுறுத்தல் எதுவுமில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கான பாதுகாப்புமுறைகள் அமுலில் உள்ளனவர் அத்துடன் (iii) கணக்காய்வு சாராத சேவைகளின் தன்மை, தொடர்புபட்ட கட்டண மட்டங்கள் மற்றும் கணக்காய்வு நிறுவனத்துக்குரியதாக தனித்தனியாகவும் மொத்தமாகவும் உள்ள கட்டண மட்டங்கள் என்பன வெளியகக் கணக்காய்வாளரின் குறிக்கோள் அத்துடன்/அல்லது சுதந்திரம் மீது ஏதேனும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றதா.	இணங்கப்பட்டது. கணக்காய்வாளர் நாயகமே வங்கியின் கணக்காய்வாளர் ஆகையால் இவ்வகையான சந்தர்ப்பம் ஏற்படவில்லை. எவ்வாறாயினும், குழுவானது கணக்காளர் நாயகத்தினால் கணக்காய்வ சாராத வங்கியின் சேவைகளைக் கணக்காய்வு செய்வதற்காக அவரிற்கு உதவி புரிவதற்கு கணக்காய்வு நிறுவனத்தினை நியமனம் செய்யும் ஏற்பாடானது அந்நிறுவனத்தின் சுதந்திரத்தனையும் குறிக்கோளையும் பாதிக்காமையை உறுதி செய்கின்றது.
	C. குழுவானது கணக்காய்வு ஆரம்பிக்கும் முன்னர் பின்வருவன உள்ளடங்கலாக கணக்காய்வின் தன்மை மற்றும் நோக்கெல்லை பற்றி வெளியகக் கணக்காய்வாளர்களுடன் கலந்துரையாடி முடிவுக்கு வர வேண்டும்: (i) கூட்டாண்மை ஆளுகை தொடர்பில் உரிய வழிகாட்டல்களுடன் வங்கியின் இணக்கப்பாட்டு மதிப்பீடு மற்றும் நிதி அறிக்கையிடல் மீது முகாமையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் (ii) உரிய கணக்கீட்டுக் கொள்கைகளுக்கிணங்க வெளியக நோக்கங்களுக்காக நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் அறிக்கையிடல் கடப்பாடுகள் அத்துடன் (iii) ஒன்றுக்கு மேற்பட்ட கணக்காய்வு நிறுவனங்கள் உள்ளடங்கும் நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு	இணங்கப்பட்டது. கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் பரப்பு என்பன கணக்காய்வாளர் நாயகத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன அத்துடன் கணக்காய்வாளர் நாயகத்திற்கு உதவுகின்ற பட்டயக் கணக்காளரான நிறுவனத்தினால் அளவு மற்றும் தொடர்புடைய இடரினை கருத்திற்கொண்டு நோக்கெல்லைக்கான மேலதிக மாற்றங்கள்/திருத்தங்களை மேற்கொள்ள முடியும் எனக் கூறப்பட்டுள்ளது. 2018ம் ஆண்டு கணக்காய்விற்கு எந்த நிறுவனமும் நியமிக்கப்படவில்லை

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	எ. வெளிப்படுத்தல்களிற்காக தயாரிக்கப்படும் வங்கியின் நிதிக் கூற்றுக்கள், அதன் ஆண்டறிக்கை, கணக்குகள் மற்றும் காலாண்டு அறிக்கைகள் மற்றும் அவை கொண்டுள்ள குறிப்பிடத்தக்க நிதியியல் அறிக்கையிடல் தீர்மானங்கள் ஆகியவற்றின் ஒழுங்கமைப்பினை மேற்பார்வை செய்வதற்காக வங்கியின் நிதியியல் தகவல்களை கணக்காய்வு குழு மீளாய்வு செய்ய வேண்டும். சபைக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் வங்கியின் ஆண்டறிக்கை, கணக்குகள் மற்றும் காலாண்டு அறிக்கைகள் ஆகியவற்றை மீளாய்வு செய்யும் போது, சபையானது குறிப்பாக பின்வருவனவற்றில் கவனம் செலுத்த வேண்டும்: (i) முக்கிய தீர்மான பிரிவுகள் (ii) கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் ஏதாவது மாற்றங்கள் (iii) கணக்காய்விலிருந்து எழுகின்ற முக்கியமான சீராக்கங்கள் (iv) தொடர்ந்து செல்லல் எடுகோள் அத்துடன் (v) தொடர்புடைய கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாடு.	இணங்கப்பட்டது. வங்கியின் மாதாந்த, காலாண்டு ரீதியான மற்றும் வருடாந்த நிதி விடயங்களை மீளாய்வு செய்யும் போது குழுவினால் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான செய்முறையொன்று உள்ளதுடன் சபைக்கு பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
	ஏ. குழுவானது இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வில் எழுகின்ற விடயங்கள், பிரச்சினைகள் மற்றும் ஒதுக்கீடுகள் பற்றியும், அத்துடன் அவசியப்படின், பிரதான முகாமைத்துவ ஆளணியினர் வருகைதராத போது கலந்துரையாடப்படக்கூடிய அவ் விடயங்கள் உள்ளடங்கலாக கணக்காய்வாளர் கலந்துரையாட விரும்பக்கூடிய ஏதேனும் விடயங்கள் பற்றியும் கலந்துரையாட வேண்டும்.	இணங்கப்பட்டது. இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வில் எழுகின்ற விடயங்கள், பிரச்சினைகள் மற்றும் ஒதுக்கீடுகள் பற்றி குழு கலந்துரையாடுகின்றது. தேவையாயின் கணக்காய்வாளர் நாயகம் கணக்காய்வாளர் கூட்டங்கள் நடைபெறும்போது உடனிருந்தனர்.
	ஐ. வெளியகக் கணக்காய்வாளர்களின் முகாமைத்துவ கடிதம் மற்றும் அதற்கான முகாமையின் பதில் ஆகியன குழுவினால் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.	இணங்கப்பட்டது.
	ஒ. வங்கியின் உள்ளக கணக்காய்வு தொழிற்பாடு குறித்து பின்வரும் நடவடிக்கைகளைக் குழு எடுக்க வேண்டும்: (i) உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் நோக்கெல்லை, தொழிற்பாடுகள் மற்றும் வளங்களின் போதுமானதன்மையினை மீளாய்வு செய்தல், மற்றும் திணைக்களமானது அதன் பணியை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான அதிகாரத்தினைக் கொண்டுள்ளது என்பதில் சுய திருப்தி கொள்தல்;	இணங்கப்பட்டது. குழு உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் நோக்கெல்லை, தொழிற்பாடுகள் மற்றும் வளங்களின் போதுமை தன்மையை மீளாய்வதுடன் அவை சம்பந்தமான தேவையான பரிந்துரைகளை மேற்கொள்கின்றது.
	(ii) உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் உள்ளக கணக்காய்வு செய்முறைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்தல், மற்றும் அவசியமானவிடத்து, உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் பரிந்துரைகளின் பேரில் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதிப்படுத்தல்;	இணங்கப்பட்டது. குழுவானது உள்ளக் கணக்காய்வு நிகழ்ச்சி திட்டங்களையும் அதன் முடிவுகளையும் மீளாள்வு செய்வதுடன் அவற்றின் மேம்படுத்தலிற்கான தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையை உறுதி செய்கின்றது.

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	(iii) உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் தலைவர் மற்றும் சிரேஷ்ட அலுவலர்களின் ஏதேனும் செயல்நிறைவேற்ற மதிப்பீட்டினை அல்லது கணிப்பீட்டினை மீளாய்வு செய்தல்;	இணங்கப்பட்டது. பிரதம உள்ளக கணக்காய்வாளரின் செயற்றிறன் மதிப்பீடு, பணிச் செய்முறை மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டின் பெறுபேறுகள் ஆகியன கணக்காய்வுக் குழுவினால் மதிப்பிடப்பட்டுள்ளன. சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுச் செய்முறைக்கு இணங்க பிரதம உள்ளக கணக்காய்வாளரினால் சிரேஷ்ட அலுவலர்களின் செயற்றிறன் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதுடன் கணக்காய்வுக் குழுவுக்கு முன் சமர்ப்பிக்கப்பட்டது.
	(iv) தலைவர், சிரேஷ்ட அலுவலர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டிற்கான வெளித்தரப்பு சேவை வழங்குனர்கள் ஆகியோரின் ஏதேனும் நியமனம் அல்லது பதவி முடிவுறுத்தல் குறித்துப் பரிந்துரை செய்தல்;	இணங்கப்பட்டது.
	(v) பிரதம உள்ளக கணக்காய்வாளர் உள்ளடங்கலாக உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் சிரேஷ்ட அலுவலர்களினதும் யாரேனும் வெளித்தரப்பு சேவை வழங்குனர்களினதும் பதவி விலகலினை குழு மதிப்பீடு செய்வதையும் அத்துடன் பதவி விலகும் சிரேஷ்ட ஊழியர்கள் மற்றும் வெளித்தரப்பு சேவை வழங்குனர்கள் அதற்கான காரணத்தினை சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குவதையும் உறுதிசெய்தல்.	இணங்கப்பட்டது. இந்த ஆண்டின் போது அத்தகைய சூழ்நிலை எழுந்திருக்கவில்லை.
	(vi) உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடானது அவை கணக்காய்வு செய்யும் செயற்பாடுகளில் இருந்து சுயாதீனமானது என்பதையும் இத் தொழிற்பாடானது பாரபட்சமற்றதாகவும் திறமையாகவும் மற்றும் உரிய தொழில்சார்ந்த கவனத்துடனும் ஆற்றப்படுவதையும் உறுதி செய்தல்.	இணங்கப்பட்டது. இவ் வங்கியின் நிறுவனக் கட்டமைப்புக்கு இணங்க, கணக்காய்வுக் குழுவுக்கு ஊடாக பிரதம உள்ளக கணக்காய்வாளரானவர் சபைக்கு நேரடியாக அறிக்கையிடுவதுடன் இவ் வங்கியின் ஏதேனும் நடவடிக்கைகள் தொடர்பில் அவர் சுயாதீனமுடையவராவார்.
	ஒ. உள்ளக விசாரணைகளின் பிரதான முடிவுகளினையும் அவற்றிற்கான முகாமைத்துவத்தின் பதில்களையும் குழு கருத்திற்கொள்ள வேண்டும்	இணங்கப்பட்டது. உள்ளக விசாரணைகளின் பிரதான முடிவுகளினையும் அவற்றிற்கான முகாமைத்துவத்தின் பதில்களையும் கணக்காய்வு குழு மீளாய்வு செய்துள்ளது.
	ஒள. பிரதம நிதி அலுவலர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் வெளியக கணக்காய்வாளர்களின் ஒரு பிரதிநிதி ஆகியோர் சாதாரணமாக கூட்டங்களுக்கு சமுகமளிக்கலாம். ஏனைய சபை உறுப்பினர்களும் பிரதம நிறைவேற்று அலுவலருங்கூட குழுவின் அழைப்பின் பேரில் கூட்டங்களுக்கு சமுகமளிக்கலாம். எவ்வாறாயினும், ஆண்டுக்கு குறைந்தது இரு தடவையாவது, குழுவானது நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் பிரசன்னமின்றி வெளியகக் கணக்காய்வாளர்களுடன் சந்திப்பினை மேற்கொள்ள வேண்டும்.	இணங்கப்பட்டது. பொது முகாமையாளர், பிரதம நிதி அலுவலர், பிரதம இடர் அலுவலர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், இணக்கப்பாட்டு அதிகாரி, கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதி மற்றும் கணக்காய்வாளர் ஆகியோர் குழுவின் கூட்டங்களில் பங்குபற்றினர். பொது முகாமையாளர் குழுவின் அழைப்பின் பேரில் கூட்டங்களுக்கு சமுகமளித்துள்ளார். முகாமைத்துவ உறுப்பினர்கள், ஏதாவது விளக்கங்கள் தேவைப்படின், அழைக்கப்படுவர். தேவை ஏற்பட்டபோது வெளியக கணக்காளர்களுடன் "மூடிய கதவு" கூட்டம் முகாமைத்துவ சமூகமளிப்பின்றி இடம்பெற்றது..

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	க. குழுவானது பின்வருவனவற்றைக் கொண்டிருக்க வேண்டும்: (i) எந்தவொரு விடயத்தையும் அதன் ஆய்வெல்லைக்குள் விசாரணை செய்வதற்கான வெளிப்படையான அதிகாரம்; (ii) அக் குழு அவ்வாறு செய்வதற்குத் தேவையான வளங்கள் (iii) முழுமையான தகவல் கிடைப்பனவு அத்துடன் (iv) வெளியக தொழிற்துறை ஆலோசனையை பெறுவதற்கு மற்றும் தேவை ஏற்படின் அதனுடன் தொடர்புடைய அனுபவத்துடன் கூடிய வெளியாட்களினை வரவழைப்பதற்குமான அதிகாரம்.	இணங்கப்பட்டது.
	ங. குழுவானது கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள் குறித்து உரிய கவனத்துடன் கிரமமாக கூட வேண்டும் என்பதுடன் அதன் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் போது அதன் முடிவுகளைப் பதிவு செய்ய வேண்டும்.	இணங்கப்பட்டது. கணக்காய்வு குழு கிரமமான கூட்டங்களினை அட்டவணைப்படுத்தியது. தேவைப்படின் மேலதிக கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. குழுவானது ஆண்டுக் காலப் பகுதியில் 10 தடைவைகள் கூடியது. கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள் சம்பந்தமாக உரிய கவனத்துடன் குழுவின் உறுப்பினர்கள் சேவையாற்றினர் அத்துடன் அதன் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் போதான முடிவுகளானவை சபையின் செயலாளர்/இலங்கை வங்கியின் செயலாளரால் பேணப்படும் கூட்டக் குறிப்புக்களில் பதியப்படுகின்றன.
	ச. சபையானது பயனுறுதி வாய்ந்த தகவலளிப்பு முறையொன்றில் பின்வருவனவற்றை வெளிப்படுத்த வேண்டும்: (i) கணக்காய்வுக் குழுச் செயற்பாடுகளின் விபரங்கள் (ii) இவ் ஆண்டில் நடாத்தப்பட்ட கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை அத்துடன் (iii) அத்தகைய கூட்டங்களுக்கு ஒவ்வொரு தனிப்பட்ட பணிப்பாளரும் வருகைதந்த விபரங்கள்	இணங்கப்பட்டது. கணக்காய்வுக் குழு அறிக்கையில் 89 தொடக்கம் 92வரையான பக்கங்களில் குழுச் செயற்பாடுகள் அறிக்கையிடப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டின் போது குழுவானது 10தடவைகள் கூடியுள்ளதுடன் வருகை தொடர்பான விபரங்கள் 86 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.
	ஞ. குழுவின் செயலாளரானவர் (கம்பனிச் செயலாளராகவோ உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டின் தலைவராகவோ இருக்கக்கூடியவர்) குழுக் கூட்டங்களின் விபரமான அறிக்கைகளைப் பதிவு செய்து பேண வேண்டும்.	இணங்கப்பட்டது. சபை செயலாளர் அல்லது இலங்கை வங்கியின் செயலாளர் குழுவின் செயலாளராகவும் இருப்பதுடன் அறிக்கைகளினை பேணுகின்றார்.
	ட. சாத்தியமான முறையற்ற நிதி அறிக்கையிடல், உள்ளக கட்டுப்பாடு, அல்லது ஏனைய விடயங்கள் சம்பந்தமாக வங்கியின் ஊழியர்கள் நம்பிக்கையுடன் கரிசனைகளை ஏற்படுத்தக்கூடிய ஒழுங்குகளை குழு மீளாய்வு செய்ய வேண்டும். அதற்கிணங்க, அத்தகைய விடயங்கள் குறித்து நீதியானதும் சுதந்திரமானதுமான விசாரணைக்கும் பொருத்தமான தொடர் நடவடிக்கைக்கும் உரியவாறான ஒழுங்குகள் அமுலில் உள்ளன என்பதையும் வெளியகக் கணக்காய்வாளருடன் வங்கியின் உறவினை மேற்பார்வை செய்வதற்கான பிரதான பிரதிநிதித்துவ அமைப்பாகச் செயற்படுவதையும் குழு உறுதிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது. இவ் அம்சங்களை உள்ளடக்கும் விசில் பிளோவர் கொள்கையொன்று அமுலில் உள்ளதுடன் பொருத்தமான தொடர் நடவடிக்கை கருதி முக்கியமான முடிவுகள் கணக்காய்வுச் சபைக்கு அறிக்கையிடப்பட்டன. வெளியகக் கணக்காய்வாளருடன் வங்கியின் உறவினை மேற்பார்வை செய்வதற்கான பிரதான பிரதிநிதித்துவ அமைப்பாக கணக்காய்வுக் குழு உள்ளது.

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (6) (iii)	மனித வளங்கள் மற்றும் ஊதிய குழு தொடர்பில் பின்வரும் விதிகள் ஏற்புடையதாதல் வேண்டும்:	இணங்கப்பட்டது.
	அ. வங்கியின் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் தொடர்பிலான ஊதிய கொள்கையை (சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய நிதிசார் கொடுப்பனவுகள்) குழு வரையறுக்க வேண்டும்.	பணிப்பாளர்களின் ஊதியமானது, இலங்கை அரசாங்கத்தினால் உரிய அமைச்சினூடாக வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்கள்/கடிதங்கள் மற்றும் 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களிற்கு அமைய உள்ளது. வங்கியானது மேலே கூறிய சுற்று நிருபங்களின் அடிப்படையில் ஓர் ஊதியக் கொள்கையையும் ஏற்படுத்தியுள்ளது. பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்காக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஊதியக் கொள்கையானது அமுலில் உள்ளதுடன் இக்கொள்கை 2018ம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்டது.
	ஆ. பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் வங்கியின் பிரதான முகாமைத்துவ ஆளணியின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை குழுவானது வகுக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. சகல பணிப்பாளர்கள் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களாகையால் அவர்களுக்கான இலக்குகள் எவையும் வகுக்கப்படவில்லை. பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் வங்கியின் கூட்டாண்மைத் திட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட செயற்திட்டத்தில் ஆவணப்படுத்தப்பட்டு விபரிக்கப்பட்டுள்ளது. கூட்டாண்மைத் திட்டத்தை பிரதான முகாமைத்துவ ஆளணியினர் மூலம் நிறைவேற்றும் பொறுப்பு பொது முகாமையாளருடையதாகும். இதன் செயல் நிறைவேற்றமானது, கிரமமான முறையினால் பூரண சபையினால் மீளாய்வு செய்யப்படுகின்றது. பொது முகாமையாளரின் செயல் நிறைவேற்றம் குறித்த புறம்பான மதிப்பீடும் வருடாந்த அடிப்படையில் செய்யப்படுகின்றது.
	இ. வகுக்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்குரியதாக பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியின் செயல்நிறைவேற்றத்தினை காலக்கிரமமாக குழு மதிப்பிட வேண்டும் என்பதுடன் ஊதியம், நலன்கள் மற்றும் செயற்றிறன் அடிப்படையிலான ஏனைய ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளைத் திருத்துவதற்கான அடிப்படையினையும் வரையறுக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. பொது முகாமையாளர் உள்ளடங்கலாக பிரதிப் பொது முகாமையாளர்களின் செயற்றிறனை அவர்களுக்கு வழங்கப்பட்ட குறிக்கோள்களுக்குரியதாக வருடத் தொடக்கத்தில் குழு மதிப்பிட்டது. உதவிப் பொது முகாமையாளர்களின் செயற்றிறனானது அவர்கள் தொடர்பில் நடைமுறைப்படுத்தப்படும் மதிப்பீட்டிற்கூடாக உரிய பிரதிப் பொது முகாமையாளர்களினால் மதிப்பிடப்பட்டது
	ஈ. பிரதம நிறைவேற்று அலுவலர் குறித்த விடயங்கள் கலந்துரையாடப்படும் சந்தர்ப்பத்தை தவிர குழுவின் அனைத்துக் கூட்டங்களிற்கும் பிரதம நிறைவேற்று அலுவலர் வருகை தரவேண்டும்.	இணங்கப்பட்டது.
3 (6) (iv)	நியமனக் குழு தொடர்பில் பின்வரும் விதிகள் ஏற்புடையதாதல் வேண்டும்:	பெயர்குறித்த நியமன மற்றும் கூட்டாண்மை ஆட்சிக் குழுவொன்றை வங்கி உருவாக்கியுள்ளது. இவ் வழிகாட்டலின் கீழ் தரப்பட்ட பெயர் குறித்தான நியமனக் குழுவின் கடமைகளுக்கு மேலதிகமாக, ஏற்புடைய கூட்டாண்மை ஆட்சித் தத்துவங்களை உறுதிப்படுத்தலுடன் தொடர்பான ஏனைய சில கடமைகள் இக் குழுவின் விடய ஆய்வெல்லையின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.
	அ. புதிய பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரை தெரிவு செய்வதற்கான.'.நியமிப்பதற்கான நடைமுறையொன்றைக் குழு அமுலாக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. வங்கியானது எந்த அமைச்சரின் விடய நோக்கெல்லையின் கீழ் வருகின்றதோ அந்த அமைச்சரினாலேயே பணிப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். கூறப்பட்ட அமைச்சரின் அனுமதியுடன் சபையினால் பொது முகாமையாளர் நியமிக்கப்படுகின்றார். பிரதான முகாமைத்துவ ஆளணியினை நியமிப்பதற்கு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொதுவான நடைமுறை/திட்டம் உள்ளது.
	ஆ. சபையின் ஒட்டுமொத்த பொறுப்பு நிறைவேற்றம் நோக்கியதாக சம்பந்தமுறும் பணிப்பாளரினால் செய்யப்படும் செயற்றிறன் மற்றும் பங்களிப்பினைக் கவனத்தில் எடுத்து, தற்காலப் பணிப்பாளர்களின் மீள் தேர்வினை குழுவானது கருத்திற்கொண்டு பரிந்துரை செய்ய (அல்லது பரிந்துரை செய்யாமலிருக்க) வேண்டும்.	பணிப்பாளர்கள் உரிய அமைச்சரினால் நியமிக்கப்படுவதனால் அவ்வாறான சந்தர்ப்பம் எழவில்லை.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	இ. பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ பதவிகளிற்கு நியமிப்பதற்காக அல்லது பதவியுயர்த்துவதற்காக கருத்திற்கொள்ளப்படவுள்ள தகுதிக்குத் தேவையான தகைமைகள், அனுபவம் மற்றும் அடிப்படைப் பண்புகள் போன்ற தகுதிவிதிகளை குழு வகுத்தமைக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. 1938 ஆம் ஆண்டின் 53ம் இலக்க இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, வங்கியின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைக்கமைய, பணிப்பாளர் சபை மற்றும் உரிய அமைச்சரின் அங்கீகாரத்துடன் பொது முகாமையாளர் நியமிக்கப்படுகின்றார். ஏனைய பிரதான முகாமைத்துவப் பதவிகளுக்கு தெரிவு செய்யப்படுவதற்கு அல்லது பதவியுயர்த்தப்படுவதற்கு தகுதியுடையதாக இருப்பதற்குத் தேவையான பண்புகளை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வுத் திட்டங்கள் விதித்துரைக்கின்றன..
	ஈ. வழிகாட்டல் 3(3) இல் தரப்பட்ட தகுதிவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறும் நியதிச்சட்டங்களில் விதித்துரைக்கப்பட்டவாறும் பதவியினை வகிப்பதற்கு பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் தேகாரோக்கியம் பொருந்திய பொருத்தமான ஆட்களாக உள்ளனர் என்பதை குழு உறுதிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது. வழிகாட்டல் 3(3) இல் தரப்பட்டுள்ள தகுதிவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறும் நியதிச்சட்டங்களில் விதித்துரைக்கப்பட்டவாறும் பதவியினை வகிப்பதற்கு பணிப்பாளர்கள் தேகாரோக்கியம் பொருந்திய பொருத்தமான ஆட்களாகவுள்ளனர் என்பதை உறுதிப்படுத்தி அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் வருடாந்த பிரகடனம் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. பிரதான முகாமைத்துவ ஆளணியினரானோர், அவர்கள் பிரதான முகாமைத்துவ ஆளணியினராக பதவியுயர்த்தப்படும் அல்லது நியமிக்கப்படும் போது, அவர்களின் பதவிகளை வகிப்பதற்கு தேகாரோக்கியம் பொருந்திய பொருத்தமான ஆட்களாகவுள்ளனர் என்பதையும் குழு உறுதிப்படுத்துகின்றது.
	உ. மேலதிக/புதிய நிபுணத்துவத் தேவைப்பாடுகள் பற்றியும் ஓய்வுபெறும் பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் சார்பில் அடுத்துவரும் பதவிக்கான ஒழுங்குகள் பற்றியும் குழுவானது காலத்திற்குக் காலம் பரிசீலனை செய்து பரிந்துரை செய்ய வேண்டும்.	பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கான அடுத்துவரும் பதவிக்கான திட்டம் ஒன்று அமுலில் உள்ளது. தேவைப்படும் மேலதிக/புதிய நிபுணத்துவமானது ஒன்றில் சபை உப குழுக்களால் பரிந்துரை செய்யப்படும் அல்லது சபையால் தீர்மானிக்கப்படும்.
	ஊ. குழுவுக்கு சுயாதீனமான பணிப்பாளர் ஒருவர் தலைமை வகிக்க வேண்டும் என்பதுடன் சுயாதீனமான பணிப்பாளர்களின் பெரும்பான்மையுடன் அது பொருத்தமுடையதாக உருவாக்கப்பட வேண்டும். பிரதான நிறைவேற்று அலுவலரானவர் அழைப்பின் மூலம் கூட்டங்களில் சமுகமளிக்கலாம்.	இணங்கப்பட்டது. குழுவுக்கு சுயாதீனமான நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் தலைமை வகிக்கின்றார். இது குறித்தான விபரங்களை இவ் ஆண்டறிக்கையின் 98 ஆம் பக்கம் தருகின்றது.
3 (6) (v)	ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழு தொடர்பில் பின்வரும் விதிகள் ஏற்புடையதாதல் வேண்டும்: அ. குழுவானது குறைந்தது மூன்று நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாட்டு மற்றும் தந்திரோபாய இடர்கள் போன்ற பரந்துபட்ட இடர் வகுதிகளை மேற்பார்வை செய்கின்ற பிரதான முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோரை கொண்டிருக்க வேண்டும். குழுவானது பிரதான முகாமைத்துவ ஆளணியினருடன் மிக நெருக்கமாக பணியாற்ற வேண்டும் என்பதுடன் குழுவுக்கு குறித்தொதுக்கப்பட்ட அதிகாரம் மற்றும் பொறுப்புக் கட்டமைப்புக்குள் சபையின் சார்பில் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்.	இணங்கப்பட்டது. குழுவானது மூன்று நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்கள், பொது முகாமையாளர் மற்றும் கடன், சந்தை, செயற்பாட்டு, மதிப்புசார் மற்றும் தந்திரோபாய இடர்களை மேற்பார்வை செய்கின்ற பிரதம இடர் அலுவலர் ஆகியோரை கொண்டுள்ளது. குழுவின் வேண்டுதலின் பேரில் பிரதம உள்ளக கணக்காய்வாளர், பிரதம நிதி அலுவலர், மற்றும் இணக்கப்பாட்டு அலுவலர் ஆகியோர் அனைத்துக் குழுக் கூட்டங்களிற்கும் வருகை தருகின்றனர். வேறு எவரேனும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் ஏனைய அலுவலர்களின் பங்குபற்றல் குழுவுக்குத் தேவைப்படும் போது அவர்கள் அழைக்கப்படுவர். குழுவானது அதற்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் பொறுப்புக் கட்டமைப்புக்குள் பிரதான முகாமைத்துவ ஆளணியுடன் நெருக்கமாக பணியாற்றுகின்றது..
	ஆ. பொருத்தமான இடர் குறிகாட்டிகள் மற்றும் தகவல்களுக்கூடாக மாதாந்த அடிப்படையில் வங்கியின் கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாட்டு மற்றும் தந்திரோபாய இடர்கள் போன்ற சகல இடர்களையும் குழுவானது மதிப்பிட வேண்டும். துணைக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள் குறித்து, வங்கி அடிப்படையிலும் குழு அடிப்படையிலும் இடர் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.	இணங்கப்பட்டது. வங்கியின் சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ பிரிவு வங்கியின் கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாட்டு, தந்திரோபாய, மற்றும் மதிப்புசார் இடர்களை இக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டு சபையால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை ஆவணங்களின் அடிப்படையில் மாதாந்தம் மதிப்பிடுகின்றது என்பதுடன் சுருக்கமான அறிக்கைகள் குழுவின் ஒழுங்குமுறையான கூட்டங்களில் குழுவுக்கும் அதன் பின்னர் அடுத்த உடனடியான சபை கூட்டத்திலும் சமர்ப்பிக்கப்படுகின்றன. துணைக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள் குறித்து, இடர்களைக் கவனிப்பதற்காக ஒரு இடர் முகாமைத்துவ கட்டுப்பாட்டகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	இ. குறித்த இடர்களைக் கவனத்திற் கொள்வதற்கும் குழுவினால் குறித்துரைக்கப்பட்டவாறு கணிய மற்றும் பண்புசார் இடர் எல்லைகளுக்குள் அவ் இடர்களை முகாமை செய்வதற்கும் கடன் குழு மற்றும் சொத்து - பொறுப்புக் குழு போன்ற சகல முகாமைத்துவ மட்டக் குழுக்களினதும் போதுமான தன்மை மற்றும் பயனுறுதித் தன்மை ஆகியவற்றை குழு மீளாய்வு செய்ய வேண்டும்.	இணங்கப்பட்டது.
	ஈ. வங்கியின் கொள்கைகள் மற்றும் ஒழுங்குறுத்தல் மற்றும் மேற்பார்வை தேவைப்பாடுகளின் அடிப்படையில் குழுவினால் தீர்மானிக்கப்படும் விவேக மட்டத்திற்கு அப்பால் உள்ள மட்டங்களில் குறித்த இடர்கள் காணப்படும் பட்சத்தில் குறிப்பிட்ட இடர்களின் தாக்கத்தினை குறைப்பதற்காக குழுவானது உடனடியான சீராக்க நடவடிக்கையை எடுக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. எல்லைகளுக்கு அப்பாற் சென்ற குறித்த கணிய மற்றும் பண்புசார் இடர்கள் பிரதம இடர் அலுவலரினால் கண்காணிக்கப்படுவதுடன் சம்பந்தப்பட்ட இப் பிரச்சினைகளின் தீவிரத்தன்மையின் அடிப்படையில் குழுவுக்கு நேரடியாக அறிக்கையிடப்படுகின்றது.
	உ. இற்றைப்படுத்தப்பட்ட வியாபாரத் தொடர்ச்சித் திட்டங்கள் உள்ளடங்கலாக சகல இடர் முகாமைத்துவ அம்சங்களையும் மதிப்பிடும் பொருட்டு குறைந்தது காலாண்டு ரீதியில் குழு கூட வேண்டும்.	இணங்கப்பட்டது. இவ் ஆண்டின் போது குழுவானது ஐந்து கூட்டங்களை நடாத்தியுள்ளது. கூட்டங்கள் மற்றும் வருகை குறித்த விபரங்கள் 86 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.
	ஊ. குறிப்பிட்ட இடர்களினை அடையாளம் காண்பதற்கு அல்லது குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டவாறு அத்துடன்/அல்லது வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் நெறிப்படுத்தப்பட்டவாறு உடனடித் திருத்த நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தவறிய பொறுப்பான உத்தியோகத்தர்களிற்கு எதிராக பொருத்தமான நடவடிக்கைகளை குழு எடுக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. வங்கியில் முறைசார்ந்த ஆவணப்படுத்தப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை செயல்முறை அமுலில் உள்ளது.
	எ. சபையின் கருத்துக்கள், இணக்கம் அத்துடன்/அல்லது குறித்த வழிகாட்டல்களைக் கோரி சபையின் ஒவ்வொரு கூட்டத்தினதும் ஒரு வாரத்திற்குள் இடர் மதிப்பீட்டு அறிக்கையொன்றை குழு சமர்ப்பிக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. பரிந்துரைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அறிக்கைகளுடன் சேர்த்து அடுத்த உடனடியான சபைக் கூட்டத்தில் கூட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.
	ஏ. வியாபார செயற்பாடுகளின் சகல துறைகள் தொடர்பிலும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள், ஒழுங்குறுத்தல் வழிகாட்டல்கள், உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் என்பவற்றுடனான வங்கியின் இணக்கப்பாட்டினை மதிப்பிடும் பொருட்டு ஒரு இணக்கப்பாட்டு தொழிற்பாட்டை குழு உருவாக்க வேண்டும். பிரதான முகாமைத்துவ ஆளணியிலிருந்து தெரிவு செய்யப்படும் அர்ப்பணிப்பான இணக்கப்பாட்டு அலுவலர் ஒருவர் இணக்கப்பாட்டு தொழிற்பாட்டினை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன் காலக்கிரமமாக குழுவுக்கு அறிக்கையிட வேண்டும்.	இணங்கப்பட்டது. வியாபார செயற்பாடுகளின் சகல துறைகள் தொடர்பிலும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள், ஒழுங்குறுத்தல் வழிகாட்டல்கள், உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் என்பவற்றுடனான வங்கியின் இணக்கப்பாட்டினை மதிப்பிடும் பொருட்டு தனியானவொரு இணக்கப்பாட்டு தொழிற்பாட்டை வங்கி உருவாக்கியுள்ளது. இத் தொழிற்பாட்டிற்கு அர்ப்பணிப்பான இணக்கப்பாட்டு அலுவலர் ஒருவர் தலைமை வகிப்பதுடன் அவர் காலாண்டு ரீதியான இணக்கப்பாட்டு அறிக்கைகளைக் குழுவுக்கும் மாதாந்த இணக்கப்பாட்டு அறிக்கைகளைச் சபைக்கும் சமர்ப்பிக்கின்றார். வியாபார செயற்பாடுகளின் சகல துறைகள் தொடர்பிலும் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுடனான வங்கியின் இணக்கப்பாட்டினையும் இணக்கப்பாட்டு தொழிற்பாடு மதிப்பிடுகின்றது.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (7)	**தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்**	
3 (7) (i)	யாரேனும் ஆளுடன், அத்துடன் குறிப்பாக இவ் வழிகாட்டலின் நோக்கங்களுக்காக 'தொடர்புடைய தரப்பினர்' ஆக கருதப்பட வேண்டிய ஆட்களின் பின்வரும் வகுதிகளுடன் வங்கியின் ஏதேனும் கொடுக்கல் வாங்கலிலிருந்து எழக்கூடிய ஏதேனும் ஆதாய முரண்பாட்டினைத் தவிர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை சபை எடுக்க வேண்டும்: அ. வங்கியின் துணைக் கம்பனிகளில் ஏதாவதொன்று; ஆ. வங்கியின் இணைக் கம்பனிகளில் ஏதாவதொன்று; இ. வங்கியின் பணிப்பாளர்களில் யாரேனுமொருவர்; ஈ. வங்கியின் பிரதான முகாமைத்துவ ஆளணியினரில் யாரேனுமொருவர் உ. வங்கியின் பணிப்பாளர்களில் யாரேனுமொருவரின் அல்லது பிரதான முகாமைத்துவ ஆளணியினரில் யாரேனுமொருவரின் நெருங்கிய உறவினர் ஒருவர்; ஊ. வங்கியில் பொருண்மையான ஆதாயத்தைக் கொண்டுள்ள பங்குதாரர் ஒருவர்; எ. ஒரு கவனத்தின் மீது கணிசமான ஈடுபாடு உடைய வங்கியின் பணிப்பாளர்களில் யாரேனுமொருவர் அல்லது வங்கியின் பணிப்பாளர்களில் யாரேனுமொருவரின் நெருங்கிய உறவினர் ஒருவர் அல்லது அதன் முக்கியமான பங்குதாரர்களின் யாரேனுமொருவர்.	இணங்கப்பட்டது. சபை உறுப்பினர்கள் இது குறித்தான ஏதேனும் ஆதாய முரண்பாட்டினைத் தவிர்க்கும் பொருட்டு தொடர்புடைய தரப்பினர், அவர்களின் கொடுக்கல்வாங்கல்கள், மற்றும் தொடர்புடைய தரப்பினருக்கு கூடுதல் சாதகமான கவனிப்பை வழங்குதல் மீதான மட்டுப்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கும் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை ஒன்று உள்ளது. தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களைக் கொண்டுள்ள பணிப்பாளர்கள் அக் கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்துமாறு தனிப்பட்ட முறையில் வேண்டப்படுகின்றனர். இக் கொடுக்கல் வாங்கல்கள் தன்னியக்க முறைமையொன்றின் ஊடாகக் கண்காணிக்கப்படுகின்றன.
3 (7) (ii)	இவ் வழிகாட்டலினால் தழுவப்பட வேண்டிய தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் வகை பின்வருவனவற்றை உள்ளடக்க வேண்டும்: அ. ஆகக்கூடிய கடன்வசதி பற்றி நாணயச் சபையின் வழிகாட்டல்களில் வரையறுக்கப்பட்டவாறான கடன்வசதி வகை எதனையும் வழங்குதல், ஆ. வைப்புக்கள், கடன் பெறல்கள் மற்றும் முதலீடுகளின் வடிவில் வங்கியில் எந்தவொரு பொறுப்புக்களையும் உருவாக்குதல், இ. வங்கிக்கு வழங்கப்பட்ட அல்லது வங்கியிலிருந்து பெறப்பட்ட நிதிசார் அல்லது நிதிசாரா தன்மைகளைக்கொண்ட ஏதேனும் சேவைகளின் ஏற்பாடு, ஈ. எவரேனும் தொடர்புடைய தரப்பினர்களுக்கு நன்மைகளை வழங்கக்கூடிய சாத்தியப்படும் இரகசியமான, அந்தரங்கமான அல்லது வேறு வகையான பரகசியப்படுத்தப்படாத காப்புத் தகவல்களை பகிரக்கூடிய, வங்கிக்கும் அத்தகைய தொடர்புடைய தரப்பினர்களுக்கும் இடையிலான அறிக்கையிடும் ஒழுங்குமுறையினை மற்றும் தகவல் பாய்ச்சல்களை உருவாக்குதல் மற்றும் பேணுதல்.	இணங்கப்பட்டது. இது குறித்தான தகவல்களானவை 'தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்' கூற்று 59 தொடர்பான 351 ஆம் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (7) (iii)	ஒரே வியாபாரத்தினை நடாத்திச் செல்கின்ற வங்கியின் ஏனைய கூறுகளுக்கு வழங்கப்பட்டவற்றை விட 'கூடுதல் சாதகமான கவனிப்பை' தொடர்புடைய தரப்பினருக்கு வழங்கும் ஒரு விதத்தில், மேல் 3 (7) (i) ஆம் இலக்க வழிகாட்டலில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு அத்தகைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களில் வங்கி ஈடுபடவில்லை என்பதை சபை உறுதிப்படுத்த வேண்டும். இச் சூழமைவில், கூடுதல் சாதகமான கவனிப்பு என்பது பின்வருவனவன உள்ளடங்கலான கவனிப்பு எனப் பொருள் கொள்ளப்பட்டு அதனையும் உள்ளடக்க வேண்டும்: அ. சபையினால் வரையறுக்கப்பட்டவாறு, வங்கியின் ஒழுங்குறுத்தல் மூலதனத்தின் மதிநுட்மான சதவீதமொன்றை விஞ்சி, தொடர்புடைய தரப்பினருக்கு 'மொத்த தேறிய கடன்வசதி' வழங்கல். இவ் உப வழிகாட்டலின் நோக்கங்களுக்காக: (i) 'கடன்வசதி' என்பது ஆகக்கூடிய கடன்வசதி தொகை தொடர்பில் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டலில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறான கடன்வசதி எனப் பொருள்பட வேண்டும். (ii) ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் கொண்ட முதிர்ச்சியுடன் வங்கியின் பங்கு மூலதனம் மற்றும் கடன் ஆவணங்களில் அத்தகைய தொடர்புடைய தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட காசு பிணையம் மற்றும் முதலீடுகள் ஆகியவற்றை மொத்தக் கடன்வசதியிலிருந்து கழிப்பதன் மூலம் 'மொத்த தேறிய கடன்வசதி' கணிப்பீடு செய்யப்பட வேண்டும். ஆ. தொடர்புபடாத ஒப்பிடக்கூடிய இணைத் தரப்புடனான ஒப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல் ஒன்றுக்காக, வங்கியின் சிறந்த கடன் வழங்கல் வீதத்தினைக் காட்டிலும் குறைவான வட்டி வீதமொன்றை அறவிடுதல் அல்லது வங்கியின் வைப்பு வீதத்தினைக் காட்டிலும் கூடுதலாகச் செலுத்துதல் இ. தொடர்புபடாத தரப்பினர்களுடன் மேற்கொள்ளப்படும் சாதாரண வியாபார நடவடிக்கையில் கொடுக்கப்பட்ட நியதிகளுக்கு அப்பாற்பட்டு விரிவடைந்து செல்லும், சாதகமான நியதிகள், வர்த்தக நட்டங்களை நிவர்த்தி செய்தல் அத்துடன்/அல்லது கட்டணங்கள்/தரகுகளை கைவிடல் போன்ற முன்னுரிமை வாய்ந்த கவனிப்பை வழங்குதல். ஈ. ஒரு மதிப்பீட்டு நடைமுறையில்லாமல் தொடர்புடைய தரப்பினர் ஒருவருக்கு சேவைகளை வழங்குதல் அல்லது அவரிடமிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்தல். உ. சட்ட ரீதியான கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளின் செயற்றிறனுக்கு தேவைப்படுத்தப்படுவதான தகவல்கள் நீங்கலாக, சாத்தியப்படும் இரகசியமான, அந்தரங்கமான அல்லது வேறு வகையான பரகசியப்படுத்தப்படாத காப்புத் தகவல்களை பகிரக்கூடிய, அறிக்கையிடும் ஒழுங்குமுறையினையும் தகவல் பாய்ச்சல்களையும் தொடர்புடைய தரப்பினர்களுடன் பேணுதல்.	இணங்கப்பட்டது. இணக்கப்பாட்டுப் பிரிவினால் மேற்பார்வை செய்யப்படும், தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களை மேற்பார்வை செய்வதற்கு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு செயல்முறையினை வங்கியானது அமுல்படுத்தியுள்ளதுடன் இணக்கப்படாட்டு தகைமையானது சபைக்கு மாதாந்தம் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (7) (iv)	யாதாயினுமொரு கடன்வசதியானது சம்பந்தப்பட்ட பணிப்பாளரை விட ஏனைய பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாமல், அத்தகைய கடன் வசதிக்கு சாதகமாக வாக்களித்து வங்கியின் பணிப்பாளர் சபைக் கூட்டமொன்றில் அங்கீகரிக்கப்படாலொழிய, வங்கியானது அதன் பணிப்பாளர்களில் எவருக்கேனும் அல்லது அத்தகைய பணிப்பாளரின் நெருங்கிய உறவினர் ஒருவருக்கு அத்தகைய கடன்வசதியினை வழங்கலாகாது. அத்துடன் இக் கடன்வசதியானது நாணயச் சபையினால் காலத்திற்குக் காலம் வரையறுக்கப்படக்கூடிய அத்தகைய பிணையின் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும்.	இணங்கப்பட்டது.
3 (7) (v)	அ. ஒருவருக்கு அல்லது ஆளொருவரின் நெருங்கிய உறவினர் ஒருவருக்கு அல்லது அவ் ஆள் கணிசமானளவு ஆதாயத்தைக் கொண்டுள்ள யாரேனும் சம்பந்தப்பட்டவருக்கு வங்கியொன்றினால் யாதாயினுமொரு கடன்வசதி வழங்கப்பட்டுள்ளவிடத்தும் அத்தகைய ஆள் வங்கியின் பணிப்பாளர் ஒருவராக அதற்குப் பின்னர் நியமிக்கப்படுமிடத்தும் இந் நோக்கங்கருதி நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அவசியமான பிணையினை, பணிப்பாளர் ஒருவராக அவ் ஆளின் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள், பெற்றுக்கொள்வதற்கு வங்கியினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஆ. மேலுள்ள வழிகாட்டல் 3 (7) (எ) (அ) இல் தரப்பட்டவாறான காலப்பகுதியில் அத்தகைய பிணை வழங்கப்படாதவிடத்து, கடன்வசதி வழங்கல் காலத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதி அல்லது அத்தகைய பணிப்பாளரை நியமிக்கும் திகதியிலிருந்து பதினெட்டு மாத காலப்பகுதி ஒன்றின் நிறைவுக்காலம் இவையிரண்டில் எது முதலில் வருகின்றதோ அக் காலப்பகுதிக்குள், கடன்வசதி குறித்தான ஏதேனுமொரு நிலுவைத் தொகையினை வட்டி ஏதேனுமிருப்பின் அதனுடன் சேர்த்து அறவிடுவதற்கான நடவடிக்கைகளை வங்கி எடுக்க வேண்டும். இ. மேற்போந்த உப வழிகாட்டல்களுடன் ஒத்திசையத் தவறுகின்ற யாரேனுமொரு பணிப்பாளரானவர் பணிப்பாளர் பதவியிலிருந்து நீங்கியுள்ளதாக கருத்தப்பட வேண்டும் என்பதுடன் அவ் விடயத்தை வங்கி பொதுமக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். ஈ. எவ்வாறாயினும் இவ் உப வழிகாட்டலானது, வங்கியின் சகல ஊழியர்களுக்கும் ஏற்புடையதான திட்டமொன்றின் கீழ் அக் கடன்வசதி வழங்கப்பட்டும் அத்துடன் அக் கடன்வசதி வழங்கல் காலப்பகுதியில் அத்தகைய வங்கியின் ஊழியரொருவராக இருந்த பணிப்பாளரொருவருக்கு ஏற்புடையதாகாது.	இணங்கப்பட்டது.
3 (7) (vi)	வங்கியொன்றின் ஊழியர்களுக்கு ஏற்புடையதான திட்டமொன்றின் அடிப்படையிலான சந்தர்ப்பத்தை விட அல்லது மேலுள்ள வழிகாட்டல் 3 (7) (எ) இற்கமைவாக வழங்கப்படும் கடன்வசதி தொடர்பில் நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான பிணையின் மூலம் பாதுகாக்கப்படும் சந்தர்ப்பத்தை விட எவரேனும் ஊழியருக்கு அல்லது அத்தகைய ஊழியரின் நெருங்கிய உறவினர் ஒருவருக்கு அல்லது அவ் ஊழியர் அல்லது நெருங்கிய உறவினர் கணிசமானளவு ஆதாயத்தைக் கொண்டுள்ள யாரேனும் சம்பந்தப்பட்டவருக்கு யாதாயினுமொரு கடன்வசதியை அல்லது கட்டணங்கள் அத்துடன்/அல்லது தரகுகளின் கைவிடலுடன் தொடர்பான 'கூடுதல் சாதகமான கவனிப்பை' அத்தகைய வங்கி வழங்கலாகாது.	இணங்கப்பட்டது. வங்கியின் சகல ஊழியர்களுக்கும் ஏற்புடையதான பொதுவான அலுவலர் குழாமின் கடன் திட்டங்களின் கீழான சந்தர்ப்பத்தினை விட கூடுதல் சாதகமான நியதிகள் தொடர்பில் எதுவித சாதகமான கவனிப்பு.'.கடன்வசதி வங்கியின் எந்தவொரு ஊழியருக்கும் வழங்கப்படுவதில்லை. இது குறித்து சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன. வங்கி ஊழியர்களின் நெருங்கிய உறவினர்களுக்கும் சாதகமான கவனிப்பு/கடன்வசதி எதுவும் வழங்கப்படுவதில்லை.

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (7) (vii)	மேலுள்ள வழிகாட்டல் 3 (7) (v) மற்றும் 3 (7) (vi) ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்ட கடன்வசதியோ, அக் கடன்வசதியின் ஏதேனும் பகுதியோ, அதன் மீதான ஏதேனும் நிலுவை வட்டியோ நாணயச் சபையின் முன் அனுமதியின்றி இரத்துச் செய்யப்படலாகாது என்பதுடன் அத்தகைய அங்கீகாரமின்றிய ஏதேனும் இரத்துச் செய்தலானது வெறிதாகவும் செயல்வலுவின்றியும் இருத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் போது அத்தகையதோர் சந்தர்ப்பம் எழுந்திருக்கவில்லை.
3 (8)	**வெளிப்படுத்துதல்கள்**	
3 (8) (i)	சபையானது பின்வருவனவற்றை உறுதிப்படுத்த வேண்டும்: அ. மேற்பார்வை மற்றும் ஒழுங்குறுத்தல் அதிகாரங்கள் மற்றும் ஏற்புடைய கணக்கீட்டு நியமங்களில் குறித்துரைக்கப்பட்ட மாதிரிகளுக்கு இணங்க வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் காலாண்டு நிதிக் கூற்றுக்கள் என்பன தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்படல், அத்துடன். ஆ. அத்தகைய நிதிக்கூற்றுக்களானவை சுருக்கமான வடிவத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதென்பதும்.	இணங்கப்பட்டது.
3 (8) (ii)	பின்வரும் ஆகக்குறைந்த வெளிப்படுத்தல்கள் ஆண்டறிக்கையில் செய்யப்படுவதை சபையானது உறுதிப்படுத்த வேண்டும்: அ. ஏற்புடைய கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகளுக்கு ஒத்திசைவாக, வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களானவை குறித்துரைக்கப்பட்ட வெளிப்படுத்தல்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதற்கான கூற்றொன்று.	இணங்கப்பட்டது. இவ் ஆண்டறிக்கையின் 179 ஆம் 184 ஆம் பக்கங்களில் 'உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று' என்பதிலும் 191 ஆம் பக்கத்தில் நிதியியல் அறிக்கையிடலிற்கான பணிப்பாளர்களின் பொறுப்பு என்பதிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
	ஆ. நிதிசார் அறிக்கையிடல் முறைமையானது நிதிசார் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை பற்றிய நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளதென்றும், வெளிநோக்கங்களுக்கான நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு பொருத்தமான கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளதென்றும் உறுதிப்படுத்துகின்ற வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறை தொடர்பில் சபையின் ஓர் அறிக்கை.	இணங்கப்பட்டது. இவ் ஆண்டறிக்கையின் 188 ஆம் 189 ஆம் பக்கங்களில் 'உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று' என்பதிலும் 191 ஆம் பக்கத்தில் நிதியியல் அறிக்கையிடலிற்கான பணிப்பாளர்களின் பொறுப்பு என்பதிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
	இ. உத்தரவாத ஒப்பந்தங்கள் தொடர்பான இலங்கை தரக் கட்டளை ளுடுளுயுநு 3050 - 'உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்களின் கூற்றுக்கள் பற்றிய வங்கிகளின் உத்தரவாத அறிக்கைகள்' என்பதன் கீழ் கணக்காய்வாளர்களால் வழங்கப்படும் உத்தரவாத அறிக்கை.	இணங்கப்பட்டது. இவ் ஆண்டறிக்கையின் 190 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள, கணக்காய்வாளர் நாயகத்திலிருந்தான நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளின் பயனுறுதிவாய்ந்த தன்மை தொடர்பிலான சான்றிதழ் ஒன்றினை இவ் வங்கி பெற்றுக்கொண்டுள்ளது.
	ஈ. பெயர்கள், தேகாரோக்கியம் மற்றும் பொருத்தப்பாடு, வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடங்கலாக பணிப்பாளர்களின் விபரங்கள் மற்றும் இவ் வங்கியினால் செலுத்தப்பட்ட மொத்த கட்டணங்கள்/ஊதியங்கள்.	இணங்கப்பட்டது. 24 தொடக்கம் 27 வரையான பக்கங்களில் பணிப்பாளர்களின் விபரங்கள் தரப்பட்டுள்ளன. 185 ஆம் 187 ஆம் பக்கங்களில் வங்கியுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் ஈடுபாடு தரப்பட்டுள்ளது. 236 ஆம் பக்கத்தில் நிதிக்கூற்றுக்களிற்கான 16 ஆம் குறிப்பில் வங்கியால் செலுத்தப்பட்ட ஊதியங்கள் தரப்பட்டுள்ளன.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

<table>
<tr><th>பிரிவு</th><th>கொள்கை</th><th>2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்</th></tr>
<tr><td></td><td>உ. தொடர்புடைய தரப்பினரின் ஒவ்வொரு வகுதிக்கும் வழங்கப்பட்ட ஒதுக்கங்கள் 3 (7) (iii) இல் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு மொத்தத் தேறிய கடன்வசதி. தொடர்புடைய தரப்பினரின் ஒவ்வொரு வகுதிக்கும் வழங்கப்பட்ட தேறிய கடன்வசதியும் வங்கியின் ஒழுங்குறுத்தல் மூலத்தின் ஒரு சதவீதமாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.</td><td>இணங்கப்பட்டது.
வங்கியின் ஒழுங்குறுத்தல் மூலத்தின் ஒரு சதவீதமாக 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொடர்புடைய தரப்பினரின் ஒவ்வொரு வகுதிக்கும் வழங்கப்பட்ட ‘மொத்த தேறிய கடன்வசதி’ கீழே தரப்பட்டுள்ளது:
<table><tr><th></th><th>ரூபா ’000</th><th>%</th></tr><tr><td>பிரதான முகாமைத்துவ ஆளணி (KMPS)</td><td>79,660</td><td>0.05</td></tr><tr><td>துணைக் கம்பனிகள்</td><td>1,928,106</td><td>1.25</td></tr><tr><td>இணைக் கம்பனிகள்</td><td>185,012</td><td>0.12</td></tr><tr><td>அரசு மற்றும் அரச தொடர்புடைய நிறுவனங்கள் (நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 59.4 இலுள்ள வரைவிலக்கணத்ததைப் பார்க்கவும்)</td><td>1,265,475,303</td><td>822.75</td></tr></table></td></tr>
<tr><td></td><td>ஊ. செலுத்தப்பட்ட ஊதியம், வழங்கப்பட்ட கடன்வசதி மற்றும் வங்கியில் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் அல்லது முதலீடுகள் போன்ற பரந்துபட்ட வகுதிகளின் மூலம் விதித்துரைக்கப்பட்ட, வங்கியினால் அதன் பிரதான முகாமைத்துவ ஆளணிக்குச் செலுத்தப்பட்ட ஊதியங்களின் மொத்தப் பெறுமதிகள் அத்துடன் அதன் பிரதான முகாமைத்துவ ஆளணியுடனான வங்கியின் கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதிகள்.</td><td>இணங்கப்பட்டது.
2018 ஆம் ஆண்டிற்காக பிரதான முகாமைத்துவ ஆளணிக்கு வங்கியினால் செலுத்தப்பட்ட ஊதியங்களினதும் அத்துடன் அவர்களுடனான கொடுக்கல் வாங்கல்களினதும் மொத்த தொகை கீழே எடுத்துரைக்கப்பட்டுள்ளன:
<table><tr><th></th><th>ரூபா ’000</th></tr><tr><td>குறுங்கால ஊழிய நன்மைகள்</td><td>429,123</td></tr><tr><td>தொழிலுக்குப் பின்னரான நன்மைகள்</td><td>111,315</td></tr></table>
மேலே கூறப்பட்டவற்றிற்கு மேலதிகமாக, வங்கியானது அதன் அங்கீகரிக்கப்பட்ட நலத்திட்டங்களின் பிரகாரம் வாகனங்களின் பாவனை போன்ற பணம் நிதி நன்மைகளையும் பிரதான முகாமைத்துவ ஆளணிக்கு வழங்கியுள்ளது.
<table><tr><th></th><th>ரூபா ’000</th></tr><tr><td>கடன்கள்</td><td>450,368</td></tr><tr><td>மேலதிகப் பற்றுகள்</td><td>17,699</td></tr><tr><td>கடன் அட்டைகள்</td><td>11,049</td></tr><tr><td>வைப்பீடுகள்</td><td>506,964</td></tr><tr><td>தொகுதிக்கடன்கள்</td><td>2,502</td></tr><tr><td>பயன்படுத்தாத வசதிகள்</td><td>70,587</td></tr></table></td></tr>
<tr><td></td><td>எ. ‘இலங்கை தொடர்புபட்ட சேவைகள் பிரயோகக் கூற்று 4750’ இன் கீழ் வழங்கப்பட்ட கணக்காய்வாளர்களின் ‘விடய முடிவுபெறல் அறிக்கைகளின்’ சகல முடிவுகளும் வருடாந்தக் கூட்டாண்மை செயலாட்சி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை, இந் நோக்கத்திற்காக வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருக்கு கணக்காய்வாளர்கள் உறுதிப்படுத்தியிருப்பின், பணிப்பாளர் சபையினால் அதன் வருடாந்தக் கூட்டாண்மை செயலாட்சி அறிக்கையில் உறுதிப்படுத்தல்.</td><td>இணங்கப்பட்டது.
2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டாண்மை செயலாட்சி வழிகாட்டலுக்கு ஒத்திசைவாக வங்கியானது கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து ஒரு சான்றிதழைப் பெற்றுள்ளது. கணக்காய்வாளர்களின் அனைத்து முடிவுகளும் இக் கூட்டாண்மை செயலாட்சி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை சபை உறுதிப்படுத்தியுள்ளதுடன் ஏதேனும் பரிந்துரைகள் 2019 ஆம் ஆண்டினுள் தீர்க்கப்படும்.</td></tr>
<tr><td></td><td>ஏ. மதிநுட்பமான தேவைப்பாடுகள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளுடனான இணக்கம் பற்றிய விபரங்களை எடுத்துரைக்கும் அறிக்கை மற்றும் ஏதேனும் பொருண்மை வாய்ந்த இணக்கமுறா விடயங்களைத் திருத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.</td><td>இணங்கப்பட்டது.
191 ஆம் பக்கத்திலுள்ள நிதி அறிக்கையிடலிற்கான பணிப்பாளர்களின் பொறுப்புக் கூற்றானது மதிநுட்பமான தேவைப்பாடுகள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளுடனான இணக்கம் தொடர்பிலான விபரங்களைத் தெளிவாக எடுத்துரைக்கின்றது.</td></tr>
</table>

பிரிவு	கொள்கை	2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	ஐ. வங்கியின் இடர் முகாமைத்துவ முறைமையிலான தவறுகள் மீதான ஒழுங்குறுத்தல் மற்றும் மேற்பார்வை சார்ந்த கரிசனைகள் பற்றிய அல்லது பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டுமென நாணய சபையினால் வழிகாட்டப்பட்டிருப்பின், வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இவ் வழிகாட்டல்களுடன் இணக்கமுறாமை பற்றிய, அத்தகைய கரிசனைகளைக் கவனத்திற் கொள்வதற்கு வங்கியினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுடனும் சேர்ந்த கூற்று.	இணங்கப்பட்டது. வங்கியின் இடர் முகாமைத்துவ முறைமை மீது மேற்பார்வைக் கரிசனையை விளைவித்த தவறுகள் அல்லது இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வை திணைக்கள பணிப்பாளரினால் சுட்டிக் காட்டப்படுவதற்கு அவற்றை இட்டுச்சென்ற இவ் வழிகாட்டல்களுடன் இணக்கமுறாமையை விளைவித்த மற்றும் அவை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட வழிகாட்டல்களை வழங்குவதற்கு நாணய சபையினை இட்டுச்சென்ற தவறுகள் எவையும் இருக்கவில்லை. இணக்கமுறாமை பற்றிய அத்தகைய தவறுகள் அல்லது சந்தர்ப்பங்கள் காணப்பட்டிருக்காமையினாலும் மற்றும் நாணய சபையினால் அத்தகைய வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருக்காமையினாலும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய விடயங்கள் எழவில்லை என்பதுடன் இது குறித்து வெளிப்படுத்துவதற்கு எதுவுமில்லை.
3 (9) (i)	இடைக்கால மற்றும் ஏனைய பொது ஏற்பாடுகள் இவ் வழிகாட்டலுடனான இணக்கமானது 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து முன்நோக்கியதாக ஆரம்பிக்க வேண்டும் என்பதுடன் நீட்டிக்கப்பட்ட இணக்கப்பாட்டு திகதிகளானவை இவ் வழிகாட்டலில் விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைத் தவிர, 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியளவில் அல்லது அதற்கு முன்னர் இவ் வழிகாட்டலிலுள்ள ஏற்பாடுகளுடன் சகல உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் முழுமையாக இணங்க வேண்டும்.	இணங்கப்பட்டது.
3 (9) (ii)	இலங்கையில் குறித்த நியதிச்சட்டங்களின் மூலம் கூட்டிணைக்கப்பட்டுள்ள வங்கிகள் குறித்து, உரிய நியதிச்சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு இணக்கமுறாத இவ் வழிகாட்டலின் சகல ஏற்பாடுகளுடனும் இணங்கிச் செல்வதற்கான நடவடிக்கைகளை அவை எடுப்பின், அத்தகைய நியதிச் சட்டங்களில் குறித்துரைக்கப்பட்டவாறு சபைகள் உரிய நியதிச்சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்க தொடர்ந்து செயலாற்ற வேண்டும்..	இணங்கப்பட்டது. 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அதன் திருத்தங்கள், அமுலிலுள்ள சட்டம் ஆகியவற்றுடன் இணக்கமுறாத, இவ் வழிகாட்டலின் சகல ஏற்புடைய ஏற்பாடுகளுடனும் இணக்கமுறுவதற்கான சாத்தியமான சகல நடவடிக்கைகளையும் இலங்கை வங்கி எடுத்துள்ளது. இணக்கமுறாத மற்றும் இலங்கை வங்கியானது அதற்கு ஏற்புடைய நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு ஏற்ப தொடர்ந்து செயலாற்றியுள்ள ஏதேனும் சந்தர்ப்பங்களானவை உரிய பிரிவுகளுக்கு எதிராக மேலே விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன
3 (9) (iii)	இவ் வழிகாட்டலானது, இலங்கையில் செயற்படும் வெளிநாட்டு வங்கிகளின் கிளைகளுக்கு, அத்தகைய வங்கிகளின் கூட்டிணைப்பு நாட்டிலுள்ள ஏற்புடைய ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டங்களுடன் இணக்கமுறும் அளவிற்கு, ஏற்புடையதாதல் வேண்டும். வெளிநாட்டு வங்கியொன்றின் கிளையானது, அதன் ஆண்டறிக்கை மற்றும் இலங்கையில் கிளை நடவடிக்கைகளின் கணக்குகள் ஆகியவற்றுடன் சேர்த்து அதன் தாய் வங்கியின் வருடாந்த கூட்டாண்மைச் செயலாட்சி அறிக்கையினையும் பிரசுரிக்க வேண்டும்.	ஏற்புடையதன்று.
3 (9) (iv)	ஏதேனும் வங்கி சம்பந்தமாக இவ் வழிகாட்டலின் ஏதேனும் ஏற்பாடுகளுக்கும் அமைப்பு அகவிதிக்கும் (அல்லது உள்ளக விதிகள்) இடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படும் பட்சத்தில், இவ் வழிகாட்டலின் ஏற்பாடுகளே மேலோங்க வேண்டும். எவ்வாறாயினும், இவ் வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டதை விட மிகக் கடுமையான நியமமொன்றை ஒரு தனி வங்கியொன்றின் அமைப்பு அகவிதிகள் வகுத்தமைப்பின் அவ் அமைப்பு அகவிதிகளிலுள்ள அத்தகைய ஏற்பாடுகள் பின்பற்றப்படலாம்.	ஏற்புடையதன்று.
3 (9) (v)	வங்கியியல் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு சுகவீனம் அல்லது ஏதேனும் இயலாமை போன்ற ஏதேனும் காரணம் கருதி, 3 (2) (ii)ஆ, 3 (3) (i)அ மற்றும் 3 (3) (ii)அ ஆகிய வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்ட விலக்களிப்புக்கள் பயன்படுத்தப்படலாகாது என நாணய சபை கருதினால், அவ் விடயமானது நாணய சபையினால் அந்த ஆளுக்கு அறியத்தரப்படலாம் என்பதுடன் விசாரணையொன்றுக்குப் பின்னர், நாணய சபையானது விலக்களிப்புக் காலப்பகுதியினை மட்டுப்படுத்தலாம்.	ஏற்புடையதன்று

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தினால் அமுல்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தினால் அமுல்படுத்தப்பட்ட 2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காக இவ் வங்கிக்கு ஏற்புடையதாகவிருந்த, ஆண்டறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பில் நிரற்படுத்தல் விதிகளுக்கான இணக்கப்பாடானது கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது:

விதி இல.	தேவைப்பாடு	காலப்பகுதி	சமர்ப்பிக்கப்பட்ட திகதி
7.4 a (i)	பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட, காலாண்டு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இடைக்கால நிதிக் கூற்றுக்கள் முதல் மூன்று காலாண்டுகளிற்காகவும் உரிய காலாண்டு முடிவடைவதிலிருந்து 45 நாட்களுக்குள்ளும் 4 ஆவது காலாண்டிற்கு காலாண்டு முடிவில் இருந்து இரண்டு மாதங்களுக்குள்ளும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.	2018 மார்ச் 31 இல் முடிவடைந்த 1 ஆம் காலாண்டு	2018 மே 10
